கரை எழில்

2014

பிரதேச செயலகமும்
கலாசாரபேரவையும்
கரைச்சி கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை எழில்

2014

கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கரைச்சி,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு

கரை எழில் 2014

உரிமை

கலாசாரப் பேரவை,

பிரதேச செயலகம், கரைச்சி

பக்கம்

vi+211

பிரதிகள்

500

அட்டைப்படம்

திரு.மு.தமிழ்ச்செல்வன்

திரு.கோ.நாகேஸ்வரன்

நிதி அனுசரணை

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கலாசார பேரவை, கரைச்சி.

பதிப்பு

மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்,

நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநற் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துமே!!
வாழ்த்துமே!!!

மனோன்மணீயம் சுந்தரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக கீதம்

நெல் விளையும் கழனி நிறை
கரைச்சி வளம் பெருகி
பல்லாண்டு நீடு வாழ்கவே
பலவளமும் படைத்து வாழ்கவே

நெல்விளையும்

பண்பாடும் கலை நலமும்
கல்விசெல்வ வினைத்திறனும்
எல்லாரும் பெற்று வாழ்கவே
இன்ப சுகம் என்றும் மேவவே

நெல்விளையும்

இரணை மடுக்குளத்தால்
திரளும் திரவியங்கள்
ஏற்றத்தின் ஊற்றதாகவே
இணைத்தெழுதும் மேன்மை ஓங்கவே

நெல் விளையும்

அக்கராயன் முறிப்பு கரைச்சி
அபிவிருத்தி பிரதேச செயலகத்தினர்
தக்கபணி அணிபெறவே
தலைநிமிர்ந்து சிறந்து வாழ்கவே

நெல் விளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி

DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க்குழு

இனிய.கோ.நாகேஸ்வரன்

பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்

இனிய.திருமதி.சிவகாமி உமாகாந்தன்

உதவிப் பிரதேச செயலர்

இனிய.ச.பீ.அமல்ராஜ்

உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

இனிய.கு.றஜீபன்

கலாசார உத்தியோத்தர்

இனிய.சி.கருணாகரன்

இனிய.கலாநிதி T.S.யோசுவா

இயக்குனர், காவேரிக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை(ச்சி) எழில்நிலம் செழித்துப் பொலிய வாழ்த்து

கிளிநொச்சியின் வரலாற்றையும் இங்கு வாழும் மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும் எடுத்தியம்பும் வகையில் கரைச்சிப் பிரதேச செயலகம் ஆண்டுதோறும் கலாசார விழாவையும் கரை எழில் மலரையும் வெளியிட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. கிளிநொச்சியின் வரலாறு இரண்டு நூற்றாண்டுகளுக்குள் உள்ளடங்கியிருந்தாலும் அதன் புத்தெழுச்சி வியப்பூட்டுவதாகும். இலங்கையின் மிகவும் இளைய நகரங்களில் ஒன்றான கிளிநொச்சி அதனுடைய வரலாற்றில் மிக அதிகமான இழப்புக்களையும், சோதனைகளையும் சந்தித்தது. அதேயளவுக்கு அது மிகப் பிரபலத் தையும் புகழையும் பெற்றது. எத்தனை இடர்கள் நேர்ந்தாலும் எப்போதும் புத்திளமை யுடனேயே அதைக்காணலாம். நீரும் நெல்லும் நிறைந்த பசுமையே இதற்கான ஆதாரமாகும்.

வடஇலங்கையின் பசுமை நிறைந்த பிரதேசமாக நெற்களஞ்சிய மாக, மிகப்பெரிய நீர்த்தேக்கங்களைக் கொண்டுள்ளதாக, பல திசைகளிலும் இருந்து வந்திருக்கும் மக்களைக் கொண்டதாக கிளிநொச்சி அமைந்திருக் கிறது. ஆனாலும் கிளிநொச்சியின் தெற்கு மற்றும் மேற்குப்பகுதி ஏனைய பிரதேசங்களை விடப் பசுமை குன்றியதாகவே காணப்படுகின்றது. இயற்கை அமைப்பு மட்டுமல்ல, பாரபட்சமான கடந்தகால நடைமுறைகளும் இவ்வாறு இருவேறு யதார்த்தங் களை உண்டாக்கியுள்ளது. நமது மனங்களின் வடிவங் களே இவ்வாறு பாரபட்ச நிலைகளை இன்னும் வைத்திருக்கிறது. ஒரு இளைய நகரத்தில் இவ்வாறான பாரபட்சமும், புறக்கணிப்பும் நிகழ்ந்திருப்பது வேதனைக்குரிய ஒன்று. இதனால் கிளிநொச்சியின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் பல வாய்ப்புக்களை இழந்தவர்களாக இருக்கின்றனர். ஆனால் இந்த நிலையை மாற்றியமைக்க கடந்த சில ஆண்டுகளாக முயற்சித்து வருகிறோம். இதற்காக, பின்தங்கிய பகுதிகளை முன்நிலைப்படுத்தி அனைத்துப் பிரதேசங்களையும் சமநிலைப்படுத்தும் வகையில் நாங்கள் செயற்படுகிறோம். எல்லாப் பிரதேசங்களும் சமநிலை யாக வளர்ச்சியடையும் போதே சிறப்பான பண்பாடு உருவாகின்றது. பாரபட் சங்களும், புறக்கணிப்புகளும் நிலவுகின்ற சூழலில் பண்பாட்டைப் பற்றி நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க முடியாது. அது பண்பாடாகவும் இருக்க முடியாது. அப்படி சிந்திப்பதாக இருந்தால் அது எதிர்ப்பண்பாடகவே அமையும்.

எனவே, சமநிலையான வாழ்வை அனைவரும் கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழலை நாம் உருவாக்க முயற்சிக்கிறோம். அந்த வகையிலேயே இன்றைய கிளிநொச்சி உருவாக்கப்படுகிறது. மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி நகரம் புதுக்கோலம் பூண்டுள்ளது. புறநகர்ப் பகுதிகள் துரித வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. அறிவியல் நகர்ப் பகுதியில் பல்கலைக் கழக வளாகம், மத்திய வங்கியின் பிராந்திய நிலையம், ஆடைத்தொழில் மையங்கள், தேசிய தொழிற்பயிற்சி நிலையம், புகையிரத நிலையம் என பல வளங்களைக் கொண்ட பொருளாதார, புலமைத்துவச் சூழலாக மாறி வருகிறது. இதேபோல அக்கராயன், வட்டக்கச்சி, உருத்திரபுரம் போன்ற மையங்களையும் அப்பிர தேசங்களின் தேவைகளோடு அமைந்த அனைத்து வளங்களையும் உள்ளடக்கிய கொத்தணிகளாக உருவாக்குவதற்கு முயற்சிக்கிறோம்.

இவையெல்லாம் நிறைவடையும் போது கரைச்சி முழுமையான அளவில் வளர்ச்சியடைந்த பிரதேசமாகும். அத்துடன் கிளிநொச்சியின் பண்பாட்டு அடையாளமும் பன்முகத்தன்மையடைந்திருக்கும். அதற்கான கட்டியமாக இப்பொழுது கரைச்சிப்பிரதேச செயலகத்தின் பணிகளும் கலாசாரப் பேரவையின் செயற்பாடுகளும் அமைகின்றன. இங்குள்ள கலை ஞர்களுக்கான களமாக கல்வி, பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் எம்மால் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசக் கலைஞர்களுக்கான இசைக் கருவி களையும் வழங்கியுள்ளோம். இவற்றை ஆதாரமாகக் கொண்டு, கரைச்சிப் பிரதேசத்தின் கலாசார முகத்தை உருவாக்குவதற்காக உழைத்து வரும் கலைஞர்களைப் பாராட்டுகிறேன். கரைஎழில் மலர் சிறப்புறவும் பிரதேச வளம் பொலிவுறவும் உழைத்து வரும் பிரதேச செயலர் திரு.கோ.நாகேஸ் வரன், கலாச்சார உத்தியோகத்தர் திரு.கு.றஜீபன் ஆகியோருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் துறைசார்ந்தோருக்கும் பாராட்டுகள்.

உழவும் தொழிலும் ஆடலும் பாடலும் கவின் கலைகளும் நிறைந்த மகிழ்வும் கரை(ச்சி) எழில் நிலம் செழித்துப் பொலிய வாழ்த்துகள்.

மு.சந்திரகுமார்
பாராளுமன்ற உறுப்பினரும்,
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கிய வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் மத்தியில் நகரப்பிரதேசமாக அமைந் திருப்பது கரைச்சி பிரதேச செயலகமாகும். இச் செயலகத்தோடு இணைந்து செயற்பட்டு வருகின்ற கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவையின் நான்காவது வெளியீடாகிய பண்பாட்டு மலரான கரைஎழில் கண்டு அதன் சிறப்பினையும் தொடர்ச்சியினையும் மனதார வாழ்த்துகின்றேன். இம் மாவட்டத்தில் கண்டா வளையில் வளையோசை, பளையில் பசுந்துளிர், பூநகரியில் பூந்துணர், கரைச்சியில் கரைஎழில் என்னும் பண்பாட்டு மலர்கள் பிரதேச கலாசார விழாவன்று மலர்ந்து மணம் வீசுவது இம் மாவட்டத்தினு டைய இலக்கியச் செழுமையையும் அத்துறையில் காணப்படுகின்ற இலக்கிய ஆர்வத் தினையும் எடுத்தியம்புவதனைக் கண்டு உவகையடையும் அதேவேளை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி ஒதுக்கீடுகள் வழங்கி வருவ தனால் எமது மாவட்டத்தில் இத்தகைய செயற்பாடுகள் மேலும் கனதியான வெளியீடுகளை வெளிக்கொண்டு வருவதற்கு உறுதுணையாக அமையும் என்பது திண்ணம். இந்நூலினை அலங்கரித்துள்ள கட்டுரைகள், பதிவுகளினூடாக வாழ்வில் மனிதர்கள் எதிர்நோக்குகின்ற அன்றாடப் பிரச்சினைகளையும் சமூக விழு மியங்களையும் வாழ்வியல் இருப்புக்களையும் நன்குணர்ந்து ஆவணப்படுத் தும் நோக்கில் கரை எழிலை மேலௌச் செய்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆவணப்படுத்தி அடுத்த சந்ததியினரிடம் கையளிக்கும் நோக்கில் பயணித்து வருவதாக கரைஎழில் விளங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகையதொரு பண்பாட்டு மலரை வெளியிடும் கரைச்சிப் பிரதேச செயலர் திரு.கோ.நாகேஸ்வரன் அவர்கட் கும், கலாசாரப் பேரவை யினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு கரை எழில் வரலாற்றில் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி மென்மேலும் வளர மனதார வாழ்த்துகின்றேன்.

றூ.கேதீஸ்வரன்
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி பிரதேச செயலகத்தால் வருடந்தோறும் வெளியிடப்படும் 'கரை எழில்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரானது கரைச்சி பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன் இப்பிரதேச மக்களின் வாழ்வியல் முறைமைகளையும் தொகுத்து சந்ததி சந்ததியாக சான்றுப் படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. பிரதேச செயலகங்கள் மக்களுடன் மிக நெருக்கமாக பணிபுரியும் அலுவலகங்கள் என்பதுடன் மக்களின் வறுமை ஒழிப்பு, பிரதேச அபிவிருத்தி, மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்கள், கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு துறைசார் அபிவிருத்தியின் மையமாக இருப்பதும் மக்களின் தனித்துவமான கலாசாரம், பண்பாடு, சமூக விழுமியங்களை பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப் பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச வரலாற்றை அவர்களுக்கு தெரியப்படுத்துவதையும் இன்னோர் இலக்காகக் கொண்டுள் ளது. இம்மலர் தொடர்ந்தும் வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

நாகரீகம் அடைந்த ஒரு இனத்தின் பண்பாட்டுக்கூறுகள் ஆழமுடையதாக இருக்கும். அந்த பண்பாட்டுக் கூறுகளில் இருந்துதான் ஒரு இனத்தின் சகல செயல்முறை அசைவுகளும் இயங்குகின்றன. இந்த அசைவியக்கத்தின் தூண்டுகையை ஏற்படுத்துபவை அந்த இனத்தில் முகிழ்கின்ற கலைகளும், இலக்கியங்களும்.

அத்தைய ஒரு தொன்மையான பாரம்பரியம் உடையது எமது தமிழ் இனம். எமது இனத்திற்கென்று தனித்த மொழி, பண்பாடு, கலை இலக்கியங்கள் என்று மிகத்தொன்மையான கலைஇலக்கிய வடிவங்களோடு விளங்குபவைதான் எமது இனத்தின் சிறப்பு. அத்தகைய சிறப்புவாய்ந்த எமது பண்பாட்டு மூலக்கூறுகளை பாதுகாக்கவும் அதில் இருந்து முகிழும் கலை இலக்கியங்களை வளர்க்கும் நோக்கில் எமது செயலக கலாசார பேரவையினால் வருடாவருடன் கலாசார விழாவும் கரை எழில் எனும் ஆய்வு மலரும் வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே கலாசார விழாவுடனும், நூல் வெளியீட்டுடனும் மட்டும் நின்று விடாமல் பிரதேச கலைஇலக்கிய பண்பாடுகளை பாதுகாக்கும் நோக்கிலும் வளர்க்கும் நோக்கிலும் பல்வேறு வகையான செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அத்திட்டங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாய் அமைவதுதான் எமது கலாசார விழாவும் நூல் வெளியீடும் ஆகும்.

அந்தவகையில் கரைஎழில் இந்த ஆண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலர் ஒரு ஆய்வுமலராக வெளியிடுவது என்பது எமக்கு மனநிறைவைத்தருகின்றது. பிரதேசம் சார்ந்த ஆய்வுகளுக்கு அப்பாலும் ஒரு கலைஇலக்கிய சமூகத்தேடலுக்கான களமாக எமது கலைஎழில் ஆய்வு மலர் அமைந்திருப்பது பெருமைதரும் விடயமாகும்.

இம்மலருக்கு ஆக்கங்களை எழுதி இருக்கின்ற அனைத்து படைப்பாளிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்நது எமது இத்தகைய முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் எமது மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்களுக்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனிய. கோ.நாகேஸ்வரன்

பிரதேச செயலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியிட்டு வருகின்ற் "கரைஎழில்" மலர் வெளியீடு தொடர்ந்து வெளி வருவது வாழ்த்தி வரவேற்கப்பட வேண்டியதாகும். இந் நூலானது இப் பிரதேசத்தினுடைய சமூகபொருளாதார பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களை எடுத்துரைப்பதிலும் ஆவணப்படுத்துவதிலும் பெரும் பங்காற்றி வருகின்றது.

இன்று உலகமயமாதல் செயற்பாடுகள் ஒருபுறத்தே வேகமாக நடந்து வருகின்ற அதேவேளை அதற்குஎதிர் வினையாற்றுவது போல் பிரதேச பணபாட்டுத் தனித்துவத்தை மேம்படுத்துவது தொடர்பான அம்சங்களும் முதன்மைப்படுத்தப்படுவதனைக் காணமுடிகின்றது. இவ் இரு நிலைகளில் தமதுதனித்துவத்தைப் பதிவுசெய்வதற்கானமுயற்சியாக"கரைஎழில்"நூல் வெளியீட்டைக் கருதமுடியும்.

"கரைஎழில்" சிறப்பாக வெளிவர எனது மனபூர்வமான வாழ்த்துக் களை தெரிவிப்பதுடன் இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உஷா சுபலிங்கம்
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ,
வடமாகாணம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

- அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சியில் சைவப்பணியாற்றிய திருநெறிக் கழகம் 01-05
- கிளிநொச்சி மாவட்டத்தின் மனித வலு மறுமலர்ச்சியின் அவசியமும் பொருளாதார மீளுருவாக்கமும் 06-09
- கனகபுரம் முன்னோடித் திட்டத்தின் நுழைவாயில் 10-14
- நாடகவரலாற்றில் ஒரு பகுதியும் கிளிநொச்சியில் நாடகம் வளர்ந்த வரலாறும் 15-21
- காலனித்துவ ஆதிக்கப்படர்ச்சியின் கீழ் ஆனையிறவு பரவைக்கடலுப் பரந்தன் வெளியும் ஓர் வரலாற்று நோக்கு 22-26
- இலவுகாத்த கிளிகளாக வன்னி மாணவர்கள் 27-28
- பிரித்தானிய பாராளுமன்றத்தை அலங்கரித்த இலங்கைத் தமிழன் சேர் முத்துக்குமாரசுவாமி 29-31
- தட்டுவன் கொட்டி என்னும் பழைய கிராமம் 32-33
- நோயாளர் காவு வண்டி (Ambulance) சேவை ஒரு பார்வை 34-37
- அணு அழிவிற்கா? ஆக்கத்திற்கா? 38-44
- மரபு - நவீனம் - மரபு 45-47
- முத்தான தமிழ் நூல்கள் முப்பத்தாறு 48- 55
- தேசவழமையின் ஏற்புடைமை 56-65
- நினைவின் சுவை : தருமபுரம் 66-73
- குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் (Dramatic Texts) ஓர் பார்வை 74-81
- மகாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகள் 82-84
- "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" 85-92
- உளச்சிகிச்சையாக அரங்கு ஓர் அறிமுகம் 93-97
- தேசவழமை - ஒரு எளிமையான அறிமுகம் 98- 103
- கும்பாபிஷேக மகிமை 104- 114
- நாடக இயக்குநர் க.விஜயசேகர் 115-125
- கேள்விகள் 126-129
- சமுதாயமும் பண்பாடும் 130-133
- கறிசோறும் கரண்டி முள்ளும் 134-145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146-149

➢ மௌனம் பேசு 150-157

➢ உள்ளே கனன்று ... 158-163

➢ ஓய்வு சிறுகதை பற்றிய ஒரு நோக்கு ... 164-166

➢ அம்பாளின் அருளாட்சி ஆரம்பம் 167-168

➢ யானை கட்டிய அரியாத்தை 169

➢ நாடற்றவர்கள் மீது சரிந்த மலை 170

➢ கிளையற்று அலையும் பறவையின் பெயர் நீ 171

➢ வலியுணர்தல் 172-173

➢ கருணாகரன் கவிதைகள் 174

➢ 'ஓவியா'வின் கவிதைகள் 175

➢ அழகான காலங்கள் 176

➢ பூச்சிகளால் நிரம்பிய சுவர் 179-187

➢ பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே

➢ அரங்கக்கலை

188-192

1. வில்லிசை சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும் 193-195

2. சிந்துநடைக் கூத்து மாங்கனி பெற்ற பிள்ளை 196-200

3. நாட்டிய நாடகம் ஐந்திணை 201-204

4. இசைநாடகம் இரண்டாம் சுயம்வரம் 207-211

➢ கரைஎழில் 2014 விருது பெறுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வரலாறு

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சியில் சைவப்பணியாற்றிய திருநெறிக் கழகம்

இனிய. நா.சோதிதாசன்
கிளிநொச்சி

கிளிநொச்சி 20ம் நூற்றாண்டின் இறுதி வரை அடர்ந்த பெருங்காடாக இருந்தது. காட்டு வளந் தேடியோரும், வேட்டையாடினோருமாக, மிகச் சிலரே ஊர்திகளில் வந்து திரும்பிய இட மாகத் திகழ்ந்தது. 20ம் நூற்றாண்டின் துவக்கத் தில் தொடர்ந்து பாதை போடப்பட்ட போதும், பேருந்துப் பாதை அமைக்கப்பட்ட போதும் கிளி நொச்சி காடாகவே நோக்கப்பட்டது. இதே கால கட்டத்தில் இரணைமடுக்குளக் கட்டுமானப் பணி நிறைவுற்றது. நீர்ப்பானசன வசதியோடு நெற் பயிர் செய்யுங்கட்டம் ஆரம்பமானது. யாழ்ப் பாணத்தில் வசதி படைத்தவர்கள் காணிகளைப் பெற்று நெற்செய்கையில் ஈடுபட்டனர். 50களின் ஆரம்பத்திற்கான உழவு பொறி கிளிநொச்சிக் குக் கொண்டு வரப்பட்டது. அதுவரை எருமைக ளும், மாடுகளும் யாழ்ப்பாணத்திலிருந்து தேவையான போது தொடருந்துகளில் கொண்டு வரப்பட்ட விவசாயக் கூலிகளுந்தான், நெற் செய் கைக்கு உதவின. மக்கள் தேவைக்கேற்ப வந்து திரும்பினரே. தவிர இங்கு நிரந்தரமாக வாழ்க்கை அமைக்கவில்லை.

1950களில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த திரு.ம.ஸ்ரீகாந்தா யாழ்ப் பாணத்தில் இருந்து பெருஞ்சங்கடங்களுக் கிடையில் யாழ்ப்பாண மக்களைப் படிப்படியாக கிளிநொச்சிக் கொண்டு வந்து சேர்த்தார் இரணைமடுக்குள நீரைப் பெற்று நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்கள் எல்லாரும் வந்து போனவர்கள் தான் இங்கு தங்கியவர்கள் அல்ல. குடியானவர் குடியேற்றத் திட்டங்களான உருத் திரபுரம் முரசுமோட்டை வட்டக்கச்சி இராமநாத புரம் கல்மடு கந்தபுரம் வன்னேரிக்குளம் போன்ற திட்டங்களுக்குத்தான் மக்கள் குடும்பமாகக் கொண்டு வரப்பட்டன அவர்கள் தங்கள் ஊர்க ளில் இனஞ்சனம் உறவினர் ஊரவர் நண்பர்கள் எனப்பல மக்களோடு ஒட்டி உறவாடி வாழ்ந்தி ருந்தனர். இங்கு வந்தபின் இந்த உறவுகளோடு உறவாடுகின்ற உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைக்காது போய்விட்டது அவர்களைத் துன்பம் ஆட்கொண்டது. போய் மனம் விட்டுப் பேசி மனம் ஆற ஊர்க் கோவில்கள் போல் கோவில் கள் இருக்கவில்லை. அரச உதவி நிதிக்கொடை களும் நின்றுவிட்ட பின்பு பொருளாதாரமுடை களும் மேற்கொண்டன. இவற்றால் இவர்கள் மனம் மாறி பின்னர் இடம் மாறிவிடுவர் என்ற எண்ணம் நன்கு அவதானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களிலும் ஆன்மீக மேம்பாடுடைய சிலருடைய தொடர்பு இங்கு காணப்பட்டது. யோகர் சுவாமிகளோடு ஈடுபாடுடைய புகையிரதப் பாதை மேற்பார்வையாளர் கந்தையா அவர்களுள் அடிக்கடி கிளிநொச்சி வருவார். அவர்களுடைய ஊர்தியில் வடிவேற் சுவாமிக்கு ஓர் இடம் எப்போதும் உண்டு சுவாமிகள் இங்கு வந்து கிளிநொச்சி முருகனை வழிபடுவார். இப்படியான நாட்களில் ஒரு நாள் நடந்து போகும் போது யோகர் சுவாமிகள் வடிவேலு சுவாமிகளை மருதனார்மடத்தில் சந்தித்தார். அப்போது வடிவேற் சுவாமிகளைப் பார்த்து நீ கிளிநொச்சிக்குப்போ அங்கு உனக்கு ரொம்ப வேலை உண்டு என்று கூறினார்.

வடிவேற்சுவாமிகள் கிளிநொச்சியில் தனக்கிருந்த ஈடுபாட்டோடு யோகர் சுவாமிகளுடைய வேண்டுதலையும் ஏற்று கிளிநொச்சி வர தீர்மானித்தார். அக்காலங்களில் திரு.த.நல்லதம்பி செயலாளராகவும் காணி அதிகாரி திரு.வ.கிருஷ்ணபிள்ளை தலைவராக அமைந்த அருள் நெறிக்கழகம் வெள்ளிக்கிழமைகளில் கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் கூட்டு வழிபாடு நடந்தும் இவர்களுடன் சில அரச உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களும் விவசாயிகளும் கூட்டு வழிபாட்டில் ஈடுபடுவர். வடிவேற் சுவாமிகள் கிளிநொச்சிக்கு வரத் தீர்மானித்ததை அறிந்த அருள்நெறிக் கழகத்தினர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இதுவரை வைத்தியசாலைப் பணிக்காக ஆயுள்வேத வைத்தியர் சி.அம்பலவாணரோடு தங்கிவந்த திரு.த.நல்லதம்பி வடிவேற் சுவாமிகளுடைய நலன்களை எண்ணி திரு.வ.கிருஷ்ணபிள்ளை அவர்களுடைய கணேசபுரம் முற்பகுதியில் அமைந்த அவருடைய வீட்டிற்கு வந்தார்.

வெள்ளிக்கிழமைகளில் வடிவேற் சுவாமிகள் நிழ்த்தும் சமய பேச்சுக்களும் திரு.த.நல்லதம்பி அவர்களுடைய கூட்டு வழிபாடும் மக்களை ஈர்ந்தன. பெரும்பான்மையான சைவர்கள் வெள்ளி மாலைப் பொழுதை கிளிநொச்சிக் கந்தசாமி கோவிலில் பயன்படுத்துவதில் மிகவும் மகிழ்ந்தனர். இக்காலத்தில் சுவாமிகள் மீது மிகுந்த பக்திகொண்ட துறவி பரமானந்த வல்லி அம்மையாரும் சுவாமிகளுடன் இணைந்து கொண்டார். திரு.நல்லதம்பியினுடைய வழிகாட்டலில் சுவாமிகளுடைய தலைமையில் துறவி அம்மாவினுடைய அன்பான அரவணைப்பினால் அனைவரும் இன்புற்று வாழ்ந்தனர்.

சுவாமிகள் அணி அப்போதிருந்த இல்லம் வசதியற்றது என்று கருதி உருத்திரபுரம் வைத்தியஅதிகாரியின் விகுதிக்கு மாற்றிக் கொண்டனர். பின்னர் உருதிரபுரம் மகா வித்தியாலய அதிபர் திரு.வே.கதிரவேலு அவர்களுடைய விடுதிக்கு சென்றனர். சுவாமிகளின் வசதி குறைவுகளை அறிந்த அரசாங்க அதிபர் ஜெயந்தி நகர திட்டம் உருவான போது வசதியான இடத்தில் திரு.த.நல்லதம்பி அவர்களுக்கு காணி கொடுத்து ஆச்சிரமம் அமைத்து வாழவழி வகுத்தார்.

திரு.வடிவேலு சுவாமிகள் திரு.த.நல்லதம்பி திரு.அம்பலவாணர் திரு.கதிர்வேலு திரு.கணேசானந்த சுவாமிகள் சமயப் பணிக்கு என்றும் தளர்ந்து பின்னின்றதோ கிடையாது. இந்த அணியினரின் கால்படியாத இடமே இல்லை குடியேற்ற கிராமங்களில் கூட்டு வழிபாடு நடத்துவர். பின்னர் அங்குள்ள இளம்வயதினர் பெண்கள் பிள்ளை எல்லாரையும் சேர்த்து கூட்டு வழிபாட்டில் ஈடுபடுத்துவர் சிறு நற் சிந்தனைச் சொற்பொழிவுகளும் வழிபாட்டின் பின் இடம்பெறும். அதனால் மக்கள் சைவத்தை வளர்த்தனர். இலகுவான தேவாரம் திருவாசகம் திருப்புராணங்களுடன் திருவிசைப்பா திருப்பல்லாண்டுப் பாடல்கள் கொண்ட திருநெறிக் கழக கூட்டு வழிப்பாட்டுத் தொகுப்பை கழகம் வெளிட்டது. தனவந்தரகனின் உதவியுடன் ஆயிரம் பிரதிகள் வளர வெளியிட்டு கோவில்களில் கூட்டு வழிபாட்டை வளர்த்தனர். வெள்ளிக்கிழமைகளில் ஆசாரமாக வாழ வழிவகுத்தனர். தேவையான போது சமயதீட்சை கொடுக்கப்படும் அநேகமாக ஊர்க் கோவில்கள் பாடசாலைகளிலேயே இவை இடம்பெறும் வசதியற்ற பலர் இதனால் சமயதீட்சை பெற வாய்ப்பு கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக உருவான குடியேற்றங்களில் மதமாற்றம் பெரிய பிரச்சினையாக இருந்தது சைவர்களின் சமய நம்பிக்கை வளர்ப்பதும் சமய அறிவை ஊட்டுவதும் தான் சைவர்களைக் காக்கும் எனது திருநெறிக் கழகம் கருதியது. அதை எய்த உச்சமாகப்பாடுபட்டது வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் கல்வி வாழ்வாதார உதவிகளை உரியவர்களை நாடி பெற்றுக் கொடுக்கும் உருத்திரபுரம் பகுதியில் நூற்றக்கணக்கான ஏக்கர் காணியை பிற மதத்தினர் பிடிக்க முயன்ற போது தடுத்தது. உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதிக்கு மாதாபுரம் எனவும் பெயர் வைக்க முனைந்த போது எதிர்த்து வென்றது எல்லாம் திருநெறிக் கழகத்தின் அமைதியான பணிகள்.

சமயக் கருத்துக்களைப் பரப்ப சமய சொற்பொழிவுகளை நடாத்த வேண்டுமென எனது கழகம் கருதியது. கிறிஸ்தவர்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பியே சமயம் வளர்க்கின்றனர். சமயம் மாற்றுகின்றனர் என்பதைப் போலவே நாமும் சமயப் பரப்புரை செய்ய வேண்டும் என்று எண்ணித் திட்டமிட்டனர். அவற்றில் பாடசாலைகள் முக்கிய இடம்பெற்றன. ஒரு அறிஞர் வந்தால் நாலைந்து பாடசாலைகளில் கருத்துரை ஒரு கோவிலில் சிறப்புச் சொற்பொழிவு இப்படித் திட்டமிட்டு சமய பெரியாரை அழைப்பர். இந்த வகையில் இந்திய சமயப் பெரியார்களில் குன்றக்குடி அடிகள், கிருபானந்தவாரியார் சந்தானந்தபாரதி கி.வ ஜகநாதன் பித்துகுருளி முருகதாஸ் துரைசாமி சாஸ்திரி இன்னும் சச்சிதானந்த யோகிராஜா சுவாமி சத்தியானந்த (மலேசியா) இவர்களை விட இலங்கை அறிஞர்களான ஆத்மஜோதி முத்தையா பண்டிதர் துரைசிங்கம் பண்டிகை சத்தியதேசி துரைசிங்கம் திரு கா.பொ.இரத்தினம் வித்துவான் சபாரத்தினம் வித்துவான் வேந்தனார் வித்துவான் வேலன் வித்துவான் ஆறுமுகம் வித்துவான் சிவராமலிங்கம் செல்வி புஸ்பா செல்வநாயகம் முதலியாக முத்துக்குமாரு முதலியார் சின்னத்தம்பி வைரமுத்து பண்டிதர் ஆறுமுகம் போன்றோரை அழைத்த நாளுக்கான திட்டம் போட்டு கரைச்சி கண்டாவளை பகுதிகளில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தக் கூடியதான நிகழ்ச்சிகளை நடத்துவர். மாதம் ஒரு சாதனா வாரம் நடத்துவர் இதில் சந்தேக நிவர்த்தி புராணபடனம் என்பன இடம் பெறும் ஒரு குறிப்பிட்ட நூல் எனில் பெரிய புராணம் திருவாசகம் என்ற நூல் பற்றிய சந்தேக நிவர்த்தியும் நடைபெறும். இதனால் பொதுவாக மக்கள் நல்ல சமய அறிவோடு வாழ்ந்தனர்.

திருநெறிக் கழக அணியினரோடு வெளியில் இருந்து சேர்ந்த குறிப்பிட்ட நாட்களில் பணிபுரியும் கிராம சேவையாளர்களில் மகாலிங்கம் விதானையார் பேரம்பலம் போன்றவர்களும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இவர்கள் தங்கள் ஊர்நிலை உபயோகித்து அல்லது வேறு ஆட்களை உபயோகித்து கருமங்களைச் சிறக்க வைப்பர் கழக செயற்பாடுகள் உழைத்த திமுகு செ.வீரசிங்கம் நா.வியாக்கிரம பாதர சி.தில்லைநாதன் (வட்டக்கச்சி) கோ.ரமபமூர்த்தி இ.நடராசா (கணேசபுரம்) செ.நடராசா சுப்பிரமணியம் (பரந்தன்) கா.நாகலிங்கம் (உருத்திரபுரம்) நா.சோதிநாதன் க.இராசரத்தினம் அ.சோமசுந்தரம் சு.சிவதாசன் (கனகபுரம்) குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

திரு.ம.ஶ்ரீகாந்த அரச அதிபராக இருக்கும் போது கனகபுரம் படித்த வாலிபர மேட்டு நிலக்குடியேற்றத் திட்டம் உருவானது. முதற் பண்ணை வந்ததும் வடிவேற்சுவாமிகளைக் கொண்டு பகவத்கீதையில் கர்மயோகம் பற்றி பதினெட்டு வெள்ளிக்கிழமைகளில் வகுப்பு நடந்தி வைத்தார். அரச அதிபர் அத்தோடு நாலு உறுப்பினரைத் தனது ஊர்தியில் ஏற்றி திருநெறிக் கழக கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும்படி சொல்லி கந்தசாமி கோவில் இறக்கி விட்டார். அந்த அளவுக்கு திருநெறிக் கழகப் பணிகளை அரச அதிபர் அறிந்து பாராட்டினார். அந்த நாட்களில் திராவிட முன்னேற்றக் கழக பகுத்தறிவுச் சிந்தனைகளில் சிக்கி, கம்யூனிசக் கோட்பாடுகளில் மயங்கி சமுதாய பாரம்பரிய பண்பாட்டு வழித் தடங்களில் மிகுந்து முரண்பட்ட எங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரை ஏற்ற வழி காட்டி வழிநடத்திய வடலேற் சுவாமிகள் அரச அதிபர் போன்ற சான்றோர் களை நாம் மறவாமல் மதித்து போற்றி விடுகி றோம். சுவாமிகளுடைய பகவத்கீதை வகுப்பு களில் வேண்டா வெறுப்போடு கலந்து பின்னா ளில் தீவிர சமயத் தொண்டர்களாகவும் ஆன்மீகச் செம்மல்களா கவும் சிலர் இன்று வாழ்கின்றனர்.

இத்தகைய கருத்துப் புரட்சிகளைச் செய்தவர்களில் திரு.த.நல்லதம்பி அமைதியான வர் ஆழமான சிந்தனையாளன் ஆனபடியாற்றான். அவர் ஓய்வு பெற்றதும் காந்தீயத்தின் பொருளா ளரானார் அவருடைய நன்நடத்தை நன் மதிப்பு என்பன கிளிநொச்சியையும் வளர்த்து வவுனியா வையும் வளர்ச்சியடையச் செய்தன.

கிளிநொச்சி நகரின் மத்தியில் கிருஷ் ணர் கோவிலுக்கு முன்பாக கிளிநொச்சி திரு நெறிக்கழகத்திற்கு காணி கிடைத்தது கழக அலு வலகம் அமைத்ததெல்லாம் திரு.நல்லதம்பி அவர்களுக்கு இருந்த கழகக் காந்தீயத் தொடர்பு களாலேயே இவர் 1950களில் குடியேற்றங்க ளில் மக்கள் வரத் தொடங்கியதுடன் சமயக் கல்வி பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். ஜெயந்திநகர குமரபுரம் கிராம விஸ்தரிப்புத் திட்ட குடியிருப் புக்கள் இங்கு இவர்களுக்குக் கிடைத்த காணி களால் வளமான வாழ்க்கை வாழ முடியாது. இதே நிலையிற்தான் பன்னங் கண்டி பகுதி மக்கள் இருந்தனர். இவர்கள் விவசாயத் தொழிலாளி கள் இத்தகைய இடங்களில் உள்ள பிள்ளைகள் கல்விக்காகச் சமயம் மாறக் கூடிய நிலை இருந்தது.

இவற்றைத் துல்லியமாக ஆய்வு செய்த திரு.த.நல்லதம்பி தூரநோக்கோடு திட்டமிட்டுத் தொடங்கியது தான் கரைச்சி வித்தியாவிருத்திச் சங்கம் வடகிழக்குப் பகுதியிலும் அதற்கு வெளி யேயும் சைவசமயக் கல்வியை வளர்க்கத் திட்ட மிட்டு நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவி முகாமைசெய்த இந்துபோட் இராசரத்தி னம் கிளிநொச்சியில் ஒரு பாடசாலையையே அமைத்தார். அதுவும் பழங்குடிகளும் புதிய குடி யேற்ற வாசிளும் வாழ்ந்த முரசுமோட்டையிலேயே அமைந்தது. ஏனைய இடங்கள் கைவிடப்பட்டி ருந்தன. இந்தநிலையில் கிளிநொச்சியில் வாழ்ந்த திரு.சு.சிவசுந்தரம் திரு என கே.நல்ல தம்பி பரந்தனில் வாழ்ந்த ரங்கூன் எஸ்.சுப்பிர மணியம் மாணிக்கம் திரு.கா.நாகலிங்கம் ஆகி யோருடன் இணைந்து செயற்படக் கூடிய பலரை யும் சேர்த்து கரைச்சி வித்தியா விருத்திச் சங்க த்தை அமைத்தார். இதன் தலைவர் திரு.சு.சி.சுந்த ரம் செயலாளர் திரு. என் கே.நல்லதம்பி இவர் துணைச் செயலாளராக இருந்து இவர்களை இயக்கி நான்கு பாடசாலைகளை அமைத்து வளர்த்தார்.

இச்சங்கம் கிளிநொச்சியில் இந்து மகா வித்தியாலயத்தையும் பரந்தனில் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தையும் பன்னக்கண்டி தமிழ்க் கலவன் பாடசாலையையும் புத்துவெட்டு வான் தமிழ்க் கலவன் பாடசாலையையும் இன்று ஜெயந்திநகர் குமரபுரம் பகுதிகளில் மீனாட்சி அம்மன் கோவில் முருகன் கோவில் என்பன வளர்ந்த கோவில்களாகிவிட்டன. இன்றைய இந்த நிலைக்கு இலக்கிய வித்திய விருத்திச் சங்கமே வழிவகுத்தது.

திரு.த.நல்லதம்பி அவர்களுக்கு ஆச்சிர மத் தேவைகள் திருநெறிக் கழகத் தேவைகள் வித்தியாவிருத்திச் சங்கத் தேவைகள் எனப் பல இருந்தன. இவை எல்லாவற்றையும் ஈருருளியில் போய ஆட்களைக் கண்டு பேசி வென்று வருவார். அவருடைய தெளிந்த சிந்தனை செயற்றிறன் சமூக நல நோக்குகள் மக்களை உதவ வைத்தன. ஆச்சிரமமும் திருநெறிக் கழகமும் வடிவேற் சுவாமிகள் திரு.நல்லதம்பி போன்றோருடன் கூடிய அணியினால் நடத்தப்பட்டது. வித்தியா விருத்திச் சங்கம் திரு.நல்லதம்பி அவர்களு டைய தனி முயற்சியிலேயே நடந்தது. பொதுப் பணிகளை உச்ச வீச்சில் செய்த போதும் தன் கடமை தவறமாட்டார். நூற்றுக் கணக்கான நோயாளிகளைப் பரிசீலித்து மருந்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சு செய்யும் தமிழ் வைத்தியர் களுக்கு ஈடாகச் செயற்பட்டு தன் கடமையை நிறைவு செய்வார். நாளாந்தத் திட்டம் வாரத் திட்டம் மாதத்திட்டம் ஆண்டுத் திட்டம் என எல்லா நிறுவனங்களுக்கும் விருந்து ஏற்ற வரவுகளை இணைந்து செயற்படவல்லன.

குடியேற்றங்கள் துவக்கி வைக்கப்பட்ட 50களில் பெறிக்கடவை அம்மன் கோவில், புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவில் சேத்துக்கண்டி அம்மன் கோவில் பன்னங்கண்டி பிள்ளையார் கோவில் என்பன இருந்தன. ஆனால் அவை தலவிருட்சங்களில் கீழ் வணக் கத்தலங்களை ஏற்படுத்தி வழிபாடு நடைபெறும் கோவில் சீமாட்டி இராமநாதனின் பெயரில் வழங்கப்பட்ட அரசகாணியில் நீர்ப்பாசன இலாகா அலுவலர்களாலும் ஏனைய பிரமுகர்க ளாலும் அமைக்கப்பட்டு வளர்ச்சியுறாத நிலை யிலே இருந்தது. பின்னர் தனிப்பட்ட குடும்பச் சொத்தாகப் பராமரிக்கப்பட்ட இக்கோவில் விள க்கு வைக்கபதற்கே சங்கடங்களைச் சந்தித்த கோவிலாகவே இருந்தது. ஆனால் திருநெறிக் கழகம் கூட்டு வழிபாட்டை நடாத்தி வந்தது. சமய சொற்பொழிவுகளும் நடைபெறும்.

திருநெறிக்கழகம் இக்கோவிலைப் பொதுச் சொத்தாக்க நீண்ட காலம் தொடர்ந்த கடும் போராட்டத்தை நடத்தியது. கழகம் இக்கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டு வழிபாட்டை நடாத்தியது. வடிவேற்சுவாமிகளின் சமய சொற்பொழிவும் இடம்பெறும். இறுதியில் அரச அலுவலர்களின் தனவந்தர்களின் உதவி யுடன் பொதுக் கோவிலாக்கியது தலைவராக திரு.அ.சிவசுந்தரம் பெரிதும் பாடுபட்டார். அயற் கிராமங்களின் உதவியுடன் சிரமதானப் பணி யில் கோவிலை வளர்த்தார். பின்வரும் அரச அலுவலர்களும் வணிகப் பெருமக்களும் செய்த பெருதவியினால் கோவில் விரைவாக வளர்ச்சி கண்டது.

அன்று ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் வழிபாட்டிடங்களுக்கு காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அவ்வவ்வூர்க ளில் காணியைப் பொறுப்பேற்கவும் கோவில் அமைக்கவும் அமைப்புகள் இருக்கவில்லை.

திருநெறிக் கழகம் அப்பொறுப்பை ஏற்று பணி செய்தது. கனகாம்பிகை அம்மன் கோவில் முரசுமோட்டை முருகன் ஆலயம் குளக்கட்டு வைரவர் கோவில் பணிகளைத் திரு நெறிக்கழகம் ஏற்று அக்கோவில்களை வளர்ச்சி காணச் செய்தது. சிற்றூழியராக இங்கு பணி புரிந்த ஒருவர் போட்டிப் பரீட்சையில் சித்திய டைந்த எழுதுவிளைஞராகி வவுனியா சென்ற இவர் பணிக்காலத்தில் சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தையும் விடுதியையும் அமைத்ததாக அவரது இல்லத்திலும் கூட்டு வழிபாடு நடத்தி னார்.

ஓய்வுபெற்ற பின் காந்தியத்தில் டேவிட் ஐயாவுடனும் வைத்தியர் இராசசுந்தரத்துடனும் சேர்ந்து வவுனியாவில் கிராமிய எழுச்சிக்காகப் பாடுபட்டார். இதன் பயனாக பல தமிழ்க் கிராமங் கள் உருவாயின 850 பாலர் பாடசாலைகள் உரு வாயின. வைத்தியர் இப்பணிகளுக்காக கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் கொலை செய்யப்பட்டார். இவ்வைத்தியருள் கைதான தலைவர் டேவிட் ஐயா மட்டக்களப்புச் சிறை சடையில் தவறி நாட்டை விட்டு வெளியேறி னார். மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான இவர் இயற்கை மரணம் எய்தினார். இருந்த இட மெல்லாம் பணிசெய்து சிறந்து விளங்கினார்.

திருநெறிச் கழகம் அமைதியான முறையில் பணிகளை இப்போது தொடர்கிறது. ஏனையவர்கள் போல் இன்னல் இடப்பெயர்வு எல்லாம் சந்தித்தது மீண்டு சில காலம் அலுவல கக் காணியைப் பெற முடியாது கலி வந்தது. பின்னர் பெற்றுள்ளது. மகாதேவா ஆசிரமம் மன்னார் ஏழைச் சிறுவர்களின் கல்விக்கு வாழ்க்கை மேம்பாட்டிற்கு உதவியது இப்போது பாரியளவில் சிறுவர் நலனுக்கு உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம்



கிளிநொச்சி மாவட்டத்தின் மனித வலு மறுமலர்ச்சியின் அவசியமும் பொருளாதார மீளுருவாக்கமும்

இனிய. சி.தணிகசீலன்,
உதவிப்பணிப்பாளர்,
தேசிய மனித வள அபிவிருத்திச் சபை

அழகிய இலங்காபுரியின் வடக்கே வன்னி நிலத்தின் நடுநாயகமாக விளங்கும் "வடக்கின் நெற்களஞ்சியம்" என கிளினொச்சி மாவட்டம் புகழ்தேத்தப்படுகிறது. இதன் அழகை

"விழிகளில் வன்னி நிலம் அழகள்ளிச் சொரியும்
வேரில்லாச் செடியைப்போல் மயிலாடித் திரியும்
எழில் தோய்ந்த கிளினொச்சி வயல்கள் குலுங்கும்
எங்கும் தமிழ் மணம் இன்பம் பரப்பும்" எனக் கூறுவது சாலப் பொருத்தமே. இந்த மாவட்டம் 126613 (2012 statistical hand book, Kilinochchi) மக்கள் தொகையை தன்னகத்தே கொண்ட ஒரு பெரு நிலப்பரப்பாகும். சுமார் 30 விகிதமான நெற் காணிகளையும் மேட்டுநிலத்தினையும் கொண்ட இந்தப் பிரதேசம் அதிகமாக விவசாயத்தினை மையமாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. போருக்கு பின்னரான மனித வலு மாற்றத்தில் அது கொண்டிருக்கும் சவால், அதற்கான காரணங்கள் மற்றும் அவற்றை வெற்றி கொள்வதற்கான மார்க்கங்கள் பற்றி இந்த கட்டுரை ஆராய்ந்துள்ளது.

1902 இற்கு பின்னரே இரணைமடு குளம் உருவாக்கப்பட்டு குடியேற்றங்களூடாகவே இந்த மாவட்டம் உருவானது (கரைஎழில் 2012, ப.72). இவ்வாறு 1950 இல் இருந்து 1970 களுக்குள் பொற்காலம் என வர்ணிக்கும் அளவுக்கு தெற்கையும் வடக்கையும் இணைக்கும் ஒரு பொருளாதார கேந்திர மையமாக மாறி இருந்தது. வேலைவாய்ப்புகள் அனைவருக்கும் கிடைதிருக்கும் அளவுக்கு அங்கு கொட்டிக்கிடக்கும் வளங்களைக் கொண்டு வினைத்திறனான உற்பத்திகள் பெருகி இருந்தன. மக்களின் மன நிலையில் மகிழ்ச்சி ததும்பியதால் திருவிழாகளியாட்டங்களில் பங்குகொண்ட ஒரு தன்னிறைவான சமுகமாக பரிணமித்திருந்தது.

பிற்பாடு மெதுமெதுவாக இந்த அழகான நகரம் யுத்தம் ஆரம்பமான கையோடுகளை இழக்கத் தொடங்கியது. கிளிநொச்சி மாவட்டம் யுத்த அனல் மாறாத ஒரு பூமியாக இருந்தது இடப்பெயர்வு தொடங்கியது, தொழில் ஸ்த்திரத் தன்மை அடியோடு பாதிப்படைந்தது, கல்வி இடைநிறுத்தப்பட்டது, முதலாளிகள் கூலிகளாகவும், கூலியாட்கள் வேலை இன்றியும் இருக்கும் நலிவுறு நிலை அதிகரித்தது. தொடர்ந்து வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் மற்றும் இழப்புகளும் நிறைந்த பூமியாக மாறியது. துடிப்புள்ள ஒரு எடுத்துக் காட்டான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுகம் பொடிப்பொடியானது, மனிதவலு அப்ப டியே குன்றிவிட்டது.

இது இங்குமட்டுமல்ல உலகில் பல பாகங்களில் உள்நாட்டு யுத்தங்களால் இவ்வாறு பெரிய இழப்புகளை எதிர்கொண்ட நாடுகள் அதே மூச்சில் மீண்டு வந்திருப்பது ஒரு வரலாற் றுப் பாடமாக உள்ளது. வரலாறுகளைப் பார்க் கும்போது மாபெரும் தொழில் புரட்சிகளும், பொருளாதார மாற்றங்களும் நடந்தேறியிருப் பது உள்நாட்டு யுத்தங்களின் பின்னரான காலப் பகுதியில்தான். இதனை போருக்கு பின்னரான பொருளாதார வளர்ச்சி (Post war economic boom) என அழைத்து வருகின்றனர்.

குறிப்பாக பல நாடுகள் 1945 இல் முடிவுற்ற இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின் முதலாளித்துவத்தின் பொற்காலம் (Golden Age of Capitalism) என வர்ணிக்கப்பட்டு இருந்தது. இந்த காலங்களில் மேற்கு ஐரோப்பிய மற்றும் கிழக்காசிய நாடுகளில் உலகலாவிய ரீதியி லேயே நிறை வேலைவாய்புடன் கூடிய மிக உயர்ந்த பொருளாதார வளர்சி (high worldwide economic growth) காணப்பட்டது. அதுபோல் இந்த உள்நாட்டு யுத்தங்களால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிறீஸ் (கிறீஸ் பொருளாதார அதிசயம்– Greek economic miracle), மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் மிக உயர்ந்த பொருளாதார வளர்சியைக் கொண்டிருந்தன. பாழடைந்த நிலங்கள் பொன் விளையும் பூமியாகின, கண்டு பிடிப்புகள், ஆய்வுகள், வணிக விஸ்தரிப்பு என்பன பல்கிப் பெருகின, இறந்த காலத்தினை நினைத்து என்ன பயன் என எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதில் எறும்புபோல் செயற்பட லாயினர் இதனால் தான் அன்று வீழ்ச்சி அடைந்த நாடுகள் இன்று வளர்ச்சி அடைந்த நாடுகளின் பட்டியலில் இடம்பிடித்து இருக்கின்றன.

இலங்கையிலும் முப்பது வருட கால கொடிய உள்நாட்டு யுத்தம் பல உயிர்களையும், உடமைகளையும் முற்றாக அழித்தொழித்திருந் தது. இப்போது அந்த யுத்தம் முடிவடைந்த பின்னர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பது தான் கேள்வி! பொதுவாக கல்வி, சமுக நல மேம்பாடு, கலாசாரம் மற்றும் சமய மறுமலர்சி மற்றும் சமுக பொருளாதார அபிவிருத்தி என் பனவற்றில் 2012ம் ஆண்டு கச்சேரியின் புள்ளி விபர அறிக்கைப்படி 8,078,600 ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. இதுபோல் வாழ்வாதா ரம், உட்கட்டுமானம், சுகாதாரம், மீள்குடியேற் றம், நீர்பாசனம், குடிநீர் விநியோகம் என எல்லா வகையிலும் பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப் பட்டு மீளுருவாக்கம் இடம்பெறினும் இன்னும் மனித வளத்தை வலுவூட்டுவதில் பாரிய சவால் களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இங்கு தொழில்வாய்ப்புகளை ஏற் படுத்துவதற்கான முன்னகர்வுகளை எடுத்தேத்து வதன் மூலமே நலிவுறும் தன்மையை குறைக்க லாம். அதில் பல காரணிகள் செல்வாக்கு செலுத்துவதனை பின்வரும் மாதிரி காட்டுகிறது.



இந்த இலக்கினை நோக்கி இவர்களை வலுப்படுத்துவதில் பல பிரச்சினைகள் உள்ளது. யுத்தத்தின் பின்னரான மன அழுத்தத்தில் இருந் தான மீட்சி இன்னும் அவர்களிடத்தில் ஏற்பட வில்லை, அத்துடன் உள்ளக இடப்பெயர்வு, புதிய குடியேற்றம் போன்ற இன்னோ ரன்ன காரணங் கள் அவர்களிடையேோக்க நிலையை உருவாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக உள்ளது. போட்டி நிலையில் உள்ள சமுகத்திற்குள், உலக மயமாதலை விழுங்கிய மக்களுக்குள் பாரம்பரியமாக வாழ்ந்த சமு கத்தை திணிக்கமுடிய வில்லை, நிற்க 30 வருட யுத்த அறைக்குள் அடைபட்டுக்கிடந்த மக்கள் கூட்டத்தை உலக அரங்கில் சங்கமிக்க வைக்க வும் முடியாத ஒரு நிலையில் திணிக்க முயலு கின்ற எதுவும் விபரீதத்தினை ஏற்படுத்தும் என்ற அச்சத்தில் மனித வலுவை வளப்படுத்து வது ஒரு சவாலே! மறுப்பதற்கில்லை.

விவசாயம் , மீன்பிடி என்ற பாரம்பரிய தொழில்களுக்கு அப்பால் புள்ளிவிபரப்படி சிறிய தொழில் மையங்களில் என பயிற்றுவிக் கப்பட்ட வெறும் 947 மனித வலுவினை மட்டும் இந்த மாவட்டத்தில் அடையாளங்கண்டுள்ளனர். இவர் கள், அரிசி ஆலைகள், குளிரகம், கைப் பணி வேலையகம், தையல், இனிப்பு தயாரிப்பு, அச்சிடல், வெதுப்பகம், ஒட்டுதொழில், கல்லாலை, தளபாடத்தயாரிப்பு போன்ற சில இடங்களில் வேலை செய்வதை அது சுட்டிக் காட்டுகின்றது. பல தொண்டு நிறுவனங்கள், அரசாங்க நிறு வனங்கள் என்பனவற்றின் ஒட்டுமொத்த கவன மும் இங்கு திரும்பி இருக்கும் தருணத்தினை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி மீண்டும் ஒரு முயற்சி உள்ள சமுகமாக உலகிற்கு எடுத்துக் காட்ட தொழில் பயிற்சி பெறுதல் அவசியம், அத னூடாகவே தரமான, போட்டித்தன்மையான, விசேடத்துவமான உற்பத்திகளை அறுவடை செய்யலாம். இது இன்று எம்மிடையே ஏந்தி நிற்கும் நலிவுறு தன்மையை படிப்படியாக குறை வடையச் செய்து சமுகத்தில் முந்தி இருக்கச் செய்யும்.

ஒரு மாற்றத்தினை காண்பதற்கு அடிப் படையில் அங்கு கிடைப்பனவாக உள்ள வளம் அவசியம், அத்துடன் பாதை அபிவிருத்தி, போக்குவரத்து, தொடர்பாடல், சந்தைப்படுத்தல், எனைய உட்கட்டுமானங்கள் என்பன இன்றிய மையாதனவே இவை இங்கு ஏற்படுத்தப்பட்டுள் ளது. அத்துடன் செழிப்பான நில வளம், நீர்வளம், காட்டுவளம் உள்ளமையால் எதையும் உற்பத்தி செய்யும் வளக்கிடைப்பு ஒரு வரப்பிரசாதமே. யப்பான் உலகமகா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டி ருந்த போது ஒரு இயற்கை வளமும் அங்கு இருக்கவில்லை அத்துடன் மனித வளம் கூட அணுகுண்டு வீச்சில் சிதைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களது மீண்டு வரவேண்டும் என்ற வெறித்தனம் இன்று உலகில் முன்னணியில் உள்ள நாடுகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

ஆகவே இந்த மாவட்டத்தில் வளம் இருக்கிறது, அவற்றைப் பயன்படுத்தும் வகை யில் திறன் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். யுத்தம் காரணமாக இடம்பெயர்நத மக்கள் கல்வியை இடைநிறுத்தி இருக்கலாம் அவர்களு க்கு தொழில் பயிற்சிகள் அரசாங்கத்தினாலும், அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் வளங்கப் பட்டுக்கொண்டிருந்தாலும், இவர்கள் அதில் ஆர்வமாக பங்கேற்கிறார்களா? என்ற கேள்வி யுள்ளது. இதனை மக்களிடையே விழிப்படையச் செய்து சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் சார்ந்த வாய்புகளை ஏற்ப்படுத்துவது இவர்களை பழய நினைவுகளில் இருந்து மீட்டெடுக்கும் மார்க்கமாகவும் இருக்கும்.

இங்குள்ள மக்களில் அதிகமானோர் கடன்காரர்களாக மாறி வருவதனை அவதானி க்க முடிகிறது, இது மரத்தால் விழந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் அவர்களை துன்பச் சுழிக்குள் தள்ளுகின்ற துர்பாக்கிய நிலையில் உள்ளனர். இவர்கள் வெறும் தற்காலிக கூலித் தொழிலில் நம்பிக்கை வைத்து பல நேரங்களில் அதற்கான சந்தர்ப்பத்தினை இழந்து சங்கடப் படுகிறார்கள். அவர்களுக்கான மீட்சி ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் ஆளுமையுள்ள தொழில் திறன் அல்லது ஆற்றலுள்ள மக்களாக மாற்றப்படும் போதே கிடைக்கும். இது உளவியல் மற்றும் பொருளியல் சேர்ந்த மாற்றத்துக்கான மார்க்கமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணை : கரை எழில் 2012

Satistical hand book-2012, Kilinochchi District.

http://en.wikipedia.org/wiki/Post-war_economic_boom

http://www.mindflash.com/blog/2012/10/three-ways-to-build-an-employee-development-culture/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

கனகபுரம் முன்னோடித் திட்டத்தின் நுழைவாயில்

இனிய.க.இராசரத்தினம் (குரு)
1ம் பண்ணை, கனகபுரம்,
கிளிநொச்சி.

1958ம் ஆண்டு கிராமாபிவிருத்தித் திட்டத்தின் கீழ் படித்த வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து கோண்டாவில் கிராமாபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியளித்தனர். இப் பயிற்சிக்கு யாழ் குடாநாட்டிலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்தும் பயிற்சியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உலக அரசியல் நிலைமை, தனி மனித சுதந்திரம், பொருளாதாரம், நாட்டு வளம் ஆதியாம் விடயங்கள் மனிதவாழ்வுடன் எப்படிப் பின்னிப்பிணைந்துள்ளன என்ற விடயங்களுடன் இவற்றைப் பயன்படுத்தி மனித வளர்ச்சிக்கு அடிப்படைத்தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியனவற்றை நாமே தேவைக் கேற்ப தேடிக்கொள்வதெப்படி, அப்படியான சுய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வாழ்க்கை முறை எது? அந்த வாழ்வு முறையில் ஆதரவு, பாதுகாப்பு, மதிப்புப் போன்றவை எப்படியான முக்கிய இடங்களை வகிக்கின்றன போன்ற இன்னோரென்ன விடயங்களெல்லாம் அலசியாராயப்பட்டன. இதன் பெறுபேறாக முன்பு கடைப் பிடித்த குழுவாழ்க்கை முறை சர்வோதய தலைவர்களான ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஸ்ரீ வினோபாபாவே போன்ற ஆத்ம தத்துவ ஞானிகளின் கொள்கையடிப்படையில் கிராம ராஜ்யம் என்ற திட்டத்தின் கீழ் வாழ்ந்தால் மேற்கூறிய ஆதரவு, பாதுகாப்பு, மதிப்பு போன்றவற்றை அங்கு பெற்று ஒரு சுதந்திரமான வாழ்வை அமைத்துக்கொள்ளலாமென் முடிவானது.

இவ் வாழ்க்கை முறையில் முன்னேடித் திட்டமாக, (Pioneering Scheme) அமைக்கும் பொருட்டு பதினொரு இளைஞர் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க, மேற்படி பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த திரு.க.குமாரசாமி அவர்கள் இதனை யாழ் மாவட்ட அரச அதிபராக இருந்த காலஞ்சென்ற திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்களிடம் தெரிவித்தார். அரச அதிபர் அவர்கள் தனித்தனியாக நேர்முகப் பரீட்சை நடாத்தினார். பிரமித்துப்போனார், பேரானந்தம் அடைந்தார். இதற்கு அமைவாக திட்டங்களைத் தீட்டினார். அரச அனுமதியைப் பெற்றார். முதலில் கிளிநொச்சி நகரத்துக்குக் கிட்டவாக உள்ள காட்டில் மூன்று ஏக்கர் நிலத்தில் இத் திட்டத்தை தொடங்குவதென தீர் மானிக்கப்பட்டது. திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் யோக சுவாமிகளை அணுகி மேற்படி திட்டம் ஆரம்பிப்பதற்கு ஆசிகளைப்பெற்று, விதரமிருந்து, ஆலைய வழிபாடுகளுடன் கிளிநொச்சி பிரமுகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சமூகமாகி இருக்க 1958ம் ஆண்டு ஆவணித் திங்கள் 29ம் நாளன்று புதுமுறிப்பு றோட்டில் புகையிரதக்கடவைக்கு அருகே முதன் முதலாக காட்டினை வெட்டி "இளங்கதிர் குழுவாழ்கைப் பண்ணை" என்னும் பெயரைத் தாங்கிய இத் திட்டத்தை மேற்படி அரச அதிபர் அவர்கள் ஆரம் பித்து வைத்தார்கள். அத்தருணம் சமூகமாயி ருந்தவர்கள் பச்சிலைப்பள்ளி கரைச்சிப் பகுதி விதானைமார்களும் ஜெயினுலாபுதீன் காக்கா, திரு.முருகேசம்பிள்ளை (உ.அ.அதிபர், திரு.தெட்சனாமூர்த்தி (மே.அ.அதிபர், திரு.மு. யோகலிங்கம் (ச.ந்.நீ), திரு.வீ.கே.முருகேசு (வட்டிக்கடை), திரு.ஆர்.என்.கோ.சின்னத்துரை அவர்கள், கல்மடு சத்தியாக்கிரகம் சின்னத்தம்பி. வேறும் பல முக்கியஸ்தர்களுமாகும்.

நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக காடு வெட்டுதல் வேலியமைத்தல், கிணறு தோண்டுதல் போன்றவற்றில் முன்னேற் றங் காணப்பட்டது. அக்காலத்தில் கிளிநொச்சி வட்டக்கச்சி றோட்டுச்சந்தியில் ஒரேயொரு பல சரக்குக்கடை (காக்காகடை) கிளிநொச்சி கந்த சுவாமி கோவிலுக்கருகில் ஒரு தேனீர்க்கடை (செல்லையாகடை) போன்றவை மாத்திரமே இருந்தன. யானையும், கரடியும், மானும், மரையும் பன்றியுடன் பலரக மிருகங்களின் பாளையமாக இருந்த காட்டுக்குள் மனிதவழ்வு எங்களிடம் வார்த்தைகள் இல்லை. எறும்பு களின் எண்ணிக்கை போல பாம்புகளின் நடமாட்டம் காட்டெருமைகளின் தொல்லை ஆகியன சொல்லில்லடங்காது. நாட்டுகின்ற தென்னங்கன்றுகள் அன்றிரவே யானையின் துதிக்கைக்கு பதமாகிவிடும். எந்தவித பயிர் வகைகளும் நாட்டமுடியாது அழிவுத்துயர் எங் களை ஆட்டிப்படைத்ததையா. அக்காலகட்டத் தில் அரச மர – அரிவு ஆலைக்கு சொந்தமான கிடுகுக்குடிசையில் நாங்கள் விடுதிவிட்டு வந்தோம். நாங்கள் நித்திரை செய்யும் வேளை யில் பாய்க்கு அடியில் பாம்புதாலாட்டும், மனம் சோரவில்லை, இருவர் ஓடிவிட்டனர் ஒன்பது பேர் மட்டுமே தேறினோம்.

எமது வாழ்வுக்கு பொருள்வளம் தேடும் பொருட்டு யாழ் திருநெல்வேலி அரச பண்ணை யிலிருந்து தருவிக்கப்பட்ட ஐம்பது கழிவு கோழி களுடன் கோழிவளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. கோழிக் கொட்டிலுக்குள் வெங்கணாந்திப்பாம்பு கோழிகளை விழுங்கியதால் வெளியேற முடியாத நிலையில் கொல்லப்பட்ட சந்தர்ப்பங் களுமுண்டு இக்காலத்தில் திரு.கனகரத்தினம் (DAEO) (மாவட்ட விவசாய அதிபர்) அவர்கள் இன்முகம் பாராது முன்னின்று உதவிவந்தார். கோழிவளர்ப்பு முறையினை கண்ணயராது கற்பித்த திரு.எதிர்வீரசிங்கம் (க.ப) அவர்கட்கு க்கு நாங்கள் என்றுமே கடப்பாடுடையோம் காடு வெட்டி கிணறுவெட்டும் நாட்களில் திரு.ம.ஸ்ரீ கந்தா அவர்கள் றோட்டிலே நின்று "பிள்ளைகள்" என்று எங்களை கூவியழைத்தபோது நாங்கள் யாராது என்று மிரட்டியதை நினைக்க இப் போதும் மனம் கோணுகின்றது. அத்துடன் தேனீர் அருந்தும் வேளையில் சமூகமாயிருந்த ஸ்ரீ ஐயா அவர்களும் நாங்கள் குடிக்கும் சிரட்டையி லேயே இன்பமாக மனமுவந்து தேனீரருந்திய எளிமை யான உளப்பாங்கிற்கு ஈடிணையேது முண்டா?

வெள்ளை லைக்கோண், ஆர்.ஐ.ஆர்., ஒஸ்ரலொப் போன்ற ஐம்பது கழிவுக்கோழி களுடன் ஆரம்பிக்கப்பட்ட கோழி வளர்ப்பு ஆயிரமாயிரம் குஞ்சுகள் பெற்று வளர்க்க ஆரம்பமானது. 1500 குஞ்சுபொரிக்கும் இயந்தி ரம் கடனில் பெற்று குஞ்பொரிக்கும் வேலையும் ஆரம்பமானது. இவ்வாறு முட்டையிடும், வளரும் குஞ்சுக் கோழிகளுமாக பத்தாயிரம் வரை வளர்த்தோம் கோழிக்குஞ்சுக் களுக்கு நோய்களைக்கண்டு பிடிப்பதிலும் அவற் றிற்கு குணம் நாடுவதிலும் தேர்ச்சி பெற்றோம். நாளொன்றுக்கு இரண்டாயிரம் முட்டைகள் வரை உற்பத்தியானது அவற்றை விற்பனை செய்வதில் பட்டகஷ்டங்களும் பல. ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சமூகம் தரும் திரு.ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் தனது கார் டிக்கிக்குள்ளே முட்டைகளை ஏற்றிச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்து பணம் அனுப்புவார். கழிவுக் கோழிகளை ஏற்றிச் சென்று விற்பனை செய்யும்பொழுது திரு.முரு கேசம்பிள்ளை அவர்கள் ஏலம் கூறும் காட்சி எங்கள் கண்களை விட்டகலா.

இக்காலகட்டத்தில் கோழிப்பகுதிப் பொறுப்பாளராக திரு.க.இராசரத்தினமும் உதவி யாளராக திரு.ச.செல்வரத்தினமும், விவசாயப் பொறுப்பாளராக திரு.க.செல்லையாவும் உதவி யாளராக திரு.நா.சோதிநாதனும், பண்ணை நிருவாகப் பொறுப்புத் தலைவராக திரு.வே.மார்க்கண்டு அவர்களும் தெரிவு செய் யப்பட்டு இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. அப்பு, ஆச்சி, பிரதர், உபாத்தியார், குரு, பாட்டா, அக்கா, தங்கை, தம்பி போன்ற பெயர் கள் சூட்டி குடும்பமாக இயங்கி வந்தமை யாவரையும் பிரமிக்க வைத்தது. 1960ம் ஆண்டு தொடக்க முள்ள காலப்பகுதியில் மாதம் ரூபா 22,000/= நிகரலாபம் பெற்றோமென்றால் அது எங்கள் பொருளாதார ரீதியில் நாம் செய்த விடாமுயற்சி யின் பெறுபேறென்றே கூறவேண்டும். தொண் ணூறு இறாத்தல் எடையுள்ள பூசினிக்காய் பிடுங்குவதுடன் கிளிநொச்சிப் பகுதியிலே முன் மாதிரியான மரக்கறித் தோட்டமும் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கண்டியில் நடை பெற்ற கோழிக்கண்காட்சியில் எங்கள் கோழி களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை முதற்தரமானவையெனப் பாராட்டுப் பெற்றோம். AA Grade வெள்ளை லைக்கோன் சாதி போன்ற திருந்திய சாதிக் கோழிக்குஞ்சுகள் வெளிநாடு களிலிருந்து பெற்று வளர்த்துள் ளோம். எங்கள் முன்னோடித் திட்டத்தின் தந்தையாக திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்களும் தாயாக திரு.முரு கேசம்பிள்ளை அவர்களும் விளங்கினார்கள். இவர்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வந்து பிள்ளைகளின் தனித்தனி சுகதுக்கங்களை விசாரிப்பதில் தவறியதே கிடையாது. குசினிக் குள்ளே வந்து சட்டிகளைத் திறந்து பார்த்து சாப் பாட்டு நிலைமைகளை கண்காணிப்பதில் கண் ணுங் கருத்துமாக இருந்தனர். திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் குடும்ப சமேதராக வந்து அடிக்கடி ஆறுதல் கூறுவதுடன் ஊக்கமளித்து வந்தார். வெவ்வேறு நாட்டுத் தூதுவர்கள் கூட்டுத்தாபனப் பொறுப்பாளர்கள் அரச தலைவர்கள் சமயப் பெரியார்கள் நிபுணர்கள் பலரையும் கூட்டிவந்து எங்கள் திட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார்கள். அதற்கத்தாட்சியாக நாட் குறிப்புப்புத்தகம் இப்பொழுதும் எங்களிடமுள் ளது. ஆசியா பவுண் டேசன் ஸ்தாபனம் (ASIA FOUNDATION) எங்களுக்கு பலவிதமான உதவிக ளைச் செய்துள்ளது. நீர் இறைக்கும் இயந்திரம் இளைஞர்கள் மாற்றுத்திட்டம் (Youths Exchange Programme) போன்றவையாகும் இத்திட்டத்தின் கீழ் 7ம் பண்ணையில் இருந்து திரு.S.P.ஜெறுட் என்பவர் அமெரிக்காவுக்கு அசியா பவுண்டேசன் செல வில் அனுப்பப்பட்டார். எங்கள் திட்டத்தில் மேலும் நூற்றுக்கணக்கானவர்களை சேர்க்கும் படியும் ஒரு கிராமமே உண்டாகும் மென யாழ் கொழும்புதுறை யோகர்சுவாமி அவர்களின் வாக்கிற்கு அமைவாக 2, 3, 4,ன்கு என்று தொடங்கி பதினொரு பண்ணைகள் தாபிக்கப் பட்டன. முதலாம் பண்ணை மாத்திரம் இரண்டா யிரம் முட்டைகள் உற்பத்தியாகி இருந்ததென் றால் மற்றப்பண்ணைகளின் உற்பத்தியைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ. முட்டைகளையும் விவசாய உற்பத்தி பொருள் களையும் விற்பனை செய்வது ஒரு பெரும்பிரச் சனையாக இருந்தது. அதற்கு உதவும் முகமாக பலநோக்குக் கூட்டுற வுச்சங்கம், ஐக்கிய நாயண சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம் போன்ற சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன. முற்கூறப்பட்ட பதினொரு பண்ணைக்கும் தலைவர்களாக பின்வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1ம் பண்ணைக்குதிரு.வே.மார்க்கண்டு
2ம் பண்ணைக்கு .... திரு.நா.நடராசா
3ம் பண்ணைக்கு .... திரு.சு.கதிர்காமத்தம்பி
4ம் பண்ணைக்கு .... திரு.பொ.தம்பிராசா
5ம் பண்ணைக்கு .... திரு.செ.குஞ்சிதபாதம்
6ம் பண்ணைக்கு .... திரு.நா.சண்முகம்
7ம் பண்ணைக்கு .... திரு.ஜி.ஜே.சபாநாதன்
8ம் பண்ணைக்கு .... திரு.ஜே.பி.மரியரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ம் பண்ணைக்கு .... திரு.ஜே.எம்.பி.வால்டர்
10ம் பண்ணைக்கு .... திரு.ஆர்.பி.இராசநாயகம்
11ம் பண்ணைக்கு .... திரு.என்.சுப்பிரமணியம்

இவ்வாறு பதினொரு பண்ணை களிலும் 133பேர் அங்கம் வகித்தார்கள். எமது திட்டம் இலட்சிய புருஷர்களின் விடா முயற்சி யால் முன்மாதிரித் திட்டமாக அமைந்தது. கிளி நொச்சி மாவட்டம் முன்மாதிரி நகரம் ஆக வளர்ச்சிபெற உதவியதென்பது வெள்ளிடை மலை. அதனாற்தான் பொன்விளையும் பூமியாக இருந்த எமது கிராமத்துக்கு "கனகபுரம்" எனப் பெயரிமிட்டு அக்கிராமத்துக்கு சதா ஆசிவளங் கும் தாயாக இரணமடு குளத்தருகே எழுந்தருளி யிருக்கும் அம்பிகைக்கு, "கனகாம்பிகை" என் றும் திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் யோகர்சுவாமி களின் ஆலோசனைப்படி கனகம் என்னும் அடிவிளங்க கனகபுரத்தின் பெயரால் கனகாம் பிகை எனப் பெயர் ஆட்டப்பட்டது. மேலும், கனகாம்பிகை அம்மன் ஆலய அடிக்கல் நாட்டு விடயமாக யோகர் சுவாமிகளை சமூகமளிக்கு மாறு திரு.ஸ்ரீகாந்தா G.A.அவர்கள் வேண்டி னார்கள். அப்போ சுவாமிகள் ஒரு சிரிப்புச் சிரித்து பேசிவிட்டு "நீங்கள் வாகனத்தில் போகும்போது ஒரு வல்லூறுப் பறவை உங்களு க்கு முன்னே போகும். அது இரணைமடு குளக் கரையில் ஒரு மரத்தில் அமரும் அந்த மரத்தடி தான் மூலஸ்தானமாக எடுத்து கட்டு வேலையை ஆரம்பிக்குமாறு கூறினார்." அவ்வாறே அடிக்கல் நாட்டும் தினத்தன்று விரதமிருந்து மிகவும் பயபக்தியாக சென்ற போது குறிப்பிட்ட பறவை காட்டிச் சென்று குளத் தின் வட தெசையில் ஒரு பாலைமரத்தில் அமர்ந்தது. அந்த இடமே மூலஸ் தானமாக அமைந்தது.

எங்கள் பண்ணையில் சமயவிடங்கள் பற்றி கூறவேண்டியதும் அவசியமாகும். எங்கள் திட்ட ஆரம்ப காலத்திலிருந்தே கிளிநொச்சிப் பகுதியில் தவத்திருவடிவேல் சுவாமிகள் அவர் களின் தலைமையின் கீழ் இயங்கிவந்த திரு நெறிக்கழகம் பல சமயப்பெரியார்களையும் ஞானிகளையும் தபசுகளையும் எங்கள் வாழ்க்கை முறையை காண்பிக்கும் பொருட்டு நெறிப்படுத்தி ஆசிகள் வழங்கும் பொருட்டு அழைத்து வந்துள்ளார்கள். இதற்கு முன்னின்று உழைத்தவர் அப்போதய செயலாளர் திரு.த.நல்லதம்பி ஆகும். அவர்களுள் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த திருநிறை குன்றக் குடி அடிகளாரவர்கள் நான்கு தடவைகளில் சமூகம் தந்துள்ளார்கள். எமது நாட்குறிப்பேட் டில் அவர் "ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேவைக்கு உழைப்பையே நம்புவது நாகரிகம்" என நாகரிகத்துக்கு வரைவிலக்கணம் கூறியது ஒரு சிறப்பம்சமாகும். சுவாமி அத்வையாநந்த சரஸ்வதி, சுவாமி சதானந்தா, சுவாமி ஞானா னந்த சரஸ்வதி, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் போன்றவர்களின் வருகை எமது கிராமங்க ளையே புனிதமடையச் செய்தது. சுவாமி சுத்தானந்த பாரதியார் வருகை தந்தபொழுது எங்கள் முன்னோடித்திட்டத்தின் எழிலைக்கண்டு பிரமித்துப்போய்

"பச்சைமேனிப் பாக்கியமே பரிவு கூறுவாய்
இச்சகத்தில் உழைத்து வாழும் இன்பமோங்கவே
– வறுமைத் துன்பம் நீங்கவே"

என்று கவிமழை பொழிந்துள்ளார்கள். அத்துடன் பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங் களையும் பதினெட்டு வாரங்களாக வகுப்பு ஒழுங்குமுறையில் தவத்திரு வடிவேல் சுவாமி கள் உபதேசித்தார்கள். கீதையின் மூலக்கருத்து ஒன்றே எங்கள் இன்பதுன்பங்களிடையே ஊடறு த்து நின்று வழிநடத்திவருகின்றது. மேலும் மேற்படி பண்ணைகளிலுள்ள சைவ அங்கத்தவர் கள் ஒழுங்கு முறைப்படி ஒவ் வொரு கிழமை யும் கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தின் பரா மரிப்புக்கு ஆதரவு வழங்கும் வகையில் மரக்கறி, அர்ச்சனை சாமான்களுடன் சென்று வந்துள்ள னர். அதற்கு ஆதாரமாக அப்போ அனுப்பிவந்த கடிதப்பிரதி உள்ளது. முன் போந்த பதினொரு பண்ணைகளும் அதிலடங்கிய 133 அங்கத்தவ ரும் தமிழர் வரலாற்றிலே ஒரு திருப்பு முனையை ஏற்படத்தியவர்களென்பது உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கை நெல்லியாகும். தங்கள் வாழ்க்கை வசதி களையும் சுகபோகங்களையும் பொருட்படுத் தாது தமிழர் நிலங்காக்குந்தாகத்துடன் தங்கள் குறிக்கோளிலே கண்ணுங்கருத்துமாக விருந்து யாழ்க் குடாநாட்டுக்கு வெளியே சாதனை நிலை நாட்டியுள்ளனர். இது தமிழரின் ஒரு எழுச்சித் திட்டமென்றே கூறல்வேண்டும். சமூக, பொரு ளாதார தாக்கங்கள் காரணமாக கூட்டு வாழ்க்கை முறையில் ஐந்து வருடங்களின் பிற் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக குழு வாழ்க்கை முறையில் திருப்பம் ஏற்பட்டது. தனிப்பட்ட முறையில் காணிகளைப் பகிர்ந்தளிக் கப்பட்டு தனிப்பட்ட வாழ்க்கைமுறை கைக் கொள்ளப்பட்டது. இந்நிலை 1962ம் ஆண்டில் ஏற்பட்டது.

"கனகபுரந் தனையாக்கி கண்ணயராது காத்து
கனகாம்பிகையிடமே காக்கவேனக் கையளித்த
கனகமணி விளக்காம் ஸ்ரீகாந்தா சேவைதனை
கணமேனும் மறப்போமாகில் உண்டாமோ உய்வு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

நாடக வரலாற்றில் ஒரு பகுதியும் கிளிநொச்சியில் நாடகம் வளர்ந்த வரலாறும்

இனிய. நா.வேலாயுதம்
கிளிநொச்சி

இயல், இசை. நாடகம் என எமது தமிழ் பாரம்பரியம், பண்பாடு, சங்ககாலம் தொட்டு இன்றுவரை முத்தமிழும் தமிழ் முத்துக்களாகப் பூத்துக்குலுங்கிக் கொண்டிருக்கின்றது. இவற்றில் நாடகத்தமிழ்

"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் " என்கின்ற தொல்காப்பியம்.

"பாடல் ஓய்ந்தும் நாடகம் நயந்தும்" எனப் பட்டினப்பாலை சொல்லுகின்றது. கூத்து ஆட்டம் என்ற பெயர்களால் இறைவனே கூத்தாடியாகி இவ் உலகம் இயங்குகின்றது. உலகமே நாடக மேடை ஆளுக்கொரு பாத்திரமேற்று நாமெல்லோரும் நடித்துக் கொண்டிருக்கின்றோம்.

நாடகம் ஆரம்ப காலங்களில் "கூத்து" மக்கள் கூடிக்களிக்கும் நிகழ்வுகளிலும் இறை சந்நிதானத் திருவிழாக்களிலும் அரண்மனை நிகழ்வுகளிலும் நடத்தப்பட்டதாக அறியமுடிகிறது. பின்பு நாடகக் கொட்டகை அமைக்கபட்டு நாடகங்கள் நாளாந்த பொழுது போக்கு நிகழ்வாக நடாத்தப்பட்டு வந்தது. இதனடிப் படையில் பல நாட்களாக கொம்பனிகள் கலைஞர்களை உருவாக்கி தந்தது. சினிமா வருவதற்கு முன் நாடகமே மக்களை ஆட்சி செய்து வந்தது.

தமிழகத்திலும் பல நூற்றுக்கணக்கான நாடக கம்பணிகள் நாடகங்களை நடத்தி மக்கள் மத்தியில் மகத்தான இடத்தினை வகித்து வந்தது. நாடகங்களினால் மக்கள் புத்துணர்வு பெற்றார்கள். உள்ளக்கிளர்ச்சி ஏற்பட்டு தம் வாழ்க்கையில் பல இலட்சியங்களை உருவாக்கி அதன் படியே !வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, காந்திமகான் தனது சத்தியசோதனையில் தான் சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் "அரிச்சந்திரா" நாடகத்தைப் பார்த்தாராம் அரிச்சந்திர மன்னன் தன் வாழ்வில் ஒரு பொய் கூடப் பேசாது பெரும் புகழ்பெற்று வரலாறு படைத்தவன். வாய்மையின் காவலனாக வாழ்ந்து நாடு நகரிழந்து மனைவி மக்களையும் இழந்து நாயிலும் கேவலமாக நடுநிசி நேரத்தி லும் சுடு காடு காவல் காத்து பிழைக்கும் நிலை மைக்குத் தள்ளப்பட்டான்.

இருந்தும் ஒரு பொய் கூட சொல்லாது வாய்மை காத்த மன்னனாக வரலாறு படைத்தவன். அரிச்சந்திராவின் வரலாற்றை நாடகமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த சிறுவன் காந்தியின் மனதில் ஆழப்பதிந்தது தானும் பொய் பேசுவதில்லை என இலட்சியத்தை வரித்துக் கொண்டவர் மகாத்மகாந்தி.

அன்றுதொட்டு இன்றுவரை, நாடகங்கள் மூலம் நாட்டு மக்கள் எழுச்சி கொள்ளவும் அலட்சியங்களை வரித்துக் கொள்ளவும் நாகரீகங்களை வளர்த்துக் கொள்ளவும் கூத்து நாடகம் தொகுத்து நாட்டுக் கூத்து பேருதவி செய்து வந்திருக்கின்றது. நாட்டு மக்களுக்கு நல்லனவற்றையும் இலக்கிய இதிகாசங்களையும். அறிவு வளர்ச்சியையும் மக்கள் பார்ப்பது பார்வைஞானம் என வழி சமைத்தது.

சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம் போன்ற காலங்களிலும் நாடகங்கள் தங்கள் கடமையை செய்தே வந்திருக்கின்றது.

19ம் , 20ம் நூற்றாண்டுகளில் மக்கள் மத்தியில் நாடகக் கலைபிரபலமடைந்தது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை என்பார் இயற்றிய "மனோன்மணியம்" எனும் நாடகம் மங்காப் புகழ் பரப்பியதாக அறியக் கூடியதாகவுள்ளது. இதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் நாடகங்களை வளர்க்க பல நாடகக் கொம்பனிகள் வளர்ந்தன. இலங்கையிலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி நல்ல நல்ல நாடகங்களை உருவாக்கி பரப்பி வந்திருக்கின்றது.

அதே போன்று எமது கிளிநொச்சி மண்ணிலும் 1965ம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை மட்டங்களில் உருவாக்கப்பட்ட நாடகங்கள் ஏனைய கலைநிகழ்வுகள் விழாக்களில் காட்டுவார்கள். அதற்கு முன்னரான காலங்களில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு கலைஞர்களினால் இங்கு கொண்டு வரப்பட்ட கூத்துக்கள் அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, வடமோடி, தென்மோடி எனவும் நாடகங்களாகவும் வருடத்தில் ஒரு தடவையோ ஏதாவது விழாக்கள் நடைபெறும் இப்படியான மேடை நாடகங்கள் நடைபெற்றுவந்தன.

அக் காலங்களில் கிளிநொச்சி பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் படித்து விட்டு தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் தொழில் தேடித்திரிந்தவர்கள் மத்தியில் எங்கள் கிளிநொச்சியிலும் நாடகங்களை உருவாக்கி மேடையேற்ற வேண்டும் எங்கள் மத்தியிலிருந்து கலைஞர்கள் உருவாக வேண்டுமென்ற உயர்வான சிந்தனைகள் மேலோங்கி நின்றது.

கிளிநொச்சி இளைஞர்களின் அம் முயற்சி பலனளித்தது கிளிநொச்சியில் நாடகக் கலைஞர்களான கலைஞர் சத்தியமூர்த்தி, கலைஞர் வீரசிங்கம், கலைஞர் திருச்செல்வம் மக்களை விழிப்பூட்டி எழுச்சி கொள்ள வைக்கும் வண்ணம் "கலைவளர்ச்சி நாடகம்" மன்றம் எனப் பெயரிட்டு பல மன மகிழ் சிரிப்பு நாடகங்களை மேடையேற்றி வந்தார்கள் வரலாற்று நாடகமாக "கடமையின் காவலன்" இராமயணத்தில் ஒரு அங்கமாக கும்பகர்ணன் வரலாற்றை படம் பிடித்து காட்டினார்கள். சிரிக்க வைக்கும் நாடகத்தில் பங்கெடுத்த கலைஞரான சத்தியமூர்த்தி, வீரசிங்கம், கந்தசாமி, பெனடிக் போன்ற கலைஞர்களுடன் திருச்செல்வம் அவர்களும் கும்பகர்ணனாகவும் நடித்து அருமையான நாடகத்தை மேடையேற்றினார்கள். கிளிநொச்சியிலும் இப்படி நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்களா? என நாடகம் பார்த்தவர்கள் வியந்தார்கள். நாடகங்களில் நடிப்பதற்கு பல நடிகர்கள் முன் வந்தார்கள்.

அந்நாளில் கிளிநொச்சியில் பள்ளிகளில் உயர்வகுப்பு மாணவர்கள் கலாசார நிகழ்விலும் நாடகங்களை நடாத்தி வந்தார்கள். இவர்களை ஊக்குவிக்கும் பணியில் பரந்தன் இரசாயனக் கூட்டுஸ்தாபனத்தில் பணியாற்றி வந்த செவ்வந்தி மகாலிங்கம் நாட்டியப் பேராளி பரஞ்சோதி அவர்களும் தொடர் பங்காற்றி வந்தார்கள் இவர்களுடன் பெரும் புகழ் ஒப்பனைக் கலைஞரும் நாடக இயக்குனருமான அளவெட்டியூர் டாக்டர் .V.மாசிலாமணி (கரைச்சி பிரதேச /கிராமிய சபை வைத்தியசாலை) அவர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் V. மாசிலாமணி அவர்களுடன் கிளிநொச்சி இளங்கலைஞர்களான "வேல் ஆயுதன்", சிவபாலன், உருத்திரபுரம் D8 ஐ சேர்ந்த கணபதிப்பிள்ளை கிளி.மருதநகர் இலகுப்பிள்ளை சுட்டிமணியம், ஞானப்பிர காசம், தனிகாசலம், வன்னியசிங்கம், கிறித் தோபன், சேவியர் போன்ற கலைஞர்கள் ஒன்றிணைந்து "ஸ்ரார்" நாடகமன்றம், "ஸ்ரார்" கலாமன்றம் போன்ற மன்றங்களை அமைத்து பல அற்புதமான வரலாற்று புராண நாடகங் களை உருவாக்கி மேடையேற்றினார்கள்.

நாடகங்களில் ஒப்பனைக் கலைஞர் களுடைய திறமை வெளியிடப்பட்டது. சினிமா ஒப்பனைக்கு ஈடாக நாடக ஒப்பனைகள் மிளிர்ந் தன. முதல் நாடகமான "பாண்டியன் பரிசு" நாடகத்தின் நாடகமன்றத்தினர் தயாரித் தார்கள். கிளிநொச்சி கிராமிய சபை ஒரு சாகிர்த்திய விழாவினை முதல் முதலாக நடத்தி அதில் நாடகப் போட்டியும் இடம் பெற்றது திரு. வி. ஆனந்த சங்கரியின் தலைமையில் 12 போட்டி நாடகங் கள் மேடைஏறின.

நாடகங்களை பார்வையிட்டு புள்ளி யிட்டு மதிப்பீடு செய்து விருதுகள் வழங்க மாபெரும் கலைப் பேரரசு சொர்ணலிங்கமும் அரிச்சந்திரா புகழ் கலாசக்கரவர்த்தி V.V வைர முத்துவும் கலந்து கொண்டிருந்தார்கள். போட்டி யில் பங்குபற்றிய நாடகங்கள் அனைத்தும் பிரமாதமாக அமைந்ததும். 1ம் இடத்திற்கு எந்த நாடகம் வரும் என்று எல்லோரும் எதிர் பார்த்தி ருந்தவேளை இலங்கை கலையுக மாமேதை கலையரசு சொர்ணாலிங்கம் மேடையில் தோன்றினார். அவர்கள் கிளிநொச்சிக் கலைஞர் களைப் பற்றி சொன்னவை.

"கிளிநொச்சியில் இவ்வளவு பிரமாண் டமான நாடகமும் நடிகர்களும் இருப்பதைகண்டு எனது மகிழ்வைத் தெரிவித்து கொள்கிறேன். எல்லா நாடகங்களும் சிறப்பாக இருந்தது அதில் முதலில் ஐந்து நாடகங்கங்களுக்கு புள்ளியிடுவ தில் ஒவ்வொரு நாடகமும் 1அல்லது 2 புள்ளிகள் வித்தியாசத்தில் இறுதியாக எடுத்தோம். 01ம் இடம் பக்தநந்தனார், முரசுமோட்டை கலைய கம். 2ம் இடம் 3புள்ளி பாண்டியின் பரிசு. கிளி நொச்சி "ஸ்ரார்" நாடகமன்றம் 3ம் இடம் இடம் 8 புள்ளி கடமையின் காவலன் கிளிநொச்சி கலை வளர்ச்சி நாடகமன்றம் இவ்விருதுகளுடன் 80 புள்ளிகளுடன் சிறந்த நடிகராக கடமையின் கேவலன் நாடகத்தில் கும்பகர்ணனாக நடித்த கலைஞர் திருச்செல்வம் அவர்கட்கும் சிறந்த நடிகைக்கான விருதை கலைஞர் வேல்ஆயுதன் அவர்களும் பெற்றும் கொண்டார்கள் இங்கே போட்டியில் கலந்து கொண்ட நாடகங்கள் தரமான நிலையிருந்ததை மீண்டும் குறிப்பிட்ட கலையரசு அவர்கள் பெண் வேட மணிந்து மிகச் சிறப்பான நடனமாடியும் பெண்ணுணர்வுகளை அப்படி வெளிப்படுத்திக் காட்டி பாண்டியன் பரிசு கதாபாத்திரத்தை வெகுவாகப் பாராட்டினார். கலைஞர் V.V வைரமுத்து அவர்கள் பெண் பாத்திரமேற்று நடித்தவர். அற்புதமான தோன்ற மும் நடிப்பும் இருந்ததாக புகழ்ந்த அவர் தன்னு டைய நாடகங்களிலும் நடிக்க வாய்ப்பளிப்பதாக கூறி மகிழ்ந்தார்.

கலைஞர்களை மேடைக்கேற்றி பாராட் டியமை கிடைக்க முடியாத அரிய வாய்ப்பாகக் கருதப்பட்டது அப் பெரியார்களுடைய ஆசியு டன் ஆரம்பமான கிளிநொச்சி நாடகக் கலைஞர் களுடைய கலைப் பயணம் வெற்றிப் பாதையில் வீறுநடை போட்டது.

ஸ்ரார் நாடகமன்றம் தொடர்ந்து பல வெற்றி நாடகங்களை தயாரித்தது சாவகச் சேரியூர் கதாசிரியார் கலைஞானி யோகராஜ் அவர்களின் கைவண்ணத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் "பாஞ்சாலி சபதம்" கனல் தெறிக் கும் கற்பனை வசனங்களுடன் நாடகப் பாணி யாக்கியிருந்தார். நடிகர்களான சிவபாலன், வேல்ஆயுதன், கணபதிப்பிள்ளை வன்னிய சிங்கம், சுட்டிமணியம் போன்ற முன்னணி நடிகர் களின் நடிப்பாற்றலில் "பாஞ்சாலிசபதம்" மேடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேறியது. கிளிநொச்சியில் வரலாறு படைத்தது வெளிமாவட்டங்களிலும் மேடையேறி கிளி நொச்சிக்கு பெருமை சேர்த்தது.

தொடர்ந்து கிளிநொச்சி ஸ்ரார் நாடக மன்றமும் கிளிநொச்சி கலைவளர்ச்சி நாடக மன்றமும் இணைந்து அவையில் முதலில் "கண்ணன் காட்டிய வழி" ஏறியது இருந்தும் போட்டி நடைபெறுகின்ற போது வெவ்வேறாக நாடகங்களை மேடையேற்றினார்கள்.

"கண்ணன் காட்டிய வழி" கண்ணனாக கலைஞர் வேல்ஆயுதன் பாஞ்சாலியாக ஜெயந்திநகர் கலைஞர் தியாகராஜாவும் துரியோதனாக கலைஞர் திருச்செல்வமும் கர்ணனாக கலைஞர் சிவபாலனும், காண்டீப னாக கலைஞர் சுட்டிமணியமும், திருதராட்சன னாக தருமராஜாவும், நகுலனாக திருநகர் கலைஞர் மர்சலினும் சகாதேவனாக கலைஞர் சந்திரனும் சகுனியாக உருத்திரபுரம் கலைஞர் கணபதிப்பிள்ளையும் கூனியாக கலைஞர் தியாகும். கைகேகியாக கணேசலிங்கமும் இராச மச்சந்திராவும் அசுவர்த்தமனாக கனகபுரம் நவரத்தினமும் பீஸ்மராக கனகபுரம் கலைஞர் சேவியரும் துச்சாதனாக ஜெயந்திநகர் கலைஞர் தணி காசலமும் நடித்தார்கள் கிளிநொச்சி மட்டு மல்லாது மன்னார், மட்டக்களப்பு நகர் திரு கோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலும் கண்ணன் காட்டிய வழி அமோக வரவேற்பைப் பெற்றது யாழ். மண்ணில் பொன் னாலை, கரையூர், சாவகச்சேரி, புங்குடுதீவு, பூநகரி, பளை போன்ற இடங்களிலெல்லாம் சக்கை போடுபோட்டு கிளிநொச்சிக்கு விருதுக ளையும் வெற்றிகளையும் குவித்தது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலை யம் நடத்திய அகில இலங்கை ரீதியாக நாடகப் போட்டியில் கிளிநொச்சியிலிருந்து. "கண்ணன் காட்டிய வழி" "ஸ்ரார்" நாடகமன்றம் பெருமை யுடன்– பேருவகையுடன் அரியாலை கலைமகள் அரங்கத்தில் மேடை ஏற்றியது. அகில இலங்கை ரீதியான அப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று விருதுக் கேடயத்தை கிளிநொச்சிக்கு சமர்ப்பித்தது.

தொடர்ந்து பண்டாரவன்னியன் வரலாற்றை நாடகமாக்கியது. பண்டார வன்னிய னாக கலைஞர் திருச்செல்வம், முத்தரையனாக கலைஞர் கணபதிப்பிள்ளை, தளபதி முனியப்ப னாக, கலைஞர் வேல்ஆயுதன் குமாரசிங்க முத லியாராக கலைஞர் வேல் ஆயுதன் குமாரசிங்க முதலியாக கலைஞர் சிவபாலன் சோமர்வதி யாக கலைஞர்தியாகராஜாவும் நல்லாச்சியாக கலைஞர் இராமச்சிந்திரனும் "வன்னியின் செல் வன்" என்ற பெயரிலேயே ஸ்ரார் நாடக மன்றம் இந்நாடகம் மெருகூட்டப்பட்டு "பண்டார வன்னி யன்" என பெயர்சூட்டப்பட்டு கிளிநொச்சியில் பட்டி தொட்டியெல்லாம் போடுவதற்கு மக்கள் தாங்களாக வந்து ஒழுங்கு செய்து நாடகங் களை மேடையேற்றி வந்தார்கள்.

கிளிநொச்சியில் சினிமா மோகம் வளர்ந்த நிலையிலும் நாடகத்துறைபெரும் செல் வாக்கு நிறைந்திருந்தது கிளிநொச்சி நாடகங் கள் வருவதற்கு முன் யாழ்ப்பாண நாடகங்கள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வந்தது வெளிக்கிடடி விசுவமடுவுக்கு, வடக்கும் தெற் கும், பாசநிலா, இவைக்கு முந்திய அரிச்சந்தி; சத்திய வான் சாவித்திரி, பக்த நந்தனார் புகழூர் பொன் னம்பலம் இப்படி பல நாடகங்களைப் கிளி நொச்சி மக்களின் ஏகோபித்த பாராட்டுக் களை பெற்றிருந்தது இக்காலங்களிலேயே தான் கிளிநொச்சி நாட்டுக் கூத்து அண்ணாவிமார்க ளான பரந்தன் அண்ணாவியார் அப்பச்சி வல்லி புரம் அண்ணாவியார் ஆனையிறவு உடப்பு நாட் டுக்கூத்து அண்ணாவியார் நல்லதம்பி போன் றோரின் நாட்டுக் கூத்துக்கள் மக்கள் மத்தியில் பிரபலம். தொடர்ந்து கிளிநொச்சி யுத்த மேகங் கள் சூழத்தொடங்கின ஒன்றன் பின் ஒன்றாக பல இடப் பெயர்வுகள் கிளிநொச்சி ஸ்ரார் நாடக மன்றத்தின் பல இலட்சம் பெறுமதியான நாடகப் பொருட்கள் அழிந்து போயின. பல வழிகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் இழப்புகளைச் சந்தித்தார்கள். போராட்ட சூழ்நிலையில் இயங்கிய கலாசார அமைப்புக்களில் இணைந்தவர்கள் இடப்பெயர்வுகளால் கிளிநொச்சியைவிட்டு வெளியேறியவர்கள் என்று எல்லாக் கலைஞர்களும் திக்குத் திக்காக செல்ல வேண்டி ஏற்பட்டமை போராளிகளால் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் மட்டுமே மேடை ஏற வேண்டிய நிலை ஏற்பட்டது உற்சாகமாக இயங்கிவந்த கலைஞர் மத்தியில் அதிருப்தி நிலைமை வளர்ந்தது கலைஞர்களை கலாசார பேரவையினால் நாட்டுக்கூத்து தெருக்கூத்து போன்றவற்றுக் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஒட்டுமொத்த கிளிநொச்சி மக்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தை விட்டு முல்லைத் தீவுக்கு இடம்பெயர்ந்து சென்று செட்டிக்குளம் சென்று திரும்ப மீள் குடியேற்றம் வந்ததிலிருந்து ஏனோ? தானோ? மனப் பான்மையில் வாழ்ந்து வந்தார்கள் மன ரீதியாகவும் பல கலைஞர்கள் விரக்தியேற்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள் இப்பேர்பட்ட கலைஞர்களை கலாசாரப் பேரவையினர் சந்திக்க வேண்டும் அவர்களை கலைஞர் என்று ஆற்றுப்படுத்தல் வேண்டும் அவர்களுடைய கலையுலக வாழ்க்கையின் ஆற்றல்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் தொடர்ந்து அவர்கள் பெற்றுக் கொண்ட கேடயங்கள், கோப்பைகள், விருதுகள் எடுத்து, எழுத்து மூல ஆவணங்கள் அனைத்தையும் இழந்திருக்கின்ற நிலையிலே அவர்கள் பெற்றுக் கொண்ட ஆவணங்கள் விருதுகள் போன்றவற்றை நீங்களே தயாரித்து அக் கலைஞர்களை போற்றி கௌரவிக்கப்பட வேண்டும் வயோதிப நிலையில் உள்ளவர்கள் இணங் காணப்பட்டு அவர்களுக்கு மகிழ்வுடன் கழிக்க கலாசார பேரவை செயற்பட வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து 2010 ஆண்டு கிளிநொச்சி மக்களின் நாடகமன்றங்கள் சோர்ந்து போயின அண்ணாவியார் அப்பச்சியார் வல்லிபுரம் அவர்கள் மட்டும் விடாப்பிடியாக காத்தவராயன் கூத்தை பல தடவைகள் கிளிநொச்சிமட்டுமல்லாமல் பல இடங்களிலும் விழாக்களிலும் மேடையேற் நல்ல வரவேற்பை பெற்று வருகின்றது.

கிளிநொச்சியில் ஆரம்ப காலத்தின் நாடகத்தின் ஒவ்வொரு காட்சிகளும் முன் திரை இழுத்து மூடி அதன் பிறகு காட்சி ஒழுங்குகள் மேடையில் மேற்கொள்ளப்பட்டு அதன் பிறகு திரை விலக்கப்பட்டு அடுத்த காட்சியாரம்பமாகும்.

கண்ணன் காட்டிய வழி பண்டார வன்னியன் போன்ற நாடகங்கள் முதலில் திரை விலகினால் அடுத்த காட்சிகள் திரைமூடாமல் மின்குமிழ் வெளிச்சத்தைக் குறித்து மறுகாட்சிகள் தொடராக்காட்டும் ஒரு புதுமை போக்கினை கடைப்படிக்கப்பட்டது. இது சலிப்பின்றி மக்கள் நாடகம் பார்க்கக் கூடியதாக அமைந்தது.

இப்படியான புதுமை ஏற்படுமுன் பல நாடகங்கள் காட்சி மாறுவதற்காக திரை மூடியதும் திரைக்கு முன்னால் பபூன் காட்சிகள் என்று சொல்லப்படும் கோமாளிக் கூத்துக்களை காட்டி மக்களை சலிப்படையாது செய்து மகிழ்வாக்கி நாடகங்களை நடத்திச் செல்வதும் வழக்கமாயிருந்தன.

கிளிநொச்சியில் “ஸ்ரார்” நாடக மன்றம் ஒரு நாடகத்தை தயாரிப்பில் ஈடுபடும் போது கலைஞர்கள் ஒன்று கூடி மூன்று மாதங்களுக்காவது நாளாந்தம் மாலை 6மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரை திரும்பத்திரும்ப இயக்குநர்களுக்கு முன்பாக ஒத்திகையில் ஈடு செய்வது வழக்கமாயிருந்து.

அப்படி ஒத்திகை பார்த்தும் போட்டி நேரங்களில் சில சின்னப்பிழைகளால் புள்ளிகள் குறைந்த வரலாறுகளுமுண்டு உதாரணத்திற்கு கண்ணன் காட்டிய வழி நாடகத்தில் கண்ணன் பாத்திரத்தில் மிகப் பொருத்தமான நடிகராக இருந்தும் அனைத்தும் பார்வையாளர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோப்பித்த பாராட்டுக்களையும் பெற்றிருந்ததும் நடுவர்கள் ஒரு சில பிழைகளைச் சுட்டிக் காட்டியது பெரும் வியப்பானது கண்ணன் பாத்திரம் தெய்வம் எனக் கருதப்படும் கண்ணனின் கண்கள் இவைவெட்டி திறப்பதில்லை கண்ணன் பாத்திரம் நடித்தவர் மிகஅற்புதமாக நடித்திருந்தாலும் விட்ட சிறிய பிழைகளாலும் சுட்டிக் காட்டப்படவேண்டுமென குறிப்புகள்.

புராதன இதிகாச வரலாற்று நாடகங்களில் மன்னர்கள் தளபதிகள் காலணிகள் சுட்டிக் காட்டப்பட்டன. காலணியின் முகப்பு விரல்களுக்கும் பகுதிக்கு மேற்புரம் கூர்மங்கள் மேல் நோக்கிய வரைந்து சுருண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டப்பட்டன.

நாடகங்கள் வளர வேண்டும் நவீனமாக பல நாடகங்கள் தமிழகத்தில் வெளி வருகின்றன. நாடகரசிகர்கள் ஏராளமானோர் உள்ளனர் இங்குள்ள கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

ந. வேலாயுதம்.
கலைமகள் கலாமன்றம்
நடராஜா பாகவதர்
இசை கலைஞர்கள்
தண்டபாணிதேசிகர்
சிவபாலசுப்பிரமணியம்

கலைகளைப் பிறப்பிடமாகக் கொண்ட "இணுவிலை தனது பிறப்பிடமாகக் கொண்ட அண்ணாவியார் முத்தர் நடராசா அவர்கள் 1945, 47 களில் பரந்தனில் குடியேறி 1953, 54 காலப்பகுதியில் கொலனத் திட்டத்தின் கீழ் முரசு மோட்டையில் காணி பெற்று, வாழ்ந்து வரும் காலத்தில் தனது புத்திரர்களான ந. தண்டபாணி தேசிகர் ந. சிவபால சுப்பிரமணியம், பத்மாவதி, லீலாவதி, ந.இராமநாதன், ந.மகேந்திரன் ஆகியோரைப் பெற்று கலைக் குடும்பமாக வாழ்ந்து வரும் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவதாக கலைமகள் கலாமன்றம் எனும் பெயரில் மன்றத்தை உருவாக்கி 1974ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து புராண நாடகங்களான மயான காண்டம் அல்லி, அருச்சுனா, பவளக் கொடி, குமணன், அசோக்குமார் ஏழு பிள்ளை நல்லதங்காள், பூதத்தம்பி, போன்றவற் றையும் சரித்திர நாடகங்களையும் சமூக நாடகங்களையும் நடாத்தி வந்தார். அக்கால கட்டத்தில் நடிக மணி V.V.வைரமுத்து, V.N. செல்வராசா, C.T. செல்வராசா, நற்குணம், செல்வரத்தினம், தைரியநாதன், மாசிலாமணி போன்ற நடிகைகளையும் பெண் நடிகைகளான கண்ணிகா பரமேஸ்வரி, சந்திரா, மாலா போன்ற நடிகைகளையும் இணைத்து பல்லாயிரம் நாடகங்களையும் மேடையேற்றி வந்தார். குறிப்பாக மயானக் காண்டம் நாடகம் பல போட்டி நிகழ்விலும் கலந்து கொண்டு முதலாவது பரிசினைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் அண்ணா வியார் அவர்களின் அவர்களின் கலாமன்றம் பல விளையாட்டுப்போட்டிகளிலும் கலந்து கொண்டு குறிப்பாக கிளிக்கோடு என அழைக்கப்படும் தாச்சிப் போட்டியில் கலந்து கொண்டு பல பரிசில்களையும் வென்றுள்ளது. குறிப்பாக சிறப்புப் பரிசுகளைப் பெற்று "சடையர்" என செல்லமாக அழைக்கப்பட்டார். பின் அவரின் வழித் தோன்றல்களாகிய தண்டபாணி தேசிகர், சிவபாலசுப்பிரமணியம், இராஜநாதன், மகேந்திரன் ஆகியோர் இசை நாடகங்களிலும் விளையாட்டுகளிலும் பங்கு பற்றி வெற்றி வாகை சூடினர். அன்னாரின் புதல்விகளான பத்மாவதி, லீலாவதி ஆகியோர் முறைப்படி பரதநாட்டியம் பயின்று பல மேடைகள் ஏற்றியுள்ளனர். தற்பொழுது அவரின் புத்திரர்களான சிவபாலசுப்பிரமணியம், இராநாதன் ஆகியோர் தமது கலைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இராமநாதன் அங்கனுக்கு 2012ல் கரைஎழில் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து சிவபால சுப்பிரமணியம் அவர்களுக்கு 2014 கரைஎழில் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலே எந்தவொரு நாடகமன்றங்கலும் உருவாகுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு முன்பே நடராசா பாகதர் அவர்களின் கலாமன்றம் உருவாகி செயலாற்றி வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நடிக, நடிகை கள் தாங்களே ஒப்பனை (மேக்கப்) செய்து பாகவதர் நடராசா அண்ணாவியார் அவர்களின் புதல்வர்கள் குழந்தை நட்சத்திரமாக 6வயது முதலே நடிக்க ஆரம்பித்தவர்கள். அதிலும் சிறப்பாக நடிப்பு + பாட்டு + வாத்தியக் கருவிகள் இசைப்பதிலும் தகன் நடா இராமநாதன் அவர்கள் நடிப்பு பாட்டு வாத்தியம் மிருதங்கம், தபேலா, டோலக், கெஞ்சிரா, உடுக்கு போன்ற வாத்தியக் கருவிகளையும் கையாளக்க் கூடிய வர். நடராசா இராமநாதன் அவர்கள் சரித்திர நாடகமான பண்டார வன்னியன் நாடகத்தை நெறியாள்கை செய்து "கங்கை வன்னியனாக நடித்து பலரின் பாராட்டுக்களை பெற்றார்.

குறிப்பு :

- பரவிப் பாஞ்சானிலிருந்த துரைஸ் என்ப வரும் ஆரம்ப காலங்களில் திரைப்படங் களில் நடித்த நடிகர் ஆவார்.

- நடராஜ பாகவதர் என்பவர் கிளிநொச்சியில் 1970களில் நாட்டுக் கூத்துக் கலைஞராக செயற்பட்டு இருக்கிறார்.

வரலாறு

காலனித்துவ ஆதிக்கப்படர்ச்சியின் கீழ் ஆனையிறவு பரவைக்கடலும் பரந்தன் வெளியும் ஓர் வரலாற்று நோக்கு

இனிய. திருமதி. அன்பரசி அருட்செல்வன்,
JP, B.A (Hons), MA
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

இலங்கையின் வரலாறு ஆதிகாலத்திலிருந்தே பல்வேறு கட்டங்களில் அந்நியச் செல்வாக்குகளுக்கு உட்பட்டதாக வளர்ந்துள்ளது. இந்தியச் செல்வாக்குகள் இங்கு இடம்பெற்றதை ஆரம்பகால வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டுத்துறையில் அதிகம் செல்வாக்கு செலுத்தியது, போர்த் துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோருடைய ஆதிக்க காலத்திலே ஆகும். பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாடு காண் பயணங்களுடன் ஆரம்பமான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தெற்காசிய நாடுகளை கைப்பற்றும் பணியால் இலங்கையின் பல பகுதிகளிலும் வாணிப தொடர்பில் ஆரம்பித்த உறவு ஆட்சியாளர் தானம் வரைப் பெருகியதைக் காணலாம். ஆனையிறவு பரவைக்கடலும், பரந்தன் வெளியும் வரலாற்றுக் காலம் தொட்டு தனிச்சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கியிருந்ததைக் காணலாம். இன்றைய கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் ஆனையிறவு பரவைக் கடலும், பரந்தன் வெளியும் கி.பி 1505 தொடக்கம் 1948வரையான காலப் பகுதியில் காலனித்துவ ஆட்சியாளர்களின் பிடியில் இருந்த போது, அரசியல், பொருளாதார, சமய, சமூக ரீதியாக பல்வேறு மாற்றங்களைப் பெற்றிருந்ததுடன், வரலாற்று ரீதியாக ஆனையிறவு பரவைக்கடலும், பரந்தன் வெளியும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட கால வரலாற்றுத் தகவல்களை சுருக்கமாக நோக்கும் போது, வட இலங்கையின் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு அடுத்துக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டம் எனும் பெருநிலப்பரப்பு வன்னி எனப்படுகிறது. பச்சிலைப்பள்ளி, ஆனையிறவு, பரந்தன், கண்டாவளை, விசுவமடு, பூநகரி இரணைதீவு, பாலைதீவு என்பனவும் இன்னும் பல பகுதிகளும் இதற்குள் உள்ளடங்கின. அதிலும் கண்டாவளை, பரந்தன் போன்ற பிரதேசங்கள் தனிச்சிறப்புக்களை கொண்டு விளங்கியதை வரலாற்று தகவல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆங்காங்கு சிதறலாகக் காணப்பட்ட கிராமியக் குளங்களை ஆதாரமாகக் கொண்டமைந்த காட்டுக்கிராமங்கள், அடர்காடுகளால் சூழப்பட்டு விளங்கியுள்ள வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இப்பிரதேசம் நாகரிகம் வாய்ந்த மக்கட் கூட்டத்தினரின் குடியிருப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக விளங்கின என்பதற்கு 1985ஆம் ஆண்டு குஞ்சுப்பரந்தனில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழி சான்றாகின்றது. வன்னிப்பரப்பில் முதன் முதல் கண்டறியப்பட்ட தாழி இதுவேயாகும். திராவிட நாகரிகம் இங்கெல்லாம் பரவி நிலை கொண்டிருந்தது என்பதற்கு முறையான ஆதார மாக இத்தாழி கிடைத்துள்ளது.

புராதன காலத்தில் இலங்கையின் வட பகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் வடபகுதி கண்டாவளை உள்ளிட்ட பிரதேசம் நாகர்கள் வாழ்ந்த பிரதேசமாகக் கொள்ளப்படுகிறது. வரலாற்றுக் காலத்தில் நாகதீபம் என்ற பிரதேசம் இலங்யின் மதவாச்சிக்கு வடக்கேயுள்ள பகுதியைக் குறித்ததாக W.கெய்கர் குறித்துள்ளார். அத்துடன் இயக்கர் எனப்படும் மக்களும் இன்றைய கிளிநொச்சி மாவட்டத்னுள் வாழ்ந்துள்ளனர். தமிழ் சிற்றரசர்கள், குறுநில மன்னர்களின் ஆட்சியில் பரந்தன் கண்டாவளை உட்பட்ட பிரதேசங்கள் புராதன காலத்தில் இருந்துள்ளன, "புரம்" என முடிவடையும் பல பிரதேசங்களை கண்டாவளை மண் தன்னகத்தே கொண்டுள்ளது. இது தமிழ் குறுநில மன்னர்களின் ஆட்சியைப் புலப்படுத்துகின்றது. கலிங்கமாகன் படையெடுப்பின் பின் 1215இல் பிரதான இராச்சியத்திலிருந்து பிரிந்து சென்று தனியொரு பிரிவாக விளங்கத் தொடங்கிய கண்டாவளை, பரந்தன், ஆனையிறவு உட்பட்ட பிரதேசங்கள் இரு நூற்றாண்டுகளாக சிறப்பானதொரு பின்னணியின் கீழ் வளர்ச்சி கண்டிருந்தது. இக்காலத்துக்கும் போர்த்துக்கேயர் வரும் வரையான கி.பி 1505 வரையும் யாழ்ப்பாண ஆட்சிக்கும் உட்படாமல் ஒரு தனியரசாக இருந்தது. அக்கால கட்டத்தில் நெல் போன்ற விவசாயப் பொருட்களுக்கும், மீன், உப்பு என்பவற்றுக்கு ஆனையிறவு, பரந்தன் பிர தேசங்கள் பயன்படுத்தப்பட்டன.

இலங்கைக்கு 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் வரும்போது கோட்டே, கண்டி, யாழ்ப்பாணம், வன்னி எனும் நிர்வாகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. வன்னி எனும் நிர்வாக அலகுக்கான எல்லைகளாக வடக்கே ஆனையிறவு பரவைக்கடல், பரந்தன், சுண்டிக்குளம் தொடுவாய், விசுவமடு என்பவற்றை எல்லைகளாகக் கொண்டு அமைந்திருந்தது. ஆனையிறவுப் பரவைக்கடலும், பரந்தன் வெளியையும் மையப்படுத்யே காலாகாலம் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தின் ஆட்சியதிகாரத்தைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. அரசர்களின் ஆட்சிக்காலம்
2. வன்னியர் ஆட்சிக்காலம் – கி.பி. 12 – 15ஆம் நூற்றாண்டு
3. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் – கி.பி.1505–1658
4. ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் – கி.பி.1658–1796
5. ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் – கி.பி 1798–1948வரை

இலங்கையை கி.பி 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கைப்பற்றியிருந்தாலும் கிளிநொச்சியின் ஆனையிறவுப் பகுதியினூடாக பரந்தன் வெளி, கண்டாவளைப் பிரதேசத்துள் கி.பி 1620 ஆம் ஆண்டு அரசு நிலையோடு சம்பந்தப்பட தொடங்கினர். 1518 தொடக்கம் 1529வரையிற் போர்த்துக்கேயர் கண்டாவளைப் பிரதேசத்தில் வர்த்தக நோக்கமாகவும், சமயம் பரப்பும் நோக்கமாகவும் நுழைந்தனர். போர்த்துக்கேயர் காலத்தில் வன்னி எனும் அரசியல் பிரிவுடன் கண்டா வளைப் பிரதேசம் இணைந்திருந்தது.

ஆனையிறவு பரவைக்கடலும் காலனித்துவ ஆட்சியும்

கிளிநொச்சியின் கண்டாவளைப் பிரதேசத்தினுள் உள்ளடங்கும் பெரும் கடலோரச் சம வெளி என அழைக்கப்படும் ஆனையிறவு போர்த்துக்கேயர் காலத்திலிருந்து பெரும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. இலங்கையின் புவியியல் பிரிவில் ஆனையிறவு கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 3m உயரத்தில் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் அரசாட்சிக்கு உட்பட்ட தேசத்தில் ஆனையிறவு பிரதேசம் இருந் தாலும், வன்னிச் சிற்றரசர்கள் ஒரு காலத்திலும் அவ்வர

சாட்சிக்கு கீழ்ப்பட்டிருந்தால் அவர்கள் பல முறை கடற்கரைப் பட்டினங்களிலும், யாழ்ப் பாணக் கிராமங்களிலும் நுழைந்து கொள்ளை யடித்துச் சூறையாடிப் போவர் இதன் காரணமாக ஆனையிறவு பகுதியில் பாதுகாப்புத்தளம் ஒன்றை அமைத்தனர். பல்வேறு அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் வன்னிப் பெருநிலப்பரப்பை யும் இணைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஆனையிறவு பரவைக்கடல் அன்றிலிரு ந்து தொடரலாயிற்று 1946ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இலங்கையின் மிகப்பெரும் உப்பள மாக இன்று இது விளங்க அடி கோலியவர்கள் போர்த்துக்கேயரே ஆவார். இவ் உப்பளத்திற்காக ஆணையிறவில்வாடிவீடு ஒன்றையும்அமைந்தனர்.

போர்த்துக்கேயர் ஆனையிறவினை முக்கியப்படுத்தியதன் விளைவாக தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் ஆனை யிறவு பரவைக்கடல் பிரதேசத்தை யாழ்ப்பாண த்துக்கும் வன்னிக்குமான பிரிகோடு பிரதேச மாகவே பார்த்தனர். 1679ஆம் ஆண்டு வன்னிப் பிரதேசம் ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டி ருந்தது. இதில் பரந்தன் வெளியும் ஒரு மாகாண மாக விளங்கியது. இதில் இன்றைய கண்டா வளை, ஆனையிறவு, குஞ்சுப் பரந்தன், பரந்தன், தர்மபுரம், நெத்தலியாறு, கரைச்சி, பூநகரி என்பனவும் உள்ளடங்கியிருந் தன. இதன் வன்னிமையாக கரைச்சிப் பகுதி டொன்பிலிப் நல்ல மாப்பாணன் விளங்கினான். பரந்தன் வெளி ஆறு மாகாணங்களுள் ஒன்றாக செயற் படத்தொடங்கியதுடன் பல்வேறு அரசியல், பொருளாதார, சமய செயற்பாடுகளில் ஆனையி றவு பரவைக்கடலும், பரந்தன் வெளியும் வரலாற்று முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

1679ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டிருந்த இவ் நடைமுறை 1697வரை நடைமுறையில் இருந்தது. கிளி நொச்சியின் பெரும்பாலான பிரதேசங்கள் பரந் தன் பிரதேசத்தை மையமாகக் கொண்ட நிர்வாக அலகுடன் இருந்தது. இக்காலத்தில் "அயுதாந்தி" எனப்படும் கண்காணிகளுக்குத் துணையாக விருந்த நிர்வாக சேவையாளும், உடையார் எனப்படும் ஊர் நிர்வாகத்திற்குப் பொறுப்பான வரும், கண்காணி எனப்படும் நிலங்களை அளவிடுபவரும், வரிமதிப்பீடு செய்பவரும் மொத்தக்கர் எனப்படும் யானை பிடிக்கும் பணிக் கர்களின் தலைவர், பணிக்கர் எனப்படும் யானை களைப் பிடித்துப் பழக்குபவர், தலையாரி எனப் படும் ஊர்த்தலைவர்கள் என்போர் ஊழியம் செய்தனர்.

ஒல்லாந்தர்களுடைய ஆட்சியில் 1782இல் நாகெல் எனும் கப்டன் வன்னிக்கு பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டான் 1785ஆம் ஆண்டளவில் டச்சுக்கப்ரன் தோமஸ் நாகெல் பரந்தன் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தான். பரந் தன் வெளிக்கு பொறுப்பாக இருந்த டொன் கஸ்பர் நல்ல மாப்பாணனின் சகோதரியின் மகள்மாரான நல்ல நாச்சியார் மற்றும் சின்ன நாச்சியார் ஆகியோர் பரந்தன் வெளி நிர்வாக அலகை கப்டன் நாகெல்லிடம் கையளித்ததன் பின்னணியில் கிளர்ச்சிகள் தொடர்ந்தன.

இவ் முடிவற்ற குழப்பங்களை நல்லை நாச்சி யார், சிதம்பர நாச்சியார் எனும் இரு வன்னிச்சி களும் உண்டாக்கினாலும் கப்டன் நாகெலின் படைக்கு பயந்து தப்பி ஓடினர். இதன் பின் கப்டன் நாகெலின் கேள்விப்படி வன்னி இறைவரு மானம் வருடம் 10000 இறைசாலாக குத்தகை யாகக் கொடுக்கப்பட்டது. இதன்பின் கலகங்கள் குறைவுற்றது. இக் கலகம் தொடர்பாக ஜே.பி. லூயிஸ் அவர்கள் கூறும்போது, "இப்பிர தேச மக்கள் பொன் கஸ்பர் நல்ல மாப்பாணர் பதவி நீக்கம் செய்யப்பட்ட அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் இதனால் டச்சுக்காரரு க்கு கூடிய பாதிப்பை ஏற்படுத்த நினைத்தனர். ஏனெனில் பரந்தனை அண்டிய பிரதேசத்தை வாழ்விடமாகக் கொண்ட மக்கள் ஒருகாலை டச்சுக்காரரிடமும் மறுகாலை அரசர்களுடைய எல்லைக்குள்ளும் வைத்திருக்கிறார்கள். எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமும் முழு யாழ்ப்பாணப் பட்டணத்தையும் முன்பின் தெரியாத சிங்கள வர்கள் பிடிப்பதற்கு கிளிநொச்சி தொடக்கம் பச்சிலைப்பள்ளி வரை யான பிரதேசத்தை அதிலும் குறிப்பாக பரந்தன் வெளியும், ஆனையிறவு பரவைக் கடலமைப்பு மையமாகக் கொண்ட பிரதேசத்தை குறிப்பிட்டுக் கூறியுள் ளார்.

கிளிநொச்சிப் பிரதேச மக்கள் வட எல்லை யிலுள்ள பரந்தன் வெளியைக்கடந்து ஆனை யிறவு பரவைக்கடலின் ஊடாக ஊடுருவி யாழ்ப் பாண பிரதேசத்திற்குள் புகுந்து டச்சுக்காரருக்கு எதிராக தாக்குதல்களை நடாத்தினர். இதனைத் தடுப்பதற்காக ஆனையிறவு பரவைக் கடற் கரையில் பாதுகாப்பரண்களைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஒல்லாந்தருக்கு ஏற்பட்ட இதற்கென 1783தொடக்கம் ஆனையிறவு பர வைக் கடற்கரையில் வரிசையாக இருந்த சிறிய கோட்டைகள் பலப்படுத்தப்பட்டன. அத்துடன் ஆனையிறவில் இருந்த கிறிஸ்தவ தேவால யத்தின் சுவர்களில் சிறிய துவாரங்கள் இடப் பட்டு குடாப்பகுதியில் மக்களின் நடமாட்டமும் கண்காணிக்கப்பட்டது.

பரந்தன் வெளியும், ஆனையிறவு பரவைக் கடலும் வன்னியரசின் இறுதிச் சிற்றரசன் குல சேகர வைரமுத்து பண்டார வன்னியன் காலத் தில் பெரும் முக்கியத்துவம் பெறத் தொடங்கி யது. பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப்பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தவன் ஒல்லாந்தருக்கே ஆங்கிலேயருக்கோ அடங்கி திறை செலுத்தி வாழ பண்டாரவன்னிய உடன்படவில்லை. பண்டாரவன்னியனின் ஆட்சிப்பகுதியிலேயே பரந்தன், கண்டாவளையூடான முல்லைத்தீவு பாதை செல்வாக்குப்பெறத் தொடங்கியது. 1803ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும், கண்டி யரசனுக்கும் இடையில் மூண்ட யுத்தத்தைப் பயன்படுத்திய பண்டாரவன்னியன் ஆங்கிலே யரை துரத்தும் நோக்கில் கண்டாவளைப் பிர தேசங்களூடாக தனது படைகளை நிலைநிறுத்தி யிருந்தான். முல்லைத்தீவு கோட்டையிற் காவ லாயிருந்த கப்பித்தானும், சிப்பாயிகளும் பரந்தன் வெளியூடாக யாழ்ப்பாணத்திற்கு ஓடி னார்கள். இதன் போது பண்டார வன்னியன் ஆனையிறவில் அமைந்திருந்த மூன்று கோட் டைகளையும் தனதாக்கினான். கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திற்கு மூன்று படைப் பிரிவு களை இரவோடிரவாக அனுப்பி ஆனையிறவுக் கோட்டை, இயக்கச்சி பைல் கோட்டை, வெற்றி லைக்கேணி பெஸ்கூற்றர் கோட்டை ஆகிய வற்றை தாக்கினான். முள்ளியவளையிலிருந்து சுண்டிக்குளமூடாக சென்ற பண்டாரவன்னி யனின் படைபெஸ்கூற்றர் கோட்டையைக் கைப் பற்றியது. குமாரசிங்க முதலியார் தலைமையில் கண்டாவளை ஊடாக இயக்கச்சிக்கு சென்ற வன்னி வீரர்கள் பைல் கோட்டையைக் கைப் பற்றினர். தாம் கைப்பற்றிய கோட்டைகளை தகர்த்துவிடுமாறு பண்டாரவன்னியன் கட்டளை யிட்டான். இதன் போது ஆனையிறவின் நான்கு கொத்தளங்கள் தகர்க்கப்பட்டன. ஆனால் பின் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் என்னும் மூவிடங்களிலும் இருந்து மூன்று சிப்பாய் பட்டாளங்கள் போய் கோட்டை களைக் கைப்பற்றியதுடன் பண்டாரவன்னியனையும் அவனது வீரர்களையும் ஆனையிறவு பரவைக் கடல், பரந்தன் வெளி, கண்டாவளை ஊடாக முல்லைத்தீவிற்கு துரத்தினர். போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலங்களில் அரசி யல் முக்கியத்துவம் மிக்க பிரதேசமாக பரந்தன் வெளியும், ஆனையிறவு பரவைக் கடலும் விளங்கி இன்றுவரை தொடர்கிறது.

காலணித்துவ ஆட்சியாளர்கள் மூவரதும் அடிப்படை இலக்கு பொருளாதாரத்தை சுரண்டு வதாகும். இதற்கு ஆனையிறவு பரவைக் கட லையும், பரந்தன் வெளியையும் நன்கு பயன் படுத்தி கொண்டனர். ஆனையிறவில் பெருமள வான உப்பு வயல்களை கையகப்படுத்தி இருந்த னர். அத்துடன் வன்னியரசர்கள் யானை போன்ற வற்றை திறையாக செலுத்தும் இடமாக ஆனை யிறவு பரவைக்கடல் பிரதேசத்தை நிர்ணயித்தி

ருந்தனர். 1783தொடக்கம் 1796வரை பரந்தன் வெளிப் பிரதேசத்திலிருந்து 36000 பராஸ் அல்லது 4500 அமுனம்ஸ் நெல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டுகளில் பரந்தன், குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் நெற் களஞ்சியங்களை அமைத்திருந்தனர். இங்கு அமைக்கப்பட்ட நெற் களஞ்சியங்கள் கற்களினாலோ அல்லது சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டதல்ல. நடப்பட்ட மரத்தூண்களை சுற்றி மெல்லிய வரிச்சுத் தடிகளால் கூடை பின்னுவது போல பின்னுவார்கள். இது நெல்லை ஈரப்படாமல் வைக்க உதவும். இவை "கெம்பெரிஸ்" என அழைக்கப்படும் இவர்களால் ஈட்டப்பட தொடங்கிய பொருளூதார ஈட்டமே இன்றுவரை பரந்தன் பிரதேசம் நெல்லுக்கும், ஆனையிறவு உப்பிற்கும் பெயர்பெற்று விளங்க காரணமாயுள்ளது.

பரந்தன் வெளியும், ஆனையிறவு, பரவைக் கடலும் ஊடான போக்குவரத்து பாதையை மேம்படுத்தியவர்கள் காலனித்துவ ஆட்சியாளர்களே ஆகும். புராதன காலத்தில் இப்பிரதேசங்கள் மக்கள் போக்குவரத்துக்கு உகந்தனவாக இருக்கவில்லை. பரந்த வெளிகளாகவும், அடர்காடுகளாகவும், கடலோரச் சமவெளியாகவுமே இப்பிரதேசங்கள் காணப்பட்டன. போர்த்துக்கேயர் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வீதியமைப்பு வேலைகள் நடைபெற்றதாக தெரியவில்லை. ஆனால் ஒல்லாந்தர் மக்கட் போக்குவரத்துக்காக வீதிகளை அமைக்கப்பட தொடங்கினர்.

பரந்தன் பிரதேசம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பூநகரி என்பவற்றை இணைக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடமாகியது. யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவு ஊடாக பழைய முறிகண்டிக்கு ஒரு டச்சு வீதி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வீதி பழைய வட்டக்கச்சி ஊடாக இராமநாதபுரத்தை இணைத்த வண்ணம் காட்டுமார்க்கமாக செல்கிறது. இற்றை வரைக்கும் இப்பாதையினூடாக மாடுகளை கால்நடையாக கொண்டு வந்தனர். 1848 ஆம் ஆண்டு வடபகுதிக்கான 200மைல் தூரம் கொண்ட கண்டி-யாழ்ப்பாணம் வீதி பரந்தன் வெளி, ஆனையிறவு ஊடாக அமைக்கப்பட்டது. 1876,77இல் கனகராயன் குளத்திலிருந்து ஆனையிறவுக்கான புதிய வீதி அமைக்கப்பட்டது. 1886இல் புதுக்குடியிருப்பு- கண்டாவளை, பரந்தன் – கரைச்சி, வட்டக்கச்சி, ஆனையிறவு வீதிகள் போடப்பட்டன. இவ் வீதி அபிவிருத்தியே இன்று பரந்தன், ஆனையிறவு பிரதேச போக்குவரத்தின் மைல் கல்லானது.

பல்வேறு தனித்துவங்களை தன்னகத்தே கொண்டமைந்த ஆனையிறவு பரவைக்கடலும், பரந்தன் வெளியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக போர்த்துக்கேயர் ஆட்சியிலிருந்து தொடர்கிறது. அவற்றின் தொடர்ச்சியாகவே இன்றுவரை ஆனையிறவும், பரந்தன் வெளியும் அரசியல், பொருளாதார, சமய, சமூக பாரம்பரியங்களை சுமந்து நிற்கின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் தம் நடவடிக்கைகளில் பரந்தன் வெளியையும், ஆனையிறவு பரவைக்கடலையும் மையப் புள்ளியாகவே நோக்கினர். கண்டாவளையின் வரலாற்றில் காலனித்துவ ஆட்சியாளர்களை நோக்கினால் அவர்கள் பரந்தன் வெளியையும், ஆனையிறவு பரவைக்கடலையும் எதிர்காலத்திலும் வரலாற்றில் இடம்பிடிக்கும் என எண்ணியே தனித்துவமாக விட்டுச் சென்றனர். அதனைச் சுமந்து கொண்டு உறங்காது ஆனையிறவு பரவைக் கடலும் பரந்தன் வெளியும் பயணிக்கின்றது.

உசாத்துணை நூல் விபரம்

1. J.P.லூயிஸ் – இலங்கையின் வன்னி மாவட்டங்கள்
2. வி.சிவசாமி – போல்டேயஸ் சுவாமிகளின் இலங்கை பற்றிய நூல்
3. குல.சபாநாதன் – யாழ்ப்பாண வைபவமாலை
4. குணராசா.க.ஈழத்தவர் வரலாறு
5. W.A.Nelson - The Dutch Forts of Srilanlka
6. பத்மநாதன்.சி – வன்னியர்
7. அருணா செல்லத்துரை – அடங்காப்பற்று வன்னி வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(கிராம உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி

இலவுகாத்த கிளிகளாக வன்னி மாணவர்கள்

இனிய. மு.தமிழ்ச்செல்வன்
கிளிநொச்சி

பழுக்கும் பழுக்கும் என பருத்தி மரத்தில் காத்திருந்து கடையில் இலவம் பஞ்சாக வெடித்து காற்றில் பறந்த பின்பு ஏமாற்றுத்துடன் பறந்து செல்லும் கிளிகள் போன்றே வன்னியில் பாடசாலை மாணவர்களின் நிலைமையும் தொடர்கதையாய் தொடர்கிறது. ஒவ்வொரு வருடமும் பாடசாலை கல்வியை முடித்து வெளி யேறும் போது பருத்தி மரத்தில் இலவம் பழத்தி ற்கு காத்திருந்து ஏமாற்றத்துடன் பறந்து செல் லும் கிளிகள் போன்று வெளியேறுகின்றனர். இந்த வன்னி மாணவர்களுக்கு எல்லா பாடங் களுக்கும் ஆசியர்கள் என்பது இலவம் பழமே.

ஐந்தாம் ஆண்டில் வருவார்கள், ஒன்ப தாம் ஆண்டில் வருவார்கள், சரி ஓஎல் வகுப்பு க்கு என்றாலும் வருவார்கள், என நாளை வருவார்கள் அடுத்தமாதம் வருவார்கள் அடுத்த வருடம் என்றாலும் வருவார்கள் எனநம்பி இறுதிவரை ஆசிரியர்கள் வராமேலே தங்களின் பாடசாலை கல்வியை முடிந்து செல்கின்றார்கள் வன்னியின் பெரும்பாலான மாணவர்கள் குறிப்பாக வன்னியின் கிராமத்து மாணவர்கள்.

எல்லோருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும் என்பது மாணவர்களின் உரிமை ஆனால் அந்த உரிமைகள் பெரும்பா லான மாணவர்களுக்கு கிடைப்பதில்லை குறிப் பாக பின்தங்கிய பிரதேசமாணவர்களுக்கு இந்த உரிமைகள் காலம் காலமாக மறுக்கப்பட்டே வருகிறது. ஆசிரியர்கள் இல்லை அதனால் வழங்கமுடியவில்லை என்றால் நியாயம் இருக் கிறது ஆனால் ஆசிரியர்களை மாகாணத்திற் குள் மேலதிகமாக வைத்துக்கொண்டு நியாய மாக பங்கிடாமல் இருப்பதனை என் வென்று சொல்வது? சரியாக நியாயமாகபங்கீடு செய்வ தற்கான பொறிமுறையை கல்வித்துறை சார்ந்த உயரதிகாரிகளால் வகுக்கமுடியாதுள்ளதா? அல்லது வகுக்கு கூடாது என்ற நிலைப்பாடா? இந்த செயற்பாடுகள் தனது கல்விக்காக பாட சாலையை மட்டுமே நம்பியிருக்கும் கிராமத்து மாணவர்களுக்கு செய்யும் துரோகமல்லாவா?

கல்வியை பொறுத்தவரை ஆசியர் களுக்காக அல்ல மாணவர்கள் மாணவர்களுக் காகவே ஆசியர்கள். மாணவர்களின் தேவை களுக்கு ஏற்றவகையில் ஆசியர்கள் பங்கீடு செய்யப்படல் வேண்டும். அரசுமக்களின் வரிப் பணத்தில் வேதனம் வழங்கி ஆசிரியர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிப்பதுமாணவர்கள் வேதனைப்படாமல் கற்பதற்கே. நகர்புறம் மற்றும் வசதிவாய்ப்புகள் நிறைந்த பிரதேசங்களில் மாணவர்களின் கல்விப் பயணத்திற்கு சீரீபி பஸ் இல்லையென் றால் தனியார் பஸ், அதுவும் இல்லையென்றால் சொந்தமாகவாகனம் ஆனால் கிராமத்தில் அவ்வாறு இல்லையே அந்த மாணவர்களின் கல்விப் பயணம் என்பது பாடசாலையை நம்பியே. அதை தவிர வேறு வழியில்லை. ஆனால் அந்தப் பயணமே நடத்துனர் இல்லாத பேரூந்து போன்று சென்றால் கிராமத்து மாண வர்களின் கல்விப் பயணத்தின் எதிர்காலம்?

கல்வித்துறை சார்ந்து நிர்வாக அலகு கள் பல்வேறுப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதற் குரிய ஆளணிமற்றும் பௌதீகவளங்கள் வழங் கப்பட்டு நிர்வாகப் பொறிமுறைகள் ஏற்படுத்தப் படுவது மாணவர்களுக்குரிய கல்வி வசதிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கே. இந்தநிர்வாக இயற்திரங்களை உரியமுறையில் வழிப்படுத்தி செயற்படுத்துவதற்கே அரசியல் தலைமைத்து வங்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டு அதி காரத்திற்கு அனுப்படுகிறது. ஆனால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரச நிர்வாக இயந்திரங் களை வழிப்படுத்தி செயற்படுத்தி செல்ல வேண் டியவர்களும் வழி தவறி செல்லும் போது பாதிக் கப்படுவது ஏழை மாணவர்களும், கிராமத்து மாணவர்களுமே.

அதுதான் தற்போது வன்னியிலும் நடந்து கொண்டிருக்கிறது. எங்களுக்குள் இருந்து எங்களால் ஒருவர் அதிகாரத்திற்கு சென்று விட்டார் இனி எங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் எங்கள் பிள்ளைகளும் நல்ல கல்வி கிடைக்கும் எங்கள் பாடசாலை களிலும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசியர்கள் இருப்பார்கள் என பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த மக்களும் இலவு காத்த கிளிகளாகவே இருக்கின்றனர். அவர்களுக்கும் இப்போது தெரியவில்லை தாங்கள் இலவம் பழத்திற்கு காத்திருக்கும் கிளிகள் என்று.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் ஒரு இனத்தின் மிகப்பெரும் சொத்து இலங்கை இனப்பிரச்சினையின் உருவாகத்தில் கல்வியும் முக்கிய காரணியாக அமைந்திருந்திருந்தது. அன்று ஒரு இனம் மற்றொரு இனத்தின் கல்வி மீது கை வைத்தமையினால் பிரச்சினை உரு வானது. ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல ஒரு இனத்திற்குள்ளேயே பிரதேச ரீதியாக, பிராந்திய ரீதியாக பாகுபாடுகளும், பாரபட்சங் களும் காட்டப்பட்டு வருகிறது. மாணவர்களின் நலன்கள்,பிரதேசங்களின் கல்வி வளர்ச்சி, என்பவற்றுக்கு அப்பால் ஆசியர்களின் மேலதிக தனிப்பட்ட நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் ஆசிரியர் வளப் பற்றாக்குறைகள் உள்ள பிரதேசங்களை நோக்கி ஆசிரியர்கள் நகர்த்தபடுகின்றார்கள் இல்லை. இது அந்த பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு மிகப்பெரும் தடை யாக தொடர்ந்தும் இருந்து வருகிறது.

தொடர்ந்தும் வன்னி மாணவர்கள் குறிப்பாக கிராமங்களின் ஏழை மாணவர்கள் இலவு காத்த கிளிகளாக இருக்க முடியாது. இந்த நிலைமை மாற்றியமைக்கபட வேண்டும். இவ்வாறான பிரதேசங்களின் தேவைகளை முன்னிறுத்தி தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்கின்றவர்கள் அந்தந்த பிரதேசங்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். தொழில் வாயப்புக்களை பெறுவதற்கு மட்டும் வன்னியும் அதன் கிராமங்களுக்கு தேவை. தொழிலை பெற்ற பின்னர் சேவை என்பது தேவைகளே இல்லாத பிரதேசங்களில் என்றால்? இதன் நியாயத்தன்மை என்ன? எனவேதான் வன்னியை நோக்கிய குறிப்பாக வன்னியின் கிராமங்களை நோக்கி ஆசிரியர் வளம் நியாய மாக பகிரப்படவேண்டிய சிறந்த பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும். இது பொறுப்பு வாய்ந்த கல்வித்துறை சார்ந்தவர்களின் கடமை யும், பொறுப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவேந்தல்



பிரித்தானிய பாராளுமன்றத்தை அலங்கரித்த இலங்கைத் தமிழன் சேர் முத்துக்குமார சுவாமி

கலாபூஷணம்
இனிய. வ. ஏழுமலைப்பிள்ளை
மலையாளபுரம் கிளிநொச்சி

பல ஆண்டுகளுக்கு ஒரு முறை பூத்து மலரும் குறிஞ்சி மலர் போல காலத்துக்குக் காலம் பல நாடுகளில் பல பெரியோர்கள் தோன்றி மனித சமுதாயத்திற்கு ஒளியூட்டி வழிகாட்டி வந் திருக்கின்றனர்..... அந்த வகையில் பிரித்தானிய பாராளுமன்றத்தை அலங்கரித்த பெருமையைப் பெற்றவர்தான் சேர் முத்துக்குமாரசாமி ஆவர் கள்.

சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களை என்ன தன்மையர் என்றோ, என்னவாய் இருந் தவர் என்றோ, எடுத்தியம்ப இயலாது. அவர் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் பெரும் புகழோடு வாழ்ந்தவர். அவரை அறிஞர் நூலாசிரியர், அரசியல்பண்டிதர், தேசபக்தர், என் றெல்லாம் நூல்கள் அன்றுதொட்டு இன்று வரை புகழுகின்றன. அவரும் புகழோடு தோன்றிய பெரியாராவார்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1933ம் ஆண்டு பிறந்தவர் (தந்தையார் குமாரசுவாமி முதலியார், தாயார் செல்லாச்சி அம்மையார் தகப்பனாரை குழந்தைப் பராயத்திலே இழந்த வரானாலும் தாயாரின் தியாக வாழ்க்கையால் முத்துக்குமாரசுவாமி ஒரு குறையுமின்றி வளர்ந்து கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்ந்து படித்து வந்தார். றோயல் கல்லூரியில் அதிபராயிருந்த வணக்கத்துக்குரிய போக் அவர்களுடைய அபிமான மாணவராயிருந்த முத்துக்குமாரசுவாமி படிப்பிலும், பரீட்சைகளி லும் ஆசிரியர்கள் வியக்கும் வண்ணம் திறமை யுள்ளவராக இருந்தார். அக்காலத்தில் மாணவர ளவும் அவாவும் "ரேணர்" பரிசைப் பெற்ற முத்துக்குமாரசுவாமி றோயல் கல்லூரியின் முதல்தர மாணவருள் முதல் இடத்தைப் பெற்று விளங்கினார், என்பது சொல்லாமலே அமையும்.

முத்துக்குமார சுவாமி அவர்கள் ஆங்கில இலக்கிய இதிகாசங்களில் திறமை பெற்றதோடு லத்தீன், கிறீக் ஆகிய புராதன மொழிப்புலமையும் பெற்று 1851 ஆம் ஆண்டின் திறமையான மாணவர் எனக் கல்லூரிச் சுவரில் அவர் பெயர் எழுதப்படும் பேற்றையும் பெற்றவர்.

வணக்கத்திற்குரிய கலாநிதி மாக்வி கார் என்ற பெரியாரிடம் தத்துவ சாத்திரம், இயல்பு நூல் என்பன கற்றுத்தேறிய முத்துக் குமாரசுவாமியின் அதிவிவேகத்தையும் கல்வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தையும் அறிந்த அரசாங்கம் அவரை அழைத்து உயர்ந்த சிவில் உத்தியோகம் ஒன்றை அவருக்கு வழங்கியது. அதன் பிறகு முல்லைத் தீவுப் பகுதியின் அரசாங்க அதிபராகக் கடமை யாற்றினார். அங்கே கடமையாற்றிய காலத்தில் நோய்வாய்ப்பட்டமையால் உத்தியோகத்தை விலகல் செய்து விட்டுக் கொழும்பு சென்றார். அங்கே சட்டம் பயின்று 1856ம் ஆண்டில் அப்புக் காத்தாகத் தொழில் நடத்திச் சிறந்து விளங்கிய அப்புக்காத்து மார்களில் சிங்கம் எனப் புகழப் படும் தகுதியைப் பெருமளவில் அவர் தொழில் நடத்தினார். தமது ஓய்வு நேரங்களில் ஐரோப் பிய இலக்கியங்களையும், பிற நூல்களையும் நன்கு கற்றுப் பெரும்புலமை பெற்றார்.

அவர் அப்புக்காத்தாகத் தொழில் நடத்திய காலத்திலேதான் சட்டசபை அங்கத்த வராக நியமிக்கப்பட்டார். அவர் சட்டசபையில் பேசியவற்றையும் அவருடைய அஞ்சாமை, நேர்மை ஆகிய அரும்பெரும் குணமகிமை யாகியவற்றையும் ஐரோப்பிய அங்கத்தவரும், பிறரும் வெகுவாகப் பாராட்டிப் பேசியும் எழுதி யும் உள்ளார்கள்.

கோல்புறூக் அரச யாப்புத் திருத்தத்தின் வண்ணம் இலங்கையில் முதன் முதலாக நிறு வப்பட்ட சட்ட சபையிலே ஆள்பதி சேர் சாள்ஸ் மக்காதி அவர்களால் 18.07.1861 முதலாகச் சட்ட சபையின் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவ ராகத் தமிழருக்கும் முஸ்லீம்களுக்குமாக நியமிக்கப்பட்டார்.

அவர் கண்டி மக்கள் விவாகம் சம்பந்த மாக பொதுமக்கள் விரும்பாத தன்மையால் எழுந்த ஒரு கட்டளைச் சட்டத்தையும், இராணி அப்புக்காத்து உத்தியோகம் பார்த்துக்கொண்டே தனித் தொழில் நடத்தும் அனுமதியையும் இலகு வாக எதிர்த்துப் பேசினார். சனநாயக ஆட்சி என்றும் மக்கள் சபை என்றும், தாராள மனப் பான்மை என்னும் பெருமையடிக்கும் ஆங்கிலே யரின் ஆட்சிமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்த முதல் இலங்கையர், முதல் அதிகாரி, முதல் தமிழன் என்ற பெருமைக்குரியவர், அது மட்டு மல்ல "சேர்" பட்டம் பெற்ற இலங்கையனும் தமிழ னும் என்ற பெருமைக்கும் உரியவர் இவர்.

சேர் முத்துக்குமாரசாமி அவர்கள் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த காலத்தில் 1862ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்று கிழைத்தேச கலாசாரம் சைவ சமயத்தின் மகத்து வம், அரிச்சந்திரன் வரலாறு, உண்மையின் உயர்வு பற்றிப்பேசி ஆங்கில ஏகாதிபத்தியவாதி களினதும் பாராட்டைப் பெற்றார். அக்காலத்தில் கிறிஸ்தவர் அல்லாதவர் சேர முடியாததுமான சீமை அப்புக்காத்து என்னும் பதவியைப் பெற்று "லிங்கன் இன்" என்ற பாரிஸ்டா கழகத்துக்கே பெருமை தேடிக் கொடுத்தார்.

"சேர் முத்துக்குமார சுவாமி அவர்கள் கீழைத்தேசத்தின் முதலாவது பாரிஸ்ட என்ற தகுதியைப் பெற்ற போது லண்டனில் பிரபல மான "ரைம்ஸ்" பத்திரிகை அவரை வெகு வாகப் பாராட்டிக் கௌரவித்தது.

இந்துப் பிரபுக்கள் பாரம்பரியம் முன் னேற்றமடைவதற்கு அறிகுறியாக "லிங்கன் இன்" என்ற கழகத்தில் சேர்வதற்கு கீழைத் தேசத்துப் பெருமகனார் ஒருவர் தெரியப் பெற்றது மகிழ்ச் சிக்குரியதாகும். இப்பெரியார் அங்கம் வகிக்கின் றார். இவர் கழகத்தில் சேர்ந்தமையால் இந்தியர் இனிமேல் சோம் பேறிகளாக இருக்கமாட்டார் கள் என அப் பத்திரிகை எழுதிற்று".

அவருடைய புருடத்துவம் திறமையான ஆங்கிலப் புலமை, எவரையும் வெகுவாகக் கவர்ந்ததால் ஆங்கிலப் பத்திரிகைகள் அவரு டைய படங்களை அதிகமாகப் பிரசுரித்தன. முத்துக்குமாரசுவாமி அரிச்ந்திரன் நாடகத்தை ஆங்கிலத்திலே தயாரித்து மகாராணி முன்னி லையில் நடித்துச் சிறப்புப் பெற்றார். அவர் தம் நாடகத்தை ஆங்கிலத்திலே தயாரித்து மகாராணி முன்னிலையில் நடித்துச் சிறப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். அவர் தம் நாடகத்தை கானவன் என்ற பிரபுவுக்குச் சமர்ப்பித்துப் புகழ் பெற்றார்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் மாட்சிமை தங்கிய மகாராணியாரின் ஆங்கி லத்தை அட்சரம் பிசகாமல் அழகாகப் பேசியதைக் கேட்டு ஆங்கிலேயரே அதிசயித்தனர்.

அவருடைய தலைப்பாகை, உத்தரீயம் ஆகிய கீழைத்தேச உடை அலங்காரத்தை கண்ட ஆங்கிலப் புலவர்கள் கவிபுனைந்து களித்தனர். விக்டோரியா மகாராணியார் முத்துக்குமார சுவாமியை தமது அரண்மனைக்கு அழைத்து விருந்துபசாரம் செய்து "நைற்" பட்டமும் வழங்கினார். சேர் முத்துக்குமாரசாமி எலிசபெத்கிளே பீ பீ என்ற ஆங்கிலேயப் பெண்ணைத் திருமணம் செய்து அவருக்குப் பிறந்த ஆண் பிள்ளை தான்... கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அகில உலகமும் போற்றும் அருங்கலை விநோதர்.

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அங்கத்தவராக இருந்த சேர் முத்துக்குமார சுவாமி 4.5.1879ஆம் ஆண்டு தனது 46வது வயதில் காலமானார்.

இறக்கும் வரை பிரித்தானியப் பாராளுமன்றத்தை அலங்கரித்த அப்பெருமகனார் திராவிட நாட்டின் முடிசூடா மன்னன் என்று ஆங்கிலேயரால் பாராட்டுப் பெற்றார். அவருடைய மகன் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி பின்னாளில் உலகை வியக்க வைத்தார்.

சேர் முத்துக்குமாரசுவாமிக்குப் பின் அவருடைய சகோதரியின் மகன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஐம்பதாண்டுகள் சட்டசபையை அலங்கரித்தார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சட்ட சபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராகவும், நியமன அங்கத்தவராகவும் தெரிவு செய்யப் பட்ட அங்கத்தவராகவும் இருந்தார். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

தட்டுவன்கொட்டி என்னும் பழைய கிராமம்

இலங்கையின் வடபகுதியில் யுத்தம் நடைபெற்ற காலங்களில் ஊடகங்களில் அடிக் கடி பேசப்பட்ட கிராமம், தட்டுவன்கொட்டி வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், கரைச்சிப் பகுதியில் அமைந்துள்ள கிராமம் தான் தட்டுவன் கொட்டி என்னும் பழைய கிராமம். யாழ்ப் பாணம் கண்டி வீதியில் தான் இப் பழைய கிராமம் அமைந்திருந்தது. ஆரம்பத்தில் கண்டி – யாழ்ப்பாணம் வீதி தற்போது ஆனையிறவு இராணுவ **வீரர் நினைவு மையம்** அமைந்திருக்கும் இடத்தின் ஊடாக, ஆனையிறவு வாடிவீடு தட்டு வன் கொட்டி கிராமத்தின் ஊடாக, புளியம் பொக் கணை ஊடாக சென்று தற்போதய இராமநாத புரம் ஊடாக சென்று இரணைமடுக் குளத்தின் வடகரையை தொடுகின்றது. இப்போதும் இராம நாதபுரத்தில் இவ்வீதி பழைய கண்டி வீதி என்று தான் அழைக்கப்படுகின்றது. வன்னியில் உள்ள குளத்தினை திருத்தி அமைத்த போதும் (இரணைமடு) மற்றும் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டதாலும் கண்டி – யாழ்ப்பாணம் வீதி, இப்போது உள்ள மார்க்கத்தில் நிர்மாணிக் கப்பட்டது.

கிராமத்தின் அமைவிடம்

தட்டுவன்கொட்டி கிராமம் கிழக்கே புளிம்பொக்கணையையும், மேற்கே குஞ்சுப்பரந் தனையும் கொண்டு அமைந்ததுதான் கரைச்சி கிராமம். இந்த கரைச்சிக் கிராமத்திற்கு பின்நாட் களில் ஒரு கிராமசபையும், கிராமக்கோடும், ஒருபொதுச் சந்தையும் ஏற்படுத்தப்பட்டது. பின்பு புகையிரதப்பாதை ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு புகையிரத நிலையமும் ஏற்படுத்தப்பட்டது. இவை யாவும் ஒருங்கே அமைந்திருந்து தட்டு வன்கொட்டி தான் கரைச்சிக்கு தலையகமாக விளங்கியது. இவையாவும் தட்டுவன் கொட்டி கிராமத்தை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப் பட்டது. விதானையார், மணியகாரன், அரசாங்க அதிபர் நிர்வாகமுறையின் கீழ், கரைச்சி, பச்சி சைப்பள்ளி, பூநகரி, துணுக்காய் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டன. பின்பு இவை சாவகச்சேரி தேர்தல் தொகுதியின் கீழ் உள்ளடக் கப்பட்டன.

கிராமமக்கள்

தட்டுவன்கொட்டி கிராமம் வடக்கு எல் லையை கடலும், மற்றும் பக்கங்கள் வயல்களா லும் சூழப்பட்ட ஒரு கிராமமாகும். ஆகவே அங்குள்ளவர்களின் பிரதான தொழில் விவசாய மாகவும், உணவு தேவைக்காகக் கடல் தொழிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர். மற்றும் ஊரியான், நாவற் கொட்டியான் ஆகியன அண்மித்த அயற் கிராமங்களாக இருந்தன.

கிராமத்தின் முக்கியத்துவம்

கண்டி – யாழ்ப்பாணம் வீதியில் ஆனையிறவு கடல் பகுதிக்கும், தற்போது ஆனையிறவு புகையிரநிலையம் அமைந்திருக்கும் இடத்திற்கும் இடையில் மேட்டுப் பகுதியாக உள்ள இடத்தில் தான் கரைச்சி கிராமச் சங்கம், கிராமக் கோடும், ஒருபொதுச் சந்தையும் புகையிரத நிலையமும் இருந்தது. இந்த இடத்தில் இப்போது ஒன்றுமே இல்லை. கரைச்சி சந்தையானது முருகைக்கல்லினால் எட்டு பாரிய தூண்கள் அமைக்கப்பட்டு அவற்றினைச் சுற்றி மரத்தாலான 24, தூண்கள் அமைக்கப்பட்டு ஒரே கூரையின் கீழ் அமைக்கப்பட்ட சற்சதுரமான பாரிய கட்டிடமாகும். அவ்வாறான ஒரு பாரிய கட்டிடம் அக்காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இடத்திலும் இருக்கவில்லை. இதே போன்று ஆனையிறவு புகையிரத நிலையத்திலும் முற்றும் கொன்றீட் கற்களிலான புகையிரதப் பிரயாணிகள் தங்குமிடமும் கட்டப்பட்டு இருந்தது. தட்டுவன்கொட்டியை மையமாகக் கொண்டே கரைச்சிப் பகுதி இருந்தது. தற்போதைய ஆனையிறவு புகையிரத நிலையம் தொடக்கம் ஆனையிறவு கடற்கரை வரை உலக யுத்த காலத்தில் ஆனையிறவினை பாதுகாப்பதற்காக கட்டப்பட்ட கற்களிலான பல பதுங்கு குளிகள் அண்மைக்காலம் வரை இருந்தன.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு காலாதிகாலமாக பூசைப்பண்டங்கள் மீசாலையிலிருந்து மாட்டுவண்டிகள் மூலமாக எடுத்து வருவது வழக்கம். இவ்வாறான பூசைப் பண்டங்கள் கண்டி வீதிவழியாக ஆனையிறவுவரை வந்து பின்பு தட்டுவங்கொட்டி கிராமத்தின் ஊடாகத்தான் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தை சென்றடையும். பரந்தன் முல்லைத்தீவு வீதி போடப்பட்ட பின்பும் பண்டம் கொண்டு செல்லும் மாட்டுவண்டிகள் தட்டுவன்கொட்டி கிராமத்தின் ஊடாகவே புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு சென்றன. தட்டுவன்கொட்டி, கிராமத்தின் ஊடாகவே புளியம்பொக்கணை ஆகிய இடங்களிலிருந்து மாட்டுவண்டிகள் மூலமாக பண்டப் பொருள்கள் கொண்டுவரும் மாட்டுவண்டிகளின் உதவிக் காக ஆனையிறவு வரை வந்து அவைகளை அழைத்து செல்வதுச் வழக்கம்.

கிராமத்தின் தற்போதய நிலை

ஆனையிறவு கடலேரித் திட்டத்தின் காரணமாக ஆனையிறவு கடலேரியை ஊடறுத்து செல்கின்ற யாழ்ப்பாணம் – கண்டி வீதியில் அமைந்திருந்த பாலமும், புகையிரதப் பாதையில் அமைந்திருந்த பாலமும் மூடப்பட்டதால் தட்டுவன்கொட்டி – கடல்நீர் ஏரியினின்றும் பிரிக்கப்பட்டதனால் வருடம் முழுவதும் அனுபவித்து வந்த கடல் வளம் இப்போது இல்லாமல் போய்விட்டது. ஆனையிறவு இராணுவ வீரர் நினைவு மையம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து சுண்டிக்குளம், வரையுள்ள கடல் பகுதி மாரிகாலத்தில் நீர் நிறைந்திருக்கும், கோடைகாலத்தில் நீர் வற்றிவிடும். இதனால் அவர்களின் மீன்பிடி இல்லாது போய்விட்டது. மழைகாலத்தில் வரட்சியினாலும் பாதிக்கப்படுவதனால் பலர் கிராமத்தை விட்டு வெளியேறியுள்ளனர். கடந்தகால உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் கிராமம் முற்றாகவே இடம்பெயர்ந்தது. இப்போது அரச உதவிகாரணமாக ஒரு சிறுகுழுவினரே மீண்டும் இந்தப் பழைய கிராமத்தில் குடியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்



நோயாளர் காவு வண்டி (Ambulance) சேவை ஒரு பார்வை

இனிய. செல்லையா சதீஸ்குமார்
(விவேகானந்தனார் சதீஸ்)
மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி

நோயாளர்கள் காவு வண்டி (Ambulamce) இதன் சேவை எமது நாட்டைப் பொறுத்தளவில் மிக மிக அவசியமாகவே காணப்பட்டு வருகின்றது. காரணம் கடந்த மூன்றரை தசாப்தகால போரும் அதன் விளைவுகளுமாகும். எனினும் நாட்டினுடைய தற்போதைய சூழலுக்கும் அம்பியூலன்ஸ் வண்டிகளின் சேவை நாட்டினுடைய அபிவிருத்திக் கட்டமைப்பின் பிரதான காரணியாக விளங்கக் கூடிய வீதி அபிவிருத்தி மூலம் அதிவேக நெடுஞ்சாலைகள் பெருந்தெருக்கள் என் பனவை புனரமைக்கப்பட்டும் புதிதாக நிறுவப்பட்டும் வருகின்றது. இதற்கு போட்டியாக நாளுக்கு நாள் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய வாகன இறக்குமதியின் பெறுமானமும் அதிகரித்துச் செல்கிறது. இதனால் பாதைகளில் வாகன நெரிசலும் ஏற்படக்கூடிய வீதிவிபத்துக்களும் பன்மடங்காக பரிணமித்து மனிதஉயிர்களை பலியெடுக்கின்றது. அனேகமான விபத்து மரணங்கள் அதீத இரத்தப் போக்கினாலேயே ஏற்படுவதால் விபத்துக்குள்ளாவேரை விரைவுச் சிகிச்சைக்குட்படுத்துவதற்கு உயிர்காப்பு என்று சொல்லப்படும் அம்பியூலன்ஸ் சேவை மிக அவசியமாகிறது. இதற்கப்பால் ஒரு மாவட்டத்தில் இருக்கக் கூடிய பிரதேச வைத்தியசாலை சுற்றயல் கூறு வைத்தியசாலை மற்றும் பிராந்திய மகப்பேற்று விடுதிகள் போன்றவற்றிற்கு சேவை நாடி செல்கின்ற மகப்பேற்றுத் தாய்மார்கள், விச ஜந்துக்களால் தீண்டப்பட்டவர்கள், வன்முறை விபத்து போன்றவற்றால் படுகாயமடைந்தவர்கள், தற்கொலை முயற்சியாளர்கள் போன்றவர்களை மேலதிக சிகிச்சையின் பொருட்டு மாவட்டத்தின் பிரதான பொது மருத்துவமனைகளுக்கு அவசரமாக கொண்டு செல்வதில் இந்த அம்பியூலன்ஸ் வண்டிச் சேவை பாரிய பங்காற்றி வருகிறதென்றால் மறுப்பாருளரோ!

இத்தகைய உயிர்காப்பு பணியை உலகிற்கு அறிமுகப்படுத்தியது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நெப்பேலியன் படைப்பிரிவில் பணியாற்றிய தலைமை மருத்துவர் "திரு. டொமினிக் ஜின்லாரே" என்பவர் தான். இவரே "Ambulance" என்ற பிரெஞ்சு வார்த்தையை கண்டுபிடித்து பயன்படுத்தினார். அதாவது "ஹோபிடல் ஆம்புலண்ட" எனும் சொற்பதமே காலப்போக்கில் Ambulance என்றழைக்கப்பட்டு இன்றும் கூட புழக்கத்தில் இருந்து வருகின்றது. இந்த ஹோபிடல் அம்புலன்ஸ் என்ற பிரெஞ்சு வார்த்தைக்கு "நகரும் மருத்துவமனை" எனப் பொருள்படும். இற்றைக்கு சுமார் 200 வருடங்களுக்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரே அதாவது 1800களில் இந்த நோயாளர் காவு ஊர்தி கண்டுபிடிக்கப்பட்டு அறிமுகப்படுத் தப்பட்டுவிட்டது. இருப்பினும் இன்றைய நவீனத் துவ முறையிலாது முதன்முதலில் குதிரை வண்டியிலேயே அம்புலன்ஸ் வண்டிகள் ஆரம் பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து புகையிரதங் கள் கப்பல்கள் மற்றும் விமானங்கள் எனப் பர விப்படர்ந்து பரிணமித்துச் சென்றது. எவ்வாறா யினும் குறித்த நோயாளர் காவு ஊடகங்களில் உயிர்காப்பிற்குரிய அடிப்படை திடீர் மருத்துவ வசதிகள் போதியளவு இல்லாமையினால் நோயாளிகள் பலர் பயணப் பாதையில் உயிரி ழக்க நேரிட்டுள்ளது. இதனைக் கருத்திலேந்தி நோயாளர் காவு சேவையில் ஈடுபடுகின்ற போக்குவரத்துப் பொறிகளில் தூக்குப்படுக்கை (Stretcher) செயற்கை சுவாச உபகரணத் தொகுதி ஒட்சிசன் சிலிண்டர், அலம்புத் தொட்டி (sink) மற்றும் முதலுதவிப் பெட்டி (First Aid Box) போன்றவற்றை உள்ளடக்கிய குட்டி மருத்துவ மனை போல் நோயாளர் காவு ஊர்திகள் உரு வாக்கப்பட்டது. இவற்றின் பரிணாம வளர்ச்சி யின் பயனால் உலக அளவில் முதன்முதலாக மோட்டார் வாகனங்களில் அமைக்கப்பட்ட அடிப் படை வசதிகளுடன் கூடிய அம்பியூலன்ஸ் வண் டியை 1869ம் ஆண்டு அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் உள்ள பெபில்யூ மருத்துவமனை நிர்வாகத்தினரே பொதுசன பாவனைக்கென அறிமுகம் செய்து வைத்தனர். இதேவேளை உலகில் இராணுவத்தினருக்கு அத்தியாவசிய தேவையாக காணப்பட்ட இவ் அம்பியூலன்ஸ் சேவையில் இராணுவ அம்பியூலன்ஸ் வண்டி களும் (Army Ambulance) பயன்படுத்தப்பட்டு இன்றளவில் பல்லாயிரம் இராணுவ வீரர்களின் உயிர்களை மீட்டு வருகின்றது. இரண்டாம் உலகப் போரின் போது அதி அவசர தேவையின் நிமிர்த்தம் உலகின் முதலாவது உலங்கு வானூர்த்தி அம்பியூலன்ஸ் (Helicopter) சேவை செயற்படுத்தப்பட்டது. இப் பொறிமுறையும் இன்று வரை பயன்பாட்டில் நீடித்து வருகின்றது.

ஆர்முடுகல் நோக்கி நகர்கின்ற உலக மயமாக்கலுக்கேற்ப மனிதனுடைய தேவைகளும் வளர்ந்து வருகின்றது. இந்நிலையில் 1970க்கு பின் அம்பியூலன்ஸ் சேவைக்கென்று மருத்து வர்களும் தாதியர்களும், பரிசாரகர்களும், மருத் துவ மாதுக்களும் பிரத்தியேகமாக பயிற்றப்பட்டு சேவையில் அமர்த்தப்பட்டனர். இதன் மூலம் விபத்துகள், போர்க் 59அடி நீளமுடையது சுமார் 44படுக்கை வசதிகளை கொண்டதுமான உலகின் மிகப்பெரிய அம்பியூலன்ஸ் மோட்டார் ஊர்தி அமெரிக்காவின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

நோயாளர் காவு ஊர்தி ஓட்டுனர்கள் Ambulance Drivers மனித உயிர் காக்கும் மருத்துவ மேதைகளுக்கு அடுத்த படியாக இந்த நோயாளர் காவு ஊர்தி ஓடடுனர்களை கொள்ள லாம். அதாவது உயிர்காக்கும் உன்னத நோக்கை இலக்காக கொண்டு எப்பேர்பட்ட சூழ்நிலைகளி லும் விபத்துக்களை தவிர்த்து விவேகமாகவும் அதே வேளை மித வேகத்திலும் செயற்பட்டு விலைமதிப்பற்ற மனித உயிர்களை காத்து வருகின்றார்கள். இதற்கு அம்பியூலன்ஸ் சேவை யின் இணைப் பணியாளர்களும் மற்றும் போக்கு வரத்துப் பொலிசாரும் கூட பக்கத்துணையாக நின்று தக்கபயனளித்து வருகின்றார்கள். இம் மேன்மையான பணியின் போது அம்பியூலன்ஸ் சாரதிகள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமை எம்மில் பலருக்கு தெரிந்திருப் பதில்லை.

குறிப்பாக எமது நாட்டின் யுத்தப் பிரதேசங்களாக இருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் இதன் எடுத்துக்காட்டாக வன்னிப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் 2006முதல் 2009 வரையான காலப்பகுதியில் அரச சுகா தார துறைக்குச் சொந்தமான பல வாகனங்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை யின் கிளை எனக் கொள்ளத்தக்க முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்குரிய அம்பியூலன்ஸ் வண்டி கடந்த 2007/11/25 அன்று நோயாளர் காவுச் சேவையின் போது முறக்கொம்பான் வீதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசபுரம், பூநகரி என்ற இடத்தில் வைத்து கிளை மோர்க்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது. அதன் போது பாலசிங்கம் தவசீலன் என்ற அம்பியூலன்ஸ் சாரதி படுகாயமடைந்தமை இப் பத்தியில் பதியப்படவேண்டியதொன்றே! இவ்வாறே நெடுங்கேனி வைத்தியசாலை அம்பியூலன்ஸ் வண்டி முல்லைத்தீவு சமளன் பகுதி ஜீன்-2006ல் கிளைமோர் குண்டுத் தாக்குதலுக்குள்ளானதில் அதன் சாரதியான கோபாலசுந்தரம் உட்பட மருத்துவர் திரு.ஜெயபாலன் அவரது மனைவி நகுலேஸ்வரி, ஜெனனேஸ்வரி அடங்கலாக ஐந்து பேர் பலியாகினார்.

இது தவிர கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிராந்திய சுகாதார சேவை பணிமனைச் சேவை வாகனம் மீது திரு முருகண்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலின் திரு. திவாகரன் என்ற சாரதி உயிரிழந்தமை மற்றும் புளியன்குளம், வெள்ளாங்குளம், தருமபுரம் போன்ற இடங்களில் சுகாதாரத்துறை வாகனங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் என அதன் பட்டியல் நீண்டு சம்பவங்களில் ஒரு சிலவற்றையே தரத் தகவல்களுக்காக இங்கு பதிவேற்ற முனைந்துள்ளேன்.

போர் நடைபெற்ற காலத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பு வைத்தியசாலைகளில் நிலவிய பாரிய மருந்துத் தட்டுப்பாடு காரணத்தினால் பெருமளவான நோயாளர்களை வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை நிலவியது. அந்தக் காலப்பகுதியில் ஓமந்தை மற்றும் முகமாலை முன்னரங்க இராணுவ சோதனைச் சாவடிகள் காலை 8 மணிமுதல் மாலை 4மணிவரை மட்டுமே மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே இந் நிலையில் கிளிநொச்சிக் கிளை A-9 பயணப் பாதைக்குரிய பச்சை ஒளிச் சமிஞ்ஞை (Green Signal) வழித்துனை வழங்கி கணிசமான ஒத்துழைப்பினை நல்கி வந்திருந்தனர். எனினும் 2007ற்கு பிற்பட்ட காலப்பகுதியில் அதிகரித்திருந்த வாகனங்கள் மீதான கிளைமோர்க் குண்டு தாக்குதல்களையடுத்து A-9 வீதியூடான போக்குவரத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியானது. இந்நிலையில் அம்பியூலன்ஸ் சேவைகளுக்கான செஞ்சிலுவை குழுவினரின் வழித்துனை உத்தரவாதமளிக்க அக் குழுவினர் பின் வாங்கியிருந்தார். எவ்வாறாயினும் கிளிநொச்சி மாவட்ட ஆளுகைக்குட்பட்ட அரச வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் வண்டிச் சாரதிகள் மனிதாபிமான ரீதியில் தமது சுயபாதுகாப்பினை கருத்திலெடுக்காது அயராது உழைத்திருந்தமை போற்றுதற்குறியதே!

அம்பியூலன்ஸ் வண்டிகள் முகமாலை ஓமந்தை ஆகிய எல்லைகளை கடந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்வதாயின் விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினரின் தலா இரண்டு பாரிய சோதனைச் சாவடிகளில் சோதனைகளை நிறைவு செய்தே செல்ல வேண்டியிருந்தது. இதன் போது ஏற்படுகின்ற காலதாமதத்தினாலும் சில நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை ஒரு கசப்பான உண்மையாகும்.

அது தவிர ஒரு வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சையின் பொருட்டு நோயாளர்களை உயர் மருத்துவமனைகளுக்கு அம்பியூலன்ஸ் மூலம் கொண்டு செல்லும் போது நோயாளர்களின் உயிரிழக்கும் சம்பவங்கள் பல நிகழ்கிறது. அச்சந்தர்ப்பத்தில் உயிரிழந்தவரின் உடலை அருகில் இருக்கக் கூடிய எந்தவொரு அரச வைத்தியசாலையிலும் ஒப்படைக்க முடியும். அதற்கமைய குறித்த வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியின் ஒப்புதலுடன் அதற்கேற்ற ஒழுங்கு முறையின் கீழ் சடலத்தை பாரப்படுத்திவிட்டு தகவலை நோயாளி தங்கியிருந்த வைத்தியசாலைக்கு வழங்க வேண்டியது அம்பியூலன்ஸ் சாரதியின் கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. இதேவேளை மகப்பேற்றுத் தாய்மாரை கொண்டு செல்லும் போது சில மகப்பேறுகள் அம்பியூலன்ஸ் வண்டியிலேயே இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இதன் போது அம்பியூலன்ஸ் வண்டியை வீதியொழுங்கிற்கமைய ஓரத்தில் நிறுத்தி வண்டியின் மேற்பகுதியில் பொருத்தப் பட்டிக்கக் கூடிய எச்சரிக்கை சுழல் சமிஞ்ஞை விளக்கினை (Totate Sirenlight) ஒளிர விடுவ துடன் விட்டு விட்டு ஒளிரும் இரு சோடி சிக்னல் விளக்குகளை ஒருங்கே செயற்படுத்தி விடுதல் வேண்டும். அதேவேளை அம்பியூலன்ஸ் வண்டி யின் சாரதி ஆசனத்தை விட்டு இறங்கி வீதிப் பாதுகாப்பினை நோட்டமிட்டு உறுதிப்படுத்திக் கொண்டிருப்பார். அம்பியூலன்ஸ் இல் மகப்பேற் றுத் தாயின் பராமரிப்புக்கென செல்கின்ற மருத் துவமாது (Midwife) பிரசவத்தினை பராமரித்து தொடர்ந்து செல்லவேண்டிய வைத்தியசாலை க்கு நோயாளி கொண்டு செல்லப்படுவார். குறித்த தாயினதும் பிரசவிக்கப்பட்ட சேயினதும் அவசர நிலமையை அவதானித்து மருத்துவ மாதுவின் வேண்டுகோளிற்கமைய அருகில் இருக்கக் கூடிய எந்தவொரு அரச வைத்திய சாலையிலும் அவர்களை சேர்ப்பிக்கலாம். கிளி நொச்சி மாவட்டத்தை பொறுத்த வரையில் இது போன்ற அதிக பிரசவங்கள் பூநகரி மற்றும் முழங்காவில் பிரதேசங்களில் இருந்து மாவட்ட பொது மருத்துவமனைக்கு செல்கின்ற அம்பியூ லன்ஸ்களிலேயே இடம்பெற்றன. இதற்கு குன் றும் குழியுமாக இருந்த நீண்ட தூர பாதைகளும் கனிசமான காரணியாக அமைந்தன.

ஒரு அம்பியூலன்ஸ் சேவையின் போது குறித்த அம்பியூலன்சில் சாரதி மற்றும் உதவி யாளரைத் தவிர யார் யாரெல்லாம் அவசியம் இருக்க (பயணிக்க) வேண்டும் என்பதை நோயா ளியின் தன்மைக் கேற்ப தீர்மானிக்கப்படுகிறது. அதாவது தொடர்ச்சியாக செயற்கை சுவாசம் வழங்கப்பட வேண்டி நோயாளி அல்லது நிறை மாத கர்ப்பிணித் தாயொருவராயின் இவர்களுக் கேற்ப ஒரு மருத்துவர், தாதியர், மருத்துவமாது என உத்தியோகத்தர்கள் அம்பியூலன்ஸ் சேவைப் பயணப் பணியிருப்பார்கள். அம்பியூ லன்ஸ் சேவையின் போது வீதிப் போக்குவரத்து தொடர்பில் பார்ப்போமானால் அம்பியூலன்ஸ் வண்டிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் முக்கிய வீதி ஒழுங்கு சட்டங்கள் ஒரு சில வற்றை எமது நாட்டு போக்குவரத்து விதிகளில் இரு வீதி ஒளிச்சமிக்ஞை (Road Light Signal) மற்றும் முன்னுரிமை போன்றவையேயாகும்.

அம்பியூலன்ஸ் வண்டியின் முகப்பில் Ambulance என சிவப்பு நிறத்திலான ஆங்கில எழுத்துக்களால் அம்பியூலன்ஸ் என்பது தலை கீழாக எழுதப்பட்டிருப்பதன் நோக்கம் அவசர சேவையில் ஈடுபட்டுள்ள அம்பியூலன்ஸ் வண்டிக்கு முன்னாள் செல்லக்கூடிய எந்தவொரு வாகனத்தின் சாரதியும் தமது வாகனத்தின் பக்க கண்ணாடிகளில் (Side Mirrot) AMBULANCE என்ற நிமிர்ந்த எழுத்து விம்பத்தினை இலகுவாக வாசித்து அவதானித்து அம்பியூலன்ஸ் வண்டி துரிதமாக முந்திச் செல்ல இடமளிக்க வேண்டு மென்பதற்கேயாகும். அம்பியூலன்ஸ் வண்டி யொன்றை முன்மேற்கூரைப் பகுதியில் நீலம் அல்லது சிவப்பு நிறத்திலான "சூழல் எச்சரிக்கை சமிக்ஞை விளக்கு" (Rotate Siren Light) 07முதல் 12 வரையான வெவ்வேறு ஓசையுடைய "உரத்த எச்சரிக்கை ஒலிக்கருவி" (Sirven horn) மற்றும் "மிகு உயர் அலைவென் வானொலி" (UHF-ULTRA High Frquency : radio) ஆகியவை அவசர எச்சரிக்கை தொடர்பாடல் செயற்பாடுகளுக் கென்று தயார் செய்யப்பட்டிருக்கும். அதனை விட வண்டியின் நோயாளர் பகுதிக்குள் தூக்குப் படுக்கை (Strether) முதலுதவி பெட்டி (Firt Aid Box), செயற்கைச் சுவாசத் தொகுதி, ஒட்சிசன் சிலிண்டர், சிறிய அளவிலான " அலம்புத் தொட்டி" (sink), காற்றோட்டச் சாதனம் (Ventilator), சேலைன் தாங்கி (Sealine Stand) போன்ற உபகரணங்கள் பொறுத்தப்பட்டிருக்கும். உலகில் அம்பியூலன்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வளர்ந்து வரும் உலகமயமாக்கலின் உன்னத முன்னேற்றத்தின் பயனால் அதிநவீன தொழில் நுட்ப உபகரணங்களுடனான சொகுசு அம்பியூ லன்ஸ் வண்டிகள் இன்று எமது பயன்பாட்டிற்கு உள்ளமை மெச்சி மகிழத்தக்கவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலியல் கட்டுரை

அணு அழிவிற்கா? ஆக்கத்திற்கா?

இனிய. மரியநாயகம் கேசவன்
உருத்திரபுரம் கிழக்கு

காலச்சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது. அது யாருக்காகவும், எதற்காகவும் காத்திருப்பதில்லை. அதன் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அறிவியலுலகத்தின் உச்சத்தை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மனிதகுலம் தோன்றிய நாளிலிருந்து முன்னெப்போதும் அடைந்திராத விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியை இன்றைய மனிதன் அடைந்திருக்கின்றான் என்றால் அது மிகையாகாது.

நவீனத்துவம் வளர்ச்சியின் புரட்சிப் பின்னணியில் பல துறைகளுமே சங்கமித்து நிற்பதோடு உலகாயுத சிந்தனைத் திறனடிப் படையில் பூகோளமயமாக்கலும் (GLOBALIZATION) மனிதனை ஆட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

விந்தை மிகு விஞ்ஞானம் அடைந்திருக்கும் இந்த அபரிமித வளர்ச்சியானது ஆக்கப் பாதையினின்றும் அழிவுப் பாதைக்கும் இட்டுச் செல்லும் அவல நிலையையும் தோற்றுவித்திருக்கின்றமை கண்கூடு.

இன்று விண்வெளியிலேயே கேளிக்கைகளையும் உபசார அறைகளையும் அமைக்குமளவிற்கு வளர்ச்சிப் படியேறி நிற்கின்ற வேளை மறுபுறத்தே தொழில் நுட்ப விருத்தி முனைப்புப் பெற்று அதன் இயற்கை விரோத விளைவுகளை இன்றைய மின்னியல் யுக மனிதன் எண்ணிப் பார்க்காமை வேதனைக்குரியதே இதனை இரு பத்தியோராம் நூற்றாண்டின் வரம் என்பதா? அன்றிச் சாபம் என்பதா?

பொதுவாக எந்தவொரு விடயத்தையும் எடுத்து நோக்கின் "அதனால் அனுகூலம் ஒன்று இருந்தால் பிரதிகூலங்கள் பல மடங்காக இருக்கும்" என்பது படித்தவர் முதல் பாமரர் வரை உணரப்பட்ட வாழ்வியல் அம்சம். இதன் பொருளும், கூடிய விளைவுகளும் தொழில் நுட்பப் புரட்சியின் இயற்கைக்கு மாறான அணுகு முறையால் விளைந்துள்ள அனர்த்தங்களின் கோர வடுக்கள் பறைசாற்றுகின்றன.

ஆதிகால மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்துள்ளான். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையோடு இணைந்ததான வாழ்க்கைக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டு வன விலங்குகளைப் போலவே முற்றாக இயற்கையில் சார்ந்திருக்கும் அங்கியொன்றாகத் தம்மை வளப்படுத்திக் கொண்டுள்ளனர். இயற்கையை விஞ்சி ஏதுமில்லை என்ற நிலைப்பாட்டில் தமக்கான உணவு, உடை, உறையுள் உட்பட்ட அடிப்படைத் தேவைகள் அனைத்தையுமே இயற்கையில் இருந்து நுகர்ந் தனர்.

ஆயினும் இன்றைய நிலையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பல விதங்களில் மனிதனை முன்னேற்றினாலும் ஒரு விதத்தில் பார்த்தால் "இயற்கையையே வெல்ல மனிதன் முற்படுகின்றானோ? எனும் கேள்வி பொதுவாகவே எழுகின்றது. சுனாமிப் பேரலை தாக்கம், தொடர் புவி நடுக்கங்கள், புவி வெப்ப அதிகரிப்பு (Gloval Warming) கடல் நீர் மட்டம் உயர்வு, ஓசோன் படைச் சிதைவு, அணுக் கதிரியக்கத் தாக்கம் என்பன இதையே சுட்டி நின்று பாடம் கற்க நம்மைத் தூண்டுகின்றன.

"மட்டு மீறிய நுகர்வுப் போக்கு வாழ்க்கை முறை பரிணமித்து விட்டதும். வளங்களை வரம்பின்றிச் சூறையாடும் அபத்தமும் தான் சுற்றுச் சூழலின் எதிரிகளாக விளங்குகின்றன" என்ற கியூபாவின் முன்னாள் தலைவர்/ பிடல் காஸ்ட்ரோவின் கருத்து இங்கு மனங் கொள்ளத்தக்கது. இனி நாம் எடுத்துக் கொண்ட விடயப் பரப்பிற்குள் வருவோம்.

அணு என்றால் என்ன?

அடிப்படையில் இன்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கி.பி. 400ஆம் ஆண்டளவில் கிரேக்க தத்துவவியலாளரான டிமோக்கிறட்டிஸ் என்பவரே அணுக்கள் அறிமுகத்திற்கு வித்திட்டவராவர். இவ்வுலகில் உள்ள அனைத்துச் சடப்பொருட்களையும் (திண்மம், திரவம், வாயு) மேலும் சிறிது சிறிதாகப் பிரித்துக் கொண்டே போனால் கடைசியில் மேலும் பிரிக்க முடியாத உறுதியான துணிக்கை ஒன்று பெறப்படும். அது தான் அணு (ATOM) என்ற கருத்திளை முன்வைத்தவராவார்.

ஒரு தீக்குச்சியின் முனையில் மாத்திரம் பல கோடி அணுக்கள் இருக்கின்றன என்பதிலிருந்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றதல்லவா? இந்த அணு எப்படியிருக்கும்? அதில் என்னவெல்லாம் அடங்கி இருக்கும்? போன்ற விடயங்கள் பற்றிக் பல விஞ்ஞானிகள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

நடுவினில் சூரியனும் அதனைச் சுற்றிக் கோள்களும் எப்படிக் காட்சியளிக்கும் என்பது தொடர்பில் பல புகைப்படங்களில் நாம் பார்த்திருப்போமல்லவா? அணுவின் தோற்ற மும் ஏறக்குறைய அப்படித்தான். அணுவின் நடுவில் அதன் மையக்கருவும் சுற்றி வர மறை ஏற்றம் (-) கொண்ட இலத்திரன் (Electron) எனப்படும் சிறிய துணிக்கைகளும் காணப்படும். கருவில் நேர் ஏற்றம் (+) கொண்ட புரோத்தன் (Proton) எனப்படும் துணிக்கைகளும் ஏற்றமற்ற நியூத்திரன் (Neutron) என்ற துணிக்கைகளும் காணப்படும். அணுவினுள் காணப்படும் அணுவி லும் சிறிய இந்த மூன்று துணிக்கைகள் சேர்ந்த தொகுதி தான் அணு.

நாம் எழுதப் பயன்படும் பென்சில் காரீயத்தால் (C) ஆக்கப்பட்டுள்ளது கறுப்பு நிற காரீயம், ஜொலிக்கும் தங்கம், நாம் சுவாசிக்கும் கண்ணுக்குப் புலப்படாத ஒட்சிசன், வலிமையான இரும்பு என அனைத்துமே அணுக்களால் ஆக்கப்பட்டவை தான். ஆனால் அந்த அணுக்களினுள் உள்ள துணிக்கைகளின் எண்ணிக்கை தான் வேறுபடுகின்றது. இதனால் தான் இத்தனை மாற்றம் காரீயத்தின் பொதுப் பெயரான காபனின் (c) அணுவில் 6 புரோத்தன்கள், 6 இலத்திரன்கள், 6 நியூத்திரன்கள் காணப்படும் இரும்பில் 26 புரோத்தன், 26இலத்திரன், 30 நியூத்திரன்கள் இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு அணுவிலும் காணப்படும் இந்த வேறுபாடு தான் அதன் இயல்புகளைத் தீர்மானிக்கின்றன. அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்றால் அணுவின் உபதுணிக்கைகளின் எண்ணிக்கை மாறினால் அல்லது மாற்றப் பட்டால் என்னவாகும்?

உதாரணமாக இரும்பில் 26 புரோத் தன்கள், 26 இலத்திரன்கள் காணப்படும். ஆனால் நியூத்திரன்களின் எண்ணிக்கையில் மாற்றம் இருக்கும் சில அணுக்களில் 30, 28, 31 என்று அவை மாறிக்கொள்ளும். இப்படியான அணுக் கள் "சமதானிகள்" (ISOTOPES) என்று அழைக்கப் படும். அதாவது, இவை அனைத்துமே இரும்பு அணுக்கள் தான். ஆனால் அவற்றின் நியூத்திரன் எண்ணிக்கை மட்டும் வேறுபடும். இந்த புரோத் தன், நியூத்திரன் இழக்கும் (வெளியீடு) வேலையை சில அணுக்கள் தாமதமாகவே மேற் கொள்ளப்படுகின்றன. இவை கதிரியக்கம் (RADIO ACTIVITY) கொண்டவை என அழைக்கப் படும்.

அணு குண்டின் பரிணாமம்

உலகத்தில் இன்று சக்தி எனப்படும் அணுவின் பிரதான பரிணாமம் பெற்றுள்ள அணுகுண்டுத் தயாரிப்புத் தொடர்பில் நோக்கு தல் உசிதமானதாகும்.

பொதுவாக ஒரு மூலகத்தை நியூத் திரன் கொண்டு தாக்கத்தினால் அது வேறொரு மூலகமாக மாறும் ஏற்றமற்ற நியூத்திரன் நேர் ஏற்றம் (+) கொண்ட புரோத்தனாக மாறுவதா லேயே நடைபெறுகின்றது. ஆகவே ஏற்கனவே தன் வசம் 92 புரோத்தன்களைக் கொண்டிருந்த யுரேனியத்திலும் இப்படியான ஒரு விளைவை உலகம் எதிர்பார்த்தது. ஆனால் நடந்ததோ வேறு யுரேனியம் அணு பிளவுற்றது. அதிலிருந்து சக்தி வெளியிடப்பட்டது. மேலும் துணிக்கைகளும் வெளியானது. இதுவே அணுகுண்டு யோசனைக் கான முதற்படியாக அமைந்தது.

ஒரு யுரேனிய அணு பிளவுறும் போது சில நியூத்திரன்களும் வெளியேறுகின்றன. இந்த நியுத்திரன்கள் மேலும் சில யுரேனிய அணுக களைத் தாக்கும் அவையும் பிளவுறும். மேலும் சில நியுத்திரன்களும் பிளவுபடும். இப்படியே தொடர்ந்து நிகழும். இது தொடரணுப் பிளவு (CHAIN REACTION) என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த ஒரேயொரு யூரேனிய அணுவிலிருந்து சொற்ப சக்தி தான் வெளிப்படுகின்றது. இதனால் எதுவித செயற்பாடுகளையும் செய்ய முடியாது. ஆனால் ஒரு கிராம் யுரேனியத்தில் மாத்திரம் அண்ணளவாக $25X10^{20}$ அளவு அணுக்கள் காணப்படும். இத்தனை அணுக்களும் சொற்ப நேரத்தில் சக்தியை வெளியிட்டால் ?! அது தான் அணுகுண்டு.

நடப்பு உலகில் வல்லரசு நாடுகளும் ஏன் வளர்முகநாடுகளும் சரி தமக்குள்ளேயொரு மேலாண்மையை ஏற்படுத்தும் நோக்கில் அணு வாயுதங்களின் தயாரிப்பிலும் அதற்கு அடிப் படையாக யுரேனியத்தைச் செறிவூட்டுவதிலும் தானே போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகையதானதொரு போட்டி நிலைமையா னது நாடுகளிடையே ஆரோக்கியமானதொரு நல்லுறவுடன் கூடிய பொருளாதாரப் பங்காண் மையையோ அன்றிப் பேண்தகு அபிவிருத்திப் போக்கினையோ தோற்றுவித்துவிடும் என்பதற் கில்லை.

பெரும் பொருளாதார மந்த நிலைமை யுடன் கூடவே மானிட அபிவிருத்திச் சுட்டியில் பெரும் பின்னடைவுடன் வறுமை நிலையால் பீடிக்கப்பட்டுள்ள நாடுகளும் ஒரு புறம் தங்கள் பொருளாதாரத்தின் பெரும்பங்கினை அணு வாயுதங்களின் உற்பத்தி, யுரேனியம் செறி வூட்டுதல் போன்றவற்றிற்காகச் செலவீடு செய் யும் நாடுகளும் இருக்கவே செய்கின்றன. அவை தம் சூழலியல் சார் பொது நலனில் சற்றேனும் அக்கறையற்றே செயற்படுகின்றன.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட் டன், சீனா மற்றும் வடகொரியா என்று அணு குண்டின் சொந்தக்கார நாடுகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் கூட அணுகுண்டின் வீரியத்தையும் அதன் விபரீதத்தையும் உணர்ந்த ஜப்பானின் ஹீரோஷிமா மற்றும் நாகசாகி ஆகிய நகரங்கள் தகுந்த எடுத்துக்காட்டாக உள்ளன.

எவ்வளவோ நாட்கள் உலக சரித்திரத்தில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆனால் அவை எல்லாவற்றைக் காட்டிலும் 1945 ஆகஸ்ட் 06ஆம் திகதி தான் மிக முக்கியமானதும் மறக்க முடியாததுமான நாளாகும். அவை இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்கள், நேச நாடுகளிடம் ஜப்பான் சரணடைய மறுத்து விடவே உலகின் முதல் அணுகுண்டுக்கு இரையாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஜப்பானுக்கே என்று முடிவானது. 1945 ஆகஸ்ட் 06ல் ஜப்பானின் தலைவிதியே மாறிப் போனது அமெரிக்க அதிபர் ட்ரூமானின் ஆணைப்படியே ஜப்பானில் 235 வகையைச் சேர்ந்த அணுகுண்டு வீசப்பட்டது. இந்தக் குண்டுவீச்சில் அண்ணளவாக 75000 பேர் வரை கொல்லப்பட்டனர். மூன்று தினங்கள் கழித்து நாகசாகி நகர் மீது புளுட்டோனிய வகை அணுகுண்டு வீசப்பட்டது. இதில் அண்ணளவாக 40,000பேர் வரை மடிந்தனர் இவற்றினால் பல்லாயிரக்கண்கானோர் படுகாயம் அடைந்தனர். எஞ்சிப் பிழைத்தவர்கள் கதிர்வீச்சில் பாதிக்கப்பட்டனர். பலருக்குக் கண்பார்வை போயிற்று. காதுகள் செவிடாயின. கதிர் வீச்சுத் தாக்கத்தினால் உடலில் அபாயகரமான காயங்கள் ஏற்பட்டதோடு உடற் திசுக்களும் பாதிப்படைந்து பலர் மலடாயினர். பலர் கை அல்லது கால்களை இழந்தனர். பலர் மலடாயினர் மலடாகாதவர்களுக்குக் கூட கதிர்வீச்சுத் தாக்கத்தினால் பிறந்த குழந்தைகள் கூட பலவித ஊனத்துடன் பிறந்தன.

இந்த அணுகுண்டு வீச்சில் கிட்டத்தட்ட ஒரு சதுர கிலோ மீற்றர் அளவு இடத்தில் கட்டடங்கள், மனிதர்கள், மரங்கள், பிராணிகள் என்று எல்லாவற்றையுமே நொடியில் சாம்பலாகவும் ஆவியாகவும் மாற்றிவிட்டது. இதன் காரணமாக வேறுவழியின்றி ஜப்பான் சரணடைந்தது. இரண்டாம் உலகமகாயுத்தமும் முழுவதுமாக முடிவிற்கு வந்தது ஆனால் அணுகுண்டின் பாதிப்புக்கள் இன்றும் தொடர்கின்றன.

1945இதற்குப் பின்னர் இன்று வரை உலகில் வேறெங்கும் அணுகுண்டு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படவில்லை. எனினும் கடந்த 50 ஆண்டுகளில் மனிதன் இன்னமும் சக்தி வாய்ந்த பயங்கரமான ஆயுதங்களை கண்டு பிடித்துவிட்டான். என்று தான் சொல்ல வேண்டும். அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் ஹைட்ரஜன் குண்டுகளைத் தயாரித்துச் சோதனைகளும் நடத்தியுள்ளன. இந்தக் குண்டுகள் ஒவ்வொன்றும் ஜப்பானில் வீசப்பட்ட அணு குண்டைக் காட்டிலும் 100 மடங்கு அல்லது அதற்கு மேலும் சக்தி வாய்ந்தவை. இவற்றில் இருந்து எம்மால் அனுமானிக்கக் கூடியது என்னவென்றால் 1945இதற்கு பின் தான் மனிதனிடம் மனிதஇனத்தை மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களையும் ஒட்டு மொத்தமாக அழிக்கும் திறன் வந்துள்ளது. இதைத் தான் நமக்கும் பல்வேறு நாடுகளிடமும் உள்ள அணு ஆயுதங்களின் இருப்புத் தெரிவிக்கின்றது.

ஆணு ஆலைகள் ஆக்கத்திற்கா?

மனிதனுக்கு மனிதனே எதிரியாய் நிற்கும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்த வகையில் உலகத்தில் இன்று ஆக்கச் சக்தி எனப்படும். மின்சக்திக்காக வேண்டி மனித குலத்தின் கண்டுபிடிப்பாகிய அணு உலைகள் இன்று மனித குலம் நிலைத்திருப்புக்கு எதிராக நிற்கின்றன. இன்றைய நிலையில் பல வழிகளில் அணுசக்தி பயன்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் அனு கூலம் ஒன்றைப் பெறும் பொருட்டு இவ் அணு உலைகள் அமைக்கப்பட்டாலும் கூட இந்நிலையங்கள் செயல்படும் காலத்திலும் சரி அது ஏற்படுத்தும் கழிவுகள் விடயத்திலும் சரி பாதகமான விளைவுகளையே ஏற்படுத்திவிடு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு உலைகளின் பிறப்பாக்கம்

அணுச்சக்தியின் பரிணமிப்புக்களில் ஒன்று தான் மின்சக்திப் பிறப்பாக்கத்திற்கென பல நாடுகளிலும் பல்கிப் பெருகி வரும் அணு உலைகளாகும். இவ் அணு உலைகளைப் பொறுத்த வரை யுரேனியம் என்ற அணுவை உடைத்து அதன் மூலம் ஏற்படும் அணுவைக் கொண்டு டைனமோ ஒன்றைச் சுழலச் செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது தான் அணுமின் உற்பத்தி. இவ்வாறு யுரேனியத்தின் அணுவை உடைக்கும் போது சுமார் 2000°C வெப்பம் பிறப் பாக்கம் செய்யப்படுவதுடன் இவ் வெப்பம் நீரின் கொதிநிலையிலும் பார்க்க 20 மடங்கு அதிக மாகும்.

அணு உலைகளில் பல வகைகள் பல்வேறு தொழில் நுட்பங்கள், பயன்பாடுகள் என விஞ்ஞான விளக்கங்கள் சொல்லப்படுகின் றன. அணு மின் நிலையங்களினால் நாட்டின் உற்பத்தி கைத்தொழில் துறைக்குத் தேவையான பாரியளவிலான ஒரே காரணத்திற்காக அணு உலைகளிலிருந்தான மின் பிறப்பாக்க செயன் முறையை ஆக்கபூர்வமான ஒன்றெனக் கருதி விட முடியாது.

இந்த அணு மின் நிலையங்களும் அவற்றின் யுரேனியச் செறிவூட்டல் செயன் முறைகளும் அவ்வாறே யுரேனியத்தினைப் பிளக்கும் போது ஏற்படும் அணுக்கழிவுகளும் கூட கதிர்வீச்சுத் தாக்கம் என்கின்ற பேர பாய த்தை உண்டு பண்ணக் கூடியவை தாம். இவற் றின் அபாயகரமான கதிர்வீச்சுத் தாக்க விளைவு கள் வெறுமனே ஒன்றிரண்டு வருடங்களுக்குள் ளாக மட்டுப்படுத்தக் கூடியவை அன்று. தலை முறை கடந்தும் விளைவுகளைப் பிரதி பலிக்கக் கூடிய வலிமை பொருந்தி யவை.

என்ன இது......? அணு விஞ்ஞானிகளே அபாயம் நிகழாது என்று அடித்து ஆணித் தரமாகச் சொல்கிறார்களே? என்று பலர் எண் ணக்கூடும். அவ்வாறு இடித்துரைக்கும் அணு விஞ்ஞானிகளே தமது மனசாட்சிக்கு முன் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்பிற்கு உத்தர வாதம் கொடுக்கமாட்டார்கள். ஏனெனில் அத் தகைய நூறு சதவீதம் பாதுகாப்பானவையாக அணுஉலைகள் இருக்குமென்பது வெறும் கன விலும் கற்பனையிலும் மாத்திரமே தான், நிஜத் தில் சாத்தியமில்லை.

அடிப்படையில் இந்த அணுமின் நிலை யங்களினால் பாரியளவில் மின்சாரத்தைப் பெறுவது தான் நோக்கம் என்கிற தோற்றப்பாட் டினையே அணு உலைகளைக் கொண்டுள்ள நாடுகள் முன்வைக்கின்றன. ஆனால் ஆராய்ந்து பார்த்தால் உண்மை அதுவன்று ஏன்! மின்சாரம் பெறுவதற்கு இன்று சூரியசக்தி நீரமின் சக்தி, காற்றாலை சக்தி என பல்வேறு மாற்றுவழிகள் பற்றி பரிசீலிக்க முடியாதா? இந்த அணுமின் நிலையங்களினால் உபரிப் பொருளாகப் பெறப் படும் புளுட்டோனியம் என்பதே இங்கு விவாத் திற்குரிய காரணமாகும். இந்தப் புளுட் டோனி யம் அவ்வளவு பெரிய பூதமா? என்றால் ஆம். மனிதர்களை உயிரோடு விழுங்கும் பூதத்திற்கு உயிர் கொடுப்பதே அது தான். அணுகுண்டுத் தயாரிப்பில் புளுட்டோனியம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்ற ஒரே காரணத்தினால் தான் இன்று பலதரப்பட்ட எதிர்புக்குள்ளும் பல்வேறு நாடுகள் இன்றும் அணு உலைகளுக்கு அமோக வரவேற்பளிக் கின்றன.

அபாயம் நிறைந்தவை அணுஉலைகள்

அணு உலைகளால் கதிர்வீச்சு அபாய மும் கதிர்வீச்சின் பேரழிவுகள் தந்த வடுக் களும் ஏராளம் இவ் விளைவுகள் ஒட்டுமொத்த உலகத் தின் சுற்றுப்புறச் சூழலையே பாதித்து வருகின் றமை கண்கூடு இதனாலேயே இன்று அணு உலைகளுக்கும் மக்கள் மத்தியில் கடுமையான பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின் றன. இதன் காரணமாகவே அணு உலைகளுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு பெருகி வருகின்றது.

அணுவைப் பிளக்கும் போது கழிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். அதனையே அணுக்கழிவுகள் என்று குறிப்பிடுவர். அவ்வாறே யுரேனியத்தைப் பிளக்கும் போது ஏற்படும் கழிவுகள் கதிர் வீச்சுக்களை ஏற்படுத்த வல்லன. அணு உலைக்கான மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் யுரேனியத்தைக் கொண்டு வருவதற்கும், அணுவாகப் பிளவுபடுத்தப்பட்ட பின் கொண்டு கழிவுகளை நிலத்தின் ஊடாகவோ, நீரின் மூலமோ கொண்டு செல்லும் போது அதிலிருந்து வெளியேறும் கதிர் வீச்சுக்கள் மனிதனுக்குப் புற்றுநோய், சுவாசநோய், தோல் புற்றுநோய், உடல் ஊனம் மட்டுமல்லாது பரம்பரைக்கே பல நோய்களை உண்டு பண்ணும்.

அணுக்கழிவுகள் கூட கதிரியக்க சக்தி வாய்ந்தவை மிக மிக ஆபத்தானவை. கதிரியத்கம் துணிக்கைகள் காற்றில் கலந்து மண்ணில் பதிகின்றன. அதில் வளரும் புல்லை தின்னும் மாட்டின் பாலினூடாகக் கூட அக் கதிர்கள் எம்மை வந்தடையும் என்றால் பாருங்களேன் நடைமுறையில் கூட அணுக்கழிவுகள் பெரும்பாலும் நீரில் கொட்டப்படுகின்றன. அவை ஆறுகளின் மூலம் கடலில் கலக்கின்றன. அப்படியாயின் கடலில் உள்ள உயிர்ப் பல்வகைமை என்னாவது? மீன்களும் கதிர் வீச்சுத் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. அணுக் கழிவில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சினால் தைரொய்ட்டு போன்ற நோய்களும் உருவாகின்றன.

இவற்றினால் கடலில் மீன்களைப் பிடிக்க முடியாது. அவற்றை நிலத்திற்கு கொண்டு வருவதால் மீன்கள் மூலம் கதிர்வீச்சு மனிதர்களுக்கும் காவப்படுகின்றது. கூடவே அணு உலைகளை குளிர்விக்க பெரும்பாலும் அணு உலைகள் பயன்படுத்தப்படுகின் றன. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட கடல் நீர் பின் மீண்டும் எங்கே கலப்பது?

அணு உலை வெடிப்பதற்கான சந்தர்ப்பங்கள்

அணு உலைகளானவை பல சந்தர்ப்பங்களில் ஆபத்தை ஏற்படுத்தி விடக் கூடி யவை.

- ☞ சூறாவளி, புயற்காற்று
- ☞ விமான விபத்து (20 தொன் பாரவிமானம் மோதினால்)
- ☞ வெள்ளம் மற்றும் சுனாமிப் பேரலை
- ☞ எரிமலை வெடிப்பு (நில அதிர்வு 6–8 ரிச்டருக்கு அதிகமானால்)
- ☞ அதிர்ச்சி அலைத் தாக்கம் (30Kpa அதிகமானால்)

அணுஉலைகள் தொடர்பில் பாதுகாப்புக் காரணங்கள் முன்னால் எதையும் பாதுகாக்க முடியாது. பூகம்பம், வெள்ளம், சுழல்காற்று, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உலகில் எவ்வித எத்தரவாதமும் இல்லை.

அணு உலைகள் கடந்து வந்த பாதை

அணுக்கதிர்வீச்சின் ஆபத்தை உலக நாடுகள் உணரத் தலைப்படல் வேண்டும். அவற்றின் ஆற்றல் கொள்கைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும். உருட்டி உருண்டையாக்கி அணுகுண்டாகப் போட்டால் தான் அழிவு என்றில்லை. அணுவின் கழிவு கூட மனித குலத்தையே அழித்துவிடும் ஆற்றல் மிக்கது. இப்போது உலகெங்கிலும் இயங்கி வரும் அணு சக்தி மின் நிலையங்களும் அணு ஆயுதத் தயாரிப்பு நிலையங்களும் பாதுகாப்பானவை அவற்றிலிருந்து எவ்வித அபாயமும் வராது என்றும் சொல்வதற்கில்லை.

கதிர்வீச்சிற்கு உதாரணமாக ரஷ்யாவிலுள்ள அணு உலை கசிவினால் குழந்தைகள் முதல் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலிவாங்கப்பட்டதுடன் இலட்சக்கணக்கான மனிதர்களுக்கு கதிர்வீச்சு நோய்களும் ஏற்பட்டன. என்ன வகையான நோய், ஏன் இத்தகைய நோய் வந்தது என்று முடியாத படி இன்றும் வழக்கு நடந்த வண்ணமே இருக்கின்றது.

அமெரிக்காவில் கூட ஏற்பட்ட முதல் அணு விபத்து 1961 ஆம் ஆண்டில் பதிவாகியது. அது இடாவேறா நீர்வீழ்ச்சிக்கருகில் உள்ள ஓர் அணு மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அணு உலை வெடித்ததில் 3 தொழிலாளர்கள் ஸ்தலத்திலேயே மாண்டார்கள். இறந்தவர்களின் உடல்கள் கடுமையான கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டதால் 20 நாட்கள் வரை சடலங்களை நெருங்க முடியவில்லையாம். பின்னர் சடலங்கள் ஈயக்கல்லறைப் பெட்டிகளில் போட்டுப் புதைத்து அந்தக் கல்லறைகளையும் ஈயத்தால் பூசினார்களாம். அடுத்து 1966 இல் என்ரிகோ பெர்மி பகுதியில் உள்ள வேக அணு விபத்து மற்றும் 1975 ஆம் ஆண்டு ப்ரௌன்ஸ் பெர்ரி அலபாமா பகுதியில் ஏற்பட்ட அணு உலை விபத்து, அடுத்து உலகளவில் இன்னும் பிரசித்தமான 1976 ஆம் ஆண்டு அமெரிக்க பென்சில்வேனியா மாநிலத்தின் மூன்று மைல் தீவு என்னுமிடத்தில் ஏற்பட்ட விபத்து. ஒரு பம்பி சரியாக வேலை செய்யாத தால் அணு உலையே உருகும் நிலை ஏற்பட்டது. இதனால் அபாயகரமான கதிரியக்கமும் ஏற்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க, இங்கிலாந்து உட்பட்ட அணுசக்தி நிலையங்கள் இயங்கும் கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலுமே ஏதாவது விபத்துக்கள் ஏற்படா விட்டாலும் பணியாளர்களும் அணு உலை களின் அக்கம் பக்கம் வசிக்கும் மக்களுக்கு அபாயகரமான கதிர்வீச்சிற்குள்ளாகிப் புற்று நோய்க்கு இரையாகி உள்ளனர்.

அணுக்கசிவினால் ஏற்படும் ஆபத்திற்கு அண்மைய உதாரணமாக ஜப்பானை எடுத்துக் கொள்ளலாம். கடந்த 2011ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட கடற்கோளின் தாக்கத்தைக் காட்டிலும் அங்குள்ள புகுஷிமா டாய்ச்சி போன்ற அணு உலை வெடிப்பின் நேரடித் தாக்கமும் நீண்ட காலத்தாக்கமும் மனிதனின் உளத்திடத்தையும் புரட்டிப் போட்டு விட்டது எனலாம். கடல்நீர் உட்புகுந்து நீரில் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்பட்டு, அது கடல் மற்றும் மனிதர்கள் வாழும் பிரதேசம், ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் என்று அனைத்திலுமே கசிந்து விட்டது. தொழில் நுட்ப நாடான ஜப்பானிலேயே இப்படியான ஓர் ஆபத்து ஏற்பட்ட பின்னரும் கூட அணு உலைகள் பாதுகாப்பானவை என்னும் பல்லவியைப் பாடிக் கொண்டிருப்பவர்களை என்ன சொல்வது,?

எது எவ்வாறாயினும் சர்வதேச ரீதியில் இன்று அணுத் தொழில் நுட்ப விரிவாக்கங்களுக்கு எதிரான அமைப்புக்களும் மாநாடுகளும், ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சூழலில் அவை வெறும் காகிதங்களாகவோ அன்றி ஊமை கண்ட கனவுகளாகவோ ஆகி விடாது காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபடுதல் இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.

இந்தப் பூமிப்பந்தில் கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழ்ந்து மறைந்துள்ளன. இன்னும் வாழ்ந்து வருகின்றன. டைனோஸர் இனங்கள் கூட 14கோடி ஆண்டுகள் இப் பூமியில் ஆதிக்கம் செலுத்தியதனால் நாகரிகங்களைத் தோற்றுவிக்கவில்லை. புத்தகங்களை எழுதவில்லை. கணனிகளை உருவாக்கவில்லை. தொலைக்காட்சி பார்க்கவில்லை தொலை பேசிகளில் உரையாடவில்லை அவற்றிடையே அறிஞர்களும் விஞ்ஞானிகளும் தோன்றவில்லை.

இப்படிப்பட்ட எல்லாம் பல்வேறு திறமைகளைக் கொண்ட பகுத்தறிவுடன் படைக்கப்பட்ட மனிதன் இப்பூமியில் ஒரு நாகரிகத்தை தோற்றுவித்துச் சில ஆண்டுகளே ஆதிக்கம் செலுத்தி விட்டு தன் இயற்கை விரோதச் செயற்பாடுகள் காரணமாகத் தன்னையும் அழித்துக் கொண்டு எல்லா உயிரினங்களையும் ஒட்டு மொத்தமாகத் துடைத்தழித்துவிடப் போகின்றானா? அல்லது சூடாகி வரும் அன்னை பூமியைக் குளிர வைத்துக் குணப்படுத்த ஒரு குடையின் கீழ் அணிதிரளப் போகின்றானா?

மனிதா இயற்கையை அழிக்கும் அணுவை நீ விட்டு விடு.
மனிதா!! இயற்கையை நீ நேசிக்கும் மட்டும்
இயற்கை உன்னை நேசிக்கும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு

மரபு - நவீனம் - மரபு

இனிய. அன்புவழியூர் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை

மானிட சமுதாயத்தின் தோற்றத்திற்கு அப்பாலான காலப்பகுதியில் இருந்து அது ஒரு பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட ஒரு நிறுவனமாகும். மனிதன் விட்ட பிழைகளில் இருந்து என்று தன்னை திருத்திக் கொள்ளத் தொடங்கினானோ (அல்லது) என்று தான் செய்வது பிழை என்பதை உணர்ந்தானோ அன்று முதல் நாகரீகத்தின் தோற்றமும், மானுட சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியும் இடம்பெற்றதென்பது பிரபஞ்ச நியதி ... ஆனால் மானுட விருத்தியின் போது சாதகமான விடயங்கள் இருப்பது போல பாதகமான விடயங்கள் இருப்பது யதார்த்தமே. ஆனால் அந்த பரிணாமத்தின் போது சாதகமான விடயங்களை விட என்று பாதகமான விடயங்கள் தலை தூக்குகின்றதோ அக்கட்டத்தில் அச்சமூகத்தின் எழுச்சி என்பது கேள்விக்குறியே? இது எமக்கு வரலாறு உணர்த்திய பாடம்.

மனித சமுதாயத்தின் வாழ்வியல் கட்டத்தினை நோக்கும் போது அது இரண்டு கட்டங்களை அடியாகக் கொண்டு காணப்படுகிறது.

1. மரபு சார்ந்த வாழ்வியல்
2. நவீனம் சார் வாழ்வியல்

மானுட சமுதாயம் பற்றி பேசும் இவ்விடயத்தை கூறுவது சாலச் சிறந்ததாக இருக்குமென கருதுகிறேன் எமது தேசத்தையும் புனிதம் நிறைந்த பாரதத்தையும் ஆட்சி செய்த வெள்ளையர்கள் பாரதத்திற்கு சுதந்திரம் வழங்கும் போது மகாத்மா காந்தியை பார்த்து பின்வருமாறு கேட்டார்கள்.

“நாம் உமது நாட்டில் உள்ள அனைத்து வளங்களையும் சுரண்டி கொண்டு போய்விட்டோம் பின்னர் ஏன் ஐயா சுதந்திரம் கேட்கிறீர் ...?” என்ற கேள்வியை கேட்டார்கள் அதற்கு பதிலளித்த மகாத்மா காந்தி “நீங்கள் எமது நாட்டில் உள்ள அனைத்தையும் கொண்டு செல்லலாம் ஆனால் இன்னும் ஒரு சக்தி இங்கு இருக்கிது விழும் மனிதனை தாங்கிப் பிடிக்கும் மனிதாபிமானச்சக்தி இங்கு உறைந்து இருக்கிறது எனக் குறிப்பிட்டார். இப்பதில் நம் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைக்கிறது. மனிதம் தொலைந்து போன யுகத்தில் வாழும் நாம் ஒவ்வொருவரையும் இக்கேள்வி உலுப்பி எடுக்கும் என்பதில் என்னவும் சந்தேகமுமில்லை. மனிதனது கூட்டாகிய சமூகத்தின் நோக்கப்படும் சமூகவியல் பார்வையானது இன்று அதிகரிக்கும் நிலையில் தனி மனிதனதும், ஒட்டுமொத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களின் வாழ்வும் சீரியதாக இருக்கிறதா என்றால் அது ஒரு பெரிய கேள்விக் குறியையே எம்முள் உருவாக்கி விடுகின்றது.

இயற்கை ஒரு பெரிய பேராசிரியன் போன்றது, அது கம்புமில்லாமல், கரும்பலகையு மில்லாமல் எமக்கு அனுதினமும் அரும் பெரும் பாடங்களை சத்தமில்லாமல் போதிக்கிறது. இயற்கை தந்த நிறைவான வாழ்வை தொலைத்த இன்றைய மனிதன் நகரமயமாதல் நவீன மய மாதல் என்ற போலிக்கலாசார வாழ்விற்குள் சிக்கி தனது வாழ்வைத் தொலைத்து விட்டு மீதமிருக்கும் எஞ்சிய வாழ்வையும் தொலைத்து விட ஒரு அற்பமான வாழ்வுதனை வாழ்ந்து வருகிறான்.

பணம், கௌரவம் என்பவற்றுக்காக மனிதன், மனிதனையே விழுங்கித் திண்ணக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு அடக்கியாளும் தன்மையுள்ள சூழலில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மகத்தான குருஷேஸ்திரத் தினை தயார் செய்து அதனில் வென்ற துரியோத னன் போலவும், தனது உடன்பிறந்த இனத்தை தாரை வார்த்த சுயநல கர்ணன்கள் போலவும், தோற்றுப்போன பாண்டவர் போலவும் நிகழும் வாழ்வியலின் முக்கிய வரலாற்றுக் கட்டமொன் றில் இப்பத்தியெழுத கடமைப்பட்டுள்ளேன்.

இலக்கிய உலகைப் பொறுத்தவரையில் காலத்திற்கு ஏற்பவே இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. இது பகைவரை புறமுதுகில் துண் டாடும் மற்றும் பெற்ற பிள்ளையே பெற்றோரை கொல்லும் விநோத கலியின் நர்த்தனத்தின் காலமாகையால் ஒட்டுமொத்த உலகிலும் தோற்றம் பெறும் சினிமாவாக இருக்கட்டும், சிறு கதையாக இருக்கட்டும் இதுவே காலத்தின் நியதி. போலிக் கௌரவங்களுக்கும், மேற்கத் தேயத்திலிருந்து இறக்குமதி நுகர்வுகளான கலாசார சீரழிவு கொலை, ஏமாற்று, பலாத் காரம், வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற இறக்கு மதி கலாச்சாரங்களினுள்ளே சிக்கித் தவிக்கும் நாம் அதிலிருந்து விடுபட முடியாமல் ஏங்குகி றோம். இதயங்கள் பேசும் ஒரு ஆத்மார்த்த உறவு நிலைப்பட்ட குடும்ப உறவும், மனித உறவு களும் விரிசலடைந்து வருவதை எம்மால் அவ தானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதயங்கள் பேசும் ஒரு ஆத்மார்த்த உறவு நிலைப்பட்ட குடும்ப உறவும், மனங்கள் ஒன்றித்து பேசும் காதல் கூட இன்று வியாபாரமயப்பட்ட பண்டமாக கூட மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது. பெற்றோரை பிள்ளை கொலை செய்வதம், பாட்டான் பேத்தியை தனது உணர்வு யாகத்திற்கு ஆகுதி யாக்கிய சம்பவங்களும் நடந்தேறும் எம் கால கட்டத்திலே, நாமும் அறிந்தும் அறியாமலும் இந்த குறுகிய மன உணர்வுக்குள்ளேயே சிக்கித் தலைப்பட்டு வாழ்கிறோம் என்பதே உண்மை.

காலங்களின் மாற்றங்களினால் மனிதர் களது வாழ்வியலிலும் பல்வேறு மாற்றங்கள் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் இன்று மக்களின் மனங்களும் குறுகி அகமும் இருளடைந்து விட்டதாலோ என்னவோ மக்க ளும் அளவில் குறுகிப் போய்விட்டார்கள், அவர் களது செயற்பாடுகளும் மிகவும் குறுகியதாய் மாறிவிட்டது. அதேவேளை இன்றைய மனிதர்க ளில் நாற்பது வினாடிக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். நாள் ஒன்றுக்கு மூவாயி ரம் பேர் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள் கின்றனர். ஆண்டுக்கு பத்து லட்சம் என்றவாறாக மக்கள் அழிகிறார்கள். இவ்வாறு தற்கொலை செய்து கொள்வோரில் 15 வயது முதல் 29 வய திற்குட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் தற் கொலையை மேற்கொள்கின்றனர். காலத்தின் மாற்றமே இதற்கு அடியான நாதமாகும். தமிழ னின் மற்றும் உலக வாய்வியலின் புராதன வாழ்வு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அன்று இன்றைய நாட்களைப் போல் சனநெருக் கடி இல்லை, வாகன நெருக்கடி இல்லை, சிக்கன் குனியா, எபோலாவைரஸ் என்பன இல்லை.

முற்கால மக்களுக்கு கிராமியத்தோடு இணைந்த புராதன நல்வாழ்வு வாய்த்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணசபை கேட்பது போன்ற தம்மைத் தாமே ஆளும் உட்கட்டமைப்புள்ள சமுதாயம் இருந்து உடல் உழைப்பு மேலோங்கி இருந்தது. வளப்பயன்பாட்டிலும் மனிதர்களை பொறுத்த வரையில் வளப்பயன்பாடு சிறப்பானதாக இருந்தது. இயந்திர சாதனங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் இன்மையில் மனிதனும் இயற்கையை மதித்தான், இயற்கையும் மனிதனை மதித்தது, இரண்டுக்குமிடையேயான உறவுச் சமனிலை சிறப்பில் இருந்தது.

காலமாற்றத்தின் நுகர்ச்சியிலும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. மனிதனின் உடல்வலுவிற்கான வேலை குறைந்து மூளை வலுவிற்கான வேலை அதிகரித்ததன் காரணமாக தன்னை ஏற்றிப்பிழைக்கும் இயற்கையையே மனிதன் மாற்றத் தொடங்கினான் பிரபஞ்ச விதிகள் / நியதிகளிற்கு ஏற்ப அல்லாது முரண்பட்ட ரீதியில் இயற்கை மாற்றி அமைக்கப்படும் பொழுது மனிதனுக்கும், பிரபஞ்சத்திற்கும் இடையேயான முரண்பாடு வலுப்பெறத் தொடங்கியது.

பிரபஞ்சமானது மிகவும் சாதுர்யமானது தானும், மனிதனும் ஆடும் சூதில் தனது சொக்கட்டான் வீழ்த்திவென்று தனிக்காட்டு ராஜாவாக நின்று விடும். காலப்போக்கில் புதியது தேடும் மோகத்திற்கு உட்பட்ட மக்கள் புதியது வந்த நகரம் தேடி ஓட முற்பட்டார்கள், மக்களின் தொகையும் பல்கிப் பெருகியது. ஆளரவமின்றி இருந்த இடங்கள் அடுக்குமாடி கட்டடங்களின் இருப்பிடமாய் மாறியது. பிரபஞ்சப் படைப்பில் உருவான மனித உடல் ஒரு விலங்கைப் போன்றதே ஆடி ஓடித்திரிய வேண்டிய மனிதன் அறைகளுக்குள் சிலையானான், உண்ட உணவின் கலோரி எரிக்கப்படாததால் மனிதனை நோய்களும், அழுத்தங்களும் தேடி ஓடிவந்தன. பொதுவுடமை உடைந்த சுயவுடமை நோயும் மனிதனை பற்றத் தொடங்கின. மனுக்குலம் தனது வீழ்ச்சிப்பாதையின் இறுதிப் பகுதியில் இருக்கின்ற வேளையில், தற்பொழுதாவது விழித்துக் கொள்ள வேண்டும். மரபுப் பேணி வந்த சமுதாயம் நவீன சமுதாயமாக மாற்றம் பெற்று பல இடர்களை எதிர்கொண்டு பல உயிர்களை தற்கொலை மூலமாகவும், இயற்கை அனர்த்தங்கள் வாயிலாகவும், நோய்கள் மூலமாகவும் காவு கொடுத்துள் ளோம். கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் காசு கொடுத்துக் கொண்டிருப்போம் இதுவே நவீன சமுதாயத்தின் எழுதப்படாத விதி.

அண்மையில் இடம்பெற்ற கொஸ்லந்தை மண்சரிவு அழிவு, அழிப்பேரலை, எம்மால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் என்பன எமக்கு தகுந்த பாடங்களை உணர்த்தியிருக் கின்றன. அந்த படிப்பினைகளை உணர்ந்து இன்னும் அழிவுகளை நேரிடவிடாது தப்பிப் பிழைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் மனுக்குலத்தின் இருப்பு என்பது கேள்விக்குறியே ... மரபுடைமைச் சமூகம் நவீன சமூகமாய் மாற்றம் பெற்று பல தாக்கங்களை எதிர் கொண்டுள்ளதால் மறுபடியும் அணுவாயுதத்தின் அழிவில் விழாமல் புதிய மரபுத் தன்மையான வாழ்வியலுக்கு அகரீதியாகவும் புறரீதியாகவும் திரும்புவதே காலத்தின் தேவை, மேற்குலகின் மரபியல் ரீதியான திருப்பத்தினை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் அத்திருப்பத்திற்கு உட்படுவோமாக ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்

முத்தான தமிழ் நூல்கள் முப்பத்தாறு

இனிய. கே.சந்தானராமன்
தமிழ்நாடு

தமிழ் செம்மொழியாக உலகளாவிய அங்கீகாரம் பெற்றுள்ளது. தரமான, தொன்மை யான இலக்கியங்களைப் பெற்றிருப்பது செம் மொழிக்கான இலக்கணங்களில் ஒன்று. தொல் காப்பியம் என்ற இலக்கண நூலின் பெயரிலிரு ந்தே தமிழின் தொன்மையினை உணரலாம்.

தொல்காப்பியர் தமக்கு முன்னால் இருந்த புலவர்களின் நூல்களிலிருந்து மேற் கோள்கள் காட்டியுள்ளார். செவ்விய இலக்கியங் கள் தோன்றிய பிறகே இலக்கணம் தோன்றும். அவ்வகையில் தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் அல்லது சில ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே தமிழில் சிறந்த இலக்கியங்கள் என்பதை அறியலாகும்.

உ.வே.சா வின் உந்து சக்தி

உ.வே சாமிநாத ஐயரின் காலம்வரை பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது. சேலம் இராமசாமி முதலி யார் என்பவர் குடந்தையிலே முன்சீப் பதவியில் இருந்தார். உ.வே.சா அவரைச் சந்திக்கச் சென் றார். அக்காலத்தில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலான பெரும் புலவர்கள் தங்கள் மாணவர்களுக்குப் பெரும்பாலும் கம்ப ராமாயணம், பெரியபுராணம், கந்த புராணம், திவ்யபிரபந்தம், தலவரலாறுகள் போன்ற சமய நூல்களையே பாடம் சொல்லி வந்தார்கள்.

அவற்றைப் பாடம் கேட்டிருந்த நிலை யில் உ.வே.சா அவர்கள் சேலம் இராமசாமி முதலியாரைக் காணச் சென்றார். உ.வே.சா தான் கற்ற நூல்களின் பட்டியலை திரு முதலியார் அவர்களிடம் கூறினார். “நீங்கள் ஏன் பழந்தமிழ் நூல்களைக் கற்கவில்லை” என்று இராமசாமி முதலியார் வினாவினர். “அந்த நூல்கள் எனக் குக் கிடைக்கவில்லை” என்று உ.வே.சா அவர்கள் கூறினார்கள். “கிடைத்தால் படிப்பீர்களா” என்று மீண்டும் வினாவ “நிச்சயம் படிப்பேன் என்று உ.வே.சா பதிலளித்தார். உடனே இளைஞர் உ.வே.சாவிடம் முதலியார் அவர்கள் சீவக சிந்தாமணி சுவடியைக் கொடுத்தார். அன்று முதல் அவரின் பழந்தமிழ் இலக்கியத்தேடல் தொடங்கியது.

தமது அயராத உழைப்பினால் ஐயரவர் பழந்தமிழ் நூல்களைத் தேடிப்பித்து உரை யெழுதி பதிப்பித்தும் கொடுத்தார்கள். அவரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வை.மு.கோபாலகிருஷ்ண மாச்சாரி யார், ஔவை துரைச்சாமி பிள்ளை முதல் புலியூர் கேசிகன் வரை பலரும் பழந்தமிழ் நூல்களுக்கு உரையெழுதி தமிழ் உலகத்திற்குப் பேருதவி செய்து சென்றுள்ளார். பெரும்பாலும் கல்லூரி மாணவர்களுக்கே "தமிழிலக்கிய வரலாறு" என்ற தலைப்பில் பழந்தமிழ் நூல்கள் குறித்த தகவல்கள் கற்பிக்கப்படுகின்றன. இக்கட்டுரை யின் வழியே அனைத்து வாசகர்களுக்கும் பழந்தமிழ் நூல்கள் குறித்த சில தகவல்களை வழங்க முற்படுகின்றேன்.

கடைச்சங்க நூல்கள்

கடைச்சங்க நூல்களில் பதினெட்டு நூல் கள் எங்களுக்கு கிடைத்துள்ளன. அவற்றை எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் வகைப்படுத்தி உள்ளனர். கணக்கு என்றால் நூல் என்று பொருள். குறைந்த அடிகளைக் கொண்ட செய்யுளால் இயற்றப்பட்ட நூல்களைக் கீழ்க் கணக்கு நூல்கள் என்பர். ஐவகைப் பாக்களால் ஐம்பதுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட நூல்களை மேற்கணக்கு நூல்கள் என்பர். எனினும் ஐந்தடிக்கு மேல் பெற்றுள்ள நூல்களை யும் மேற்கணக்கில் சேர்த்துள்ளனர். உரைநடை யில் (வசனத்தில்) 'வரி' என்பதை செய்யுளில் 'அடி' என்பர். எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மேற்கணக்கு நூல்களே.

வெவ்வேறு புலவர்களால் வெவ்வேறு காலங்களில் இயற்றப்பெற்ற பாடல்களின் தொகுப்பை 'தொகை' கூறுவர். கீழக்கண்ட பாடலின் வழியே எட்டுதொகை நூல்களை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளலாம்.

"நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங் குறுநூறு, ஒத்த பதிற்றுப்பத்து, ஓற்கு பரிபாடல், கற்றறிந்தார் ஏத்து கலியோடு, அகம், புறம் என்று இத்திறத்த எட்டுத்தொகை"

நற்றிணை

இது 400 அகவற்பாக்களைக் கொண் டது. 175 புலவர்களின் பாடல்களை உள்ளடக்கி யது. பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற மன்னனால் தொகுப்பிக்கப்பட்டது. தொகுத்தவர் பெயர் தெரிந்திலது. எவர் மனதை யும் புண்படுத்தாத, அடுத்தவர் துன்பத்தைக் கண்டு வருந்தும் உள்ளமே உண்மையான செல்வம் என்று நற்றிணை உரைக்கின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனார் நற்றிணைக்கு, திருமலைக் குறித்த வாழ்த்துப்பாடலை இயற்றி யுள்ளார். சங்ககாலத் தமிழர்களுக்கு, திருமால் முதலான தெய்வங்களின் மீது நம்பிக்கை இருந்தது என்பதனை இதன்மூலம் அறியலாம்.

குறுந்தொகை

205 புலவர்களால் பாடப்பட்ட 4 தொடக்கம் 5 வரையான அடிகளைக் கொண்ட 400 சிறிய பாடல்களின் தொகுப்பே குறுந் தொகை. தொகுப்பித்தவர் பூரிக்கோ, தொகுத் தவர் உப்பூரி குடிக்கிழார், தொகுத்தவர் உப்பூரி குடிக்கிழார் என்பர். "தாமரை புரையும் காமர் சேவடி..." என்று தொடங்கும் முருகன் குறித்த கடவுள் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் தான். தருமிக்காக சிவபெருமான் எழுதிக்கொடுத்த "கொங்குதேர் வாழ்க்கை....." என்று பாடல் குறுந் தொகையில் தான் உள்ளது.

ஐங்குநூறு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளைக் குறித்த 500 பாடல்களைக் கொண்டது. திணைக்கு நூறு பாடல்கள் வீதம் அமைந்துள்ளன. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்பவர் இதனைத் தொகுத்தவர். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. பாரதம் பாடிய பெருந்தேவனாரே இந்த நூலுக்கும் சிவபெரு மான் குறித்த கடவுள் வாழ்த்துப்பாடலை இயற்றி உள்ளார். கபிலர் முதலான ஐந்து புலவர்கள் ஆளுக்கு நூறு பாடல்கள் எழுதியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிற்றுப்பத்து

சேர அரசர்கள் பதின்மரைப்பற்றிப் பத்துப் புலவர்கள் பாடியது. ஒவ்வொருவரையும் பற்றிப் பத்துப்பத்தாகப் பாடியதால் இப்பெயர் பெற்றது. இந்த நூலின் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைத்திலது. இரண்டாவது பத்தில் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார். மூன்றாவது பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனை, பாலைக் கௌதமனாரும், நான்காவது பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலை, காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம் பத்தில் கடல் பிறக்கோட்டிய செங் குட்டுவனைப் பரணரும், ஆறாம் பத்தில் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் படினியார் நற்செள்ளையாரும், ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில் பெருஞ் சேரல் இரும் பொன்றையை அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தில் குடக்கோ இளஞ் சேரலிரும் பொறையைப் பெருங் குன்றூர்க் கிழாரும் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்து ஒரு புறப்பொருள் நூல் அகவற்பாவால் இயற்றப்பட்ட இந்நூலில் ஆங் காங்கே அந்தாதித் தொடை எடுத்தாளப்பட்டுள் ளது.

பரிபாடல்

பரிந்து செல்லும் ஓசை நயத்துடன் அமைந்ததால், இப்பெயர் பெற்றது என்று கூறுவர். 70 பாக்களின் தொகுப்பாக அமைந்த இந்நூலின் 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள் ளன. மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருங் சோலை ஆகியவற்றின் சிறப்பையும் அக்கால விழாக்களைப் பற்றியும் பரிபாடல் உரைக்கிறது. 13 புலவர்கள் பாடியுள்ள பாடல்களுக்குப் பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பரிபாடலுக்கு பரிமேலழகர் உரை செய்திருக்கிறார்.

கலித்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகியவை அகவற் பாவால் அமைந்திருக்க இந் நூல் கலிப்பாவால் அமைந்துள்ளது. கலித் தொகையிலுள்ள 150 பாடல்கள் முழுவதுமாகக் கிடைத்துள்ளன. பெருங் கடுங்கோன், பாலைக் கலி 35 பாடல்களையும், கபிலர், குறிஞ்சிக்கலி 29 பாடல்களையும், மருதன் இள நாகனார், மருதக்கலி 35 பாடல்களையும், அருஞ்சோழன் நல்லுத்திரன், முல்லைக்கலி 17 பாடல்களையும் நல்லந்துவனார், நெய்தல்கலி 33 பாடல்களை யும் பாடியுள்ளனர். இராவணன் கயிலையைப் பெயர்த்தது போன்ற இதிகாசக் கதைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

அகநானூறு

அகத்துறைப் பாடல்கள் நாநூறு உடையது. தொகுப்பித்தவர் உக்கிரப்பெருவழுதி. தொகுத்தவர் உப்பூரி குடிக்கிழார் மகனார் உருத்திர சன்மனார். இந்நூலின் களிற்று யானை நிரை என்ற பகுதியில் 120 பாடல்களும், மணியிடை பவளம் என்ற பகுதியில் 180 பாடல் களும், நித்திலக் கோவை என்ற பகுதியில் 100 பாடல்களும் உள்ளன. அகநாறு பாடல் ஒன்றில் இராமபிரான் ஆலமரத்தடியில் அமர்ந்திருந்து மறைகளை ஆராய்ந்து செய்தி இடம்பெற்றுள் ளது. பழந்தமிழர் திருமணமுறை பற்றிய செய்தி களும் இடம்பெற்றுள்ளது.

புறநானூறு

இது மக்கள் மத்தியில் பிரபலமடைந் துள்ள நூல். ஆசிரியப் பாக்களால் ஆனது. தமிழகத்திக் கலை, அரசியல், பொருளியல், வாழ்வியல் அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற உயர்ந்த கோட்பாடு இந்த நூலிலுள்ள கணியன் பூங்குன்றனார். பாடலில் இடம் பெற்றுள்ளது. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களின் புறநாநூறு மூலமும் உரையும் விரும்பிப் பயிலப் படுகின்றது.

எண்மர் பாடிய பத்து நெடும் பாடல் களை பத்துப்பாட்டு என்றனர். அவை: திருமுரு காற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறு பாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலை படுகடாம்.

பத்துப்பாட்டில் ஐந்து, ஆற்றுப்படை நூல்கள் டாக்டர் மு.வரதராசார் அவர்கள் சுட்டிக் காட்டி நிறுவியுள்ளார்கள். வள்ளல் அல்லது அரசர் ஒருவரிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் புலவர் அல்லது கலைஞர் பிறிதொருவரை அந்த வள்ளல் அல்லது அரசரிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும்.

திருமுருகாற்றுப்படை

இது சற்றே வேறுபட்டு நிற்கிறது. முருகக் கடவுளிடம் ஓர் அடியாரை ஆற்றுப்படுத் தும் வகையில் அமைந்துள்ளது. ஆற்றுப்படுத்து பவரின் பெயரே நூலுக்கு இடப்படும். நக்கீரர் பாடிய ஆற்றுப்படை, ஆற்றுப்படை தலைவனா கிய முருகனின் பெயரால் விளங்குகிறது. இதில் முருகனின் ஆறுபடை வீடுகளையும் நக்கீரர் வர்ணிக்கிறார். பத்துப்பாட்டில் முதற் பாடலாக விளங்கும் திருமுருகாற்றுப்படை, சைவத்திரு முறைகளில் பதினொன்றாம் திருமுறையில் அமைந்துள்ளது. மிகவும் பிரபலமான இந்நூலு க்கு அதிகம் அறிமுகம் தேவையில்லை.

பொருநர் ஆற்றுப்படை

முடத்தமாக் கண்ணியார் என்ற புலவ ரால் இயற்றப்பட்ட பொருநர் ஆற்றுப்படை 248 அடிகளைக் கொண்டது. போர்க்களம் குறித்துப் பாடும் புலவர்களை, பொருநர் என்பர். பொரு நன் ஒருவரை, கரிகாற் சோழனிடம் ஆற்றுப் படுத்துவதாக அமைந்துள்ளது. தமிழரின் விருந் தோம்பும் பண்பு, அக்காலத்தில் நெய்த மெல்லிய ஆடைகள் போன்றவை பற்றிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

சிறுபாணாற்றுப்படை

சிறிய யாழை இசைக்கும் பாணர், மற் றொரு பாணரை ஓய்மா நாட்டு நல்லியங் கோடனிடம் ஆற்றுப்படுத்தும் விதமாக அமைந் துள்ளது. குறைந்த அடிகளைக் கொண்டது என்ற காரணத்தாலும் சிறுபாணாற்றுப்படை என்றனர். மதுரை, வஞ்சி, உறையூர் ஆகிய நகரங்களின் சிறப்பையும், கடையெழு வள்ளல்களின் சிறப் பையும் விளக்கும் இந்த நூலை இயற்றியவர் நல்லூர் நந்தத்தனார்.

பெரும்பாணாற்றுப்படை

இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய 500 அடிகளைக் கொண்டது. பெரிய யாழினை மீட்டும் பாணரை, ஒருவர் தொண்டை மான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்திய செய் தியைக் குறிப்பிடுகின்றது. நெல்லரிசியிலிருந்து மதுபானம் தயாரித்தல், காஞ்சி மாநகரத்தின் சிறப்பு, கலங்கரை விளக்கம் பற்றிய தகவல் களைக் கூறுகின்றது.

கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)

நன்னன் சேய் நன்னனிடம் கூத்தர் ஒரு வரை மற்றொருவர் ஆற்றுப்படுத்தும் வகையில் பெருங்கௌசிகனார் இயற்றிய நூல், மலையை யானைக்கு உவமையாகக் கூறி, அதனின்று பிறக்கும் ஓசையை யானையின் (மதநீர்) என்று வர்ணித்துள்ளதால் இந்த நூலை மலைபடுகடாம் என்றனர். இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

முல்லைப்பாட்டு

காடும் காடுசார்ந்த இடமும் முல்லை எனப்படும். 103 அடிகளைக் கொண்ட முல்லைப் பாட்டு, பத்துப்பாட்டு நூல்களில் சிறியதாகும். நம் பூதனார் என்ற புலவர் இதனை இயற்றியுள்ளார். போர்க்களத்திற்கு சென்ற தலைவன் பிரிவை ஆற்ற இயலாத தலைவியின் கற்பு நிலையை விவரிக்கும் நூல். காட்டுவழிக் காட்சிகள் சிறப் பாக வர்ணிக்கப்பட்டுள்ளன. முல்லைப் பாட் டைத் தேடிக் கண்டுபிடித்த தன் அனுபவங்களை உ.வே.சா அவர்கள் நிலவில் 'மலர்ந்த முல்லை' என கட்டுரையாக எழுதியுள்ளார்.

மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் மிகப்பெரியதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக் காஞ்சி, 781 அடிகளைக் கொண்டது. இதனை இயற்றியவர் மாங்குடி மருதனார். ஒருவர் வீடு பேறு அடையும் பொருட்டு அவருக்கு நிலையாமை பற்றி செய்திகளைக் கூறுவதை 'காஞ்சித் திணை' என்பர். தலையாளங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு மதுரையிலிருந்து செல்வதாக மருதனார் பாடியதால் 'மதுரைக்காஞ்சி' என்றனர். மதுரை, திருப்பரங் குன்றம் போன்ற இடங்களின் சிறப்பும், அங்குள்ள திருக்கோயில்கள், திருவிழாக்கள், அங்காடிகள் ஆகியவற்றின் சிறப்பும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. காலையில் திறக்கும் கடைகளை, 'நாளங்காடி' என்றும், மாலையில் திறக்கும் கடைகளை 'அல்லங்காடி' என்றும் குறிப்பிட்ட செய்தியை இந்நூலில் காணலாம்.

பட்டினப்பாலை

பொருளீட்டுவதற்காக வேற்று நாட்டிற்குச் செல்லும் தலைவன், வழியில் தன் நெஞ்சை விளித்துக் கூறுவது போன்ற அமைப்பில் பாலைத்திணை அமைத்துப்பாடியது. புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் இதனை இயற்றியுள்ளார். சோழன் கரிகாற் பெருவளத் தான் இந்த நூலில் புகழப்பட்டுள்ளான். புகார் நகரத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்து, அதற்கடையாளமாக, புலிச் சின்னத்தைப் பொறித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாட்டு

இது பிரகதத்தான் என்ற வடநாட்டு அரசன் தமிழின் சுவையை அறியும் பொருட்டு, கபிலர் இயற்றியது. 261 அடிகள் உடையது. மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். அந்த நிலத்து மக்களின் அன்றாட வாழ்க்கையைக் கபிலர் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். மாலை வேளையிலே அந்தணர்கள் அந்திக்கடன் (சந்தியாவந்தனம்) இயற்றுதல், ஆயர்கள் குழல் ஊதுதல், கானவர்கள் பரண் மீது ஏறி விலங்குகளைக் கபிலர் வருணித்துள்ளார்.

நெடுநல்வாடை

188 அடிகளைக் கொண்ட நெடுநல் வாடையை இயற்றியவர் நக்கீரர். பாண்டியன் நெடுசெழியனைப் பற்றிய நூல் என்பர். ஆயினும் அவனைப்பற்றிய குறிப்பு எதுவும் இந்த நூலில் இடம்பெறவில்லை. போரிடச் சென்றுள்ள தலைவன் பகைவென்று வருவான் என்று தலைவிக்குத் தோழியர் ஆறுதல் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு வாடைக்காற்று துன்பம் தருகிறது. அதுவே, போர்வீரனுக்கு இதயம் அளிப்பதால், 'நெடுநல்வாடை என்றனர்.

திருக்குறள் முதல் கைந்நிலை ஈறாக வுள்ள பதினெட்டு நூல்களை, பதினெண் கீழ் கணக்கு நூல்கள் என்றும், சங்கம் மருவிய நூல்கள் என்றும் கூறுவர்.

திருக்குறள்

உலகப்பொதுமறை என்றும், தமிழ் மறை என்றும் புகழ்பெற்றுள்ள திருக்குறள் 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது. தெய்வப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளைப் புகழ்ந்து அசரீரி முதல் ஔவையார் வரை, 55 புலவர்கள் பாடியுள்ளனர். அப்பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை. மற்ற நூல்களிலிருந்து வேறுபட்டு, குறட்பா என்ற குறுகிய அடிகளைக் கொண்ட பாக்களால் இயற்றப்பட்ட தனித்தன்மையும் உடையது திருக்குறள். பழங்காலத்திலேயே திருக்குறளுக்குப் பத்துப் பேர் உரை எழுதியுள்ளனர். எவரும் எளிதில் படித்து மகிழத் தக்க வகையில், 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூலிற் வழியே, திருக்குறளைப் பாமர மக்களுக்கும் எடுத்துச் சென்று கொடுத்த பெருமை நூற்றாண்டு நாயகர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களையே சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலடியார்

நான்கு அடிகளைக் கொண்ட நானூறு பாடல்களின் தொகுப்பே நாலடியார். சமணமுனிவர்கள் இயற்றிய பாடல்களைப் பதுமனார். என்பவர் தொகுத்துக் கொடுத்துள்ளார். நாலடியார் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க நீதி நூலாகும். இதுவும் முப்பால்களை விளக்கும் மூன்று பகுதிகளை உடையது.

நான்மணிக்கடிகை

நான்கு மணிகளையுடைய அணிகலனைப்போல ஒவ்வொரு பாடலிலும் நான்கு செய்திகளைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. திருமால் வாழ்த்து உள்ளிட்ட 104 வெண்பாக்களை உடைய இந்த நூலை இயற்றியவர் விளம்பிநாகனார்.

இனியவை நாற்பது

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றிய 'இனியவை நாற்பது' நாற்பது வெண்பாக்களையுடையது. இன்னின்ன பொருள் மற்றும் செயல்கள் இனியவை என்று பட்டியலிட்டுப் பாடுவதால் இப்பெயர் பெற்றது.

இன்னாநாற்பது

துன்பத்திற்கு காரணமாக பொருட்களையும் செயல்களையும் பட்டியலிட்டு, கபிலர் பாடிய நாற்பது வெண்பாக்களை உடையது இன்னா நாற்பது.

களவழி நாற்பது

இது, பொய்கையார் என்ற புலவர் இயற்றியது. கோச்செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போர்க்களத்தில் எதிர்கொண்டு பெற்ற வெற்றியைக் குறிப்பிடும் நூல். களத்தில் நடந்த செய்திகளைக் கூறுவது களவழியாகும். அதில் உழவர் களமும் போர்க்களமும் குறித்த செய்திகள் இடம்பெறும்.

கார் நாற்பது

மதுரைக் கண்ணங் கூத்தனார் இயற்றிய முல்லைத்திணை சார்ந்த நாற்பது பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளிலும் கார் அல்லது மழை பற்றிக் கூறப்பட்டதால் அப்பெயர் பெற்றது. தலைவன், தலைவி, தோழி போன்ற இவர்களின் கூற்றுக்களாக அமைந்த பாடல்களைக் கொண்டது. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளில் இல்லந்தோறும் விளக்கேற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. அதனால் தீபத்திருநாளின் தொன்மை புலனாகிறது.

ஐந்திணை ஐம்பது

ஐந்திணைக்குரிய ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பாடல்களைக் கொண்ட இந்நூலை மாறன் பொறையன் என்பவர் இயற்றியுள்ளார். பிரிவாற்றாமையினால் வருந்தும் தலைவியின் காதில், மாலையில் ஆயன் ஊதும் இனிய குழலோசை வேலாய்ப் பாய்கிறது என்று ஒரு பாடல் கூறுகிறது. மற்றொரு பாடலில் ஆண்மானின் அன்பு சொல்லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. ஆண்மான் நீர்ப்பருகாமல் பெண்மான் நீர்ப்பருகாது போல் காட்டி, பெண்மானைப் பருகச் செய்கிறது என்று அப்பாடல் குறிப்பிடு கின்றது.

ஐந்திணை எழுபது

திணைக்குப் பதினான்கு பாடல்களாக எழுபது பாடல்களைக் கொண்ட இந்நூலை, மூவாதியர் என்ற புலவர் இயற்றியுள்ளார். இந்நூலின் அறுபத்தேழு பாடல்களே கிடைக்கப் பெற்றன.

திணைமொழி ஐம்பது

சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் இயற்றிய இந்த நூலும் ஐந்திணை ஐம்பதைப் போன்றே திணைக்குப் பத்துப் பாடல்களை உடையது.

திணைமாலை நூற்றைம்பது

திணைக்கு முப்பது பாடல்கள் வீதம் ஐந்திணைக்குமாக 150 பாடல்களைக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல். இதனை இயற்றியவர் கணிமேதாவியார். தொல்காப்பியர் கூறும் அகத்திணையியல் முறைகளுக்கு ஏற்ப இயற்றப்பட்ட இலக்கியம் என்பர்.

திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் பிங்கள நிகண்டு 'திரிகடுகம' என்று குறிப்பிடுகிறது. இம்மூன்று மருந்துப் பொருள்களால் ஆகிய கடுகம் (லேகியம்) உடற்பிணியைப் போக்கும். இந்த நூலின் ஒவ்வொரு பாட்டிலும் மூன்று கருத்துக்கள் உள்ளன. அவை மக்களின் உள்ளத்து நோய்களைப் போக்கவல்லவை என்பதனால் திரிகடுகம் என்றனர். புலவர் நல்லாதனார் இந் நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் 101 பாடல் கள் உள்ளன.

சிறுபஞ்சமூலம்

'மூலம்' என்றால் வேர் என்று பொருள். கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய ஐந்தையும் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து உடல் பிணிகளை நீக்கும். இந்த நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளும் குறிப்பிடும் ஐந்து கருத்துகள் மக்களின் உள்ளப் பிணியைப் போக்கும் என்பதால் இதனை 'சிறுபஞ்சமூலம்' என்றனர். பாயிரத்துடன் 100 செய்யுட்களைக் கொண்ட இந்நூலை மாக்காயனர் என்பவரின் மாணவரான காரியாசான் இயற்றியுள்ளார்.

ஏலாதி

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்து தயாரிக்கப்படும் மருந்து உடற்பிணி தீர்க்கும். இவற்றில் ஏலமே முதலிடம் பெறுவதால் 'ஏலாதி' என்றனர். ஆறு கருத்துக்களை உடைய செய்யுள்களால் இயற்றப்பட்டுள்ள இந்நூலும் மக்களின் உள்ளப் பிணியைப் போக்க வல்லது. கணிமேதாவியார் இந்த நூலை இயற்றியுள்ளார். இந்நூலின் நிறைவுப் பகுதியில் இவர் மாக்காயனார் மாணவர் என்று கூறப்பட்டுள்ளது. திணைமாலை நூற்றைம்பதையும் இவர் பாடியுள்ளார். இவரும் காரியாசானும் ஒருசாலை மாணவர்கள் என்பது தெரிகிறது.

ஆசாரக்கோவை

நல்ல பழக்கவழக்கங்களே ஆசாரம் எனப்படும். தூய தமிழில் ஒழுகலாறு என்பர். வண்கயத்தூர் என்ற ஊரைச் சேர்ந்த பெருவாயின் முள்ளியார் என்ற புலவர் ஆசாரக்கோவையை இயற்றியுள்ளார். இந்த நூலில் நூறு வெண்பாக்கள் உள்ளன. ஆரிடம் என்ற வட நூல் ஆசாரக்கோவைக்கு மூலநூல் என்று தற்சிறப்புப் பாயிரம் உரைக்கிறது. உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் போன்ற அன்றாட வாழ்வியலுக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது இந் நூல்.

பழமொழி

இதனைப் 'பழமொழி நானூறு' என்றும் கூறுவர். முன்றுறையரையனார் என்பவர் இயற்றியுள்ள இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது. கரிகாலன் சிறுவனாக இருந்தபொழுது ஒரு வழக்கு அரசவைக்கு வந்தது. சிறுவன், முதியவர் வேடம் பூண்டு சிக்கலான அவ்வழக்கை விசாரித்து யாவரும் வியக்கத்தக்க வகையில் நீதி வழங்கினான். இந்த வரலாற்றுச் செய்தியைக் கூறும் பாடலில், 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' என்ற பழமொழி இடம்பெற்றுள்ளது. இது போன்ற வரலாற்றுச் செய்திகளை பழமொழிகளுக்கு ஆதாரமாகக் காட்டும் ஆசிரியரின் திறமை எண்ணி வியக்கத்தக்கது.

முதுமொழிக் காஞ்சி

காஞ்சி என்பது புறத்திணைகளில் ஒன்றாகும். வீடுபேறு அடைதல் பொருட்டுச் சான்றோர் நிலையாமை குறித்த செய்திகளைக் கூறுவார்கள். அதுவே 'காஞ்சி' எனப்படும். ஒவ்வொரு திணையிலும் பல்வேறு துறைகள் உள்ளன. அவற்றுள் 'முதுமொழி' ஒன்று. இந்த நூலில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப்பாடல்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை மதுரை கூடலூர்கிழார் என்பவர் இயற்றி யுள்ளார்.

அ. இன்னிலை

பதினெட்டாவது நூல் 'இந்நிலையா' அல்லது 'கைந்நிலையா' என்ற ஐயம் ஏற்பட் டுள்ளது. ஏனெனில், பதினெட்டு நூல் களைப் பட்டியலிடும் பாடல் "இன்னிலைய காஞ்சியொடு ஏல என்பவே கைநிலையவா கீழ்க்கணக்கு" என்று குறிப்பிடுகிற இந்நிலை என்ற நூல் வெண் பாக்களை உடையது. வ.உ.அவர்கள் இன்னி லைக்கு விருத்தியு எழுதிப் பதிப்பித்துள்ளார் கள். இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் குறிப்பிடுகின்றது இதனை இயற்றியவர் பொய்கையார்.

ஆ. கைந்நிலை

அன்பின் ஐந்திணை குறித்த பாடல்க ளைக் கொண்டது கைந்நிலை இந்நூலை இயற்றியவர் மாறோக்கத் முள்ளிநாட்டு நல்லூர் காவிதிய ஆவார். இந்நூலில் பல வட சொற்கள் பயின்று வருவதால், இஃது கி.பி.ஐந்தாம் நூற் றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் என்று சதா சிவப்பண்டாரத்தார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் கள். கைந்நிலையை இயற்றியவர் புல்லங் காட னார் என்ற டாக்டர் மது.ச.விமலானந்தம் தனது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப் பிட்டுள்ளார்.

முத்தான முப்பத்தாறு நூல்களையும் கற்று, பழந்தமிழரின் வாழ்க்கை முறை பண்பாடு, உலகளாவிய வணிகத் தொடர்பு போன்ற சிறப்புக்களை அறிவதோடு, பிற்காலத் தில் தோன்றிய பக்தி இலக்கியங்களையும் சுவைத்து மகிழ்தல் வேண்டும்.

நன்றி – மருதமுகிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம்



தேசவழமையின் ஏற்புடைமை
(Applicability of Thesawalamai)

இனியா. செ.செல்வகுணபாலன்
LL.B (Colombo) LL.M (Malta)
Attorney - at - Law
Visting Lecturer
Sri Lanka Law College.

தேசவழமையானது இரு பண்புகளைக் கொண்டது. அதாவது ஆள்சார் சட்டம் என்ற பண்பும் இடம்சார் என்ற பண்பும் கொண்டதாகும். தேசவழமை யாருக்கு ஏற்புடையதாகும் என நோக்குமிடத்து யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகளுக்கு ஏற்புடையதான சட்டம் எனக் கூறப்படமுடியும். யாழ்ப்பாண மாகாணம் என்பது தற்போதுள்ள வடமாகாணம் ஆகும். ஆள்சார் சட்டத்தின் பண்புகளில் ஒன்று அது அவ்வாட்களைப் பின்தொடர்ந்து செல்லக் கூடியதாகும். அதாவது வடமாகாண தமிழர்கள் இலங்கையினுள் அவர்கள் செல்லுமிடம் எல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து தேசவழமைச் சட்டம் அவர்களுக்கு ஏற்புடையதாக வரும். இது தொடர்பில் சட்ட ஏற்பாடு வெளிப்படையாக ஏற்பாடு செய்துள்ளது. ஆயினும் இலங்கைக்கு வெளியே இத்தகைய வழக்காற்றுச் சட்டத்தை எண்பிப்பதன் மூலம் ஏற்புடையதாகக் காட்டமுடியும். உதாரணமாக இலங்கையின் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்படி திருமணம் ஒன்று கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் எனத் தேவைப்பாடு கிடையாது. எனவே வழக்காற்றுத் திருமணங்களை இலங்கைக்கு வெளியே எண்பிக்கத் தேவைப்படுத்தப்படுமிடத்து, தேசவழமையினால் ஆளப்படும் ஆட்களும் அவ்வாறு செய்யமுடியும்.

தேசவழமை ஒழுங்குவிதியின் 6ஆம் ஒழுங்குவிதியானது, தேச வழமை அல்லது ஆளுநர் சைமன்ஸ் என்பவரது கட்டளையால் திரட்டப்பட்டவாறாக யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகளின் வழக்காறுகள் முழுமையா வலுக்கொண்டனவாகக் கருதப்பட வேண்டுமென ஏற்பாடு செய்யும் அதேவேளை 7ஆம் ஒழுங்குவிதியானது, மலபார் நிரந்தரவாசிகளிடையிலான எல்லாப் பிணக்குகளும் சொல்லப்பட்ட வழக்காறுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென ஏற்பாடு செய்கின்றது. எனவே வடமாகாணத்தின் நிரந்தரவாசிகள் இலங்கையின் எப்பாகத்தில் வசித்தாலும் தேசவழமையினால் ஆளப்படுவார்கள்.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டம் 1947ஆம் ஆண்டின் 57ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. இக்கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது திருமணம் மூலமாக பெண்களுக்கு தேசவழமை ஏற்புடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவதையும் ஏற்புடையதாகாது. பெண்களுக்கு தேசவழமை ஏற்புடையதாவதையும் ஏற்புடைய தாகாது வருவதையும் ஏற்பாடு செய்கின்றது. தேசவழமையினால் ஆளப்படும் வடமாகாணத் தைச் சேர்ந்த மலபார் நிரந்தரவாசியான பெண் ஒருவர் வடமாகாணத்திற்கு வெளியேயுள்ள ஆண் ஒருவரைத் திருமணம் செய்வாராயின், திருமணம் வலிதாகவுள்ள காலப்பகுதியில் அப்பெண் தேசவழமையினால் ஆளப்படுவார்.

இக்கட்டளைச் சட்டத்தின் பண்புகளில் ஒன்று எவ்விடப்பரப்பில் அச்சட்டம் ஏற்புடைய தாகும் என்பதில் தங்கியுள்ளது. தேசவழமை வட மாகாணத்தில் அமைந்துள்ள சகல காணிகளுக் கும் ஏற்புடையதான சட்டம் ஆகும். இங்கு யார் அத்தகைய காணிகளின் சொந்தக்காரர் என்பது பொருத்தமற்ற விடயமாகம். உதாரணமாக கண்டியச் சட்டத்தினால் ஆளப்படும் கண்டியச் சிங்களவர் ஒருவர் வடமாகாணத்திலுள்ள காணியொன்றை அவர் வாங்குமிடத்து, அக் காணி தொடர்பில் தேசவழமை ஏற்புடைய தாகும். அதேவேளை அவ்வாள் தொடர்பில் கண்டியச்சட்டமே ஏற்புடையதாகும். அதே வேளை அவ்வாள் தொடர்பில் கண்டியச் சட்டமே ஏற்புடையதாக்கப்படும். எனவே ஆதனத்தின் வழியுரிமையானது கண்டியச் சட்டப்படியே தீர்மானிக்கப்படும். மாறாக அத்தகைய காணி தேசவழமை முன்வாங்குரிமைக் கட்டளைச் சட்டத்தின் வரம்பெல்லையுள் வருமாயின், அக் காணி தொடர்பில் தேசவழமை முன்வாங்குரி மைக் கட்டளைச்சட்டமே ஏற்புடையதாக வரும்.

1. வடமாகாணத்தின் மலபார் நிரந்தர வாசிகள்

Malabar Inhabitants of Northern Province

தேசவழமை யாழ்ப்பாண மாகாண மலபார் நிரந்தரவாசிகளுக்கு ஏற்புடையதாகு மென தேசவழமை ஒழுங்குவிதி எடுத்துக் கூறுகின்றது. கிளாஸ் ஐசாக்ஸ் தேசவழமைச் சட்டத்தைக் கோவைப்படுத்தி மலபாருடைய சட் டங்களும் வழக்காறுகளும் என அழைத்த போது அவர் இந்தியாவின் மலபார் என்னுமிடத்தி லிருந்து வந்தவர்கள் அல்லது யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருந்த தமிழர் அனைவருக்குமென தேசவழமையின் ஏற்புடை மையை மட்டுப்படுத்தியிருந்தாரா என்ற கேள்வி எழுகின்றது. சில எழுத்தாளர்களும் போத்துக்கீ சரும் டச்சுக்காரரும் மலபார் என்பது தமிழர்களு க்கு ஒத்த சொல்லாகவே பாவித்து வந்தனர். ஆதி காலத்தில் யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான மக்கள் மலபார் மாவட்டத்திலிருந்து வந்தவர்க ளாவர்.

பேராசிரியர் தம்பையா தனது The Laws and Customs of the Tamils of Jaffna என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். கிளாஸ் ஐசாக்ஸ் என்பவரினால் எழுதப்பட்ட தேசவழ மைக் கோவைக்கான முன்னுரை இது தொடர் பில் முக்கியமானதாகும். தேசவழமையை விபரிக்கையில் கிளாஸ் பின்வருமாறு கூறினார். "இலங்கைத் தீவில் யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் அல்லது தமிழ் நிரந்தரவாசிகளிடை யிலான குடியியல் வழக்குகள் ஆனவை தாபிக் கப்பட்ட வழக்காறுகள் பழக்க வழக்கங்கள் மற்றும் நிறுவனங்களின் விபரணத்திற்கிணங்கத் தீர்மானிக்கப்பட வேண்டும்". இதன் விளைவாக அவர் மலபார் என்பதை தமிழர்களுக்கான ஒத்த சொல்லாக பயன்படுத்தினார். எனவே தேசவழ மைக் கோவை என்பது யாழ்ப்பாண மாகாணத் தில் தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட எல் லாத் தமிழர்களுக்கும் ஏற்புடையதானதாகும்.

யாழ்ப்பாண மக்களில் பெரும்பாலா னோர் மலபாரிலிருந்தும் டச்சுக் காலத்தின் போது, இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரப் பிரதேசங்களிலிருந்தும் வந்தனர். இது தொடர்பில் தீர்க்கப்பட்ட வழக்குகளை எடுத்து நோக்கலாம். செட்டி எதிர் செட்டி (37 பு.ச.அ 253) வழக்கில் மலபார் என்பது தமிழர் என இரண்டு நீதிமன்றங்களிலும் வழக்குரைஞரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தர்மலிங்கம் செட்டி எதிர் அருணாசலம் செட்டி (45 (பு.சு.அ.414) வழக்கில் இவ்விடயம் விசேடமாக கருத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுக்கப்பட்டது. மேன்முறையீட்டாளர் தேச வழமை ஒழுங்குவிதியின் கருத்தெல்லையினுள் "யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தர வாசி" ஆக உள்ளாரா என நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இவ்வழக்கில் மேன்முறையீட்டாளரின் தந்தை 1806 அதாவது தேசவழமை கோவைப்படுத்தப்பட்ட பின்னர் நீண்டகாலத்தின் பின்பு இந்தியாவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். இங்கு தேசவழமை அவருக்கு ஏற்புடையதாகமாட்டாது என வாதிடப்பட்டது. இங்கு வலியுறுத்தப்பட்ட விடயம் யாதெனில் தேச வழமைக்கோவையின் 2ஆம் மற்றும் 3ஆம் பிரிவுகளுக்கிணங்க தேச வழமையானது 1806ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத் தமிழ் நிரந்தர வாசிகளாகவிருந்த ஆட்களுக்கும் அவர்களின் வம்சாவழியினருக்கும் மட்டுமே ஏற்புடையது.

மாறாக தேசவழமை, மலபார் கரயோகரத்திலிருந்து வந்துள்ள மக்களுக்கும் திராவன்கோ மாநிலத்திலிருந்து வந்த மக்களுக்கும் அவர்கள் வடமாகாணத்தில் வசித்துவருபவர்களாயின் ஏற்புடையதாகும் என மேன்முறையீட்டாளரின் வழக்குரைஞர் சமர்ப்பணம் செய்தார்.

இத்தகைய வாதங்களை நிராகரித்த உயர்நீதிமன்றம் யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகள் என்பது, வடமாகாணத்தின் நிரந்தர வாசிகளான இலங்கையின் தமிழர்கள் என பொருள்படுவதாக கூறியது. மீண்டும் தில்லைநாதன் எதிர் இராமசுவாமி செட்டியார் (4 பு.ச.அ 328) வழக்கில் உயர்நீதிமன்றம் யாழ்ப்பாண மாகாணத்தின் தமிழ் நிரந்தரவாசிகளின் பழமையாக வழக்காறுகளின் திரட்டொன்றாக தேசவழமை குறிப்பிடப்பட்டது.

மார்சல் எதிர் சவரி (1 உ.நீ.சு 9) வழக்கில் உயர்நீதிமன்றம் மன்னார் மாவட்டத்தில் வாழ்கின்ற எல்லாத் தமிழர்களும் தேசவழமையினால் ஆளப்படுவார்கள் அத்துடன் வடமாகாணத்தின் ஒரு பாகமாக மன்னார் மாவட்டம் உள்ளது எனக் கூறியது.

ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் (16 பு.ச.அ.321) வழக்கில் தேச வழமையானது ஒரு இனம் அல்லது மதத்தைச் சேர்ந்த அனைத்து ஆட்களுக்கும் பொதுவான வழக்காறுகள் அல்ல என நீதிமன்றம் கூறியது. அதாவது தேசவழமை எல்லாத் தமிழர்களுக்கும் ஏற்புடையதல்ல அத்துடன் குறித்த ஒரு மதத்தைப் பின்பற்றுவோருக்கு உரியதும் அல்ல. அவை உள்ளூர்த்தன்மையிலான வழக்காறுகள் என்பதுடன் குறித்த மாகாணத்தின் நிரந்தரவாசியாகவுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும் என நீதிமன்றம் எடுத்துக்காட்டியது.

செட்டி எதிர் செட்டி 1935, 37 பு.ச.அ. 253) வழக்கில் வன்னியாஸ் எனப்படும் சமூகத்தைச் சேர்ந்தவர் மூன்று சந்ததிகளாகத் தமது வசிப்பிடத்தை யாழ்ப்பாணமாகக் கொண்டிருந்தனர் என்பதுடன் 1806ஆம் ஆண்டில் 18ஆம் இலக்க ஒழுங்குவிதியின் கருத்தெல்லையினுள் யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தர வாசிகளினால் பின்பற்றப்படும் வழக்காறுகளையும் பின்பற்றி வந்தனர். இவ்விழக்கில் இத்தகைய வன்னியாஸ் யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகளாகக் கொள்ள முடியுமா? என ஆராயப்பட்டது. இங்கு வன்னியாஸ் வேறுபட்ட சாதியினர் என்றும் அது வேறான இனம் ஒன்றை உருவாக்கவில்லை என்றும் எதிராளிகள் சார்பில் வாதிடப்பட்டது. நீதிமன்றம் இத்தகைய வன்னியாஸ் செட்டிகள் 1806ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் கருத்தெல்லையினுள் மலபார் நிரந்தரவாசிகள் எனக்கொண்டது. தீர்ப்பில், மேற்சொல்லப்பட்ட ஒழுங்குவிதியில் பயன்படுத்தப்படும் "மலபார்" என்பது "தமிழர்" என்பதன் ஒத்தசொல் எனக் கூறப்பட்டது.

மேலும் சவுந்தரநாயகம் எதிர் சவுந்தர நாயகம் (1913.20 பு.ச.அ.274) வழக்கில் ஆளொருவர் யாழ்ப்பாணத்தில் பிறந்துள்ளார். அவரது தந்தை கொழும்புச் செட்டியாக இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் வசிப்பிடத்தை மாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார். நீதிமன்றம் அவர் தேசவழமையி னால் ஆளப்படமாட்டார் எனத் தீர்ப்பளித்தது.

பொதுவாக கொழும்புச் செட்டிகள் இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்களாவர். அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் வசிப்பிடத்தைத் தெரிவுசெய்து கொண்டனர். அவர்கள் தமிழர்களின் வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மொழியைக் கொண்டிருந் தனர். கொழும்புச் செட்டி யாழ்ப்பாணத்தில் வசிப்பிடத்தை ஏற்படுத்தியிருப்பின் அவர் தேச வழமையினால் ஆளப்படுவாரா என்பது அவர் களின் வசிப்பிடமுறையில் ஏனைய இனங்களு டன் ஒருங்கிணைந்திருப்பின் அவர் தமிழர் எனக்கருதப்பட வேண்டும். யாழ்ப்பாண நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருப்பின் தேசவழமை கொள்கையளவில் அவருக்கு ஏற்புடையதாக்கப் படவேண்டும். இவ்வழக்கில் நீதிமன்றம் சவுந்தர நாயகம் தேசவழமைக்கு உட்பட்டவர் என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டதாகத் தீர்ப்பளித்தது.

2. நிரந்தரவாசி

Permanent Residents

ஆளொருவர் தனக்கு தேசவழமை ஏற்புடையதாவதற்கு தான் யாழ்ப்பாண மாகாணத்தின் நிரந்தரவாசியான தமிழர் ஒருவர் என்பதனை நிரூபித்தல் வேண்டும். ஏனெனில் தேசவழமையானது வடமாகாணத் திற்கு வெளியே தமது வாழிடத்தைக் கொண்டு ள்ள தமிழர்களுக்கு ஏற்புடையதாகமாட்டது. King எதிர் பெருமாள் (1911, 14 பு.ச.அ.496) வழக் கில் இந்தியாவில் பிறந்த தமிழர் இலங்கையின் மத்திய மாகாணத்தில் வாழ்ந்து வந்தார். அவர் சேதவழமையினால் ஆளப்படமாட்டார் எனத் தீர்க்கப்பட்டது.

வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப் பிள்ளை (1910, 13 பு.ச.அ 74) வழக்கில் நீதி மன்றம் "நிரந்தரவாசி" என்பது வடமாகாணத்தில் வாழ்விடம் என்ற தன்மையில் நிரந்தரமான வதிவிடமொன்றைக் குறித்த காலத்தில் கொண் டிருந்தாரா என்ற வழிமுறையில் பொருள் கோடல் செய்யப்படுதல் வேண்டும் எனக் கூறி யது. மேலும் நிரந்தரவாசி என்பது யாழ்ப்பாண மாகாணத்தில் தனது நிரந்தர வீட்டைக் கொண் டுள்ளார் எனவும் கொள்ள முடியும். ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் (16 பு.ச.அ 332) வழக்கில் நீதியரசர் எனிஸ் இது பற்றிக் குறிப்பிடும் போது வாழ்விடம் தொடர்பான வினாக்களில் வாழ்வி டம் தொடர்பில் மாற்றம் நிரூபிக்கப்படும் வரை ஆரம்பத்திலிருந்து வாழ்விடம் தொடர்ந்திருப்ப தாக சட்டத்தில் ஊகம் இருப்பதாகக் கூறினார். ஆயினும் குறித்த வழக்காற்றின் ஏற்புடமை நோக்கத்திற்கு ஒருவரின் நிரந்தர வாழிடம் தொடர்பில் வினா உள்ள போது அங்கு ஊகம் அவரது ஆரம்ப வாழிடம் சார்பானதாக இருக்க மாட்டாது மாறாகக் குறித்த நேரத்தில் உள்ள படி யான வதிவிடம் சார்பானதாக உள்ளது என்றார். எனவே வடமாகாணத்தின் எல்லைக்கு வெளியே வதிவிடத்தை மாற்றிய ஒருவர் தொடர்பில் அவரது மன எண்ணம் உள்ளூர் வழக்காறுகளிலிருந்து விலகிச் செல்வதாகும்.

வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப் பிள்ளை வழக்கில் ஆளொருவர் தனது திரு மணத்தின் போது தேசவழமையினால் ஆளப்படு வாராயின் அவர் தனது மனைவியின் நலனுக்கு முரணாகப் பின்னர் தனது வாழிடத்தை மாற்ற முடியாது எனத் தீர்க்கப்பட்டது.

ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் வழக் கில் யாழ்ப்பாணத் தமிழரான ஒருவர் தனது இளம் வயதிலேயே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி கொழும்பில் வாழ்ந்து வந்ததுடன் தேசவழமையினால் ஆளப்படுகின்ற பெண்ணை கொழும்பில் திருமணம் செய்து கொண்டார் இவ்வழக்கில் நீதிமன்றம், யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணப் பெற்றோருக்கு பிறந்த ஆளொரு வர், அவர் சிறுவயதிலேயே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி கொழும்பில் வசித்துள்ளார். கொழும்பில் திருமணம் செய்துள்ளார். எனவே தேசவழமையினால் ஆளப்படமாட்டார் எனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கப்பட்டது. மேலும் பௌனார்ந்து எதிர் புறொக்கர் (12 பு.ச.அ. 309) வழக்கில் யாழ்ப்பா ணத் தமிழரின் வழியுரிமையாளரான பெண் ணொருவர் புத்தளம் மற்றும் சிலாபத்தில் வாழ் ந்து வந்தார். அவர் ஒருபோதும் யாழ்ப் பாணம் செல்லவில்லை. இவ்வழக்கில் நீதிமன்றம் அவர் தேசவழமையினால் ஆளப்படமாட்டார் எனத் தீர்த்தது.

சோமசுந்தரம் எதிர் சரவணமுத்து (44 பு.ச.அ 12) வழக்கில் யாழ்ப்பாணத் தமிழரான B என்பவரைத் திருமணம் செய்து வேறொரு யாழ்ப்பாணத் தமிழரான A என்ற இருவரும் தேசவழமையினால் ஆளப்படுவார்களா என்ற பிணக்கு ஏற்பட்டது. Bயின் தந்தை யாழ்ப்பாணத் தில பிறந்த யாழ்ப்பாணத் தமிழர் என்பதுடன், யாழ்ப்பாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருந்தார். Bயின் தந்தை தொழிலுக்கென கொழும்பில் வசித்ததுடன் B கொழும்பில் பிறந்ததுடன் கொழும்பிலேயே கல்வி கற்றார். B யாழ்ப்பாணத்திற்கு வியாபார நோக்கத்திற்கும் விடுமுறைக்காகவும் சென்றிருந்தார். Bயின் தாய் யாழ்ப்பாணத் தமிழராக இருந்ததுடன் யாழ்ப் பாணத்திற்கு அடிக்கடி சென்றுள்ளார். B யாழ்ப் பாணத்தில் திருமணம் செய்ததுடன் அங்கு அவருக்கு வீடு எதுவும் இருக்கவில்லை. அவர் தான் கொழும்பில் வசிப்பதாகக் கூறியதுடன் நிரந்தரமாகக் கொழும்பில் வாழ்வதாகவும் கூறினார். மாவட்ட நீதிமன்றம் Aயும் Bயும் தேச வழமையினால் ஆளப்படுவார்கள் எனத் தீர்ப் பளித்த போதும் மேன்முறையீட்டில் நீதிமன்றம் அவர்கள் இருவரும் தேசவழமையினால் ஆளப் படமாட்டார்கள் எனத் தீர்ப்பளித்தது.

இறுதியாக, சிவஞானலிங்கம் எதிர் சுந்தரலிங்கம் (1988) 1 இ.ச.அ 86) வழக்கில் தேசவழமையின் ஏற்புடைமை பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இவ்வழக்கில் நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவர் 1974ஆம் ஆண்ட மரணசாசனம் இல்லாதும் பிள்ளைகளின்றியும் இறந்தார். அவரது சகோதரர் (மேன்முறையீட்டா ளர்) யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் படி மரணச் சொத்துக்கான நிருவாகப் பத்திரத்தைக் கோரி விண்ணப்பம் செய்தார். அதேவேளை இறந்தவரின் மனைவி (எதிராளி) இறந்தவர் தேச வழமையினால் ஆளப்படமாட்டார் என்ற அடிப்படையில் திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் நியதி களின் படி நிருவாகப்பத்திரம் கோரினார்.

இவ்வழக்கில் முக்கியமான வினா இறந் தவர் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்பட் டாரா? என்பதாகும். இவ்வழக்கின் தீர்ப்பை வழங்கி பிரதம நீதியரசர் சர்வானந்தா பின்வரு மாறு முற்றீர்ப்புகளையும் சட்டவாக்கங்களை யும் ஆராய்ந்தார். ஸ்பென்சர் எதிர் இராஜரட் ணம் வழக்கில் நீதியரசர் வூட் ரென்டன் கருத்துப் படி பொதுச்சட்டத்தின் தரத்தைக் குறைக்கின்ற ஒரு வழக்காறு தேசவழமையாக இருப்பதனால் ஆளொருவர் தனக்கு தேசவழமை ஏற்புடையது எனில் அந்நிகழ்வைத் தாபிப்பது அவர் மீதான தாகும். மேலும் சுந்தரம்பிள்ளை எதிர் சரவண முத்து (44 பு.ச.அ 12) வழக்கில் தேசவழமை இறந்தவருக்கு ஏற்புடையதாக இருந்தது என்பத னைத் தாபிப்பது மனுதாரர் – மேன்முறையீட்டா ளர் மீதானதாகும் எனப்பட்டது. யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது.

> “இக்கட்டளைச் சட்டம் எத்தமிழர்களுக்கு தேசவழமை ஏற்புடையதாகின்றதோ அத்தமிழர்களுக்கு மட்டுமே ஏற்புடைய தாதல் வேண்டுமென்பதுடன் அவர்களது அசையும் மற்றும் அசையா ஆதனம் எங் கெல்லாம் அமைந்துள்ளதோ அது தொடர் பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்”

என ஏற்பாடு செய்கின்றது. தேசவழமையின் முன்னுரையானது பின்வருமாறு கூறுகின்றத. தேசவழமையானது யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தர வாசிகளின் வழக்காறுகளின் தொகுப்பொன்று ஆகும். வடமாகாணத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நிரந்தரவாசிகள் மலபார் நிரந்தரவாசிகளாக அடையாளங் காணப்படுகின்றனர். தேசவழமையின் நன்மையைக் கோருகின்ற ஆள் தமிழரொருவராக இருப்பதுடன் வடமாகாணத்தின் நிரந்தரவாசியாகவும் இருத்தல் வேண்டும். ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் வழக்கில் பிரதம நீதியரசர் வூட் ரென்டன் கூறியதாவது தேசவழமையானது இலங்கையின் முழுமொத்த தமிழ் மக்களுக்குப் பரம்பரையாகவும் மதரீதியாகவும் தானாக இணைந்துள்ள ஆள்சார் சட்டம் ஒன்றல்ல. ஆனால் தற்பொது வடமாகாணம் எனவும் முன்பு யாழ்ப்பாண மாகாணம் எனவும் அறியப்பட்ட இடத்தில் வலுவிலுள்ள விதிவிலக்கான வழக்காறுகள் என்பதுடன் அம்மாகாணத்தின் நிரந்தரவாசியாக இருக்கக்கூடியதென சொல்லப்படும் தமிழர்களிடையே மட்டும் ஏதேனும் ஒரு விகிதத்தில் ஆரம்பத்திலிருந்து பிரதானமாக வலுவிலுள்ளது.

மேலும் சவுந்தரநாயகம் எதிர் சவுந்தரநாயகம் வழக்கில் S என்பவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். ஆனால் அவருடைய தந்தையார் கொழும்புச் செட்டியாக இருந்ததுடன் யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிடமொன்றைக் கொண்டிருந்தார். நீதிமன்றம் S என்பவர் தேசவழமையினால் ஆளப்படமாட்டார் எனத் தீர்ப்பளித்தது. King எதிர்பெருமாள் வழக்கில் மத்திய மாகாணத்திலுள்ள இந்தியத் தமிழ் வதிவாளர்களுக்கு தேசவழமை ஏற்புடையதாகமாட்டாது எனத் தீர்க்கப்பட்டது. மேலும் வெல்லப்புவ எதிர் சிற்றம்பலம் (1875 இராம் அறிக்கை 114) வழக்கில் தேசவழமை திருகோணமலைத் தமிழர்களுக்கு ஏற்புடையதாகமாட்டாது எனத் தீர்க்கப்பட்டது.

தர்மலிங்கம் செட்டி எதிர் அருணாசலம் செட்டியார் (45 பு.ச.அ 414) வழக்கில் தேசவழமையானது. வடமாகாணத்தின் தமிழ் நிரந்தர வாசிகள் எல்லோருக்கும் ஏற்புடையதாக மாட்டாது. மாறாக 1806ஆம் ஆண்டு ஒழுங்கு விதியில் முழுவலுக் கொடுக்கப்பட்ட வழக்காறுகளின் டிசேவ் ஐசாக் என்பவருடைய தொகுப்புக் காலத்தின் போது யாழ்ப்பாணப் பட்டினத்தின் நிரந்தரவாசிகளாகவிருந்த மலபார் தமிழர்களின் வம்சாவழியாகவுள்ளவர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும் என மேன்முறையீட்டாளர் வாதிட்டார். இவ்வாதம் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதுடன் தமிழராகவுள்ள மேன்முறையீட்டாளரின் தந்தை இந்தியாவின் இராம்நாட் என்னுமிடத்திலிருந்து வந்த போதும் கூட யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வாழ்ந்தார். எனவே அவர் தேசவழமையினால் ஆளப்படுவார் மாகாணத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்புடையதாகும் என்ற பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தை மேலோங்கச் செய்தது. எனவே தேசவழமையானது அது சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்த தமிழ் இன மக்களுக்கு ஏற்புடைய தாகும். செட்டி எதிர் செட்டி (37 பு.ச.அ 253) வழக்கில் திறந்தவர்கள் வன்னியாஸ் எனப்படும் சமூகத்தைச் சேர்ந்த தமிழர்களாக இருந்ததுடன் தமது நிரந்தர வீட்டை மூன்று சந்ததிகளாக யாழ்ப்பாணத்தில் கொண்டிருந்தனர் என்பதுடன் மற்றைய இந்துக் குடும்பங்களால் பின்பற்றப்பட்ட வழக்காறுகளை அனுசரித்து வந்தள்ளனர். இவ்வழக்கில் நீதிமன்றம் திறத்தவர்களுக்கு தேசவழமை ஏற்புடையதாகும் அவர்கள் யாழ்ப்பாண மலபார் நிரந்தர வாசிகளாக இருந்தனர் எனத் தீர்ப்பளித்தது. மேலும் நாகரட்ணம் எதிர் சுப்பையா (74 புச.அ 54) வழக்கில் யாழ்ப்பாணத்தில் தனது நிரந்தர வதிவிடம் மற்றும் திருமணம் மூலம் இந்தியத் தமிழர் ஒருவர் வடமாகாணத்தின் நிரந்தரவாசியாக இருந்தார் எனத் தாபித்ததன் மீது தேச வழமையினால் ஆளப்படுவார் எனத் தீர்க்கப்பட்டது. எனவே ஆளொருவருக்கு தேச வழமை ஏற்புடையதாவதற்கு அவர் வடமாகாணத்தின் தமிழ் நிரந்தர வாசியொருவர் என தாபித்தல் வேண்டும். இதனால் மலபார் நிரந்தர வாசி என்பது தற்போது கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப் பிள்ளை (13 பு.ச.அ.74) வழக்கில் "நிரந்தரவாசி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வடமாகாணத்தில் வாழ்விடம் என்ற தன்மையில் நிரந்தர வதிவிடமொன்றைக் கொண்டிருக்கின்ற ஆளொருவர் எனப் பொருள் படுவதாக நீதியரசர் வூட் ரென்டன் கூறியுள்ளார். அவர் மேலும் இவ்வழக்கில் அத்தகைய வதிவிட மொன்றின் உளதாந்தன்மையைத் தாபிப்பதற்கு குறித்த சூழ்நிலைகள் போதுமென ஏதேனும் பொதுவான விதிகளை முற்போடுவது விரும்பத் தக்கதோ அல்லது சாத்தியமானதோ அல்ல என்றார். ஒவ்வொரு வழக்கும் அதன் நிகழ்வுக ளில் தங்கியுள்ளது. ஒரு புறத்தில் யாழ்ப்பாணத் தில் வதிவிடமொன்றைக் கொண்டிருப்பது 1806 ஆம் ஆண்டில் ஒழுங்குவிதியின் கருத்தெல்லை யினுள் அம்மாகாணத்தின் "நிரந்தரவாசி" ஆன தமிழர் என்பதற்குப் போதுமானதாக இருக்க லாம். மறுபுறுத்தில் வேறோரிடத்தில் வதிவிடத் தைக் கொண்டிருப்பது அத்தகைய ஏற்புடை மையை பறிகொடுக்கமாட்டாது. எனவே யாழ்ப் பாணத் தமிழராக இருப்பின் அவர் இலங்கை யின் வேறு பாகத்தில் வாழ்ந்துவரினும் தனது பிறந்த அல்லது வாழ்ந்த மாகாணத்துடன் அத்தகைய தொடர்பு ஒன்றைக் கொண்டிருப்பின் அம்மாகாணத்தின் வழக்காற்றுச் சட்டத்தின் நன்மைகளுக்கு உரித்துடையவராவார். ஆனால் பிறப்பால் அல்லது வம்சா வழியினால் யாழ்ப் பாணத் தமிழராக உள்ள ஒருவர் சூழ்நிலைகளைக் கவனத்திற் கெடுக்கும் போது அவர் தேச வழமையினால் ஆளப்படுபவர்களின் நியதிச் சட்ட வரையறையினுள் கொண்டு வர முடியா திருக்கலாம். எனவே வழக்கின் நிகழ்வுகளைக் கொண்டு மட்டுமே ஒருவர் தேசவழமையால் ஆளப்படுவாரா இல்லையா என அடையாளங் காணமுடியும்.

ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் வழக் கில் நீதியரசர் எனிஸ் குறிப்பிடுகையில் வாழ் விடம் தொடர்பான பிணக்குகளில் வாழிடத்தில் மாற்றம் எண்பிக்கப்படும்வரை ஆரம்பத்தில் காணப்பட்ட வாழிடம் தொடர்ந்திருப்பதாக சட்டத்தில் ஊகம் உண்டு. ஒருவருடைய நிரந்தர வாழிடம் தொடர்பான பிணக்கில் அதாவது உள்ளூர் வழக்காறின் ஏற்புடைமை நோக்கத்தி ற்கு அத்தகைய ஊகம் ஆரம்பத்தில் காணப்பட்ட நிரந்தர வாழிடம் சார்பானதாக இருக்கமாட்டாது. அங்கு கவனிக்க வேண்டியது குறித்த காலப் பகுதியில் உள்ள படியான வதிவிடம் என்ப தாகும். இதனை சிவலிங்கம் எதிர் சுந்தரலிங்கம் வழக்கில் பிரதம நீதியரசர் சர்வானந்தா ஏற்க மறுக்கின்றார். நீதியரசர் எனிஸ் அவ்வழக்கில் அதற்கான ஆதாரம் எதனையும் எடுத்துக்காட்ட வில்லை. இத்தகைய கூற்றானது வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை வழக்கில் நீதியரசர் மிலிட்ரன்ஸ் என்பவரால் கூறப்பட்ட கூற்றுக்கு முரணானது. ஆயினும் நீதியரசர் எனிஸ் அது பற்றி தீர்ப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் நீதியரசர் எனிஸ் தேசவழமை உள்ளூர் வழக்காற்றுச் சட்டம் என்பதுடன் அது யாழ்ப் பாண எல்லையினுள் வலுவிலிருப்பதாகவும் ஏற்றுக் கொள்கின்றனர்.

சிவலிங்கம் எதிர் சுந்தரலிங்கம் வழக் கில் பிரதம நீதியரசர் சர்வானந்தா தனது அபிப் பிராயத்தில், தேசவழமை வடமாகாண தமிழ் நிரந்தர வாசிகளின் ஆள்சார் சட்டம் எனவும் அது அவர்கள் இலங்கையில் எங்கு சென்றாலும் ஏற்புடையதாகும் என்பதுடன் இலங்கையில் எங்கெல்லாம் அமைந்துள்ள அவர்களது அசை யும் அசையாய ஆதனங்களுக்கு ஏற்புடையதா கும் எனக் கூறுகின்றார். இவ்வழக்கில் இறந்தவர் 1920ஆம் ஆண்டு மலயாவில் பிறந்தார் என்பது டன் அவரது தந்தை மலயாவில் தொழில் புரிந் தார். இறந்தவரின் பெற்றோர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களாக இருந்ததுடன் தந்தையின் இளைப் பாறலின் பின்னர் யாழ்ப்பாணத்தில் வசித்தனர். 1933ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரை இறந்தவர் யாழ்ப்பாணத்தில் வசித்ததுடன் அங்கேயே கல்வியும் கற்றார். அதன்பின்னர் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்க கொழும்பு வந்ததுடன் கற்கையின் முடிவில் பகிரங்க சேவையில் இணைந்து யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற் றினார். 1949ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்ததுடன் அங்கு சீதனமாக வீட்டையும் கொண்டிருந்தார். அத்திருமணம் மூலம் பிள்ளைகள் இல்லாது, மனைவி 1968 ஆம் ஆண்டு இறந்தார். மனைவியின் இறப்பின் பின்னர் 1969ஆம் ஆண்டு யாழ்ப்பாண பெண் ணைத் திருமணம் செய்தார். திருமணம் கொழும்பில் நடைபெற்றதுடன் மனைவி (பிரதி வாதி) ஆசிரியராக கொழும்பில் சேவையாற்றி னார். மனைவி பருத்தித்துறையில் வீட்டைக் கொண்டிருந்ததுடன் இறந்தவர் யாழ்ப்பாணம் செல்லும் போதிலெலாம் அங்கேயே தங்கினார். அவர் யாழ்ப்பாணத்துடன் தொடர்பை பேணி வந்ததுடன் 1974ஆம் ஆண்டு கொழும்பில் இறந் தார். அவரது மரணக் கிரியைகள் யாழ்ப்பாணத் தில் இடம்பெற்றன.

இங்கு தீன்மானிக்க வேண்டிய விடயம் இறந்தவர் இறப்புவேளையில் யாழ்ப்பாண நிரந் தரவாசியாக இருந்தாரா? அவர் யாழ்ப்பாண நிரந்தரவதிவிடத்தைக் கைவிட்டு கொழும்பில் வாழ்ந்தாரா? இறந்தவர் யாழ்ப்பாணத்துடன் தொடர்பைக் கொண்டிருந்ததுடன் கொழும்பில் நிரந்தர வீட்டைக் கொண்டிருக்க தெரிவு செய் தார் எனக் கூறமுடியுமா? நீதியரசர் சர்வானந்தா மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வழக்கில் இறந்தவருக்கு தேசவழமையின் ஏற்புடமை தொடர்பில் விளைவைத் தீர்மானிப்பதற்குத் தோதான காலம் அவரது திருமண காலம் எனத் தீர்மானிப்பதற்குத் தோதான காலம் அவரது திருமண காலம் எனத் தீர்மானித்திருப்பது தவறானது எனக் கூறியதுடன் திருமணக் காலம் திருமணமான பெண்களுக்குத் தேசவழமையின் ஏற்புடைமையைத் தீர்மானிப்பதற்கு மட்டுமே இயைபானது. மேலும் இறந்த கணவன் தேச வழமையினால் ஆளப்பட்டாரா என்ற விடயத் தைத் தீர்மானிப்பதற்கு இயைபான காலம் அவரது இறப்புக் காலமே தவிர திருமணக் காலம் அல்ல என்றார். மேலும் பிரதம நீதியரசர் சர்வானந்தா இவ்வழக்கின் இயைபான சான்று கள் ஒரேயொரு முடிவுக்கே இட்டுச் செல்கின் றன. அதாவது இறந்தவர் யாழ்ப்பாண நிரந்தர வாசி ஒருவராக இருப்பத்திலிருந்து ஒரு போதும் விலகவில்லை என்பதும், அவரது நிரந்தர இல்லம் யாழ்ப்பாணத்தில் இருந்ததும், அவர் தனது தொழிலின் நிமித்தம் கொழும்பில் வசித்தார் என்பதுமாகும். சான்று, இறந்தவர் யாழ்ப்பாணத்திற்குத் திரும்புவதற்கான தனது எண்ணத்தைக் கைவிட்டார் எனக் காட்ட வில்லை. சான்றுகளான இறந்தவர் தனது தாயார் வசித்த யாழ்ப்பாணத்துடனான தனது தொடர் பைப் பேணிவந்துள்ளார் என்பதும் இறந்தவர் கொழும்பில் இறந்த போதும் யாழ்ப்பாணத்தி லேயே இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன என்பதும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கான எண் ணத்தைக் கைவிட்டார் எனக் காட்டவில்லை என்பதனை வலியுறுத்துகின்றன.

இறந்தவர் யாழ்ப்பாணத் தமிழர் என்பதுடன் யாழ்ப்பாண நிரந்தரவாசியொரு வராக வாழ்க்கையை ஆரம்பித்தார் என ஏற்றுக் கொள்ளப்பட்ட நிகழ்வுகள் காட்டுவதனால் நிரந்தர வாழித்தைக் கைவிட்டார் என்பதற்கான சான்றுகளை முன்வைப்பதன் மூலம் நிரந்தர வாழிடத்தின் தொடர்ச்சி மீதான ஊகத்தை மறுதலிப்பது எதிராளியின் மீதானதாகும். ஊக மானது நிரந்தர வாழிடம் கைவிடப்பட்டது எண்பிக்கப்படும் வரை நிலவுகின்றது. குறித்த காலப்பகுதிக்கு வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்கென யாழ்ப்பாணத்திற்கு வெளி யோன வாழிடமானது யாழ்ப்பாணத்தின் நிரந் தரவாசி என்ற அவரது அத்தகைய குணநலனைப் பறிக்கமாட்டாது என ஸ்பென்சர் எதிர் இராஜரட் ணம் வழக்கில் நீதியரசர் வூட்ரென்டன் எடுத்துக் காட்டியுள்ளார்.

அதாவது அத்தகைய வதிவிடத்திற் கென, அத்தகைய குணநலனுடைய ஒரு ஆளினை வேறுபடுத்துவதற்கு அது நிரந்தரமாக அங்கு தங்குகின்ற மனஎண்ணத்தின் பயனாக இருந் திருத்தல் வேண்டும் அத்தகைய வதிவிடம் தன்னிச்சையாகவும் சுதந்திரமான விருப்பத் தெரிவின் அடிப்படையிலும் அவரது தொழில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தொழில் அல்லது வியாபாரம் என்பவற்றின் நோக்கத்திற்கென ஓரிடத்தில் வசிப்பதற்கு கடப்பாடுடையவராக மட்டுப்படாதிருத்தலும் வேண்டும்.

கொழும்பில் நிரந்தரமாக வீட்டை வாங்குவது அல்லது வாங்குவதற்கான மன எண்ணம் கொண்டிருப்பது, வாடகை வீட்டில் வசிப்பதை விட சொந்த வீட்டை ஏற்படுத்திக் கொள்ளவே ஆகும். அத்தகைய முதலீடு கொழும்பில் நிரந்தரமாக தங்கியிருப்பதற்கான மனஎண்ணத்தைக் காட்டுபவராக இருக்கமாட்டாது என கூறப்பட்டது.

பிரதம நீதியரசர் சர்வானந்தா மேலும் குறிப்பிடுவதாவது, இரு கீழ்நிலை நீதிமன்றங்களும், யாழ்ப்பாணத்திற்கு வெளியே நிரந்தரமாக வசிக்கும் மன எண்ணம் இருந்ததா? இணைந்துள்ள மன எண்ணத்தின் தன்மையைக் குறிப்பிடாது யாழ்ப்பாணத்திற்கு வெளியேயான உள்ளபடியான வதிவிடம் என்பதற்கு முறையற்ற மதிப்பளித்து, யாழ்ப்பாண நிரந்தரவாசியாக இருப்பதனை இறந்தவர் கைவிட்டதாக முடிவுக்கு வந்துள்ளன. நிரந்தர வதிவிடத்தைக் கைவிட்டதனைக் காட்டுவதற்கு யாழ்ப்பாணத்திற்கு வெளியே ஒருவர் நீண்டகாலம் வசிக்கின்றார் என்ற நிகழ்வு மட்டும் போதுமானதல்ல. வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை வழக்கின் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்பு சென்று அங்கு வசித்து வந்தார். ஆனால் நீதிமன்றம் அவர் யாழ்ப்பாண நிரந்தரவாசி எனத் தீர்ப்பளித்தது. எனவே இந்த வழக்கில் இறந்தவரான சுந்தரலிங்கம் தேசவழமையினால் ஆளப்படுவார் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனவே தமிழர் ஒருவர் யாழ்ப்பாணத்தின் நிரந்தரவாசியாக இருக்குமிடத்து, அவர் மலபார் தமிழரா என்பது விடயமல்ல. அவர் தேசவழமையினால் ஆளப்படுவார். அதே வேளை தேசவழமையினால் ஆளப்படும் ஒருவர் யாழ்ப்பாண நிரந்தரவாசி என்பதனைக் கைவிடுவதற்கான மன எண்ணத்தைக் காட்டும் விதமாக செயற்பட்டிருப்பினும் அது எண்பிக்கப்பட்டிருப்பினும் மட்டுமே தேசவழமையின் ஏற்புடமையைத் தவிர்க்கலாம். நாட்டின் வடமாகாணம் தவிர்ந்த இடங்களில் வசிப்பவர்களும் வெளிநாட்டில் வசிப்பவர்களும் வடமாகாணத்துடனான தொடர்பைக் கொண்டிருக்கும் வரை தமது யாழ்ப்பாண நிரந்தரவாசி என்னும் மன எண்ணம் மறுதலிக்கப்பட முடியாதாகும்.

3. தேசவழமையினால் ஆளப்படும் ஆதனங்கள்

Properties Governed by Thesawalamai

தேசவழமையானது ஆள்சார் சட்டம் என்பதுடன் இடம்சார் சட்டமும் ஆகும். வடமாகாணத்தில் அமைந்துள்ள எல்லாக் காணிகளும் தேச வழமைச் சட்டத்தினால் ஆளப்படுகின்றன. ஆயினும் முஸ்லீம் அல்லது கண்டிய சிங்களவரொருவர் வடமாகாணத்தில் காணியைக் கொள்வனவு செய்யுமிடத்து, தேசவழமைச் சட்டத்தின் ஒருசில ஏற்பாடுகள் மட்டுமே அது தொடர்பில் ஏற்புடையதாகும். உதாரணமாக வடமாகாணத்தில் காணியொன்றை முஸ்லீம் ஒருவர் கொள்வனவு செய்வாராயின், அக்காணியின் வழியுரிமை விடயங்கள் முஸ்லீம் சட்டத்தால் ஆளப்படும். அதேவேளை அக்காணி ஒரு கூட்டுச் சொந்தத்தில் காணப்படுமாயின், கூட்டுச் சொந்தம் தொடர்பானவிடயம் தேசவழமையினால் ஆளப்படும்.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது.

> "இக்கட்டளைச் சட்டமானது எத்தமிழர்களுக்கு தேசவழமை ஏற்புடையதாகின்றதோ அத்தமிழர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாவதுடன், அது அவர்களது அசையும் மற்றும் அசையா ஆதனம் எங்கிருப்பினும் அது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வடமாகாணத் தமிழர்களுக்குச் சொந்தமான ஆதனம் இலங்கையின் எப்பாகத்தில் இருப்பினும் அவ்வாதனம் தேசவழமையினால் ஆளப்படும். வெளிநாடுகளில் தேசவழமையினால் ஆளப்படுபவர்களுக்குச் சொந்தமான அசையா ஆதனங்கள் அந்நாட்டுச் சட்டப்படி தீர்மானிக்கப்படினும், இலங்கை நீதிமன்றங்கள் அவை தொடர்பில் ஆங்கிலச் சட்டத்தை அல்லது றோம டச்சுச் சட்டத்தையே ஏற்புடையதாக்கும். மாறாக தேசவழமை ஏற்புடையதாகமாட்டாது. எவ்வாறாயினும் இலங்கையில் அமைந்துள்ள தேசவழமையினால் ஆளப்படுவோருக்குச் சொந்தமான ஆதனம் தொடர்பான விடயங்கள், உரிமையாளர்கள் வெளிநாட்டில் வசிப்பினும் கூட தேசவழமைக்கிணங்கவே தீர்மானிக்கப்படும்.

நன்றி – தேச வழமைச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் பகிர்வு

நினைவின் சுவை : தருமபுரம்

இனிய. திருமாவளவன்
கனடா

போர் உச்சக்கட்டத்தில் இருந்தது. சனங்கள் இடம் பெயர்ந்து தருமபுரத்தில் தங்கியிருப்பதாக சொன்னார்கள். அடுத்தவாரத்தில் நெத்தலியாற்றை கடக்க வேண்டியிருந்தது.

அடுத்தடுத்த வாரத்தில் கல்மடுக் குளத்தை உடைத்து விட்டதாகவும் அது இரானுவத்திற்கு பெரும் அழிவை எற்படுத்தியதாகவும் செய்திகள் கனேடிய தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்தன.

தருமபுரம் சிறுவயதில் நான் தவழ்ந்த பூமி. ராமருக்குதவிய அணிற்பிள்ளை போல என் தந்தையும் அக்கிராமத்திற்காக சிறு கல் சுமந்திருக்கிறார். 75தரம் ஆண்டுவரை அடிக்கடி நான் அங்கு சென்று வந்திருக்கிறேன். அதன் ஒவ்வொரு வளர்ச்சிப் படியையும் பார்த்து வளர்ந்தவன்..

அந்த பாதிப்பில் எழுதியதுதான் 'நெத்தலியாறு' கவிதை.
அதன் தொடற்சியே இந்தபதிவு.
ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டு.

இலங்கையில் முதல் தமிழ் சிங்கள கலவரம் தொடங்கியது எல்லமே பின்னர் நடந்தவற்றைப்போல் வழமையைப்படி.

சிங்களப் பிரதேசங்களிலிருந்து உயிரிழப்புகளோடும் பெரும் சொத்திழப்போடும் உடலிலும் மனதிலும் ரணங்களை சுமந்தபடி பெருவாரியாக தமிழ் மக்கள் வடபகுதி நோக்கி இடம் பெயர்ந்திருந்தனர், பாடசாலைகள் பொதுவிடங்கள் உறவினரது வீடுகள் எனத் தற்காலிக அகதி முகாங்கள் பல முளைத்தன. இரண்டொரு மாதத்தில் நிலமை சற்றுத் தணிந்து பெரும்பாண்மை இனம் சினேகம் காட்டத் தொடங்கிற்று.

என்னதான் தத்துவம் பேசினாலும் மனிதனுக்கு வயிறும் வருமானமும் முக்கியமல்லவா. தொழில் நிமிர்த்தம் பலர் மீளத்திரும்பிச் செல்லத் தொடங்கினர். அகதி முகாங்கள் மெலிந்து தனி மலையக மக்கள் மட்டுமே தாங்கி நின்றது.

இப்போதிருப்பது போல் அல்ல அன்று அவர்கள் நிலை. குடியுரிமை கிடையாது. அரிசி பெறுவதற்கு கூட தனியாக பச்சைக் கூப்பன் கொடுக்கப்பட்டிருந்தது. சிறுபான்மை பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையின்றி எல்லா யாழ்பாண மக்களாலும் "கள்ளத்தோணிகள்" என்றே அழைக்கப்பட்டனர் அவர்களுக்காகவே அன்று தருமபுரம் கிராமம் உருவாக்கப்பட்டது. அந்த நாட்களில் அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கு பதிலாக "டீ.ஆர்.ஓ. கந்தோர்" என்ற சொற்பிரயோகமே வழக்கில் இருந்தது. "பளை"ப் பிதேசத்தின் டீ.ஆர்.ஓ. பிரிவின் கீழ் கிளிநொச்சிப் பிரதேசம் முழுவதும் அடங்கியிருந்தது. அக்காலத்தில் "டீ.ஆர்.ஓ." வாக முருகேசம்பிள்ளை பதவியிலிருந்தார்.

இத்தகைய ஒரு காலத்தில் தான் பலதொழில்கள் செய்தும் விருத்தியுறாத நிலையில் என் அப்பா இருந்தார். அவருக்கும் கம் யூனிட் கார்த்திகேசன் மாஸ்டருக்கும் நெருங் கிய தொடர்பிருந்தது. அவர் மூலமாகவே அப்பாவுக்கு "டீ.ஆர்.ஓ.' முருகேசபிள்ளையுடனான தொடர்பு கிடைத்திருக்க வேண்டும். காடு வெட்டி கழனியாக்கும் ஒப்பந்தகாரராக பிழைப்புத்தேடி அவர் தருமபுரம் வந்தார்.

அப்பா இளவயதில் மலேசிய விடுதலை போராட்டத்தின் ஆயுதப் போராளியாக இருந்தவர். மலேசியாவின் பெருமழைக் காடுகளில் உறைந்து வாழ்ந்தவருக்கு வன்னிக்காடுகள் என்பது இயல்பான ஒன்று. அவரை ஒரு வனராஜா என்றே சொல்வேன். காட்டுக்குள் நுழைந்து விட்டால் அவர் சிங்கந்தான்.

எந்த இருள் சூழ்ந்த அடர்ந்த பெருமரக் காட்டினுள்ளும் அச்சமின்றி ஒருதிசையால் நுழைந்து வேறொரு திசையால் வெளிவரும் வித்தைகண்டு நான் சிறுவயதில் வியந்திருக்கிறேன்.

அப்பாவுக்கு தருமபுரத்து பணியும் அந்த மக்களுடனான வாழ்வும் மிகவும் பிடித்துப் போயிற்று. பின் அவர் அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டார். ஒரளவு குடியேற்றம் நிகழ்ந்தபின் அம்மாவையும் அழைத்துக்கொண்டார்.

எங்களுக்கு அங்கே காணியிருக்கவில்லை. அம்மாவின் தாய்மாமன் செட்டிமாமா மற்றும் ஒன்றுவிட்ட சகோதரன் கதிரித்தம்பி இருவரும் அனுரதபுரத்தில் சிங்கள மக்களுடன் பலகாலம் தனித்து வாழ்ந்தவர்கள். இருந்தும் இனவெறி நெருப்பு அவர்களை விடவில்லை. மிக ஆழரணப்படுத்திவிட்டது. மீளத் திரும்ப போவதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் பதிவு செய்து தருமபுரத்தில் காணி பெற்றிருந்தனர்.

அனுராதபுரம் சுமூக நிலைக்கு வர நெடுநாளாயிற்று. மீளசென்று தங்கள் எஞ்சிய சொத்துகளை பார்த்து வரலாம் எனப் புறப்பட்டவர்கள் சிங்கள மக்கள் காட்டிய அன்பில் நெக் குருகிப் போனார்கள். அவர்களின் வேண்டுதலின் பேரில் அங்கேயே தங்கியதோடு தரும புரத்திலுள்ள தங்கள் காணிகளில் அப்பாவை இருக்கும்படி கேட்டனர்.

"நாலாம் ஐந்தாம் "புளொக்'கிற் இடையில் தெருவோரம் அந்த காணிகள் இரண்டும் ஒன்றாக அமைந்திருந்தது. அதில்தான் நாங்கள் தற்காலிகமாக குடியமர்ந்தோம்.

அப்பா குடும்பத்தோடு தருமபுரம் சென்ற போது எனக்கு அங்கு நல்ல பள்ளிக்கூடம் இல்லை என்ற காரணம் சொல்லி என் மாமனார் தன்னோடு கூட்டிச்சென்றார். அப்போது அவர் "தலாவாக்கலை" பிரதேசத்தில் கல்கந்தை எஸ்டேட்டில் 'ரீ மேக்கராக' இருந்தார். நான் அவருடன் ஆறு அல்லது எட்டுமாதங்கள் வரையில்தான் இருந்ததாக நினைவு.

நான்பள்ளிக்கு போகும்போது "தோட்டக்காட்டு" பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதாகவும். அவர்களுடன் உணவு பரிமாறுவதாகவும் என்மீது குற்றச்சாடு எழத் தொடங்கியது. பாவம். அவரால் என்னைக் கட்டிமேயக்க முடியாமல் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வதென்ற பலத்த ஆலோசனையின் பின் அதன்பின் அம்மாவின் வழியில் சிறியதாய் வீட்டுக்கு இடம் மாற்றப்பட்டேன்.

அவர்கள் தொழில் நிமிர்த்தம் திருகோணமலை பகுதியில் சீனன்குடாவில் இருந்தார்கள். அது முஸ்லீம் மக்கள் வாழும் பிரதேசம். ஒருவன் மீது ஒரு குற்றச்சாட்ட வந்துவிட்டால் போதும் பின் அதிலேயே குறிவைத்திருப்பார்கள் அல்லவா. ஒரு சில காலத்தின் பின் அங்கும் அதே பிரச்சனை.

நான் சோனகப்பிள்ளைகளிடம் மிட்டாய் வாங்கி தின்பதாகவும் அதனால் எனக்கு நோய்க்குறைபாடு எற்பட்டுவிட்டதாகவும் சொன்னார்கள். எனது முழங்கையின் அடிப்பகுதி தோல்கள் தடித்து கரடுமுரடாக இருப்பதை சுட்டிக்காட்டினார்கள். அது விட்டமின் குறைபாட்டால் வரும் தவளைத்தோல்நோய் என பின் நாளில் அறிந்திருந்தேன்.

இந்த குற்சச்சாட்டுகளை கேட்ட அம்மாவிற்கு அவர்கள்மேல் கோபம் வந்தது. என்ன இருந்தாலும் தவமிருந்து பெத்த பிள்ளை அல்லவா. நீங்கள் என் பிள்ளையை வளர்த்தது போதும். என்னிடமே கொண்டுவந்து தாருங்கள் என்று சொல்லிவிட்டார். முடிவில் நான் தருமபுரம் வந்து சேர்ந்தேன். அப்போது எனக்கு ஆறு வயதை தாண்டியிருக்கலாம்

நீரின் ஆழத்தில் போட்டுவைத்த கல்லைப் போன்று மனதின் அடிஆழத்தினுள் புதைந்த கிடக்கிறது நினைவுகள். அள்ளஅள்ளப் பெருகும் நீர் போல ஊற்றுக்கண் திறந்து பாய்கிறது

தருமபுரம் கிராமம் பரந்தன் முல்லைத் தீவு வீதியில் நெத்தலி ஆற்றிக்கு மேற்கில் அமைந்திருந்திருந்தது. இருபுறமும் ஒன்றிலிருந்து பத்துவரை கிளைவீதிகளை கொண்டது. ஒவ்வொன்றும் முதலாம் புளொக் இரண்டாம் புளொக் கென வரிசையாக வீதிகள் அமைந்திருந்தன. இப்போது அவற்றிக்கு வீதிப்பெயர்கள் வந்திருக்கக் கூடும். நாங்கள் இருந்த அந்த இரண்டேக்கர் காணி நாலாம் ஐந்தாம் புளொக் கிற்கிடையில் முல்லைத்தீவு வீதியோடு தென் புறம் இருந்தது. அதற்குள் கிழக்கே பார்த்தபடி வீடு.

நெடுத்த யாவரனை மரத்தூண்களின் மேல் நேரிய காயாந்தடிகளை பரப்பி கிடுகால் வேய்ந்த பெரிய வீடு. நடுவில் சுவர்போல தடிகளை நிறுத்தி சிறு கம்புகளால் வரிச்சுப் பிடித்து மரந்தெரியாது இடைகளை மண்ணால் நிரவிய சுவர்களை கொண்ட ஒரு பெரியறை இருந்தது அதன்வலப் புறத்தில் அடுக்களை இருந்தது.

அடுக்களையைத் தாண்டி மேற்கில் இருபது யார் நடந்தால் கிணறு வரும் . அதற்கு சுற்றச்சுவர் தொப்பிகட்டு என எதுவும் கிடையாது. கிற்றின் மிதிபோல சில காட்டு மரங்களை அடுக்கியிருந்தார்கள். வெளிநீர் போகாது நாலு புறமும் கிணற்றில் வெட்டிய கிறவல் பிட்டியாக இருந்தது. பிட்டிமேல் குத்தச்செரிகள் வளர்ந்திருந்தன. நீரளுவதற்கு துலா அல்லது உழண்டி எதுவும் கிடையாது. வெறும் “கயிற்று வாளி” கொண்டே நீர்மொள்ள வேண்டும். எப்போதும் தண்ணீர் மங்கலாக தெரியும்.

வீட்டின் முன் கூடம் வீதியை பார்த்தபடி இருந்தது. அதில் எப்போதும் குறைந்தது ஐந்தாறு நெல் மூடைகளாவது அடுக்கி இருக்கும். அதை விட யாராவது வந்தால் இருப்பதற்கு ஒரு கை வாங்கு. ஒரு சாக்குக் கட்டில் அவ்வளவுதான்.

அப்பா அந்தக் காணிக்குள் ஒரு தடவை மாட்டினால் உழுது கச்சான் பயிர்செய்தார். நான் கலப்பை கீறிச் சென்ற பிறவுக்குள் கச்சான் விதைகளை போட்டேன். கச்சான் பூத்த காலத்தில் மஞ்கள் கம்பளம் விரித்தாற்போல் மிகஅழகு. பிறிதொருதடவை எள்ளு விதைத்தாக நினைவு. வரப்புகளில் சீனி வந்தாளங்கிழங்கு அல்லது சோளம் பயிரிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டுக்கும் தெருவுக்கும் இடையில் பெரிய மாட்டுப்பட்டி இருந்தது. அம்மா காலையில் பால் கறந்ததும் பட்டிக் கடப்புகளை திறந்து விட்டால் அவை தன்னரவாரம் மேச்சலுக்கு கிளம்பிவிடும். கன்றுகள் மட்டும் பட்டிக்குள் கட்டிநிற்கும். மாலையில் மாடுகள் அவையாகவே பட்டிவந்து சேரும்.

சிலசமையம் தாய் மாடுகள் எப்படியோ பட்டிக்குள் நுழைந்த கன்றுக்கு பாலூட்டிவிடும். அம்மா வாயில்வந்த படி மாட்டை திட்டுவா. எப்போதாவது அரிதாக ஒரு மாட்டை காணவில்லை என்று அப்பா தேடுவார். அவை வேறு மாடுகளுடன் பட்டிமாறிப் போய்விடும். எப்படியோ இரண்டொரு நாட்களில் அங்குள்ளவர்களே சாய்த்து வந்து கொடுத்துவிடுவார்கள்.

நானிருந்த காலத்திலேயே அங்கு புதிதாக பாடசாலை கட்டிவிட்டார்கள். முதலாம் இரண்டாம் புளொக் (வீதி) கிடையில் இருந்த நினைவு. அங்கு ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் வசதியிருந்தது. அது பகல் ஒரு மணிவரை இயங்கும். யாழ்ப்பாணத்து ஆசிரியர்களே வந்து தங்கியிருந்து கற்பித்தார்கள்.

நான் இரண்டாம் மூன்றாம் வகுப்புகளை அங்கேயே படித்தேன். தம்பிராசா என்ற ஆசிரியரை இப்போதும் நினைக்கத் தோன்றுகிறது. ஒற்றைக்கண் பார்வையற்றவர். எப்போ தும் அவர் மேசையில் ஒரு மெல்லிய அவர் போலவே கறுத்த துவரந்தடி இருக்கும். அக்காலத்தில் மட்டுவிலை சேர்ந்த ஒரு ஆசிரியையும் இருந்தார். அவர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போவார்கள். பின்நாளில் அவர்கள் இருவரும் திருமணஞ்செய்து தம்பதியராகினர்.

நாங்கள் பள்ளிகூடத்தால் வந்ததும் மதிய உணவுக்குப் பின் நெத்தலியாற்றிக்கு குளிக்கப் புறப்படுவோம். இப்போது இருப்பது போல நெத்தலியாற்றிக்கு பெரிய மேம்பாலம் கிடையாது. கோடையிலே குறுக்கறுக்கும் ரோட்டை மேவி கணுக்கால் நனையும் வரை நீர் பாயும். மாரியில் சற்று நீர் நிமிரும்.

வானம் வெறிகொண்டால் கல்மடுக் குளம் வான்பாயும். நெத்தலியாறு உருக்கொண்டெழும். ஒருவாரம் இரண்டுவாரம் வரையில் போக்குவரத்து தடைப்படும். பின் நீர் தணிந்து வழமை போலாகிகிவிடும்

கோடைகாலங்களில் ஆற்று மணலிடை தண்ணீர் தேங்கித்தேங்கி ஓடும் சில இடங்கள் ஆழமாகவும் சிலஇடங்கள் மணல் வெட்டையாகி உலர்ந்தும் காணப்படும் அந்நாட்களில் நீரோட்டத்திற்கு எதிர்திசையில் ஆற்றின் மணல் வெட்டைகளால் நடந்து காட்டின் அடியாழத்துக்கு செல்வோம். அங்கு யாரும் இருக்கமாட்டார்கள்.

இருபுறமும் மரங்கள் ஆற்றினுள் சரிந்து குடைவிரித்திருக்கும். காட்டு மல்லி மற்றும் காட்டு சிவப்புப்பூ (எக்ஸ்சோரா) வண்ணத்துப் பூச்சிகள் என ஆறு எப்போதும் சீவிச்–சிங் காரித்தபடி நடக்கும்.

“சில்” வண்டுகளின் இரைச்சலும் இடையிடை எழும் பறவைகளின் ஒலியும் காட்டின் மௌனமும் அல்லது ரகசியமும் அதன் ரம்மியமும் இணைந்து ஒருவித அச்சங்கலந்த கிளர்ச்சியை உணர்த்தும்.

அம்மா கழுவவெனக் கொண்டுவந்த உடைகளை கசக்கித் துவைப்பார். நாங்கள் தண்ணீரில் இறங்கி குளிக்கத் தொடங்குவோம். ஆற்றில் உள்ள சிறு மீன்கள் கால்களில் கொத்துவதும் சிறு புண்களை கடிப்பதும் நாங்கள் பாய்ந்து நீருக்கு வெளியில் வருவதும் பின் ஆசையில் மீளக்குதிப்பதுமென ஒரு மணி நேரமாவது குதியன்குத்துவோம்.

வீதியோடு பாலைமரத்தடியில் பிள்ளையார் குடியிருந்தார். ஆத்தங்கரை குளக்கரை என்றால் அவர்தானே துணை. அதிலும் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைக்காடு. பிள்ளையாரை விட்டால் வேறு யார் துணை. அப்போ பெரிதாக அவருக்கு கோவில் கிடையாது. கல்லில் செதுக்கிய சிலை கூட இல்லை. மொக்கும் மொழியுமாய் வெறுங் கல்லுத்தான். முகப்புக் கப்பில் சிறு சிரட்டைக் குடுவையில் திருநீறு தொங்கும். அதில் வந்து சாமி கும்பிட்டு திருநீறு பூசித்தான் வீடு வருவோம்.

மாலை என்றால் நெத்தலி ஆறு தாண்டி வேலைக்கு போறவர்கள் திரும்பிவரும்போது ஆற்றில் குளித்ததுதான் வீடு வருவார்கள். அன்நேரம் ஒரே சனக்கூட்டமாக இருக்கும்.

அந்த ரோட்டில் தினமும் இரண்டு தடவை மட்டுமே பஸ் சென்றுவந்தது. காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு முல்லைத் தீவுக்குசென்று திரும்பும் ஒரு பஸ். அது போல மாலையில் ஒன்று. பின் கிளிநொச்சி "டிப்போ" விலிருந்து ஒருபஸ் ஓடியதாகவும் நினைவு. அது முன்பா அல்லது சற்று பின்நாளிலா என்பது சரியாக நினைவில்லை.

அக்காலத்தில் அப்பாவிடம் ஒரு "ஏ போட்டி"க் கார் இருந்தது அதன் றைவராக "கொப்பா" என்றொருவர் இருந்தார். யாராவது சுகவீகமுற்றால் அக்காரில் கிளிநொச்சிக்கு ஆஸ்பத்திரிக்கு கொண்டோடுவார்கள். பாம்பு கடிச்சு போன "கேஸ்" தான் அனேகம்.

யார் இறந்தாலும் அந்தக் காரில் மேல் கரியரில் வைத்துத்தான் சவஊர்வலம் நடக்கும். அப்போது சுடலை நெத்தலியாறு தாண்டி ஒரு அரைக்கட்டைக்கப்பால் இருந்தது. ஊர்வலத்தின் முன் பறையோடு வேசமிட்டுப் புலியாட்டம் பறைமேளக்கூத்து எல்லாம் பார்க்கலாம்.

அம்மாவுக்கு உந்தக் கலை கலாசாரம் கத்தரிக்காயெல்லாம் தெரியாது. அவவுக்கு அது பற்றிய எந்தப் பிரக்ஞையும் இல்லை. "உவங்கள் சும்மா குடிச்சுப்போட்டு ஆடுறான்கள்" என்று சொல்வார்.

அவவின் பிரச்சனையெல்லாம் தங்களுடைய காரில் சவம் கொண்டு போகிறார்களே என்ற கொதிப்பு மட்டுந்தான். அன்று முழுவதும் அப்பாவை திட்டியபடியே இருப்பா.

இந்த விடையம் "கொப்பா"வுக்கு நல்லாகத் தெரியும். அவர் சுடலைச் சடங்கு முடிந்து வரும்போது நெத்தலியாறில் காரை நிறுத்தி நன்றாகக் கழுவித் துடைத்து கொண்டு வந்து வீட்டின் முன்நிறுத்திவிட்டு நைஸாகப் போய்விடுவார்.

அன்று இரவு முழுவதும் அப்பாவுக்கு அரிச்சனைதான். "இனி நான் செத்தாலும் சவம் ஏற்றிய உந்தக்காரில் ஏறமாட்டேன்" என்று அடம் பிடிப்பார். காலையில் எல்லாம் சுமூகமாகி விடும்.

முல்லைத்தீவு ரோட்டில் பத்தாங்கட்டைக்கு அண்மையாக ஒரு கிறவல் பாதை பிரிந்து வடக்கில் சுண்டிக்குளம் கடற்கரைக்கு செல்லும். அங்கு மாதகல் மயிலிட்டி போன்ற இடங்களில் இருந்து பெரும் சம்மாட்டிமார் வந்து வாடி போட்டு கரைவலைத் தொழில் செய்வார்கள்.

தருமபுரத்திலிருந்து ஆறேழு மையில் தூரம். சீசன் காலத்தில் வியாபாரிகள் சைக்கிலில் சென்று மீன்வாங்கி வந்து விற்பார்கள். சீஸன் இல்லாத காலத்தில் கடற்கரைக்கு முன் உள்ள களப்பிலிருந்து இறால் மற்றும் பெரு நண்டு கொண்டு வருவார்கள்.

பெரிய கறுப்பு நண்டுகள். சையிக்கில் கரியரில் கட்டிய பெட்டிக்குள் உயிருடன் இருக்கும். பெட்டியால் எடுத்து தராசில் போடுமுன் தெறித்து விழுந்து ஓடத் தொடங்கும். நல்ல கொழுத்து சினைப்பிடித்த நண்டுகள். அதை சுடுநீரில் அவித்த பின்பே நல்ல இஞ்சி பூடு போட்டு அம்மா கறிவைப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் குளத்துமீன் கொண்டுவந்து தெருவோரத்தில் பரப்பி வைத்து விற்பார்கள். அவற்றை மூன்றுநான்கு எனச் சேர்த்து கோர் வையாக கட்டியிருப்பார்கள். யப்பான் குளறி மீன்தான் அதிகம். சிலசமையம் அவை உயி ரோடு துடித்தபடி மூச்செடுக்கும். அரிதாய் குளத்து விரால் இருக்கும். ஒருபோதும் அம்மா அவற்றை வாங்கியதில்லை. குளத்து மீன் கடும் வெடுக்கு என்று மூக்கை சுழிப்பார்.

ஏதாவதொன்று மறுக்கப்படும் போது அதை செய்துபார்க்க ஆசை எழுமல்லவா. பின்நாளில் விரால் மீனை தேடித்தேடி சுவைத்து ரசித்து உண்டிருக்கிறேன்.

அனேகநாட்களில் இறைச்சி கிடைக் கும். மான் மரை காட்டுப்பன்றி ஏதாவதொன்று கறிக்கு அகப்படும். சில சமையங்களில் உயி ரோடு உடும்பு கொண்டுவருவார்கள். அதன் சுவையே தனி.

ஐந்தாம் புளொக் சந்தியில் ஒரு பல சரக்கு கடை இருந்தது. பகலைவிடவும் மாலை யில் "பெற்றோல் மாக்ஸ்" சில் வியாபாரம் களைகட்டும். வெத்திலை பாக்கு புகையிலையி லிருந்து அரிசி பருப்பு சாடின் மீன்ரின் போன்ற வையே அதிகம் அழியும். அதில் ஜீவா என் றொரு பையன் வேலை செய்தான். அவன் மீதும் அந்தப் பெயர் மீதும் எங்கள் வீட்டில் எல்லோருக் கும் பிரியம் அதிகம். பின் நாளில் என் தம்பி ஒருவனை ஜீவா என்றே அழைப் போம்.

தருமபுரத்துக்கு அப்பால் சுண்டிக்குளம் பாதையில் ஒரு பத்து ஏக்கர் திட்டம் இருந்தது. அது எம்.பி கோட்டா மூலம் வழங்கப்பட்ட காணித்திட்டம்.

அப்போதிருந்த "எம்.பி" மார் வயல் செய்பவர்களுக்கு எங்கே காணி கொடுத்தார் கள். எல்லாம் அவர்கள் பின்னாலிருந்த பெரும் பணக்காரருக்கே கிடைத்தது. அம்மாவின் உறவு முறையில் இருந்த ஒருவருக்கு அந்த பத்தேக்கர் திட்டத்தில் காணியிருந்தது.

அவர் வெள்ளையும் சொள்ளையுமாக வாழ்பவர். ஒருபோதும் வயல் செய்ய அந்தக் காட்டுக்குள் வரப்போவதும் இல்லை. சும்மா வந்த சொத்து என்ற அடிப்படையில் அதை அவர் எடுத்திருந்தார்.

அப்பா தருமபுரத்தில் இருப்பதை அறிந்து விரும்பினால் இதை வெட்டி செய்யும்படி சொல்லியிருந்தார். அப்பா அதற்குள் ஒரு ஆறு ஏக்கர் வரையில் வெட்டி வயல் செய்தார்.

வேறும் சிலர் காடுவெட்டிபயிர் செய்ய முற்பட்டார்கள் அவர்களுக்காக காடுவெட்டிக் கொடுக்கும் ஒப்பந்தகாரனாயும் அப்பா இருந் தார். அதனால் காடுவெட்டுதல் கட்டை பிடுங்கு தல் மரங்களை ஒதுக்கி வேலி அமைத்தல் மந்துகொத்துதல் என தருமபுரத்தில் இருந்த பலருக்கு தொடர்ச்சியாக வருவாய் இருந்தது.

அது வானம் பார்த்த பூமி. பெரிய யானைக்காடு. விதைத்து காவலிருந்து கதிர் அறுத்து நெல்லாகி வீடுவந்து சேர்ந்தால்தான் உண்டு. சிலசமயம் விதை நெல்லுக்கூட தேறாது,

சிலசமையம் வாய்க்கும். சிலசமயம் வானம் பொய்த்துவிடும். பல வேளைகளில் யானையின் அட்டகாசம் தாங்க முடியாது.

அதனால் அடுத்தடுத்த வருடத்தில் பலர் வயலை கைவிட்டுச் சென்றனர். பலகாணிகள் மந்து முளைத்து மீளக்காடாகிக் கிடந்தது.

ஏதோ சாப்பாட்டுக்காக வரட்டும் என்று அப்பா தொடர்ந்து செய்து கொண்டிருந் தார்.

ஆனால் உண்மைக் காரணம் அது வல்ல. அவருக்குகாடு என்றால் பிரியம். காட்டுக் குள் வாழ்வேண்டும் அவ்வளவே. காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கையே அவர் தேர்ந்த விருப்புவாழ்க்கை. சாப்பாடு கூடத்தேவையில்லை. தேநீரும் பீடியும் இருந்தால் போதும். இரண்டுமூன்று நாட்களைக் காட்டுக்குள் கழித்துவிடுவார், அம்மா அதற்கு நேர் எதிரானவர். அவரது போக்கிற்கு தருமபுர வாழ்க்கை ஒத்துவரவில்லை. எப்போ ஊர் போய் சேருவேன் என்பது தான் அவர் குறி. அதனால் ஒவ்வொன்றிலும் குறைகண்டு கொண்டே இருப்பார்.

ஒரு சீசனில் 'சக்கரைப்பாண்டி' வண்டு வரும். மாலையில் விளக்கு வைத்தால் அந்த வெளிச்சத்தை நோக்கி மொய்க்கும். கெட்ட நாற்றம். சாப்பாட்டுகோப்பைக்குள் விழுந்தால் அவ்வளவுதான். அத்தனையும் நாசம். சில சமயம் காதுக்குள் நுழைந்துவிடும். அது பின் புறமாக நகராது, பெரும் வேதனை. அதை அகற்றுவதென்பது பெரும் சோதனைதான்.

அக்காலங்களிலெல்லாம் நாங்கள் இருள்வதற்கு முன்பே இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொள்வோம். சில சமையம் விளக்கு கொழுத்துவதே இல்லை. நிலாக்காலம் எனில் முற்றத்தில் இருந்து உண்போம். இந்தசக்கரைப் பாண்டி காலம் வந்தால் அம்மா புறுபுறுத்தபடியே இருப்பார்.

தீபாவளி வந்தால் தருமபுரத்திற்க்கு புதுத்தெம்பு வந்துவிடும். தருமபுரத்தின் பெரும் பண்டிகை அதுதான். எல்லோரும் அதற்கு முதல்சனிக்கிழமை கிளிநொச்சி சந்தைக்கு சென்று பண்டிகைக்கான பொருட்கள் துண்மணி புடவைகள் என வாங்கி வருவார்கள். இரண்டு மூன்று நாட்கள் கொண்டாட்டந்தான்.

எது இல்லையோ சாராய வியாபாரம் மட்டும் சூடுபிடித்துவிடும். காச்சு சாராயந்தான் அதிகம். அது எத்தகை பொலீஸ் கெடுபிடியையும் வெற்றிகொள்ளும்.

அதைவிட்டால் புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவில் பொங்கல் பண்டிகை க்கு ஊர் திரளும். அப்பா புளியம்பொக்கணை கோவில் உரிமையாளர் வீட்டுக்கு அடிக்கடி போய்வருவார். அவர்கள் வீட்டில் பாம்புகள் இயல்பாக உலாவுவதாகவும் அவர்களின் சொற் கேட்டு பாம்புகள் நடப்பதாகவும் அப்பா சொல் வார். எனக்கும் ஒரு முறைபோய் பார்த்துவர விருப்பம் இருந்தது. ஆனால் ஒருபோதும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

எங்கள் வீட்டின் கோடிப்புறம் கறை யான் புற்றுகள் வளரத் தொடங்கியிருந்தன.. அம்மா மீன் கழுவிய தண்ணீரை கொண்டு சென்று அவற்றின்மீது ஊற்றுவார். கேட்டால் மீன் வெடிலுக்க பாம்பு வராதென்பார்.

எப்படியோ ஒரு இரவு பாம்பு வந்து விட்டது. அம்மா எழுந்து பாம்பு பாம்பு எனக் குளறத் தொடங்கிவிட்டார். முதலில் அப்பா வெறும் மனப்பிரமை எனப் அம்மாவை அதட்டி விட்டார்

அம்மா எங்கள் எல்லோரையும் தூக்கிக் கொண்டு அறைக்கு வெளியே வந்து விட்டார். எப்படியோ அப்பா எலியை துரத்திச் சென்ற பாம்பை கண்டு கொண்டார். நல்ல பெரிய உருப்படி. நல்லபாம்பு என்று சொன்னார் கள்.

யாரும் அடிக்கத் தயாராக இல்லை. ஆளரவங்கேட்டு அதுவும் எங்கோ ஒளிந்து விட்டது. அப்போது அம்மா கர்ப்பமாக இருந்தார். அப்பா அடிக்க முனைந்தபோது அடிக்கக்கூடாது என அம்மா கெஞ்சத் தொடங்கிவிட்டார். அதனால் பாம்பை எப்படி அறையைவிட்டு விலக்குவது என்பதிலேயே குறி இருந்தது. நீண்ட தடியின் நுனியில் துணியை சுற்றி அதில் மண்ணெ ணையை ஊற்றி பாம்பு மறைந்த இடங்களுக்கு சொருகினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இரண்டுமணிப் போராட்டத்தின் பின் பாம்பு தானாகவே விலகிச் சென்றது. அம்மா நாகதம்பிரானுக்கு நேத்திவைத்து ஒரு முடிச்சில் பணம் கட்டி வைத்தார். அடுத்தடுத்த வாரத்தில் நாகதம்பிரான் கோவிலுக்கு சென்று பொங்கல்வைத்து வந்தோம்.

அறுபத்தியிரண்டாம் ஆண்டு. அந்த வருடம் நல்ல விளைச்சல் என்று அப்பா சொன்னார். அம்மா நிறைமாதக் கர்ப்பிணி. பொங்கல் கழிய அருவி வெட்டி சூடடுக்கிவிட்டு வந்த அப்பாவின் முகத்தில் மகிழ்ச்சி இருந்தது.

அப்போது எட்டுக்கிரகங்கள் ஒரு வீட்டில் கூடுவதாகவும் உலகம் பேரழிவுகளை சந்திக்கப் போவதாகவும் சோதிடர்கள் பேசிக் கொண்டார்கள் அம்மாவின் மகப்பேற்றுக் காலம் அதற்குள்ளே அமைவதால் அம்மாவின் வற்புறுத் தலில் ஊருக்கு வந்திருந்தோம்.

எட்டுக் கிரகத்தில் ஒரு கிரகம் விலகிப் போக ஏழுகிரகம் ஒருவீட்டில் அமைந்த கிரக நிலையில் தம்பி பிறந்தான். சுகப்பிரசவந்தான். எல்லோருக்கும் மகிழ்ச்சி. உள்ளூர் சோதிட விற்பன்னர்கள் ஆய்வு என்ற பெயரில் அவனது பலனை கணித்து புழுகியிருந்தனர்.

அடுத்தவாரம் அப்பா தருமபுரம் போய் வயல்பார்த்து வருவதாக சொல்லி புறப்பட்டார்.

மூன்றாம் நாட்கள் கழிந்திருக்கும். மிகவும் முகம் மிகவாடிச்சோர்ந்து வீடு வந்தார் முதலில் எதுவும் சொல்லும் மனநிலையில் அவர் இல்லை. மறுநாள் மகப்பேறு பார்க்கவந்த உறவினர்களுடன் பேசும்போதுதான் நாங்களும் கேட்டோம்.

அப்பா வயல் பக்கம் போயிருந்தாராம் தூரத்தில் போகும்போதே பெரும்குடில் போல் அடுக்கிவைத்த சூட்டின் முகடுதெரியவில்லை. அதிர்ச்சியில் விறைத்துப் போக அங்கு பல யானைகள் தென்பட்டன. ஒன்று இரண்டல்ல பதினாறு யானைகள்.

அடுக்கிவைத்த சூட்டைப்பிரித்தெறிந்து அதை மெத்தையாக்கி ஒரு யானைக்கு பிரசவம் பார்த்திருக்கிறன. மிதித்துப் பரப்பிய கதிர் படுக் கையின் மீது தன் குட்டிக்கு பாலூடிய படி நின்ற தாம் தாய் யானை. பிறகென்ன? சொல்லவா வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் (Dramatic Texts) ஓர் பார்வை

இனிய. எஸ்.ரி.குமரன் B.A (Hons),
நாடகத்துறை ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

ஈழத்து நாடக வரலாற்றுக்கு பங்களிப்பு செய்தவர்கள் பலராவர். அவர்களுள் முக்கியத் துவம் வாய்ந்தவராக குழந்தை ம.சண்முக கம் அவர்கள் விளங்குகின்றார். இவருடைய நாடகப் பங்களிப்புகளில் மொழிபெயர்ப்பு நாடகங்க ளுக்கான பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. குழந்தை ம.சண்முக லிங்கம் அவர்களால் மொழி பெயர்ப்பு செய்யப் பட்ட நாடகபாடங்கள் கிடைப்பனவுத் தகவல்க ளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இவ ரால் இதுவரை 33 வரையான மொழிபெயர்ப்பு நாடகபாடங்களும் ஒரு தழுவல் நாடகமும் ஈழத்து நாடக வரலாற்றுக்காக வழங்கப்பட்டுள் ளது. அந் நாடகபாடங்களுள் சில மூலப்பிரதிகள் தொலைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றது. எனவே கிடைப்பனவு தகவல்களின் அடிப்படையிலும் அவருடனான கலந்துரையாடல் மூலமும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் நாடகபாடங்கள் (Dramatic Texts) ஆய்வுக்குட்படுத் தப்பட்டு இக்கட்டுரை வரையப்படுகின்றது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் (Dramatic Texts) தொடர்பான பட்டியற்படுத்தல்

நாடகம் ஆண்டு	மூலமொழி	மூலமொழி ஆசிரியர்	ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்	தமிழ் மொழி பெயர்ப்பு ஆண்டு
உலைவைப்போர் (The Pot Boiler)	ஆங்கிலம்	ஜோர்ஸ்ட்டன் போர்க்	----	2005
அந்திமாலைப் பாடலொன்று (The Swan Song)	ரஷ்யா	அன்ரன் செக்கோவ் (Anton Chekhov)	கோன்ஸ்டன்ட் கார்னெட்	28.1.2005
தான் விரும்பாத்தியாகி ஒருவர் (The anviling martyer)	ரஷ்யா	அன்ரன் செக்கோவ் (Anton Chekhov)	கோன்ஸ்டன்ட் கார்னெட்	1.2.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் (The Wedding)	ரஷ்யா	அன்ரன் செக்கோவ் (Anton Chekhov)	கோன்ஸ்டன்ட் கார்னெட்	8.2.2005
மடோனாடயனோறா (madona dajanora)	ஜேர்மன்	ஹியுகோ வொன் ஹொவ்மன்ஸ்த்தவ்	ஹறிபெட் பெட்டிபோஸ்	2.3. 2005
பட்டிக்காட்டான் (The Boor)	ரஷ்யா	அன்ரன் செக்கோவ் (Anton Chekhov)	ஹில்மர் பகேஜ்	11.4.2005
அகமெம்மன் (Agamemman)	கிரேக்கம்	ஈஸ்கலஸ்	Poul Roche	
வீரத்தாயும் அவளது பிள்ளைகளும்	ஜேர்மன்	பிரக்ரட்	Eric Bently	24.11.1999
ஈடிப்பஸ்	கிரேக்கம்	சோபோக்கிளிஸ்	E.F. Waltling	1995
அன்ரிக்கனி	கிரேக்கம்	சோபோக்கிளிஸ்	Sir Grough jank	2008
சோக்கேசிய வெண்கட்டி வட்டம் (Caucasian Chalk Circle)	ஜேர்மன்	பிரக்ரட்	Eric Bently	25.2.2000
ஒரு விற்பனையாளரின் மரணம் (Death of a Selesman)	ஆங்கிலம்	அதர்மில்லர்	------	10.5.1999
கொடோவுக்காக காத்திருத்தல் (wating for Goded)	ஆங்கிலம்	சாமுவேல் பெக்கட்	------	
செறிப்பழத்தோட்டம் (செறியோசாட்)	ரஷ்யா	அன்ரன் செக்கோவ்	Sir Grough jank	1997
ஒரு பாவையின் வீடு (Doll House)	ஆங்கிலம்	ஹென்றிஇப்சன் (hentry Epsan)	------	1991
வேதாளம் (Dragan)	ரஷ்யா	----	------	1987
வெவ்வேறு வழிகளில் அமைதி (A Separate Pace)		டொம் ஸ்டொப்பர்ட்	Johyn howard Gbbon	10.3.2005
அன்பமுதுாறும் அயலார் (Love of one's Neghbor);	ரஷ்யா	லியோனிட் அன்ட் செய்	தோமஸ் செல்ட்டர்	27.4.2005
பிரித்தெடுப்பு (Abstraction)	ஜப்பான்	------	பி.எச். சோம்பர்லின்	2006
சைனிஸ்சோக்சேக்கிள் (Chinese Chalk Circle)	சீனா	------	------	
இந்திரன் தீர்ப்பு (The Jsdment on Indira)	இந்தியா (ஆங்கிலம்)	Dun Gpal Makarji	------	11.2.2005
தேனீர்ச்சாலை (Tea House)	சீனா	------	------	
ஒஸ்ரியாப்பிளே	ஜேர்மன்	Ven Hopmenstal (Hugo)	------	
மேற்கின் அரச மாதா (Quain mother of the west)	ஜப்பான்	சியாபோ	Carl seasar	2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனஹீரா (Knahira)	ஜப்பான்	Zeami (சியாமி)	Stan Leigh H Jones	2005
செக்கி டெராவில் கொமாச்சி (Komachi at Sekider)	ஜப்பான்	Kanze Motokiyo Zeami	Baren braze	2005
செமிமறு (Semimaru)	ஜப்பான்	Kanze Motokiyo Zeami	Susan Matisaff	2005
சோக்குன் (Shokun)	ஜப்பான்	----	Carl Sesar	2005
நக்கமிட்சு (Nakamitsu)	ஜப்பான்	Kanze Motokiyo Zeami	பிச் சேம்பர்லின்	2005
துறவி (The sanyasi)	இந்தியா (ஆங்கிலம்)	ரவீந்திர நாத் தாகூர்	-----	1990
கட்டுண்டபுறொமீதியஸ (Promothius pound)	கிரேக்கம்	ஈஸ்கலஸ்	ஜே.எஸ். .பிளக்கி	15.10.2006
சிவப்பு விளக்கு (Red Lanten)	சீனா	----	-----	
பசு (Busu)	ஜப்பான்	----	Donale kene	1990

கண்டறியாத கதை (தழுவல்நாடகம்) –– – ஆங்கில மொழியில் வந்த கதையை அடிப் படையாக கொண்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்டது.

மொழிபெயர்ப்பு நாடக பாடங்களின் (Dramatic Texts) வகைப்பாடுகள்

இன்றைய சூழலில் மொழிபெயர்ப்பின் அவசியம் நன்குணரப்பட்டுள்ளது. அவ்வகை யில் நாடகபாடங்களிலும் மொழிபெயர்ப்பானது செல்வாக்கு செலுத்துகின்ற பண்பினை இன்றைய சூழலில் காணக்கூடியதாக உள்ளது. இந்த நோக்கிலேயே ஈழத்து நாடக வரலாற்றிலும் தேவைப்பாடு கருதி மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு நோக்குகையில் குழந்தை ம.சண்முகலிங்கத் தின் மொழிபெயர்ப்பு நாடகபாடங்களின் முக்கி யத்துவமும் இன்றியமையாததாக காணப்படு கின்றது.

இவருடைய நாடகபாடங்களை வகைப் பாட்டிற்குள் கொண்டுவரும் போது மொழி அடிப் படையிலான பிரதான வகைப்பாட்டை பின்வரு மாறு நோக்கலாம்.

- மூல மொழியாக ஆங்கிலத்தில் உள்ள நாடக பாடத்தை தழிழில் மொழிபெயர்ப்பு செய்தது.
- பிற மொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதை தமிழில் மொழி பெயர்ப்பு செய்தது. என இருவகைப்பாட்டிற் குள் கொண்டுவரலாம்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் மூல மொழி ஆங்கிலத்தில் இருந்து தழிழில் மொழிபெயர்ப்பு செய்த நாடகத்தினை நோக் கும் போது பின்வரும் நாடக பாடங்களை குறிப் பிடலாம்.

உலை வைப்போர் (The Pot Boiler) கொடோவுக்காக காத்திருத்தல் (Waiting for goaded), துறவி, இந்திரன் தீர்ப்பு கண்டறியாத கதை (தழுவல் நாடகதம்)

பிற மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்த நாடகபாடத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்த நாடக பாடங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

சிவப்பு விளக்கு, கட்டுண்டபுறோமீதியஸ், நக்கமிட்சு, சோக்கேசிய வெண்கட்டி வட்டம், சோக்குன், செமிறு, செக்கி டெராவில் கொமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்சி, கனஹிரா, மேற்கின் அரச மாதா, ஒஸ்ரியாபிளே, தேனீர்ச்சாலை, சைனிஸ்சோக்சேக்கிள், பிரித்தெடுப்பு, வேதாளம், ஒருபாவையின் வீடு, செறிப்பழத்தோட்டம், அன்ரிக்கனி, ஈடிப்பஸ், மதகறேஜ், பட்டிக்காட்டான், மடோன்னா டயனோறா, திருமணம், தான்விரும்பாத்தியாகி ஒருவர், அந்தி மாலைப் பாடலொன்று, வெவ்வேறு வழிகளில் அமைதி, அன்பமுதுாறும் அயலார். போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவருடைய மொழிபெயர்ப்பு நாடபாடத்தை புவியியல் பின்னனி அடிப்படையில் மேலும் வகைப்பாட்டிற்குள் உட்படுத்தலாம்.

- ஐரோப்பிய நாட்டு நாடகபாடங்கள்
- ஆசியநாட்டு நாடக பாடங்கள் என நோக்கலாம்.

ஐரேப்பிய நாட்டு நாடகபாடங்களை பின்வருமாறு நோக்கலாம்.

அகமெம்மன் (கிரேக்கம்), மதகறேஜ், (ஜேர்மன்) ஈடிப்பஸ் (கிரேக்கம்) அன்ரிக்கனி (கிரேக்கம்), கட்டுண்டபுறொமீதியஸ் (கிரேக்கம்), அந்தி மாலைப்பாடலொன்று (ரஷ்யா), தான்விரும்பாத்தியாகிஒருவர் (ரஸ்யா) திருமணம் (ரஸ்யா) பட்டிக்காட்டான் (ரஸ்யா), செறியோசாட் (ரஸ்யா), வேதாளம் (ரஸ்யா), அன்பமுதுாறும் அயலார் (ரஸ்யா), மடோன்னா டயனோறா (ஜேர்மன்) ஒஸ்ரியாபிளே (ஜேர்மன்), ஒருபாவையின் வீடு, (நோர்வே), கொடோவுக்காக காத்திருத்தல், (ஐரிஸ்), உலைவைப்போர் (அமெரிக்கா), வெவ்வேறு வழிகளில் அமைதி (அமெரிக்கா)

ஆசிய நாட்டு நாடகபாடங்களை பின்வருமாறு நோக்கலாம்.

துறவி (இந்தியா), இந்திரன் தீர்ப்பு (இந்தியா) சைனிஸ்சோக்சேக்கிள் (சீனா), சிவப்பு விளக்கு (சீனா), தேனீர்ச்சாலை (சீனா), மேற்கின் அரசமாதா (ஜப்பான்), கனஹீரா (ஜப்பான்), செக்கிடொராவில் கொமாச்சி (ஜப்பான்), செமிறு (ஜப்பான்), ஷோக்குன் (ஜப்பான்), நக்கமிட்சு (ஜப்பான்), புசு (ஜப்பான்)

மொழிபெயர்ப்பு நாடகபாடங்களின் (Dramatic Texts) தன்மை

பல்வேறுபட்ட பின்னனிகள் பண்புகள் உள்ளடக்கங்கள் கொண்ட நாடகபாடங்கள் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந் நாடக பாடங்களின் தன்மையை நோக்கும் போது ஒவ்வொன்றும் தனித்துவமான நாடகபாடமாக காணப்படுகின்றது.

பெரும்பாலான நாடகபாடங்கள் அரங்கியல் துறைசார்ந்து கற்கை நெறியை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்ட தன்மையினை அவதானிக்கலாம். வெவ்வேறு அரங்கு சார்ந்து கற்கைகளை மேற்கொள்வதன் ஊடாக அவை பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடனும் ஆற்றுகை செய்யும் நோக்குடனும் அரங்கத்துறை சார்ந்தவர்கட்காகவே மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தன்மையினை அவதானிக்கலாம். "ஒரு நாடகபாடத்தை முழுமையாக கற்கும் போது அந்நாடகம் பற்றி ஆழமாக அறிய வாய்ப்பேற்படுகின்றது" 1 என குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வகையில் நாடகத்துறை சார்ந்த ஆழகற்றலுக்கு வழிசமைக்கும் வகையை மையமாகக் கொண்டு இவரது நாடகபாடங்கள் மொழிபெயர்க்கப்பட்டது. காரணம் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கக்லைகளும் விரிவுரையாளராக இருந்தமையும் பாடசாலை மாணவர்கட்கு நாடகமும் அரங்கியலும் கற்கையை போதித்தமையும் மற்றும் இலங்கையில் முதல் நாடக டிப்ளோமா பயிற்ச்சி நெறியை கற்றுக்கொண்டவர்களுள் ஒருவராகவும் பிற புகழ் பெற்ற நாடகத்துறை சார்ந்தோருடைய தொடர்பின் காரணமாகவும் அவரிடம் இருந்த நாடகம் பற்றிய இயல்பான அறிவும் காரணமாக பிற நாடகங்களை ஆழமாக பிரக்ஞை பூர்வமாக அறியும் நோக்குடன் இவரால் மொழிபெயர்ப்பு நாடகபாடங்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தன்மையினை அவதானிக்கலாம். அவற்றில் பல பல்கலைக்கழகத்தில் நாடகபாடம் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகவரலாறு சார்ந்த கற்கை நெறியாக கற்பிக் கப்பட்டுள்ளது. உ–ம்: ஈடிப்பஸ். ஒருபாவையின் வீடு, சிவப்பு விளக்கு, புசு, மதகறேஜ், அன்பமு துாறும் அயலார் ஈடிப்பஸ் ஒருபாவையின் வீடு அன்ரிக்னி, உயர்தர மாணவர்களுக்குரிய கற்கை நெறிக்குரிய பாடமாக விளங்கியது. இவ் நாடக பாடங்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தன் ஊடாக மாணவர்களால் கற்பதற்கு வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. ரவீந்திரநாத் தாகூருடைய துறவி நாடகபாடம் சாதாரண தர மாணவர்கட்கு கற்ககைக்குரிய நாடகபாட மாக விளங்குகின்றது.

"ஒரு நாடகபாடத்தை மொழிபெயர்ப்பத னால் பிற பண்பாட்டுதளங்கள் நமது நாடக மரபிற்குள் வந்து சேர்கின்றன. ஒரு நாடகத்தை மொழிபெயர்க்கும் போது நமது பண்பாட்டு தளத்தினையும் அடிப்படையாக கொண்டு மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதற்காக நாடகபாடத்தின் பண்பாட்டுத்தளத்தை முழுக்க மாற்றத்திற்கு கொண்டுவரக்கூடாது. மொழி பெயர்ப்பது என்பது நாடக வசனங்களை அப்ப டியே மொழிபெயர்ப்பது அல்ல. நாடக உணர்வு களுக்கு செயல்முறைகளுக்கு ஆற்றுகை நிலைக்கு பொருந்தக் கூடிய நிலையில் மொழி பெயர்த்தல் வேண்டும்"2 இவ்வகையில் இவரு டைய மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் மேற் கூறிய பண்புகளுக்கு இயைவாக மொழி பெயர்க்கப்பட்டுள்ள தன்மையினை காணலாம்.

இவரால் கூடுதலாக ரஷ்ய நாட்டு நாடக பாடங்களும் ஜப்பானிய நாட்டு நாடகபாடங் களும் மொழிபெயர்க்கப்பட்ட தன்மையினை அவதானிக்கலாம். அத்தோடு உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியர்களான அன்ரன் செக்கோவ், பிரக்ற், ஹென்றி இப்சன், சாமுவேல் பெக்கற், ஆதர் மில்லர், ஈஸ்கலஸ், சியாமி, போன்றோரின் நாடகபாடங்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட் டுள்ளது.

மொழிநடையாக்கத்தை கவனிக்கும் போது கூடுதலான நாடகபாடங்களில் ஓரளவு செந்தமிழ்ப்படுத்தப்பட்ட, உரைநடையினையும் குறிப்பிட்ட சில நாடக பாடங்களில் பேச்சுத்தமிழ் (யாழ்ப்பாணத்து தமிழ்) உரைநடையினையும் கையாண்டுள்ளார். நாடகபாடங்களின் காலம் தன்மை வகை பாத்திர சமூஅந்தஸ்து போன்ற வற்றின் அடிப்படையை கவனத்தில் கொண்டு மொழிநடையாக்கத்தை கையாண்டுள்ளார். உயர்வர்க்க பிரபுக்கள் சார் பாத்திரங்களுக்கு செந்தமிழ் மொழிநடையை கையாண்டுள்ளார். நாடக பாடங்களில் வரும் கவிதைகள் அதன் தன்மை மாறாத வகையில் செந்தமிழ் பாங்கில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஒருபாவையின் வீடு நாடகபாடத்தின் மொழிநடையை நோக்கும் போது "சொல்ல முடியாத வெறுமை இனி வாழ்வதற்கென்று முடியவில்லை" 3 என ஓரளவு செந்தமிழ்பாங் கான மொழிநடையை கொண்டுள்ளது. கிரேக்க ஜப்பானிய நாடகபாடங்கள் பொதுவாக செந் தமிழ்பாங்கான மொழிநடையினை கொண்டு காணப்படுகின்றது. காரணம் நாடக பாத்திரங் கள் உயர்வர்க்க பாத்திரங்களை கொண்டு காணப்படுவதேயாகும். ஜப்பானிய நாடகபாட மான செக்கிடெமாராவில் கொமாச்சியின் உரை நடையினை நோக்கம் போது "தங்கள் விளக்க வார்த்தைகளுக்கு நன்றி. கடந்த காலத்திலிருந்து எண்ணிலடங்கா பாடல்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவது உண்மை ஆயினும் பெண்களால் ஆக் கப்பட்டவை அரிதாகவே உள்ளன"4. இவ்வாறே ஏனைய ஜப்பானிய நாடககபாடங்களும் மொழி நடையினை கொண்டு காணப்படுகின்றது.

கிரேக்க நாடகபாடமான கட்டுண்ட பறொ மீதியசின் மொழிநடையினை நோக்கும் போது "இதனையும் கேட்கிறேன் எனது நெடுநீள அலைவுகள் தமக்கு எத்தகை தொழும்புகள் தம்மை விதியும் வகுத்தமைத்துள்ளது."5 என செந்தமிழ் பாங்காக காணப்படுகின்றது. இவ் வாறே மற்றைய கிரேக்க நாடகபாடங்களான ஈடிப்பஸ், அன்ரிக்கனி, அகமெம்மன், போன்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் செந்தமிழ் பாங்கான மொழி நடையை கொண்டுள்ளது.

நாடகபாடங்களில் வரும் பாடல்கள் மொழி பெயர்க்கும் போது செந்தமிழ் மொழியிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக

"நடைமெலிந்திங்கு நண்ணிய நங்கை பேசுங்கள் அவளிடம் இரந்துமைக் கேட்கின் றேன்" 6 என கையாளப்பட்டுள்ள தன்மையை காணலாம்.

பேச்சு நடைப்பயன்பாட்டையும் பயன் படுத்தியுள்ளார். சோக்கேசிய வெண்கட்டி வட்டம் நாடகபாடத்தில்" தோழர்களே உங்கட நிகழ்ச்சி நல்லதாய் இருக்கட்டும். விசுவாசமாய் இருந்த படையளிட்டை நான் எசமாட்டியை கூட்டிக்கொண்டு போய்விடுவன்."7 என்ற வகை யில் மொழிநடை காணப்படுகின்றது. திருமணம் நாடகபாடத்தில் "உங்களை மண்டாடிப் பாக்கி றன். ஆக கெஞ்சேலை ஒரு சுரவரிசை எண்டா லும் பாடுங்கோ" 8 எனவும் பட்டிக்காட்டான் நாடகபாடத்தில் "நாங்கள் என்ன செய்ய அவ விட்டை காசில்லை தொண்டைக்குழியிலை கத்தி வைக்கப்பட்ட நிலையிலை ஒருத்தன் நிக்கி றான்"9 என பேச்சுத்தமிழ் கையாளப்பட்டுள்ளது.

பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்ப உரை யாடல்தொனி வேறுபடுகின்றது. உயர்ந்த பாத்தி ரங்களுக்கான உரையாடல் தொனி உயர்வாக வும் சாதாரண பாத்திரத்திற்கான உரையாடல் தொனி தாழ்வாகவும் காணப்படுவதனை அவ தானிக்கலாம்.

தனது மொழிபெயர்ப்பு நாடகபாடத்திற்கு கூடுதலாக செந்தழிழ் மொழிநடையை கையாண்டதற்கான காரணத்தை இவ்வாறு கூறு கின்றார். "எங்கட பிதேச மொழி (யாழ்ப்பாண) மற்ற பிரதேச தமிழனுக்கு விளங்காது. சினிமா வில் பொது மொழி இருப்பது போல தமிழில் பொது மொழி இல்லை. எனவே எப்பிரதேசத்து தமிழனும் படித்து புரிந்து கொள்ள உதவும் பொது மொழியாக செந்தமிழ் அமையும். என கருதி மொழிபெயர்த்தது."10. என்கின்றார்.

மொழிபெயர்ப்பு செய்யும் போது உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து உணர்வு மறாத வகையில் மொழிநடையாக்கம் செய்யப் படுவது இவரது நாடகபாடங்களின் தனிச்சிறப் பாகும். மொழிபெயர்ப்பு என்பது அப்படியே தமிழில் மொழிபெயர்ப்பதில்லை. அப்படி மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்க்கும் மொழிபாதிப்படைகின்றது. இதனைக்கருத்தில் கொண்டு மூல மொழியில் இருந்து மொழி பெயர்க்கும் போது மொழிச் செழுமை குன்றாத வகையில் இவருடைய மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள் அமைவதனை அவதானிக்கலாம்.

ஆற்றுகை வெளியில் மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள்

நாடகபாடமானது ஆற்றுகை நிலைக்கு வருகின்ற போதே அது முழுமை பெறுகின்றது. இவரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நாடக பாடங்களில் சில மட்டுமே ஆற்றுகை நிலைக்கு கொண்டுவரப்பட்ட தன்மையை காணலாம். அவ் வாறு ஆற்றுகை வெளியில் முகிழ்ந்த நாடக பாட ங்களை நோக்கலாம். சிவப்பு விளக்கு, துறவி, ஒருபாவையின் வீடு, ஈடிப்பஸ், அன்பமுதூறும் அயலார், வேதாளம், புசு (Busu) போன்றனவாகும்.

சிவப்பு விளக்கு நாடகபாடமானது யாழ்ப் பாணப்பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக் குழுவினால் 17.7.2004 இல் இருநேர காட்சிக ளாக கைலாசபதி கலையரங்கில் மேடையேற் றப்பட்டது. இதற்கான நெறியாள்கையை நாடக மும் அரங்கக்கலைகழும் சிரேஸ்ட விரிவுரை யாளர் க. ரதீதரன் மேற்கொண்டார்.

துறவி நாடகபாடமானது யாழ் சுண்டுக் குளி மகளீர்கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. இதற்கான நெறியாள்கையை Dr.சிவயோகன் மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபாவையின் வீடு நாடகத்திற்கான நெறியாள்கையை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். இந்நாடகம் சுண்டுக்குழி மகளீர் கல்லூரியில் 3தடவையும். கலையரசு சொர்ணலிங்கத்தின் நினைவு தினத்தில் அவரது மகன் இல்லத்தில் ஒரு தடவையும் மேடையேற்றப்பட்டது.

ஈடிப்பஸ் நாடகபாடமானது சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. இதற்கான நெறியாள்கையை சிரேஸ்ட விரிவுரையாளர் க. ரதீதரன் மேற்கொண்டிருந்தர்.

அன்பமுதுாறும அயலார் நாடகபாடமானது யாழ்பல்கலைக்கழக நாடகமும் அரங்கக்லைகளும் மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது. இதற்கான நெறியாள்கையை சிரேஸ்ட விரிவுரையாளர் க.ரதீதரன் மேற்கொண்டிருந்தார்.

யாழ்பல்கலைக்கழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட வேதாளம் நாடகத்திற்கான நெறியாள்கையை சிரேஸ்ட விரிவுரையாளர் க.ரதீதரன் மேற்கொண்டிருந்தார். பசு நாடகபாடமானது பல்கலைக்கழக மாணவர்களுக்காக ஆற்றுகை நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

அந்திமாலைப்பாடலொன்று என்ற நாடகபாடம் மேடையேற்றுவதற்கான ஒத்திகை இடம் பெற்று இறுதியில் கைவிடப்பட்டது. இதற் கான நெறியாள்கையை, குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். நடிகர்களாக க.ரதீதரன் நவராஜ் ஆகியோர் பங்கு கொண்டனர்.

மொழிபெயர்ப்பு நாடகபாடங்களின் (Dramatic Text's) **வெளியீடுகள்**

எந்தவொரு கலைப்படைப்பிற்கும் அதன் வெளியீட்டுத்தன்மை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. ஒரு படைப்பு வெளியிடப்படுகின்ற போதே அப்படைப்பு பற்றிய பெறுமதியும் தாக்கமும் அதற்கான அங்கீகாரம் அது பற்றிய ஆக்க பூர்வமான விமர்சன ரீதியான கருத்துகள் வெளித்தெரியத் வருகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில் ஒரு படைப்பிற்கு வெளியீடானது இன்றியமையாததாக உள்ளது. மொழிபெயர்ப்பு நாடகபிரதிகள் மொழி பெயர்க்கப்பட்ட பின்னர் அதுபற்றிய வெளியீடுகள் முக்கியமானதாகும். இவரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நாடகபாடங்களின் முழுமையின் வெளியீடு என்பது சந்தேகத்திற்கு உரியது. அவற்றில் ஈடிப்பஸ் மட்டுமே புத்தகமாக வெளிவந்துள்ளது. கூடுதலானவை கையெழுத்து பிரதியிலும் அது சார்ந்த நிழற் பிரதியிலும் துறை சார்ந்த மாணவர்களின் ஆர்வலர்களின் கரங்களில் தவழ்வதை அவதானிக்கலாம். இதனால் இம்மொழிபெயர்ப்பு நாடகபாடம் சார்ந்த வெளியீடு இன்றியமையாதது.

இவற்றில் சில அச்சுப்பிரதி வடிவில் அரங்கத்துறை சார்ந்த சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இவ்வகையில் இவரது மொழிபெயர்ப்பு நாடகபாடத்தை பிரசுரித்து வெளியிடுவதில் கூத்தரங்கம், தாயகம், ஆற்றுகை போன்றன இவரது மொழிபெயர்ப்பு படைப்புகளை வெளியிட்டுள்ளன. இச்சஞ்சிகைகளின் மொழிபெயர்ப்பு நாடகத்துறை சார் வளர்ச்சிக்கு உதவும் பணி பராட்டிற்குரியது. இவ்வகையில் அச்சு வடிவில் வந்த நாடகபாடங்களை நோக்கலாம்.

மேற்கின் அரசமாதா, கனஹீரா, செக்கிடொராவில் கொமாச்சி, செமிறு, ஷோக்குன், ஆகிய நாடகபாடங்கள் திருநெல்வேலி செயற்றிறன் அரங்க இயக்கத்தின் வெளியீடான கூத்தரங்கத்திலும் அந்திமாலைப் பாடலொன்று. கட்டுண்ட புறோமீதியஸ் ஆகியன தாயகம் சஞ்சிகையிலும் துறவி யாழ்ப்பாணம் நாடகப் பயிலகம் திருமறைக்கலாமன்றத்தின் ஆற்றுகை சஞ்சிகையிலும் அன்பமுதுாறும் அயலார் நாடகமும் அரங்கக் கலைகளும் யாழ்பல்கலைக் கழக மாணவர்களால் 2007 இலும். ஈடிப்பஸ் திருநெல்வேலி கனிமொழி வெளியீட்டகத்தால் 1997 ஆம் ஆண்டிலும் அச்சுவடிவில் வெளி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பத்து வரையானவை அச்சு வடிவில் வெளிவந்துள்ளது. ஏனையவை இன்னும் கையெழுத்துப்பிரதியிலேயே காணப்படுகின்றது. ஒருசில நாடகப்பிரதிகள் தவறவிடப் பட்டுள்ள தன்மை காணப்படுகின்றது. மொழி பெயார்ப்பு நாடகபாடங்களின் வெளியீடானது நாடகத்துறை சார்ந்த வளர்ச்சிக்கும் பிற நாட்டு நாடகபாடங்கள் நாடகாசிரியர்கள் பற்றிய அறிதலுக்கும் அரங்கின் வடிவங்கள் நுட்பங்கள் அதன் தன்மைகள் என்பவற்றை அறிவதற்கும் வெளியீடுகள் முக்கியமானதாகும். இவ்வெளியீடுகள் மூலமாக பிறமொழி நாடகபாடங்கள் பற்றி தமிழ் மொழியில் உள்ள நாடக ஆர்வலா் அனைவரும் அறியும் கற்கும் வாய்ப்பு கிட்டும். இதனால் நாடகத்துறை சார்ந்த புதிய தேடலுக்கு வழிசமைக்கும். எனவே இவரது மொழிபெயர்ப்பு நாடகம் சார் வெளியீடு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் நாடக அறிவை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் ஊடு கடத்தியாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி



மகாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகள்

கலாபூஷணம்
இனிய. செல்வராணி சோமசேகரம்பிள்ளை
கிளி.மாவட்ட சைவமங்கையர் கழகச் செயலாளர்

மானிடவாழ்வில் உடலிலும் உயர்ந்தது உள்ளம், உயர்ந்த உள்ளத்துடன் உலக மக்களுக்காக உழைத்தவர் தான் மகாத்மாகாந்தி எனவே தான் அவர் இன்றும் மக்களுடைய உள்ளங்களிலே வாழ்ந்து வருகின்றார். அவ்வாறு வாழ்ந்து கொண்டிருப்பதினாலே 2014 ஒக்ரோபர் 02ம் திகதி அவரது 145 தாவது பிறந்தநாளை உலக மக்கள் கொண்டாடினார்கள். கீழைத்தேச கல்விச் சிந்தனைகளுள் மகாத்மா காந்திக்கு (1869-1948) ஒரு முக்கிய இடமுண்டு. மோகனதாஸ் கரம்சந்திரகாந்தி எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் இந்தியாவிலுள்ள கதியவாட்" எனுமிடத்திலுள்ள போர்பந்தர் என்னும் கிராமத்திலே பிறந்தார். இவர் அரசியல், அகிம்சை, சத்தியாக்கிரகம் ஆன்மீகம் போன்ற விடயங்களிலெல்லாம் பங்களிப்புக்களைச் செய்திருந்த போதும் கல்விக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இவருடைய காலத்தில் இந்திய நாடு அந்நியராட்சிக்காலத்தினுள் அடிமைப்பட்டுக் கிடந்ததையும் மக்கள் பலர் ஆங்கில மோகத்திற்குள் அகப்பட்டுக் கிடந்ததையும், வசதி படைத்தவர்களைக் காட்டிலும் வறுமையுள் வாடுவோராகக் காணப்பட்டமையும் நாட்டில் கிராமங்களே அதிகமாகக் காணப்பட்டமையும் அவரது கல்விச் சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தின.

இவரது கல்விச் சிந்தனைகள் தாய் மொழிக் கல்வி, கிராமங்களை மையமாகக் கொண்ட கல்வி, இயற்கையோடிணைந்த கல்வி, பெண்கல்வி, செயல்வழிக்கல்வி, இலவசக்கல்வி, எல்லோருக்கும் கல்வி என்பனவாக அமைந்திருந்தன. அவரது கல்விச் சிந்தனைகள் எண், எழுத்து, வாசிப்பு, என்பதற்கு மாறாக உள்ளம், கை, அறிவு என்பதாக அமைந்திருந்தது. "கல்வி அறிவை வளர்ப்பது உணர்வுகளை பயன்படுத்துவது, மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தஞ் செய்வது மனிதனின் சமூக நடத்தையை மாற்றியமைப்பது. மக்களால் உள்ளடங்கியிருக்கும் ஆன்மப் பண்புகளைப் படிப்படியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவது" என்கிறார்.

மனிதனுடைய சுயதேவைப்பூர்த்திக்கு அவசியமான கல்வியாக காந்திமகான் ஆதாரக் கல்வியை அறிமுகம் செய்துள்ளார். இவர் ஆபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் ரோல்ஸ் ரோய் பண்ணையில் பெற்ற அனுபவங்களை இந்தியாவிலுள்ள வார்தா (wardha) என்னுமிடத்தில் பரீட்சித்துப் பார்த்ததால் இது வார்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் திட்டமென அழைக்கப்படுகிறது. அம் மகானால் அறிமுகப்படுத்தப்பட்ட "ஆதாரக் கல்வியே" எல்லாக் கல்விக்கும் முதலுணர் வளிப்பதாகக் காணப்படுகின்றது.

ஆதாரக்கல்வி மூலம் ஒருவன் சுய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது இவரது எண்ணமாக இருந்தது. அதாவது ஒருவன் தனக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கங்கள், ஒழுக்க விழுமி யங்கள், ஆற்றல்கள், அறிவு, ஆன்மீகப் பண்பு கள், சமூக இசைவாக்கம் போன்றவற்றைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வாதாரக் கல்வியே சிறந் தது என்பது இவரது கருத்தாகும். இச்சுய தேவை களைப் பூர்த்தி செய்யும் போது அவன் பிறரில்த் தங்கியிருக்க வேண்டியதில்லை.

இதற்காக இவர் பாடசாலைகளில் விவசாயத்தைப் பிரதான பாடமாகவும், நெசவுத் தொழிலை உபபாடமாகவும் செயன்முறை மூலம் கற்பிக்க வேண்டுமென்கின்றார். இவ்வாறு கற்பதனூடாக சகல பாடங்களையும் மாணவர் களிற்குக் கற்பிக்க முடியும் என்கின்றார். உதாரணமாக விவசாய பாடத்தில் யாதேனும் ஒரு பயிரைப் பயிரிடும் போது குறித்த இடத்தில் பயிரிடுவதற்குத் தேவையான விதைகளின் அளவு (கணிதம்) பயிரிட வேண்டிய இடம், நீர், சூரியஒளி, காற்று என்பன போதியளவு கிடைக் கக் கூடியஎளதாகத் தெரிவு செய்யப்படல் (விஞ் ஞானம்) இப்பயிர் செழித்து வரைவதற்கான வேறு இடங்கள் (புவியியல்) பயிரிடுவதற்குப் பொருத்தமான ஆகாரம் (மனையியல்) களைப் பின்றி வேலை செய்வதற்கான பொழுது போக்கு (தேவாரம், பாடல்கள் புராணக் கதைகள் (சமயம், தமிழ் ஒழுக்கம் ... என எல்லாப் பாடங் களையும் இச் செயல்முறைக் கற்பித்தலினூடா கக் கற்பிக்க முடியும்.

அடுத்து ஒவ்வொரு மாணவருக்கும் தமது குலத்தொழிலை உபதொழிலாகக் கற்க வேண்டும் என்கின்றார். இதனூடாக இவர்கள் வீட்டிலிருந்து கிடைக்கின்ற பயிற்சிகள் மூலம் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் "தம் வாழ்க்கையிலே உடலு ழைப்பின் மூலம் பொருட்களைச் சம்பாதித்து உயர்வடைய எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் உண்டாகையால் ஒரு வழக்கறிஞருக்கு சமூகத் தில் எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு உழவனுக்கும் இருக்க வேண்டும்" என்ற கருத்து வெற்றி பெறும் என்று எண்ணினார். ஆனால் இக் கருத்துத் தொடர்பாக பல எதிர்ப்புகளும் விமர் சனங்களும் தோன்றின.

பாடசாலைகளில் தொழிற்கல்வியை வழங்கும் போது பெறப்படும் வெளியீடுகள் விற்பனை செய்யப்பட வேண்டும். அவற்றையே ஆசிரியர்களுக்கு வேதனமாக வழங்கப்பட வேண்டும் எனக் கூறினார். அவ்வாறு செய்யா விடின் ஆசிரியர்கள், மாணவர்களின் செயற்பாட் டில் சிரத்தையுடன் ஈடுபடமாட்டார்கள். வெளி யீடுகள் தரமற்றவையாகிவிடும். உள்ளீடுகளுக் கான செலவுகள் வீணாகிவிடும் என்பது இவரது கருத்தாகும். இவர் உடலுழைப்பைக் கல்வியுடன் இணைத்தார். உடலுழைப்பிற்கு முதலிடம் கொடுக்கும் கல்வியே சிறந்த கல்வி என்பது இவரது கருத்தாகும்.

இவ்வாதாரக் கல்வி மூலம் எழுந்த சர்வோதய (சர்வம் + உதயம்) சமுதாயமானது ஆன்மீக பொருளாதார அரசியல் விடுதலைக்கு வித்திட்டு நாடு விடுதலை பெற்ற பின்னர் சமூகத் தில் சாதி வேற்றுமைகளையும், உடையவர், இல்லாதவர் எனும் சீர்முகட்டையம், கிராமங்கள் நலிவுற்றுப் போவதையும் அகற்ற வேண்டுமெ னத் திடசங்கற்பம் பூண்டார். இவ்வாதாரக் கல்வி யின் உள்நோக்கமாவது சுயதேவைப் பூர்த்தி யின் அடிப்படையில் அமைந்த தேசிய நோக்கை வளர்த்து சுயாட்சி பெறுவதாக அமைந்திருந்தது எனலாம்.

ஆதாரக் கல்வி முறையில் பாரம்பரியக் கற்பித்தல் முறையும் கடைப்பிடிக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. மாணவர் கண்டறி முறையிலேயே அறிவினைப் பெறுவதற்கு உதவுபவர்களாகவே ஆசிரியர்கள் இருக்கின்றனர். இங்கு ஆசிரியர் கள் தன்னால் இயலாத காரியத்தை மாணவர்க ளைச் செய்யும் படி கேட்கக் கூடாது என்கின்றார். இக்கல்வியானது சுயதேவைப் பூர்த்தி கொண்டது மட்டுமன்றி கூட்டுறவு மனப்பான்மையையும் வளர்க்க கூடியது. இதன் மூலம் மாணவர்கள் உழைப்பின் உயர்வை அறிந்து உழைப்பாளிக்கு மதிப்பளிக்கும் தன்மையைப் பெறுகின்றனர். மாணவர்கள் சுயஉதவிக் கூட்டுறவுப் பண்ணை கள் மூலம் பக்குவமடைகின்றனர். இதனால் பிற ருக்கு உதவி புரிந்து வாழும் பண்பு வளர்ந்து சமூக நலவாக் கத்திற்கு பெரிதும் உதவுகின்றது.

இக்கல்வியானது உளவியல், சமூக வியல், பொருளியல் என்பவற்றினடிப்படையில் எழுந்த கல்வி முறையாகும். இதனூடாக நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படுகின்றது. எனவே இக்கல்வியின் நோக்கம் தேசிய மட்டத் திற்கு உயர்ந்து காணப்படுகின்றது. இச் செயல் முறைக் கற்றல் மூலம் மாணவர்களின் ஆராய் வூக்கமும், கூட்டுறவுப் பண்பும் அதிகரிக்கின்றன. பலன் வளர்ச்சி, அறிவாற்றல், செயற்றிறன், கற்பனைத் திறன், சமூக மனப்பாங்கு என்பன ஏற்படுவதைக் காணலாம். இதிலிருந்து தனி மனித வளர்ச்சியினூடாக பொது வளர்ச்சி ஏற்படு கின்றது. தனிமனிதனின் சுயதேவைப் பூர்த்தியி லிருந்து தேசியத்தின் தேவை பூர்த்தி செய்யப்படு கின்றது.

மகாத்மா ஜி மறைந்த ஓராமாண்டுப் பூர்த்தியின் முன் பெரிய நாயக்கன் பாளையத் தில் நடைபெற்ற அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாடு ஆதாரக்கல்வியின் நோக்கங்களைப் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

1. இந்தியாவிலுள்ள எல்லாப் பையன்களும் பெண்களும் ஒரு புதிய சமுதாயத்தின் குடிக ளாக வளர வேண்டும் அச்சமுதாயம் ஆதாரக் கல்வி அடிப்படையில் அமைய வேண்டும்.
2. ஒவ்வொரு பிள்ளையின் ஆற்றலனைத்தும் ஒழுங்கான முறையில் வளர்ச்சி பெற ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

அவற்றின் வாயிலாக பிள்ளைகள் உடனலம் மிக்கவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும், பண்பாடுடையவர்களா கவும் வளர வேண்டும்.

இதிலிருந்து காந்தி ஜி வித்திட்ட ஆதாரக் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். இவ்வாதாரக் கல்வியானது வாழ்க்கைக்கான, வாழ்க்கை வாயிலான, வாழ்க்கை முழு வதுமான கல்வியாகும். இது தன்னிறைவுப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டுள்ளது. இத்தொழிற் கல்வியினூடாக பிள்ளைகளி டத்தே முழுஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இக்கல்வி மூலம் சமாதானம் நிறைந்த ஒருமைப்பாடுடைய நாட்டை உரு வாக்க முடியும். சமூக இசைவாக்கத்தையும், குழு ஒற்றுமையையும் மேம்படுத்த முடியும். சமூக வகுப்பு அந்தஸ்து என ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஏழை பணக்காரன் என்ற பாகுபாடுகளற்ற நீ என்ற போட்டியற்ற சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இதனால் சுபீட்சமுள்ள சமுதாய மொன்றை உருவாக்க முடியும்.

எனவே மகாத்மாகாந்தி ஜீயினுடைய கல்விச் சிந்தனைகள் இந்திய நாட்டின் சுய தேவைப் பூர்த்திக்கான பரிந்துரையாக விளங்கு கின்றது. இன்றும் இந்தியாவின் 40% மான பாடசாலைகளில் ஆதாரக் கல்வி நடை முறையி லுள்ளமையும், ஆதாரக் கல்விக்கான பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றமையும் இதற்கு சான் றாகும். உலகுள்ள வரை காந்திஜியின் கல்விச் சிந்தனைகள் உயிர்ப்புள்ளவையாக இருக்கு மென்பதில் ஐயமில்லை.

வாழ்க காந்திஜி. வளர்க அவர்தம் கல்விச் சிந்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம்

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"

சைவப்புலவர்
இனிய. கு.றஜீபன் M.A
கலாசார உத்தியோகத்தர்

அறிமுகம்

சைவம் சிவசம்பந்தமானது 'சிவபரம் பொருளால் உருவாக்கப்பட்டதாகவும் சிவப்பரம் பொருளை உணர்த்துவதாகவும் விளங்குவது சைவசமயம்' என்று காரணகமம் கூறுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவத்தின் முதல் நூலாகவும், சிறப்பு நூலாகவும் விளங்குபவை வேதங்களும் ஆகமங்களும் ஆகும். இவை சைவசமயத்தின் கருத்து நிலைத்துணிபாக விளங்குகின்றன.

இறைவனால் படைக்கப்பட்டதாகவும் இறை அருள்வழியே இறைகாட்சி நல்கும் திறன் கொண்டதாகவும் விளங்குகின்ற இந்நூல்களில் சிவாகமங்களானது சைவசமய மரபில் தனிச் சிறப்பு வாய்ந்ததாக காணப்படுவதோடு அதனுடைய மரபுவழிச் சிறப்புக்கள் சமய மரபில் உன்னதமாக போற்றப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் வேதமோடு அகமம் மெய்யாம் இறைவன் நூல் நாதன் உரையவை என்பர் திருமூலர். ஆகமத்தை சைவநூல் என்பர் அருணந்தியார். சைவம் சிவத்தோடு சம்பந்தம் என்பது திருமூலர் வாக்கு. எனவே அச்சிவத்தைத் தலைவனாகக் கொண்டிலங்குவது சைவம் வேதத்தை சைவ சமயம் ஏற்றுக்கொள்ளும் என்றாலும் சைவாகமங்களையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு விளங்கும் சிறப்பினையுடையது. உலகெலாம் நிரம்பிய சைவம் என்பர் சேக்கிழார். இது இவ்விரண்டிற்கு மிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினை காட்டுவதாக அமைகின்றது. வேதமும், ஆகமும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றியே பேசுகின்றது.

இவ்வாறு சைவசமய மரபில் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதனை "யாம் வேதசிவகாமங்கட்குப் பேதம் காண்கின்றிலம், வேதமும் சிவாகமமாம்" என நீலகண்ட சிவாசாரியாரும்

"வேதாகமத் துணி பிரண்டில்லை யொன்று" எனத் தாயுமான சுவாமிகளும்,

"வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்..." எனத் திருமூலரும்

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்" என சிவஞான சித்தியாரிலும்

"பல்கலை யாகம வேதம் யாவையினுங் கருத்துப் பதி பசு பாசந் தெரித்தல்" என சிவப்பிரகாசமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதம் சிவாகமங்களிடையே அங்க - அங்கி பாவமுண்டு" என குல சபாரத்தினம் அவர்கள் **"சிவாகமங்களும் திராவிட நாகரீகமும்"** என்ற நூலில் குறிப்பிடுவதிலிருந்து வேதங்களுக்கும் சிவாக மங்களுக்கும் சைவசமய மரபில் நெருங்கிய தொடர்பு இருந்தமையை உணர்ந்து தான் இவை இரண்டு இறைவன் நூல் என்றும் திருமூலர் குறிப்பிடப்பட்டிருக்கிறார் போலும்,

எனவே இறைவன் நூல்களாகக் கருதப் படுகின்ற வேதங்கள், ஆகமங்கள் இரண்டுக்கும் இணைபிரியாத ஒரு அத்தியந்தத் தொடர்பு உண்டு. இவ்வகையில் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவது ஆகமங்களே ஆகும்.

ஆகமம் அறிமுகம்

செந்நெறி என்றும் மெய்ந்நெறி என்றும் சிறப்பித்துக் கூறப்படும் சித்தாந்த சைவத்தை விளக்கிக் கூறும் சித்தாந்த சாத்திரங்களே சிவா கமங்கள் எனப்படும். இங்கு ஆகமம் என்பது பரமாப்தரினின்றும் வந்தது எனப் பொருள்படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படுத லால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த இலக் கணத்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்த பொருள் என்று பொ.முத்தையாபிள்ளை அவர் கள் சிவஞானபோத சிற்றுரை விளக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

மேலும் ஆ என்பது மலநாசமும் க என்பது மோட்சமும், ம என்பது மலநாசமும் எனக் கொண்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை கொடுத்தல் பற்றி ஆகமம் எனப் பெயராயிற்று எனக் கூறுதலும் உண்டு.

"மாசறு காட்சியாளர்களால் வெளியி டப் பெற்றனவும், மாசறு காட்சியாற்கண்டு உண் மையுணர்தற்குரியனவுமான இச்சிவாகமங்கள் வேத சாத்திரங்கள் உபகரிக்கும் அளவுக்கும் மிக அதிகமாக சைவ மெய்யியல் விளக்கத்திற்கு உபகரிக்கவல்லவை, சராசரி மனிதனிலிருந்து மஹா ஞானிவரை அவனவன் தன்தன் நிலைக் கேற்ப, சிவனை உபாசித்து உரிய பக்குவம் எய்து தற்குவும் பாங்காக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களைக் கொண்டி ருத்தல் இவற்றின் பண்பாகும்" என்று இலக்கிய கலாநிதி மு.கந்தையா அவர்கள் கைலாசபதி ஸ்மிருதியில் (பக்கம் 58) ஆகமங்களின் சாதனையினை அறிமுகம் செய்கின்றார்.

மேலும் ஆகமம் பற்றி திருவாசக ஆராய்ச்சியுரையில் பண்டிதமணி அ.அருளம் பலவாணர் அவர்கள் குறிப்பிடும் இடத்து "ஆகமம் – இறைவனிடத்தினின்றும் வந்தது இப் பொருளில் வேதமும் ஆகமமும் எனப்படும். அன்றியும் "பதினெண்வித்தைகளுக்கும் நேரே கர்த்தா சூலபாணியாகிய இறவைன்" எனக் கூறப்படுவதால் அவைகளும் இறைவனிடத்தி லிருந்து வந்தமையால் ஆகமம் எனப்படும்.

சிவாகமங்களின் தோற்றம்

சைவ மரபில் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் மலபந்தங்களில் இருந்து அவை உய்வடையும் பொருட்டு சிவ னால் சொல்லப்பட்டதே சிவாகமம். சிவாகமம் சிவனால் அருளப்பட்டது என்பதற்கு

"ஆகமம் சிவவக்த ரேப்யோ
கதம்ச கிரிஜாரு தௌ!
மதம்ச வாசு தேவஸ்ய
தஸ்மாத் ஆகமம் உச்யதே"

என்னும் சுலோகம் சான்று பகர்கின்றது. மேலும் இவ் ஆகமம் இறைவனால் மகேந்திர மலையில் இருந்து அருளிச் செய்யப்பட்டது என்பதனை

"மன்னுமாமலை மகேந்திரமதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"

என்று திருவாசகம் உரைக்கின்றது. இங்கு கூறப்பட்ட மகேந்திரமலை குமரிக்காண்டத்தில் இருந்திருக்கிறது இதனை,

"உன்னதத் தென்ம யேந்திரமே உயர்மலை .."

சிவதருமோத்திரம் உறுதி செய்கின்றது (சிவதரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோத்திரம் - கோபுரவியல் 47-48) இவ்வாறு மகேந்திர மலையில் இருந்து இறைவனால் உபதேசிக்கப்பட்ட ஆகமமானது சிவபெரு மானது ஐந்து திருமுகங்களில் இருந்து வந்தது. மலைமகளுக்குச் செவிப்புலனானது அது வாசுதேவனுக்கும் கருத்தாவது ஆதலின் அது ஆகமம் என அழைக்கப்படுகிறது என்பது இதன் பொருள் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மாணிக்கவாசகர் கீர்த்தித் திருவகலில்

"மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து
உற்ற ஐம்முகங்களாற் பணித்தருளியும்"

எனக் கூறியுள்ளார்.

சிவனால் அருளிச் செய்யப்பட்ட சிவாக மங்கள் இருபத்தெட்டாகும் இதனைத் திருமூலர்

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத் தன்
அஞ்சொடு இருபத்து மூனறுள ஆகமம்" என

விளக்கியவிடத்து இவ் இருபத்தொட்டு ஆகமங்க ளும் முறையான உபதேசக்கிரமத்தின் அடிப் படையில் காமிகம், ஜோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் ஆகிய ஐந்தும் சக்தியோஜாத முகத்திலிருந்து கௌசிக முனிவர்க்காகவும், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிர பேதம் ஆகிய ஐந்தும் வாமதேவ முகத்தினின்று காசிப முனிவர்க்காகவும் விஜயம் நிச்சுவாசம், சிவாயம்புவம், அநலம், வீரம் ஆகிய ஐந்தும் அகோர முகத்தினின்று மரத்துவாஜ முனிவர்க் காகவும் இரௌரவம், மகுடம். சந்திரஞானம், முகவிம்பம் ஆகிய ஐந்தும் தற்புருஷ முகத்தினி ன்று கௌதம முனிவர்க்காகவும் புரோற்கதம், அலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பார மேஸ்வரம், கிரணம், வாதுளம் ஆகிய எட்டும் ஈசான முகத்தினின்று அகத்திய முனிவர்க்கா கவும் தோன்றிய மரபு உண்டு.

சிவாகமங்களுள் முதற்பத்தும் விஞ்ஞானகலருட் பரமசிவன் அனுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய அனுசதாசிவர் பதின் மருக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் ஆகமங்களும் அநாதிருத்திரர் முதலிய பதி னெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப் பட்டமையால் உருத்திரபேதம் எனவும் வழங்கப் படுகின்றன.

சிவபேதம் பத்தையும் கேட்டவர்கள் ஒவ்வோர் ஆகமத்திற்கும் மும்மூன்று பேராய் அனுசதாசிவருட் தலைவராகிய பிரணவர் முதலாகிய முப்பது பேராவர். உருத்திரபேதம் பதினெட்டையும் கேட்டவர்கள் ஒவ்வோர் ஆக மத்திற்கு இவ்விரண்டு பேராய் அநாதிருத்திரர் முதன் முப்பத்தறுவராவர். இவ்வாறு மூலாகமங் களைக் கேட்டவர் அறுபத்தறுவராவர் என்று சித் தாந்த சாராவளி செப்புகின்றது என்பர் ச.குமார சாமிக்குருக்கள் இதனையே திருமூலரும்

"அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும் பொருள் கேட்டதே"

எனக் கூறுவதனால் அறிய முடிகிறது.

ஆகமங்களின் உபதேசக் கிரமத்தின் படி ஒவ்வொரு தலைமுறையாக வழங்கப்பட்டு வரு கின்றன. சதாசிவமூர்த்தி ஆகமங்களை அனந்த தேவருக்கு உபதேசித்தருள அனந்ததேவர் ஸ்ரீ கண்டருத்திரருக்கும் ஸ்ரீகண்டருத்திரர் திரு நந்தி தேவருக்கும் திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும் முனிவர்களால் மானுடருக்கும் மானுடரால் மானுடருக்கும் குருபரம் பரையாய் உபதேசிக்கப்பட்டு வந்ததாக கூறப்படுகின்றது.

இங்கு பிரதிசம்மிதாக்கிரமம் என்னும் முறையில் சதாசிவப் பெருமான் தனித்தனியே ஒவ்வோராகமத்தை உபதேசித்த பிறகு இருபத் தெட்டு சிவாகமங்களையும் அனந்தேசுவரர் என்பவர்க்கு ஒருங்கே உபதேசித்து அருளினார் ஒருவருக்கே ஆகமங்கள் அனைத்தையும் உபதேசித்த காரணத்தால் இந்த உபதேச முறை மஹேளகக்கிரமம் எனக் கூறப் பெறுகின்றது.

சிவஞான முனிவரும் சிவாக்கிரயோகி களும் தத்தம் சிவஞான போதப் பேருரைகளில் இவ்விரண்டு முறைகளைப் பற்றியும் குறித்திருக் கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிவஞான சாத்திரங்கள் எனப்படுகின்ற சிவாகமங்கள் உபதேசக் கிரமத்தில் வழிவழியாய் வரும் பொழுது ஆறுவிதமான சம்பந்தங்கள் ஏற்படுகின்றன. சதாசிவ பெருமான் அனந்தேசுவரருக்கு ஆகமங்களை உபதேசிக்கும் போது ஏற்பட்ட சம்பந்தம் பரசம்பந்தம் எனப்படும். அனந்தேசவரர் ஸ்ரீகண்டருக்கு ஆகமங்களை உபதேசிக்க ஏற்பட்ட சம்பந்தம் மஹாசம்பந்தம் எனப்படும். ஸ்ரீகண்டர் நந்தி பகவானுக்கு ஆகமங்களை உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அந்தராள சம்பந்தம் எனப்படும் நந்திதேவர் தேவ இருடிக்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் சம்பந்தம் எனப்படும். தேவ கிருப மானிட இருப்பிற்கு உபதேசிக்க ஆனால் ஏற்பட்ட சம்பந்தம் திவ்விய சம்பந்ததம் திவ்வியா திவ்விய சம்பந்தம் எனப்படும். மானுட இருடி மனிதரில் பக்குவமானவர்க்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அதிவ்விய சம்பந்தம் எனப்படும். இவற்றைப் பற்றிய விளக்கங்களைச் சித்தாந்த சாராவளி, சைவசித்தாந்த பரிபாஷை, மோஷ காரிகை முதலான நூல்களில் காணலாம். இவ்வாறு ஆகம நூல்கள் ஆறுவித சம்பந்தங்க ளாலும் காலம் தோறும் இடைவிடாது பாரம் பரியமாக வந்து கொண்டிருக்கின்றன.

சிவாகமங்களை அருளிய சிவபெருமான் சிவாகமங்களையே தம்முடைய வடிவாக ஏற்றுக் கொண்டு விளங்குவதனை காமிகம், அஜிதம், மகுடம் முதலான மூலாகமங்களிலும் சிவார்சன சந்திரிகை முதலான பத்ததி நூல்களிலும் கூறப்பட்டள்ளது. இவ்வாறு ஆகமமாய் விளங்கும் சிவன் 28 மூலாகமங்களை அருளியவிடத்து ஒரு மூலாகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களிலும் குறிப்பாக கூறப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்காகவும் கூறாதுவிட்ட கருத்துக்களை எடுத்துக் கூறுவதாகவுமே அவ்வாகமத்தைச் சார்ந்து உபாகமங்கள் கூறப்பட்டன. மூலாகமங்களின் எண்ணிக்கை இருபத்து எட்டு எனில் வக்கதாரம் முதல் விசுவாத்மகம் ஈறாக உள்ள உபாகமங்களின் எண்ணிக்கை இருநூற்று ஏழு ஆகும். மூலாகமங்கள் எழுந்ததைத் தொடர்ந்து அவற்றில் ஏற்பட்ட மலர்ச்சியும் சைவசமய மரபில் ஆகமங்களின் மரபு வழிச்சிறப்புக்களுமே உபாக மங்கள் இருநூற்று ஏழு எழுவதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்று துணிய முடிகிறது.

எனவே சைவமரபில் ஆகமங்களின் மரபுவழிச் சிறப்புக்காரணமாக மூலாகம தோற்றத்திற்குப் பிறகு உபாகமங்களினுடைய தோற்றமும் மூலகமங்களிலும் உபாகமங்களிலும் உள்ள ஞான பாதக் கருத்துக்களில் சிலவற்றை தொகுத்தும் சிலவற்றை விளக்கியும் மரபுவழிச் சிறப்பின் பயனாக எழுதப்பட்ட நூல்களே தத்துவப் பிரகாசிகை முதல் பரமோட்ச நிராசகாரியை ஈறாக உள்ள எட்டுப் பிரகணங்கள். இவற்றை அஷ்டப் பிரகரணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. சைவசித்தாந்தக் கருத்துக்கள் இந்நூலில் விரிவாகக் கூறப்படுகின்றன. ஆகமங்கள் வாழ்விலியலும், தத்துவத்திலும் சிறப்புக்களை கொண்டுள்ளன என்பதை சைவ மரபில் தோற்றம் பெறும் இந்நூல்கள் மூலமும் அறிய முடிகிறது.

சைவசமய மரபில் சிவாகமங்களின் மரபுவழிச் சிறப்பு அதன் தோற்றத்தில் இருந்தே படிமுறைக்கிரமமாக சிறப்புற்று வருகிறது. இங்கு மரபு என்றால் தொன்றுதொட்டு வரவது என்று பொருள்படும் நிலையில் ஆகமங்களின் வரலாற்று ரீதியான பார்வையும் சமயமரபில் மரபுவழிச் சிறப்புக்களை அடைந்து வருகின்றது. காலத்துக்குக்காலம் ஆகமங்களில் ஏற்பட்ட புதிய சிந்தனைகள் பல தெளிவுகளையும் சிந்தனைக்கட்டமைப்பையும் உலகிற்கு உணர்த்தி இருக்கின்றது.

இந்தவகையில் சரியாபாதம், கிரியா பாதம் எனப்படும் இரண்டு பகுதிகளிலும் கூறப்படுகின்ற கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டவைதான் பத்ததி நூல்கள். இவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள் ஞானபாதம் கொண்டிருக் கின்ற சித்தாந்தக் கருத்துக்கள் இடம்பெறாமல் சிவாலயங்களில் நிகழ்த்தப்படுகின்ற விழாக்கள் பற்றியும், கும்பாபிஷேகம் முதலான நிகழ்வகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கும் அவைகளை செய்வதற் கும் வழிகாட்டியாக இருப்பவை இப் பத்ததிகள் ஆகும். இவற்றில் ஆன்மார்ந்தமாகச் செய்யப் பெறும் சிவபூசை விதியும் கூறப்பட்டுள்ளது. இப்பத்ததிகளை துர்வாச சிவர் முதல் ஈசான சிவர் ஈறாக உள்ள பதினெட்டு பத்ததி நூல்கள் உள்ளன. இவற்றுள் சைவமரபினால் இன்றுவரை பயிலப்பட்டு ஆலயங்களில் பேணப்பட்டு வரு வது அகோரச்சிவாச்சாரியார் பத்ததியே ஆகும். இவற்றைவிட பஞ்சாட்சர யோகிகளால் இயற்றப் பட்ட சைவபூஷணம், திரிலோசன சிவா சாரியா ரால் இயற்றப்பட்ட சித்தாந்த சாராவளி, சிவாக் கிர யோகிகளால் இயற்றப்பட்ட கிரியா தீபிகை போன்ற நூல்கள் சிவாகமச் சார்பு நூல்களாகக் காணப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து எழுந்த தொகுப்பு நூல்கள் வரிசையிலே உமாபதி சிவாச்சாரி யாரின் சதரத்தின சங்கிரகம், துறைமங்களம் சிவப்பிரகாச சுவாமிகளின் சதமணிமாலை இது சதரத்தின சங்கிரத்தின் தமிழ்மொழி பெயர்ப் பாகும். வேதஞானர் என்பவரின் சைவாகம பரி பாஷா மஞ்சரி என்பவைகள் குறிப்பிடக் கூடிய வையாக உள்ளன.

மேலும் சைவமரபில் சிவாகமங்கள் பற்றிய மரபுவழிச் சிறப்புக்களை தமிழ் நூல்கள் பெருவாரியாக உணர்த்தி இருக்கின்றன. குறிப் பாக திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் சார மாகத் திகழ்கின்றது. அதிலும் ஆகமங்களின் சிறப்புக்களை 102-111 வது பாடல் வரைக்கும் ஆகமச் சிறப்புக்களை திருமந்திரம் ஆணித்தர மாக பேசி இருக்கின்றது.

இத்திருமந்திரத்தைத் தொடர்ந்து திரு முறைகள் ஆகமச் சிறப்புக்களை உன்னத நிலை யில் வைத்துச் சொல்லி இருப்பதனை நாயன் மார்களின் பாடல்களுக்கூடாக காணமுடிகிறது.

"திறங்கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான்"

என்று திருஞானசம்பந்தர், இறைவன் உயிர்கள் மீது கொண்ட கருணைப் பேற்றினால் ஆகமங் களை உரைத்தான் என்று ஆகமச் சிறப்பினை குறிப்பிடுகின்றார்.

"தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம்"

(திரு.ஞா.10.பா.26)

என்றும் சம்பந்தர் பாடுகின்றார்.

திருஞானசம்பந்தரைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார்

"நிலைபெறுமா எண்ணுதியே ...."

என்று சிவாகமங்கள் உணர்த்துகின்ற ஆலய வழிபாட்டினையும், சரியைத் தொண்டினையும் அதன் உன்னதத்தினையும் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் விதத்தில் பாடுகின்றார்.

"சலம்பூவொடு தூப மறந்தறியேன்"

என்னும் பாடலில் கிரியைத் தொண்டின் உன்ன தம் பற்றியும் பாடுகின்றார். இவரைத் தொடர்ந்து மாணிக்கவாசகர்

"........
ஆகமம் ஆகிநின்று அந்நிப்பான் தாள்வாழ்க"

என்றும்

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"

என்றும்,

"கேவேக்டராகிற கெளித்து படுத்து
......................"

திருவாசகம் கீர்த்தி 16.20

என்றும் ஆகமச் சிறப்புக்களினை பாடி இருக்கின் றார்கள்.

இவ்வாறாக வடமொழியில் சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ள முடியாத ஆகமச் செய்திகளை மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலே சாதாரண மக்கள் வரை ஆகமச் சிறப்புக்கள் நாயன்மார்களால் எடுத்துச் செல் லப்பட்டிருப்பது சைவமரபில் ஆகமங்களின் மரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிச் சிறப்புக்களையே எடுத்துக்காட்டுகிறது.

திருமுறைகளைத் தொடர்ந்து பெரிய புராணத்திலும் ஆகமச் சிறப்புக்கள் அதிலும் ஆகமங்கள் உணர்த்துகின்ற நாற்பாத நெறிகள் சிவதொண்டர்களின் வாழ்வியலுக்கூடாக உணர்த்தப்பட்டிருப்பதுடன் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் ஆகமங்களின் அரிதாம் தன்மையையும் உணர்த்தி இருப்பதுடன் திருக் குறிப்புத் தொண்டர் புராணத்தில்

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந்தருளித் ..."

(பெரி.திரு.50)

என்றும் பாடல் மூலம் சிவாகமம் கயிலை மலையில் இருந்து அருளிச் செய்தமை என்ற செய்தியையும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு தொகுத்து நோக்குமிடத்து கயிலை மலையில் இருந்து சிவாகமங்களின் தோற்றமானது கீழிறங்கி வந்து மக்கள் வாழ்விய லோடு கலந்துள்ளமை ஆகமச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவதோடு சைவ மரபில் மரபவழிச் சிறப்புக்களாக காலத்துக்குக் காலம் இது சிறப் படைந்து வந்திருக்கிறது. உபதேச பரம்பரையின் மூலம் கயிலையில் இருந்து மரபு வழியாக சமய மரபில் பல்வேறு வழிகளில், கோணங்களில் இதன் சிறப்பு அமைந்திருக் கின்றது.

சிவாகமக் கட்டமைப்பு

சைவ சமயத்தின் உன்னத வாழ்வியல் களஞ்சியமாகத் திகழ்பவையே சிவாகமங்க ளாகும். ஆன்மாக்களை மலபந்தங்களில் இரு ந்து உய்விக்கும் பொருட்டு முறையியல்படுத்தப் பட்ட ஒழுங்கமைவில் உருவாக்கப்பட்ட ஆகமங் கள் ஒவ்வொன்றும் சரியாபாதம், கிரியா பாதம், யோகாபாதம், ஞானாபாதம் என்னும் நான்கு பாதங்களாக அமைந்திருக்கிறது.

இவற்றில், சிவபெருமானது இலிங்கத் திருமேனி, உமாமகேசுர மூர்த்தம் முதலிய உருவத்திருமேனி, நந்திதேவர் முதலிய பரிவார மூர்த்தங்கள் முதலியவற்றின் அமைப்பு முறை களையும் திருக்கோயில் அமைப்பு, புட்பவிதி, பிராய்சித்த விதி, பவித்திரவிதி, செபமாலை யோகபட்டம் முதலியவற்றையும் கூறும் பகுதி கள் சரியாபாதம் எனவும்,

மந்திரங்களின் உச்சாரணமுறை குண்ட மண்டல வேதிகை முதலியவற்றின் அமைப்புக் கள், சந்தியா வந்தனம், பூசை, செபம், ஓமம் முத லியவற்றின் விதிகள் சமய விசேட நிருவாண தீட்சைகள் ஆசாரியாபிடேகம் என்பவற்றின் விதிகள், ஆன்மார்த்தமும், பரார்த்தமும் ஆக அமைந்த நித்திய நைமித்திய பூசை முறைகள் விழா முறைகள் போன்றனவற்றைக் கூறும் பகுதிகள் கிரியாபாதம் எனப்படும்.

இயமம், நியமம். ஆசனம், பிராணா யாமம், பிரக்தியாகாரம், தாரணை தியானம், சமாதி என்னும் எட்டு நிலைகளின் முறைமை யும், மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களின் இயல்பும், ஞானபாதத்திற் சொல்லப்படும் பொருள்களைப் பாவனையாற் காணம் முறை களும் போல்வனவற்றைக் கூறும் பகுதிகள் யோகபாதம் எனப்படும்.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் களின் இயல்பு. உலகத்தின் தோற்ற ஒடுக்கங்கள் அண்ட கோடிகளின் இயல்புகள், நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்து நான்கு நூறாயிரயோனிபேத இயல்புகள், வினைவகை, வினைப்பயன் வகைகள், ஞானத் தின் படி நிலைகள், அவற்றின் பயன்கள் முதலிய வற்றைக் கூறும் ஞானபாதம் எனப்படும்.

சிவாகமங்களின் மரபுவழிச் சிறப்புக்கள்

1. சரியாபாதம்

சிவாகம சரியாபாதத்தால் உணர்த்தப் படுகின்ற விக்கிர நிகமாணவிதி, ஆலய நிர்மாணவிதி போன்றவை சைவமரபில் மரபு வழிச் சிறப்புக்களை சிவாகமங்களுக்கு கொடுத்து வருகின்றன. பாரெல்லாம் பரந்திருக்கும் இறை வனை ஓர் உருவம் ஓர் நாமம் என்ற வரைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக்குள் கொண்டு வந்து இறைவனை மனிதரு க்கு அண்மித்த தெய்வமாக உருவச் சிறப்பின் மூலம் கொண்டுவந்து பெருமை ஆகமங்க ளையே சாரும்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் ..." என்று திருநாவுக்கரசர் இறை உருவை அடையாளப்படுத்துமளவிற்கு சிவாகம விக்கிரக நிர்மாண விதி பயன்பட்டதோடு இறைகாட்சியை நாம் கண்முன்னே கொண்டு வரவும் பெரிதும் உதவி இருக்கின்றது. இங்கு விக்கிரக நிர்மாணமானது மரபுவழியின் ஆசாரி யார் பரம்பரையின் மூலமே இன்று வரை விக்கிர வார்ப்பு நடைபெற்று வருவது ஆகமத்தின் மரபு நடைபெற்று வருவது ஆகமத்தின் மரபுவழிச் சிறப்பினை எடுத்துக் காட்டுவதோடு தமிழர் கலை மரபில் தோற்றத்திற்கும் வளர்ச்சிக் கும் சிவாகமங்களே வித்திட்டன என்றால் மிகை யாகாது.

2. கிரியாபாதம்

தமிழரின் சைவாசார வாழ்வியலை அடையாளப்படுத்தும் ஆன்மீகச் செய்முறை களே கிரியைகள் எனப்படுகின்றன. சிவாகமங் கள் உணர்த்துகின்ற மந்திர உச்சாடன முறை மூலம் இன்று வரை வேத பாராயண குருகுலங் கள் அழியாமல் மரபுவழியாக பேணப்பட்டு வரு கின்றன. கிரியைநெறி மூலம் வழிபாட்டு முறைமை, செய்முறைமை அவசியப்படுத்தப்படு வதுடன் நியம அடிப்படையில் இவற்றின் செய் முறைகள் வாழ்வியலை வளம்படுத்தும் என்ற நோக்கோடு அந்தண பரம்பரை மூலம் மரபு வழியாக கிரியை நெறிமுறை இன்றுவரை மேற் கொள்ளப்பட்டு வருவது ஆகமச் சிறப்புக் களை எடுத்துக்காட்டுவதோடு ஆகமங்கள் இன்று வரை உயிர்ப்புள்ளதாக இருப்பதற்கு சிவாச்சாரியார் களின் மரபுவழிச் செய்முறைகளே காரணம் எனலாம்.

3. யோகாபாதம்

யோகநெறிப்பட்ட வாழ்வியலின் மூல மும் முத்தியடையலாம் என்பதையும், ஆரோக்கி யமான தேகத்தையும், வாழ்க்கை யையும் பெறலாம் என்பரையும் யோக பாதம் கட்டுகிறது. யோகநெறியில் நின்று ஒழுகி முத்தி அடைய லாம் என்பதை மரபுவழியாக சித்தர் பரம்பரை இன்றுவரை உணர்த்தி வருவது எமது கண் கூடாகவும் பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல சித்தர்களுள் யோகர் சுவாமிகள் யோகநிலையின் மரபுவளர்ச்சிப் படிநிலை யாகும் எனவே ஆகமங்கள் உணர்த்துகின்ற யோகபாதமானது சைவமரபில் மரபுநிலைச் சிறப்புக்களை சித்தர் பரம்பரைக்கூடாக பெற்று வருகிறது. ஞானப்பிரகாசரின் சிவயோகரத்தி னம் சிவயோகசாரம் இவற்றுக்கு சிறந்த சான்று.

4. ஞானபாதம்

சைவசமயத்தின் தத்துவச் சுரங்கமாக கருதப்படுகின்ற சைவசித்தாந்தத்தின் இதயப் பகுதி ஞானபாதத்தில் கூறப்பட்ட பதி, பசு, பாச கோட்பாடுகள் சைவசித்தாந்த சிந்தனை வளர்ச் சிக்கு அடித்தளமாக இருந்து சந்தனாச்சாரியார் பரம்பரை மூலம் மரபு வழிப்பட்ட நிலையில் இன்று வரை அது பேணப்பட்டு வருவதற்கு ஆகமச் சிறப்புக்களே காரணமாகும். சைவசித் தாந்தத் தின் சாரமாக திகழ்பவையே சிவாகமங்களா கும் இந்த சிவாகமங்களின் மரபுவழிச் சிறப் பானது குரு சிஷ்ய அடிப்படையில் ஞானபாதத் தின் மூலம் பேணப்பட்டு வருகிறது.

எனவே தொகுத்து நோக்குமிடத்து சமய மரபில் ஆகமங்களினுடைய மரபுவழிச் சிறப்பானது சிறப்பிக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு. அதாவது சிவாகமங்களில் கூறப்படு கின்ற சரியா பாதம், நாயன்மார் களாலும் தொண்டர் குழாங்களாலும், ஆசாரியார் பரம் பரையாலும் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. கிரியா பாதம் அந்தணப் பெருமக்களால் சிறப்பிக்கப் பட்டு வருகிறது. யோகபாதம் சித்தர் பரம்பரை யால் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. ஞானபாதம் சந்தனாச்சாரியர் பரம்பரையால் (ஆதீனங்கள்) சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களின் மரபு வழிச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுபவையாகவே உள்ளது.

பயன்பட்ட நூல்கள்

1. சிவஞான போதச் சிற்றுரை விளக்கம் பொ.முத்தையாபிள்ளை சைவசித்தாந்த பெருமன்றம், இந்தியா.
2. சிவஞானபோத மாபாபியர் பொருள் நிலை விளக்கம் மகா வித்துவான் அருணை வடிவேல் முதலியார் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
3. திருமந்திரம் – தருமை ஆதீனம்
4. இந்துப் பண்பாட்டு மரபுகள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
5. சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு
6. சித்தாந்தச் செழும் புதையல்கள் இலக்கிய கலாநிதி மு.கந்தையா ஈழத்துச் சித்தாந்த சைவ சித்தியாபீடம் 1978
7. சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியை விளக் கம் இலக்கிய கலாநிதி மு.கந்தையா மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம் 2002
8. சிவாகமங்களின் பெருமானம் கட்டுரை மு.கந்தையா
9. வேதாகம நிருபணம் – இரண்டாம் பாகம் ச.குமாரசாமிக்குருக்கள் கரணவாய் சைவ ஆராய்ச்சி சங்கம் 1951
10. சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் எஸ்.பி.சபா ரத்தினம் கழக வெளியீடு 2002
11. இரண்டாவது உலக இந்து மாநாட்டு மலர் இந்து கலாசார திணைக்களம் இலங்கை
12. நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டு கருத்தரங்கு மலர் தொகுதி 1 தருமபுர ஆதீனம் 2008
13. சைவசித்தாந்த மாநாட்டு சிறப்பு மலர் தருமபுர ஆதீனம் – 2008
14. திருவாசக ஆராய்ச்சியுரை பண்டிதமணி க.அருளம்பலவாணர் பாரி நிலயைம், சென்னை 1992
15. சித்தாந்தம் மாதாந்த சஞ்சிகை சைவ சித்தாந்த பெருமன்றம் 1939
16. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 2 தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
17. இந்துக் கலைக் களஞ்சியம் தொகுதி 1 இந்து கலாசார திணைக்களம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(சமுர்த்தி உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளச்சிகிச்சையாக அரங்கு ஓர் அறிமுகம்

எம்.பி.அருள்குமரன் B.A (Hons) M.A (Merit)
ஆசிரியர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி

நாடகம் எனும் கலை வடிவம் மனித வாழ்வில் பிரிக்க முடியாத வடிவமாக விளங்கு கின்றது. மனிதர்களது வலி, பிரச்சினை, என்பவற்றினை மட்டும் பேசி நிற்காது அவர்களது உள விடுதலைக்கான மார்க்கத்தினையும் கோடிலியாக பேசி நிற்கின்றது.

நாடகம் பல வகைகளில் விரிந்தும் எல்லையில் பரந்தும் உள்ள கலைவடிவம் ஆகும். ஈடுபடுபவர்களிடையே ஆற்றல்களினை விதைப்பதிலும் அவர்களினை சுயமுனைப்புள்ளவர்களாக்கி சுதந்திர செயலாளிகளாக தகவமைப்பதில் இக்கலைக்கு கனதியான வகிபங்கு உண்டு.

நாடகம் நடிப்பவர்களிடையேயும் பார்ப்பவர்களிடையேயும் உறவு வலுப்பெறுகின்றது. இவ்வுறவு பல்வேறு வகைகளில் உற்சாகம் கொள்ளவும் பார்ப்பவர்கள் தம்மை தகவமைத்து கொள்ளவும் துணை செய்யும்.

கலை எனும் போது மனித உணர்வுகளின் வெளிப்பாடு என பொதுவாக குறிப்பிடுகின்றனர். அரங்கும் உணர்வுகளினை பகிர்வதற்கான களமாக விளங்குகின்றது.

நாடகம், அரங்கு எனும் சொற்பதங்கள் அர்த்தம் பொதிந்தவையாக காணப்படுகின்றன. நாடகம் எனும் சொல்லினை ஆங்கிலத்தில் DRAMA எனவும் அரங்கு எனும் சொல்லினை THEATRE எனவும் அழைப்பர்.

DRAMA எனும் சொல்லானது கிரேக்க வேரடிச்சொல்லான DRAMENON எனும் சொல்லிருந்து இருந்து தோற்றம் பெற்றதாகவும் இதன் பொருள் ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட தொன்றாகும் எனவும் THEATRE எனும் சொல்லானது THEARTEON எனும் சொல்லிருந்து தேற்றம் பெற்றதாகவும் இதன் பொருள்பார்க்கும் இடம் என்பதாகவும் பொருள் கொள்ளப்படுகின்றது.

தமிழக தமிழ் அரங்க வரலாற்றில் சிறப்பிக்கப்படுகின்ற கலித்தொகை காலத்தில் சிவன் ஆடியதாக குறிப்பிடப்படுகின்ற பாண்டரங்கம் என்பதினை பாண்டு + அரங்கம் என வகுத்து நோக்குகின்றனர். பாண்டு என்பது வெண்மையினையும் அரங்கம் என்பது இடத்தினையும் குறித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கு என்பது சாதாரன வாழ்வில் இருந்து வேறுபட்டதாகவும் சாதாரண வாழ்வில் வெளிப்படுத்த முடியாதவற்றினை வெளிப் படுத்துவதற்கான களமாகவும் விளங்குகின்றது.

நாடகம் என்பது குறித்த இடத்தில் நிகழ்த்தப்படுகின்றது என்பதாகும். நிகழ்த்தப்படு கின்றது என்பதில் பார்க்கப்படுவதற்கான ஒன்று காணப்படுகின்றது. இங்கு பார்த்தல் என்பதில் பார்ப்போன் வெறுமனே நாடகத்தினை பார்க் கின்றான் என்பதனை விட தன்னை, தனது உணர் வினை தனது மனப்பதிவுகளினை கண்டு கொள் கின்றான் என்பதே பொருளாகும்.

இவ்வாறு கண்டு கொள்வதினால் தனது பலம், பலவீனம் என்பவற்றினை இனம் கண்டு தனது பிரச்சினையில் இருந்து தன்னை விடுவி த்து கொள்வதற்கான மார்க்கத்தினை இனம் காண்கின்றான்.

அரங்கு ஆரம்பகாலத்தில் பொருள் கொள்ளப்பட்ட முறையில் இருந்து நவீன கோட் பாட்டாளர்களினால் அவர்கள் பொருள் கொள் ளப்படுகின்ற நோக்கு நிலைக்கு ஏதுவான செயல்தளத்தில் வைத்து நோக்கும் போது பார்க் கும் இடம் என்பது தன்னை கண்டு கொள்ளல் அல்லது தன்னை அறிதல் என பொருள் கொள் ளப்படுகின்றது.

இங்கே உணர்வு ரீதியான பரிமாறல் கள் இடம் பெறுவதினால் உணர்ச்சி வெளியேற் றப்பட்டு அதற்கூடாக ஒருவன் தன்னை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு வன் தன்னை அறிந்து கொள்வதன் மூலம் தன் சமூகத்தினை அறிந்து கொள்ளக் கூடியவனாக மாற்றமடைகின்றான். இதனடிப்படையில் அரங்கு அவனை சுயமுனைப்புள்ளவனாக்கு கின்றது.

நாடகம் என்பது மோதுகை நிலையில் சித்தரித்து காட்டுவது எனக்குறிப்பிடுவர் மோதுகை எனும் போது முரன்படுதலினை குறிக் கும் முரனானது தன்னோடு, பிறரோடு, இயற்கை யோடு, கடவுளோடு, என பல தளங்களில் இயங்குதலினை காணலாம். இம்முரன்பாடு பார்ப்போரிடையே ஏதாவது உளக்கிளறல் களினை ஏற்படுத்தி அவர்களிற்க்கு விடுதலை அளிக்கின்றது.

விடுதலை அளிக்கும் பண்பு காலம் கால மாக இடம்பெற்று வருவதினை அவதானிக்கலாம். அரங்கானது பார்ப்பேரது ஆண்மாவினை ஊடறுத்து அவனது விடுதலைக்கான வழியினை ஏற்படுத்தி விடுகின்றது. அவனது இயங்குதலில் அவனுக்குள்ள பிரச்சினையினை அறுத்தெறிவ தில் அதிக முனைப்புக் காட்டுகின்றது.

உளவிடுதலை என்பது ஒருவனது மனதிலே குட்டை போல் தேங்கிக்கிடக்கின்ற பிரச்சினைகளிற்கான தீர்வினை முன்வைக்க முனையும் செயற்பாடாகும் இத்தகைய செயற் பாடுகளினை நாடகத்தின் தோற்றத்தில் விஞ்ஞான பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சடங்கில் இருந்து தோற்றம் பெற்றது எனும் கோட்பாடுகளில் காணமுடியும்.

சமூகத்தில் மன நோயாளர்களின் உரு வாக்கத்தினை சடங்குகள் தடுப்பதாக சிக்மன் ப்ரெய்ட் எனும் உளவியல் அறிஞர் குறிப்பிடுகின் றார். அரங்கும் பிரச்சினை உடையவர்கள் கூடுத லும் அப்பிரச்சினையினை தீர்த்துக் கொண்டு தமது வாழ்வியல் நீரோட்டத்தில் இணைவ தற்கான வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது.

சடங்குகளிலே காணப்பட்ட உளவிடு தலை செயற்பாடுகளினை நோக்குவோமாயின் சங்க காலத்தில் இடம்பெற்ற வேலன் வெறி யாடல்" எனும் சடங்கானது நிகழ்த்தப்படுகின்ற இடமாக மலைஅடிவாரம் / பெண்ணினது வீட்டு முற்றம் காணப்படுகின்றது. மலை அடிவாரம் எனும் போது வித்தியாசமான இடமாக காணப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சடங்கு நிகழ்த்தப்படும் நோக்கமாக காதல் நோயினால் பீடிக்கப்பட்ட பெண்ணினை வேலன் என்பவன் உருவேறி (வெறியாடல்) ஆடுவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

இங்கு பெண் கொண்டுள்ள நோய் தீர்க்கப்படுவதாகவும் அந்நோய் தீர்கப்படுதலின் ஊடாக சமூக இசைவாக்கத்திற்கு உட்பட்டு சமூக இயங்கியல் வெளியில் அப்பெண் இணைந்து கொள்வதாகவும் அதற்காகவே அச்சடங்காசார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினை காணக்கூடியதாக உள்ளது.

அரங்க வரலாற்றில் கிரேக்க அரங்கில் கதாஸிஸ் எனும் கோட்பாடும் பரத முனிவர் எழுதியதாக குறிப்பிடப்படுகின்ற கீழைத்தேய நாடக நூலான நாட்டியசாஸ்திரத்தில் ரசம் எனும் கோட்பாட்டின் ஊடாக உணர்ச்சி வெளியேறல்கள் பற்றி குறிப்பிடுகின்றன.

கிரேக்க அவலச்சுவை (Tragedy) நாடகத்தில் பார்ப்போரிடையே உணர்ச்சி செப்பம் /உணர்ச்சி வெளியேறுகை (Chatharsis) ஏற்படுவதாக அரிஸ்ரோட்டில் குறிப்பிடுகின்றார்.

"அவலச்சுவையை பரிவும் பயமும் என்பார் அரிஸ்ரோட்டில். பரிவு, பயம் என்ற உணர்வு நிலையின் ஊடே தேங்கி கிடக்கும் மன வெழுர்ச்சி உணர்வு வெளியேற்றப்பட்டு உள்ளம் தூய்மைப்படும் என்பார். இதனை இணக்கம் / சமரசம் என்றார் கெகல்.அதாவது வாழ்வின் தற்காலிகமான இசைகேடு, நிரந்தர இசைவு நிலைக்கு மாற்றப்படுதல் என பொருள் கொள்ளலாம். மரணத்தின் முன்னிலையில் வாழும் மன உறுதியை தருவது எனவும் கொள்ளலாம். இந்த உறுதி அவலச்சுவையில் மீள வலியுறுத்தப்படுவதன் மூலம்வற்றாத உறுதியாக மாறுகின்றது"1

இவ்வகையில் பார்ப்போரிடையே மாறுதலினையும் உறுதியினையும் கிரேக்க நாடகங்கள் அளித்தது. இது உளவிடுதலைக்கான பண்பாகும் காரணம், பயம், பீதியில் இருந்து அவனை விடுதலை அளித்தது.

மனிதர்களிற்கு அவர்களது வெற்றிக்கு தடையாக உள்ள விடயம் பயமும் வெட்கமும் எனில் மிகையில்லை. இதனடிப்படையில் பயத்தினை எதிர்கொண்டு அதனை வெற்றி கொள்பவன் வாழ்வினை வெற்றி கொள்கின்றான் எனும் அடிப்படையில் இந்நாடகங்களது அடிப்படைப் பண்புகளாக மனிதர்களினை பயம் பீதியில் இருந்து விடுதலை பெற செய்வதாக காணப்படுகின்றது.

"..........தனது வாழ்வை ஆளுகை செய்யும் புறச்சக்திகளோடு இவை மனிதனிலும் மேலானவை – போராடி நின்று தனது உணர்வுகளினையும், நியாயங்களினையும் வெளிப்படுத்திய கிரேக்கத்து நாடகம் ஆடலையும், பாடலையும், ஓதலையும் தனது பிரதான வெளிப்பாட்டு பக்கமாக கொண்டது.2"

ஆடல், பாடல் பண்புகள் உளச்சிகிச்சை அளிப்பதில் முக்கிய பண்பாக காணப்படுகின்றது.

சிகிச்சை எனும் சொல்லானது குணப்படுத்தல் (Healing) எனப்படுகின்றது. உளச்சிகிச்சை என்பது (Psychotheraphy) உள்ளத்தில் ஏற்படும் பிரச்சினையினை குணப்படுத்தல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது.

மேலைப்புலத்தில் J.L.MORONO வியன்னா தன்னெழுச்சி அரங்கு (Vinena Theatre Of Sponanetity) என்பதன் மூலம் உளச் சிகிச்சையினை அளித்திருப்பதினை அரங்க வரலாற்றில் இருந்து கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

உளமறி நாடகம் தொடர்பாக J.L.MORONO குறிப்பிடும் போது "...மனிதனின் இனம் தெரியாத மனவுலகின் சிக்கல்களை கண்டு பிடிப்பதற்கான ஒரு சிறந்த ஊடகம்.."3 எனக்குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை நாடகத்தினை பொறுத்த வரையில் பிரச்சினைக்கு உட்படுத்தப்படுவரின் (Protagonist) வெளிப்படையான நடத்தைகளை அவதானித்து பகுப்பாய்வு செய்து இவ்வெளிப் படையான நடத்தையில் இருந்து பிரச்சினைக்கு உட்படுபவரின் மனநிலைச்சூத்திரங்களினை அறிய வேண்டும் இதனை அறிய தூண்டுகின்ற அரங்கவியலாளராக (Facilitator) அமைகின் றார். ஒரு உளமறி நாடகத்தை பொறுத்தவரை யில் சாராம்சம் கனவுகளே எனவே இது ஒரு நனவிலி மனத்தின் இயங்கியலாக உள்ளது"...4

J.L.MORONO வினது அரங்கில் நடிகன் பார்வையாளர் என்ற வேறுபாடு இல்லாத சூழல் ஏற்படுத்தப்படுவதுடன் புதிதளித்தல் மூலம் பங்கு பற்றுனர்களை ஆக்க கர்த்தா வாக்குகின்றார்.

ஈழத்தமிழரங்கினை பொறுத்தவரை யில் தொண்ணூறுகளில் இச்செயற்பாடுகள் பெருமளவில் வெளிக்கிளம்புகின்றன.

இதன் தொடக்க புள்ளியாக குழந்தை ம.சண்முகலிங்கம் விளங்குகின்றார். இவரது அன்னையிட்டதீ, வேள்வித்தீ என்பவற்றினை முதன்மையாக கொள்ளலாம்.

சிகிச்சை அரங்கின் மையப்பொருளாக சித்திரவதைகள் வன்முறைப் படிமங்கள், மனக்கு மைச்சல்களினை வெளிப்படுத்துவதினை நோக் கமாக கொள்கிறது. இவ்வகையில் யத்த நெருக் கீடு ஏற்படுத்திய தாக்கத்தினை அன்னையிட்ட தீயும், வேள்வித்தீ ஒரு பெண்ணின் பாலியல் பலாத்காரத்தினையும் பேசு பொருளாக கொண் டிருந்தது.

இப்பணியின் தொடர்நிலையாக சிதம் பரநாதன் தனது அரங்க செயற்ப்பாடுகளினை மேற்கொண்டிருந்தார். "…. சிதம்பரநாதன் நாடக பட்டறை களினையே நாடகமாக்கி வருகின்றார். உளத் தாக்கத்தால் பாதிக்கபட்ட இளைஞர்கட்கு நோய் மருந்தாக (Theraphy) இவரது நாடக பட்டறைகள் அமைகின்றன. அதன் காரணமாக மீண்டும் சடங்கிற்கு செல்லல் என்ற கொள்கை இவரிடமும் இவரது குழுவி னரிடமும் உண்டு. சடங்கு நிலையில் தான் மனிதர் பேதமின்றி இணைவர் அந்நிலையில் தான் உள அமைதி சாத்தியம் என்கிறார்கள் தனது ஒவ்வொரு நாடக பட்டறையினையும் ஒவ் வொரு நாடகம் என சிதம்பரநாதன் கூறுவார்"5.

உளத்தாக்கத்தில் பீடிக்கப்பட்டவர்க ளினை அவ்வடுக்களில் இருந்து விடுவிப்பதற்கு அரங்கினை கருவியாக கையாழ்கின்றார். இவர் அரங்கு பற்றி குறிப்பிடும்போது

"…. அரங்கு எண்டு நினைக்கிறது வந்து ஒரு பேருணச்சியை Deal பண்ணி பாக்கிறதுக் கான ஒரு இடம் வாழ்கையில செய்ய முடியாத இடம்பெற முடியாத ஒரு பேருணர்ச்சியை deal பண்ணிப்பக்கிறதக்கான ஒர் இடம்." 6

உணர்ச்சியினை Deal பண்ணி பார்ப்ப தற்கான இடம் எனும் போது உணர்ச்சிகளினை deal பன்னுவதன் ஊடாக உளச்சமநிலையினை பெற்றுக்கொள்ள முடியும்

……போர்ச்சூழலில் ஏற்ப்பட்ட மன அழுத்தத்தினை தீர்ப்பதற்கான சிகிச்சை அரங்கின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சி படி நிலை யிலும் காத்திரமான பங்களிப்பை சிதம்பரநாத னின் அபார கற்பனைத்திறனும் கலைஞானமும் வழங்கி நிற்கின்றது. cry of asia நடவடிக்கை களில் பெற்ற தொடர்புகளும் மௌனகுரு மூலம் பெற்றுக்கொண்ட கூத்தாட்ட நுட்பங்களும் சிதம் பரநாதனுடன் ஒன்றிணைய கூத்தாட்ட நுட்ப முறைகளினூடே உளச்சிகிச்சை அரங்காக சடங்கு நிலை நோக்கி நகர்த்தி வருகின்றார். அரங்கில் இருந்து மக்களை நோக்கி தெருவெளி நகர்த்த சிதம்பரநாதனின் அரங்க முயற்ச்சிகள் ஒவ்வென்றும் சமூக மாற்றத்தை நோக்கிய ஒரு தொடர்பியற் சாதனமாக அச்சம், பயம், மௌனம், தாழ்வு மனப்பான்மை போன்ற மன அழுத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நீக்கி தனக்குள் தான் ஒடுங்கி புதையுண்டு மௌனித்துப் போயிருக்கும் மௌனப்பண் பாட்டை தகர்க்கும் உளமறி சிகிச்சை அரங்காக பாளமித்துள்ளது எனலாம்."7

இத்தகைய செயற்பாடு உளப்பிரச்சி னையினை தீர்ப்பதில் கூடிய கவனம் செலுத்து கின்றது. சுனாமி எனும் அழிப்பேரலையின் தாக்கத்தில் கட்டுண்டு போயிருந்த மக்களை விடுவிப்பதில் கலாநிதி சிதம்பரநாதனின் வழிப் படுத்தலில் அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு எனும் செயற்பாடு காத்திரமானதாக நிகழ்த்தப் பட்டது. சான்றாக அச்செயற்ப்பாட்டின் போது முதியவர் ஒருவர் குறிப்பிடும் போது "உள நோய்க்கு மருந்து" என குறிப்பிட்டார்.

சுனாமி அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு எனும் செயற்பாட்டில் பல்வேறு மாறு பட்ட அநுபவங்கள் ஏற்பட்டதுடன் உளச்சிகிச்சை அல்லது ஆற்றுப்படுத்தல் எனும் தளத்தில் அம் மக்கள் கொண்டிருந்த பயம், பீதி என்பவற்றினை போக்குவதற்கான செயற்தளங்கள் மேற்கொள் ளப்பட்டதுடன் அம்மக்களிடம் காணப்பட்ட ஆற் றாமை, இயலாமை, நம்பிக்கையீனங்களினை இல்லாதொழிப்பதற்கும் புதிய எண்ணங்க ளினை விருத்தியாக்குவதற்கும் தமது கடந்த வாழ்வினை மீளவும் கட்டமைத்து கொள்வதற் கான நம்பிக்கையினை ஊட்டுவதற்குமான செயல் தளங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகைய செயற்பாடுகள் அவர்களி டையே மாற்றத்தினையும் எதிர்காலம் தொடர் பான அவநம்பிக்கை போக்கப்பட்டு நம்பிக்கை யோடு எதிர்காலத்தினை எதிர் கொள்வதற்கான தன்னம்பிக்கையினை அளித்தது எனில் மிகை யில்லை. மேலும் எதிர்காலத்தின் சிற்பிகளாக மதிக்கப்படுகின்ற சிறுவர்களது உள மேம்பாட் டிற்கும் அவர்களது ஆளுமை மேம்பாட்டிற்கும் அடிப்படையிலான வகையில் அரங்க செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பலரது பார்வையில் விமர்சனரீதியாக காணப்படுகின்ற போதிலும் மன நல மருத்துவ ரின் பார்வையில் ஏற்றுக்கொள்ள கூடிய விடய மாக காணப்படுகின்றது இதற்கு சான்றாக "அரங்க செயற்பாட்டை ஆற்றுப்படுத்தலின் அங்கமாக மேற்கொள்ளலாம் அல்லது ஒரு உணர்ச்சி வெளிப்படுத்தல் முறையாக செயற் படுத்தலாம் அரங்க செயற்பாட்டை உளச் சிகிச் சைக்குரிய அரங்காகவும் மாற்றிக் கொள்ள லாம்..."8

இப்பகைப்புலத்தில் நோக்குகின்ற போது அரங்கு எனும் வன்மையான சாதன மானது பல் துறைப்பரிமானத்தினை உடையதா கவும் அப்பரிமானத்தில் உள விடுதலைக்கான பணியினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அடிக்குறிப்புக்கள்

1. சண்முகலிங்கம்,ம.(2003) நாடகவழக்கு (அரங்க கட்டுரைகள்) தொகுப்பாளர் ஸ்ரீகணேசன் கந்தையா, இனுவில் இலக்கிய வட்டம், பக்11
2. மே.கு.நூ பக்.23
3. ரவிச்சந்திரன், எம்.பி.(2008) கூத்து முறை மையும் கூத்து வழிவந்த அரங்க வளர்ச்சிக ளும், மட்டக்களப்பு, எம்.பி.ஆர் வெளியீடு பக்178
4. மே.கு.நூ பக்178
5. மௌனகுரு,சி.(2003) அரங்கியல், கொழும்பு, பூபாலசிங்கம் புத்தகசாலை பக்187
6. பொண்ராசா அன்ரன், ஆதவன் (நேர் காணல்) சிதம்பரநாதன் (2004) கட்டியம் பக் 74-75
7. ரவிச்சந்திரன்,எம்.பி.(2008) கூத்து முறை மையும் கூத்து வழிவந்த அரங்க வளர்ச்சி களும், மட்டக்களப்பு, எம்.பி.ஆர் வெளியீடு பக்181
8. சிவதாசன் ,எஸ். (2009) நலமுடன் (மனநல மேம்பாட்டு கட்டுரைகள்) கொழும்பு, பூபாலசிங்கம் புத்தகசாலை,பக்155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம்

தேசவழமை - ஒரு எளிமையான அறிமுகம்

இனிய. கார்த்திகா ஆதித்தன்
சட்டத்தரணி

அறிமுகம்

இலங்கையில் வாழும் மக்கள் பல் வகைப்பட்ட சட்டங்களினாலே ஆளப்பட்டு வரு கின்றனர். எமது நாட்டின் கலாசார விழுமியங் கள் கோட்பாடுகளை மையமாக வைத்து தோற்றம் பெற்ற சுதேசிய சட்டங்களான முஸ்லிம் சட்டம், கண்டியர் சட்டம், தேசவழமை என்பவற்றுடன் ஒல்லாந்தரினால் அறிமுகம் செய்யப்பட்ட றோமன் டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலேயர் வருகையு டன் கலப்புற்ற ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக பல்வகை சட்ட மரபுகளினால் பிணைக்கப்பட்டுள்ளோம். எமது நாட்டின் பொதுச் சட்டமாக றோமன் டச்சுச் சட்டம் காணப்பட்டாலும் ஆங்கிலச் சட்டம் மற்றும் சுதேசிய சட்டங்களின் ஆதிக்கத்தினையும் மறுப்பதற்கில்லை.

தேசவழமை

தேச வழமையானது திராவிட வழக்காறு கள் மற்றும் மலபார் மக்களின் வழமைகளை யும் ஒன்றிணைத்து வழக்கில் இருந்தவற்றை சேர் கிளார்க் ஐசாக் அவர்கள் தொகுத்து சட்ட மாக்கினாலும் எமது பாரம்பரிய சில வழக்காறு கள் இணைக்கப்படவில்லை என்பதும் றோமன் டச்சுச்சட்ட மற்றும் மேலைத்தேய சட்டக் கலப்பு இடம்பெற்றுள்ளது என்ற கூற்றும் மறுப்பதற் கில்லை.

தேசவழமை என்பது "Customs prevailing in the country" எனக் கலாநிதி H.W.தம்பையா கூறுகிறார். அதாவது தேசம் + வழமை என யாழ் மாகாணத்திற்குட்பட்ட வழக்காறுகளை ஒன்றி ணைத்தது எனப் பொருள்படுவதோடு (Malabar inhabitants of the province of Jaffna) என யாழ்ப் பாண மாகாணத்தில் வசிக்கின்ற மலபார் வாசி களிற்கு உரித்துடையது என விளக்கப்படினும் பண்டைய காலங்களில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களை இணைத்து ஆளப்பட்டமையும் நோக் கற்குரியதே.

எமது பாரம்பரிய விழுமியங்களில் இணைந்து காணப்பட்ட அடிமை முறைமை மற்றும் சாதி முறைமை என்பவை இன்றைய தேசவழமைச் சட்டப்பரப்பில் இடம்பெறவில்லை என்பது தற்கால நவீன கண்ணோட்டத்தில் சமத்துவமான உரிமையைப் பிரதிபலிப்பதாகக் காணப்பட்டாலும் எமது வழக்காறுகள் முழுமை யாகத் தேசவழமைத் தொகுப்பில் உள்வாங்கப் படவில்லை என்பதற்குச் சான்றாகவே கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மேலும் மேலைத்தேயச் சட்டக் கோட்பாடுகள், இந்து சட்டம், முகமதியன் சட்டம், டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டங்களின் கோட்பாடுகள் இளையோடி நிற்பதனையும் காணலாம்.

தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடமை

தேசவழமைச் சட்டமானது பொதுவாக யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேச வாசிகளிற்கு ஏற்புடையது என்றும் வடமாகாணத்திற்கு உட்பட்ட நிலப்பகுதியானது யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேச வாசிகள், சிங்களவர், ஆங்கிலேயர் அல்லது யாராக இருந்தாலும் தேச வழமையால் ஆளப்படுவர் என்றும் கூறப்படுகின்றது. அவ் வகையில் நிலம் தொடர்பான முன் வாங்கு உரிமை (Pre-emppion) ஒன்றியீடு (Otti mortgage) சேவகம் (Servitudes) என்பவை எல்லாக்காணி உரித்தாளர்களிற்கும் ஏற்புடையது.

தேசவழமைக்கு உட்பட்ட பெண் ஒருவர் தேசவழமைக்கு உட்படாத ஆண் ஒரு வரை திருமணம் செய்யும் போது தேசவழமை யால் ஆளப்படமாட்டார் எனவும் தேச வழமைக்கு உட்பட்ட ஆண் ஒருவர் தேச வழமைக்கு உட்படாத பெண் ஒருவரை திருமணம் செய்யும் போது தேசவழமையால் ஆளப்படுவார் எனவும் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழ உரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3இன் படி கூறப்படுகின்றது. மேலும் தேசவழமையின் ஏற்புடைமையை நடைமுறை உதாரணங்களுடன் நோக்குகையில்,

Veluppillai vs Sivagamippillai (1910), 13NLR/74 என்ற வழக்கில் யாழ்ப்பாணத் தமிழ் வாசி ஒருவர் 35 வருடங்களிற்கு மேலாக மட்டக்களப்பிலே சொத்துக்களைக் கொள்வனவு செய்த பின்பு 1891இல் யாழ்ப்பாணத்தில் திருமணம் புரிந்து குடும்பத்தினரை யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டு இடையிடையே வந்து சென்றார். 1910இல் இருந்து மட்டக்களப்பிற்குத் தனது குடும்பத்தை அழைத்துச் சென்று இறக்கும் வரை அங்கு வாழ்ந்து வந்தார். இவருடைய திருமண உரிமைகள் தேசவழமையினாலா அல்லது றோமன் டச்சுச் சட்டத்தினாலா ஆளப்பட வேண்டியது என்ற வினாவிற்கு இவர் யாழ் மாகாணத்திற்குட்பட்ட மலபார் வாசி என்ற அடிப்படையில் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. அதேவேளை King vs Perumal (1911 14NLR.496) என்ற வழக்கிலே இந்து தமிழ் ஒருவர் இந்தியாவில் பிறந்து இலங்கை மத்திய மாகாணப் பகுதியில் குடியேறினார். இவருக்கு தேசவழமை ஏற்புடையதாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டமை நோக்கற் குரியது.

தேசவழமையில் பெண்கள்

ஆதனக் கைமாற்றம் தொடர்பிலும், சிவில் வழக்கினைத் தாக்கல் செய்வதில் எதிர் வாதிடுவதில் கணவரின் பெயரை இணைத்துக் காட்ட வேண்டும் என்பது தொடர்பிலும் தேச வழமைக்குட்பட்ட பெண்களிற்கு உள்ள உரிமைகளை நோக்குகையில் சமத்துவமான உரிமை என அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டவை மற்றும் CEDAM போன்ற சர்வதேச பெண்கள் உரிமைகள் சமவாயக் கோட்பாடுகளை எந்த அளவிற்கு நாம் மதிக்கிறோம் என்பதும் ஆய்வுக் குட்பட்டதே.

பொதுவாகத் தேசவழமைக்கு உட்பட்ட பெண் திருமணத்திற்கு முன்னராக ஆதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்போது அல்லது இறுதி விருப்பாவணம் எழுதும் போது கணவரின் சம்மதம் பெறுதல் அவசியமில்லை எனினும் திருமணமான பின்பு, திருமணம் நிலைத்திருக்கும் காலம் வரை கணவரின் சம்மதத்துடனேயே ஆதனக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும் என 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழ உரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 96) இன் ஊடாக அறிய முடியும்.

இருப்பினும் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழ உரிமைகளும் கட்டளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் பிரிவு (8)இன் படி மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் பின்வரும் சந்தர்ப்பங்களில் கணவரின் சம்மதம் இன்றிச் செய்தியினைக் கைமாற்ற முடியும்.

- அவள் கணவனால் கைவிடப்படும் போது,
- பரஸ்பர இணக்கத்தின் பேரில் அவள் தனது கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்தவரின்,
- நீதிமன்றத்தின் ஏதாவதொரு கட்டளையால் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திற்கு அவளது கணவன் சிறையில் இருப்பின்,
- அவளது கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகிறான் என்பது தெரியாத விடத்து,
- அவளது கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தர மறுத்திருப்பின்,
- மனைவியினதும், பிள்ளையினதும் நலனுக்காகக் கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து,

ஆதன வகைப்பாடு

தேச வழமைக்கு உட்பட்ட ஆதனமானது முதுசம், சீதனம், தேடிய மட்டம், உரிமை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதுசம்

முதுசம் என்பது பொதுவாக மூதாதையர் வழி ஆதனமாக ஆரம்பகாலத்தில் ஆண்வழி வந்தடைவதாக கொள்ளப்பட்டாலும் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தில் 1947ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் பிரிவு 15இன் படி Mudusam is defined as partimonial inheritance, being property devolving on a Person by descent at the death of his or her parent or any other ancestor in the ascending line" என்பதற்கமைய ஒருவன் அல்லது ஒருத்தியின் பெற்றோர் இறப்பதனால் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதனால் வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனமே முதுசொம் எனப்படும்.

முதுசம் வந்தடைந்த ஆதனத்தினை ஒருவர் விற்றுப் பணமாக்கும் போது அல்லது வேறு வழியில் சொத்தின் வடிவத்தினை மாற்றும் போது அது தேடிய தேட்டமாகக் கொள்ளப்பட மாட்டாது என Jevaratnam vs murukesu (INLR 251, 1895) என்ற வழக்கிலே "Under the law of Thesawalamai, money inherited by a husband and converted into lands does not from part of thediatettam. Such lad should be treated as his separate property provided that the money can be earmarked." எனக் கூறப்பட்டதனூடாக அறியலாம்.

ஏதேனும் ஒரு வாழ்க்கைத் துணையானது முதுச ஆதனத்தினைப் பராதீனப்படுத்தாது இறப்பின் அது பிள்ளைகளிற்கு சமபங்காகச் சென்றடையும். பிள்ளைகள் இல்லை எனின் தாய் வழி வந்தடைந்த ஆதனமா அல்லது தந்தை வழி வந்தடைந்த ஆதனமா என நோக்கப்பட்ட சொத்து பெறப்பட்ட இடத்தினை மீண்டடைந்து விடும். தாய் தந்தை அல்லது மூதாதையர் இல்லவிடின் சகோதரங்களிற்குச் சென்றடையும்.

பராதீனப்படுத்தாது இறப்பின் முதுசம் பகிரப்படும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம்

சீதனம் என்பது பொதுவாகத் திருமணத்தின் போது அல்லது திருமணத்தின் முன் அல்லது பின்னரான மனைவியால் கொண்டு வரப்படும் சொத்தாகக் காணப்பட்டாலும் ஆரம்பகாலத்தில் திருமணத்தின் போது ஆண்வழியாக வரும் சொத்து முதுசொம் எனவும் பெண் வழியாக வரும் சொத்து சீதனம் எனவும் பொருள் கொள்ளப்பட்டது.

பழைய தேசவழமையின் கீழாக பெண்ணிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து சீதனம் உட்பட தாய்வழி வந்ததாகவும், ஆண்களிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து தகப்பன் வழி வந்ததாகவும் கொள்ளப்பட்டது. ஆயினும் பிற்காலத்தில் இவ்வேறுபாடு நீக்கப்பட்டு சீதனம் ஆதனமானது தந்தையின் தனிப்பட்ட சொத்து அல்லது தாயின் தனிப்பட்ட சொத்து அல்லது தேடிய தேட்டத்தில் இருந்து கொள்ளப்படலாம் எனக் கூறப்படுகிறது.

தற்கால சட்டப்பரப்பில் சீதன ஆதனம் பற்றி நோக்குகையில் சீதன ஆதனமானது மனைவியின் தனிப்பட்ட சொத்தாகவே கருதப்படுகின்றது. சீதன உறுதியில் கணவரின் பெயரை சேர்த்து எழுதப்படுவது வழக்கமாகக் காணப்பட்டாலும்,

உதாரணமாக "…. இதன் பின்னால் காணும் ஆதன இடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் இங்கு சொல்லப்பட்ட வைத்தியசிங்கம் கமலநாதனுக்கும் எனது மகள் துரைசிங்கம் நிர்மலாவிற்கும் நடந்தேறிய விவாகம் காரணமாகவும் எங்களிற்கு இயல்பாக உள்ள அன்பு நேசம் காரணமாகவும் …"

இவ்வாறு குறிப்பிடுவதால் சீதன ஆதனத்தில் கணவருக்கும் பங்கு உண்டு எனக் கூறமுடியும். ஆயினும் 1911ஆம் ஆண்டு 1ஆம் இலக்க திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் சட்டப்பிரிவு (6) இன் படியாக தேசவழமைக்கு உட்பட்ட பெண்ணின் ஆதனப் பரிமாற்றங்களிற்குக் கணவரின் சம்மதம் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளதால் சீதன ஆதனம் மனைவியின் தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் அதனை விற்பதற்கோ அல்லது கைமாற்றம் செய்வதற்கோ அல்லது வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலிற்கோ கணவரின் சம்மதத்தை எதிர்நோக்கி இருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இருப்பினும் (8) இன் படி மாவட்ட நீதிமன்றின் சம்மதத்துடன் சொத்துக் கைமாற்றம் இடம்பெறலாம் எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே. சீதன ஆதனத்தை மனைவி கைமாற்றாது இறப்பாளாயின் அச்சீதன ஆதனத்தில் கணவருக்கோ அல்லது கணவரது உறவினர்களிற்கோ உரிமை இல்லை. மனைவியின் வாரிசுகளிற்கே அவ்வாதனம் சென்றடையும். வாரிசு இல்லாவிடின் மீண்டும் அவ்வாதனம் தாய் வழியிலா அல்லது தந்தை வழியிலா வந்தடைந்தது என நோக்கப்பட்டு அவர்களிற்கே மீள சென்றடைந்துவிடும். இருப்பினும் சீதன ஆதனத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்குரிய பணத்தினை கணவன் மீளப் பெறவும் தேசவழமை இடமளிக்கின்றது.

மேலும் பழைய தேசவழமையின் படியாக இறந்து போன வாழ்க்கைத்துணையின் ஆதனத்தில் இருந்து தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணை மகளிற்கு சீதனம் வழங்க முடிந்தது. ஆனால் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் படியாக இவ்வுரிமை நீக்கப்பட்டுக் குறிப்பிட்ட விகிதாசாரப் படியாக பிள்ளைகளிற்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

தேடிய தேட்டம்

தேடிய தேட்டம் என்பது பொதுவாகத் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனாலும் மனைவியாலும் பிரதிபலன் கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனமாகக் கருதப்படும். இது வாழ்க்கைத் துணையால் தனிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனமாகக் கொள்ளப்படமாட்டாது. ஆயினும் இரு வாழ்க்கைத் துணைகளிலும் சொத்திலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் தேடிய தேட்டமாகவே கொள்ளப்படும். ஆயினும் சீதனம் மற்றும் முதுசு ஆதனத்தினை விற்றுப் பெறப்படும் பணம் தேடிய தேட்டமாகக் கொள்ளப்படமாட்டாது.

பொதுவாகத் தேடிய தேட்டம் ஆதனமானது கணவருக்கும் மனைவிக்கும் உரிய சம பங்கான சொத்தாகக் கொள்ளப்படும். கணவன் அல்லது மனைவி தமது தனிப்பட்ட ஆதனமாகத் தமது பெயரில் கொள்வனவு செய்தாலும் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கொள்வனவு செய்யப்படின் மற்றைய திறத்திற்கு அரைப்பங்கு சென்றடைந்து விடும். உதாரணமாக மனைவி தனது பெயரில் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்திருந்தாலும் கூட அதில் அரைப்பங்கிற்கு கணவன் உரித்துடைய வன் ஆகின்றான். அத்துடன் கணவருக்குரிய தேடிய தேட்டப்பங்கினை மனைவியின் சம்மதமின்றிப் பரிமாற்றம் செய்ய முடியும்.

ஆரம்ப காலத்தில் தேடிய தேட்டப் பங்கினைப் பராதீனப்படுத்தாத இறப்பில் தப்பி இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு மொத்தத் தேடிய தேட்டத்தில் அரைப்பங்கும் ஏனைய அரைப்பங்கும் பிள்ளைகளிற்கும் பகிரப்பட்டது. ஆனால் Manikkavasagar vs Kandasamy (1986) 2SLR என்ற வழக்கின் பிற்பாடு தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணைக்கு தனக்குரிய 1/2 பங்கு உட்பட இறந்த வாழ்க்கைத் துணையின் 1/2 பங்கில் அரை வாசியான 1/4 பகுதியினையும் இணைத்துத் தேடிய தேட்டம் உரித்துடையதாகிறது. பிள்ளைகளிற்கு 1/4 வாசிப் பங்கு சென்றடைகிறது.

பராதீனப்படுத்தாது இறப்பின் தேடிய தேட்டம் சென்றடையும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசவழமைக்கு உட்பட்ட பிள்ளைகளிற்கிடையில் சொத்துப் பகிரப்படும் போது ஏலவே சீதனமாக அல்லது நன்கொடையாக ஆதனம் வழங்கப்பட்டிருப்பின் மிகுதியாக உள் ஆதனம் ஏனைய பிள்ளைகளிற்கு பகிரப்படும் என்பது பொதுவான விதியெனினும் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் உட்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 33 இதன் படியாக (Collation of property b children or grant children) என்பதனூடாக நீதிமன்றத்தின் மூலம் முழு ஆதனப் பெறுமதியும் ஒன்றாக்கப்பட்டு பிள்ளைகளிற்கிடையில் சமமாகப் பகிரப்படும்.

References

1. Kamala nagendra, Matrimonial Property and Gender Inequality (A Study of Thesawalamai)
2. Matrimonial Right and Inheritance (Jaffna) Ordinance No. 1 of 1911
3. Dr.H.W.Thambiah, The Laws and Customs of the Tamils of Jaffna.

நன்றி : நீதம் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம்

கும்பாபிஷேக மகிமை

அமிர்த ஸ்ரீகாந்தக்குருக்கள்
கிளிநொச்சி

இறைவன் ஒளிமயம் ஆனவர். நமது உடம்பு இரதம் (உமிழ்நீர்) உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய ஏழு தாதுக்களால் ஆனது.

இறைவன் ஒளியே உருவாகத் திகழ்பவர்

"சோதியே சுடரே சுழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை பாதியே"
"திருவையாறு அகலாத செம்பொற் சோதி"
"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதி"
"அலகில் ஜோதியன்"
"பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக"
"தீப மங்கள ஜோதி"

என்ற ஆன்றோர் வாக்குகளால் அறிக.

ஜோதி எங்கும் நிறைந்திருந்தாலும் கல்லிலே அதிகம் உள்ளது. ஒரு கல்லை மற்றொரு கல் தட்டினால் நெருப்பு வருவதைக் காண்கிறோம். ஆதலால், தெய்வ வடிவங்களைக் கல்லினால் செதுக்கியமைக்கின்றார்கள்.

வேத சிவாகமங்களிலே ஆலய வழிபாட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றான். ஆனால், வேதாகம மந்திரங்களினாலே நிறுவப் பெற்ற கோவில் மூலத்தனத்திலே விசேஷமாக இருக்கின்றான்.

இறைவன் தனது அகண்டா காரமான சக்தியை ஒரு விக்ரகத்திற்குள் நிலைபெறச் செய்து கொண்டு அடியவர்களுக்கு அருள் பாலிக்கின்றான்.

வெயிலிலே பஞ்சை வைத்தால் வெப்பமான சூடு ஏறும். அதனால் வெதும்பும்; வெந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகிற வெயிலிலே பஞ்சை வைத்தால் எரிந்து சாம்பலாகிப் போகும். நேர் வெயிலுக்குப் பஞ்சைக் கொளுத்துகிற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகிற வெயிலுக்குப் பஞ்சை எரிக்கிற ஆற்றல் உண்டு. என்ன காரணம்?

பரந்து விரிந்து இருக்கின்ற சூரிய ஒளியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது. சூரிய காந்தக் கண்ணாடி.

அது போல், எல்லா இடங்களிலும் பரந்து விரிந்த இருக்கின்ற இறைவனுடைய சக்தியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது மூலத் தானத்திலுள்ள மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இடங்களில் இறைவனை வழி பட்டால் வினைகள் வெதும்பும். ஆலயத்திலுள்ள மூர்த்திக்கு முன் வழிபட்டால் வினைகள் வெந்து போகும். அதனாலே தான் ஔவையார்.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

என்கிறார்.

ஆகவே, நாயன்மார்களும் ஆழ்வாராதி களும் ஞானிகளும் இந்த உலகம் உய்ய அமைத் தவை ஆலயங்கள். அந்த ஆலயத்திலே கரு வறையில் சுவாமி மந்திர வடிவாக இருந்து ஆன் மாக்களுடைய மலமாய கன்மங்களை நீறாக்கி அருள் புரிகின்றான்.

மந்திர ஒலிக்கு ஆற்றல் அதிகம். மந்திரம் சொன்னால் பாம்பு கடிக்காது. கடித்த விஷம் இறங்கும். சில திருடர்கள் மந்திரம் சொன்னால் நாய் குரைக்காதாம்.

ஆகையினால் தான் பெரியவர்கள் வேத மந்திரத்தினாலே இறைவனை வழிபட்டார் கள்.

வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக
போதத்தால் வழிபட்டார் புள்ளி யிருக்கும் வேளூர்

என்பது அப்பர் பெருமான் வாக்கு.

ஆகவே, கோயிலிலே சென்று சேவிக்க வேண்டும். இறைவனுடைய அருளைப் பெற்ற மகான்களாக இருந்தாலும் ஆலய வழிபாடு அவசியம் செய்ய வேண்டும்.

மூர்த்தி தலம் தீர்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

என்பார் தாயுமானவர்.

கால்களாற் பயனென் கறைகண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்.

என்பார் அப்பர் பெருமான்.

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

என்பது சிவஞான சூத்திரம். நால்வராதிகள் எல்லாம் தலயாத்திரை மேற்கொண்டு ஆலய தரிசனம் செய்து வழிபட்டார்கள்.

ஆண்டவன் ஜோதி வடிவானவன் என்று முன்னர் பார்த்தோம். அந்த ஜோதியின் சக்தி கல்லிலே மிகுதியாக உண்டு என்றும் கண்டோம். ஒரு கல்லை ஒரு கல்லால் அடித்தால் ஒளி வரும்.

ஆகவே; கல்லினால் திருவுருவத்தை அமைத்துத் தானிய வாசம் ஜலவாசம் வைத்து அந்த மகாதேவனுடைய மந்திரங்களை எழுதி மந்திர யந்திரத்தை 48 நாள் வழிபாடு செய்து அதை அந்த மூர்த்திக்குக் கீழே வைப்பார்கள். அந்த மந்திர சக்தி மேலே வரும். அந்த வேத சிவாகமத்திலே வல்லவர்களாக இருக்கின்ற அந் தணர்கள் யாகசாலை அமைந்து இனிய மந்திரங் களை ஓதி காலங்கள் தோறும் யாகாக்கினி வளர் த்து அதில் ஜோதியை விளையுமாறு செய்கிறார் கள். அப்படி விளைந்த ஜோதியைக் குடும்பத் திலே சேர்ப்பார்கள்.

கல்லினாலும் மண்ணினாலும் சுதையி னாலும் மனிதனால் உருவாக்கப்பட்டவை விக்கி ரங்களாகும். அவற்றிற்குத் தெய்வ சாந்நியத்தை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் பல கிரியைகளில் ஒன்று தான் கும்பாபிஷேகம்.

பொதுவாக திருக்கோயில்களில் விக்கி ரங்களை நிர்மாணம் செய்வதை நான்கு வகை யாக்குவர்.

1. முதன் முதலாகத் திருக்கோயிலை ஸ்தாபி த்து அதில் புதிய விக்கிரகத்தை நிர்மாணிப் பது ஆவர்த்தம் எனப்படும்.
2. இயற்கைச் சீற்றங்களான மழை, வெள்ளம், புயல், பூகம்பம் முதலினவற்றால் அழிந்த கோயில்களைப் புதுப்பிப்பது அநாவர்த்தம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காலத்தால் சிதலமடைந்த பழைய கோயில்க ளைச் சீராக்கவது புனராவர்த்தம் எனப்படும்.
4. ஆலயங்களில் நடக்கக் கூடாத அநாசரங்கள் ஏற்பட்டால் (திருடர்களால், மிருகங்களால், யாராவது எதிர்பாராதவிதமாக இறந்து விட்டால், செய்யப்படுவ சாந்தி சம்ப்ரோக்ஷணம் எனப்படும்.

நிர்மாணக் கிரியைகள் பின்வருமாறு அமையும்.

1. அனுக்ஞை : கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்த தகுதி வாய்ந்த ஒருவரை (கர்த் தாவை) நியமித்து ஆண்டவனிடம் அனுமதி பெறுவது.
2. விக்னேஸ்வர வழிபாடு : தொடங்கிய செயல்கள் விக்னமின்றி நிறைவேற விநாய கரை வழிபடுவது இதற்குக் கணபதி ஓமம் செய்வர்.
3. வாஸ்து சாந்தி : சிவமகாபுராணத்திலும் ஆகமங்களிலும் வாஸ்து புருஷனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களில் அந்தகாசுர வதமும் ஒன்றாகும். அந்தகாசூர யுத்தத்தில் சிவபெரு மானின் வியர்வை பூமியில் விழுந்தது. அதிலிருந்து ஒரு பூதம் தோன்றியது. அது சிவாக்ஞையால் அந்தகா சூரனுடைய உதிரத் தைக் குடித்தது. பின்னர் சிவபெருமானை நோக்கித் தவமிருந்தது. பல வரங்களைப் பெற்று உலகத்தைத் துன்புறுத்தியது.

தேவர்கள் பெருமானிடம் முறை யிட்டனர். அவர் அதிபலன் என்பவரை ஏவினார். அதி பலன் அந்தப் பூதத்தை மாயா பாசங்களால் கட்டிக் கீழே தள்ளி அவ்வுடம்பின் மீது 53 தேவதைகளை வசிக்க வைத்தார். அப்பூதத் தைக் கெடுதி செய்யாமல் அவர்கள் பரா மரித்து வருகின்றனர். தேவர்கள் அவன் மீது வசித்ததால் அவனுக்கு வாஸ்து புருஷன் எனப்பட்டான். இந்த வாஸ்து புருஷனால் கும்பரிஷேகத்திற்கு கெடுதி வராதிருக்க 53 தேவதைகளையும் வழிபட்டால் சாந்தி பெறச் செய்வது.

4. மிருத்ஸங்கிரஹணம் : இதற்கு மண் எடுத்தல் **என்று** பொருள். அட்டதிக்குப் பாலகர்களின் அனுமதி பெற்று அங்குரார்ப் பணத்துக்குத் தேவையான மண்ணைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து எடுத்த பள்ளத் தினை அபிஷேகம் செய்தல்.
5. அங்குரார்ப்பணம் : இதற்கு முளையிடுதல் என்று பொருள். எடுத்த மண்ணை உரிய மந்திரத்தோடு பாலிகைகளிலிட்டு நவதானி யங்களைத் தெளித்து முளைப்பாலிகை அமைப்பது. முளை பசுமையாக ஓங்கி வளர்ந்தால் கிரியைகள் சீராக நடந்தன என்று பொருள். அப்படியில்லையாயின் மந்திரதோஷம், செயல்களில் குறைபாடு, அசௌசம் இருப்பதாக உணர்ந்து தகுந்த பிராயச்சித்தங்களைச் செய்ய வேண்டும்.
6. ரக்ஷாபந்தனம் : இதற்குக் காப்புக் கட்டுதல் என்று பொருள். கும்பாபிஷேகத்தை முன் னின்று நடத்தும் கர்த்தா, சிவாசாரியார் களுக்கு இடையூறு நேராமலிருக்க மஞ்சள் கயிற்றை வலக்கை மணிக்கட்டில் கட்டுவது.
7. குடம்பஸ்தானம் : கும்பத்தின் மீது வைத்த தேங்காய் சிரசாகவம், மாவிலைகள் தலை முடியாகவும், கும்பத்தில் போர்த்திய வஸ் திரம் தோலாகவும், கும்பம் சிவக்க மேலே பூசிய மண்ணானது சிவந்த உதிரமாகவும், குடத்தின் மண் மாமிசமாகவும், கும்பத்தில் நிறைந்த தண்ணீர் மேதையாகவும், தர்ப்பை எலும்பாகவும், கும்பத்தின் நாற்புறமும் சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும் கும்பத்தினுள் இடப்பட்ட பொன் முதலிய இரத்தினங்கள் சுக்கிலமாகவும் நியாசஞ் செய்யப் பெற்ற மந்திரங்கள் உயிராகவும், கும்பத்தடியில் படிப்படியாக இடம்பெற்ற நவதானியங்கள் கும்பமூர்த்தியாகிய ஈஸ்வரனுக்கு ஆசனமா கவும் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிறது.
8. கலாகர்ஷணம் : எந்த மூர்த்தியை எந்தக் கல சத்தில் ஆவாகணம் செய்கிறோமோ, அந்த மூர்த்தி அந்தக் கலசத்தில் எழுந்தருளும் படி வேண்டி, அக்கலசத்தை ஆசாரியன் தலை யில் எழுந்தருளச் செய்து சகல உப சாரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் ஆலயத்தை வலம் வந்து யாக சாலைக்குக் கொண்டு வர வேண்டும்.

9. யாசாலை : ஆலயத்தின் வடமேற்கு மூலை தவிர வேறு திக்குகளில் ஏதாவது ஒன்றில் யாகசாலை அமைக்க வேண்டும். வடகிழக்கு மூலை (ஈசான திசை) உத்தமாகக் கருதப்படு கின்றது. யாகசாலையில் இரண்டு முதல் ஆறு காலம் வரையில் ஆராதனை செய்யலாம். இது மாதிரி 3, 5, 7, 9 நாட்களில் வசதிக்குத் தக்கபடி யாகசாலை பூஜைகள் நடத்தலாம்.

10. பிம்பசுத்தி : குறிப்பிட்ட சில வேர்களும் மூலிகைகளும் சேர்ந்த ஒரு குழம்பால் விக்ரகத்தைச் சுற்றி செய்தல்.

11. ஸ்பர்சாஹுதி : கலச தீர்த்தத்தில் இருக்கும் இறைச் சத்தியை மீளவும் விக்கிரகத்தில் சேர்க் கும் கிரியைக்கு ஸ்பர்சஹுதி என்று பெயர். யாகசாலையிலிருக்கும் கலசத்திற் கும் விக்ரகத்துக்கும் தங்கக்கம்பி, வெள்ளிக் கம்பி அல்லது தர்ப்பைக் கயிறு மூலம் இணைப்பு ஏற்படுவதை நாடீ சந்தானம் என்றும் கூறுவர்.

12. அஷ்ட பந்தனம் : சுக்கான் கல், கொம்பரக்கு சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன், மெழுகு, எருமை வெண்ணெய், குங்குலியம், நற்காவி ஆகிய எட்டுப் பொருட்களை மந்திர பூர்வ மாகக் சேர்த்துப் பீடத்துக்கும் விக்ரகத்துக்கும் இணைப்பை ஏற்படுத்துதல் இதனை மருந்து சாத்துதல் என்பர். இந்தக் கிரியை செய்த பின் னர் மீண்டும் பிம்பசுத்தி செய்தல் வேண்டும்.

13. மகாபிஷேகம் : கலாபிஷேகம் செய்த பின் விக்ரகத்திற்குப் பூர்ணாபிஷேகம் செய்து பூர்ண நைவேத்தியம் படைத்து சோட சோப சாரம் செய்ய வேண்டும்.

14. கும்பாபிஷேகம் : பிரதான கலசத்தை ஆசாரி யன் சிரசில் எடுத்துக் கொண்டு ஆலய வலம் வந்து கருவறைக்குச் சென்று கலசத்தை மூல விக்ரகத்தின் முன் வைத்து கலசத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை விக்ரகத் தில் கூடும்படி மந்திர பூர்வமாகப் பிரார்த்தித் துக் கலச நீரை விக்ரகத்தில் அபிஷேகிக்க வேண்டும். அதனால் விக்ரகம் இறைவனின் பூரண கலைகளையும் கிரகிப்பதால் அவை விக்கரகங்கள் எனப்படுகின்றன. வி+கிரகம் இதில் வி விசேஷமானது. இறைவனின் விசேஷப் பிரதிநிதி எனலாம்.

15. மண்டாபிஷேகம் : இதற்கு த்ரை பக்ஷிதம் என்று பெயர். மூன்று பக்ஷங்கள் (3x15=45 நாட்கள்) முறைப்படி ஆராதனை செய்தல். முடிவில் பூர்ணாபிஹேகம் செய்த காப்புக் களைதல் மண்டலாபிஷேகமாகும்.

ஒருவன் தன் ஆயுட்காலத்தில் மூன்று கும்பாபிஷேகத்தைக் சேவித்தால் அவனுடைய பாவங்கள் நசிந்து விடுகின்றன என்று சுருதிகள் சொல்லுகின்றன.

அந்தக் கும்பாபிஷேகத்திற்கு முந்தி அதுகல், கும்பாபிஷேகம் ஆன உடனே அது கடவுள்.

காகிதத்தைக் கரன்சி நோட்டாக மாற்று கின்றார்கள். ஆற்றலுடைய அரசாங்கத்தார்.

மண்ணைக் கடமாக மாற்றுகின்றார் கள். இரும்பை ஒலிபெருக்கியாக மாற்றுகின் றார்கள். அதுபோல, அருளாளர்கள் கல்லைக் கடவுளாக மாற்றுகின்றார்கள்.

கும்பாபிஷேகம் வாழ்நாளில் கிடைத் தற்கரிய ஒரு வாய்ப்பாகும். கும்பாபிஷேகத் தைச் சேவித்தவர்களுக்குத் திருவருள் நிரம்பத் துணை செய்யும்.

ஒருவர் நியாயமாகக் கணக்கு எழுதி நியாயமாக செலவழித்து நியாயமாக வரிகட்டி வியாபாரம் பண்ணினார். அவருக்கு மாதம் ஆயிரத்து நானூறு ரூபாய் வருமானம். பன்னி ரண்டு ஆண்டுகள் வியாபாரம் பண்ணினார். இரண்டு லட்சத்து ஓராயிரத்து அறுநூறு ரூபாய் கிடைத்தது. இந்தக் காலத்திலே தனியாரிடத்தில் கொடுத்தால் வராது. வங்கியிலே போடவேண்டும். இரண்டாயிரம் ரூபாய் வட்டி வரும். சைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் போதும். பன்னிரண்டு ஆண்டு பாடு பட்டு இரண்டு லட்சம் சேர்ந்தார்.

இன்னொருத்தர் கிணறு வெட்டினார். ஓர் அண்டா கிடைத்தது. எடுத்துப் பார்த்தால் தங்க டாலர்கள் கொண்டு போய் விற்றார். டாலர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் இருநூறு டாலருக்கு இரண்டு லட்சம் ரூபாய் வந்தது. பன்னிரண்டு ஆண்டு காலம் இரவு பகலாகப பாடுபட்வருக்கு இரண்டு லட்ச ரூபாய் சேர்ந்தது. பாடுபாடமலே, நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழாமலே கிணறு வெட்டியவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் வந்தது.

அது போல், பன்னிரண்டு ஆண்டுகள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை மன, மொழி, மெய்களினாலே வழிபட்டவருக்கு என்ன என்ன அருள் வருமோ, அத்தனை அருளும் கும்பாபிஷேகத்தைச் சேவித்த ஒரு விநாயடியில் வரும். புதையல், எடுத்துத் தன வந்தன ஆவது போல், கும்பாபிஷேகம் சேவித் தவருக்குத் திருவருள் கைகூடி வரும். ஆகவே கும்பாபிஷேகத்தைச் சேவிப்பது மிக மிக இன்றி யமையாதது. எல்லாருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காது.

திருமயிலாப்பூரிலே சிவநேசஞ் செட்டி யார் என்றொரு தனவந்தர் வாழ்ந்து வந்தார். அவருடைய பெண் பூம்பாவை ஏழுவயதிலே அரவந் தீண்டி மாண்டு விட்டாள். அவளுடம் பைத் தகனஞ் செய்து, சாம்பலைப் புதிய மண் ஏனத்திலே வைத்துப் பார்த்துப் பார்த்து அழுத வண்ணம் இருந்தார்.

"கடந்த ஞானிகளும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்பது மேலோர் வாக்கு,

அங்கே திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளினார்.

பதினாறு வயது அவருக்கு, அவர் ஞானத்தின் திருவுரு நான்மறையின் தனித் துணை. வானத்தின் மிசையன்றி மண்ணில் வரும் மதிக்கொழுந்து.

"பெருமானே வருக, வருக, வருக" என்று சிவநேசஞ் செட்டியார் ஞானசம்பந்தரு க்கு வரவேற்பு கொடுத்து அழைத்துப் போனார்.

கற்பகவல்லித் தாயாரையும் கபாலீஸ் வரரையும் சேவித்தார். கோயிலுக்கு வெளியே வந்தவுடன் அந்த எலும்பும் சாம்பலும் அடங்கிய மண் ஏனத்தை வைத்து அழுது தொழுது வருகி நின்றார்.

"செட்டியார் இது என்ன?" என்று ஞான சம்பந்தர் வினவுகின்றார்.

அதற்குச் சிவநேசர், "சுவாமி, அடி யேனுக்குக் குழந்தை இல்லை. நீண்ட காலம் தானம், தருமம், தவம் செய்தேன். ஆண்டவன் அருளினாலே, என் மனைவியின் மணி வயிறு வாய்த்துப் பெண்குழந்தை பிறந்தது. பூம்பாவை என்று பெயர் வைத்தேன். லட்சுமியைப் போலி ருக்கும். என் மகளை உங்களுக்குத் தருவதாகப் பிரகடனம் செய்தேன். நாங்கள் தீண்டவில்லை. அரவந் தீண்டி மாண்டுவிட்டது சுவாமி. நான் கொடுத்து வைக்காத பாவி. தேவரீருக்குத் தருவ தாக நான் நிச்சயிருந்தேன். அதனாலே இந்த எலும்பும், சாம்பலும் தங்களது உடைமை. உடை மையை உடையவரிடத்திலே ஒப்புவித்தேன்" எனறு கூறி அழுதார்.

அப்போது வேற்றுச் சமயத்து முனிவர் கள் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். என்ன நடக்கிறதென்று திருஞானசம்பந்தர் சொன்னார். "செட்டியார் உங்கள் குழந்தை பிழைக்கும். இந்த உடம்பு தானே அழிந்தது. ஆத்மா அழியாதது அல்லவா?" என்று கூறினார்.

பின்னர், சாம்பல் நிறைந்த மண்ஞனத் தைப் பார்த்து, "அம்மா பூம்பாவை, மண்ணுலகத் திலே பிறந்தவர்கள் பெறுகின்ற பயன் இரண்டு உண்டு, என்னென்ன பயன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று, மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்.

மதிசூடும் : தட்சனுடைய சாபத்தாலே மெலிந்து நலிந்து தேய்ந்து போன சந்திரன் அடியிலே விழுந்தான். அடியிலே விழுந்தவனை முடியிலே வைத்தாராம். அடியிலே விழுந்தால் மடியிலே தான் வைக்கணும். முடியிலே வைத் தாராம். சிவபெருமானைச் சரணாகதி அடைந் தால் ஒரே லிப்ட் மாதிரி மேலே தூக்கி விடுவார்.

சந்திரனைச் சூடிய சிவபெருமானின் அடியார்களை அழைத்து வந்து, அவர்தம் பாதபங்கயங்களைக் கழுவி, உபசரித்து விருந் தூட்டிப் பரமான்னம் தரவேண்டும்.

இரண்டு : கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல் கண் கிடைத்த பயனாக அவனது திருவீதியுலாவைக் கண்டு சேவிக்க வேண்டும். இந்த இரண்டும் உண்மையானால் அம்மா நீ பிழைக்க வேண்டும்.

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

என்றெல்லாம் கூறிய சம்பந்தர்,

ஐப்பசி ஓண விழாவும் ...
காணாதே போதியோ பூம்பாவாய். (ஐப்பசி)

கார்த்திகை நாள் ...

விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் (கார்த்)
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய் (மார்கழி)

தைப் பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் (தை)
நடம்ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய் (மாசி)

பங்குனி உத்திரநாள்

ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் (பங்குனி)

என பாடுகின்றார்.

பின்னர், அம்மா பூம்பாவை, உன் அப்பா ஆயிரமாயிரம் பேருக்கு அன்னதானம் பண்ணுவாரே, அதைப் பார்க்காமல் போய் விட்டனையே.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். (புரட்டாதி)

என்று பாடிக் கொண்டே வருகின்றார்.

அந்தக் காலத்தில் உள்ள எதிர்க்கட்சிக் காரர்கள் எல்லம் எள்ளி நகையாடுகின்றார்கள்.

அப்போது பரமஞான குருவாகிய திரு ஞானசம்பந்தர் "அம்மா பூம்பாவை, உன் அப்பா மகாகும்பாபிஷேகம் செய்யப் போகின்றார். ஆயிரமாயிரம் ஆதி சைவப் பெருமக்கள் வந்து ஞானக்கினி வளர்த்துச் செய்யப் போகின்ற அந்த மகா கும்பாபிஷேக் பார்க்காமல் போயினையே அம்மா.

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான் தன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

பெருஞ்சாந்தி என்றால் கும்பாபி ஷேகம் என்று பொருள்.

கும்பாபிஷேகம் என்று சொன்னவு டனே, குடம் வெடித்துப் பன்னிரண்டு வயது பெண் வெளியே வந்தாள். அந்தக் குழந்தை மறைகிற போது ஏழு ஆண்டு. இப்போது குடத்தி லிருந்து வெளியே வரும் போது பன்னிரண்டு. எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாரும் "ஆ" என்றனர். மூக்கின் மேல் விரலை வைத்தனர். அப்பா அம்மாவுக்கு எப்படியிருக்கும்?

எலும்பைப் பெண்ணாக்குகிற ஆற்றல் அந்தக் கும்பாபிஷேக சப்தத்திற்கே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய பழைய அரசர்கள் தங்க ளது அரன்மனையை பெரிதாகக் கட்டாமல் அரன்மனை பெரிதாகக் கட்டினார்கள். அரண் மனை காவலோடு கூடியது. அரன்மனை அரு ளோடு கூடியது.

இன்றைக்கு இராஜராஜ சோழனுடைய அரண்மனை இல்லை. அவன் கட்டி வைத்த பெரிய கோவில் இருக்கிறது.

எனவே, நம்மால் முடிந்த அளவுக்கு ஆலயத் திருப்பணிகள் செய்ய வேண்டும்.

புல்லினால் கோடி யாண்டு
புதுமண்ணால் பத்துக் கோடி
சொல்லுமா ஞாலந் தன்னில்
செங்கல்லால் நூறு கோடி
அல்லியங் கோதை பங்கன்
ஆலயம் மடங்கள் எல்லாம்
கல்லினால் புதுக்கி னோர்கள்
கைலைவிட் டகலா ரன்றே.

மஞ்சம் புல்லினால் கோயில் கட்டினால்
கோடி வருடமும்,
மண்ணால் கோயில் கட்டினால் பத்து
கோடி வருடமும்,
செங்கல்லால் கோயில் கட்டினால் நூறு
கோடி வருடமும் கைலாசத்திலிருக்கலாம்.
ஆனால், கருங்கல்லினால் கோயில் கட்டினவர்கள்
கைலாசத்தைவிட்டு அகலவே மாட்டார்கள்.

எத்தனை எத்தனையோ வகையில் நாம் பணத்தைச் செலவழிக்கின்றோம். திரு மணம், சஷ்டியப்த சாந்தி என்று லட்ச லட்சமாய் செலவழிக்கின்றோம். அது அன்றோடு சரி.

பெருமானுக்குத் திருப்பணி செய்தால், அது ஆயிரம் ஆண்டுகள் இருக்கும். லட்சம் லட்சம் பேர்கள் வழிபடுவார்கள் இன்றைக்குத் திருத்தணி, திருச்செந்தூர், பழனி முதலிய தலங் களுக்கு எத்தனை லட்சம் பேர் வந்து வழிபட்டு நலம் பெறுகின்றார்கள். அங்கே சென்று நலம் பெற்றவர்கள் எல்லாம் மறுபடியும் செல்கின்றார் கள்.

ருசி கண்ட பூனை உரி தாவும். தேன் பாட்டில் என்றால் ஈ, எறும்பு வந்து மொய்க்கும். வரவர மக்கள் ஆலயத்திற்குச் சென்று வழிபடக் காரணம், நினைத்தது நடக்கிறது கேட்டது கிடைக்கிறது. ஆண்டவன் கேட்டதெல்லாம் வரையாது வழங்குவான்.

"வேண்டும் அடியர் புலவர்
வேண்ட அரிய பொருளை
வேண்டு மளவில் உதவும் பெருமாளே"
"வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றாதுதவும் பெருமாளே"
"அடியவர் இச்சையில் எவையெவை உற்றன
அவை தரு வித்தருள் பெருமாளே"
முருகா முருகா முருகா முருகா முருகா

முருகா என்று எம்பெருமான் நாமத்தை உள்ளம் உருகிக் கூற வேண்டும்.

மொழியும் அடி யார்கள் கோடி
குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவர்

என்று திருப்புகழ் முனிவர் கூறுகின்றார்.

அந்த முருக நாமத்தைச் சொல்லி அந்தப் பெருமானை வழிபடுகிறார்கள் பக்த கோடிகள் அப்படி அடியார்கள் வழிபடுவதற்கு நிலைக்களமாக இருப்பது லயம்.

பத்ராசலம் என்னும் தலத்தைக் கோபண்ணா திருப்பணி செய்து அழியாத புக ழையும், புண்ணியத்தையும் பெற்றார்.

பாண்டிநாட்டு முதலமைச்சராயிருந்த மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையிலே ஆலயத் திருப்ணி செய்தார்.

அப்படியே பாண்டியரும் சோழரும் பல்லவரும் எத்தனை எத்தனையோ ஆலயத் தைக் கல்லினாலே செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இறைவனை ஆலயத்திலே வைத்து வழிபடுவதினாலே இகம், பரம், வீ, என்று மும்பை நலன்களும் நமக்கு உண்டாகும்.

ஆலய வழிபாடு இன்றியமையாதது. அது கலைகளுக்கெல்லாம் உறைவிடமானது; நம்முடைய தெய்வீகமான சக்தியை வெளிப்படு த்துவது கலைச்சின்னங்கள் கோவில்களாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென் பார்கள். அப்படி கும்பாபிஷேகம் செய்வதி னாலே அந்த மந்திர சக்தி கூடுதலாக அமையும். பல காலம் கும்பாபிஷேகம் செய்யவில்லை யானால் அந்தச் சக்தி தல விருட்சத்துக்குப் போகும். இன்னும் கொஞ்ச காலம் கழிந்தால் தல விருட்சத்தி லிருந்து பராகாசம் அடையும். அப்போது அந்த மூர்த்தி இடத்தே இருக்கிற ஆற்றல் பரவெளியில் கலந்து விடும். அதற்காகத் தான் மகான்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது குறைந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்க ஒரு முறையாவது மகா கும்பாபி ஷேகம் அவசிய மாகச் செய்வார்கள்.

ஆண்டவன் மந்திர யந்திர வடிவாக இருக்கின்றான். அதனாலே, அந்த மந்திர யந்திர வடிவத்தைச் சுவாமிக்கு அடியிலே மாத்ருகா மந்திரங்களை எல்லாம் எழுதி வைப்பார்.

அக்ஷர லக்ஷ ஜபத்தர்க் ரமத்திடு
சக்ர தலத்தி திரியக்ஷி சடக்ஷரி

என்று அருணகிரியார் பாடுகின்றார்.

அந்த மகான்கள் அட்சர லக்ஷங்களை எழுதி ஜபங்களை ஜபிப்பார்கள். அதனாலே அதனுடைய ஆற்றல் அதிகப்படுகிறது.

அந்தக் காலத்தில் இருந்த அரசர்கள் தானும் தன் மனைவியாரும் அணிகலன்களை எல்லாம் ஆண்டவனுக்குச் சாத்தி அழகு பார்த் தார்கள்.

கொல்லூர் மூகாம்பிகைக்கு நளச்சக்கர வர்த்தி கொடுத்த பச்சை இன்றும் இருக்கிறது. நளச்சக்கரவர்த்தி எந்தக் காலத்தில் வாழ்ந்த வரோ. அவர் இல்லை. அவர் கொடுத்த பச்சை இன்றைக்கும் மூகாம்பிகை கோவிலிலே இருக்கிறது.

ராஜராஜாக்கள் எல்லாம் தனி உடை மையைப் பொது உடையையாகச் செய்தார்கள்.

எங்கே ஆலயங்கள் சிறப்பாக இருக் குமோ அங்கே குடிகள் உயரும். கோவில் உயர குடி உயரும். கோவில் குன்றினால் குடிகள் குன்றிப் போவார்கள்.

ஆலயங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆலயத்திலே சென்று தூய்மைக்கு மாறான காரியங்களைச் செய்யக் கூடாது.

யார் ஒருவர் கோயிலுக்கு அருகிலே சிறுநீர் கழிப்பார்களோ, அவர்களுக்கு மறுபிறப் பிலே சிறுநீரகக் கோளாறுகள் வரும்.

ஆலயத்திலே சென்று தூங்கியவர்கள் மறுபிறப்பில் மலைப்பாம்பாய் பிறப்பார்கள்.

ஆலயத்திலே சென்றால் கொடி மரத் தின் அடியில் விழுந்து கும்பிட வேண்டும். உள்ளுக்குள் விழுந்து கும்பிடக் கூடாது. ஆண்ட வனைத் தவிர வேறு பொருள்களை நோக்கக் கூடாது. அங்கே இறைவனுடைய அருள்சக்தி சூட்சமமாக உலாவிக் கொண்டிருக்கும். இறை வன் ஒருவன் தான் பல்வேறு வடிவங்களாக நமக்க அருள்புரிகின்றான்.

இதைத் தான் அருணகிரியார் சொன் னார். ஓல மறைகள் அறைகின்ற ஒன்றது

மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்
ஓத சரியை க்ரியையும் புணர்ந்தவர் எவராலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே பொருள் அகில உலக நாயகனாக "ஏகம் ஏவா அத்வ தீயம் பிரம்மம்" என்று வேதம் சொல்லுகிறது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று திருமூலர் கூறுவார்.

இனி, கோவில் அமைப்பைப் பார்ப் போம். இருதயஸ்தானம் தான் மூலத்தானம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்பது திருமந்திரம்.

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்கின்ற பஞ்சமய கோசங் கள் பஞ்சப் பிரகாரம்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆக ஆறு ஆதாரங்களே. மகா மண்டபம், அலங்கார மண்ட பம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக் கிரகம் என்ற ஆறு மண்டபங்களாகும்.

கொடி மரந்தான் முதுகுத் தண்டு முதுகுத் தண்டுக்கு நடுவே வெள்ளை நரம்பு. சுகம்னா நாடி ஓடுகிறது. வளைந்து வளைந்து போகும் வெண்சாரைப் பாம்பைப் போல, இந்த முதுகுத் தண்டிலே அந்தச் சுழுமுனை என்ற வெள்ளை நரம்பு வளைந்து தர்ப்பைக் கயிற்றை யும் வெள்ளைத் துணியையும் முறுக்கி வளைந்து வளைந்து மேலே ஏற்றுவார்கள்.

அந்தக் கொடிச்சீலை மேலே ஏறுவது சகஸ்ராரத்துக்கு ஆன்மா பிரயாணம் அடைவது. இந்தச் சகஸ்ராரம் என்பது தான் நம்முடைய தலையின் உச்சி. அங்கே ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரைக் கமலம், இங்கே ஆயிரத்தெட்டு நாடி நரம்புகள் பரந்து இருக்கும்.

இதைத் தான் அருணகிரிநாதர்

மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர் என்கின்றார்.

வள்ளற் பெருமானுக்கு அந்த ஒளி தெரியுமாம். அதனாலே, முக்காடு போர்த்தி மறைத்திருப்பாராம். ஆயிரங்கால் மண்டபம் சகஸ்ராரத்தைத் தெரிவிக்கும். சுவாமி, கொடி யேறி விட்டால், வெளியே வருவார். ஆன்மாக் களுக்கெல்லாம் பக்குவத்தை உண்டாக்குகின் றார். சுவாமி திருவீதியுலா வருவது ஊரைப் பார்க்கவா? கோவில் உள்ளே சென்று சேவிக்க மாட்டாத மக்களுக்காக (ஜனனா சௌசம் மரணா சௌசம் உள்ளவர்கள் ஸ்நானம் பண் ணாமல் உள்ளே சென்று சேவிக்க முடியாது) சுவாமி வெளியே வந்து காட்சி கொடுக்கின்றார்.

சுவாமி நந்தன வனத்திலே விழா கொண்டாடுவார். அங்கே பத்ர புஷ்பங்கள் தரு கின்ற அந்தச் செடி கொடிகளுக்கும் மேல் பிறப்பு வரும் பொருட்டு.

குளத்தில் உள்ள மீன் முதலான ஜலவாழ் பிராணிகளுக்கு மேல் பிறப்பைத் தரும் பொருட்டுப் பெருமான் அந்தக் குளத்திற்குப் போய்த் தெப்பவிழா கொண்டாடுவார்.

இவையெல்லாம் ஆன்மாக்கள் நன் மைக்காகவே ஆண்டவன் செய்கின்றான்.

ஒரு வயதான கிழவி, பல்லில்லாத கிழவி சீடை சுடுவாள். பேரக்குழந்தைகளுக்காக

அதே போல் இறைவன் நமக்கு அம்மை யும் அப்பனுமாக இருந்து உதவுகின்றான்.

பிறவிகள் தோறும் அவன் தான் அம் மையும் அப்பனும் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.

என்பர் மணிவாசகப் பெருந்தகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மட்டுமா, செடி, கொடி, ஆடு, மாடு, பல்லி, ஓணான் எல்லாவற்றுக்கும் அவன் தான் தாயார்.

"சடையானை எவ்வுயிர்க்குந் தாயா னானை
சங்கரனை சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற படையானை"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

எவ்வுயிர்க்கும் அம்மாவாக இருக்கின்றான் ஆண்டவன். பக்குவப்பட்ட உயிர்களுக்கு அப்பாவாக இருப்பான். அதனால் தான் "அம்மே, அப்பா" என்று அழைத்தார் ஞான சம்பந்தர்.

மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பின் ஊைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணி சிகரம் பார்த்து
அம்மை அப்பாவென்று என்று அழைத்தருளி அழுதருள

ஞானசம்பந்தப் பெருமானின் அப்பா மறைந்தது குளத் தண்ணீரிலே. அந்தக் குளத்தைப் பார்த்து அழுகிறாராம். அவர் தானே அம்மையும் அப்பனும்.

இறைவன் அகில உலகத்துக்கும் அம்மையும் அப்பனுமாக இருக்கின்றான். அவன் நமக்காக அந்தக் கோவிலில் உள்ள, உருவத்திலே தோன்றி அருள்புரிகின்றான்.

அந்தக் கொடியேறுவது சுழுமுனையிலே பிராண வாய சகஸ்ராரத்துக்குப் போவதைத் தெரிவிக்கும்.

ஆண்டவன் ஒவ்வொரு வாகனங்களிலே வருவதெல்லாம் ஒவ்வோர் உண்மையைத் தெரிவிக்கும்.

ஆலயத்தில் அர்ச்சை (மூர்த்தி) வடிவாக இருந்து அருள்புரிகின்றார்.

சிவஞானிகளும் வணங்க வேண்டியுது ஆலயம். அந்த ஆலயத்தில் காலங்கள் தோறும் வழிபாடு நடக்க வேண்டும்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கள்ளங் களவு மிகுந்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே.

ஆலய வழிபாட்டை சுருக்கமாக மீண்டும் சொல்கின்றேன்.

தேவாலயத்திற்குச் செல்லுதற்கு முன் நீராடி, நீராடி தோய்ந்து உலர்ந்த ஆடையை உடுத்தி, அனுஷ்டானங்களை முடித்துத் தேங்காய், பழம், தாம்பூலம், கற்பூரம் முதலியவற்றை எடுத் துக் கொண்டு பாதசாரியாகத் தேவாலயத்தை நெருங்கி, அங்குள்ள தீர்த்தத்தில் கை, கால்களைச் சுத்தப்படுத்திக் கொண்டு திருக் கோபுரத்தைத் தரிசித்துத் தெய்வசிந்தனையுடன் கோயிலுக்குள் செல்ல வேண்டும்.

உள்ளே சென்றதும் பலிபீடத்தையும் கொடி மரத்தையும் சிவாலயமாயின் நந்தி தேவரையும் விஷ்ணு ஆலயமாயின் பெரிய திருவடியாகிய கருடாழ்வரையும் வணங்கி உள்ளே செல்ல அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும்.

அபிஷேக நிவேதனம் இல்லாத நேரத்தில் சந்நிதிக்கு முன் ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும் (தலை, கையிரண்டு, இரண்டு காதுகள், இரண்டு முழந்தாள், மார்பு இந்த உட்டுறும்பும் பூமியில் பொருந்தும் படி வழங்கல்) பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் (கையிரண்டு, முழந்தாள் இரண்டு, தலை இவ்வைந்தும் பூமியில் பொருந்தும் படி வணங்கல்) 3, 5. 7, 9, 12 முறை செய்தல் வேண்டும்.

பின், சந்நிதிதானத்துக்கு உள்புகுந்து துவார பாலகரை வணங்கி அனுமதி பெற்றுச் சந்நிதானம் அடைந்து அங்கிருக்கும் அருச்சகரிடம் தாம் கொண்டு சென்ற பொருட்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து தேவாராதனை செய்யத் தரிசித்துக் கடவுளுக்குத் தன் முதுகைக் காட்டாது திரும்ப வேண்டும்.

திரும்பிக் கைகளைக் குவித்து தெய்வ தோத்திரங்களைச் செய்து கொண்டு மூன்று முதல் இருபத்தொன்று வரை ஒற்றையாக வலம்வர வேண்டும்.

அவ்வாறே தேவியர் சந்நிதியுள் புகுந்து நான்கு முறை வணங்கிக் தரிசனம் செய்து கொண்டு வீட்டிற்குத் திரும்ப வேண்டும்.

திருக்கோயிலுக்குள் ஆசாரமில்லாது போவது, மூக்குச் சிந்துதல், எச்சில் துப்புதல், தாம்பூலந் தரித்தல், பலகாரங்களைச் சாப்பிடு தல், தூங்குதல், ஆசனத்தில் அமர்தல், காலை நீட்டிக் கொண்டு இருத்தல், மயிர் முடித்தல், தலையிலும் தோளிலும் வஸ்திரங்களை அணிந்து கொண்டு செல்லல், கோபுரம், கொடி மரம், விக்கிரங்கள் நிழலை மிதித்தல், தாண்டு தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், விளை யாடல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் நடுவில் செல்லுதல், ஒருமுறை இருமுறை வலம் வருதல், அகாலத்தில் தரிசித்தல், அபிஷேக நிவேதன காலங்களில் தரிசித்தல், வீதி உற்சவங் கொண்ட ருளும் போது கோயிலுள் புகுந்து வணங்குதல் முதலியன கூடாது.

மலர்மாலை தொடுக்கக் கூடாது. வீண் காரியம் செய்யக்கூடாது.

இறவைனது உடைமைகளைத் தன் பொருட்டு உபயோகித்துக் கொள்ளக் கூடாது.

வழிபாடு முந்திய காலத்திலே கும்பாபி ஷேகம் அவசியம் செய்து வழிபட வேண்டும்.

கும்பாபிஷேகம் செய்வது அந்த மூர்த்தி யின் மூர்த்திகரத்தைப் புதுப்பிப்பதாகும்.

கும்பாபிஷேகத் தத்துவத்தை இந்த அளவிலே சொல்லி எல்லா ஆலயங்களும் ஓங்கி வளர்க என்று சுவாமியைப் பிரார்த்திக் கின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்க்
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

நாடக இயக்குநர் க.விஜயசேகரன்

நேர்காணல் செய்தவர்

இனிய. கருணாகரன்
திருநகர்

கேள்வி 01 : உங்களுக்கு நாடகத்துறையில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

பதில் : 1973ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கல்வியங்காட்டில் ஆர்.எஸ் பதி ஆசிரியர் அவர்களிடம் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் போது ஆண்டு விழாவுக்கு அரங்கேற்றப்பட்ட நாடகத்தில் ஒரு விதவைப் பெண்ணின் மகனாக நடித்தேன். அவரது நெறியாழ்கையும், வழிநடத்தலும் எனக்கு நாடகத்தின் மீதான ஆர்வத்தைத் தூண்டியது. தொடர்ந்து அவரது நாடகத்திலும் பள்ளி நாடகத்திலும் நடித்து வந்தேன்.

கேள்வி 02 : உங்களுக்கு நாடகத்தில் ஆர்வம் ஏற்பட்ட காலத்தில் கிளிநொச்சியின் நாடக முயற்சிகள் எப்படியிருந்தன? அப்பொழுது யாரெல்லாம் நாடக இயக்கத்தில் ஈடுபட்டனர்?

பதில் : 1980 – 1981 காலப்பகுதியில் கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நான் கற்றுக்கொண்டிருக்கும் வேளையில் எமது பிரதேசத்தில் மூன்று விதமான நாடகங்கள் மேடையேற்றப்பட்டுக்கொண்டிருந்தன. ஒன்று பாடசாலைகளில் நடைபெற்ற விழாக்களின் போது மேடையேற்றப்பட்ட நாடகங்கள் அது ஒரு விதம். இரண்டு கிராமப் புறங்களில் நடைபெற்ற புராண இதிகாச நாடகங்கள் மூன்று சாதாரண சமூக நாடகங்கள் எனக் கூறப்பட்ட நாடகங்கள் சமூகத்தின் பிரச்சினைகளைப் பேசுகின்ற சமூக நாடகங்களும், நகைச்சுவை நாடகங்களும் மேடையேற்றுப்பட்டுக்கொண்டிருந்தன. இதில் புராண இதிகாச நாடகங்களில் கலைஞர்களாக திரு.திருச்செல்வம், திரு.சத்தியமூர்த்தி, திரு.வீரசிங்கம், திரு.சிவபாலன், திரு.வேலாயுதம் போன்றவர்கள் தயாரித்து அரங்கேற்றி வந்தனர். இதேபோன்று கலைஞர்களான திரு.துரைஸ், திரு.செல்வம், திரு.தியாகு போன்றவர்களின் நகைச்சுவை நாடகங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றப்பட்டு வந்தன.

இவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கும் தெற்கும் "வெளிக்கிடடி விசுவமடுவுக்கு", "புளுகர் பொன்னையா" போன்ற நாடகங்கள் ரிக்கற் சோவாக நடத்தப்பட்டது. இந்தக்காலப்பகுதியில் தென்னிந்திய நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. நகைச்சுவை நடிகர் திரு.தங்கவேலு சுந்தரராஜன் போன்றவர்களது அளிக்கைகள் மேடையேற்றப்பட்டது. திரு. கலசம் பாலா அவர்களின் "கலசம்நைட்" போன்ற நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வந்தன. இக்காலப்பகுதியில் திரு.வீரசிங்கம் அவர்களின் "தங்கச்சங்கிலி" எனும் சமூக நாடகமும் திரு.திருச்செல்வம் அவர்களின் "கருணன்" என்கின்ற புராண இதிகாச நாடகமும் பலராலும் பேசப்பட்டதோடு நாடகப் போட்டிகளில் வெற்றியும் பெற்றன.

கேள்வி 03 : உங்களுக்குரிய நாடகத்தை அதாவது உங்களுக்கான நாடக வடிவத்தையும் நாடக முறைமையையும் எப்பொழுது, எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

பதில் : உயர்தரம் கற்று முடித்த 84 காலப் பகுதியில் என்னோடு ஒத்த வயதுடைய பள்ளி மாணவர்களுடன் இணைந்து திருநகர் பகுதியை மையமாகக் கொண்டு சமூக நகைச்சுவை நாடகங்களை ஆங்காங்கே நிலத்திலும், உழவி யந்திர பெட்டிகளிலும் அளிக்கை செய்து வந்தோம்.

குறிப்பாக சித்தப்பா கடை முன் வீதியில் உள்ள சூசைநாதன் அவர்களின் ஒருங்கிணைப்பின் மூலம் அன்ரன் றொபேட், அலெக்சான்டர், தங்கேஸ்வரன், சிவா, மலர், ராணி, விமலா, புஸ்பா, திலகம், சாந்தி, வசந்தி போன்றவர்களுடன் இணைந்து கிறிஸ்தவ நாடகங்களையும் சிறிய அளவிலான சமூக நகைச்சுவை நாடகங்களையும் அளிக்கை செய்தோம்.

இக்காலப்பகுதியில் திருநகரில் உருவாக்கப்பட்ட மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளை நிறுவனம் எமது நாடகச் செயற்பாட்டை ஒருபடி மேலாகக் கொண்டு வந்தது. இதன்போது உருவாக்கப்பட்ட "படித்த மருமகள்" நாடகம் மாவட்ட நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுத்தந்தது. இதில் திரு.பாஸ்கரமூர்த்தி, திரு.மோகன், செல்வி, சாந்தி, சிவா, அலெக்சாண்டர் போன்றோரும் நடித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்று தொடர்ச்சியாக எமது நாடகம் மாவட்ட நிலையில் மூன்று வருடங்கள் முதல் நிலையைப் பெற்றதால் எனக்கு சிறந்த நடிகர், சிறந்த இயக்குநர் விருதுகள் கிடைக்கப்பெற்றன. இப்படியாக எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெறுகின்றது. இதன் பின்னரே எனது நாடக முயற்சியில் முக்கிய பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்த திரு. கந்தசாமி அவர்களினால் நாடக விரிவுரையாளர் திரு.சிதம்பரநாதன் அவர்களும், ஆசிரியர் திரு. விந்தன், ஆசிரியர் திரு.ரவி, திரு.இளங்கோ ஆகியோரது அறிமுகம் கிட்டியது.

ஆசிரியர்களுக்கான களப்பயிற்சி தொடர்ச்சியாக நடைபெற்றது.

இக்காலகட்டத்தில் தான் நாடகத்தின் பல்வேறு பரிமாணங்களை நான் புரிந்துகொண்டேன். இதை நான் விளங்கிக்கொண்டேன்.

ஆசிரியரால் மேடையேற்றப்பட்ட "முயலார் முயல்கிறார்", "இப்போதைக்கேது வழி" எனக்கு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

இவ் ஆசிரியக் கலைஞர்கள் உடன் இணைந்து அளிக்கை செய்தமை மறக்கமுடியாத மனப்பதிவை ஏற்படுத்தியது.

இவ்வாறான புதியவர்களின் சந்திப்புக்கள் புதியவகை அளிக்கைகள் என்பன எனது நாடக முயற்சியில் தேடல்களையும், நவீன அரங்கு நோக்கிய பார்வைகளையும் தந்தன. அதிலிருந்தே நானொரு புதிய நாடகப்படையாக புத்தாக்கம் பெற்றேன்.

கேள்வி 04 : போர்க்காலத்தில் நாடகச் செயற்பாடுகள் எப்படி அமைந்திருந்தன?

பதில் : போர்க்காலப் பகுதியில் வரையறுக்கப்பட்ட கலைப்படைப்புக்களை மட்டுமே அளிக்கை செய்யப்பட்டு வந்தன. ஒருமுகப்பார்வை கொண்டதாகவே படைப்புக்கள் இருக்க வேண்டும் என்ற திறந்த வெளியில் வெளிப்படாத சட்ட மூலங்கள் இருந்தன. இக்காலத்தில் தென்னிந்தியச் சினிமாக்களில் சிலவன மட்டுமே தணிக்கைகளின் பின்னர் மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் சுயாதீனமானதும், சுதந்திரமானதுமான படைப்புக்கள் வெளியிடுதல் என்பது மிகவும் நெருக்கடி நிறைந்ததேயாகும். இருந்தும் அப்பொழுது சமூகத்தில் காணப்பட்ட பொருளாதாரத் தடை பலாபலன்கள் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருந்தது. மனிதாபிமானம் அற்ற செயற்பாடுகளுக்கு எதிராக பொதுவான நாடகங்கள் வெளிவந்தன. கூடுதலாக பரப்புரைகளுக்கான தொனிப்பொருள் நாடகங்கள் முனைப்புப் பெற்று அளிக்கை செய்யப்பட்டன. இப்படைப்புக்கள் யாவும் விடுதலைப் போராட்டத்தை மையக்கருத்தாகக் கொண்டு உருவாக்கம் செய்யப்பட்டிருந்தன. நுகர்வுகளின் முக்கியத்துவம் கருதி மேடை நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி 05 : அப்பொழுது உங்களுடைய பணிகள் – நாடக முயற்சிகள் எப்படியிருந்தன?

பதில் : அக்காலப்பகுதியல் எனது நாடக முயற்சிகளைப் பற்றிக் கூற வேண்டுமாயின் நிச்சயம் போர்க் களத்தில் பாதிப்புற்றிருந்த சிறுவர், இளைஞர்களின் உள நெருக்கடிகளைத் தீர்க்கும் பொருட்டு அழகியல் கலாமன்றம் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. அழகியல் செயற்பாடுகளை பிர–யோகப்படுத்துவதன் மூலம் உள்ள நெருக்கீடுகளின் பாதிப்புக்களைப் பெருமளவு குறைத்துக் கொள்ளலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டு பல கல்வியலாளர்கள் உளவியல் ஆலோசகர்கள் ஆகியோரின் ஆலோசனைகளுக்கமைவாக கல்வித் திணைக்களம், அரச அதிபர் செயலகம், கல்விக்கழகம் இணைந்து இந்நிறுவனம் விஸ்தரிக்கப்பட்டது.

(அழகியல் கலாமன்றத்தின் செயற்பாடுகளையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்)

இந் நிறுவனத்தின் மூலம் ஆசிரிய கலைஞர்கள் அழகியல் பாடத்தில் விருப்புக்கொண்ட மாணவர்கள் பொதுவான ஈடுபாடு கொண்ட கலைஞர்கள் எனப் பலரும் மையங்கொண்டனர். நெருக்கடி மிக்க அக்காலப்பகுதியில் மக்களின் சுகாதாரம் சம்பந்தமான (மலேரியா, கொலரா) விழிப்புணர்வு நாடகங்களும் தாழ்நிலை முரண்பாடுகளை நீக்குகின்ற பால்நிலை சமத்துவ அரங்க செயற்பாடுகளையும் சுய உற்பத்தியையும் மேம்படுத்துகின்ற விவசாயம் சார்ந்த நாடகங்களும் நெருக்கடிக்குள் பாதிக்கப்பட்டு பாடசாலை செல்ல முடியாதிருந்த சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நாடகங்களையும் தொடர்ச்சியாக மேடையேற்றி இருந்தோம். அக்காலப்பகுதியில் மானிட விடுதலையின் அவசியத்தைப் பேசுகின்ற நாடகங்களும் எம்மால் மேடையேற்றப்பட்டது. இதேபோன்று தமிழ்த்தினப் போட்டிகளுக்கான நாடக அளிக்கைகளும், ஆசிரியர் தினம் போன்ற நிகழ்வுகளுக்கான ஆசிரியக் கலைஞர்களின் நாடகங்களும் எம்மால் மேடையேற்றப்பட்டன. இதில் நான் என்கின்ற சொற்பதத்தை மாற்றி நாம் என்கின்ற சொற்பதத்தை அதிகம் பிரயோகிக்க விரும்புகிறேன். ஏனெனில் அவ் அளிக்கைகள் யாவும் ஒரு கூட்டு முயற்சின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது. ஆசிரியர்களான ரகுநாதன், சிவலிங்கம், அன்ரன் அன்பழகன், அபராஜிதன், பிரபாகரன், அன்பரசி, மதனா, லிட்வினா, யேகேஸ், மாலா, Music அனபரசி, பிரபா, திலகர், பியசிலன், பங்கயற்செல்வன், கிருபா, கணேசன், விமலேஸ், தயாபரன் என்பவர்களுடன் சக கலைஞர்களான லலிதா, ராதா, சுப்பையா மாஸ்ரர், ரூபன் என பலரது கூட்டு முயற்சிகளிலும் இவற்றுக்குப் பங்களிப்பிருந்தன. மேலும் சில கலைஞர்களும் இதில் இணைந்து செயற்பட்டனர். அவை என் மனதில் தற்போது இல்லாததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயை கூர்ந்து அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

கேள்வி 06 : அழகியல் கலாமன்றத்தில் அதிப ராக ஏறக்குறைய 10 ஆண்டுகள் வரையில் செயற்பட்டிருக்கிறீர் கள். அழகியற் கலாமன்றத்தின் முக்கியமான பங்களிப்புக்கள் என்ன?

பதில் : ஏற்கனவே அழகியல் கலாமன்றத் தின் செயற்பாடுகள் பற்றிக் கூறி யிருந்தேன். மேலும் இந் நிறு வனத்தின் மூலம் இசை, நடனம், நாடகம், வாத்தியக்கருவிகளின் பயிற்சி என்பன தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருந்தன. ஆரம்பத்தில் யுத்த சூழ்நிலையில் நெருக்கடிக்குள்ளாகியிருந்த மாணவர்களிடம் இருந்து கட் டணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அதன் போது பெரும் நெக்கடிகளைச் சந்தித்தி ருந்தோம். இருந்தும் காலப் போக்கில் உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு யுனிசெவ், ஒக்ஸ்பாம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங் கள் ஒருபகுதி உதவிகளை செய்து உதவி புரிந்திருந்தனர். அத்தோடு அப்போது இருந்த மாவட்ட அரச அதிபர் திரு.இராச நாயகம் அவர்கள் பல தனித்துவ மான உதவிகளை செய்ததோடு ஆளுகைக்குழுவில் அவரும் ஒரு உறுப்பினராக இருந்ததன் மூலம் ஆத்மார்த்தமான ரீதியில் பங்களி ப்பை மேற்கொண்டு நிறுவன த்தை மேலும் வளர்ச்சியடையச் செய்தனர். இதில் திட்டப்பணிப் பாளர் திரு.ச.மோகனபவன் அப் போதய காலப்பகுதி வலயக்கல் விப் பணிப்பாளர் குருகுலராஜா போன்றோருடன் அப்போதய செஞ்சிலுவைச்சங்க செயலாளர் பொன் விநாயக மூர்த்தியும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தார்கள்.

இந்நிறுவனத்தின் பின்வரும் செயற் பாடுகள் நடைபெற்றிருந்தன.

01. நாடக களப்பயிற்சி
02. பால்நிலை சமத்துவ விவாத அரங்குகள்
03. ஓவியக் கண்காட்சிகள்
04. நடன அரங்குகள்
05. தமிழ் இன்னிய நடனப் பயிற்சிகள்
06. வரலாற்றுக் கண்காட்சிகள்
07. தேர்வுக்கும் மதிப்பீட்டுக்கு மான பரீட்சை வினாத்தாள் வெளியீடுகள்
08. விமர்சன அரங்குகள்
09. நூல் வெளியீடுகள்

கேள்வி 07 : உங்களுடைய "பெண்பாடுகள்" நாடகம் ஒரு முக்கியமான அடை யாளம். இந்த நாடகத்தைப்பற்றிச் சொல்லுங்கள்?

பதில் : "பெண்பாடுகள்" நாடகம் தான் என்னைப் பெரிய அளவில் சமூகத்திற்கு அறிமுகம் செய்த அறிக்கை ஆகும். இவ் அறிக்கை யின் தயாரிப்பு மிகவும் சுவாரஸ் யம் மிக்கதாகும். இப்படைப்புத் தான் எனக்கு பல்வேறு கலைஞர் களையும், எழுத்தாளர்களையும் நண்பராக்கியது எனக் கூறலாம். இதன் தயாரிப்பும், பயிற்சிகளும் எனக்குப் புதிய அனுபவங்களை யும், பாடங்களையும் பெற்றுத் தந்தன.

இதன் கருவுருவாக்கத்தின் சம்ப வத்தை நான் கூறியாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஆசிரியர் அன்ரன் அன்பழகன், ஆசிரியர் கணேச லிங்கம் ஆகியோர் ஒரு பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து கொண் டிருந்தோம். அதன்போது புகைப் படக்காரர்களினதும், வீடியோக் காரர்களினதும் நடவடிக்கை எவ்வாறு எமது பண்பாட்டுச் சடங்குகளில் தாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதை அசை போட்டோம். இதன் நெருக்கடி எவ்வாறு குறித்த மணித்தியால யங்கள் எமது சமூகத்தை கட்டுக் குள் வைத்திருந்ததை அவதானித் தோம். அன்றே கருவுருவாகி விட்டது. அதன் பின்னர் அக்கரு வினை எனது நண்பரும் ஆசிரி யருமான இராஜமகேந்திரன் மூலம் கலந்துரையாடி எழுத்துரு வாக்கினேன். இதுவே பண்பாடு கள் உருவான கதை. இதன் பின்பு இக்கதையினை பயிலுனர் ஆசிரி யர்களின் பயிற்சி நிறைவு விழா வில் மேடையேற்றுவதற்காக பயிற்சியில் ஈடுபட்டோம்.

ஆசிரியர்களான அன்ரன் அன்பழ கன், கணேசன், மறைந்துபோன கணேசலிங்கம், அன்பரசி, வாசுகி, உமாசங்கர், நித்தியா, கணேசமூர்த்தி ஆகியோரும் வேறு சில ஆசிரியர்களும் நடித் திருந்தனர்.

இதன்போது தினசரி மிகவும் கார சாரமான விவாதங்கள் பின்னர் தான் பயிற்சியில் ஈடுபட்டோம்.

இந்நாடகத்தை பெருந்திரளான ஆசிரியர்ள் மத்தியில் மத்திய கல்லூரியில் மேடையேற்றி னோம். அப்போதைய பிரதிக்கல் விப் பணிப்பாளரும், பெரும் எழுத்தாளருமான திரு.அனுவை நாகராஜன் இதற்கான ஒரு தரமான விமர்சனத்தை தந்தார். அத்தோடு அதனை பத்திரிகையி லும் அதனைப் பிரசுரம் செய்ய உதவினால். மேலும் எனது முதற் படைப்பிற்கான அங்கிகாரத்தை யும் தந்தார். இதன் பின்னர் ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றமை யாவராலும் அறியப்பட்டது. இதன் வாழ்த்தை நான் மட்டும் பெற்றுக் கொள்ள முடியாது. இதில் நடித்த அனைவருக்குமே பங்கு உண்டு.



ஒரு படைப்பின் தாக்கம் சமூகத் தில் எதிர்பார் விளைவுகளை தர வேண்டும். அந்த வகையில் பின் வரும் எதிர் விளைவுகள் எமக்குக் கிடைத்தன.

01. வீடியோ படப்பிடிப்பாளர்கள் எமக்கு எதிரான பிரச்சினை களிலும், அவர்களது அமைப் புக்கள் மூலம் வெளியிட்டனர்.
02. சிலர் நேரடியாக எழுந்த ஆசி ரிய நடிகர்களுடன் முரண் பட்டனர்.
03. குறித்த ஆசிரியர்களது வைபவங்களுக்கு வீடியோ படம் பிடிக்கச் செல்வதற்கு மறுத்தனர்.
04. ஒரு ஆசிரியரின் நடிப்பின் உச்சத்தை பலராலும் பேசப் பட்டதை அறிந்த அவரின் மனைவி இன்று வரை அந் நாடகத்தைப் பார்க்க மறுத் தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாமே எமது அளிக்கைக்கு கிடைத்த வெற்றியாகவே கருதுகின்றேன்.

கேள்வி 08 : உங்களுடைய இன்னொரு நாடகம் "உயிர்ப்பினை நோக்கி" இதனைப்பற்றிக் கூறுங்கள்?

பதில் : இந் நாடகத்தின் தயாரிப்பு எனக்கு ஒரு புதிய அனுபவத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தம் உருவாகியிருந்த காலம். அந்தக் காலப்பகுதியிலே நடைபெற்ற விடயங்கள் யாவுமே ஆச்சரியத்திற்கும், வியப்புக்கும் உள்ளாகியிருந்தது. இலங்கையின் விமானப்படை விமானத்தில் விடுதலைப்புலிகள் பயணம் செய்தனர். விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரச பிரதிநிதிகள் விருந்து உண்டனர். சமாதானத்தைப் பேசுகின்ற ஐரோப்பியர்கள் இணக்கப்பாட்டின் கதாநாயகர்களாக வலம் வந்தனர்.

ஆனால் மிகக் கொடூரம் என்னவெனில் முரண்பாடு கொண்ட இருதரப்பினரும் உறவாடிக் கொண்டிருந்த அந்த வேளையில் பல்வேறு தடைச்சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்ட எமது தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சில சிங்கள இனத்தவர்களாலும் குறைந்தபட்ச விசாரணையும் செய்யாமல் பல வருடங்காக சிறைவதம் அனுபவித்தவண்ணம் இருந்தார்கள். அவர்கள் மீது எந்த சமாதானக்காற்றும் வீசவில்லை. தொடர்ந்தும் அவர்கள் சிறையியேயே வாடிக்கொண்டு சொல்லணாத்துயரத்தை அனுபவித்த வண்ணம் இருந்தனர். அவர்களது துன்பங்களின் வெளிப்பாடுகள் தனிநபர் மூலமாகவும், பத்திரிகை, வானொலி மூலமாகவும் எமக்கு கிடைக்கப்பெற்றது. இவ் விடயம் சம்மந்தமாக நானும், எனது ஆசிரிய நண்பர்களும் பல்வேறு கலந்துரையாடல்களை நடாத்தி ஒரு முடிவுக்கு வந்தோம்.

01. பேசாப்பொருளாக இருக்கும் அரசியல் கைதிகளையும், விடுதலைக்காக ஒரு நாடகத்தினையும் தயார் செய்தல்.
02. சமாதானத்தின் அடிநாதமே அவர்களின் விடுதலைதான் என்ற தொனிப்பொருளை முற்படுத்துதல்.
03. உருவாக்கப்படும் நாடகத்தினை சகல சிறைக்கூடங்களிலும் மேடை ஏற்றுவதற்கும் இதன் மூலம் இவ்விடயம் சம்மந்தமாக சகல தரப்பினருக்கும் ஒரு பார்வையை ஏற்படுதுவதென்றும் முடிவெடுத்தோம்.

இதற்கமைவாக இதன் கருப்பொருளை தயார் செய்வதற்கு உண்மைச் சம்பவம் ஒன்றை தேர்ந்தெடுத்தோம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் கைதான ஒரு கணவன் மனைவி அவர்களது பிள்ளை இவர்களின் சிறை அனுபவங்களையும், செயற்பாடுகளையும் மையக்கருவாக வைத்து மையக்கருவினைத் தயார் செய்தோம். இதனைச் செழுமைப் படுத்துவதற்காகவும், ஏனைய இணைப்புச் சம்பங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பதற்காகவும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டோம்.

இக்கதை உருவாக்கத்திற்கு எம்முடன் இணைந்து பங்காற்றியவர்கள் கவிஞர் கருணாகரன், கவிஞர் நிஷாந்தன், ஆசிரியர் அன்ரன் அன்பழகன், ஆசிரியர் திரு. கணேசன் என்போர் இந் நாடக உருவாக்கத்திற்கு மிகவும் முக்கிய பங்கு வழங்கியிருந்தனர். இந்நாடகத்தில் 36 ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர். கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் பார்வையிட்டோம். சிறை வளாகத்தில் நாடகங்கள் நடாத்த முடியவில்லை. இருந்தும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, பல்கலைக்கழகம், பாடசாலை எனப் பல்வேறு இடங்களில் குறித்த ஆற்றுகையை மேடையேற்றினோம். அதே வேளை கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகளையும் பார்வையிடுவதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

வவுனியா பல்கலைக்கழகத்திலும், கல்வியற்கல்லூரியிலும் ஆற்றுகை செய்தோம். பத்திரிகையின் மூலமாகவும், வானொலி மூலமாகவும் குறிப்பிட்ட நாடகத்தின் செயற்பாடு பரவலாக்கம் செய்யப்பட்டது. பலரது வரவேற்பும் பாராட்டும் கிடைக்கப் பெற்றது.

இந் நாடகத்தின் நெறியாள்கைக்கும், என்னுடன் திருமதி. அன்பரசி பாஸ்கரன் பெரும் பங்களிப்பினைச் செய்திருந்தார். குறித்த நாடகம் நாடு பூராகவும் 23 இடங்களில் மேடையேற்றியிருந்தோம்.

கேள்வி 09 : தங்களின் பல்வேறு முயற்சியின் பயனாக மேற்கொள்ளப்படும் தமிழ் இன்னிய அணியினரைப் பற்றி கூறுங்கள்?

பேராசிரியர் மௌனகுரு அவர்கள் தான் இந்த தமிழ் இன்னியத்திற்கான மூலகத்தா ஆவார். இதனை உருவகப்படுத்தியவர் அவர்தான். 2006ஆம் ஆண்டு முதல் தங்களது மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் உலக நாடக விழா பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் மௌனகுரு அவர்களின் அழைப்பின் பேரில் கிளிநொச்சியிலிருந்து அழகியற்கலாமன்ற ஆசிரியர் குழாத்தினர் இதில் பங்குபெற்றியிருந்தோம். ஆசிரியர்களான றஞ்சினி, பிரபாகரன், சாந்தகுமாரி ஆகியோருடன் நானும் ஒருவனாக அங்கு சென்றிருந்தேன். இந்நிகழ்வு 05 நாட்கள் பல்கலைக்கழகத்தில் பெருவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

ஒவ்வொருநாள் நிகழ்வும் இத் தமிழ் இன்னிய அணிவகுப்புடனேயே ஆரம்பமாகும். இச் சந்தர்ப்பத்தில் பேராசிரியர் அவர்கள் மூலம் இவ் அணி உருவாக்கம் பற்றி பூரணவிளக்கம் பெற்றுக் கொண்டோம். இதன் உருவாக்கம் பற்றியும், முழுமையான உள்ளடக்கம் பற்றியும் குறித்த ஐந்து தினங்களும் தொடர்ச்சியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல் மூலம் விளக்க மும், பயிற்சியும் அளித்திருந் தார்.

பறை, சங்கு முழங்க கொடி, கொம்பு, ஆலவட்டத்துடன் தமிழ் மன்னன் அரசசபை வந்தான். என்கின்ற எண்ணக்கருவை அடிப் படையாகக் கொண்டு தமிழ் இன் னியம் ஒழுங்குபடுத்தப்பட்டது. என்று சுருக்கமுறக் கூறமுடியும். எமது தமிழ் பண்பாட்டுக் கருவி களான பறை இங்கே முக்கியத்து வம் பெறும் ஒரு கருவியாகும். தமிழர் பண்பாட்டு அடையாளக் கலைகளில் பறைமேளக் கூத்து முக்கியத்துவம் பெறும் ஒரு கலை வடிவமாகும். இக் கூத்தின் சில அசைவுகளும் இதில் உள் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாத்தி யம் தமிழர் பண்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகினும் எம்மி டையே காணப்பட்ட சாதி ஒடுக்கு முறையினால் இவ் வாத்தியம் வாசிக்கின்ற கலைஞர்கள் சமூகக் கட்டமைப்பில் தீண்டத் தகாதவர்க ளாக கருதி பின்நோக்கித் தள்ளி வைக்கப்பட்டமை வேதனைக் குரிய விடயமாகும். காலப்போக் கில் இக்கருவியின் பயன்பாடு மெல்ல அற்றுப்போகும் நிலை யும் உருவாகலாம். இருந்தும் மட் டக்களப்புப் பிரதேசத்தில் ஆலய விழாக்களில் இப்பாரம்பரிய பறைமேளக்கூத்து ஆடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் அவர்களின் முயற்சி யின் பயனால் எம் குழுவினரும் பறை மேளக்கூத்தினை நேரடியா கவும், முழுமையாகவும் தரிசிக் கக்கூடிய வாய்ப்பு எமக்கு பல் கலைக்கழகத்தில் கிடைக்கப் பெற்றது.

தமிழ் இன்னிய அணியில் எமது பண்பாட்டு வாத்தியக் கருவிகளு டன் தமிழர்களின் பாரம்பரிய ஆடல் வடிவங்களும் இணைக்கப் பட்டுள்ளது. வடமோடி, தென் மோடி, காவடி, சிந்துநடை, பரதம் ஆகியன ஒரு கோர்வையாக இதில் உள்வாங்கப்பட்டுள்ளது. இக்கருவிகளின் தோற்றம் பற்றி யும், பயன்பாடு பற்றியும் இந்தியா வின் புதுவைப் பல்கலைக்கழக நாட்டாரியற்கலைப் பேராசிரியர் குணசேகரன் அவர்களின் மூலம் பூரண விளக்கமும் எமக்குக் கிடைக்கப்பெற்றது. இதன் முழு மையை அறிந்துகொண்ட எமது ஆசிரியர் குழாத்தினர் வட பகுதி யிலும் இதனை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்கின்ற அவாவில் அழகியற் கலாமன்றத் தின் ஊடாக எமது செயற்றிட் டத்தை ஒழுங்குபடுத்தினோம். அதற்கு அமைவாக அப்போதைய அரச அதிபர் திரு.இராசநாயகம் அவர்களின் முழுமையான ஒத் துழைப்புடன் பூநகரி மகா வித்தி யாலய மாணவர்களுக்கு பயிற்சி யினை வழங்கி முதன் முதலாக எமது மாவட்டத்தில் தமிழ் இன்னி யக்குழுவினை உருவாக்கினோம்.

ஜப்பான் அரசாங்கத்தினால் கட்டப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் திறப்பு விழா நிகழ்விற்கு முதன் முதலாக தமிழ் இன்னிய அணியினர் வரவேற்பினை நடாத்தியிருந் தனர். அதன் பின்னர் படிப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியற் கலாமன்றத்தின் மூலம் 25 பாடசாலைகளுக்கு மேல் தமிழ் இன்னிய அணிகளுக்கான பயிற்சிகளை வழங்கி தமிழ் இன்னியக் குழுக்களை உரு வாக்கியிருந்தோம்.

மேலத்தேய பண்பாட்டு வளர்ச்சிப் படிகளில் இராணுவ அணி வகு ப்பு, உடற்பயிற்சி அணிவகுப்பு போன்றவற்றிற்கு மேலத்தேய வாத்தியக்கருவிகளுடன் சின்ன மாறுதலுக்கு உள்ளாகும் ஒரே வகையான தாளக்கட்டிற்கு அமைய மேலத்தேய வாத்தியக் கருவிகளுடன் ஒழுங்குபடுத்தப் பட்ட ஒரு அணிக் கோர்வையே "பான்ட்" வாத்தியக்குழு ஆகும். ஆனால் தமிழர் பண்பாட்டு வளர் ச்சிப்போக்குத் தேவை கருத்திற் கொள்ளப்படாது ஒரு வரவேற் பிற்காகவும் அதிதிகளை அழைப்பதற்காகவும் இக்குழுவை பயன்படுத்தி வருவது ஒரு துப்பாக்கிய நிலையே ஆகும். அத் தோடு தமிழர் கலாசாரம், பண் பாடுகள், விழுமியங்கள் போன்ற வற்றை உரத்த குரலில் பேசுகின்ற எம்மில் பலர் இச் செயற்பாடு களுக்கு ஊக்குவிப்பு வழங்குவ தும் கவலைக்குரியதே. சிங்கள மக்களைப் பொறுத்தளவில் அவர் களது பண்பாட்டு நடனமான கண்டி நடனத்திற்கு முக்கியத்து வம் நல்குவதும் வைபவங்களின் வரவேற்பு நடனமாக இதனைக் கையாள்வதையும் இங்கு குறிப் பிட முடியும். இருந்தும் எமது மாவட்டத்தில் தற்பொழுது கிளி விவேகானந்த வித்தியாலயம், கிளி பிரமந்தனாறு வித்தியால யம், கிளி கனகபுரம் மகா வித்தி யாலயம், கிளி இந்துக்கல்லூரி போன்ற பள்ளிகளில் தமிழ் இன்னியக் குழுவினர் இவ் ஆடல் செயற்பாட்டினை செய்து வருகின் றமை மகிழ்ச்சிக்குரியது. அத்து டன் கௌரவ பாராளுமன்ற உறுப் பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களின் பன்முகப்படுத்தப்பட வரவுசெலவுத்திட்ட நிதி மூலம் கிளி உருத்திரபுரம் மகா வித்தி யாலயம், கிளி சாந்தபுரம் கலை மகள் வித்தியாலயம், கிளி இயக் கச்சி அ.த.க பாடசாலை, கிளி மாசார் அ.த.க பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு இக்குழுவிற் கான வாத்தியக்கருவிகள் அணி கலன்கள் என்பன வழங்கப்பட்டு பயிற்சிகள் மேற்கொள்ளப்படு வது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கேள்வி : 10 : தங்களது குறும்படங்கள் பற்றிக் கூறுங்கள்?

1997ஆம் ஆண்டு காலப்பகுதி யில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் அக்கராயன் பகுதியில் இடம் பெயர்ந்து வசித்தபோது அரசி னால் மேற்கொள்ளப்பட்ட பொரு ளாதாரத் தடை காரணமாக பல குடும்பங்கள் மிகவும் வறுமைப் பட்ட நிலையிலேயே தமது வாழ்க்கையை நடாத்தினர். யுத்த நெருக்கடிமிக்க இக் காலப்பகுதி யில் பல சிறுவர்கள் பாடசாலை செல்லாது தெருவோரங்களிலும், விளையாட்டு மைதானங்களிலும் சந்தை போன்ற பகுதிகளிலும் எழுந்தமானமாக அலைந்தனர். இவர்களது கல்வி செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு குடும்பநிலை ஏதுவாக இருக்கவில்லை. இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பள்ளி செல்ல வேண்டும் எனப் பலர் விரும்பியிருந்த போதும் யதார்த்த நிலையில் அவை கடினமாகவே இருந்தது. இக்கால கட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் கல்வியின் முக்கியத்துவத்தை மையக் கருவாகக் கொண்டு பெற்றோர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் குறும்படம் ஒன்று தயாரிக்குமாறு என்னிடம் கோரப்பட்டது. இதற்காகப் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு "பள்ளிக்குப் போவோம்" என்கின்ற குறும்படம் தயாரிக்கப்பட்டது. இத் தயாரிப்பிற்கு ஆசிரியை திருமதி. அன்பரசி பாஸ்கரன் அவர்கள் உதவி இயக்குணராகக் கடமையாற்றினார். அத்தோடு அதிபர் திரு.மகேந்திரன், ஆசிரியர் திரு.தயாபரன், திரு.ஜெயகாந்தன், ஆசிரியர் திரு.ரகுநாதன் ஆகியோர் இதன் தயாரிப்பிற்கு முக்கியபங்கு வகித்திருந்தனர். இதில் ஆசிரியை திருமதி. சாந்தகுமாரி அவர்கள் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார்.

இக்குறும்படம் சகல மினித்திரை அரங்குகளிலும் திரைப்படத்திற்கு முன்னர் திரையிடப்பட்டது. பலரது வரவேற்பும் கிடைக்கப் பெற்றதுடன், எமது எதிர்பார்ப்பும் பெருமளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இக்குறும்படம் சர்வதேச சிறுவர்தினப் போட்டியில் ஜெனிவாவில் திரையிடப்பட்டதாகவும் இதில் சிறப்புப் பரிசு இக்குறும் படத்திற்குக் கிடைக்கப்பெற்றதாகவும் யுனிசெப் பிரதிநிதி மூலம் அறியமுடிந்தது. ஆனால் அது பற்றிய பூரண விபரம் இயக்குணர் என்ற ரீதியில் எனக்கு கிடைக்கப் பெறாமல் இருந்தமையையிட்டு இன்றும் நான் கவலை அடைவதுண்டு.

2006ஆம் ஆண்டளவில் "சுக வாழ்வு" என்ற ஒரு விழிப்புணர்வுக் குறும்படம் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது. விழிப்புணர்வுக் குறும்படம் என்பதால் ஒரு தொடர்கதை ஓட்டம் இல்லாமல் பல பிரச்சினைகளின் தொகுப்பாகவே தாயாரிக்கப்பட்டது. இதனால் பல ஆசிரியர்கள் தேவைக்கேற்ப நடித்திருந்தார்கள். இக் குறும்படம் இடம் பெயர்ந்திருந்த மக்களின் முகாம்களில் பரவலாக சகல இடங்களிலும் திரையிடப்பட்டது.

இதேபோன்று 2007ஆம் ஆண்டு ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் பால்நிலைச் சமத்துவம் சம்பந்தமான "அவள்" என்கின்ற குறும்படம் தயாரிக்கப்பட்டது. இக் குறும்படத்தில் திரு.ரகுநாதன், திருமதி றஞ்சினி ஆகியோர் முக்கிய பாத்திரத்தினை ஏற்று நடித்திருந்தனர். அழகியற் கலாமன்றத்தின் தயாரிப்பாக இது வெளியிடப்பட்டது. குடிப்பழக்கம் உள்ள ஒரு குடும்பத் தலைவனால் எவ்வாறு ஒரு குடும்பம் சிதைவுறுகிறது என்பதையும், பெண்கள், சிறுவர்கள் மீதான அத்துமீறல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதைச் சித்தரிக்கும் ஒரு படைப்பாகவே இது அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

கேள்விகள்



நேர்காணல் செய்தவர்
இனிய. ப.மல்லிகா

1. தங்களைப் பற்றிச் சுருக்கமான அறிமுகம் ...

கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த நான், கலை இலக்கிய துறைக்கு ஊடாக சமூகத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றி வருகின்றேன். அத்தோடு எனது சிறுவயது முதல் நாடகத்தினூடாக சமூகத்தை மேம்படுத்த முயன்றுவரும் நான், போருக்குப் பிந்திய தமிழர் வாழ்வியலை புனரமைப்பதற்கு நாடக்கதை ஒரு இயங்குசத்தியாக வழங்கி வருகின்றேன்.

2. இலக்கியத்தில் இனிப்பது போல் நேரில் வாழ்க்கை இனிப்பதில்லை என்று கூறப்படுகிறது. இதுகுறித்துத் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இலக்கியத்தில் இருப்பது அநேகமாக வர்ணனை வாழ்க்கை. அதுவாசிப்பதற்கு இனிமையாகத்தான் இருக்கும். ஆனால் அனுபவ வாழ்க்கை. அதில் இனிப்பும் கசப்பும் இரண்டறக்கலந்தே இருக்கும்.

3. தங்களுக்கு மிகப்பெரிய பலத்தை அளிப்பது யார்?

சவால்களை சந்திக்கும்போது தான் இறைவனின் அருளையும் நமது பலத்தையும் ஒரே நேர்கோட்டில் நாம் சந்திக்கின்றோம். என் வாழ்க்கையில் எனக்கு மிகப்பெரிய பலம் “சவால்கலே” சவால்களை சந்திக்கும் போது தான் எங்கள் பலத்தை நாம் காண முடியும். இறைவனின் அருளையும் நாம் உணர முடியும்.

4. தங்கள் ஆன்மீகப்பணிகள் குறித்துக் கூறுங்கள்...

ஆன்மீகம் என்ற வரையறைக்குள் நான் ஒரு போதும் இருப்பதில்லை. ஒரு வகையில் சொல்லப்போனால் ஆலயங்களை நோக்கியதாகவும் கடவுள்களை நோக்கியதாகவும் இருக்கின்ற மனித மனங்களையும் அதன்சிந்தனைகளையும் வாழும் மனிதர்களை நோக்கியும், அந்த வாழ்க்கையின் அர்த்தத்தை நோக்கியும், அழைத்துவருவதிலேயே என்பணி தங்கியிருக்கின்றது.

5. வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதில் ஆன்மீகத்திற்கு மிகப்பெரிய பங்குண்டு. இதுபற்றிக் கூறுங்கள்...?

கடவுளை வழிபடுவது என்கின்ற கண்ணோடத்திற்கு அப்பால் வாழ்க்கையின் தேடல்களுக்குள் உறங்கிக்கிடக்கும் மனித மாண்புகளை வெளிச்சத்தில் காட்ட வாழ்க்கை முன்வரும் ஒவ்வொருவரது வாழ்வும் செம்மைப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆன்மீகப்பணியில் தாங்கள் சந்தித்த சவால்கள் பற்றிக் கூறுங்கள் ...

மதங்கள் இல்லாத கடவுளையும், கடவுள் இல்லாத மதங்களையும் சிலநேரங்களில் ஒரே தருணத்தில் நான் சந்தித்திருக்கின்றேன். அந்த சூழ்நிலை என் சிந்தனையில் மட்டுமல்ல அனுபவத்திலும் பல ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியதனால் தான் என்னவோ மதங்களுக்கு அப்பால் இறைவனைதேடும் என்னுடைய பயணம் பல நேரங்களில் பலரால் விமர்சிக்கப்படுகின்றது.

7. தங்கள் எழுத்துலகப் பிரவேசம் குறித்துக் கூறுங்கள் ...

நான் பதின்நான்கு வயதாக இருக்கும் போது நாடகத்திற்கு கதை எழுதி என் நண்பர்களை வைத்து அதை நெறியாளுகை செய்து மேடையேற்றினேன். அந்த நாடகத்தை பார்த்த எங்கள் கிராமத்து பெரியவர்கள் என்னைபாராட்டி ஊக்கப்படுத்தியது தான் என்னை தொடர்ச்சியாக கதைகளையும், கவிதைகளையும் எழுதத் தூண்டியது. காலத்தின் தேவைகளுக்காகவே படைக்கும் ஒரு படைப்பாளியாக நான் என்னை மாற்றிக்கொண்டதால் என் படைப்புக்களை பிரசுரிக்கும் எண்ணங்கள் ஆரம்பத்தில் எனக்கு இருக்கவில்லை. ஆனால் ஒரு படைப்பாளி தன்ரசிகர்களால் செதுக்கப்படுகின்றான் என்ற பார்வை எனக்குள் எழுந்த போது தான் படைப்புக்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் உருவானது.

8. ஒருவரை எழுதத் தூண்டுவது எதுவென்று நினைக்கிறீர்கள்?

என்னைப் பொறுத்தவரையில் ஒருவன் எழுத்தாளனாகப் பிறப்பதில்லை. வாழ்க்கையின் தேடல்களில் சந்திக்கும் சவால்கள் நெஞ்சத்தின் நினைவுகளாக பதிவு செய்யப்படும் போது அந்த நினைவுகளைப் பகிர வேண்டும் என்கின்ற ஒரு உயர்ந்த் எண்ணம் உருவாகும் அத்தருணமே ஒரு எழுத்தாளன் பிறக்கின்றான்.

9. நாடகக்கலை மீதான ஈடுபாடு தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

சிறுவனாக இருக்கும்போது பொழுது போக்குக்காக நண்பர்களுடன் இணைந்து நாடகம் நடித்தேன் என்இளமைக்காலங்களில் நாடகத்தையோ நாடகத்தின் வரலாற்றையோ படிக்கும் வாயப்பு எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் நடிப்பதன் மூலம் பிறரை மகிழ்ச்சிபடுத்தலாம் என்ற சிந்தனை எனக்குள் வளரத்தொடங்கிய போது நடிப்பதை ஒரு பணியாக செய்ய தொடங்கினேன். அதுவே எனவாழ்க்கையில் ஒரு அங்கமாக மாறிவிடும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால் இன்று நாடகத்திற்காகவே என் வாழ்வை அர்ப்பணித்து அதன்மீது உயர்ந்த காதல் கொண்டுள்ளேன் என்பதை பெருமையோடு கூறுகின்றேன்.

10. நாடகக்கலை மூலம் சமூகத்தைச் சீர்மைப் படுத்தலாம் என்று நினைக்கிறீர்களா?

யதார்த்தத்தின் மறுவடிவமே நாடகம். ஒரு மனித வாழ்வின் எல்லாப் பக்கங்களையும் ஒரே பார்வைக்கு பிரதிபலிக்கின்ற ஆற்றல் நாடகத்திற்கு உண்டு. அந்த வகையில் குறிப்பாக நிகழ்த்து கலைக்கூடாக மனித மனங்களையும் அதன் சரியான அல்லது பிழையான பக்கங்களையும் ஆழமாக ஊடுருவி கசிந்துருகச் செய்யும் ஆற்றல் நாடகத்திற்கு உண்டு.

தாங்கள் நிர்வகித்துவரும் கலாமன்றமான காவேரிக்கலாமன்றத்தின் கலைப்பணி பற்றிக் கூறுங்கள்...?

காவேரி கலாமன்றம் இரண்டு இலட்சியங்களைக் கொண்டு பயணிக்கும் ஒரு அமைப்பாகும். முதலாவது தமிழர் மரபுவழி நிகழ்த்து கலைகளை பாதுகாப்பதும் அதை வளர்ப்பதும், அதை சமூக மயப்படுத்தி அதனூடாக சமூகங்களை ஆற்றுப்படுத்துவதும். இரண்டாவது நிகழ்த்து கலைகளுக்கூடாக தேசிய மற்றும் சர்வதேச உறவுகளை உள்ளீர்த்து தமிழர்களின் பெருமைமிக்க கலைப்பொக்கிசங்களை சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயப்படுத்துவது. இந்த இரண்டு இலட்சியங்களுக்காக தற்போழுது சமூதாய நாடக குழுக்களை உருவாக்கி வருகின்றோம். ஒரு பிரதேசத்தில் இருக்கும் கலைவடிவத்தை உருவாக்க உழைப்பதும் அங்கிருந்து அது கிளை பரப்பி உலகெங்கும் கனிகொடுக்க அதன் வேர்களை அதன் ஊரிலேயே வாழவைப்பதுமே எங்கள் பணியாக இருக்கின்றது.

11. தாங்கள் இதுவரை எழுதிய நூல்கள் குறித்துக் கூறுங்கள்...?

நான் இதுவரையில் ஒன்பது நூல்கனை எழுதியிருக்கின்றேன். மூன்று நூல்கள் ஆன்மீகத்தின் பதிவுகளையும் மூன்று நூல்கள் நாடக உருவாக்கத்தின் பின் புலங்களையும் ஒரு நூல் போருக்கு பின் பெண்களின் நிலை என்ற கவிதை நூலாகவும் மேலும் இரண்டு நூல் சமூகவியல் ஆய்வு நூலாகவும் என்னால் படைக்கப்பட்டுள்ளது.

12. தங்கள் படைப்பிலக்கிய அனுபவங்கள் குறித்துக் கூறுங்கள்...?

என் படைப்புகள் எழுதப்பட்டவைகளின் கூட்டுத்தொகுப்பல்ல. அவை வாழும் நினைவுகளின் கூட்டுப்பதிவுகள். என்னோடு பேசப்பட்ட என்னால் உணரப்பட்ட எனக்குள் நித்தம் மலர்ந்துகொண்டு இருக்கின்ற என் காலத்தின் தேடல்களே என் படைப்புகளாக பிறக்கின்றது.

13. தங்கள் படைப்புக்களுக்கான கருக்களை எவ்வாறு தீர்மானிக்கிறீர்கள்?

என் வாழ்வை நான் அனுபவிக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் எனக்குள் ஏற்படுகின்ற சுவை என் படைப்புக்களுக்கான கருவை என் உள்ளத்தில் விதையாக நிறுத்துகின்றது. என் படைப்புகளுக்கான கருவை என் சூழ்நிலைகளுக்கு அப்பால் நான் தேடுவதில்லை. என் சூழ்நிலைகளே என் படைப்புகளுக்கான வாழ்வியலை உருவாக்குகின்றது.

14. தங்கள் எழுத்துக்களுக்கு மக்கள் மத்தியில் எத்தகைய வரவேற்புக் கிடைக்கின்றன?

என் எழுத்துக்கள் சமூக பொது அச்சு ஊடகங்களுக்குள் பிரவேசிப்பதற்கான வாசல்களை நான் எப்போதும் தட்டியதில்லை. ஆனபடியினால் எந்த சூழ்நிலைகளுக்காக என் எழுத்துக்கள் பிறக்கின்றதோ அச்சூழ்நிலைக்குள்ளே அது வாழ்ந்து கொண்டு இருக்கின்றது. ஆகவே வரவேற்புக்களின் வட்டங்கள் என் சூழல்களிலேயே இருந்துவிடுகின்றது.

15. கலைத்துறையில் தாங்கள் சாதித்ததாக நினைப்பது...?

நான் எதையும் சாதித்தாதக கூறுவதை விட பல சாதனையாளர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றேன் என்றே நான் கூற வேண்டும். சிந்தனைச் சக்தியில் இன்னொருவரை நம்பிவாழும் மனிதர்களை சுயசிந்தனை சக்தியின் தன்நிறைவைக் காணும் இலட்சியங்களுக்காக உருவாக்கிக்கொண்டிருக்கின்றேன். ஒரு வகையில் அப்படிப்பட்ட மனிதர்களை நான் உருவாக்க எடுத்துள்ள சுயசிந்தனை முயற்சியையே என்சாதனையாக நினைக்கின்றேன்.

16. கலைத்துறைக்குத் தாங்கள் ஆற்றிய பணிக்காகக் கிடைத்த பட்டங்கள், பட்டயங்கள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்...?

பிரதேச மட்டங்களில் பல கலாசார மேம்பாட்டிற்கான விருதுகளைப் பெற்றுள்ளேன். சர்வதேச நாடக விழாக்களில் சிறந்த நெறியாளருக்கான விருதுகளைப் பெற்றுள்ளேன். அண்மையில் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகம் (Global university for life long) போருக்கு பிந்திய சமூக மேம்படுத்தலில் நிகழ்த்து கலைகளின் உத்திகள் என்ற எனது ஆய்விற்கு கலாநிதிப்பட்டத்தை வழங்கியது.

17. நாடகத்துறையில் எதிர்காலத்தில் புரட்சிகள் ஏதாவது செய்யும் திட்டம் உண்டா?

வடமாகாணத்தில் கிராமங்கள் தோறும் வாழும் நாடக மன்றங்களை உருவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமூகத்தின் வேர்களை வாழவைப்பதே எனது கனவு.

18. தங்களுக்கு மிகவும் திருப்தியைத் தந்த படைப்பு யாது?

நான் எழுதிய "கரிகாட்டுப் பூ" என்ற கவிதை நூல். அதற்கூடாக என் நெஞ்சிற்குள் குமுறிய எண்ணங்களை எம் சமூகத்திற்கு என் சிந்தனை வழி ஊற்றியுள்ளேன். போருக்குப்பின் விதவைகள் படும்பாடு என்ற என் ஏக்கப்பெருமூச்சுக்கு விடை கொடுத்ததாகவே கரிகாட்டுப்பூ இருக்கின்றது.

19. தற்போதும் எழுதிக் கொண்டிருக்கிறீர்களா?

ஆம். ஒவ்வொரு கணப்பொழுதுகளிலும் நான் சந்தித்தவற்றை எழுதிக்கொண்டே இருக்கின்றேன். நம் எதிர்கால சந்ததிக்கு அது நிச்சயம் நாம் சாதித்தகாகவே இருக்கும் என்று நம்புகின்றேன்.

20. தங்கள் நாடகக் குழுவினர் பற்றிக் குறிப்பிடுங்கள்?

காவேரி கலாமன்றத்தின் நாடகக் கலைஞர்கள் சமூகத்தின் ஏக்கங்களுக்கும் பெருமூச்சுக்களுக்கும் விடைதேடும் உன்னதமான கலைஞர்கள். கலைஞர்கள் எவ்வாறு ஒரு சமூகப்பணியாளர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக எனது நாடகக் கலைஞர்கள் இருக்கின்றனர். சமூகத்தின் உயர்ந்த இலட்சியங்களை நிகழ்த்துக் கலைகளுக்கூடாக அவர்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த தேடலில் மலர்ந்த மனித மனங்களை நாம் பதிவுசெய்து கொண்டிருக்கின்றோம்.

21. கலைஞர்களுக்கும் தாங்கள் கூறநினைக்கும் செய்தி?

கலைஞர்கள் இந்த சமூகத்தின் இயங்கு சக்திகள் கலைஞர்கள் இல்லாத உலகம் இயக்கமற்ற ஒரு உலகமாகவே இருக்கும். எனவே கலைஞர்கள் இந்த உலகத்தின் இயங்கு நிலைக்காக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது கலைஞர்களின் வரலாற்று கடமை அதை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு

சமுதாயமும் பண்பாடும்

இனிய. திரு.கோ.நாகேஸ்வரன்
பிரதேச செயலர்

அறிவியல் கண்டுபிடிப்புகளாலும், அரசியல், சமூக மாற்றங்களினாலும் உலகம் முழுவதும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும், சில நாடுகள், தங்களது, பண்பாடுகளைத் தனித் தன்மையுடன் பாதுகாத்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, திபேத்திலுள்ள திபேத்தியர்கள், தங்கள் பழைய பண்பாட்டை, இன்றைக்கும் தனித்தன்மை கெடாதவாறு பாதுகாத்து வருகின்றனர்.

பன்முகப் பண்பாடு (Multiculture)

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளிலும், வணிகம், அலுவலகப் பணி ஆகியவை மிகுந்த நகரங்களிலும் பல நாட்டவர்களும், பல மாநிலத்தவரும் வந்து குடியேறியமையால், பல நாட்டுப் பண்பாடுகளும் கலந்துள்ளன. எனவே, பல நாட்டுப் பண்பாடுகளின் சங்கமமாக, அந்த நாடுகளின் பண்பாடுகள் அமைந்துள்ளன. எனவே, அத்தகைய பண்பாட்டைப் பன்முகப் பண்பாடு என்று அழைக்கின்றனர்.

ஒன்றுபடும் பண்பாடு

அரசியல், பொருளாதாரம், வணிகம் போன்ற காரணங்களுக்காக வேற்று நாடுகளின் குடியேற்றங்கள் (Migration) பல நாடு களில் ஏற்பட்டன. அவ்வாறு வந்தடைந்த நாடு களில், எதனுடைய பண்பாடு செல்வாக்குப் பெற்றிருந்ததோ, அதன் பண்பாட்டுக் கூறுகளோடு பிற பண்பாட்டுக் கூறுகள் ஒன்றிப் பிணைந்த (assimilated) ஒரு புதவகைப் பண்பாடு தோன்றுகிறது.

தமிழரும் பிறரும்

தமிழ்நாட்டில், நாயக்கர் காலத்திலும், மராட்டியர் காலத்திலும், அரசியல் படையெடுப்புகளைத் தொடர்ந்து வந்து குடியேறிய தெலுங்கர்கள், மராட்டியர்கள் போன்றவர், இன்று, இனம் பிரித்து அறியாதவாறு, பெரும் அளவில் தமிழர் பண்பாட்டுடன் ஒன்றுவிட்டனர்.

உலகத் தமிழரும் தமிழ்ப் பண்பாடு

மேற்குறிப்பிட்டவாறு, குடியேறியவர்களில் சிலர், சில நாடுகளில், குடியேறிய நாட்டுப் பண்பாடுடன் ஒன்றுபட்டாலும், தங்கள் பண்பாட்டின் தனித்தன்மையையும் (Individual Identity) காப்பாற்றி வருகின்றனர். உலக நாடுகள் பலவற்றில் குடியேறிய சீக்கியர்கள் இன்றளவும் தங்கள் பண்பாட்டைப் பாதுகாத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்

தமிழர்கள் உலகத்தின் பல பகுதிகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். தாம் வாழும் பகுதிகளில், தாய்த் தமிழகத்தின் பண்பாட்டுக் கூறுகளை அவர்கள் பாதுகாத்துப் பின்பற்றி வருகின்றனர்.

உலகம் முழுவதும் உள்ள பல பகுதிகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். தாம் வாழும் பகுதிகளில், தாய்த் தமிழகத்தின் பண்பாட்டுக் கூறுகளை அவர்கள் பாதுகாத்துப் பின்பற்றி வருகின்றனர்.

உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள், தங்களை அடையாளம் காட்டவும், தங்கள் தனித்தன்மையைப் புலப்படுத்தவும், தங்கள் பண்பாட்டுப் பெருமையை உணர்ந்து பெருமைப்படவும் தமிழ்ப் பண்பாட் டுக் கூறுகள் பலவற்றை இன்றளவும் போற்றி வளர்த்து வருகின்றனர்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரீசியஸ், ரீயூனியன், தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றைப் பாதுகாத்து வருகின்றனர். தமிழ்க் கடவுளாகக் கருதப்படும் முரகன் வழிபாடும், முரகன் கோயில் களும் தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் இடம்பெற்றுள்ளன. சிறு தெய்வங்களாகிய, மாரியம்மன் வழிபாடும், பச்சையம்மன் வழிபாடும், காவடி எடுத்தல் போன்ற சமயச் சடங்குகளும் பின்பற்றப்படுகின்றன. தாங்கள் குடியேறிய நாடுகளில் கூட, திருநெல்வேலி, சேலம் போன்ற தமிழ் நாட்டு ஊர்களின் பெயர்களையே இட்டுள்ளனர். தாமும் தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளனர். இவ்வாறு, பிறநாடுகளிலும் தங்கள் பண்பாட்டைப் பெரும் அளவில் பாதுகாத்து வருகின்றனர்.

அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் பொங்கல் விழா கொண்டாடுவதும், தமிழ்ச் சங்கங்கள் அமைப்பதும், விழாக்காலங்களில், தமிழ்ப்பண்பாட்டின் கூறுகளாகிய, புடவை அணிதல், பூச்சூடுதல், வேட்டி கட்டுதல், பூசை செய்தல் போன்றவற்றால் தங்கள் பண்பாட்டின் தனித்தனிமையைக் காத்து வருகின்றனர்.

பண்பாட்டு மாற்றங்கள்

அறிவியல் கண்டுபிடிப்புகளால், இன்று உலகம் ஒரு சிறு கிராமமாகச் (Global Village) சுருங்கிவிட்டது. இதனால், நாடுகள் இடையேயும், மக்கள் இடையேயும் இடைவெளி குறைந்துவிட்டது. தொடர்புகள் மிகுந்துள்ளன. இவற்றால், மனிதச் சிந்தனைகளிலும் சமுதாய அமைப்புகளிலும், பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவை, கருத்துப் பரிமாற்றம், பண்டைப் பரிமாற்றம் ஆகியவற்றோடு, பண்பாட்டுக் கூறுகளிடையேயும் பரிமாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இதனால், நீண்ட நெடுங்காலமாகத் தனித்தன்மை சிதையாதவாறு பாதுகாக்கப்பட்டு வந்த பண்பாடுகளிடையே கூட பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிய கண்டுபிடிப்புகள், தொழில் புரட்சியை ஏற்படுத்தின. இதனால், தொழில் நிறுவனங்களில், பல பண்பாட்டுப் பிரிவினர் கலந்து பணியாற்றும் புதிய சூழல்கள் ஏற்பட்டன. இப்புதிய சூழல் மொழிக்கலப்பு, பண்பாட்டுக் கலப்பு, நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றில் மாற்றம் போன்றவற்றை ஏற்படுத்தின. இம்மாற்றங்கள், பண்பாடுகளின் இடையேயும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

முன்னேறாத நாடுகளில் (Underdeveloped) இருந்தும், முன்னேறிக் கொண்டிருக்கும் (Developing) நாடுகளிலிருந்தும், முன்னேறிய (Developed) நாடுகளுக்கு வணிகம், அலுவலகப் பணி போன்றவற்றிற்குச் செல்வோர், அந்த நாடுகளின் பண்பாட்டுக் கூறுகளை ஏற்றுக்கொண்டு வாழ்கின்றனர். அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழுகின்ற பிற நாட்டவர், அமெரிக்கர்களின் வாழ்க்கை முறைகள் பலவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சூழலும் தமிழர் பண்பாடும்

அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட புதிய சூழலில், நவீன கருவிகள் கொண்டு மேற்கொள் ளும் செயல்களில் தமிழர்களிடையே பல மரபு வழி பண்பாட்டுக் கூறுகள் மறைந்துவிட்டன.

அந்நியர் படையெடுப்புகளாலும், அந்நிய ஆதிக்கத்தினாலும் அவற்றின் வாயிலான குடிபெயர்ப்புக்களினாலும், புறப் பண்பாட்டுத் தாக்கம் அமைந்தது. அதனாலும், தமிழர்களி டையே பண்பாட்டு நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற் பட்டன.

படையெடுப்பு

இஸ்லாமியர் படையெடுப்பு, நாயக்கர் படையெடுப்பு, டச்சுக்காரர், போர்த்துக்கீசர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் போன்ற அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளினாலும் ஆட்சினியாலும், அரசியலில் மட்டும் அல்ல, சமுதாயத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால், தமிழர்களின் பண்பாட்டில் பல மாறு தல்கள் தோன்றின. ஆடை அணிதல், ஒப்பனை செய்தல், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயக் கோட்பாடுகள் முதலியவற்றில் பல மாறுதல்கள் தோன்றியுள்ளன.

வணிகம்

'திரைகடல் ஓடியம் திரவியம் தேடு' என்பது தமிழர்களின் முதுமொழி. வணிகத்தின் பொருட்டு பல நாடுகளுடன் தமிழர்கள் தொடர்பு கொண்டு இருந்தனர். அவற்றால் பண்டமாற்றம் ஏற்பட்டதைப் போல், பண்பாட்டு மாற்றங்களும் நிகழ்ந்தன. வணிகத்தின் பொருட்டு வேற்று நாடுகளில் பலர் குடியேறினர். அவர்கள், தங்கள் பண்பாட்டை எடுத்துச் சென்றாலும், சூழலுக்கு ஏற்ப அங்குள்ள சில பண்பாட்டுக் கூறுகளை ஏற்றுக் கொண்டனர்.

புலம்பெயர்தல்

டச்சு, போர்த்துகீசு, இங்கிலாந்து போன்ற ஆதிக்கச் சக்திகளால் ஏற்பட்ட குடியிருப்பு நாடுகளில், குடியேறிப்புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் சென்றடைந்த நாடுகளின் பண் பாட்டுச் செல்வாக்காலும், பண்பாட்டு ஆதிக்கத் தாலும் தம் பண்பாட்டில் பல மாற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.

எடுத்துக் காட்டாக, பல நாடுகளில் பல பகுதிகளில், தொன்மைக் காலத்திலும் அண் மைக் காலத்திலும் சென்று வாழ்ந்து வருகின்ற தமிழர்களில் பலர் பழைய பண்பாட்டுக் கூறு களைத் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். சிலர் தம் பண்பாட்டுக் கூறுகளைப் பிற பண்பாடு களுக்கு ஏற்ப மாற்றி அமைத்துள்ளனர். சிலர் பெரும்பான்மையான பண்பாட்டுக் கூறுகளை விட்டுவிட்டு, ஒரு சிலவற்றை மட்டும், அடையா ளங்களுக்காகப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

மொரீசியஸ், தென் ஆபிரிக்கா, ரீயூனியன் போன்ற நாடுகளில் வாழ்பவர்கள், தமிழ்ப் பெயர்களையும், தமிழ் வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி வந்தாலும், தமிழ் மொழியை மறந்துவிட்டனர். அதைப்போல், பல பண்பாட்டுக் கூறுகளையும் இழந்து விட்டனர்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்பவர்கள், ஒரு சில பண்பாட்டுக் கூறுகளைத் தவிர பிற எல்லா பண்பாட்டுக் கூறுகளையும் தாயகத்தில் உள்ளவர்களைப் போல், பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

குடியேற்றமும் (Colonization) ஆக்கிரமிப்பும் (Invasion)

குடியிருப்பு நாடுகளிலும், அரசியல் ஆக்கிரமிப்பு நாடுகளிலும் பண்பாட்டு மாற்றங் கள் நிகழ்கின்றன. இத்தகைய சூழல்களில் வாழ்வோர் செல்வாக்குடன் இருக்கும் பண்பாட் டுக் கூறுகளை அல்லது பெரும்பான்மையோர் பின்பற்றுகின்ற பண்பாட்டுக் கூறுகளை ஏற்றுக் கொண்டு, தமது பண்பாட்டுக் கூறுகளை விட்டு விடுகின்றனர். இவ்வாறு கலந்து வாழ்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, தங்கள் பண்பாட்டின் தனித்தன்மையையும் இழந்து விடுகின்றனர்.

கடன் வாங்குதல்

பிற பண்பாட்டுடன் தொடர்பு கொள்ளும் பொழுது, பண்பாட்டு நெகிழ்ச்சியும் மாற்றமும் நிகழ்கின்றன. இத்தகைய சூழல்களில், பிற பண்பாட்டுக் கூறுகளைக் கடன்வாங்க நேர்கிறது. இவை, சில நேரங்களில், பிற பண்பாட்டுடன் நேரடியான தொடர்பு இல்லாவிட்டாலும், தொடர்புடைய பிறர்வாயிலாகவும் நிகழ்கின்றன.

பின்பற்றல்

பிற நாடுகளில், பணியின் காரணமாகவோ, வணிகத்தின் பொருட்டோ, கல்வி கற்கவோ சென்று விட்டுத் தாயகம் திரும்பிய பலர், தான் சென்று வந்த நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைப் பின்பற்றுகின்றனர்.

இதைப் பார்த்து, அவற்றில் தனக்குப் பிடித்த, தான் பின்பற்றுவதற்கு ஏற்ற சில பண்பாட்டுக் கூறுகளையும் ஏற்றுக் கொள்கின்றனர். இத்தகைய செயல்களும் பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இவை, பெரும்பாலும், ஆடை அணிதல், பழக்க வழக்கங்கள், கருவிகளைப் பயன்படுத்தல், ஒப்பனை செய்து கொள்ளுதல் போன்ற பண்பாட்டுக் கூறுகளில் மாற்றங்கள் நிகழச் செய்கின்றன.

சூழலும் வளர்ச்சியும்

இவற்றைத் தவிர, ஒரே சமுதாயத்தில், அல்லது ஒரே இனத்தின், சூழலின் மாற்றத்தினாலும், கல்வி வளர்ச்சியினாலும், பண்பாட்டிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

எடுத்துக்காட்டாகப் பெண்கள் கல்வி கற்றல், பணிக்குச் செல்லுதல், கணவன் இறந்த பின்னரும் பூச்சூடிக் கொள்ளுதல், பொட்டு வைத்தல், வண்ணப் புடவைகளை அணிதல், சமத்துவம் போன்ற பலவகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை, கல்வி வளர்த்த சூழலில் ஏற்பட்ட பண்பாட்டுக் கூறுகளின் மாற்றம் தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

கறிசோறும் கரண்டி முள்ளும்

இனிய. திருமாவளவன்
கனடா

நீண்டநாட்களுக்குப்பின் அவனைச் சந்தித்தபோது மிகக்களைப்புடன் காணப்பட்டான். தன் மனைவியைப் புடவைக்கடையில் விட்டுவந்ததாகச் சொன்னான். அவன் என் நீண்டநாள் நண்பன். அண்மையில் சிலகாலம் இருவருக்குமான தொடர்பு விடுபட்டுப் போயிருந்தது. பெருநகரவாழ்கை எங்களை இப்படித்தான் ஆக்கிவிட்டது.

"வீட்டில் ஏதாவது விஷேடமா" என்றேன்.

இல்லை. இவ்வாரம் மூன்று கலியான வீடு என்றான். அவனது குரலில் சலிப்பு இருந்தது. உடலிலும் மனசிலும் வாழ்வின் களைப்புப் படிந்து ஆளேமாறிப் போயிருந்தான்..

பொதுவாகவே இளவேனிற்காலத்திலிருக்கும் உற்சாகம் முதுவேனிலில் இருப்பதில்லை. பழங்களும் தானியங்களும் முற்றிச் சரிவதுபோல மனிதரும் களைத்துச் சோர்கின்றனர்.

தொரன்றொவில் தமிழர் விழாக்களும் திருமணக் கொண்டாட்டங்களும் இணைந்து கோடைகாலம் முழுவதையும் ஆக்கிரமித்த விடுகிறது. எம்மவர்கள் இந்த நாட்டில் காலூன்றி கால் நூற்றாண்டு கடந்துவிட்டது. இப்போ எம்மவர் வேரூன்றி கிளைபரப்பி விரியத் தொடங்கி விட்டனர். வருடம் முழுவதும் இத்தகைய விழாக்களுக்கு பஞ்சமில்லை

கடந்த சில ஆண்டுகளில் புதிய பல மணவிழாக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. இருந்தும் கூட ஒருவருடத்தக்கு முன்பே விழா மண்டபங்ளை ஒழுங்கு செய்யவேண்டிய நிலையுள்ளது. நாட்கள் இருக்கிறது பார்க்கலாம் என்றால் பின் மண்டபத்திற்கு அலைய வேண்டி வரும். அவ்வளவு பிஸி.

"கனடாவுக்கென்று தனிப் பஞ்சாங்கம் எழுதுறாங்கள் அமாவாசை, அட்டமி, நவமி, என எது வருகிறதோ இல்லையோ ஒவ்வொரு வார இறுதிகளில் கல்யாண நாள் மட்டும் வந்து தொலைக்கிறது"

என அண்மையில் முதியவர் ஒருவர் அலுத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா! ஊரில் இருக்கும் வரைதான் அட்டமியும் அமாவாசையும்.. கடல் தாண்டிய பின் இதுகள் எல்லாம் சித்திக்காது. "

இது நான். எனக்கே உரிய பாணியில் வார்த்தைகளை கேலிச் சுவைதோய சொன்னேன். அவர் உசாராகிவிட்டார். தன் மனக் கிடக்கை கொட்டித் தள்ளிவிட்டார்.

"ஒவ்வொரு கலியாணத்துக்கும் ஒவ்வொரு புதுச் சேலை வேணும். பட்டுச்சேலைகளை கழுவிப் பாவிக்கும் வழக்கமே கனடாவில் தமிழ் பெண்டுகளுக்கு இல்லை. இரண்டு அல்லது மூன்று விழாக்களுக்கு உடுத்தியபின் அதை தொடுவதே இல்லை" வருத்தப்பட்டார். உண்மைதான். நான் வேறு பலரிடமிருந்தும் இந்த மன வலியை அறிந்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நண்பன் ஒருவன் வீடுமாறினான். அவனுக்கு உதவிசெய்வதற்காக போயிருந்தேன். ஏழெட்டு "சூட்கேஸ்" பொதிகள். ஓவ்வொன்றும் பிணப்பாரம். ஏற்றி இறக்கி மிகவும் களைத்துவிட்டோம். ஒவ்வொரு "சூட்கேஸ்" சிலும் "அம்மி கல்" வைத்துக் கட்டியிருக்கிறாயா? என்றேன்

"இவ்வளவும் பட்டுப் புடவைகள். என்ர மனுசி பாவித்துக் கைவிட்டது"

"கைவிட்டதென்றால் பிறகேன் சேர்த்து வைச்சிருக்கிறாய்"

"என்னத்தை செய்யிறது. இதில் முக்கால்வாசி சேலைகள் இரண்டு தடவைக்குமேல் உடுத்தினதில்லை. ஒவ்வொன்றும் நான் நித்திரை முழிச்சு "பக்டரியில்" மாரடிச்சு உழைச்ச காசு. எறிய மனமில்லை"

அந்தக்குரலில் இருந்தது பகட்டா அல்லது சலிப்பா? என் சிறிய மூளைக்கு புரியவில்லை.

"சரிதான். இப்பிடி வீடுவீடாய் சுமந்து என்ன செய்யப்போகிறாய்"

"ஊருக்கு அனுப்பலாம் இனசனமாவது உடுத்தும் என்று நினைச்சன். அதுவும் சரிப்படாது போலை கிடக்கு. ஊரும் ரொம்ப மாறிப் போச்சு. கனடா விலையிருந்து உன்ரை மனுசி உடுத்தின "பழஞ்சீலை" அனுப்பினனியோ என்டு கேட்டால் தேவையில்லாமல் பொல்லைக்குடுத்து அடி வாங்கின கதையாய் போயிடும். பயமா கிடக்கு. இருக்கட்டும் பார்ப்போம்"

எனக்கு அவன் மனநிலை புரிந்தது. ஓடுற வெள்ளத்தோடு சேர்ந்து ஓடவேண்டியிருக்கிறது. தனி ஒருவன் எதிர்நீச்சல் போட நினைச்சால் பிறகு இருக்கிற குடும்பமும் இல்லாமல் இவன் நடுரோட்டிலை குடும்பம் என்னொ கூட்டில் என நிற்கவேனும். வேறென்ன செய்வது. ஊரில் இருந்தபோது என் அம்மாவிடம் இருந்த பட்டுப்புடவை இரண்டுதான். ஒன்று திருமணக் கூறை. சந்தணக் கலர். எப்போதும் அதில் "பூச்சி உருண்டை" வாசனை தூக்கலாக இருக்கும். இன்னொன்று பின்நாளில் அப்பா வாங்கிக்கொடுத்த காஞ்சிபுரம் பட்டு. மயில் நீலம். அகன்ற சரிகைக்கரை போட்டது.

அதுதான் ஊரில் நடந்த எல்லாத் திருமண வீடுகளுக்கும் அம்மா உடுத்துவார். அப்பா இறந்தபின் அதுவும் இல்லை. கூட்டிக் கழித்துப்பார்த்தால் அம்மா உடுத்தியதைவிட நான் அதை உடுத்தியதுதான் அதிகம். நாடகத்திற்கு. அதிலும் அந்த காஞ்சிபுரம் சேலையில் "தார்பாசு"க் கட்டி பண்டாரகவன்னியனாக தோன்றியபோது என்னுள் அறியாமல் ஒருவித மிடுக்கும் கம்பீரமும் எழும் அம்மாவின் கூறைச் சேலை நைந்து பல இடத்தில் கிழிசல் வந்துவிட்டது. முடிவில் அதை பழைய பித்தளை பொருட்கள் வாங்க வருகிற "காக்கா" வுக்கு வித்தோம். நிறுத்து எடைக்குப் பணம் தந்தான். அந்தக்காலத்திலை பழஞ்சீலைக்கு இவ்வளவு பணமா என வியந்தோம். இதைக் கொண்டு போய் என்னசெய்யப் போகிறான் என்று யோசித்தோம்.

சேலையை அப்படியே தீமூட்டி எரித்தால் சரிகைமட்டும் எரியாமல் எஞ்சுமாம். அதில் தங்கம் இருக்கிறதாம். ஒருமூலையில் எரித்துக் காட்டினான். நாங்கள் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்துகொண்டு நின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். இப்போ நாங்கள் வாழ்வது வெறும் அசேதனம்.
அன்றிருந்தது ஒரு பொற்காலம்.

2.

அறுபதுகளின் நடுப்பகுதி. சித்திரை விடுமுறைக்காலம். வெயில் ஏறத் தொடங்குகிறது ஒரு மனக்கணக்கில் பத்து மணியிருக்கும். அம்மா துரையரக்கா வீட்டு படலையில் நின்றார். அவர்கள் வீடு எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வளவு தள்ளியிருந்தது.

துரையரக்காவுக்கு சற்று பெரிய சரீரம். அதிக தூரம் அதைச் சுமந்து நடக்கச் சிரமப்படுவார். அதனால் வசதி கருதி வைரி மீன்கடகம் இறக்குவது அவர் வீட்டுப் படலையடியை அண்மித்துத்தான். இது வாடிக்கை.

அன்று அம்மா வைரிக்காக காத்திருந்தார். மேலும் ஒரிருவர் சேர்ந்திருந்தனர். வைரி வரும்வரை துரையரக்கா வீட்டு முன் படியிலிருந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அந்தநேரம்பார்த்து இரண்டு கிடுகுவண்டில் அந்தப் படலையை தாண்டியது. முன்னால் பாய்கியநாதன் வண்டிக்காரருக்கு வழிகாட்டியபடி சைக்கிலில் மெதுவாய் போய்க்கொண்டிருந்தார்.

"இரண்டு கிடுகுவண்டில் ஒழுங்கையுக் காலை போகிது யாருக்காக்கும்" என்றார் அம்மாவும் துரையரக்காவும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவர் மெல்ல கதையை அவிழ்த்துவிட்டார்.

"நேசத்தின்ரை மோளுக்கு கலியாணமாம். வைகாசியிலை நாள் வைச்சாச்சு".
அப்பிடியே ! மெய்யே அக்கா அப்ப எங்கை கலியாணம் கொழும்பிலையே!
அம்மா கதைக்கு கொக்கியைப் போட்டார்.
நேசக்கவின்ரை மகள் இராஜேசுக்கும் கூப்பன் கடைச் சின்னமாக்காவின் இளையவன் சிவலிங்கத்துக்கும் காதல் என்றதும், நேசக்கா "நான் தொடுகிலும் இந்தக் கலியாணத்திற்கு சம்மதியன்" என்று அடம்பிடிச்சதும் அம்மாவுக்குத் வடிவாய்த் தெரியும்.

நேசம் கொழும்பிலை வீடுவாங்கி அங்கையே குடியேறி கனகாலமாச்சு. சிவலிங்கத்திக்கும் குறையொன்றுமில்லை. வீட்டில் கடைக்குட்டி. நல்ல உத்தியோகம். அக்கா, தங்கை என்று பெரிய பொறுப்பொன்றும் கிடையாது. இரண்டு குடும்பமும் "ஒன்டுக்கையொன்டு" உறவுங்கூட.

இருந்தென்ன. காதலெண்டு வந்து விட்டால் நாங்கள் எதிரி அல்லவா? வெறும் கௌரவப் பிரச்சனை ஒன்றுதான் காரணம்.

"இல்லை உதிலை கண்மணி வீட்டிலை கலியாணமாம். பெரிய எடுப்பாச் செய்யப் போகினம்போல. அதுதான் பந்தருக்கு கிடுகு போகுது போலக்கிடக்கு. முன்னுக்கு பாய்கிய நாதனல்லே போறான்."
துரையரக்கா உறுதிப்படுத்திக் கொண்டார்.

கண்மணி நேசத்திரை தமக்கைக்காரி. அந்த வீட்டிலை செல்லத்துரை குடும்பம் குடியிருந்தனர். அவற்றை மூத்தமகன்தான் பாய்கிய நாதன். என்னைவிட ஒருபத்து வயது மூத்தவர்.
"அப்ப நேசக்கா கலியாணத்து சம்மதம் சொல்லிட்டாவே"
அம்மா துருவித்துருவிக் கேட்கிறார். துரையரக்கா தனக்கேன் வீண்வம்பு என்று நினைத்தாரோ தெரியாது. கதையை மழுப்புறா. அந்த நேரம் பார்த்து வைரி முன்னாலை நடந்துவர பின்னால் நாச்சி தலைச்சுமையோட வாறது தூரத்திலை தெரியுது.

சின்னம்மாக்காவும் மீன் வாங்க ஒரு சருவச்சட்டியோடை வாறார். அதோடை துரையரக்கா கதையை நிறுத்திப்போட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

மாப்பிளை பொம்பிளை என இருவீட்டி லிருந்தும் ஆணும் பெண்ணுமாய் கலியான வீட்டிக்கு அழைப்பு வைத்துச் சென்றதிலிருந்து எனக்குள் பரபரப்பு தொற்றிக் கொண்டுவிட்டது.

"வலு பெரிசாய்செய்யப் போகிறார்க ளாம்" என வீட்டுக்கு மாவிடிக்க வந்த பொன்னு மாமி அம்மாவுக்கு சொல்லிக்கொண்டிருந்தார். "இராசநாயக மச்சானுக்கு ஓரேயொரு பொம் பிளைப்பிள்ளை. பின்னைச் சும்மா குடுப்பி னமே" என்றார் பதிலுக்கு அம்மா. எனக்கு பாட சாலை விடுமுறைக்காலம். பிறகு சொல்லவா வேண்டும்.

நல்லநாள் பார்த்து பந்தல்க்கால் நாட்டினர் "பெரிய சொக்கட்டான் பந்தலாம்" என்று ஊரெல்லாம் பேச்சு அடிபடத்தொடங்கி விட்டது. சக்கரைக்கட்டாடியார் பந்தல் பொறுப்பை எடுத்திருந்தார். எங்கடை ஊரிலை பாதிக்குடும் பத்திற்கு அவர்தான் வெள்ளாவி வைக்கிறது.

பாடசாலை லீவு நாட்களின் மாலையில் "கிளாரம்மா" வீட்டுக்கு படிக்கப்போ என அம்மா என்னைக் கலைத்துவிடுவார். "சொக்கட்டன் பந்தல்" என்றால் அது எப்படி இருக்கும் என்பதை அறியும் ஆவலில் இருந்தேன். அதற்கு முன் அந்தச் சொல்லைகூட நான் கேள்விப்பட்ட தில்லை.

கிளாரம்மா வீடு எங்கள் ஊரின் மேற் கெல்லை தாண்டி இருந்தது. அதிகதூரம் இல்லை. கண்மணிமாமி வீடு தாண்டி அப்பால் வேகமாக ஐந்து நிமிடம் நடந்தால் "களையிட்டி" வரும். கம்மாளர்களும் மரச்சிற்பம் செய்யும் ஆசாரிகளும் என ஆறேழு குடும்பங்களைக் கொண்ட சிறியகுறிச்சி. களையிட்டி என்ற பெயரே ஊரிலை பலருக்கு தெரியாது. "தைச்சக் கடவை" என்பார்கள். அதைத் தாண்ட வீமன் காமம். கிளாரம்மா வீடு அதன் எல்லையிலிருந் தது.

கிளாரம்மாவின் மகள் மலரக்கா எனக்கு கணக்குப்போடக் கற்றுத்தருவார். தமிழில் சொல்வதெழுதல் தருவார். சித்திரம் வரைவது மற்றும் வீட்டுப்பாடங்ளை செய்ய உதவுவார்.

பந்தற்கால் நாட்டியதிலிருந்து கல்யா ணம் வரையிலான பத்துப்பன்னிரண்டு நாட்கள் எனக்கு வீட்டில் இருப்புக்கொள்ளவில்லை. கண்மணிமாமி வீட்டின் வடபுறத்தில் ஒழுங் கைக்கும் வீட்டுக்கும் இடையில்தான் பந்தர் போட்டார்கள். போகும்போதே வேலிப் பொட் டுக்குள்ளால் என்ன நடக்குதென நோட்டம் விட்டபடிதான் படிக்கப் போவேன். முடிந்ததும் எங்கும் மினைக்கெடாமல் ஓடி வந்துவிடுவேன். நாள் கிட்டக்கிட்ட "பொன்னுருக்கி" "நாள்ச்சட்டி" வைத்தபின் அம்மா பலகாரச் சூட்டிற்க்கு உதவி செய்யப் போவார். பயித்தம் பணியாரம், அரிய தரம், முறுக்கு. அச்சுப்பலகாரம் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று. ஊர்ப்பெண்டுகள் கூடி யிருந்து பேச்சும் சிரிப்புமாய் ஒரே ஆரவாரம்.

இன்டைக்கு என்ன பலகாரம் என்று ஒருநாள் கேட்டேன். அம்மா "ஏதோ புதிசாய் "மிச்சராம்". இங்கிலீசுப் பலகாரம் போலை நான் முன்னைபின்னைக் கேள்விப்பட்டதே இல்லை! அதுக்கென்று தனியாய் பெட்டையள் கடலை மாவிலை ஓமப்பொடி காரப்பூந்தி எல்லாம் சுட்டாளவை" என்றார்

சக்கரைக் கட்டாடியாரின் ஒற்றைத் திருக்கல் எப்போதும் படலைக்குள் நின்றது. அவர் நடராசா கட்டாடியாருக்கு வேலைகளை ஏவிக்கொண்டிருந்தார். கிடுகுப்பந்தருக்குள் சினிமாக்களில் வருவதுபோன்ற ஒரு பெரிய மாளிகை உருவாகிக்கொண்டிருந்தது.

பெரிய மாளிகையின் உட்புறம்போல படிப்படியாக முறிச்சு வெள்ளைகட்டி ஒவ்வொரு முறிப்புக்கும் பச்சை, மஞ்சள், சிகப்பு, நீலம் என தனித்தனி சரிகை வேலைப்பாடுகளுடன் கரை கள் பொருத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கண்ணாடிச்சரவிளக்குகள் இரண்டு நடுவே தொங்கின. அதற்கு எண்ணெய் விட்டு விளக்கு வைப்பார்களா? அல்லது லைட் போடுவார்களா? என்பதிலேயே என் ஆராச்சி யிருந்தது.

கல்யாணத்திற்கு முதன்நாள் மாலை இரண்டு மாட்டு வண்டிலில் பெரிய மணவறை வந்து இறங்கியது. மூன்றடுக்கு மணவறை என்று புழுகினார்கள். சிறுசிறு கண்ணாச் சில்லுகளைப் பதித்து "காக்காய்பொன்" தாளால் விளிம்புகள் அமைக்கப்பட்டிருந்தன. அண்மையில் அது புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். காய்ச்சி ஒட்டிய வச்சிரத்தின் நெடி மூக்கை உறுத்தியது. இருபுறமும் பெரிய யாளிகள் மணவறையச் சுமந்து நின்றன. முதற்தட்டின் நடுவில் பிள்ளை யாரின் உருவம் இருந்தது. இரண்டாம் தட்டில் தாமரைப்பூவின் மேல் இலட்சுமி. இருபுறமும் பல தேவபாலகரின் உருவங்கள் இறக்கைகட்டிப் பறப்பது போன்ற பாவனையில் பொருத்தப்பட் டிருந்தன.

எனக்கு இப்படி சோடனைசார்ந்த விடயங்கள் என்றால் போதும். வாயைப் பிளந்த படி அந்த இடத்தில் அப்படியே குந்திவிடுவேன். அம்மா வீட்டைபோய் சாப்பிட்டுவா என துரத்திக் கொண்டே இருந்தார்.

பந்தரின் உள்ளே பெரிய கதிர்ப்பாய் கள் விரிக்கப்பட்டு அதன்மேல் கம்பளங்களும் புற்பாய்களும் போடப்பட்டன. அதற்கென ஊரில் உள்ள சிங்கப்பூர்பென்சனியர் வீடுகளிலிருந்து ஒன்று இரண்டு என கம்பளங்கள் சேர்க்கப்பட்டன. பந்தரில் இருந்து வீட்டின் முன்புறம்வரை கண்னாடி மணிச்சரங்கள் தொங்கவிடப்பட்டன. முன் படலையின் இருபுறத்திலும் பழுத்த பெருங் குலையோடு கதலிவாழைகள் நிறுத்தப்பட்டன. குலையின் அடியில் செவ்விளநீர் தொங்கியது.

மறுநாள் சமையலுக்காக அளவெட்டியி லிருந்து "தன் உதவியாட்களுடன் அப்பையா பரம்" வந்து இறங்கினார். அவர்தான் அந்த சுற்று வட்டாரத்தில் பெரிய சமையர்காரர்.

பின்நேரம் ஊர் பெரியபெடியள் எல் லோரும் கூடினர். முன் ஒழுங்கையில் இருபுற மும் மரங்கள்நட்டு மேலே வெள்ளை "டிசுப்" பேப்பரால் சோடிக்கத் தொடங்கினர். இரவு எட்டுமணிக்குமேல் அம்மா என்னை நிற்கவிட வில்லை. நீ சின்னப்பொடியன். வா! வீட்டை என்று இழுத்துப்போய்விட்டார்.

விடிந்ததும் ஓடிவந்து பார்த்தேன். வாழைசீப்புபோல வெட்டிஒட்டப்பட்ட வெள்ளை "ரிசு" அலங்காரம் மெல்லிய சின்னக் காற்றில் சரசரத்து ஒலியெழுப்பியது

அன்று ஊரே திருமணத்துக்கான ஆயுத்தத்தில் இருந்தது.

4.

சில ஆண்டுகளுக்கு முன் தொரன்றோ வில் என் மகளின் திருமணம் நிகழ்ந்தது.

முதலில் திருமணத்திற்கான நாள் வைப்பது பற்றி பேச்செழுந்தது. "வின்டர்" காலம் என்றால் கடும்கஸ்டம். பட்டுப்புடவையோடு "ஸினோ" விலை அலையேலாது. அதனால் வைகாசிக்குப் பிறகுதான் நாள்பார்க்க வேண்டும் என்பது முதற் "கொன்டிஷன்"னாக இருந்தது.

'கிழமைநாளிலை திருமணம் வைத்தால் ஒருவரும் வரமாட்டினம். அதாலை சனி, ஞாயிறு விடுமுறை பார்த்துத்தான் வைக்க வேணும் அதிலையும் ஞாயிறு மாலை என்றால் அடுத்தநாள் வேலை என்று சனம் நேரத்தோடு ஓடியிடும். இதையும் கணக்கில் கொள்ள வேண்டும்"

இது இரண்டாவது "கொன்டிஷன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மூன்று சகோதரம். குடும்பம், பிள்ளைகள் என எல்லோரும் யூரொப்பிலை இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வருவ தானால் ஆகஸ்ட் மாதந்தான் நல்லது செப்டெம்பர் முதல்வாரம் பாடசாலை தொடங்கிவிடும். திரும்பவேண்டும். இது மூன்றாவது "கொன்டிஷன்".

இதிலும் சிக்கலுண்டு. தமிழ் ஆடிமாதத்தில் நற்கருமங்கள் செய்வதில்லை என்பது எங்கள் மரபு. எனவே ஆகஸ்ட்மாதத்தில் வரும் முதல் 15 நாட்களும் ஆடிக்குள் அடங்கிவிடும். செய்ய முடியாது. இதற்கப்பால் பொருத்தமான மண்டபம் கிடைக்கவேண்டும்.

பிறகுதான் பஞ்சாங்கம். எப்படி நாள் எடுப்பது? அமாவாசை அட்டமி நவமி கழிந்தால் ஒவ்வொரு வார இறுதியும் பொது நாள்தான். எப்படியோ நாள்பிடித்து மண்டபமும் பார்த்தாயிற்று.

திருமண அழைப்பிதழ் பற்றி பேச்செழுந்தது. மகள் ஈ–பக்கங்களைத்தேடி ஒரு கம்பனியை பிடித்து அவர்கள் மாதிரி அழைப்பிதழும் அனுப்பிவிட்டார்கள். அது வீட்டில் எல்லோருக்கும் மிகவும் பிடித்துப் போயிற்று.

நாங்கள் முடிவுசெய்துவிட்டோம். முதலில் என் நண்பனிடம் அழைப்பிதழை காண்பித்தேன். "நீங்கள் இதுதான் எடுப்பதென முடிவு செய்துவிட்டீர்களா?" என்றார். ஆம் என்றேன்.

"ஒரு கிறீஸ்தவத் திருமணம் என்றால் இது மிகஅழகான அழைப்பிதழ். தமிழ்த்திருமணம் என்றால் நான் இத்தெரிவை விரும்பேன்" என்றார். காரணம் கேட்டேன். அழைப்பிதழ் கறுப்புநிறத்தில் வெள்ளிக்கம்பிகள் போன்ற அச்சமைப்பில் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

அவர் கூறியது சரியே. மங்களகரமானது என சில நிறங்களை வைத்திருக்கிறார்கள். அது எங்கள் மனதில் படிந்துபோய் விட்டது. அவ்வளவுதான். நான் இந்த தெரிவுகளில் நாட்டமில்லாதவன்.

எனக்கு
எந்த விதி முறையோடும்
உடன்பாடு கிடையாது
என் மூலத்தை தரிசித்து
மனதுக்கிசைந்தபடி சுயத்தை வரைய
விழைகிறேன்
சற்று விலகியிருங்கள்

எனக் கவிதை சொன்னவன். கவிதை வேறு வாழ்வு வேறா? இருந்தாலும் அவர் கருத்தை வீட்டிலும் மணமகனிடமும் எடுத்துரைத்தேன். அவர்கள் தங்கள் முடிவில் உறுதியாக இருந்தார்கள்.

அழைப்பிதழ்கள் அச்சிட்டு வந்தன. முதலில் என் மைத்துனர் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். அவரை என் தந்தைபோலக் கருதுவதால், அவர் ஒருவரால் மட்டுமே என்னைத் திட்டவோ என்மனதை மாற்றவோ முடியும்.

கொடுத்துவிட்டு மௌனமாக இருந்தேன். எல்லாவற்றையும் பலமுறை பார்த்தார். 'அழைப்பிதழ் அழகாக வந்திருக்கிறது' என்றார். என் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதன்பின் இந்தக் கறுப்பு விவகாரத்தை மெல்ல அவிழ்த்து விட்டேன்.

வெள்ளைக்காரனுக்குத்தான் கறுப்பு துயரத்தின் நிறம். அவன் வெள்ளை நிறத்தை உயர்ந்ததாகவும் கறுப்பு என்பதை தாழ்ந்ததாகவும் பார்த்தான். அது அவர்களது உயர்வு தாழ்வின் வெளிப்பாடு. எங்களைப் பொறுத்த வரையில் கறுப்பு என்பது உறுதி. கறுப்பு வலிமை. என்றார்.

உண்மையான வார்த்தைகள் அவை. மகிழ்ந்தேன்.

இந்தப் பெருநகரத்து அலைச்சலுக்குள் உறவுகளுக்கிடையேயான பரிமாற்றங்கள் வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகதுக்கங்களுடன் முடிந்துவிடுகின்றன. அதற்கு மேல் தொடர்வதில்லை. உண்மையை சொல்லப் போனால் நேரம் இல்லை. எல்லோரும் வேலை வேலை என ஓடுவதிலேயே வாழ்வைத் தொலைத்துவிடுகிறனர்

தொலைபேசியில் அழைப்புவைத்து மண்டபத்தில் வாழ்த்திவிட்டு வருவதோடு உறவுப்பரிமாற்றம் முடிந்துவிடுகிறது. பின்பு எப் போதாவது பிறிதொரு விழாவில் சந்தித்தாற் தான் உண்டு.

ஒரு மாற்றீடாக தொரன்ரோவில் இருப் பவர்களை அழைப்பிதழ்களோடு வீட்டில்சென்று அழைப்பது என்று தீர்மானித்தோம். அதன் சிரமத்தை பின்புதான் அறிந்துகொள்ள முடிந்தது. எங்கள் ஓய்வுநேரம் அவர்கள் ஓய்வு நேரம் எனப்பொருத்தமான பொழுதறிந்து ஒவ்வொருவீட்டாரிடமும் முன் அனுமதிபெற்று வீட்டுக்குச்சென்று அழைப்பிதழ் கொடுத்தோம்.

"மண்டபப்பொதி"க்குள் விருந்திலிரு ந்து வீடியோ, புகைப்படம் என சகலதும் அடங்கி யிருந்தது. எங்கள் விருப்புக்கேற்ப சிலவற்றை நாங்களே செய்வது என முடிவு செய்தோம். இந்த அனுபவமானது ஒரு தனிப்பதிவு எழுதுவ தற்கு போதுமானது.

நான் ஒரு மந்தையிலிருந்து விலகிய ஆடு போல உணர்ந்த கணங்கள் அவை.. முகத்துக்கு முன்னால் பாராட்டி பின்னால் "விசரன் தேவையில்லாமல் முறியுறான்". என்கிற குரல்களைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. மேலே சொல்லப்பட்டவை ஒரு எடுத்துக்காட்டுத் தான். யாரோ போட்ட தடத்தில் எல்லோரும் நடக்க வேண்டியிருக்கிறது. ஒரு வியாபார உலகில் பகட்டாக வாழ்கிறோம். எங்கள் விழாக் களை மண்டபக்காரரே வடிவமைக்கிறார்கள். நாங்கள் பணத்தைக் கொட்டிவிட்டு வெறுமனே பகட்டாகநின்று போலியாகக் கதைபேசிப் பெருமைபேசுகிறோம்.

இது ஊர் அல்ல, நீ வாழ்ந்த காலம் அல்ல, இது உன் நிலமல்ல, புதிய ஊர், புதிய திணை, வேறு காலம், நீ கிராமத்தவன், பெரு நகரத்துக்குள் தவறி விழ்ந்துகிடக்கிறாய்!. என் கிறது என்னுள் ஒரு குரல் இதை உணர முடியாத ஒரு கிராமத்தானாகவே நான். "ஏதோ" இன்றும் வாழ்கிறேன்.

5.

பொலின்டனும் பாய்க்கியநாதனும் இருட்டோடு எழுந்து மயிலிட்டிக்குப் போயி ருக்க வேண்டும். இரண்டு சைக்கிலில் வந்து இறங்கினர். இரண்டு கரியரிலும் பெரிய ஐஸ் பாளங்கள் கட்டப்பட்டிருந்தன. அவை உருகி நீர் சொட்டத் தொடங்கிவிட்டது.

தவசியின் மோன் இராசன் அடிவளவில் மரத்துக்குக்கீழ் நல்ல நிழல் விழும் இடம்பார்த்து பெரிய கிடங்கொன்றை வெட்டிக்கொண்டிருந் தான். அதை இரண்டுபேர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர். குசினிப்புற விறாந்தையில் பெண்டுகள் காய்பிஞ்சு அரிந்துகொண்டிருந் தனர்.

கோப்பியின் வாசம் மூக்கைத் துளைத் தது. இரண்டு பெரிய செப்புக்கடாரத்தில் கோப்பி கலந்து ஆறவைக்கப்பட்டிருந்தது.

"இரவுக் கலியாணத்தக்கு விடியக்கால மையே கோப்பி கலந்தாச்சுப் போலை கிடக்கு" என்றபடி அம்மா அருவாள் மனையிலிருந்து மர வள்ளிக்கிழங்கை சீவத் தொடங்கினார். கொழும்பிலிருந்து வந்து நின்ற பெட்டைகள் கோப்பியில் சிறிது எடுத்த சுவைத்தப் பார்த்தனர். அவர்களின் முகத்தைப் பார்க்க எனக்கு வாயூறி யது.

நன்றாக சூடு இறங்கிய பின் கடாரங் களின் ஊற்றி அதன் அகன்ற வாய் "பொலித்தீன்" தாளால் மூடப்பட்டு கிடங்குக்குள் இறக்கப்பட் டது. சுற்றிவர ஐசும் மரத்தூகளும் போட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசன் கிடுகு எடுத்துவந்து மேலே நிழல் போட்டான்

அன்றுதான் எங்கள் ஊருக்கு முதன்முதலாக "ஐஸ்கோப்பி" அறிமுகமான நாள்.

மாப்பிளை வீட்டைத் தாண்டித்தான் நாங்கள் கண்மணி மாமி வீட்டுக்குக் போக வேணும். மாப்பிளைவீட்டில் பெரும் ஆரவாரம் எதுமில்லை. பலகாரச்சூட்டுக்கும் அம்மா உதவிக்கு ஒருநாள் போய்வந்தார். எல்லாப் பலகாரத்திலும் கொஞ்சங்கொஞ்சம் செய்தார்கள் என்றார்.

சிவலிங்கத்தின் தகப்பனார் இறந்து விட்டார். தமையன் "அப்போதிக்கரி". அவர்தான் எல்லாவற்றையும் முன்நின்று செய்ய வேண்டும். அவர் கொஞ்சம் வரையறவான மனுசன். ஆடம்பரங்களில் அதிகம் நாட்டமில்லாதவர். தேவைக்கதிகமாக ஒரு செப்புச் சல்லி கூட விலகவிட மாட்டார். மிகக் கண்ணியமான மனிசன் என்ற வகையில் எல்லோருக்கும் அவர்மீது நல்ல மதிப்பு உண்டு

அவர்கள் வீட்டுக்கு முன் ஒரு பொட்டல் வெளிக்காணி இருந்தது. அதற்குள் இருந்த பற்றைகளை வெட்டித் துப்பரவாக்கி இருந்தார்கள். நிலத்திலிருந்த நெருஞ்சி முட்களை அகற்றுவதற்காக வாழைக்குற்றிகளை உருட்டினார்கள். அதற்குள் திருமணமான தம்பதிகளின் வரவேற்பு நிகழ்வு நடக்கவிருப்பதாகச் சொன்னார்கள்.

திருமணத்தின் அடையாளமாக வீட்டுக்கு முன்புறம் வண்ணப் பேப்பரால் சோடித்திருந்தனர்

பொம்பிளை வீட்டில் நேசம்மாமி திருமணத்திற்கு முரண்டு பிடித்ததால் ராஜேசின் சிறிய தகப்பன் செல்வமாணிக்கர்தான் எல்லாவற்றையும் முன்நின்று நடத்தினார். அவர் நல்ல செழிப்பானமனுசன். அவரின் தாராளமனது பற்றி முன்பும் பல பதிவுகளில் சொல்லியிருக்கிறேன்.

அன்று முழுவதும் மாணிக்கர் நல்ல உசாராகவே நின்றார். பின்நேரம் மூன்று மணி போல லைட்இஞ்சின் வந்தது. ஊர் முழுவதும் ஒன்றுதிரண்டு கடும்அமர்களமாக இருந்தது.

செல்வமாணிக்கருக்கு யாழ்ப்பாணத்தின் பெரியபெரிய நாதஸ்வரவித்துவான்களோடு நல்ல தொடர்பிருந்தது. சும்மா சாதாரண நாட்களில் கூட வடமராட்சிப்பக்கம் "சேபம்" முடிந்து திரும்பும்போது மாணிக்கரைப் பார்த்து அவரோடு தண்ணிபாவிச்சு விருந்துண்டு போகும் வழக்கம் பல மேளகாரருக்குண்டு.

அந்த உறவில் நாலைஞ்சு கூட்டம் மேளகாரர் வந்திருந்தனர். ஆறு மணியளவில் பந்தருக்குள் கச்சேரி தொடங்கிவிட்டது.

மாப்பிளை வீட்டார் "உருத்திராபதி செட்" மேளத்தைப் பிடித்திருந்தனர். அது வொன்றும் அக்காலத்தில் மிகப்பிரபலமான "செட்" என்று சொல்லமுடியாது. இதுவும் இல்லாவிட்டால் பொம்பிளை வீட்டார் மதியாயினம் என்ற காரணத்தால் பிடிக்கப்பட்டது.

தோழன் போய் மாப்பிளை வீட்டுச் சடங்கு சபைசந்தி எல்லாம் முடிந்து ஆராத்தி எடுத்து மாப்பிளை புறப்படவும் தெல்லிப்பழையில் இருந்து மெயில்றெயின் புறப்படும் விசில் சத்தங் கேட்கவும் சரியாக இருந்தது.

ஒழுங்கையில் ஒரு மூன்றுவளவு தாண்டினால் பொம்பிளை வீடு. உரத்து கூப்பிட்டால் அங்குகேட்கும். இரண்டுநிமிட நடைதூரம். மேளதாளத்தோடு ஊர்வலமாகச் செல்ல ஒரு ஐந்து நிமிடங்கள் எடுத்திருக்கும்.

லைட் எஞ்சின் வெளிச்சத்தில் கலியாணவீடு ஒளி வெள்ளமாக காட்சி தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் போட்டோக்கிராபரையே வட்டமிட்டபடி நின்றோம். கமெரா ஒவ்வொரு முறை மின்னி அடங்கியதும் அதன் ஒளிக்குமிழை கழற்றி வீசுவார். அதைப் பொறுக்குவதில் என் வயதொத்தவர்களுக்குள் பெரும் போட்டி.

எட்டுமணிக்கு தாலிகட்டு முடிந்ததும் பலகாரம் பரிமாறி "ஐஸ் கோப்பி" வழங்கினார்கள். அது சில்லிட்டு தொண்டைக்குள் இறங்கிய போது அமிர்தம் போல இருந்தது. சிலர் இரண்டு, மூன்றுதரம் வாங்கிக்குடித்தார்கள்.

கட்டாடியார் முன்னே வெள்ளைவேட்டியால் திரைபிடித்தார். பால்பழம் பரிமாறினார்கள். இரண்டுபேர் ஒருவர் இழுக்க மற்றவர் பின்நின்று தள்ளுவதுமாக ஒரு பசுக்கன்றை இழுத்துச் சென்றனர். அது பயத்தில் மிரளமிரள விழித்தது.

நான் அம்மாவிடம் இதை ஏன் இழுத்துச் செல்கிறார்கள் என்றேன். அம்மா முழுவியளங் காட்டப்போகிறார்கள் என்றார். நான் மெதுவாக சுழிச்சுக்கொண்டு முன்னுக்குப்போய் விடுப்புப் பார்த்தேன். ஆரோ ஒரு பெரிசு தலையிலே குட்டுவைச்சு வெளியிலே கலைத்து விட்டார்.

மாப்பிளை பொம்பிளையை வெளியில் கூட்டிச்சென்று ஐயர் அருந்ததி காட்டினார். மணமக்களை வாழ்த்தி அறுகரிசி போட்டதும், மாப்பிளை பொம்பிளையை வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

மாணிக்கர் சின்னையா தண்ணீர்ச் செம்போடு வந்து அதை சிவஞானசுந்தர மாமாவிடம் கொடுத்து பந்திக்கு அழைத்தார்.
ஆண்கள் முதற்பந்திக்கு தயாராயினர்.

6.

எனக்குள் ஒரு நண்பன் இருந்தான். அவன் இச்சூழலையும் காலத்தையும் நன்குணர்ந்தவன்.

அவன் மகன் ஒரு வேற்றினப் பெண்ணைக் காதலித்தார். காதலித்தார் என்ற சொல் தவறு. "டேற்" பண்ணினார் என்பதே சரியானது. "டேற்றிங்" என்ற சொல்லுக்கு சரியான தமிழ்ப் பதம் இல்லை. இந்த உறவுக்கு இருவீட்டிலும் அனுமதி இருந்தது.

கிட்டத்தட்ட ஐந்துவருடங்கள் இந்த உறவிருந்தது. திடீரென ஒருநாள் இருவரும் வீட்டிற்கு வந்திருந்தனர். அவள் கைவிரலில் புதிதாக ஒருமோதிரத்தை காண்பித்தாள். தாங்கள் "என்கேச்" பண்ணியதாகச் சொன்னாள். இவையெல்லாம் எனக்குப் புதியது. நான் கொஞ்சம் பழைய மனுசன்.

அதன்பின் ஒருவருடம் கழித்து கத்தோலிக்க தேவாலயத்தில் இவர்கள் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன் மணவாழ்கை பற்றிய வகுப்பு நடைபெற்றது. வாரத்தில் ஒருநாள் என கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் இந்த வகுப்பு நடந்தது.

தேவாலயத் திருமணத்திற்கு மிக நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அழைப்பிருந்தது. அதன்பின் மண்டபத்தில் வரவேற்பு நிகழ்விருந்தது.

வாழ்வில் நெருக்கமாக பழகுகிற உறவினர், நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டது.

நண்பன் பல விடயங்களில் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. பல சமயங்களில் என்னுடன் முரண்பட்டுக்கொண்டான். நீ உணர்வின் வழியில் சிந்திக்காதே. நாங்கள் இருப்பது புதியதேசம், பல்கலாசாரமக்கள் கொண்ட நாடு, அதற்கேற்றபடிதான் வாழவேண்டும் என்றான்.

திருமண அழைப்பிதழின் உள் பதிலிடுவதற்கான அஞ்சல்தலையுடன் கூடிய பதிலட்டை இருந்தது. அதில் வினாக்கள் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்யார் கலந்துகொள்வீர்கள்?. குறிப்பிட்ட மூன்று உணவு வகையறாக்களில் அவர்கள் எந்த உணவை விரும்புகிறார்கள் என்ற விபரங்கள் கேட்கப்பட்டிருந்தன.

நானும் நண்பனும் தினமும் முரண் பட்டுக்கொண்டோம். இது எங்களின் கலாச் சாரம் அல்ல. இதை நடைமுறைப்படுத்துவது சிரமம் என்றேன். இவன் நல்லவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றான்.

நண்பன் தன் உறவுகளுக்கு தானே கொண்டுசென்று அழைப்பிதழ் கொடுத்தான். பிறிதொரு நாளில் அவனே சென்று பதிலட்டை யையும் பெற்றுக்கொண்டான். நிலமையை புரிந்துகொண்டவன் ஆதலில் அதற்கேற்றபடி அழைக்கப்படுபவர்கள் பட்டியலைக் குறுக்கி யிருந்தான். தன் நெருங்கியஉறவுகள் பலரை அழைக்கவில்லை.

இதனால் நீ குறைகேட்கப் போகிறாய். மனச்சங்கடம் அடைவாய் என இடித்துரைத் தேன். அவன் தான் எதையும் சந்திக்கும் மனப் பக்குவத்தில் இருப்பதாகச் சொன்னான்.

பெண் பக்கத்திலிருந்து சிறுவர்கள் யாரும் அழைத்துவரப்படவில்லை. எங்கள் கலா சாரம் அங்ஙனம் அல்லவே. குடும்ப சமேதராய் கலந்துகொள்வதே எங்கள் பண்பாடு. அதனால் சிறுவர்பராமரிப்புக்கென தனியானகூடமும் சிப் பந்திகளும் உணவும் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தன.

பெரியவர்களுக்கான இருக்கையில் அவரவர் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவர்களின் உணவு முதலில் சொல்லப்பட்டபடி அவரவர் தெரிவுக்கு ஏற்ப மேசைக்கு எடுத்து வரப்பட்டது.

முதலில் உணவைத் தெரிவுசெய்தவர் கள் அது நவராத்திரிகாலம் என்பதை மறந்து விட்டிருந்தனர். அசைவ உணவை தெரிவு செய்திருந்தனர். இதனால் சில உணவுத்தட்டுகள் வீணாயின.

இந்த திருமணநிகழ்வு எனக்கும் பல அனுபவங்ளைப் புரியவைத்தது. ஒவ்வொருவரி டமும் ஒவ்வொரு பண்பாடு உண்டு. அவரவரு க்கு தங்களது பண்பாடு உயர்ந்தது. நாங்கள் எங்கள் மண்ணுக்குரிய பண்பாடுகளோடு இந்த புதியமண்ணில் வேர் ஊன்றமுடியாது சீரழிகி றோம்

ஒவ்வொரு விழாக்களிலும் நாங்கள் படும் அவலம் சொல்லிலடங்காதது.

7.

செல்வமாணிக்க சின்னையா முகப்பு வாசலிலே நின்றார். நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டது, உள்ளே கச்சேரி சூடுபிடிக்கிருந்தது. அவர்களின் உற்சாகத்தைப் பார்த்தால் அது அப் போதைக்கு முடியும் போலத் தெரியவில்லை.

இடையிடையே வாணம் மேலே சென்று வெடித்து வண்ணவண்ணப் பூந்திரிக ளைச் சொரிகிறது. மாணிக்கர் சின்னையா வைக் கடந்து யாரும் வீடுசெல்லமுடியாது. இனி மாப்பிளைபொம்பிளையை “கால்மாறி” அழைத் துச் செல்லவேண்டும். அதற்கான எந்த அசு மாத்தமும் இல்லை.

சிவஞானசுந்தர மாமா நேரத்தைப் பார்த்தார். ஒருமணியை அண்மிக்கிறது. அவரு க்கு இவற்றிலெல்லாம் மனம் ஒன்றவில்லை. ஏதோ நல்லபடி எல்லாம் முடியவேண்டும் என்பதொன்றே எண்ணமாயிருந்தது.

அவர் பந்தருக்குள் செல்வதும் முகப்பு வாசலுக்கு வருவதுமாக இருந்தார். மாணிக்கர் சின்னையாவுக்கும் நல்ல “முசுப்பாத்தி”. அவர் எங்கையோ ஒளிச்சுவைத்து இடைக்கிடை போய் புதிப்பித்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சிவஞானசுந்தரமாமாவுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் மெல்லக் கிட்டப் போய் காதோடைகாதாய் கையிலிருந்த மணிக் கூட்டை பார்த்தபடி
“மாணிக்கர்! நேரம் ஒருமணியாச்சு இனிக் கால்மாறவல்லே வேனும்” என்றார்.
“உள்ளுக்கை போய் பார் கச்சேரி நடக்கிது. அதைப் பார்! அது பிடிக்கையில்லை என்றால் இதைப்பார்! டேய் மாணிக்கா! நல்லதாய் விடு ஒரு அவுட்டு வாணம்” என்றார்.

மாணிக்கன் வீட்டுக்கு முன்னாலை நடு ஒழுங்கையிலை “கொட்டு” வைச்சு அதற்குள் அவுட்டு வாணத்தை போட்டுக் கொழுத்தினான். அது மேலைபோய் வெடித்தது பூந்திரிகளை சொரிந்தது.
சிவஞனசுந்தரமாமா அடங்கிப் போனார்.

இரண்டுமணி தாண்ட மாப்பிளை பொம்பிளை வாசலுக்கு வந்தனர். ஆராத்தி எடுத்து அழைத்துச்செல்லப்பட்டனர். மாப்பிளை வந்த வழியால் செல்லக் கூடாது. கால்மாறி வேறுவழியால் செல்ல வேண்டும் என்பது மரபு.

தெற்குப்பக்கமாகத் திரும்பிச்செல்லும் ஒழுங்கையூடாகத் திரும்பி சுற்றிவருவதென முடிவு செய்யப்பட்டது. சக்கரைக்கட்டாடியார் நிலப்பாவாடையை விரித்துச் சென்றார். முன்னே ஐந்து கூட்டம் மேளம். ஒரு இருநூறு யார் தூரம் சென்றதும் ஒரு சிறு முடக்கு வரும். அது சந்திபோன்ற அகன்றஇடம். மாணிக்கர் அதில் மேளகாரரை மறித்தார். அரைமணி நேரம் ஒருபெரிய சமா நடந்தது. அது முடிய மாணிக்கர் சின்னையா குரலை உயர்த்தி

“பொம்பிளை பகுதி மேளகாரர் எல்லாம் நிப்பாட்டுங்கோ. கட்டுங்கோ மேளங்களை” என்றார்.

ஒருநிமிடம் மழைவிட்டது போன்ற அமைதி.

உருத்திராவதியின் நாதஸ்வரம் ஒற்றைக் குரலாய் ஒலிக்க தொடர்ந்தது ஊர் வலம்

8.

சிறிமாவோ காலத்தில்தான். கீயூ என்றசொல் எனக்கு தெரியவந்தது. அப்பொதெல்லாம் அம்மா விடியப்புறம் ஐஞ்சு மணிக்கு எழுப்பிவிட்டு “ஓடிப்போய் கீயூவரிசையிலை” நில்லுங்கோ என்பார். நாங்கள் சங்கக்கடைக்கு முன்னால் பாணுக்கு வரிசையிலை நிற்போம்.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த “கியூ”வில் நிற்பதே வாழ்க்கையாகப் போய் விட்டது. இங்கு நடக்கும் எங்கள் திருமணவிழாக்களில் தாலிகட்டிய கையோடு இரண்டு கியூ ஆரம்பித்து விடும். ஒன்று மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்க நீளும். மற்றையது பின்புறமுள்ள உணவுமேசையை நோக்கி நீளும்.

முன்பெல்லாம் திருமணம் பெண் வீட்டில் தான் நடைபெறும். பெண்வீட்டார் வந்து மாப்பிளைவீட்டுப் பெரியவர்களுக்கு “செம்பு தண்ணீர்” கொடுத்தபின்தான் அவர்கள் வாயலம்பி சபைக்குச் செல்வர்.

சபையில் கூட எப்படி இலை போடுவது என்பதிலிருந்து எப்படி உணவு பரிமாறுவது என்பதுவரை பல ஒழுங்கு மரபுகள் இருந்தன. இவையெல்லாம் பண்பாட்டு விழுமியங்கள் எனப் பேணப்பட்டன. இதற்குப் பின்னால் புரையோடிப்போன சமூகஅமைப்புகளின் தாக்கமும் இருந்ததென்பது உண்மை.

இப்போது சபை பரிமாறும் வழக்கம் எங்களிடமிருந்த ஒழிந்துவிட்டது. இங்கு நாங்கள் சென்று எங்களுக்குத் தேவையான உணவை எடுத்துவந்து உண்ணும் முறையே எம்மவரின் வழக்கத்தில் உள்ளது. எங்கள் சோறு, கறியோடும் முள்ளுக்கரண்டியோடும் போராடும் காட்சிதான் சிறப்பு. சபை என்பது வழக்கொழிந்து போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேயத்தவரின் திருமணங்கள் தேவாலயங்களில் இடம்பெறும். அங்கு வந்திருப்பவரின் முழுக்கவனமும் சடங்கில் குவிந்திருக்கும். பின் திருமணவரவேற்பு மண்டபத்தில் நிகழும். அது விருந்துக்கும் கேளிக்கைக்கும் உரியதாக இருக்கும். அதிகமும் சிப்பந்திகளால் மேசையில் உணவு பரிமாறப்படும். பின்னர் ஆட்டம்பாட்டம் கொண்டாட்டம் எனக்கழியும்.

எங்கள் திருமணவிழாக்களிலும் இந்த மேலைத்தேய வரவேற்புக்கு உரியவகையில் மண்டப ஒழுங்குகள் இருக்கும். அதில் சம்பிரதாயத் திருமணச்சடங்கும் நிகழும். அவை ஏதோ வீடியோக் கமெராக்காரர்களுக்கு நிகழ்வதாகவே தோற்றம் தரும். சபை தங்கள் பாட்டில் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும். இதனால் ஒழுங்கான சடங்குமின்றி சபையுமின்றி நல்ல வரவேற்பு நிகழ்வுமற்றுப் போய் விடுகிறது.

"கும்பலிலே கோவிந்தா" அடைமொழியைத்தான் உதாரணப்படுத்த முடியும்.

இந்தச் சூழலிலே ஒரு திருமணத்தை எப்படிச் சிறப்பாகச் செய்வதென்பதே கேள்வி? இதனால் இங்கு வளரும் அடுத்த தலைமுறையினர் பெற்றோருக்காக ஒரு திருமணநிகழ்வும் தங்களுக்காக ஒரு வரவேற்பு நிகழ்வும் செய்கின்றனர்.

பல திருமணங்கள் தேவாலயத்தில் ஒன்று, சைவக்கலியாணம் என மேற்சொன்ன வகையில் ஒன்று, வரவேற்புநிகழ்வு ஒன்று என மூன்றுநிகழ்வுகள் நடப்பதும் உண்டு.

இந்தச் சிதைவு அல்லது இந்தக் குழப்பம் திருமணவாழ்வு என்ற பந்தத்தையே அர்த்தமற்றதாக்கி விடுகிறது. பல திருமணஉறவுகள் மூன்றுமாதங்கள் கூட நீடிப்பதில்லை.

இது திருமணங்களை மட்டும் குறித்ததல்ல. இவை சிறு உதாரணம் மட்டுமே. சரியெது? பிழையெது? என்பதல்ல என்வாதம். எவ்வாறு இந்த வாழ்வியல்நெறி பெருநகர வாழ்வினால் சிதைகிறது என்பதை மட்டுமே இங்கு பதிவு செய்கின்றேன்.

பொருளாதாரரீதியிலான புலம்பெயர் மக்களின் ஆதிக்கமானது ஈழத்தவர்களது போராட்டத்தை மட்டுமல்ல ஒட்டுமொத்த ஈழத் தமிழரின் வாழ்வியல் நெறியையும் சிதைத்து விட்டது என்ற என் கருத்தையே பதிவுசெய்கிறேன்.

கையினால் உணவை பிசைந்து குழைத்து உண்ணுகின்ற மரபு கொண்டவர்கள் நாங்கள். அதில் எந்தக் குறைபாடும் இல்லை. எங்கள் உணவும் சூழலும் அதற்கேற்ற தன்மை கொண்டவை. அதன் சுவையே தனி.

எங்கள் கலாசாரம் தெரிந்த வேற்றினத்தவர்கள் எங்கள் உணவை தம்கையால் குழைத்து உண்ணத் தலைப்படும் போது அவர்களிடம் முள்ளுக்கரண்டியைத் திணிக்கவே முற்படுகிறோம் என்பதே துயரம். நாங்கள் எங்களிடமிருந்த அனைத்து மரபுசார் விழுமியங்களையும் துறந்து வருகிறோம். "மரபுரிமைவாரம்" என ஒருவாரத்தை கொண்டாடி அதனுடு தங்களை விளம்பரப்படுத்துவதோடு முடிந்து போகிறது தமிழர் மரபு.

நாங்கள் வாழ்ந்த புலமுமின்றி சேர்ந்த நிலமுமின்றி "கறிசோறும் முள்ளுக்கரண்டி" போல வெறும் பகட்டில் வாழ்கிறோம் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

மௌனம் பேசு

இனிய. திருநகர் நடராசா

புரட்டாதி மாதம் சூரிய தேவன் பூமித் தலை சுட்டெரித்துக் கொண்டிருந்த மாலைப் பொழுது அது சாய்வான பின்னல் நாற்காலியில் சரிந்து படுத்திருந்தபடி மௌனப் பார்வையாக எதிரே உள்ள வீதியைப் பார்த்துக் கொண்டிருக் கிறார் சிவலிங்கம் அந்த வீதி, திருநகர் கிராமத் திற்கு பிரதான வீதி வடக்கையும் தெற்கையும் ஊடறுத்து கிழக்கு மேற்காகச் செல்லும் வீதி வீதிக்கு ஓரமாகத்தான் சிவலிங்கத்தின் வீடும் அமைந்திருந்தது. விடிந்து பொழுதுபட்டு விடிந் தாலும் வாகனங்கள் ஓடிக்கொண்டே இருக்கும். மக்கள் நடமாட்டம் குறைந்தாலும் வாகன ஓட்டம் குறைவதில்லை.

என்னை விடு நான் சாகப் போறேன் என்று தலை தெறிக்கும் வேகத்தில் பறக்கும் மோட்டார் சைக்கிள்களும் உன்னை விட நான் என்ன குறைவா என்று கூவிக் கொண்டு போகும் ஆட்டோக்களும் தண்ணி குடித்த உற்சா கத்தில் உறுமிக்கொண்டு ஓடும் டிப்பர்களும் பெரும் பெரும் வணிக வாகனங்களும் பேருந்து களும் பெருவாரியாக மாறி மாறி எப்பொழுதும் ஓடிக் கொண்டே இருக்கிறது.

மக்களைப் பொறுத்தவரை பண முடை வந்தோரின் பரிதவிப்பும் பணம் பெருகி வாழ் வோரின் பகட்டுமாக அந்த வீதியில் அங்கு மிங்குமாக உலா வந்து கொண்டிருக்கிறார்கள். வீதியின் இரு மருங்கயையும் பல் பொருள் வாணிபம் இரு தபால் நிலையம், கோயில்கள், கட்டிடப் பொருள் வாணிபம், உணவகம், ஒட்டுத்தொழில் சாலை, மோட்டார் சைக்கிள், சைக்கிள் திருத்த நிலையங்கள் அரைக்கும் ஆலை, சிகை அலங்காரிப்பு நிலை யங்கள், சலவைத் தொழிலகம் போட்டோ பிடிக் கும் நிலையம் இராணுவச் சாவடிகள் கணனி நிலையம், கொல் தச்சுத் தொழில்சாலைகள், கிராம அலுவலர் அலுவலகம் வெளிநாட்டு நிறு வனம், மணப்பந்தல் சேவை, மாதர் சங்கம், கிராம முன்னேற்றச்சங்கம் போன்றவையெல்லாம் வீதியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

திருநகர் கிராமத்திற்கு இத்தனை சிறப்புக்கள் இருந்தாலும் கூட வறுமைப்பட் டோரின் வாழ்க்கை வறுமையாகத்தான் வலம் வந்து கொண்டிருக்கிறது. அநேகமானோர் வங்கியிலே கடன் வாங்கி வர்த்தகத்தைப் பெருக்கி வைத்திருக்கிறார்கள் சந்தைப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை விற்பனையாளர் தொகை பெருகி வாங்குவோர் தொகை குறுகிவிட்டது கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் இதே நிலை ஏன் இந்தநிலை இங்குள்ள மக்களுக்குத் தொழில் வாய்ப்பு இல்லை வறியவர்களுக்கு வசதியான வீடு இல்லை வசதியான வாழ்க்கை இல்லை பொருளதார முழுவதும் வேறு மாவட் டங்களின் வர்த்தக வாகனங்களின் வருகையும், கிணறு தோண்டயந்திரம், அரிவு வெட்டும் இயந்திரம் வீதி அமைக்க இயந்திர மயமாகி விட்டது மக்களும் இயந்திரமாகி விட்டார்கள். அது மாத்திரமா? பொருட்களின் விலை பொழு தொரு வண்ணமாக ஏறிக் கொண்டு போகிறது. செலவு கட்டுப்படுத்த முடியாமல் செல்கிறது. அரச உத்தியோகத்தர்களும் ஆலாப்பறக்கிறார் கள். பொருளாதார முன்னேற்றத்தில் முன்னனி யில் நின்ற கிளிநொச்சி மாவட்டம் இன்று ஜீவா தாரத்திற்கே வழியில்லாமல் போகும். அபாயத் தில் பின் தள்ளப்பட்டுக் கொண்டிக்கிறது. இதை நாட்டு வளர்ச்சி என்கிறார்கள். அப்படியானால் வருங் காலம் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலை என்ன? காலம் பதில் தருமா?

1960 ஆண்டில் இந்தத் திருநகர் கிராமம் ஒரு வழிப்பாதை கூட இல்லாத காடாக் கிடந்த போது பன்றி வேட்டை, மான் வேட்டை என்று வேட்டை ஆடப்பட்ட இட மாகவும் சிறுத் தைப் புலிகள் மேய்ச்சலுக்கு வரும் மாடுகளை பலி கொண்ட இடமாக இருந்தது. இந்தக் காட்டை மக்கள் பலாத்தகரமாக வெட்டித் திருத்தி குடியி ருந்தோர்கள் அரச எதிர்ப்பு வந்த போதுமே போராட்டங்களை நடத்தி பின்னர் அரசால் அவர்களுக்கே காணிகள் வழங்கப்பட்டு வெற்றி கண்டார்கள் இன்று அதே இடம் தான் நிலையை மறந்து புதுப்பொலிவோடு காட்சி கொடுக்கிறது. இப்படி மனித வாழ்க்கையிலும் எத்தினையோ மாற்றங்கள் நடந்தேறி இருக் கின்றன. நடந் தேறிக் கொண்டும் வருகின்றன.

உள்நாட்டு யுத்தங்கள் எத்தனையோ இடம் பெயர்வுகள் எத்தனையோ இழப்புக்கள் எத்தனையோ அப்பப்பா நினைத்துப் பார்க்க முடியாத சம்பவங்கள்! அவையெல்லாம் இன்று மறைக்கப்பட்டும் வருகின்றன.

இவையெல்லாம் சிவலிங்கத்தின் மௌனத்துள் அடக்கப்படுகின்றன. மனைவி புனிதத்தின் குரல் கேட்டு சிவலிங்கத்தின் மௌனம் கலைந்தது. “என்னடியப்பா கோயிலுக் குப் போயிட்டு வந்திட்டியே பூசை முடிஞ்சுதே” மனைவியைப் பார்த்தார் சிவலிங்கம். “ஓமப்பா இன்றைக்குச் சரியான சனம் குஞ்சு குறுமனெல் லாம் கௌரி காப்பு எடுக்க வந்ததுகள் காலம் மாறிப் போச்சுதப்பா பத்து வயது பிள்ளைகளும் வந்து காப்புக் கட்டுதுகள் என்றாள் புனிதம்.

“அப்படியே காலம் மாறிப்போன சங்கதி உனக்கு இப்பதான் தெரியுதோ! புனிதம் எல்லாச் சமயமும் எங்களை நல்வழிக்குப் போகத்தான் வழிகாட்டுதுகள் ஆனால் நாங்கள் அல்லோ குறுக்கு வழிக்குப் போறம்.

இன்று கோயில்களும் விரதங்களும் வியாபாரமாகவும் வேடிக்கை விளையாட் டாகவும் மாறி விட்டுது ஒழுக்கந்தான் ஒழுங் கைப் படிப்பிக்குது ஒழுக்கம் இல்லை என்றால் ஒழுங்கு வராது எறும்புக் கூட்டத்திக்கு உள்ள ஒழுக்கம் எங்களுக்கு இல்லை. அதுகள் எவ்வ ளவு ஒழுங்காக ஒற்றுமையாக அமைதியாக ஊர்ந்து போகுது என்றதை நல்லா கவனிச்சுப் பார். ஒழுக்கம் ஒழுங்கு ஒற்றுமை அமைதி இவைகள் நம்மிடையே குலைந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று எம்மை முன் னமே உணர்ந்து வைத்திருந்த நம்முன்னோர்கள் சென்றார்கள் அங்காங்கே கோயில்களையும் அமைத்தார்கள் எல்லா மனிதரும் ஒரே குணம் குறிக்கோளுடன் இருப்பதில்லை அதே மாதிரி தெய்வங்களும் அதற்கேற்ற முறையில் கோயில் களும் அமைந்து விட்டுது. இறைவன் பரிபூரணன் ஆடு, மாடு, நாய், பூனை, கோழி, கொக்கு, அனைத்துக் குள்ளும் அவன் இருக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தெய்வம் ஒன்று தான் அவனை நேரடி யாகக் கண்டவர். ஒருவரும் இல்லை அவனுக்கு உருவம் இல்லை இயக்கங்கள் இயல்புகளால் வேறு வேறாய் இருந்தாலும் மின்சாரம் ஒன்று தானே! அகங்காரம் என்றும் மாயை நம்மை மூடி இருப்பதால் உண்மையை உணர்வு பூர்வமாக தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கு. அதிகமா னோர் வெறும் உலகத்தை மட்டும் பார்க்கிறார் கள் ஒரு சிலர் மாத்திரம் தான் உலகத்தைத் தன் உள்ளே வைத்துப்பார்க்கிறார்கள் வெளிப் பார்வை வேறு உள்பார்வை வேறு உள்ளே நுளைந்து பார்க்கிறவனுக்கு உண்மை விளங் கும். அவனுக்கு கொலை, களவு, கோபம் வராது பெருமை வராது அளவிற்கு மிஞ்சிய ஆசை வராது பயம் வராத அன்பு கருணை பணிவோடு எவன் உலாவருகிறானோ அவன் மூலமாகத் தான் இறைவன் தன்னை வெளிப்படுத்துகிறான். உலகத்தை வைத்து உருவத்தை வெளிப்படுத்தக் கூடாது. உருவத்தில் மாற்றம் இருக்கும் வேட தாரியாய் இருப்பவன் கபட தாரியய் இருக்க லாம் கோபக் காரன் போல் இருப்பவன் குண சாலியாய் இருக்கலாம். உள் உணர்வோடு பேசிக் கொண்டே போனார் சிவலிங்கம். சிவ லிங்கத்தின் பேச்சைக் கேட்கக் கேட்க புனிதத்தி ற்கு எரிச்சல் எரிச்சலாய் இருந் தது.

"இப்படியே விழல் கதை பேசிக் கொண்டு வேதாந்தியாய் வீட்டுக்குள் இருந்து கொள்ளுங்கோ வெளிக்காரியத்திற்கு நான் போய் முகம் குடுக்கிறன். எங்களுக்கு பொறுப் பாக ஒரு பிள்ளை இருக்கே அதின்ர வாழ்க்கை யைப் பற்றி கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்கிறி யள் இல்லையே! என்று அலுத்துக் கொண்டாள் புனிதம்.

நான் சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறன் உனக்குத்தான் சரியாச் சிந்திக்கத் தெரிய இல்லை புரோக்கர் மாரிட்டை எல்லாம் மகள் கீதாவின்ர சாதகத்தைக் குடுத்து வைத் திருக்கிறன். தெரிஞ்சவட்ட சொல்லிவைச் சிருக்கிறேன். அவசரப்படக்கூடாது எல்லாம் நல்ல மாதிரி நடக்கும் ஒன்றுக்கும் கவலைப் படாதே" "இப்படியே சொல்லிக் கொண்டு நீங்கள் இருங்கோ ஏலாக்காலத்திலே நான் கோயில் கோயிலாய் அலைஞ்சு கொண்டு திரியிறன்.

"புனிதம் நீயும் நானும் கலியணாம் செய்வம் என்று யாரும் நினைச்சவையோ ஏன் நானும் நீயுந்தான் நினைச்சோமோ எங்களுக்கு அவரவர் தாய் தகப்பன் தான் பேசி வந்த கலி யாணங்கள் சரிவந்தோ இல்லையே எங்கோ பிறந்தவன் நீ நான் எங்கோ வளர்ந்தவன் ஒருவரை ஒருவர் சந்தித்தோம் பார்த்தோம் சிரித்தோம் சேர்ந்தோம் பிள்ளைகளைப் பெற்றோம் வளர்த்தோம் ஐம்பது வருஷமாக பிரியாமல் வாழுறோம் எல்லாம் அவரவர் பிராப்தபடிதான் நடக்கும் முயற்சிக்கலாமே தவிர முடிவை நம்மால் தீர்மானிக்க முடியாது புனிதம்" என்றார். சிவலிங்கம்.

"எங்களின்ற காலம் போட்டுது பிள்ளை க்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தா என்று தானே கடவுளிட்ட கெஞ்சிக் கேட்கிறன். கண் கெட்ட கடவுள் கண்திறந்து பார்க்கிறன் இல்லையே பெரிய தொரு பெருமூச்சை விட்டாள் புனிதம்.

"காரியம் நிறைவேறினால் கடவுளே வாழ்த்துறதும் காரியம் தவறில்லை கடவுளைத் திட்டுவதும் நமக்கெல்லாம் இயல்பாகி விட்டுது. இன்றைய எல்லாம் தங்களுக்குள்ள ஏதாவது தேவையை நிவர்த்தி செய்ய வேணும் என்றதிற் குத்தான் போகினம்.

நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது. கடவுள் எங்கே இருக்கிறார் என்பதை கண்டுபிடிப்பதுதான் நீ கோயிலுக்குப் போய் சிலைக்கோ சின்னத்திற்கோ முன்னால் நின்று கொண்டு கைக்குவித்துக் கும்பிட்டு உன் தேவைகளைச் சொல்லி அழுகிறாய். இல்லை நீ ஆரை கும்பிடுகிறாய் உன்னைக் கும்பிடுகிறாய் ஆருக்கு தான் சொல்லுகிறாய் இப்படியான சங்கதி எல்லாம் இருக்கு இதை ஆர் சிந்தித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணருகினம் ஒருவரும் இல்லை என்ன செய்ய ஆருக்கு ஆர் உபதேசம் செய்வது என்று சிரித் தார் சிவலிங்கம்.

"உங்களோடு கதைச்சால் விசர்ப் பேச்சுப் பேசுவியள் எனக்கும் விசர்பிடித்துச் சிடும்" என்று சினப்பட்டுக் கொண்டே உள்ளே போனால் புனிதம். மௌனமாகச் சிவலிங்கம் வீதியைப் பார்க்க முற்பட்டபோது "ஐயா என்றகுரல் கேட்டது ஆரப்பா வாங்கோ! " என்று அவர் வாய் மூடுவதற்குள் எதிரே வந்து நின்றான் சீலன்.

சீலன் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் ஒரு கத்தோலிக்கன் உள்நாட்டுப் போரில் இடம் பெயர்வின் போது ஷெல் வீச்சுக்கு தன் மனைவி யைப் பறிகொடுத்து விட்டுத் தனிக் கட்டையாக மீள வந்து குடியமர்த்திருக்கிறான். நீண்ட காலம் தொட்டு சிவலிங்கம் குடும்பத் தோடு நெருங்கிப் பழகி வருபவன் அவன்.

"தம்பி வயல் நிலவரங்கள் எல்லாம் என்ன மாதிரி விளைச்சல் எப்படி? என்று விசாரித்தார் சிவலிங்கம். சென்ற போகம் நல்ல விளைச்சல் ஐயா ஒரு லட்சத்திற்கு மேல் லாபம் இந்தப் போகம் நல்லா நட்டப்படுத்திப் போட்டுது உங்களுக்கும் தெரியுந்தானே வெட்டுக்காலத் தில் விடாப் பிடியாக மழை பெய்து வெள்ளாமை எல்லாத் தையும் அழிச்சுப் போட்டுது

"ஓம் தம்பி ஓம் மாசி மாதத்தில் பனி தான் மோசமாய் பெய்யும் இப்படி கூறுகின்றார். மழை கொட்டினதை என்ர வயதுக்க நான் காண்டதே இல்லை நாட்டில நீதி நியாயம் நேர்மை இல்லை அதிகாரங்களும் ஆக்கி ரமிப்புக்களும் கொலை, கொள்ளை, பொய், பெருமை ஏமாற்றும் இவை எல்லாம் கூடிக் கொண்டு போவதால் தான் இயற்கை கோபம் கொண்டு எச்சரிக்கை செய்திருக்கு இதை எல்லாம் நாங்கள் எங்க கவனிக்கப் போறம் ஆனால் நீதி என்றைக்கும் அழியாது அது சட்டத்தால் மறைக்கப்படலாம் இன்றைய கால கட்டத்தைப் பார்த்தால் அதிகமான மனிதருக் கெல்லாம் ஐந்தறிவு மிருகத்தைவிட ஒரு அறிவு குறைவாகத் தான் எனக்குத் தெரியுது போலிக் குறைவாகத்தான் எனக்குத் தெரியுது போலிக் கௌரவந்தான் பணம் பதவி புகழ் என்றெல்லாம் ஆசைப்பட்டு அலைகிறார்கள் மனித நேயமே இல்லாதவர்களாக மாறி வருகிறார்கள் எது சரி எது பிழை என்று எவருக்கும் ஆராயத் தெரிவ தில்லை சிலர் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு அட்டகாசம் செய்கிறார்கள் அதால நீதி மறைக்கப்படுது "

"உதுகளை ஆர் ஐயா கேட்கப் போகினம்" என்று பேச்சை இடைமறித்து சீலன் "சரி தம்பி அது போட்டும் கீதாவைப் பற்றி நான் அன்றைக்கு உன்னோடு கதைச்ச விஷயம் என்ன மாதிரி என்று மகளின் திருமணப் பேச்சுக்கு வந்தார் சிவலிங்கம்.

"உங்கள் எல்லோருக்கும் விருப்பம் என்டால் சரி ஒரு நல்ல நாளில் ஆடம்பரம் ஆர வாரம் ஒன்றும் இல்லாமல் கலியாணத்தை நடத்துவோம் சரி தான்!"
சீலன் கிளம்பினான்
சிவலிங்கம் புனிதத்தைக் கூப்பிட்டு விடயத்தை சொன்னார்.

"அவன் வேதக்காரன் பொடியன் நாங்கள் சைவம் அவன் தாரம் இழந்தவன் ஊருக்கை எப்படி எல்லாமோ கதைக்குதுகள் என்று முணு முணுத்தாள் புனிதம் மடக்கதை கதைக்காதே புனிதம் எங்களின்ர துன்ப த்தை ஊரே சுமக்குது மனைவி செத்தவன் மறுமணம் செய்யக்கூடாதா? மகளின்ர வயதுக்கேற்ற மாப்பிள்ளை மதம் வேறயாய் என்ன? எங்களு க்கு ஒரு கடவுள் அவனுக்கு ஒரு கடவுளா? இப்போ காலம் மாறிக் கொண்டு போகு உந்த மூடநம்பிக்கைக ளைக்கை கழுவிப் போட்டு வெளிச்சத்திற்கு வா" புனிதத்தால் ஒன்றும் பேச முடிய வில்லை மௌனமாக நிற்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை
மீள் பிரசுரம்

உள்ளே கனன்று ...

இனிய. பெருமாள் கணேசன்
அதிபர்,
கிளி/பாரதிபுரம் மகா வித்தியாலயம்,
மலையாளபுரம்.

கிக்கிகீ ... ... கிக்கிகீ... .. ஆட்காட்டியின் அபயஒலி கேட்டு சடாரென தலையை நிமிர்த்தினான் முனுசாமி, வியப்போடு. "ம்... என்னா...? யாரையோ கண்டிரிச்சி போளுக்கு" அவனது மனம் கூற மெதுவாக வலதுகாலை எடுத்து தொட்டாவாடிப் பற்றையை மிதித்து மண்வெட்டியை ஒரு கையில் ஊன்றி சற்றுத் தொலைவில் கறையான் அரித்தும் அரிக்காமலும் பாட்டில் கிடந்த பொன்னாம் பெரிய தென்னங்குற்றியில் ஏறி, அந்த வளவுக்கு வரும் ஒழுங்கையை நோக்கினான்.

ங்... ஒருத்திரியு கானோ ஆக்காட்டி... கத்திச்சி! ஓரம் கிழிந்தும். கனநாளாய் தோய்க்காமலும் தன் தலையில் சுற்றியிருந்த துவாயால், முகத்தில் முத்து முத்தாக கொப்பளித்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பாதையை மீண்டும் பார்த்தான் முனுசாமி. அவன் பார்க்குந் திசையில் பூவரசு செழித்து கன்னங்கரேலென்று அடர்த்தியாக வேலி நீட்டுக்கும் இருந்தது. மரத்தைப்பார்த்துக்கொண்டிருந்த முனுசாமி. நேரத்தை எண்ணினான். மதியம் பதினொரு மணிக்குக் கிட்ட இருக்குமென அவனது மனஞ் சொல்ல, ஏறிநின்ற குற்றியில் அமர்ந்தான் அவன்.

லக்ஸ்ப்பிறேப்பையில் சுற்றிவைத்திருந்த வெற்றிலையை, கையை உள்ளே விட்டு எடுத்து விரித்தான். நடுவிலிருந்த சுண்ணாம்புக் களியை ஒரு வெற்றிலையின் பின்பக்கத்தில் தடவி, பையுள் இருந்த தூள்ப்பாக்கையும் கோலி வெற்றிலையில் வைத்து மடித்தான்.

கீக்கீ... கீக்கீ... ஆட்காட்டி மீண்டும் அலறியது,... வானளவப் பறந்தவாறே சிறிது நேரத்தில் 'டொக்... டொக்' என்று அயல் பற்றைக்கு அப்பால் யாரோ பச்சைமரம் ஒன்றை கோடரியால் கொத்துவது அவனது காதில் விழுந்தது. முனுசாமி ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டுக் கொண்டான். அவன் நிற்பது இவனுக்கோ தெரியவில்லை. மரத்தைவிட்டு நிலத்தில் காலை வைத்து மெதுவாக இறங்கி மீண்டும் மண்வெட்டியால் தொட்டாவாடிப் பற்றையை கொத்தினான். தொட்டாவாடி, நாயுண்ணி, சூரை, நாயுருவி அடர்ந்திருந்தது. ஒரு அடிக்கு அப்பால் எதுவுமே தெரியவில்லை.

முனுசாமிக்கு கிணற்றடிக்குச் செல்வதே இலக்காகவிருந்தது. ஒரு குறிப்பில் வேகமாக மண்வெட்டியைப் போட்டான். "இன்னிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியு... கெனத்த கண்டுபிடிக்கிறது தான்" நேற்றும் வேலை செய்து முந்தி வீடிருந்த பகுதியெல்லாம் துப்பரவு செய்துவிட்டான். இன்றும் வேலை செய்து கொண்டே இருக்கிறான். வயிறு புகைத்தது.

அந்தப்பகுதி எங்கும் ஆளரவமின்றி நிசப்தமாக இருந்தது. ஒரு நாயின் குரைப்போ, ஒரு மனிதனின் குரலோ அவனது காதில் இன்னமும் விழவில்லை. "ஒரு அஞ்சி வருஷத் தில இம் புட்டுக்காடப்போச்சே" அவனுக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது. அவனது மண்வெட்டி சளார் என ஒரு கல்லில் பட்டது. நெருப்புப்பொறி பறந்தது. "ம்... கெனத்துக்கு கிட்ட கெடந்த கல்லுதா...ன் கெனோ ஒரு பத்து பாகத்தில இருக்கு... அப்பாடா" மனதுக்கு திருப்தியாக இருந்தது.

1980ஆம் ஆண்டு கட்டிய கிணறு அது. அவன் தன்னையறியாமலேயே நிசாப்தமாகி நின்று போனான். 1977ம் ஆண்டு இனக் கலவரத்தில் வந்தவன் முனசாமி. நான்குபிள்ளைகளின் தகப்பன் இரண்டு பெண்பிள்ளை, இரண்டு ஆண் பிள்ளைகள், கடைசிப்பையன் கைக் குழந்தையாய் இருக்கும் போது உடுத்த உடுப்போடு வந்து சேர்ந்தவன் முனுசாமி, மனைவி மாரியாயி டாலூட்டும் தாய், ஈவிரக்கமற்ற அந்த இனக்கலவரம் அவர்களை காலியிலுள்ள நாகா வத்தையிலிருந்து இங்கு வரப்பண்ணியது.

நாகாவத்தை அவன் பிறந்த அழகான தோட்டம். தேயிலையும், றபரும் உண்டு மனியோ மழையோ கடுமையாகத்தான் காத அழகான மலை முகட்டைக் கொண்டபகுதி. அவன் அங்குள்ள மேட்டு லயத்திலுள்ள ஆறாவது காம்பறாவில் பிறந்தான். அது சிங்கள முதலாளிக்குச் சொந்தமானதாக இருந்தது. சின்னப் பையனாக அவனிருந்தபோது லயத்துத் திண்ணையில் மாடாச்சாமியிடம் அரிவரிபடித்தவன் முனசாமி. அவன் சிறுவனாக இருந்தபோது தோட்டத்துப் பிள்ளைகள் படிக்கவென்று ஒரு சிறு பள்ளிக்கூடங்கூட இருக்கவில்லை.

தோட்டத்தில் கொஞ்சம் எழுத வாசிக்கக்கூடியவர்களைக்கொண்டு அங்கிருந்த சிறார்கள் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டார்கள்.

தான் குழந்தையாக இருந்தவேளை தனது தாய், தன்னை பிள்ளைமடுவத்தில் விட்டுச் சென்றது. சற்று வளர்ந்தபின் தன்னைத்தனியே லயத்துப் பிள்ளைகளோடு விளையாடிக் காலங் கழித்ததையும் அவன் நினைத்தான்.

"ஐயோ... சங்கூதப்போ ராங்க எந்திரீங்க நா... வேலைக்கு போறதில்லியா... றொட்டி சுட்டு வைச்சிருக்கே... எடுத்துசாப்பிடுங்க...?"

ஒவ்வொரு தாயும் அதிகாலையில் இப்படித்தான் பதட்டப்படுவாள். லயத்தில் "சின்னாத்தா பாட்டியோட இருய்யா" வறக்கட்டுக்கு போய் விழுந்திராத சாமி..." சின்னாத்தாக் கிழவியோடு அவன் மட்டுமல்ல மற்றச் சிறார்களும் இருப்பார்கள்.

அவன்படிக்க பாடசாலை இல்லாது இளமைக்காலம் கருகி அழிந்தது. மதியம் ஒரு மணித்தியாலம் சாப்பிடவரும் பெற்றோரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் எல்லாக் குழந்தைகளும் குறுக்குப் பாதையில் பாத்திருப்பர் முனு சாமிக்கு பத்துவயதானபோது தாயுடனும் தகப்பனுடனும் கொந்தரப்பு" வெட்ட சின்னச் "சொறண்டி" யுங்கொண்டு மலைக்குப் போவான். அது அவனது தொழிலுக்கான முன் பயிற்சியாயமைந்தது.

முனுசாமிக்கு பத்தொன்பது வயதில் அத்தை மகளான மாரியாயியை கலியாணம் செய்து வைத்தார்கள். "அகம்படியர்" எனத் தம்மை கூறிக்கொண்ட அவனது பெற்றோர் மற்றய சாதிக்காரார்களை தீண்டத் தகாதவர்களாக வைத்திருந்தனர். முனசாமியின் தந்தை சாதிகுறைஞ்ச சுக்குரன். உயர் சாதிப் பெண்ணான ஈசுவரியை கேலி பண்ணியதுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை வீடு பூந்து அடித்தவர். சாதி குறைந் தவர்களை திண்ணையில் வைத்துத்தான் கதைப் பார்கள். சிரட்டையில் தேநீர் கொடுப்பாள் முனு சாமி யின் தாய் என அவன் சொல்லுவதுண்டு.

என்றாலும் அந்த இனிமையான நாட் கள் நினைக்க, நினைக்க சுகமாக இருந்தது அவனுக்கு கலியாணத்துக்கு முதல் "தள்கஸ்வல" தோட்டத்தில் இருந்த மாமன் மகள்... மாரியாயி யைப்பார்க்க பின்னேரபஸ் எடுத்துப் போவான் போகும் போது பூள்தோசி கிதுள் பெனி எல்லப்ப போன்ற சிங்களவர்களின் பலகாரங்களை வாங் கிக்கொண்டுதான் போவான். அவனின் வரவுக்கு காத்திருப்பாள் மாரியாயி. அவளும் ஞாயிற்றுக் கிழமை என்றால் விசேடமான சாப்பாடுகள் செய்து வைப்பாள். தாவணிப் பெண்ணாக இருந்த மாரியாயி தோட்டத்தில் வேலைக்குப் போவதில்லை. ஒரேயொரு பிள்ளை என்பதால் தகப்பன் கந்தையா அவளைப் செல்லமாக வைத்திருந்தார்.

"இன்னிக்கி நாயித்திக்கெலம எப்படியு மச்சா வருவாரு" யெம்மோ... யெம்மா... வரிக் காங் ஒன்னு புடுங்குங்க கறிவெப்பம்" தாயிடம் கூறுவாள்.

தனது வருங்கால கணவனை உபசரிக்க எப்போதும் விழிப்பாகவே இருப்பாள், பெற்றோ ரும் அவன் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பர்.

முனசாமியின் இளமைக்காலம், அவனது கண்ணில் நிழலாடியது "ம் யாருக்குத் தான் இளமை கசக்கும். வறும எவ்வளவு தான் இருந்தாலும் பயங்கரமானதா இருந்தாலும் இளமை இனிமையானதுதான்.

கலியாணம் நடந்து மூத்தவன் ராஜேஸ் பிறந்த பிறகு முனசாமியின் தகப்பன் மாயழகு பார்த்துவந்த கங்காணி வேலை முனுசாமிக்குக் கிடைத்தது. கொஞ்சநாளில் மாயழகுசெத்து விட்டார். அன்று அந்த மேட்டுலயம், பணியலயம், நடுலயம் எல்லாமே சோகத்தில் மூழ்கி விட்டது.

மாயழகு அந்தத் தோட்டத்தில் ஏறத் தாழ ஐம்பது வருடம் வாழ்ந்தவர். தோட்டத்து துரை "சொவிசா" வந்து அஞ்சலி செய்துவிட்டுப் போனார் அயலில் சிங்களக் கிராமத்து மக்கள் அங்கு நிறைந்துவிட்டார்கள். சிலர் அழுதே விட்டார்கள்.

"கங்காணம, கங்காணம..." என்று வானை முட்டும் அழுகை ஒலி அனைவரையும் ஆச்சரியப்படவே வைத்தது. நீண்டகாலம் அந்த ஊரில் வாழ்ந்தபடியால் மாயழகு அழகாக சிங்களம் பேசுவார், சிங்களவர்களின் நல்லது கெட்டதுகளில் பங்கெடுப்பார். அதனால் உறவை வளர்த்து வைத்திருந்தார்.

பற்றைக்குள் இருந்த கட்டெறும்பு ஒன்று சுரீர் என கடித்துவிட முனுசாமி தன் நிலைக்கு வருகிறான். கண்சளிரண்டும் கண்ணீர் ஓடிச் சிவந்திருந்தன. அவனால் தொடர்ந்தும் வேலை செய்ய முடியவில்லை. அருகே நின்ற வேம்பின் நிழல் மனதுக்கும், உடலுக்கும் இதமாக இருந் தது. அவன் வேப்பமரத்தடிக்குச் சென்று அமர்ந்து கொண்டு 'ரியுப்பில்' வைத்திருந்த தண்ணீரை மள, மளவென்று பருகி தனது துவாயை தரை யில் விரித்துப் படுத்துக் கொண்டான்.

இதமாக காற்றுவந்து அவனை வருடிச் செல்ல வேப்பமரத்தின் இலைகள் காற்றுக்கு ஆடின. கண்களை மூடிக்கொண்டான் முனசாமி.

லொக்கு மாத்தியா கடயில் இலயாப்பம் உண்டது, கொண்ட கெவுங் உண்டது. வெரலிக் காய் மரத்தடியில் பொறுக்கிச் சுவைத்தது. ஒவ் வொரு ஞாயிறும் "வந்துரம்பை"யில் சந்தைக் குப் போகும் போது மனைவியுடன் குதூகல மாகப் போய் அப்புகாமி கடையில் தேநீர் குடிக் கும்போது "களுதொதல்" உண்டது, எல்லா வற்றி லும் எருமைத்தயிர் முட்டிகளில் வேண்டி வருவது நினைக்க வாயூறிவிட்டது அவனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் ஆசைக்காக திருமணம் முடித்த புதிதில் றம்புட்டான், எள்ளுப்பாகு இன்னும் பல வற்றை அவளுக்கு ஆகுதியாக்கியதென்றே அவன் எண்ணி மகிழ்ந்தான்.

நெல்லு விளைந்தவுடன் ஒரு "உமலில்" பச்சை அரிசி கொண்டு சிங்களப் பெண்கள் வய துக்கு வருவார்கள். அதை வேண்டுவது, அவர் களுக்கு அரிசி மடுவத்தில் வழங்கப்படும் மாசி செமன்ரின், பம்பாய் வெங்காயம் என்பவற்றை கொடுப்பது. அவனது நினைவுகளைக் கவித் திருந்தது. கடைக் கண்களில் வழிந்தோடிய நீர் காய்ந்திருந்தது. "ம் இனி அந்தக் காலம் வருமா... அந்த அழகான தோட்டக்காட்டில, அட்டை ஒருபுறம் கடித்து ரத்தத்தை உறிஞ்சிச்சி, பெரகு தொறமாரு குடிச்சாங்க. இருந்தாலும் எனக்கு அது சுகமாத்தான் இருக்கு இப்ப நெனைக்க யிலயும்"

அவன் நிதானமாகவே சிந்தித்தான்.

"மண்ணாச பிடிச்ச சிங்களவே நம்ம தமிழ்சனத்த ஒப்பந்தம் ஒப்பந்தம், பெரசா உறுமன்னு ஏமாத்தி ஈந்தியாவுக்கு அனுப்பிட் டான் இல்லாட்டி எம்புட்டுச்சனோ இன்னிக்கு இருந்திருக்கும்... எலங்கேல"

"எங்கப்பா கட்டின மாரியம்மன் கோயில் அப்பா, கங்காணியாய் இருக்கயில வெள்ளில பூச நடக்கும். பொங்கச்சோறு தருவாரு பொன் னையா பூசாரி, அடிப்பட்டுச் சாப்பிடுவோ பொங்க சோறு, லயத்தில் உள்ள பத்துக் காம்புறாவுக்கும், அப்பா பொங்கசோறு அனுப்பு வாரு. எங்கவீட்டு பெரிய பசுமாட்டில பால் எடுத்து மேசை மேல பெரிய பேசனில வெச்சி அளந்து குடும்பாரு."

அவனது மூக்கு அடைத்தது. ஒருக்களித் துப்படுத்தான் முனுசாமி, முதுகு சில்லென்று குளிர்ந்தது வியர்வையில். முனுசாமிக்கு இப்ப ஐம்மத்தி ஆறு வயதாகிவிட்டது. ஏறத்தாழ ஐம்பது வருடங்கள் முன்தொட்டு அங்கிருந்து புறப்படும்வரை, அவனது நினைவுத்திரையில் சஞ்சரித்தன. அவை சுகமாகவும் சுமையாகவும் மாறி மாறி அவனைத் திணற வைத்தது.

"இம்புட்டு வயது போயும் ஏந்தல நறைக் கல ஏங்க அம்மா தந்த சாப்பாடு–அவங்க வூட்டு வளப்பு. தலயில நா அந்தக் காலத்தில் சவுக் காரோ பூசுறதே இல்ல இப்ப தா...ன் யாரு நமக்கு அரைச்சி குளிப்பாட்ட"? ஒரு துளிகண்ணீர் நிலத்தில் விழுந்து பட்டெனக் காய்ந்தது. தாயின் நினைவுகளால், நெஞ்சம் கனத்தது.

"ம். சரி போவட்டு எனக்கு மட்டுமா எளம ஒவ்வொருத்தனு எந்த நிமிஷமும் இள மையை தொலைச்சுக்கிட்டே தாங் இருக்கிறான் கடவுள் அப்புடி படைச்சிபுட்டான் என்னாத்தா இனிக்காணப் போறம்? நடக்கிறத பாப்போம். யேற் ஓடம் பிருந்த மாதிரி அப்ப...! இப்ப மெலிஞ்சிட்டே நாலு புள்ளகி தவப்பேல்லியா, அதுகளயும் அங்கொண்ணு இங்கொண்ணா வுட்டுப் புட்டே... ஆனா ஒரு புள்ளயூ வீனாப் போவல இதுவரைக்கும்... ம்...ம்"

அவன் தனக்குள் ஆறுதலை வருவித்துக் கொண்டான். கிளிநொச்சிக்கு வந்து அகதியாய் அடைந்தபோது இங்கு இருந்த அரச அதிகாரிகள் அவர்களுக்கு இந்தக் காட்டைக் காட்டிவிட்டனர். "கனகபுரம், வடக்கில் இருக்கு... பாதையைக் கடந்து தெற்குப் பக்கமா காடு அதில உங்களுக்கு காணி தாறதா இருக்கிறம்" ஒரு அரச உத்தி யோகத்தர் கூறியது மனதில் பளிச்சிட்டது. அதற்குப்பிறகு அவர் சொன்னபடி இந்தப்பகுதி தன்னைப்போன்ற பலருக்கும் காட்டப்பட்டதை அறிந்தான்.

முன்னூறு பேரளவில் உதயநகர் கிரா மத்தில் காடுவெட்டிக் குடியேறியிருந்தனர் என் பது இப்போதும் ஆச்சரியமாக இருந்தது அவ னுக்கு; "இருபது வருஷத்தக் கடந்துகிட்டு இருக்கு இன்னிக்கு ஆனந்தபுரம், உதய நகர், கந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம், கிருஷ்ணபுரம் அப்பாடா...” என அவன் பெருமூச்சொன்றை வெளியேற்றினான். அயல் கிராமங்களை நினைத்து “காடு வெட்டி, கட்ட புடுங்கி, காடு கொழுத்தி, பயிர்வச்சி வேலியடைச்சி, பாடு பட்டாங்க எங்களோட வந்தவுங்க”

“எல்லாம் தனக்கு தனக்குன்னு ஒரு கையகலம் நிலம் சொந்தமா வேணுமுன்னு தானே! இந்த உலக உருண்டையில் தத்தமக்கு சொந்தமாக ஒரு அடி நிலம் தானும் அவர்களுக்கு அன்று இருக்கவில்லை அந்தத்தாகத்தை இந்த அகதிப்பயணம் ஈடேற்றியது.

முனுசாமிக்கு பிரவுடன் பண்ட்வந்த வேளை கிணறுவெட்டி விடவேண்டுமென்று ஏழாயிரத்தையும் அதில் முடக்கினான்.

இம்புட்டு நாலும், கோழிப்பண்ணை செல்லத்துரை வீட்டு கெனத்துத் தண்ணி தான் குடிச்சம் ஆனா... அவுங்க வெச்ச சட்ட திட்டங்கள் எங்களுக்கு சகிக்கமுடியல”

செல்லத்துரை சங்கக்கடை மனேச்சராக வேலை செய்கிறார். வடலியடைப்பு பண்டத்தரிப் பைச்சேர்ந்தவர், அதிகாலை வெறுங் குடத்தோடு போக ஏலாது வருடம் பிறந்த அன்று தண்ணி அள்ள ஏலாது மாலையானா தண்ணி அள்ளவிட மாட்டா நல்லம்மா; அவரின் மனைவி இந்த நிலையைமாற்ற முனசாமி முடிவெடுத்தான்.

மனைவியின் நகைகள் அடைவு கடையில்தான் எனினும் மாரியாயி, கிணறு வெட்ட அவன் எடுத்த முடிவுக்கு மறுப்பு கூறவே இல்லை. நினைவுகள் நின்றுபோக, தனது மீசையை தடவிவிட்டுக் கொண்டான் முனுசாமி. ஒரு கிழமையாக சவரம் செய்யாத அவனது தாடியை கைகள் வருடியது.

காணி துப்பரவு செய்யவந்த முனசாமிக்கு இந்த மூன்று நான்கு நாளாய் சாப்பாடு, தேனீர் நேரத்துக்கு கிடைக்கவில்லை.

முனுசபாமி உயரமான மனிதன். மெல்லிய உடல் வாகு. தளர்வில்லாத நடை. கறுப்போ சிவப்போ அற்ற பொது நிறம். அழகான நீண்ட மூக்கு. கரிய கண்விழிகளும் அடர்ந்த புருவமும் படர்ந்த நெற்றியும். சொண்டு என்னேரமும் சிவந்திருக்க வெற்றிலை குதப்பிய வாயும் அவனை ஒரு அழகனாகவே காட்டியது.

வேலை செய்து செய்தே முறுக்கேறியிருந்த உடலும் கைகளும் தோள்களும் உருக்குப்போல உறுதியைக் காட்டின. தன் திருமேனியின் அழகை மாரியாயிடம் காட்டி அவளை வெக்கப்பட வைப்பதும் முனுசாமிக்கு விருப்பமான செயல்.

“போங்க நீங்க... பெரிய பயிலுவாந்தா...ன்” அவள் வெட்கத்துடன் குணட்டுவாள். பிள்ளைகள் இல்லாத நேரம் பார்த்து அவளது கன்னங்களில் ஒரு முத்தம் கொடுப்பான் முனுசாமி அவனோடு அரை நூற்றாண்டுகள் வாழ்ந்து கொண்டிருந்தவள் என்பதால் அவன் நன்றி தெரிவிப்பதாய் அது. அவனது மூத்த மகன் ராஜேஸ் தகப்பன் முனசாமியைப் போலவே தோற்றமுடையவன்.

“ம் இந்த கெனத்த வெட்டுற நேரோ... ஏம் பெஞ்சாதி எப்புடியெல்லா கஷ்ரப்பட்டிருப்பா “லோங்கிஸ்” போட்டுக்கிட்டு ஆம்பலமாரி கெனத்துள்ளுக்கு எறங்கி மங்கு... மங் குன்னு வெட்டித் தருவா நானூ...ங் குட்டிராஜேஸ் பயலும் தான் மண்ண அள்ளிக்கொட்டி தண்ணீ கண்டோ. அன்னிக்கு எங்க குடும்ப மட்டுமில்ல எல்லா அடுத்த காணி கார குடும்பங்களு சந்தோசப்பட்டிச்சி”

மாரியாயின் மிடுக்கும் துணிச்சலும் அக்கிராமத்துக்கு ஒரு முன் மாதிரியாயமைந்தது. பலருக்கு அறிவுரை கூறி வழிப்படுத்தி இருக்கிறார்கள். வறுமை அவர்களை வாட்டிய காலம் அவனது கண்ணில் நிழலாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நினைவுகள் அவனைவிட்டுப் போவ தாகவே இல்லை. "உதயநகரில் முப்பது வீட்டுத் திட்டம்னு அரசாங்க முப்பதுவீடு கட்டி சனத்துக்கு குடுத்தநேரம் அந்தக்காணிக்கு சொந் தக்காரங்களுக்கு கட்டித்தாறதச் சொல்லி அவுங்கள அப்புறப்படுத்தி வீடு கட்டுனதும் வேற தாவுட்டுக் கட்சிகாரங்களுக்கு எம்பி வீடுகள கொடுத்துட்டாரு காணியும் போய்ச்சி, பாடு பட்டது வீணாபோச்சி. அப்ப அவுஙட்டு ஆட்சி தானே"

"எம்பதாம் ஆண்டு திரிப்பியூம் அதே மாதிரி நாப்பது வீட்டு திட்டமுன்னு காணி பறிக்க பொறப்புட்டாரு. ஜனம் விடல ஜனோ எம்பிக்கீ சாணி கரைச்சி அடிச்சி வெரட்டி விட்டிருச். இப்பதா எம்பத்திமூனுக்கு பெரவுதான் நிம்ம தியா சொதந்திரமா இருக்கிறோம்.

"அகதீன்னு தென் எலங்கயில இருந்து வந்தவேல்லா நாடுகேட்டு போறாடுறன். இந்தப் போராட்ட யந்திரம் எங்கள் உள்வாங்கீரிச்சி, அடைஞ்சிகெடந்த வீரத்த இந்தக்காலம் தட்டி விட்டிருக்கு அங்கிட்டு இருந்த வந்தாலும் இந்த மண் எங்களுக்கு வாழ்க்கய குடுத்திரிச்சி. மானோ மரியாதைக்காக வீரம் பொறந்திரிச்சி. இதுதான் எங்களுட்டு தாய் நிலமா மாரீருச்சி"

"மாரீரிச்சி" என தன்னை அறியாமலே வாய் விட்டுக் கத்தினான் முனசாமி. அவனது கரங்கள் முறுக்கேறின. கால்கள் பதறியது. தன் கரங்களின் வலிமையை அவன் உணர்ந்தான் அவனது மூக்கில் பிறந்த பெருமூச்சொன்று காற்றில் கரைந்தது.

குயிலின் இனிய கூவல் அந்த இடத்தைக் கவித்தது. அவனது காதுகளில் அக்குயில் ஓசை இனித்தது. சலனமற்ற நிர்மலமான ஒரு பொழு தாக அது அவனை உறைய வைத்தது. தொடர்ந்து முனசாமி பற்றைகளை விறுவிறென துவம்சம் செய்தான்.

வானத்தில் பொமர் ஒன்று இரைந்தது. இவன் யாருடைய உயிரைக்குடிக்க போகிறானோ என்று கவலையோடு.

"மாரித்தாயே யாரும் அகப்படக் கூடாது" என்று தனக்குள் வேண்டிக் கொண்டான்.

ஊசியால் குத்தப்பட்டிருந்த செருப்பு அறுந்துவிட்டது. அதனைச் சரி செய்தான் முனுசாமி.

அந்தநேரம் கிளிநொச்சி ஒரு தனி மாவட்டமாய் இருக்கவில்லை. அப்போது திரு நகர், ஜெயந்திநகர், கோழிப்பண்ணை என்பன இடைக்கிடை சனம் வசித்த குடியேற் றங்கள்.

உதயநகர்க் காட்டை இந்த அகதிகளுக் குக் கொடுக்கக்கூடாதென கொலனிக்காரர் களான பண்ணைவாசிகள் புறுபுறுத்தனர். எனி னும் காடுவெட்டப்பட்டது.

"இங்கவா சிவராசா இப்ப அவங் களுக்கு காணி குடுக்கிறதால எங்களுக்கு நட்டமே இல்ல பாதுகாப்புதானே"

"எங்களுக்கெல்லே ரவுனுக்கு காணி யில்லாமல் போப்போகுது. ஒருகாலத்தில் கரைச்சி, பட்டினமாகேக்கை... நாங்கள் இதுகளை விட ஏலுமே தருமு'?

"இஞ்சேர் சிவராசாவிட இப்ப பண் ணைக்க, கொலனிகாணீக்க எத்தினை தென்னை நிக்கிதுசொல்ல?

'பத்துப்பிள்ளை நிக்குது"

"எத்தனை வெச்ச நீ சொல்லு"

ஐம்பத்திஏழு வெச்சனான் நாப்பத்தேழு பிள்ளையை யானை அடிச்சிப்போட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம் அதுக்குத்தான் இப்ப இவங்களுக்கு காணி குடுத்திட்டா எங்களுக்கு யானை, பண்டித் தொல்லை இராது. அதுமட்டுமல்ல எங்கட மிள காத் தோட்டத்தில கூலிக்கும் ஆக்கள் கிடைக் கும்... இ... இ... இ..."

"பாத்தியா ஒருகல்லில இரண்டு மாங்கா"

அவர்கள் கோழிப்பண்ணை வாசிகள் கள்ளுத் தவறணை வாசிகள் கள்ளுத் தவணை யில் அவர்கள் மனம்விட்டுக் கதைத்ததைக் கேட்டுக்கொண்டிருந்ததாக வீரையா முனச் சாமிக்குச் சொன்ன ஞாபகம்.

"சரி என்னாத்த கொற்யப் போறம். இந்த தேகம் இருக்குவரை எலங்க மண்ணுக்குன்ன ஆண்டவே எழுதிட்டான்"

முனுசாமி தான் அன்று அங்கலாய்த் ததை நினைத்துப் பார்த்தான். அன்று இவர்களை மாற்றானாகப் பார்த்த சேவியர், சண்முகம், கன கேந்திரம் ஆகியோரின் குடும்பங்கள் இன்று இந்த மண்ணில் இல்லை.

சிவராசாவின் குடும்பம் சிவராசாவை முதமையில் தனியே விட்டுவிட்டு ஜேர்மனிக்குப் போனபின் சிவராசா தட்டத்தனியே வாழ்ந்து முடித்ததும்; அனாதையாகச் செத்ததும், துனுசாமியும் அயலவர்களும் மரணச்சடங்கை நடாத்திவைத்ததும் அவனது எண்ணத்தில் வந்து போயிற்று.

முனுசாமிக்குத் தன்னையறியாம லேயே உற்சாகம் பிறந்தது. வெயிலின் கொடு மையையும் பொருட்படுத்தாமல் மண்வெட் டியை பற்றைமீது மூர்க்கமாக பாச்சினான். கிணற்றுப் பற்றையை துப்பரவு செய்யாமல் இன்று சாப்பிடுவதில்லை என கங்கணங்கட்டிக் கொண்டு வெட்டி எறிந்தான் பற்றைகளை!

ஆனையிறவுப் போரில் மாவீரனான தன் மகனின் முகம் அவனுள் புகுந்து கண்கள் நிறைந்ததுவிட்டது. பற்றைகள் எங்கும் அவனது முகம் அவன் கால்பதித்து விளையாடிய காணி இதுவென்று மனம் அழுதது. வரிப்புலியுடையும். வாகனம் ஓட்டும் பாணியும் முனுசாமிக்கு குதூ கலத்தைத் தந்தவேளை அவனது வீர மரணம் அவனை துயரக்கடலில் தள்ளிவிட்டது. "அப்பா இந்தப் பூமி மனிதர்கள் எல்லோருக்கும் சொந்தம்" பகுதி பகுதியாக குத்தகைக்கு எடுத் துக்கொண்டு இனங்கள் அடிபடுகுது. தவிர்க்க முடியாதபடி எங்கட இயக்கமும் போரிடுகுது. இது சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் மீது பூசப்பட்ட போர்... உங்களை, நீங்கள் பிறந்த 'குளுகாகந்தை' தோட்டத்தில் இருக்கவிடாமல் இங்கு வெறுங்கையோடு அனுப்பினதும், அதால தான் அதுக்கு எதிரா போராட, இந்த மண்ணில தலை நிமிர்ந்து எங்கட சந்ததிவாழ, நான் போராடப் போனேன்"

கடைசியாக மகன் திலகன் வீட்டுக்கு வந்தபோது கூறியவை அவை. அது முனசாமி யின் காதில் றீங்காரமிட்டது. இங்கு முனசாமி யின் குடும்பம் அகதியாக வந்தபோது மாரியாயி அயலவரிடம் கூலிக்குச் செல்ல, முனுசாமி, இந்தக் காணியை களனியாக்கினான்.

தென்னையும், வாழையும், பலாவும், பூமரங்களும் நாலு வருடத்தில் அவனுக்கு மகிழ் வளித்தன.

அது அரிவு வெட்டுக்காலம். மூன்றாம் வாய்க்கால் ராம நாதன் கமத்தில், கூலிக்கு உழைத்து மிகவும் கருகலில் தான் மாரியாயி வீட்டுக்கு வருவாள். அப்படி வந்த நாளில் ஒரு நாள் மாரியாயியை வெகு நேரமாகக் காண வில்லை என்று முனசாமி அயலவரின் உதவி யுடன் தேடிச் சென்றபோது, வழியில் அவளது பை சிதறிக்கிடந்தது. அதற்குள் குழந்தைக்கு ஒரு லெக்ரோஜன் மாப்பெட்டி, அரிசி, மரக்கறி என்பன கொட்டிக்கிடந்தன. அவளது சேலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு வீதியோரத்தில் கிழிந்து தொங்கியது அருகிலுள்ள பற்றைக்குள் அவள் கிடந்தாள். வாயில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. முனு சாமி கட்டியணைத்துக் கதறினான். வைத்திய சாலையில் அவள் பேசவில்லை. கைகளால் தன் நான்கு பிள்ளைகள் என சைகை காட்டினாள், அவளது கதை முடிந்தது. கைக்குழந்தைக்குப் பாலூட்ட ஓடோடிவந்த அவளை அலியண் யாலை புகையிரத வீதிக்கருகில் வைத்து தாக்கி ஏறிந்துவிட்டது.

அன்றிலிருந்து மிகக் கஷ்ரப்பட்டான் முனுசாமி, தன் செல்வங்கள் நான்கையும் அவன் நம்பிக்கையோடு வளர்த்தான். 1996இல் இலங்கை இராணுவம் கிளிநொச்சி மீதான படை யெடுப்பை மேற்கொண்டது. அன்று இடம்பெயர் ந்து அம்பலப் பெருமாள் குளத்தில் குடிலமைத் தான் முனுசாமி மீள்குடியமர்வுக்காக தன் காணி யைத் துப்பரவு செய்ய இந்தக்கிழமை முனுசாமி, தன் பிள்ளைகளிடம் விடைபெற்று காணியில் வேலையை ஆரம்பித்திருந்தான்.

அவனையறியாமலே அவனுக்குள் ஒரு சம்பவம் உறுத்திக்கொண்டே இருந்தது. அந்த உறுத்தலைக்களைய முடியாது தத்தளித்தான் முனசாமி. இத்தனை நினைவு விரிப்புக்குப் பின் னால் அது மறைந்து இருந்தது.

அவசரமாக இந்தக் காணியை ஏன் துப்பரவு செய்யவந்தான் முனுசாமி.

“இந்த ஒரு ஏக்கர் நெலத்தயு டவுன மைக்க எடுத்திட போறாங்களே அன்னிக்கி கூட்டத்தில கதைச்சாங்க, ஒரு கையளவு நெலங் கூட இல்லாம நான் சாகப் போறேன் எம் புள் ளைங்களுக்கு ஏம்புட்டுன்னு என்னா இருக்கு”

அவனது மனச்சாட்சி ஓலமிட்டது. கண் கள் பனிந்தன. அவனது மனம் களைத்துப் போனது. ஒரு கணம் நிமிர்ந்து தூரத்தில் தெரிந்த கோயிலை நோக்கினான், செடிகள் மண்டிக்கிடந்தது அந்தக் கோயில் மேடு.

“இல்ல இந்த நிலத்தை நான் விடவே ஏலாது எங்கிட்ட யாரும் பறிக்கவராதீங்க... இது எம் பெண்சாதி பாடுபட்ட சொத்து, அவ வெட்டுன கெனம் அவ வெச்சபெலா மரோ...அவ வெச்ச ஒரு தென்னையும் இல்லியே” மண்வெட்டியை எறிந்தான். அருகில் நின்றபாலை மரத்தைக் கட்டிப்பிடித்து அழுதான் முனுசாமி.

ஏதொ நினைவில் வர தலையை நிமிர்த்தினான் முனுசாமி. தன் இளைய மகன் இன்று வருவான் வீட்டுச் சாப்பாட்டோடு... அவன் நினைத்தான்.

முகம் வீங்கி இருந்தது... மூக்கு அடைத் திருந்தது. பசி வயிற்றைப் பிறாண்டியது, தாகம்.

“அப்பா... அப்போ...” முனுசாமி காது களைக் கூர்மையாக்கினான். தன் மகன் தான் எனத் தீர்மானித்தான்.

“யாரு... கண்ணா... கண்ணாவா” என்ற குரலோடு ஒழுங்கையை எட்டிப்பார்க்க ஒரு அடி இரண்டு அடி எடுத்து பத்தை மீது வைத்தான்.

டுமீல்... பேரதிர்வோடு மிதிவெடி யொன்று வெடித்தது...

ஐயோ... ஐ மகன்... கண்ணா... ஓடி... வா...

முனுசாமி இரத்தவெள்ளத்தில் கிடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்

ஓய்வு சிறுகதை பற்றிய ஒரு நோக்கு ...

இனிய. திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ்
சிவநகர்- உருத்திரபுரம்

கிளிநொச்சி பரவிப் பாய்ஞ்சானைப் பிறப்பிடமாகவும் இல. 761 திருநகர் வடக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து வருபவர் தான் இளையதம்பி நடராசா. வைரமுத்து இளையதம்பிக்கும் பார்வதிக்கும் இரண்டாவது புத்திரனாக 1939.02.11 அன்று பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வியை கிளி நொச்சி (கனிஸ்டா) மகாவித்தியாலயத்திலும் தரம் 6 இலிருந்து S.S.C வகுப்பு வரையுமான இடைநிலைக்கல்வியை கிளிநொச்சி மகாவித்தி யாலயமாக இருந்த கிளிநொச்சி இந்துகல்லூரி யிலும் அக்கால நெருக்கடி மிக்க சூழ்நிலையி லும் விடாது கல்வி கற்றவர்.

1963 ஆம் ஆண்டு தற்போது வசிக்கும் திருநகர் வடக்கு காணியில் குடியேறினார். பருத்தித்துறையைச் சேர்ந்த செல்லம்மா என் னும் பெண்ணை 1963.06.25 இல் கரம் பிடித்து மூன்று ஆண்பிள்ளைகளுக்கும் நான்கு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். கட்டடத் தொழிலாளியாக வேலை செய்து மிகவும் கஸ்டப்பட்டு குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

ஏழ்மை ஒரு புறம் குடும்பப் பொறுப்பு ஒரு புறம் துன்புறுத்தினாலும் வாசிப்பதையோ நிறுத்தவில்லை இவரது தொடர்வாசிப்பே "சிறுகதை இலக்கியம்" படைக்கக் காரணமாகி யது. கிளிநொச்சி மண்ணில் "தாமரைச் செல்வி", "டாக்டர், ச. முருகானந்தன்" போன்ற சிறுகதை ஆக்க கர்த்தாக்கள் பிரபலமடைந்தது போல இவரது ஆக்கங்கள் உரிய காலத்தில் வெளியீடு செய்யப்டாதிருந்தது.

முருங்கன், மன்னார், முல்லைத்தீவு, கட்டைக்காடு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று மேசன் வேலை செய்து புகழ் பெற்றார். இருந்து எழுத கதிரைகளோ பொருத்தமான இடவசதியோ காகிதாதிகளோ இல்லாத சூழ்நிலையிலும் சிறு கதைகளை எழுதுவதில் மும்முரமாக ஈடுபட் டார். அக்காலத்தில் தமிழகத்திலேயிருந்து வெளிவந்த குமுதம், கல்கி, ஆனந்த விகடன், கலைமகள் போன்ற மாதச் சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பதில் தீராத ஆசையுடையவராக இருந்தார். அது மட்டுமன்றி அகிலன், டாக்டர் மு. வரதராசன், சுஜாதா ரபி சேதுப்பிள்ளை, அப்துல் ரஹீம் எனும் ஆசிரியர்களின் நூல்களைத் தேடித்தேடிப்படித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் எழுதிய முதல் சிறுகதை "வாடா மல்லிகை" தினபதி வாரமலரில் வெளிவந்தது. சுதந்திரன், வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலும் மல்லிகை, ராதா, வெற்றிமணி வானிவில் போன்ற சஞ்சிகைகளிலும் சிறுகதைகளை எழுதி வந்தார். இது வரையிலும் எண்பதிற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். ஆயினும் "ஓய்வு" எனும் சிறுகதைத் தொகுப்பே நூலுருப் பெற்றுள்ளது. இதனை கிளிநொச்சிப் பிரதேச கலாசாரப் பேரவையினர் 2012ஆம் ஆண்டு வெளியிட்டு மதிப்பளித்தனர்.

இவரது "மோட்சம்" எனும் சிறுகதைத் தொகுப்பு விரைவில் வெளிவர இருக்கிறது. சோதிடக் கலையிலும் ஆன்மிகத்திலும் நாட்ட முடையவர். முதுமை இவரை வாட்டினாலும் மனதளவில் சற்றேனும் தளராதவர். தான் வாழும் பிரதேசத்திலும் மக்களிலும் பற்றுக் கொண்டதினால் காலம் காலமாக புரையோடி யிருக்கும் அடக்கு முறைகள் சமுதாயச் சீரழிவுகள் என்பவற்றை கருப்பொருளாக்கி சிறுகதையில் பதிவு செய்துள்ளார். இவர் எழுதும் ஒவ்வொரு சிறுகதையும் காலத்தின் கண்ணாடியாக வரலாற்று ஆவணமாக இருப்பது உண்மையில் கிளிநொச்சி மண்ணுக்குக் கிடைத்த பெரும் பேறு.

இவரது எழுத்துலக வாழ்க்கையில் 2009ஆம் ஆண்டு புண்ணியாமீன் என்பவராலும் டாக்கடர்.ச.முருகானந்தன் என்பவராலும் செவ்வி காணப்பட்டு சிறுகதை எழுத்தாளராக இணங்காணப்பட்டு வெளியுலகுக்கு வெளிச்சமானவர். 2010 ஆம் ஆண்டு ஜெயந்தி நகர் க. இரத்தினசிங்கத்தால் செவ்வி காணப்பட்டு தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது 2013 ஆம் ஆண்டு இவரது "கரை சேராப் படகுகள்" எனும் சிறுகதையை "கரைஎழில்" சஞ்சிகை வெளியிட்டது.

2010 ஆம் ஆண்டு "கலாபூசண விருதும்" 2012 ஆம் ஆண்டு "கரை எழில் விருதும்" "கலைக்கிளி விருதும் முல்லைத்தீவில் "ஆளுனர் விருதும்" கிடைத்தமையை பெரும் பேறாக கருதுபவர். ஒவ்வொரு கலைஞனின் பின்னும் ஒருவர் பக்க பலமாக இருந்து கைகொடுத்து உதவுவது போல இளையதம்பி நடராசாவின் படைப்புக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி ஆலோசனை வழங்குவது மனைவி செல்லம்மா இதனை புளகாங்கிதத்துடன் கூறி மகிழ்வார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்தப்பாதிப்புக்களும் இடப்பெயர்வுகளும் பல வற்றை அழித்து மக்களை எல்லா வகையி லும் துன்புறுத்தியது. இந்தப் போர்ச் சூறாவளிக் குள்ளும் மீண்டு எழுந்து எழுபத்தைந்து வயது கடந்தாலும் சிறுகதை இலக்கியத் தொகுதியை தொடர்ந்து வெளியிட வேண்டும் எனும் வேணவா இன்னும் இவரது உள்ளத்தில் உண்டு. கிளிநொச்சி மண்ணுக்கு கிடைத்த பொக்கிசம் திருநகரூர் நடராசா என்னும் இலக்கியவாதி. அவரது ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே பலரது ஆவல். இத்தகைய எழுத்தாளரது "ஓய்வு" சிறுகதைத் தொகுத்து "ஆய்வு" செய்யக் கிடைத்தமையையிட்டு மிகவும் பேருவகை அடைகின்றேன்.

இருபத்து மூன்று சிறுகதைகளைத் தாங்கிய "ஓய்வு" உதயமாகும் காலைப் பொழுதுக்கான வர்ணச்சாயலைத் தாங்கிய அட்டைப் படத்துடன் ஏறக்குறைய நூற்றுப் பதினெட்டு பக்கங்களைத் தாங்கிய திரு. வி. செந்தில், திரு. கு. றஜீவன் இருவரதும் வடிவமைப்பில் கலாசாரப்பேரவை- கரைச்சிப் பிரதேச செயலகம் கிளிநொச்சியின் 2012 ஆம் ஆண்டு வெளியீடாக வெளிவந்துள்ளது. தனது அனுபவத்தின் குறியீடாகவும், சீரழியும் சமுதாயத்தை நேரிய பாதையில் தடம் பதிக்கத் தூண்டும் யதார்த்தமான பொறுப்பு ஒரு எழுத்தாளனிடம் இருக்க வேண்டும் என்பதற்கு இளையதம்பி நடராசா உதாரணமாகத் திகழ்கின்றார். அவரது வாழும் காலத்துச் சம்பவங்களை ஒரு எழுத்துலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதியாக அசைபோடுவதும், ஆரவார மில்லாத எழுத்து நடையும் அவரிடமுள்ள பக்குவ உணர்வைக் காட்டி நிற்கின்றது.

இனி ஓய்வு சிறுகதைத் தொகுதியின் முக்கியமான சில சிறுகதைகளை தொட்டு பேசலாம் என விளைகின்றேன். கதை ஒழுங்கு படுத்துதலில் முதலிடம் பெற்ற சிறுகதையான "சுட்ட சங்கு" ஒரு வைத்தியசாலையில் உண்மை நிலவரத்தையும் நடைமுறைப் பிரச்சனைகளை யும் வாசகர் மனக்கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது. வைத்தியசாலைகளில் பார்வை யாளர்களுக்கும் நோயாளர்களுக்குமிடையில் நடைபெறும் இழுபறி, ஒரு வைத்தியர் என்றால் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் அஞ்ஞானத்தோடு மெஞ்ஞானமும் இணைந்த வாழ்வியலில் நோயாளியை எவ்வாறு தேற்ற வேண்டும் என்பதற்காக வைத்தியத்தோடு சோதிட நம்பிக்கையையும் ஊட்டும் அறிவியல் பாங்கு இவரது சோதிடக்கலை நிபுணத்து வத்தையும் காட்டி நிற்கின்றது.

கற்பனை கலந்த எழுத்தாளர்கள் கூறும் கதையோட்டத்திற்கு சற்று வித்தியாசமாகத்தான் கூறவந்த நினைவுகளுக்கான கதைப் பின்ன ணியை யதார்த்தமாக "நினைவுகள் சுமக்கும் நெஞ்சம்" கதை மூலம் கூறுகின்றார். இளமைக் கான வாழ்வியல், கூட்டுக்குடும்ப வாழ்க்கை, ஆசிரியர்களது பணிக்கு அப்பாற்பட்ட அரவ ணைப்பு இவையே என எடுத்துக் கூறியுள்ளார். இயற்கையிலமைந்த நிலப்பரப்பு, காரணப் பெயர்கள் மூலம் நகரினைத் தெரியாதவர்களை யும் அறியச் செய்துள்ளார். கிளிநொச்சியில் குடியேறிய மக்களை 1920களில் ஓட ஓட விரட் டிய மலேரியாவினதும் விலங்குகளினதும் தாக் கம். இவற்றிற்கும் மத்தியில் எதிர் நீச்சல் போட்டு வாழ்ந்து இன்று நகரமாக மாற தோள் கொடுத்த அன்றைய மக்களின் வறுமை வாழ்க்கை எங்கே இந்தக்காலத்து தலைமுறைக்கு விளங்கப் போகிறது என்பது போல தான் நினைவுகளை யும் இக்கதையூடாக இழையோட விட்டுள்ளார்.

சிறுகதைத் தொகுதியின் தலைப்பாய் இடம் பிடித்துள்ள "ஓய்வு" என்மனதை மிகவும் நெருடிய கதையாகும். வறுமை வாழ்வு அது தரும் வலியும் அதனை அனுபவிப்பவர்களுக் கும் மட்டுமே புரியக் கூடிய ஒன்று எளிமையான குடும்பம் ஒன்று வாழ்வில் எதிர்நீச்சலடித்து தன்க்காகவும் தன்குடும்பத்திற்காகவும் வாழும் வாழ்க்கையை சித்தரிப்பதே "ஓய்வு" வந்தாரை வாழ வைத்த வன்னி மண் வஞ்சகம் செய்தது போல் எல்லோரையும் கைமாறு நிலைக் குள்ளாக்கிய கொடிய யுத்தம் தந்த வலிகளைச் சுமக்கும் சராசரி மனிதனின் ஏக்கம் இக்கதை யுடன் கலந்திருக்கின்றது. எவ்வளவு பணம் பொருள் இருந்தாலும் பிறருக்குக் கொடுக்கும் மனம் எத்தனை பேருக்குள்ளது? எங்கிருந்தோ வந்த சற்குரு சுலோசினி போன்ற தம்பதியின ரால் தான் எத்தனையோ குடும்பங்கள் வாழ் கின்றன என்ற யதார்த்தத்தை தொட்டிருப்பது புலம்பெயர் சிறப்பானது.

இலக்கியம் என்பது காலத்தின் கண் ணாடி அந்த வகையில் உள்நாட்டுப் போர் ஏற்படுத்திய அனர்த்தங்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்கமைப்பதற்காக ஒரு வரையொருவர் ஏமாற்றிய சந்தர்ப்பங்கள் மனச் சாட்சிக்கு வினோதமான இவற்றின் வெளிப் பாடே "இங்கும் தீபாவளி" சிறுகதை யாகும் வாழ்க்கையில் எப்படி எய்த்துப் பிழைத் தாலும் இறைவனின் தீர்ப்பை வெல்ல முடியாது என்பதை உணர்த்தும் எளிமையான கிராமத்து சொல்லாடலிலமைந்த இக் கதையை மீண்டும் மீண்டும் உற்று வாசிக்கத் தூண்டுகின்றது.

"பாரதியாரின் "நெஞ்சு பொறுக்கு தில்லையே....." என்பதற்கு ஒப்பானதே "பாதை தவறிய கால்கள்" சிறுகதையாகும். நவீனம் என்ற போர்வைக்குள் சமூகம் எவ்வளவு சீரழிந்து கொண்டிருக்கின்றது. தமிழர் வாழ்வி யல், பண்பாடுகள், கலாசாரங்கள் தடம் மாறிச் செல்வதும் வறுமை என்ன வேண்டுமானாலும் செய்யத் தூண்டுமோ என்ற ஏக்கத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவதே இக்கதையாகும். காதல் என்பது இனம், மதம், மொழி, அழகு எல்லாம் கடந்த ஒரு அற்புதமான உறவு அந்த உறவின் ஆத்மார்த்தமான தன்மையை அழகாக இழை யோட விட்டுள்ளார். "தீர்ந்த முடிவுகள் கதை மூலம் கதையூடே பயன்படுத்தப்படும் "எறும்பின் ஒழுங்கு போல வரிசையாக செல் லும் மக்கள் கூட்டத்தையும், தாய், தந்தையை மீறி காதலுடன் செல்லத் துடிக்கும் திரேசாளை "பசுமரம் பருவத் திற்கு கிளை விடுவது இயற்கையே" என ஒப்பிட்டுக் கூறும் இவரது தமிழ்ப் புலமையை எண்ணியெண்ணி என்னை வியக்க வைக்கின் றது "மதம்" என்பது மனிதர் களால் இயற்றப்பட்ட சட்டம் என சர்வ மதத்தின தும் சகஜ வாழ்வின் தேவைகளையும் வெளிப்படுத்துகின்றார். இத்த கைய வாசிக்கும் போது இந்து முதிய உள்ளத்தி னாலும் இன்றைய இளம் தலைமுறையினதும் நுண்ணிய காதலு ணர்வை எண்ணிப் பார்க்க முடிகிறதா? என்ற வியப்பு மேலோங்குகின்றது. இதுவே இவரத வெற்றிகர மான படைப்பிற்கு சான்று பகர்கின்றது.

வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளையும் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க் கையையும் படம் பிடித்துக் காட்டுவதே "நிறைவு சிறுகதையாகும். மனமொத்த வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணர்த்து வதற்காக எண்ணங்களை அலைபாய விட்டு ஏங்கித் திரியும் தம்பதிகள் பற்றிய அறிமுகத் தூடாக அத்தகைய வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்க விளைந்துள்ளார். சமூகம், வாழ்வியல் பற்றிய தூரநோக்கு இவரது கதைகளில் இளையோடு வது இவரை ஒரு சக சீர்திருத்த வாதியாக நோக்க வைக்கின்றது. குடும்பங்களின் வரு மானத்தை உயர்த்துவதற்காக பிள்ளைகள் வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என அன்னையார் விரும்புவதும் திருமணம் முடித்து ஓரிரு வாரத்தில் ஆண்கள் வெளிநாடு செல்வ தால் பெண்கள் சமூகரீதி யாகவும் உணர்வு ரீதி யாகவும் படும் அவஸ்தைகளை கூறுவதே "நில்லுங்கோ நானும் வாரேன்" சிறுகதையாகும். இக்கதையின் மூலம் நாம் நினைத்தால் இத்த கைய சமூக சீர்கேடுகளுக்கான உந்துதல்களை தடுக்கலாம் எனும் தூரநோக்கு வெளிக் கொண்டு வர விளைந்துள்ளார்.

"பிறர் மனை விளையாதே" எனும் தற்போதனை மறந்து இன்றைய இளைஞர்கள் மனம் போன போக்கில் வாழ்கின்றார்கள். என்ன தான் ஆண்கள் வழிதவறிச் செல்வதற்கும் பெண்களும் காரணமாகின்றார்கள். பெண் நினைத்தால் தவறிழைக்க விளையும் ஆணைத் திருத்தமுடியும். என்னும் கருவூலத்தைக் கொண் டதே "சென்று வருகின்றேன்." சிறு கதையாகும். இன்றைய யதார்த்தத்தின் சீரழிவுக்குள்ளிருந் தும் ஒவ்வொருவரும் தானாக விடுபட வேண்டு மாயின் இக்கதைக்குள் ஒரு தடவையேனும் சென்று வாருங்கள். அடுத்து கணவனை இழந்து விதவையாக வாழும் பெண்கள் இவ்வுலகில் அனுபவிக்கும் வேதனை களின் பிரசவமானதே "ஒளிவிக்கு" சிறுகதை ஊராரின் பழிச்சொல் என்பது எத்தனையோ பெண்கள் மனதளவில் ஊனமாக்கி உருக்குலைய வைத்துள்ளது. அத்தகைய பேதை யொருத்தியின் அலைபாயும் மனதை படம் பிடித்துக் காட்டுவது எழுத்தாளரின் முதிர்ந்த அனுபவத்தின் வெளிப்பாடெனலாம்.

மனமொன்றிய இளம் மொட்டுக்களின் மணநாள் கனவு அந்த நாளுக்கான ஆரவாரம் இருப்பினும் உழைப்பிள் மகத்துவம் உயிர் பெற்று தான் தொடங்கிய வேலையை முழுமை யாக்குவதற்காக திருமணக்கனவுகளுக்கு கடி வாளமிட்டு விட்டு செய் தொழிலே தெய்வமெனப் போனவன் மீண்டும் வராத செய்தியைக் கூறுவதே கமலச்சந்திரன் கதையாகும். இன்று நம் இளைஞர்களது உயிர்கள் காவு கொள்ளப் படும் அவல நிலையின் தத்துரூபமானது இக் கதை.

1996 இல் கிளிநொச்சி மாவட்டம் துண்டாடப்பட்டு கிழக்கு மேற்காக நகர்ந்த போது எம் உறவுகளின் வாழ்வியல் துன்பங்களை வரையத் தூண்டியதே "மலரட்டும் ஒரு புது யுகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகு வியாபாரிகளும் ஒழுங்குப் படிந்த குடிசை வாழ்வும் ஏக்கம் நிறைந்த வயிற்றுப் பசிக்காக பட்ட துயரங்களும் வெறும் வார்த்தைகள் சொல்லிவிட முடியாதவை. உயிரைக் காக்க வென தான் வாழ்ந்த ஊரைவிட்டு ஓடிய மக்கள் உயிர் வாழ்வதற்காக மாங்காய், தேங்காய், ஓலைகளுக்காய் ஒழித்தொழித்து வந்து உயிர் மாண்ட செய்திகளையும் இன்றுவரை முகவரியே இல்லாது தவிக்கும் குடும்பங்களும் போனவர் மீளாத செய்தியும் எம் தேசத்தின் சோகங்களா கத் தொடர்வதை மிக இயல்பான மொழிநடை யூடாக காலத்தின் பதிவாக பதிய வைத்துள்ளார். இக்கதையூடாக எழுத்தாளர் இ.நடராசா அவர்கள்.

கதையோட்டம் சற்று வித்தியாசமான நகர்வாக அமைந்திருப்பதே "உணர்வுகள் உறங்குவதில்லை" யதார்த்தத்திற்கும் பொருத்த மற்ற உணர்வலைகள் எப்போதும் தவறான பார்வைக்குட்பட்டே தீரும் சமூக வலையமைப் பிலிருந்து தப்பிக்க முடியாதென்பதை உணர்த்த விளைந்துள்ளார். கதையாசிரியர் எனினும் சற்று யதார்த்தத்திற்கு பொருத்தமற்ற சிந்தனையோ என்று எண்ணத் தோன்றினாலும் இன்று ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தவறுகளை நியாயப்படுத்த ஒவ்வொரு காரணத்தை வைத்துள்ளனர் என்பதை நாசூக் காக வெளிப்படுத்தியுள்ளார். "கூண்டிலே குற்ற வாளி" ஆம் என்ன தான் பெண் உரிமை பேசப் பட்டாலும் துணிச்சலான பெண்கள் சமூகத் தில் படும் அவமானங்களும் ஆண் ஆதிக் கத்தினதும் கற்பனையுணர்வோடு இப்படியும் என்னால் சிந்திக்க முடியும் என்பதை ஆசிரியர் நிரூபித் துள்ளார். இக்கதை மூலம் சொன்னதையே வித்தியாசமானவராகவே எனது பார்வையில் தென்படுகின்றார்.

காதல் என்னும் பேரில் உடற்பயிற்சிக்கு இரையாகி தம்மை அழித்துக் கொள்ளும் பெண் களது நிலையைக் கூறுவது "ஏமாறச் சொன்னது நானோ, என்னும் சிறுகதையாகும். எழுபது எண்பதுகளில் நிலவிய இந்த காதல் தற்கொலை கள் தொண்ணுறுகளில் சற்றுத் தணிந்து மீண்டும் தற்பொழுது தலைதூக்கியுள்ளது இளையோரி டம் இக் கொடூரங்களான முடிவுகளிலிருந்து எங்கள் இளந் தலைமுறை விடுபட வாழ்க் கையை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சராசரியான குடும்பம் ஒன்றின் வாழ்க் கைச் சுமைகளையும் பிள்ளைகளின் கவனிப் பில்லாது முதுமைக் காலத்தில் அல்லாடும் வயோதிபத் தம்பதியினரின் ஏக்கம் நிறைந்த வாழ்ககையை எளிய நடையோடு "சைக்கிள் பயணம்" கதையூடாக மனதில் பதிய வைக்கும் வகையில் பல்வேறு கற்பனையோடு நகர்த்தியி ருப்பது கதைநகர்த்தும் உத்தியில் ஆசிரியரின் வளர்ச்சியைக் காட்டுகின்றது. இக்கதை வாசிக் கும் போது சுவாரஸ்யமான சைக்கிள் பயணம் மனக் கண்ணில் வந்து போகின்றது.

"காற்றோடு பறக்க கடதாசி" ஆசிரி யரின் சிறுகதையாற்றலின் வளர்ச்சிப் போக்கை காட்டி நிற்கிறது. வஞ்சிக்கப்படும் பெண்களது வாழ்க்கையையும் பணக்காரரது வாழ்க்கையின் அந்தரங்கப் போக்குகளையும் அம்பலப்படுத்தும் கதையாகவும் இச்சிறுகதை அமைந்துள்ளது. ஒரு பெண் உண்மை பேசாத வரைக்கும் அவள் வாழ்க்கை ஊமையாகவே உறைந்து விடும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. காதல் வாழ்கையை நொந்து இதயங்களின் வாழ்க்கை சிறுகதை ஆசிரியரை நெருக்கடியுள்ளதை "வாழ்க்கை பயணம்" கதையில் காண முடிகின் றது. காதலின் வெற்றிக்கு திருமணம் போன்று எதிர்நீச்சல் போட முடியாத காதல்களின் தோல்வியாக தற்கொலையை கதாபாத்திரங் கள் வருவது ஜீரணிக்க முடியாமலுள்ளது. இந்த முடிவை மாற்றியிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. எவ்வாறெனினும் அன்றைய காதலர்களின் இத்தகைய முடிவு முடிவல்ல என்பதை ஆசிரியர் உணர்த்துவது காலத்தின் தேவையாகவுள்ளது.

பசியோடு அழும் குழந்தை தாயிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலில்லாது ஏமாற்றமடைவது போல உணர்வு க ளோடு போராடித் தோற்றுப் போன பாத்திரமாக இராமநாதரை அறிமுகப்படுத்தும் கதையாக "மனிதர்கள் பலவிதம்" அமைந்துள்ளது. காசுக் காக இன்று என்னென்ன வகையில் மனிதர்கள் ஏமாற்றி பந்தாடப்படுகிறார்கள். என்பதை துல்லியமாக விளக்கி நிற்கின்றார் கதாசிரியர் இ.நடராசா அவர்கள் வறுமையோடு போராடும் சாமானிய குடும்பம் ஒன்றின் அவல வாழ்க் கையை "வெற்றியும் வேதனையும்" சிறுகதை சுமந்து நின்கின்றது. மது போதைக்கு அடிமை யான குடும்பங்களின் அவல வாழ்க்கை நிதர்சன மாக படம்பிடித்துக் காட்ட முயற்சிப்பது பாராட் டப்பட வேண்டியது.

"அவனும் அவளும்" மௌனமாகிப் போன உண்மைகள் என்றுமே உறங்காது என்றோ விழித்துக் கொள்ளும் இதுவே மனிதப் பண்பு என்பதை 'அவனும் அவளும்' கதையூ டாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ஓய்வின் இறுதிக் கதையாக "மணலும் அலை யும்" அமைந்துள்ளது. இன்றிருப்பது போல் அன்றைய இளைஞர் யுவதிகள் தங்களுக் கான காதல் தடைகளை தகர்க்க முடியாதவர் களாக திகழ்ந்துள்ளனர். என்பதை விளக்கி நிற்கின்றது.

திருநகரூர் நடராசா அவர்களின் சிறு கதைகளின் இவ்வாய்வுக்காக இருபத்து மூன்று சிறுகதைகளை வாசிக்கும் பாக்கியம் கிடைத் ததே என் தேடலுக்கான விருந்தாக அமைந்துள் ளது. முதிர்ந்த அனுபவமும், வறுமையும் ஒரு எழுத்தாளனின் எழுத்திலும் இழை யோடுவ தைக் காணமுடிகின்றது. பொதுவாக இவரது கதைகளினூடே காதலில் விரக்தி சமூகச் சீர்கேடு கள் வறுமையான வாழ்க்கை, ஏமாற்றம் இவையே அதிகம் இழையோடியுள்ளன. கற்பனைகள் என்பதற்குப் பதிலாக ஒவ்வொரு கதையிலும் உண்மை கலந்த உயிர்ப்பு இருப்ப தாக உணர முடிகிறது.

நடராசா அவர்களின் கதையின் வெற் றிக்கு உறுதுணையாக தேவையற்ற வர்ணனை களை விரித்து சொல்லாது தான் கூற விளையும் கருத்தை கச்சிதமாக முன்வைத்து கதையை நிறைவுக்குக் கொண்டு வந்திருப்பது அவசர மான இந்தக் காலகட்டத்தில் நாவல்கள் சிறுகதை களை ஆற அமர வாசிக்க முடியாத வர்களையும் சிறப்பால் ஈர்க்கப்பட்டால் ஈர்க்கும் வகையில் குறுகிய கதையாக அமைந்திருப்பது சிறப் பானது.

ஒரு எழுத்தாளன் வாழும் காலத்தில் அவனை வாழ்த்துவதும் கௌரவிப்பது சிறப் பானது. ஒவ்வொரு கதையையும் கதையாக பிரசவிப்பதற்காக இந்த ஏழை எழுத்தாளர் பட்ட கஸ்ரங்களை எண்ணுகையில் கதையோட்டத் தில் ஆங்காங்கே தென்படும் சிறு சிறு குறைகள் கூட நிறைவானதாகவே தென்படுகின்றது. குறிப்பாக கதைகளின் முடிவில் சில பாத்திரங் களின் முடிவாக தற்கொலை அமையக் கூடாது என்பது தோன்றினாலும் ஒரு ஏழை, ஏமாளி, இயலாமையுடையவனின் முடிவாகவே இதனை நோக்க முடிகின்றது.

ஒட்டு மொத்தமாக நோக்கின் "இலை மறை காயாக இருந்த இந்த இளையதம்பி நடராசாவை எழுத்துலகம் அறிய வைத்த பெருமையானது கரைச்சிப்பிரதேச செயலக கலாச்சாரப் பேரவையும், கலாசார உத்தி யோகத்தர் திரு. கு. றஜீபனுக்கும் உரியதே அவர் களோடு இந்த மூத்த அறிவாளியை மதிப்பிட என்னாலும் எனது சிறுதுளி அறிவு உதவியதை யிட்டு பேருவகையடைகின்றேன். நிறைவான மனதோடு வளமாக வாழ்த்து தொடர்ந்தும் எழுத் துலகில் பிரகாசித்திட இறையாசி வேண்டுகின் றேன்.

ஆய்வுத் தேடலில் உதவியவை:

ஓய்வு –சிறுகதைத் தொகுதி நேர்காணல் உதவி– திருமதி இ. அருணாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவேந்தல்

அம்பாளின் அருளாட்சி ஆரம்பம்

இனிய. க.இராசரத்தினம்
1ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி

முதலில் 1958ஆம் ஆண்டளவிற் கிளிநொச்சியின் இயற்கைச் சூழல் பற்றி ஒரு கண்ணோட்டம் செலுத்துவோம். பளையில், கிளிநொச்சி DRO கந்தோர் இயங்கியது. கண்டி வீதியிற் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோயில் ஒரு சிறு மண்டபத்துடன் இருந்தது. பக்கத்தில் ஒரு சைவ ஓட்டல், இன்னும் தெற்கு நோக்கிச் செல்ல சைவத்தின் சாப்பாட்டுக் கடை. பின் வட்டக்கச்சிக்குத் திரும்பும் காக்காகடைச் சந்தி. அதன் மேற்புறத்தில் வெற்றிவேலு விதானையாரின் வீடு வளவு, அதற்கடுத்தாற் போல ஜெயினுலாவுதீன் காக்கா சகோதர்களின் கடை (காக்கா கடை). மேலும் தெற்கு நோக்கின் புதுமுறிப்பு றோட் சந்தியில் வன இலாகா காட்டு மரக்கன்றுகள் உற்பத்தி நிலையம், இவற்றைச் சுற்றி அடர்ந்த காடு இருந்தது. புகையிரத நிலையத்துக்கு முன் மர அரிவு ஆலையும், விடுதிகளும் இருந்தன. புகையிரத தெற்குப்பக்கக் கைகாட்டிக்குப் பக்கத்தில் புதுமுறிப்பு பகுதிகளில் இருந்து யானைக் கூட்டம் தண்ணீர் குடிப்பதற்கு கிளிநொச்சிக் குளத்துக்கு வந்து போகும் யானைப் பாதை இருந்தது.

கண்டி றோட், புது முறிப்பு றோட் சந்தியிலிருந்து (இப்போ டிப்போ றோட்) இருநூறு யார் தொலைவிற் புகையிரதப் பாதைக்குப் பக்கத்தில் "யோகர் சுவாமிகளின்" பூரண ஆசியுடன் "ஸ்ரீ காந்தா ஐயா" அவர்களின் முழு முயற்சியிற் கோண்டாவில் கிராம முன்னேற்றச் சங்கப் பயிற்சி முகாமிலிருந்து பதினொரு படித்த இளைஞர்களின் திடசிந்தனையுடன் ஒரு முன்னோடித் திட்டம் முதலில் "இளங்கதிர் குழு வாழ்க்கைப் பண்ணை" என்ற பெயருடன் 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த பின்பு ஸ்ரீ காந்தா ஐயா" என்னையும் யோகர் சுவாமிகளிடம் கூட்டிச் சென்றுள்ளார். சுவாமிகள் எனக்கும் ஆசிகள் வழங்கிப் பல விடயங்களைக் கூறினார். அப்பொழுது ஸ்ரீ கந்த ஐயா அவர்கள் இவர்களில் பதினொரு பேர் முன்வந்து திட்டத்தை ஆரம்பிப்பதாகக் கூற; சுவாமிகள் நூற்றுக் கணக்கானோரைச் சேர்த்து அங்கு குடியமர்த்துமாறும் ஒரு கிராமமே உருவாகப் போகின்றது என்றும், அதற்குக் "கனகபுரம்" என்று, பெயர் சூட்டுமாறும் கூறியருளினார்.

அவ்வாறு 111 பேர் இத்திட்டத்தின் கீழ் வந்து குடியேறினர். அன்றுமுதல் அவ்வூரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் "கனகபுரம்" ஆகியது. டிப்போ றோட் தெற்கு வடக்குப் பக்கமெல்லாம் அடர்ந்த காடா கவே அப்பொழுது இருந்துள்ளது. வட்டக்கச்சி றோட்டின் வடக்குப் பக்கத்திற் கிளிநொச்சிப் பாடசாலையும், தெற்குப் பக்கத்தில் நீர்ப்பாசன இலாகாவும், யோகசுவாமிகள் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்த காலத்தில் நாட்டப்பட்ட மாமரம் பெருவிருட்சமாக வளர்ந்து நீர்ப்பாசன இலாகாவுக்கும் கண்டி வீதிக்குமிடையில் இருந் தன. கிளிநொச்சிக் குளத்தைத் தாண்டினால் அடர்ந்த காடாகவே இருந்தது. அக்காடு இரணை மடுக் குளம் வரை பரந்திருந்தது. அப் பாதையில் இரணைமடுவுக்கு, செல்வது மிகவும் அபாயகர மானதாகவே இருந்தது. இரணைமடுக் குளத்தின் பராமரிப்பு அலுவலராகக் காலஞ் சென்ற "இரா சேந்திரம்" ஓவசியர் இருந்துள்ளார். கிளிநொச் சியிலிருந்து முறிகண்டிப் போகும் வழியில் "சேவிஸ் றோட் சந்தி இருந்தது. அச்சந்தியிலி ருந்து கிழக்கு நோக்கி சேவிஸ்றோட் சென்றது. அது இரணைமடுக் குளத்திற்குச் செல்லும் கிறவற் பாதையாகும். அப்பாதையின் இரு பக்கமும் அடர்ந்த யானைக்காடு. யாவரும் அவ் வழியாற் செல்வது கிடையாது. ஒரே பயங்கரப் பாதை.

இந்தச் சூழலில் ஸ்ரீ காந்தா ஐயாவின் திருவுளத்திலே இரணைமடுக் குளத்துக்குப் பக்கத்தில் ஒரு அம்பாள் ஆலயம் அமைக்க வேண்டும் என்று பட்டது. அக்கருத்து அக் காலத்தில் கிளிநொச்சிப் பகுதிப் பிரபல மக்கள் மத்தியில் வேருன்றியது. அதன் பிரகாரம் திட்டம் வகுக்கப்பட்டு யோகர் சுவாமிகளிடம் சென்று அவ்வாலய மூலஸ்தானத்தைக் குறித்துக் காட்டும் படி ஸ்ரீ காந்தா ஐயா கேட்டுள்ளார். அப்பொழுது சுவாமிகள் நீங்கள் சுபவேளை குறித்து வாகன அணியிற் செல்லும் போது ஒரு பருந்துப் பறவை தாழப்பறந்து வாகன அணிக்கு முன் செல்லு மென்றும், அப்பறவை இரணைமடுக் குளத்தின் மேற்குக் கரையில் உள்ள ஒரு பாலைமரத்தில் அமரும் என்றும், அம்மரத்தடியினையே மூலஸ் தானமாகக் கொள்ளுமாறு அருள் வாக்களித் துள்ளார். அவ்வாறு சுப வேளையில் ஸ்ரீகாந்தா ஐயா முருகேசம் பிள்ளை (அப்போதைய DRO) V.K முருகேசு, யோகலிங்கம் J.P இராசேந்திரம் ஓவசியர் ஆகியோர் வாகனங்களில் வின்சன் றோட் வழியாகச் சென்ற போது பருந்து தாழப் பறந்து சென்று மூலஸ்தானத்திற்கு இடம் வகுத்து கொடுக்க, ஆரம்பித்ததே இவ்வாலயம்.

இவ்வாலயத்திற்குச் சுவாமிகள் "கன காம்பிகை அம்பாள்" என்று பெயர் சூட்டியுள் ளார். பிரதிஷ்டாபிடேகத்தின் போது இரணை மடுக் குளத்தின் கீழ் உள்ள அனைவரும் பானை வைத்துப் பொங்க வேண்டும் என்று அறிவுறுத் தப்பட்டனர். அவ்வாறு குடமுழுக்கின் போது 1008 பானைகளிற் கோயிலின் நாலாபக்கமும் பக்திப் பரவசமான பொங்கல் நடைபெற்றது. இக் காலப்பகுதியிற் கிளிநொச்சி திருநெறிக்கழகம், மகாதேவா ஆச்சிரம தவத்திரு வடிவேற் சுவாமி கள் ஆகியோர் பிரார்த்தனைகளும், சொற் பொழிவுகளும் செய்து சிறப்பித்துள்ளனர்.

ஆலய நித்திய நைவேத்திய செலவுக் கென்று ஒவ்வொரு ஊரவர்களும் பங்கு கொண் டுள்ளனர். அவ்வாறு கனகபுரவாசிகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒவ்வொருவராக மாறிமாறிப் பூசைப் பொருட்களுட னும், ஐயரின் உணவுக்கான காய்கறிகளுடனும் ஒழுங்கு முறையிற் சென்று வந்துள்ளனர். ஸ்ரீகாந்தா ஐயாவின் முழு முயற்சியினால் இரணைமடுக் குளம் மூன்று அடிக்கு வான்பரப்பு உயர்த்தப்பட்ட தும், அதனால் பல நூறு ஏக்கர் வயல் நிலங்கள் விளைநிலங்களாக மாறியதும் யாவரும் அறிந்த விடயமாகும். அன்று 1008 பானைகளை வைத்துப் பொங்க ஒழுங்கு செய்த ஸ்ரீகாந்தா ஐயாவின் மகள் "மாலினி இராசநாயகம்" இன்று அம்பாளினுடைய அருளினால் அன்னதானத்திற் பங்குகொள்ளுகின்ற படம் இத்துடன் தரப்படு கின்றது.

மழைக்காலத்தில் நீர் நிரம்பி வான் பாய்வதும், அதில் மீன்கள் துள்ளி விளையாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும், வெவ்வேறு நாட்டுப் பறவைகள் குளத்தின் நடுவே காணப்படும் பட்ட மரங்களில் மீனுக் காகக் காத்திருப்பதும் கண்கொள்ளக் காட்சிக ளாகும். அது மாத்திரமன்றி வெளிநாட்டு இரும்பு வான்பறவையும் வந்து இக் குளத்தில் இறங்கிச் சென்றது என்றால்! அதுவும் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க அற்புதக் காட்சியன்றோ அம்பா ளின் கிருபை இன்றேல் இதுவும் நடக்குமா? அம்பாள் ஆலயத்தைச் சுற்றி ஆநிரைகளும் இயற்கை வனப்பும் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும் காட்சிகளன்றோ!

சேவிஸ் றோட்டில் மயில்கள் நடன மாடுவதும் மான்கிளைகள் துள்ளி விளையாடு வதும், யானைகளின் கூட்டம் வரிசையில் செல் வதுமான இயற்கைச் சிறப்பினைக் கொண்டதாக அன்று கிளிநொச்சி இருந்துள்ளது.

இன்று கிளிநொச்சி ஒரு மாநகரமாகக் காட்சியளிப்பதும், கோட்டை கொத்தளங்களும், வீதி விசாலிப்புகளும் நிறையக் காணக் கூடிய தாக உள்ளன. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் தங்களை அர்ப்பணித்தனால் கிளிநொச்சி ஒரு புனித பூமியாக; தியாகிகளின் உறைவிடமாக வளம் பெற்றுள்ளது. தியாகச் செம்மல்களின் உயிர்த்தியாகங்கள் யாவும் உலக மகாசக்தியான அம்பாளுக்கு அர்ப்பணமாகும். அவர்களது ஆத்மா இன்றும் என்றும் பேசிகொண்டேயி ருக்கும்.

யோக சுவாமிகள் சில அடியார்களுடன் முறிகண்டிப் பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்ற தும், அடியார்கள் சுவாமிகளைக் காணாது பக்கத் துக் காட்டுக்குள் தேடியதும், அவர் அங்கு சிவக் கோலத்தில் சர்ப்பம் அணிந்த சீருடன் இருப்ப தைக் கண்டு சிவத்தரிசனம் கிடைத்ததாக அக மகிழ்ந்து தரிசனம் செய்துள்ளனர். இது சுவாமிக ளின் வரலாறாகும். இவ்வாறு ஞானமுனிவனின் திருப்பாதங்கள் பட்ட புனித பூமியல்லவா கிளி நொச்சி, தியாகங்கள் வீணாகுமோ?

கனகாம்பிகை அம்பாளின் அருளாட்சி யும், யோகசுவாமிகளின் கருணை நோக்கும் தியாகச் சுமை தாங்கிய புனித பூமியாகத் திகழ் வது கிளிநொச்சியாகும்.

"பேதித்து நம்மை வளர்த்தெடுக்கும் கருணை கொண்ட அம்பாள் காலத்தால் கருணை காட்டுவாளாக"

நீரானாய் நில்லானாய் வளியானாய் விசும்பானாய்
காரானாய் கடலானாய் மதியானாய கதிரானாய்
ஊரானா யுடலானாய் உலகானாய் பலவானாய்
பேராயி ரம்மானாய் எனப்பேசார் பிறவார்தானே.

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(ஸ்தாபன கிளை, நிதிக் கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசன கவிதை

யானை கட்டிய அரியாத்தை

இனிய. ஸ்கந்தபுரம் மகேந்திரன்

எழில் மிகுந்த இலங்கை மணித் திருநாட்டில் பொழில்கள் பூஞ்சோலைகள் புதுப் பொலிவாயிலங்குவதும் தளிர்விடும் பசுஞ் சோலைகளம் தருநீராறுகளும் நளினமாய் நடமாடும் மயில்களும் கூவும் குயில்களும் மலி வாக நிறைந்த மான் மரையும் வளரும் காடு களும் மேலாக இலங்குவதும் முல்லையெனும் மாவட்டமே. வன்னியென்ற நாமம் வழங்குமிப் பிரதேசத்தை அன்னிய நாட்டவனும் மாட்சி செய்த மன்னராம் மேன்மையுடைய மேவுபுகழ் வன்னியனும் யானைகளைப் பிடித்து அலை கடலூடு அனுப்புவித்து அன்னிய செலவாணியை அதிகரிக்கச் செய்வதற்கு செம்மலைக் கிராமத் தில் சீரான பணிக்கர் குலம் தம்மரைத் துணி வோடு யானைகளைப் பிடித்ததுவே யானை களையடக்கி அவற்றைப் பிடிப்பதற்கு வேலப் பணிக்கனென்ற குலத்தலைவன் வாழ்ந்து வந்தான். அந்தங்ளிலே நடந்ததோர் அதிசயமே கொட்டுகிணற்று பிள்ளையிருந்தருளல் குமுழ முனையென்ற கிராமத்தின் வனந்தனிலே மதங் கொண்ட யானையொன்று மாவேகங் கொண்டு மக்கள் குடியிருப்பையும் மக்களையும் சிதைத்த தாம். இந்தக் கொடுமையினை அறிந்த மன்னவ னும் ஆணையிட்டான் வேலைப் பணிக்கனுக்கு அடங்கிப்படியாது அடங்காத யாணை தனை அடக்குமாறு அதுகேட்ட பணிக்கனும் வார்க் கயிற்றையெடுத்து வளைத்துப் பிடிக்கவென்று வனம் புகுந்தான்.

தன்னுடைய பரிவாரங்கள் சேர முயன்ற பல நாட்களும் முடியவில்லை. மதங்கொண்டு மோதுகின்ற யானைதனை கண்ட மற்றவர்கள் வேலப் பணிக்களால் முடியாது அவன் பிடிப்பாள் இவனால் ஏலாது என்றெண்ணி நகை செய்தார் கள். அதனையறி ந்த அரியாத்தையம் மாளும் ஆங்காரங் கொண்டு கரந்தனில் வார்க்கயிறு எனும் வயந்தனையெடுத்து குமுழமுனையூரி லுள்ள கண்டல் வனம் நோக்கி நடந்தாள் மாது. யானைகளைப் பிடிப்பதற்கு வழியில் கிடந்த கொடுகமொன்று தடுத்ததவள் பயணத்தை நாகம்மா வழிவிடென்று நங்கையவள் கேட்கவே நகர்ந்தது நாகமும். தொடர்ந்ததவள் பயண முமே மதங்கொண்ட யானை மரங்களையூட றுக்க மாதரசி அறியாத்தையை மோதவே வந்திடவே அன்னை அரியாத்தை அஞ்சாத நெஞ்சத்தாள். ஆரி அடங்குவாய் ஆனையே என்றவளும் பாதியிலே முன் னின்ற பெண்ணை பகைத்துமே முன்னின்றுள ஆத்திரமாய் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை அவள் வார்த்தை கேட்டு அடங்கியே மண்டியிட்டு அவள் முன் குந்தியது வார்க் கயிற் றாலதைக் கட்டி வளைத்து பிடித்து மன்னனிடம் மங்கையவள் கையளித்தாள் அன்னவளுக் கரசனும் அரும் பரிசு கொடுத்தானே. இதையறி ந்த உறவுகள் பொது மக்கள் வெற்றிலையைக் கொடுத்து அதன் மேல் நஞ்சு பூசி ஒற்றுமையாய் நின்று ஊட்டுவித்தார். ஓர்மமுடன் பற்றிய கண வனும் பிள்ளைகளும் கதறியழ முற்றாக உயிர் பிரிந்து மாதரசி அரியாத்தை உயிர் பற்றுடலம் பிரிந்து பறந்துமே சென்றதம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

நாடற்றவர்கள் மீது சரிந்த மலை

தீபச்செல்வன்
கிளிநொச்சி

ஒழித்து விளையாடும் அம்மாவும்
தெருவும் தேயிலை மலையும்
மீண்டும் வருமெனக் காத்திருக்கும்
குழந்தையின் முன்னால்
குருதியை உறிஞ்சும் அட்டைகளும்
வெறும் கூடைகளும்
துளிர்த்திருக்கும் கொழுந்துகளும்
அடர்ந்த செடிகளுமாயிருக்கும் தேயிலைத் தோட்டங்களும்

உழைத்துழைத்துக் கூனிய முதுகளுடன்
கொழுந்துப் பைகள் கொழுவிய தலைகளுடன்
மலைக்கு வந்த நலிவுண்ட பரம்பரையின்
புகைப்படங்களுடன் எல்லாவற்றையும் மூடியது மண்

ஒவ்வொருவராய் தேயிலைச் செடிகளுக்குள்
புதைக்கப்பட அதன்மீதேறி
கொழுந்தெடுத்த சந்ததியை ஊரோடு மலை விழுங்கிற்று

எவ்வளவெனிலும் சம்பளம்
எத்தகைய குடிசைகளெனிலும் வாழ்வு
மயானங்களுமற்றவர்களின்மீது சரிந்தது பெருமலை

ஒடுங்கியிருக்கும் லயன்களிலிற்குள்
வெளியில் வர முடியாதிருந்தவர்கள்
ஒரு நாள் மலைகள் தம்மீது சரியுமென நினைத்திருக்கவுமில்லை
வாக்குரிமையோடு நாடற்றிருப்பவர்களின்

கண்ணீரின்மீதும் சிதையின்மீதும்
மீண்டும் மீண்டும் தேயிலைச்செடிகளை நாடும்
மலைத் தேசத்தில் சரிந்த மண்ணில்
புதையுண்ட குழந்தையைத் தேடிப் பிதற்றும் தாயொருத்தியின்
சாபத்தை கேட்டு பதிலற்றுக் கிடக்கிறது
ஊரை விழுங்கிய மலை.

அம்மதான் ஒழித்து விளையாடுகிறாள் எனில்
வீடும் ஊரும் தெருவும் தேயிலை மலையும்
ஒழித்துவிளையாடுமா?
மாபெரும் கேள்வியோடிருக்கும் குழந்தை
அழத் தொடங்கும்போது
இந்த மலை என்ன பதில் சொல்லும்?

யார் யாரோ மலைகளைத் தின்றனர்
மலைகளோ தம்மை நம்பியிருந்த
சனங்களைத் தின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

கிளையற்று அலையும் பறவையின் பெயர் நீ

கிரிஷாந்

தொடக்கவுரை.

கடல்களிடமும் அதன் உறக்கத்திலிருக்கும்,
புயல்களிடமும் இருந்து உன் போன்ற ஒருத்தி உருவாகிறாள்,
ஆணின் கர்ப்பத்துள் ஆண்டாண்டு காலமாக.... உறைந்திருக்கும்
தீயைக் களவாடிச் செல்ல .

1

எது போலிருக்கிறேன்
உன் போன்ற ஒரு பெண்ணிடமிருக்கும்
ஆபத்தான கணங்களில் ,
ஊடுருவும் விழிகளில் பதுங்கியிருக்கும் என் மிருகத்தை
ஒரு வளர்ப்பு நாயைப் போல் தடவிக்
கொடுப்பவளிடம்.

2

காவல் தேவதைகளே அற்ற ஒரு இரவில், அவளை....
அடையாளம் கண்டு கொண்டேன் .
மன்னிப்புக்களே அற்ற காலத்திலிருந்து ...
திரும்பி வந்திருப்பவளிடம்.
நான் யார் என்பதை எப்படிக் காட்டிக் கொள்வது,
தொலைந்து போன காதலனாகவா அல்லது
வழிகாட்டியாகவா?

நட்சத்திரங்களின் வரைபடங்களை
எப்படி வாசிப்பதென்று கற்றுத் தந்ததே அவள் தான்.
பின் எப்படி .

ஏதேனும் ஒரு கணத்தில்,
அவள் பாம்பாகவோ அல்லது எரியும்
அஸ்திரமாகவோ மாறி...
என் மார்பில் நெளியக் கூடும் என்பதால்,
இன்னும் எவ்வளவு பறந்தாலும்,
கடக்கவே முடியாத இரவின் சிறகுகளை,
அணிந்து கொள்கிறேன் .

3

சூரியனிலிருந்து திரும்பி வரும்
முதற் பறவையிடம் அதன் பெயரைக் கேட்டேன்.
அது உன் போல ஏதோ ஒன்றாய் மாறி
அலைகளிடமும் அதன் நிலையற்ற
வடிவத்திற்குள்ளும்
மூழ்கியது .

முடிவுரை,
பூமியின் புராதனத்திலும் அதன் பிரம்மிப பூட்டும்!
கதைகளிலும்,
உன் போன்ற ஒரு பெண்ணின் பெயர்
நிலையற்று எங்குமாய் அலைகிறது .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(வெளிக்கள உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

வலியுணர்தல்

மீந்திருக்கும் சொற்களையும்
மௌனம் தின்று தொலைக்கிறது
ஈரம் கசியும் பால் வெளியில்
இன்னும் பறந்தபடியிருக்கின்றன
இரண்டு பட்டங்கள்
காற்றின் அசைவுகளில் சூழன்று
எதிர்பாராத தருணங்களில்
ஒன்றையொன்று முத்தமிடுகின்றன

பாலையாய் எறிகிறது பகல்
புறக்கணிப்பின் உச்சப் பொழுதுகளில்
மணிக்கட்டில் ஊருகிற எறும்பைத்
தட்டுவதைப் போலாகிறது அன்பூறும் கணங்கள்
மோகித்துச் சுடரும் வானத்தின் கீழ்
நிலவைப் புசிக்கிறது இரவு
மூச்சின் அனல் எறிக்கும் தூரம் கூட இல்லை
பாதைகள் தூர்ந்து போயின
சுனைகள் வற்றிவிட்டன
பிணைப்பு நூலின் கடைசி இழையில்
விரல்கள் ஊசலிடுகின்றன
எது மீதமாயிருக்கிறது
நீயும் நானும் பருக

நன்றி - இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

1. நெருப்பு

போர்க் கைதிகளைப் பற்றி
நானும் அறிவேன் நீங்களும் அறிவீர்கள்
போர்க்குற்றவாளிகளைப் பற்றி
நானும் அறிவேன் நீங்களும் அறிவீர்கள்

ஆனாலுமென்ன
கைதிகளை மீட்க முடியாமலும்
குற்றவாளிகைளத் தண்டிக்க முடியாமலும்
நழுவிச் செல்லும் காலம் நமது.

வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில
கைதுக்கும் சரணடைவுக்கும் இடையில்
மன்றாட்டத்துக்கும் வெறிக்கூச்சலுக்குமிடையில்
எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும்
கூட்டத்திலொருவனாய்
இரவுகளில் புலம்பி.
பகலில் அலைந்து
பரிகசிக்கப்படும் தெருநீளம் திரிகிறேன்

பாதி கைதிகள் சிறைக் கூடங்களில்
பாதிப்பேர் விசாரணையில்
இன்னும் சிலர் விடுதலையாகி
மீதிப்பேர் ஏதுமறியா நிலையில்

இந்தக் கைதிகளின் விதி என்னவென்று
உணர்கிறபோதும்
சொல்ல முடியவில்லை வெளியே
அவர் இருக்கிறாரா
இவர் வருவாரா என்று தத்தளிக்கும்
சகமனிதர்களோடு
துக்கமின்றி
பசியின்றித் தவிக்கின்ற குழந்தைகளோடு
எப்படி இனியும் வாழ்வதென்று தெரியவில்லை.
யாருக்காகவும் இனிக் காத்திருப்பதில் பயனில்லை
என்றுரைக்கவும் தெரியவில்லை.

போரோய்ந்து போயிற்றென்றுதான் சொன்னார்
சொன்னவர் வாயில்
அணையாதிந்த நெருப்பைக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

உ. வலை

நீங்கள் வந்தபோது புறப்படும் அவசரத்திலிருந்தேன்
உங்களை வரவேற்கவில்லை என்ற வருத்தம்
பயணத்தின் வழி நெடுக வந்து என்னில் நிரம்பியது.
உங்களை வரவேற்றிருந்தால்
இந்தப் பயணத்தின் முதலடியே உறைந்து போய்
அன்று என் பணியின் சுமை கூடியிருக்கும்.
பணியின் சுமை கூடும்தோறும்
காரியங்கள் படுத்து விடுகின்றன.
காரியங்கள் படுக்குமிடத்தில்
பாதிக்கப்படுவதென்னவோ எளியவர்களாகவே
இருக்கிறார்கள்.

நாம் பறவைகளைப்போலவோ
கூடித்திரியும்
காட்டு விலங்குகளைப் போலவோ இருந்திருந்தால்
நீங்கள் வந்திருந்த வேளையில்
மேய்ச்சல் வெளியை நோக்கியோ நீர்ச்சுனையைத் தேடியோ
நாம் சேர்ந்து பயணித்திருக்க முடியும்.

பணிச்சுமை கூடியிருக்காது
அவரவரே மேய்ச்சல் நிலத்துக்கு செல்ல வேண்டியிருந்தால்.
பணிச்சுமை கூடி எளியவர்கள் பாதிப்புற்றிருக்கவும் மாட்டார்

வரவேற்புக்கும் வரவேற்பின்மைக்கும் இடையில்
வருத்தத்திற்கும் மகிழ்ச்சிக்கும் இடையில்
தத்தளித்துக்கொண்டிருக்கிற
விதியில் இப்படித்தான் எம்முடைய வழி நெடுகத்
துக்கத்தோடு பின்னிக் கிடக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

'ஓவியா'வின் கவிதைகள்



கற்களாலான நகரம்

கற்களால் ஆனது ஆதி நகரம்
பூக்களைச் சூடி இலைகளை உடுத்தியவர்களால்
வேல்கொண்டு காவல் செய்யப்பட்டது
அப்போதும் தேவேந்திரர்கள்
மன்னர்களோடு
சண்டையிட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்
விளைச்சல் நிலங்களை விரிவுபடுத்த
நகரங்களில் மாடங்கள் எழுந்தன
யாகத்துாண்களின் எண்ணிக்கையில்
மன்னர்கள் வரம் பெற்றார்கள்
நடுகற்கள்
வீரத்தின் குறியிடமாய் ஆக்கப்பட்டது
குடைவலம் வருதலும்
வாள்வலம் வருதலும்
அபோதைய நகரத்தின்
ஆண்மையை நிரூபித்தன
மன்னர்கள்
புனிதர்களாக்கப்பட்டார்கள்
நகரங்களில் கோட்டைகள் எழுந்தன
அந்தப்புரங்களில் கலவிகள் நிகழ்ந்தன
வாள்முனையில் வசதிகள் பெருக்கப்பட்டது
நகரங்கள் விரிவாகின
தீப்பந்தங்களால் தெருக்கள் ஒளிபெற்றன
எமது முந்தைய நகரம்
கற்களால் ஆனது

அம்புலிமாமா இரவுகள்

எனது தாத்தாவிடம்
பல கதைகளை வாங்கி பத்திரப்படுத்தியுள்ளேன்
அம்மாவிடம்
இன்னும் பல கதைகள் உள்ளன.
பாட்டி சொன்ன கதைகளில்
அரசர்கள் வீரர்களாய் இருந்தனர்
அப்பாவின் கதைகள் எப்போதும்
சண்டியர்களைப் பற்றியதாகவே இருந்திருக்கிறது
என்னிடமும் பல கதைகள் உள்ளன.
நிலவு பற்றிய கதையிலிருந்து
பதுங்குகுழிக்கதைகளாக நீளுகின்றன
எனது கதைகளும்
மன்னர்களைப் பற்றியதிலிருந்தே தொடங்குகின்றன
விக்கிமாதித்தன் விடைதேடுவதும்
முனிவர்கள் வரம்கொடுப்பதுமான
எல்லாச் சம்பவங்களும்
எனது கதைகளிலும் வருகின்றன
இன்று! எல்லோரிடமும்
நிறையக்கதைகள் உள்ளன
இன்றைய கதைகளில்
அம்புலிமாமாக்கள் வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
(திட்டமிடல் கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்நிலைக் கவிதை

அழகான காலங்கள்

வசந்தம் சிவா

தெருக்களெல்லாம் சேறு சகதியில் கட்டிப்புரளும்
கடும் காற்றில் மரங்கள் ஆங்காங்கே மாண்டு போகும்.
வெள்ளமோ ஊரை நன்கு வெளுத்துக்கட்டும்
இரவு நேரங்களில் வீட்டில் அண்ணாந்து பார்த்தால்
நட்சத்திரங்களின் அலங்காரங்கள் கண்களுக்கு
இனிமைதரும் ஆனால்
மழை வந்தால் வீட்டிற்குள் குடிபுகும்
பாடசாலை நினைவுகளை நினைத்தால்
அடைமழை கண்டு உள்ளம் ஆனந்தமடையும்
குளிர் காற்று வந்து உள்ளத்தை மெல்ல கொல்லும்
நீள வானை மேகக்கூட்டம் மேய்ந்து செல்லும்
வெண் கொக்கு கூட்டம் வானில் பறந்து!
யாருக்கோ ஓட்டு கேட்டு செல்லும்.
மின்னல் வந்து ஊருக்கே மாத்தாப்பு கொளுத்தும்
இடிச்சத்தம் இறைவனின் சக்தியை பறைசாற்றும்
சிறுவர் உள்ளமோ காகித ஓடமிட்டு இக்கானகத்தை சுற்றிவரும்
காளான்கள் மலர்ந்து யாருக்கோ குடை பிடிக்கும்.
பச்சைபாசி ஆங்காங்கே தோன்றி ஊருக்கே கம்பளம் விரிக்கும்
அப்போதுதான் வீட்டுக்காரிக்கு உதவும்
விறகுகள் அழும்பு பண்ணும்.
சோவென பெய்யும் மழை சோம்பலுக்கு பாய் விரிக்கும்.
மழையில் நனைந்த காகம் வெயிலுக்கு ஏங்கும்.
கருமேகம் தோன்றி விவசாய்களை பயமுறுத்தும்
வெண்பனி மூட்டத்தில் அழகு பூ மரங்கள் தலைதுவட்டிக்கொள்ளும்
இக்காலங்கள் கசத்தாலும் அக்காலங்களை எண்ணி இனிமை
இளமை கொள்வோம் என்றும் மறவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சிகளால் நிரம்பிய சுவர்

கு.றஜீபன்

இன்னமும்

பூசப்படாத சுவர்களை நோக்கி

பூச்சிகள் புறப்பட்டன

வரையப்பட்ட ஓவியத்திலிருந்து

தூரிகைகள் வெளியேறிக்கொண்டிருக்கின்றன

கரப்பான் பூச்சிகளால்

அரிக்கப்பட்ட வரலாற்றில்

பள்ளிமாணவர்கள்

புதிது புதிதாய் கோலமிடுகிறார்கள்

பூச்சிகளால் நிரம்பியிருக்கிறது சுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கப் படையல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கக் கலை

பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே

இனிய. இரா. தணி
இராமநாதபுரம்

காட்சி – 1

மங்களம் : விடிஞ்சால் பொழுது பட்டால் டெலி போணில் கதை. கேட்டால் முறைப்பு. ஒரு மனுஷனுக்கு வயதுக்கு ஏற்ற மாற்றம் இருக்க வேணும் அதை விட்டிட்டு இப்பவும் இளந்தாரிக்கு நிண்டு ஆடறார்.

மணியம் : மங்களம் என்னை டிஸ்ரோப் பண்ணாதே வர வர உன் அட்டகாசம் கூடுது.

மங்களம் : இப்ப உங்கடை வயதுக்கு ஏற்ற மாதிரியே நடக்கிறியள்.

மணியம் : கனடாவில ஆளுக்கும் வயதுக்கும் என்ன இருக்கு. தலைக்கு டை அடிச்சு அந்த மாதிரி உடுப்பும் போட்டால்...

மங்களம் : அதுதான் இப்பவும் மைனர் மாதிரி நிக்கிறியள். ஒரு நாளைக்கு டைக் கொம்பனி க்ராக் பண்ணினால் தெரியும் உங்கட விளையாட்டு.

மணியம் : அதுதான ஒரு குறொஸ் டையை வாங்கி வைச்சிருக்கிறேன். உன்னையும் தான பூசச் சொல்லுறன். நீதான் பூசுறாய் இல்லை.

மங்களம் : உதைப் பூசித்தான் நான் பட்ட அவமானம் போதும். இன்னும் அவமானப்படச் சொல்லுறீயளே.

மணியம் : ஓ... அந்தப் பிரச்சனையே அதை அது சிம்பிள்.

மங்களம் : சிம்பிளோ என்னைப் பாத்துச் சொல்லுங்கோ.

மணியம் : நீ டை பூசினதால உன்னைப்பாக்க குமர் பெட்டை மாதிரி அந்தப் பெடியனுக்கு தெரிந்து இருக்கும். சொண்டுக்கும், கண்ணுக்கும் பூசியிருக்கிறாய். உடுப்பையும் அந்த மாதிரிப் போட்டாய் அதால...

மங்களம் : அதுக்கு அந்தப் பெடியன் என்னை பாத்து I love you எண்டான். இயற்கையில யெண்டால் செருப்பைக் களத்தி இருப்பன். கனடாவாகப் போச்சு.

மணியம் : உதைப் பெரிசா எடாத மங்களம். உன்ரை அழகுக்கு பொடியன் மயங்கிய போனான். அதுக்குப் பெருமைப்படு.

மங்களம் : உங்கட கதையும் நீங்களும் எனக்கு பிள்ளைக்குச் சரி அவன். தேவை யெண்டால் நீங்கள் பூசுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வேண்டாம் வயதுக்கு ஏற்ற மாதிரித் தான் நடக்க வேணும்.

மணியம் : கனடா நாகரீகம் தெரியாமல் துள்ளாத சிரிக்கப் போகுதுகள்.

மங்களம் : என்னைப் பாத்தோ அல்லது உங்களை பாத்தோ சிரிக்கப் போகுதுகள்.

மணியம் : உன்னைப் பாத்துத்தான் உன்னையும் என்னையும் பாக்கக்க புருஷன் பெண்டாட்டி மாதிரியா இருக்கு.

மங்களம் : அப்ப என்னமாதிரி இருக்கு.

மணியம் : தபியும் மோனும் மாதிரி இருக்கு.

மங்களம் : இப்பதான உங்கட அப்பட்டமான புத்தி தெரியுது உங்கட மனதில உள்ளதை அப்படியே கொட்டிப் போட்டியள். அதுதான ஒரே டெலிபோன் கதை 6, 9 அடிச்சு அறிஞ்சுதான் வைச்சு இருக்கிறன். இனி என்னை ஏமாத்த ஏலாது.

மணியம் : ஓ... அப்படிவா வழிக்கு. மங்களம் ஆனாவசியமாக என்ரை விஷயத்தில தலையிடாத அடிக்கடி சொல்லிக் கொண்டு வாறன்.

மங்களம் : தலையிடுவன் உங்கட அலங்கோல வேலைக்கு கிழியாமெல் விடமாட்டன். கிளவனுக்கு இதுவம் ஒரு கேடு.

மணியம் : மங்களம் சும்மா பொழுது போக்குத் தான். ஏன் துள்ளி மிதிக்கிறாய்.

மங்களம் : கனடாவில காசு தாறான்கள் அதைச் சும்மா இருந்து சாப்பிட்டுப் போட்டு...

மணியம் : இப்ப என்ன செய்யப் சொல்லுறாய்.

மங்களம் : அங்க ஊருல சாப்பாட்டுக்கு கஷ்டம். வீடு வாசல் இழந்து அகதியாக திரியுதுகள் நாளுக்கு நாள் கொலை நடக்குது. உடுக்க உடுப்பில்ல.

மணியம் : அதுக்கு நான் என்ன செய்ய. என்னைப் போல எல்லாரும் வெளி நாட்டுக்கு ஓடி வந்திருக்கலாம் தானே.

மங்களம் : எல்லாருக்கும் உங்களைப் போல வசதி இருக்கே உங்களைப் போல உள்ள ஊதாரியள் அவர்களுக்கு உதவி செய்யலாம் தானே. இதை உணராமல் நிக்கிறீயள்.

மணியம் : அதுதான் நடக்காது. நான் குடிக்க வேணும் உல்லாசமாக இருக்க வேணும். கேள்வி கேக்காமல் சமையலைப் பாத்துக்கொண்டு பேசாமல் இரு. சும்மா, சும்மா துள்ளாத.

மங்களம் : இது கனடா. எங்களை அடக்கேலாது. நீங்கள்தான் சமைக்க வேணும். இனி நீங்கள் எங்க போனாலும் நான் பின்னால வருவன்.

மணியம் : உவன் சோமன் உனக்கு நல்லா ஓதிப் போட்டான். அவன் தான் இதுக்கு கால்.

மங்களம் : எனக்கு ஒருதரும் ஓதல்ல. குமர் பிள்ளையை வைச்சுக்கொண்டு இப்படியே நடக்கிறது. உங்களைப் போலத் தான் அவளும் அடக்கம் இல்லாமல் திரியுறாள்.

மணியம் : மங்களம் வரம்பு மீறிப் போனாய் என்னையும் கலாவையும் எப்பவும் திட்டுறாய். அவளுக்கு எப்படி வாழ வேணும் எண்டு தெரியும்.

மங்களம் : எப்பதான் இரண்டு பேரும் திருந்தப் போறியளோ தெரியல்ல. பகல் இரவு பாராமல் டெலிபோணில கதை. பொம்பிளையள் உங்களைக் கேக்குதுகள். பொடியள் அவளை விசாரிக்கினம். வெக்கமில்லையா.

மணியம் : ஆக்கள் இல்லையெண்டு சொல்ல வேண்டியதுதான் துள்ளுறாய்.

மங்களம் : ஒரு நாளைக்கு இதுக்கெல்லாம் கவலைப்படுவியள். ஊர் உலகம் சிரிக்குது.

மணியம் : நான் எல்லாம் பிளானோடதான் இருக்கிறன். உனக்கு விளங்காது.

மங்களம் : உங்கட பிளானும் மண்ணாங் கட்டியும். ஒரு நாளைக்கு அவள் வாயும், வயிறுமாக நிக்கக்க தெரியும். உங்கட பிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியம் : அவ்வளவு மூளை இல்லாதவனே கலா. எனக்கு நரி மூளை அவளுக்கும் இருக்கும். பொடியனையும் கையோட கொண்டுதான் வருவா.

மங்களம் : ஒழுங்காகப் பிள்ளையை வழிநடத்தத் தெரியாது. வக்காலத்து வாங்கிறார். எதுவும் ஒழுங்காக இருந்தால்தான் எந்தப் பொருளுக்கும் மவுசு இருக்கும்.

மணியம் : எனக்குப் புத்தியா கூறுகிறாய் உனக்குத்தான் கதைக்கத் தெரியும் எண்டு நினைக்காத எனக்கும் கதைக்கத் தெரியும். நான் கனடாவை நல்லா படிச்சு வைச்சு இருக்கிறன்.

மங்களம் : முதல்ல எந்த மனுஷனும் மனைவி மாருடைய சொல்லைக் கேட்டால் தான் வாழ்க்கையை ஒழுங்கா நடத்த முடியும். கழுத்தில் தாலி கட்டுற அண்டைக்கு ஒரு சத்தியமும், நடைமுறையில் ஒரு கொள்கையும் உடைய ஆண்களும் இருக்கினம்.

மணியம் : என்ன தத்துவமா பேசுகிறாய். என்னோடு மோதி மூக்கு உடைபடப் போகிறாய். நல்லது கெட்டது எனக்குத் தெரியும்.

மங்களம் : கடவுளே, இதுகளை என்னால திருத்த முடியாது. நீதான் திருத்த வேணும். சொல்லியும் திருந்தாத மனுஷனாக இருக்குதே இது.

மணியம் : இண்டைக்கு எனக்கு முக்கிய வேலை ஒண்டு இருக்கு. வர நேரமாகும். சம்மரும் வந்திட்டுது. டெலிபோன் வந்தா ஒழுங்காக கதை நான் போட்டுவாறன்.

காட்சி - 2

மங்களம் : சோமு அண்ண வாறன் எண்டு டெலிபோன் பண்ணினார். இன்னும் காணல்ல. இந்த மனுசன் செய்யிற திருக்கூத்துக்கு சோமண்ண தான் நல்ல ஐடியா தருவார்.

சோமு : (கதவைத் தட்டுதல்) மங்களம் நான் சோமு வந்திருக்கிறன் கதவைத் திற.

மங்களம் : வாறன் அண்ணை பொறுங்கோ (கதவைத் திறத்தல்) வாருங்கோ சோமண்ண அவர் வெளியில போட்டார். அப்பிடி என்ன வேலையோ தெரியல்ல. வீட்டில இருக்கிறார் இல்லை.

சோமு : மணியத்தை எனக்கு தெரியும் தானே வர வர அவற்றை போக்கே சரியில்லை மங்களம். குமர் பிள்ளையை வீட்டில வைச்சுக் கொண்டு இளம் பொடியளோடயெல்ல சினேகிதம். அவங்கட வீடுகளுக்கும் போறார் எண்டு கேள்வி.

மங்களம் : உண்மைதான் அண்ண. ஐந்திலை வளையாதது ஐம்பதிலையா வளையப் போகுது.

சோமு : ஐம்பதிலும் ஆசை வரும் எண்ட பாட்டுக்கு தப்பாமல் எல்லே தாளம் போடுறார் அவர்.

மங்களம் : நீங்கள் அவரைப்பற்றி என்னென்ன அறிஞ்சு வைச்சிருக்கிறீயள். சொல்லுங்கோ கேப்பம்.

சோமு : அதை எப்படி சொல்லுறது...

மங்களம் : பரவாயில்லை. சொல்லுங்கோ அண்ணை

சோமு : மணியம் இளம் பொடியளோட சேர்ந்து தண்ணி அடிக்கிறார். இது எங்க போய் முடியுமோ தெரியல்ல. அதோட உவன் ஓசி சுந்தரம் சேர்ந்து இருக்கிறான். எனக்கு நல்லதாப் படல்ல.

மங்களம் : அதான் அண்ணை அந்த ஓசி சுந்தரம்

சோமு : அதுவும் ஒரு பொறுப்பில்லாதது காசு மணியத்திடம் இருக்கும்வரை சுத்துவான். நல்ல சிந்தனையே இல்லாதவன் நடுத்தெருவில கழுத்த றுப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம் : சோமண்ண எப்பிடியும் அவரை நீங்கள் தான் புத்திமதி கூறி நல்ல வழிக்கு கொண்டு வரவேணும் இப் படியே விடக்கூடாது.

சோமு : ம்... ம்... உன்னைப் பாக்கப் பரிதாப மாக இருக்கு சரி. கவலையை விடு முயற்சி செய்து பாக்கிறன் மணியம் கேட்டால் சரி.

மங்களம் : ஆரோ கதவைத் தட்டுகினம் பொறுக்கோ அண்ண (கதவைத் தாண்டி, மணியம், சுந்தரம் வருதல்)

மணியம் : என்ன கதவு திறக்க இவ்வளவு நேரம் ஓ... சோமு என்ன பூனை மாதிரி முளிக்கிறாய் என்ன விஷயம்.

சோமு : சும்மா உங்களைப் பாத்துப் போக லாம் எண்டு வந்தனான்.

மணியம் : நான் இல்லை யெண்டால் போக வேண்டியதுதானே மங்களம் உள்ள போ.பிறகு.

உன்னோட: கதைக்கிறன் (மங்களம் உள்ளே போதல்)

சோமு : மணியம் என்ன ஒரு மாதிரிக் கதைக்கிறாய் உன்ரை பேச்சும் பார்வையும் சரியில்லை.

மணியம : ஒரு மாதிரியோ. ஒரு மாதிரியே தான் கதைக்கிறன் தண்ணிபோட்டன் எண்டால் கதை வேற.

சுந்தரம் : பாத்தியளே மணியண்ண நான் சொல்லு நீங்கள் நம்பல்ல. இப்ப புடிச்சுப் போட்டியல் விடாதேங்கோ ஆளை.

மணியம் : சோமு. நான் நல்லவனுக்கு நல்ல வன் கெட்டவனுக்கு கெட்டவன் ஏற் கனவே கேள்விப்பட்டிருப்பாய்.

சோமு : மணியம் நீ நல்லவரோட சேர்ந் தால் நல்லவன்தான் இதுமாதிரி ஒசிய ளோட சேர்ந்தால் கெட்டவன் தான் எல்லாம் எனக்கு தெரியும்.

மணியம் : என்ன எனக்கு புத்திமதியா சொல் லுறாய்.

சோது : ஊருல சாப்பாட்டுக்கு வழியில்லா மல் துடிக்குதுகள் உடுக்க உடுப் பில்லை. சீவிக்க வழி இல்லை. இதையெல்லாம் உணராமல் குடிப் பதும் கும்மாளம் அடிப்பது சரியே.

சுந்தரம : மணியண்ண, கதையை மாத்து றான் நடிக்கிறான். நீங்கள் வந்த பொயின்சை விடாமல் கதையு ங்கோ ஆளை மடக்க வேணும்.

மணியம் : சோமு நான் ஊர் பிரச்சனையை கேட்கவரல்ல. நான் இல்லாத நேரம் பாத்து ஏன் இங்க வந்தனீ அதைச் சொல்லு.

சோமு : பத்தும் பலதைக் கதைக்க வந்த னான் எங்கட ஊர் நிலவரம் இப்ப எப்படி எண்டு தெரியும் தானே.

மணியம் : அதுக்கு Bell கனடாதான வீட் டுக்கு வீடு டெலிபோன் பூட்டி இருக்கு. தாராளமாகக் கதைக்கலாம் தானே. ஆளைப்பாத்தே கதைக்க வேணும்.

சுந்தரம் : அப்பிடிக் கேளுங்கோ மணி யண்ண நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம். இவனுக்கு மான ரோசம் இருந்தால் தானே.

சோமு : டேய், சுந்தரம் நானும் மணியமும் கதைக்கிறம். சுடுதண்ணி குடிச்ச நாள் மாதிரி இடையில பாயாத.

சுந்தரம் : சோமா, என்னைப்பற்றி அறியா மல் கதைக்காத ஊரில போய் என் னைக் கேட்டால் தெரியும். நான் பழைய கில்லாடி.

சோமு : விசாரிச்சனான். எட்டாங் கட்டளைக்கு எழுதுப்பட்ட நீயெல்லாம் கதைக்க வெளிக்கிட்டியோ வா... இதில் பார்க்க துண்டை விரிச்சுப் போட்டு சந்தியில இருக்கலாம்.

சுந்தரம் : இது மணியண்ணை வீடாக இருக்கு வெளியில வா கவனிக்கி றன்.

சோமு : தம்பி இது கொட்டடிசந்தி இல்லை. இது கனடா 911 ஞாபகம் இருக் கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியம் : சேது அவன் என்ரை கூட்டாளி அவனைச் சொன்னால் எனக்குச் சொன்னமாதிரி கணக்காகக் கதை உன்ரை பிழையை மறைக்கப்பாக் காத.

சுந்தரம் : மணியண்ண என்னைத் தடுக்காத (பிடித்தல்) இவனை பந்தாடாமல் விடமாட்டான். நீ ஆம்பிளை எண் டால் வா... அடிப்பட்டுப் பாப்பம்.

மணியம் : சுந்தரம் அவசரப்படாத. சோமு ஆழம் அறியாமல் காலை வைச் சிட்டான். என்னட்டதான பழகப் போறார்.

சோமு : மணியம் இப்ப உன்ரை புத்தி மழுங் கிப்போச்சு. ஒரு நாளைக்கு உண் மையை அறிவாய். இவன் உன்ரை கூட்டாளி இல்லை. நட்டுவக்காலி.

சுந்தரம் : டேய் சோமு என்னையும் மணி யண்ணையையும் யாரும் பிரிக் கேலாது. உன்னை மரியாதை கெடுக்காமல் விடமாட்டன் ஒ...

மணியம் : சோமு என்ரை வீட்டில நிண்டு கொண்டு சண்டித்தனமே பேசுறாய். இதுக்கெல்லாம் காரணம் மங்களம் தான் கட்டின புருஷனிலும் பார்க்க சோமன் இவளுக்கும் பெருசாப் போச்சு.

சுந்தரம் : மணியண்ணை உங்களுக்கு மட்டு மல்ல கனடாவில அதிகமாக இப் படித்தான் இவனுக்கு பாடம் படிப் பிக்காமல் விடக்கூடாது.

சோமு : மணியம் இப்ப உனக்கு ஒண்டும் தெரியாது. போகப் போக நல்லது கெட்டது யார் யார் நல்லவ ரெண்டு தெரியும். அப்ப என்னட்டை ஓடி வருவாய்.

மணியம் : சோமு செய்யுறதையும் செய்து போட்டு சமாளிக்காத மரியாதை யாக வெளிபோ. (சோமு வெளிய போகிறார்)

சுந்தரம் : மணியண்ண என்னைத் தடுத்துப் போட்டியள் இல்லாட்டி ஆளை பந் தாடி இருப்பன் இவருக்கு விளங் காது என்னைப்பற்றி.

மங்களம : ஒ... உம்முடைய சண்டித்தனம் பாத் துக்கொண்டுதான் நிண்டனான். இவன் ஒருநாளைக்கு உங்க ளையே மாட்டி வைப்பான்.

மணியம் : அவன் துடிச்சவன் நான்தான் தடுத் துப்போட்டன்.

மங்களம் : முயல் பிடிக்கிற நாயை மூஞ்சியைப் பாத்தாலே தெரியும் அவற்ற முழி யும் ஆளும்.

மணியம் : அப்ப இவன் என்ன உடும்பு பிடிக் கிற நாயே.

மங்களம் : அதெண்டாலும் பரவாயில்லை இவன் ஆளைக்கடிக்கிற விசர் நாய். ஒருநாள் உங்களையும் கடிப்பான். அப்பதான் உங்களுக்கு அறிவு வரும்.

சுந்தரம் : மணியண்ணை இது எண்ட அக்கா என்னை எப்படிப் பேசினாலும் எனக்கு கோவம் வராது வாங்கோ போவம். ஒரு சிக்கல் தீர்ந்தது.

மங்களம் : மான ரோசம் உள்ளவேக்குத்தான் ரோசம்வரும். அந்த நரம்பே உங் களுக்கு இல்லை.

மணியம் : அது கிடக்கட்டும் நான் வெளியில போட்டு வாறன். கதவைப் பூட்டிவை. திறவாத கண்ட கண்ட நாயெல் லாம் வருகுது.

மங்களம் : நன்றி உள்ள நாய்தான் வரும். ஒநி நாயள் வராது. போகிறார்கள்

காட்சி 3

மதன் : என்ன மணியண்ண இரண்டு பேரு டைய முகமும் வாடிப்போய் இருக்கு என்ன நடந்தது ஏதென் வில்லங்கமே

சுந்தரம் : தம்பி, மதன், மணியண்ணைக்கு ஒரு வில்லா முளைச்சிருக்கிறான். அவனைக் கொஞ்சம் கவனிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும். இருட்டடி போட்டால் போதும்.

மதன் : இப்ப இளம் பொடியளுக்குத்தான் வில்லன் இருக்கிறாங்கள் எண்டால் உங்களுக்கு மே ஒரு கை பாப்பம்.

மணியம் : தம்பி மதன் எது ஒரு சின்னப் பிரச் சனை ஆனால் நினைச்சால் என்ரை மனம் கொதிக்குது.

மதன் : கவலையை விடுங்கோ அண்ண நான் இருக்கிறன். ஒரு போத்தல் அடிச்சால் எல்லாம் கிளியராகும்.

சுந்தரம் : அதுதான் இப்ப போத்திலோட வந்தனாங்கள். துவங்குவமே.

மணியம் : கதைச்சுப்போட்டு தண்ணியடிப்பம்

சுந்தரம் : தண்ணியடிச்சுக்கொண்டு கதைச் சால்தான் மூளை வேலை செய்யும் ஞானமும் பிறக்கும் நல்ல பிளா னும் வரும்.

மதன் : உண்மைதான் தண்ணி அடிச்சுக் கொண்டு கதைப்பம். சூட்டோட சூடாக வேலையும் நடக்கும்.

மணியம் : உங்கட விருப்பம். இரண்டு பேரும் துடிக்கிறியள். ஒவ்வொருநாளும் தானே மாட்டுறம்.

மதன் : (வார்த்துக் கொடுத்துப்போட்டு) ஐயா இனிச் சொல்லுங்கோ அதோட எனக்கும் ஒரு பிரச்சனை உங் காளிட்டதான் புத்திமதி கேட்க வேணும்.

மணியம் : உனக்கு இல்லாத புத்திமதி வேற யாருக்கு பொம்பிளை சம்பந்த மானதோ அல்லது.

மதன் : ஒரு பெட்டையின்ரை அலுவல் தான் இப்ப நல்லாவிஷயம் முத்திப் போச்சு.

மணியம் : எங்க பாத்தாலும் எந்தப் பிரச் சனையும் பொம்பிளையிட்ட பிரச் சனையாகத்தான் இருக்கு.

சுந்தரம் : அண்ண மணியண்ண, எப்பிடித் பாத்தாலும் நாங்கள் ஒரு வட்டத் தில தான் நிக்கிறம். உனக்கு வீட் டில பிரச்சனை தம்பிக்கு மனதில பிரச்சனை எனக்கு தண்ணியடிப் பிரச்சனை.

மணியம் : டேய் சுந்தரம் அளவாகக் குடி. புட்பாலில இழுத்த மாதிரியெல்ல குடிக்கிறான் எங்கடை கதையும் தண்ணியடியும் ஒரே நேரத்தில முடியவேணும். பிசகினா எல்லாம் மாறிப்போம்.

மதன் : இது என்ரை வீடு பயப்படாமல் தண்ணியடிப்பம். கதைப்பம். கேக்க ஆளே கிடையாது. இது என்ரை வசந்த மாளிகை.

மணியம் : தம்பி மதன் சொன்னால் சரி விஷயத்தை சொல்லு தம்பி. வசந்த மாளிகை எண்டுறாய். காதல் விஷயமோ.

மதன் : என்னை ஒரு பொட்டை காதலிச் சாள் இப்ப வைத்தில பிள்ளை என்றால அவளைக் கலியாணம் செய்யேலாது. இக் கட்டில மாட்டுப் பட்டுப் போய் நிக்கிறான்.

மணியம் : காதலிச்சால் கலியாணம் செய்யத் தான் வேணும். பொம்பிளைய ஏமாத்திறதே பெண்பாவம் பொல் லாதது.

மதன் : என்னைய்யா மோட்டுக்கதை கதைக்கிறியள் நான் கலியாணம் செய்யவே காதலிச்சனான். என் யோய் பண்ண வெல்ல காதலிச்ச னான் விஷயம் புரியாமல் கதைக் கிறியள்.

சுந்தரம் : தம்பி உண்மையில் நீ கெட்டிக் காரன் தான் இது விளங்காமல் மணியண்ண ஏடமாறார்.

மணியம் : டேய் சுந்தரம் என்ரை தண்ணியை அடிச்சுப் போட்டு எனக்கு மாறாக் கதைக்கிறாய் என்ன.

சுந்தரம் : நான் தம்பி மதனுக்கு சப்போட்டா கத் தான் கதைப்பன் மணி யண்ணை நீ கேட்கேலாது நானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியும் Partner.

மணியம் : மதன் இவன்ரை போக்கைப் பாத்தியே தண்ணி உள்ளுக்க போனதும் பிரண்டுட்டான்.

மதன் : இருக்கிற பிரச்சனை போதாதெண்டு ஏன் இப்ப புதுப்பிரச்சனை இப்ப என்ரை பிரச்சனைக்கு வழி சொல்லுங்கோ. அதை விட்டுவிட்டு வெறிக் கதை கதைக்கிறீயள். உங்கள் இரண்டு பேருக்குமே வெறிதான்.

மணியம் : மூண்டு பேருக்குமே வெறி. மதன் நீ யாரை சொல்லுறாய். எனக்கும் வெறியே நான் உனக்கு அப்பன் மாதிரி.

மதன் : ஐயா அதை விடுங்கோ காலம அந்தப் பெட்டை இங்கை வந்தவள். தன்னை ஏமாத்தினால் எனக்கு பாடம் படிப்பிக்காமல் விடமாட்டன் எண்டு சொல்லிப் போட்டுப் போறாள். அவன் போற போக்கைப் பாக்க பயமா இருக்கு.

மணியம் : பெடிச்சியைக் காட்டு நானும் சுந்தரமும் பிளான் போட்டுக் கதைப்பம் ஆனால் பிரச்சனை எண்டால் மூண்டுபேரும் மாட்டுப்பட வேணும். ஆனால் ஒரு சிக்கல்.

மதன் : என்ன சிக்கல். சிக்கல் எண்டு சொல்.

மணியம் : பிள்ளை வாயும் வயிறும் எண்டு...

மதன் : என்னையா ஞானம் இல்லாமல் கதைக்கிறீயள் கனடாவில பிள்ளை பெத்தால் Singl mother ஆக வாழலாம் தானே இன பெரிசா எடுத்துப் பயப்படுகிறியள்.

சுந்தரம் : மணியண்ண முழிக்கிறார். முழிக்கப்போனார் நாட்டு நிலவரம் இப்பிடித்தான்.

மதன் : ஐயா எப்பிடியும் நீங்கள் அவளுக்கு அட்வைஸ்பண்ணி சமாளிக்க வேணும்.

மணியம் : எப்பிடிச் சமாளிக்கிறது பெட்டையை எனக்குத் தெரியாதே. படம் ஏதென் வைச்சிருக்கிறியே அல்லது விலாசம் தெரியுமே.

சுந்தரம் : தம்பிக்கு விலாசம் தெரியாது அவள் படிக்கிற பள்ளிக்கூடம் தெரியும்.

மணியம் : அப்ப உனக்கும் பிரச்சனை தெரியும் சொல்லு கேட்பம்.

சுந்தரம் : தம்பி மதனுக்கும் அந்தப் பிள்ளைக்கும் இடையே தூதுபோனது, வீட்டுக்கு கூட்டிவந்து தம்பியோட கதைக்க வைச்சதே நான்தான் ஐயா வைப் பற்றி மணியண்ணை இப்ப என்ன நினைக்கிறீயள்.

மணியம் : இவ்வளவு விஷயமும் எனக்குத் தெரியாதே நீங்கள் இரண்டு பேரும் பெரிய ஆக்கள்தான்.

மதன் : ஐயா இப்ப சொல்லுங்கோ அவளை எப்பிடிக் காய் வெட்டுறது.

மணியம் : அந்தப் பிள்ளை எப்பிடி வடிவான வாவே.

சுந்தரம் : மணியண்ணையின்ரை கேள்வியைப் பாத்தால் றூட் மாறுது.

மணியம் : வடிவான பிள்ளை, படிச்ச பிள்ளையெண்டால் கலியாணம் செய்யலாம் தானே.

சுந்தரம் : உங்களுக்கோ...

மணியம் : டேய் சுந்தரம் கதைக்காத நான் தம்பி மகனோட கதைக்கிறன்.

மதன் : என்னையா சொன்னீங்கள்.

மணி : நல்ல பிள்ளையெண்டால் அந்தப் பிள்ளையை நீ கலியாணம் செய்யலாம் தானே.

மதன் : என்ன கதை ஐயா கதைக்கிறீயள் இப்ப என்ரை வயதுக்கு எவ்வளவு emtog பண்ண வேண்டி இருக்கு. அவளே என்ன கட்டி அழகிறதே.

சுந்தரம் : போயும் போயும் இவரிட்டை புத்தி மதியை கேட்டதும். பெட்டையை வழிக்கு கொண்டுவரப்பட்ட பாடு எனக்கும் தம்பிக்கும் தான தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியம் : தம்பி மதன் ஏதொ இரண்டு பேரும் தூக்கின கரகத்தை நீங்களே ஆடுங்கோ எனக்கு அந்தப் பாவம் வேண்டாம்.

மதன் : மணியண்ணை நீங்கள் ஒரு நன்றி இல்லாத ஆள் சீ... உங்களை நம்பினன்.

மணியம் : அப்ப இப்ப என்ன செய்யச் சொல் லுறாய்.

மதன் : நீங்கள் அவளுக்கு ஏதாவது சொல்லி, என்னைக் காப்பாற்ற வேணும். என்னட்ட அவனின்ரை போண் நம்பர் இருக்கு கான்ஃபோனில அடிச்சுத்தாரன் கதை யுங்கோ.

மணியம : சரி அடிச்சுத்தா கதைக்கிறன். டேய் சுந்தரம் ஊத்து ஒரு டோஸ் அடிச் சால் தான் கதைக்கலாம் தடு மாறாது.

மதன் : கலோ, கலாவே sorry இங்க ஐயா வோட கதை அவர் உனக்கு புத்தி மதி சொல்லுவார் இந்தாங்கோ ஐயா கதையுங்கோ.

மணியம் : க... ல்...லோ பிள்ளை. நான் மதனிட்ட எல்லாம் அறிஞ்சனான் அப்பாவோ நானோ ஓ... கலாவே கதைக்கிறாள்... கடவுளே... நீயா மோசம் போனனீ... (போணை ஏறிதல்)

மதன் : ஏனையா ஃபோனை எறிஞ்சனீங் கள்.

மணியம் : அயோக்கிய ராஸ்கல். நீ கொடுத் தது யார் தெரியுமாடா என்ரை மகள் கலாவெட கலா மங்களம் சொன் னது சரியாம் போச்சு டேய் சுந்தரம் என்ரை மகளிட்டை என்னை தூது விடுகிறியள் என்ன உங்களை என்ன செய்யிறன் பார்.

சுந்தரம் : மதன் பெரிய (மாறி மாறி ஓடியபடி) சிக்கல்ல இரண்டுபேரும் மாட்டுப் பட்டுப் போனம் நாங்கள் தப்ப வேணு எண்டால் மணியத்தின்ரை கை, காலை உடைச்சுப் போட்டு வெளியில போடுவம்.

மணியம் : எலும் எண்டால் வாருங்கோடா இரண்டென்ன பத்துப் பேரெண் டாலும் வாருங்கோ. நான் சும்மா மணியம் இல்லை. யமன் மணிய மடா.
(லைட் ழகக அடி, ஐயோ, ஓடறன் பிடி. அடி. பேச்சே இல்லை) மணியம் தாவளக் கட்டுக் கையுடன் காலைத் தாண்டியபடி வருதல்) றோட்டில்)

சோமு : ஆரது மணியமே. என்ன கோலம் இது உன்னைத் தேடித்தான் வாறன். உன்ரை மனுசி வீட்டில ஒப்பாரி ஓட இருக்கிறான்.

மணியம் : சோமு எல்லாம் எனக்குத் தெரியும். எனக்கு இது நல்ல படிப்பனை. நான் வீட்ட வரமாட்டன். மங்களத்திலை யும், கலாவிட்டையும் எப்பிடி முளிக்கிறது.

சோமு : இப்பிடி முறிஞ்ச கை காலோட எங்க போகப் போறாய் வா. வீட்டை போவம்.

மணியம் : சோமு, உன்னுடைய நல்ல புத்தி மதிகளை கேவலம் செய்தேன் நல்ல மனைவி இருந்தும் சபலபுத்தி கொண்டவனாக வாழ்ந்திட்டன். மகளை கண்டிக்காமல் விட்டு அவ மானப்பட்டன் ஏன் எனக்கு இப்படிப் பட்ட தண்டணை. இனியும் எனக்கு என்ன வேணும்.

சோமு : மணியம் ஊராஞ் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் என் பிள்ளை தானே வளரும் என்பார்கள் ஊருல எத்தனை மக்கள் துன்பத்தில் கண்ணீருடன் வாழ்கிறார்கள். பசி பட்டினியுடன் போராடுகிறார்கள் கனடாவில் உள்ள நாங்கள் இதை உணராமல், உதவி செய்யா மல் சுக போகம் என்று தலைகீழாக நடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். இந்தப் படிப்பனை உனக்கு மட்டுமல்ல. கீழ்தரமாக நடக்கும் எல்லோருக்கும் தான் நாங்கள் சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழக்கூடாது.

மணியம் : சோமு என்னை வேதனைப் படுத் தாதே கை கால் வேதனை ஒரு பக்கம் மன வேதனை ஒரு பக்கம். வேதனையின் துன்பத்தை இப் போது தான் உணருகிறன்.

சோமு : உண்மைதான் மணியம் பொம் பரடியால் ஊன மிழந்த மக்களின் வேதனை, துப்பாக்கிச் சூட்டில் தாய் தந்தையை இழந்த குந்தைகளின் வேதனை. வீடு வாசல்களை இழ ந்து அகதியான மக்களின் வேதனை, பசித்த மக்களின் வேதனை. எத் தனை எத்தனை வேதனை எம் உடன் பிறப்புக்களை நாங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.

மணியம் : உண்மை. உண்மை என் கண்கள் திறந்துவிட்டது துன்பப்படும் மக்க ளுக்காக இனி அல்லும் பகலும் பாடுபடுவேன். உண்டியல் குலுக்கி யாவது கண்ணீரில் வாடும் மக்க ளின் துயர் துடைப்பேன். நண்பர் களே என்னைப் பாருங்கள் இது எனக்கு வேண்டுமா நீங்கள் சிரிக் கிறீர்களா சிரியுங்கள் ஆனால் சிந்தியுங்கள்.

பாட்டு

சிரித்து வாழ வேண்டும் – பிறர்
சிரித்து வாழ்ந்திடாதே
உழைத்து வாழ வேண்டும் பிறச்
உழைப்பில் வாழ்ந்திடாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கக் கலை

1. வில்லிசை
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும்

கலாபூஷணம், சைவப்புலவர்
சு.செல்லத்துரை
இராமநாதபுரம்

காப்பு

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே – வரம் நீ
தந்தருள்வாய் கணபதியே

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டித்
தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளால் கூட்டி
(தானதன்னா தானதன்னா தானதானத் தன்னா னன்னா)
நாடுபுகழ் ஈழமதில் நல்லதமிழ் பாடவல்லார்
நாடிவந்தோம் மாணவர்நாம் வில்லெடுத்தோம் பாடுதற்கு
பாடுகிறோம் வில்லுப்பாட்டுப் பக்குவமாய்க் கேட்டிடுவீர்
ஆமா பக்குவமாய்க் கேட்டிடுவீர்

உதவி : ஆமா என்ன கதை சொல்லப் போகின் றீர்கள்

முதல்வர் : முதலில் சபையோர்க்கு வணக்கம் சொல்லிவிட்டு அப்புறம் கதை சொல்கிறேன்
(தன்னா னானா தனனானா தன்னா னானா தானனனா)

முதல்வர் : பாட்டு
சபையிலுள்ள பெரியோரே தாய் மாரே தந்தையரே தம்பியரே தங் கையரே அண்ணன்மாரே அக்கா மாரே சுவையான கதையொன்று சொல்லுகிறோம் கேட்டிடுவீர் ஆமா சொல்லுகிறோம் கேட்டுவீர்.

உதவி : இனிச் சொல்லுங்கள் என்ன கதை சொல்லப் போகின்றீர்கள் நல்ல கதையாகச் சொல்லவேண்டும்.

முதல்வர் : 'சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல் லும்' என்ற கதை.

உதவி : என்னையா எங்கைபார்த்தாலும் கொலை, கொலை இங்கும் கொலைக் கதைதானா?

முதல்வர் : கொலை அல்ல சினம் பற்றிச் சொல்லப்போகிறோம்.

உதவி : அதென்ன சினம் – அது எங்களுக்கு இனமோ?

முதல்வர் : ஆமாம். எங்கள் எல்லோரிடமும் இருக்கும் குணம் எனது. உங்களு க்கு நவரசங்கள் தெரியுமோ.

உதவி : நன்றாய்த் தெரியும். சனிக்கிழமை யிலை இஞ்சி, உள்ளி, கொத்த மல்லி, மிளகு, சீரகம், உப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியெல்லாம் சேர்த்து அம்மா வைப்பா ரசம், சோக் காயிருக்கும்.

முதல்வர் : எந்த நேரமும் சாப்பாட்டு நினைவு தான். அந்த ரசம் இல்லையப்பா இரசிக்கிற இரசனையைக் கேட்டேன்.

உதவி : ஓ அதுவோ. அதுவும் சாப்பாட்டு ரசனை தானே.

முதல்வர் : அது ஆறுசுவைப்பா. நான் கேட்பது நவரசம். அதாவது ஒன்பது விதமான ரசனைகள்.

உதவி : எங்களுக்குத் தெரியாது நீங்களே சொல்லுங்கோ

முதல்வர் : எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் ஒன்பதுவிதமான ரசனைக் குணங் களைப் பற்றி எங்கள் மிகப்பழைய நூலான தொல்காப்பியத்தில் சொல் லப்பட்டிருக்கு.

(தனனான னானா தனனன்ன னானா தனனான னானா தனனன்ன னானா)

"நகையே அழுகை இனிவரல்
மருட்கை அச்சம் பெருமிதம்
வெகுளி உவகை அப்பால் எட்டே
மெய்ப்பாடென்ப
அதனுடன் சாந்தம் ஒன்பதுரசமே"

உதவி : என்னையா எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.
இதென்ன தமிழ்ப்பாட்டா அல்லது வேற...?

முதல்வர் : நகை என்றால் – நகைத்தல் அதாவது சிரிப்பு அழுகை என்றால் – சோகம்
இனிவரல் என்றால் – அருவருத்தல்
மருட்கை என்றால் – ஆச்சரியம்
அச்சம் என்றால் – பயம்
பெருமிதம் என்றால் – பெருமைப் படல்
வெகுளி என்றால் – கோபம் – சினம்
உவகை என்றால் – மகிழ்ச்சி
சாந்தம் என்றால் – அமைதி
இவைகள்தான் நவரசங்கள்

உதவி : எனக்குத் தெரியுமே நாடகங்க ளிலை நாட்டியங்களிலை பார்த்தி ருக்கிறன். செய்து காட்டட்டோ.

முதல்வர் : முடியுமானால் செய்து காட்டு. (செய்து காட்டல்)

முதல்வர் : இந்த நவரசங்களிலே கோபம் என்ற சினம் பற்றியே இன்று கதை சொல்லப்போகின்றேன்.

உதவி : அதுதான் 'சினம் என்றும் சேர்ந் தாரைக் கொல்லும்' என்ற கதை என்றீர்களே. சொல்லுங்கள்.

பாட்டு : (தானன்ன னானன்னனானா – தன்ன தானன்ன தானன்ன தானன் னொனா)

முதல்வர் : சினங் கொள்ளக்கூடாது தம்பி – அந்தச் சினம் என்றும் சேர்ந்தாரைக் கொன்றிடும் தம்பி – சினம்...
எத்தனை போர்களைக் கண்டோம் – இங்கு
அத்தனை போர்களும் வந்தது சினத்தால்
உலகமகாயுத்தம் கண்டோம்–அது
ஒன்றல்ல இரண்டிலும் பலகோடி மாண்டார்
பாரதப் போரினைப் பார்த்தோம்– அதில்
பங்குகொண்டோரெல்லாம் மாண்டு மடிந்தார்
ராமாயாணப் போரும் பார்த்தோம் – அதில்
அரக்கர் குலம் முற்றும் அழிந்ததே தம்பி
எத்தனை யெத்தனை போர்கள்– இங்கு
அத்தனையும் சினத்தால் வந்த தன்றோ–சினங்கொள்ள...

உதவி : வீட்டுக்குவீடு போர், நாட்டுக்கு நாடு போர், இனமும் இனமும் போர், மதமும் மதமும் போர். போரில்லா இடமே இல்லைப் போல் இருக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிச்சண்டை மாட்டுச்சண்டை
ஆட்டுச்சண்டை அண்ணன் தம்பி
சண்டை எத்தனை சண்டையப்பா.

முதல்வா : போர்களுக்குக் காரணம் சினம் தான். சினத்தை அடக்கினால் போர் வராது. சாந்தி சமாதானமமே வரும்.

உதவி : அது சரி சினம் வரக்காரணம் என்ன?

முதல்வர் : பிறர் மீது பொறாமை கொண்டால் சினம் வரும். பிறர் பொருளில், செல்வத்தில் பேராசை கொண்டாலும் சினம் வரும்.

உதவி : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கோ

முதல்வர் : (தானன னானன தானனனே –
தானன னானன தானனனே)
பாரத நாட்டின் சோதரர்கள்,
பாண்டவர் கௌரவர் அறிவீரே
கௌரவர் தலைவன் துரியோதனன்
பாண்டவர் மீது பொறாமை கொண்டான்.
பாண்டவர் அரசைத் தான் கவரப்
பலப்பல சூழ்ச்சிகள் செய்தனனே.
பாண்டவர் அரசைத் தான் கவர்ந்து
வனவாசத்துக் கனுப்பினனே.
கௌரவர் பொறாமை தாங்காது
பாண்டவர் பொறுமை இழந்திட்டார்.
மூண்டது கோபக்கனலங்கே

பாரதப்போரும் மூண்டதுவே.
பாரத நாடே பாழாகிப் போனது
சினத்தால் வந்த கேடன்றே.

உதவி : சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும் என்பது கொஞ்சம் விளங்கிச் சுது.

முதல்வர் : ஆமாம் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் சினம் உண்டானது. அதனால் போர் மூண்டது. போரில் இருபகுதி யார்க்கும் உதவி வந்த மன்னர்களும் படைகளும் மாண்டு மடிந்தனர். அந்தச் சினம் சினங் கொண்டவர்களை மட்டுமன்றி அவர்களைச் சேர்ந்தவர்களையும் அழித்தது – பொறாமையால் வந்த சினம் செய்த அழிவைப் பார்த்தோம்.

உதவி : ஆமா பேராசையாலும் சினம் வரும் என்றீர்களே. அந்தக் கதையையும் கொஞ்சம் சொல்லுங்கோ.

முதல்வர் : ஆசையினால் கோபம் வந்த கதையா?
இராம லட்சுமணர்கள் வனவாசம் செய்த காலத்தில் இராவணன் தங்கை சூர்ப்பனகைக்கு இராமர் மேல் ஆசை வந்தது. அவள் ஒரு அழகிய பெண் வடிவு கொண்டு வந்தாள்.
(தன்னனன னன்னனன தன்னனன
தன்ன)
பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென
அன்ன மென மின்னும்
வஞ்சியென நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்.

உதவி : ஆகா! ஆகா! கேட்கும் போதே இவ்வளவு அழகாயிருக்கே அவ ளைப் பார்த்தால் எப்படியிருக்கும்.

முதல்வர் : அழகிலேதான் ஆபத்திருக்கும் தம்பி. ஆசைப்படாதே. சொல்வதைக் கேள்.
(தன்னன தன்னன தன்னனவே–
தன்னன தன்னன தன்னனவே)
அரக்கரின்குலத்துப் பெண் சூர்ப்பனகை
அழகிய ராமனில் ஆசை கொண்டாள்
அழகிய பெண் போல் உருமாறி
ஆசை மொழிபல பேசினளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தான் தம்பி இலக்குமணன்
அனலாய்ச் சினமே மூண்டதுவே
எடுத்தான் அம்பினைக் கையினிலே
சிதைத்தான் மார்பையும் மூக்கை யுமே
சூர்ப்பனகைக்கு வந்த ஆசையால் இலக்குமணனுக்குச் சினம் வந்தது. இலக்குமணன் சினந்ததால் சூர்ப் பனகை மார்பையும் மூக்கையும் இழந்தாள்.

உதவி : உண்மைதான் கதை நல்லாயிருக்கு

முதல்வர் : சினம் தொடர்ந்தது. மார்பையும் மூக்கையும் இழந்த சூர்ப்பனகை சினங்கொண்டாள். அண்ணன் இராவணனிடம் போனாள்.
(தன்னாவோ தன்னானே தனன னன தன்னானே)
அண்ணாவோ அண்ணாவோ அரனிருந்த மலையெடுத
அண்ணாவோ அண்ணாவோ என் நிலையைப் பாரும் அண்ணா
பொன்னான என் மூக்கும் மார்பும் அறுபட்டனவே
சின்னஞ்சிறு மானிடர்கள் செய்த துயர் பாரும் அண்ணா
என்று அழுது தொழுது அண்ணன் இராவணனிடம் முறையிட்டாள்.

உதவி : இப்பொழுது இராவணனுக்கும் சினம் வந்தது என்று சொல்லுங்கள்.

முதல்வர் : ஆமா சூர்ப்பனகையின் ஆசையால் இலக்குவனுக்குச் சினம் வந்து அந்தச் சினம் சூர்ப்பனகைக்கு வந்து இப்போது அவளிலிருந்து இரா வணனுக்கு வந்துவிட்டது. மன்னாதி மன்னன் இவணன் சும்மா இருப் பானா?
(தன்னன்னத் தனதன்னத் தன தன்ன–தன
தன்னன்னத் தனதன்னத் தனதன்ன.)

முதல்வர் : என் தங்கைக் கவமானம் செய்த வன் – அவன்
எங்கிருந்தாலும் நான் விடு வேனோ
அவன் மங்கையைக் கவர்ந்திடுவன் யான் – அந்த
அற்பமானிடரை நான் விடுவேனோ
என்று பொங்கிவரும் கோபத்துடன் எழுந்தான் இராவணன். சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறைவைத்தான். செய்தியறிந்த இராமலக்குவர்க்குச்சினம் மூண்டது.

உதவி : சூர்ப்பனகையின் ஆசையால் இலக்குவனுக்கு வந்த சினம் திரும்பிச் சூர்ப்பனகைக்கு மூண் டது. அவளிலிருந்து இராவணனு க்கு மூண்டு இப்போது இராமலக்கு வர்களுக்கும் மூண்டு விட்டது. சினம் நெருப்பு என்றது சரி தான். அப்புறம் என்ன வாயிற்று.

முதல்வர் : இராமராவண யுத்தம் மூண்டது. அரக்கர் குலம் அடியோடு அழிந்தது.
(தனனத் தானன தனனனனா)
சினத்தைத் தூண்டிய அரக்கர்குலம்
சினத்தால் அழித்தது பாரீரோ
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல் லுமென்ற
பொய்யா மொழியிது மெய் யன்றோ.

உதவி : அதுசரிதான் உலகப்போர்களைப் பற்றிச் சொன்னீர்கள் அதுவும் சினத் தால் தான் வருமோ.

முதல்வர் : போருக்குக் காரணம் சினமேதான்
தனன தானன தனனன்னே
உலக நாடுகள் தமக்குள்ளே
ஒன்றோடொன்று சினங்கொண்டு
போர்கள் மூண்டிடும் அதனாலே
பொதுவில் அழிவே முடிவாகும்
உலகப் போர்தரும் பாடமிது
உணர்ந்திட வேண்டும் நாமெல்லாம்
முதலாம் இரண்டாம் உலகப் போர்கள் மட்டுமல்ல
இக்காலத்தில் நடைபெறும் போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அழிவில்தான் முடிகின்றன.

உதவி : சினத்தை நீக்கினால் எல்லாம் சரி வரும் என்கிறீர்கள்.

முதல்வர் : (தனனா தனனா தனனன்னா
தனனா தனனா தானன்னா)

சினமே இல்லா இடத்தில்தான்
சிரித்து மகிழ்ந்து வாழ்ந்திடலாம்
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல் வதனால்
சினத்தை ஒழித்து வாழ்ந்திடுவோம்
சினமே இல்லா உலகினை நாம்
சேர்ந்தே படைப்போம் வாருங்கள்

அன்பான சபையோர்களே சினம் என்றும் சேர்ந்தாரைக்
கொல்லுமென்ற கதைகளை நாம் கேட்போம்.
சினத்தைக் கிட்டவும் சேரவிடாமல் நீக்கி
எல்லாரும் சேர்ந்து மகிழ்ந்து வாழ்வோம்.

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லாருக்கும் எங்களது வணக்கம் – உங்கள்
எல்லாருக்கும் எங்களது வணக்கம்
மங்களம், மங்களம், மங்களம்!

(2008 தமிழ்த்தினப் போட்டியில் நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி தங்கப்பதக்கம் பெற்றது. (28.1.2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கக் கலை

2. சிந்துநடைக் கூத்து மாங்கனி பெற்ற பிள்ளை

(கயிலாயத்தில் சிவனும் உமையும் இருக்க அங்கு நாரதர் மாங்கனியுடன் வருதல்)
(அம்மாவைத் தேடியல்லோ... என்ற மெட்டு)

நாரதர் : சிவனாரைத் தேடியல்லோ
நாரதரும் நானே – வெகு
சீக்கிரமாய் ஓடிவாறேன் நார
தரும் நானே
மூவுலகும் சஞ்சரிக்கும் நாரத
ரும் நானே–சிவனை
முடிசாய்த்துத் தெண்டனிட்
டேன் நாரதரும் நானே
கயிலாய நாதரிடம் நாரதரும்
நானே–ஒரு
காரியமாய் வந்து நின்றென்
நாரத ரும் நானே

சிவன் : வரவேண்டும் வரவேண்டும்
நாரதரே வாரும் – இங்கு
வந்தசெய்தி என்ன சொல்வீர்
நாரதரே நீரும்
கலகம் ஒன்றை மூட்டுதற்கோ
நாரதரே நீரும் – இங்கு
கடுகதியாய் வந்து நின்றீர்
நாரதரே வாரும்

நாரதர் : நாரதரின் கலகமென்றால்
சிவனாரே கேளும் – அது
நன்மையில்தான் முடியு
மன்றோ சிவனாரே கேளும்
மூவுலகும் கிடைக்காத கனி
கொண்டு வந்தேன் – அதை
முழுதாகச் சிவனார்க்கே
அர்ப்பணிக்க வந்தேன்.

உமை : என்னகனி கொண்டுவந்தீர்
நாரதரே நீரும் – அதை
எமக்கறியச் சொல்லிடுவீர் நார
தரே நீரும்
முக்கனியில் சிறந்தகனி என்ன
கொண்டு வந்தீர்–இப்போ
அக்கனியின் அருமையென்ன
சொல்லிடுவீர் நீரே.

நாரதர் : ஆண்டுக்கொரு காய்காய்த்து
அதிசயமாய்ப் பழுக்கும்
அதிமதுர மாங்கனியைத் தந்தி
டவே வந்தேன்
ஏழுலகும் கிடைக்காத இனிய
கனி தந்தேன் – இதோ
இக்கனியைப் பெற்றெனக்கு
நல்ல ருளைத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாரதர் மாங்கனியைச் சிவனிடம் கொடுக்கப் பிள்ளையாரும் முருகனும் ஓடிவருதல்)
(முத்தான வாய் திறந்து... சின்னவாய் திறந்து... மெட்டு)

பிள்ளையார் : இனிய நல்ல... நல்ல மாங்கனியை... நல்ல
மாங்கனியை என்னிடமே பெற்றாரே தந்திடுவீர்.

முருகன் : அதிமதுர இந்த மாங்கனியை...
இந்த மாங்கனியை அன்புடனே எனக்கே தந்திடுவீர்

பிள்ளை : முந்திமுதல் வந்த மூத்த பிள்ளை... நானே
மூத்தபிள்ளை மாங்கனியை எனக்கே தந்திடுவீர்.

முருகன் : இளையமகன் நானே இனிய மகன்–உங்கள் இனிய மகன் இக்கனியை எனக்கே தந்திடுவீர்.

சிவன் : போட்டியொன்று நானும் வைத்திடு வேன்,
போட்டி வைத்திடுவேன், வென்றவர்க்கே கனியைத் தந்திடுவேன்.

பிள்ளை
முருகன் : இவ்வுலகைச் சுற்றி வந்தவர்க்கே முதலில் வந்தவர்க்கே இக்கனியை நானும் தந்திடுவேன்
சென்றிடுவீர் சுற்றிவந்திடுவீர் – வலம்வந்திடுவீர்
வென்றுவந்தே கனியைப் பெற்றிடுவீர்
(முதலில் முருகனும் அவர் போகப் பிள்ளையாரும் புறப்படல்.) (அத் தரல்லோ அத்தர் மணக்குதடா...மெட்டு)

முருகன் : ஏறிடுவேன் மயில்வாகனத்தில் – உலகை
இக்கணமே வலம் வந்திடுவேன்
ஆனைமுகன் எழுந்து அசைய முன்னே–நானே
அக்கனியைப் பெற்று மகிழ்ந் திடுவேன்.

(முருகன் போதல் நாரதர் எழுந்து போக பிள்ளையார் நாரதரைப் பார்த்து)

பிள்ளை : அம்மையப் பருக்குள்ளே உலகடங்கும் – அதனால்
அவரைவலம் வந்தால் வெற்றி யன்றோ

நாரதர் : அப்படியே செய்வீர் வென்றிடு வீர்–வெற்றிக் கனியுமக்கே இதோ சென்றிடு வீர்

(நாரதர் போகப் பிள்ளையார் சிவனையும் உமையையும் வலம் வந்து)

பிள்ளை : உலகைவலம் வந்தேன் பெற்றோரே– உங்கள்
இருவர்க்குள்ளும் உலகைக் கண்டு வந்தேன்
வென்றுவந்தேன் போட்டி வென்று வந்தேன் – கனியைத்
தந்திடுவீர் எனக்கே தந்திடுவீர்

சிவன் : தந்தைதாயே உலகம் என்ற உண்மை காட்டி வென்று வந்தாய் மகனே வென்று வந்தாய்
தந்திடுவேன் உனக்கே மாங்கனியை – இதோ
வென்றவன் நீ கனியைப் பெற்றிடு வாய்
(மாங்கனியைக் கொடுக்க முருகன் வருதல்)

முருகன் : வெற்றியல்லோ வெற்றி பெற்று வந்தேன் – உலகைச்
சுற்றிவந்தேன் வெற்றி பெற்று வந்தேன்
வெற்றிக்கனி எனக்கே தந்திடுவீர் – என்னைப்
பெற்றவரே வெற்றிக் கனிதருவீர்

சிவன் : அண்ணன் எம்மைச் சுற்றி வந்தல்லவோ–வெற்றி
அப்பொழுதே பெற்றுக் கனியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றான்

பிள்ளை : வெற்றிக்கனி நானே பெற்று விட்டேன்-தம்பி
வந்திடுவாய் உனக்கும் தந்திடுவேன்

(முருகன் ஏமாற்றமும் கோபமும் அடைந்து வெளியேறுதல். வரமாட்டேன்... நானும் வரமாட்டேன்... மெட்டு)

முருகன் : வரமாட்டேன் நானும் வரமாட்டேன் வரமாட்டேன்
என்னை - வஞ்சனை செய்த பெற்றோரிடம் எப்போதும்
வரமாட்டேன் வரமாட்டேன்
(உமாதேவியார் முருகன் கையைப் பிடித்து)

உமை : விடமாட்டேன் உன்னை நான் விட மாட்டேன் விடமாட்டேனே
உங்கள் உறவினை இன்றே துறந்திட்டேன்
பழநிமலைக்கு நான் ஆண்டி யாய்ப் போகிறேன்.
வரமாட்டேன் வரமாட்டேனே
(முருகன் கோபத்துடன் வெளியேறல்)
(அம்மாவைத் தேடியல்லோ... மெட்டு)

சிவன் : நாரதனார் கலகமொன்றை மூட்டி விட்டுச் சென்றார் - அதில்
நம் குடும்பம் குலைந்ததடி பெண் ணங்கே பாராய்
நாரதரின் கலகத்திலே நன்மை யுண்டு கண்டீர் - அந்த
நன்மையை நாம் சொன்னாலே நாடுநலம்பெறுமே
அம்மை அப்ப ரேயுலகமும் என்ற உண்மைதன்னை இந்த
அகிலமுமே அறிந்ததன்றோ விநாயகரினாலே

சிவன் : உலகமெல்லாம் நாமிருப் போம் என்றபெரும் உண்மை- இந்த
உலகமெல்லாம் அறிந்த தன்றோ முருகன் செயலாலே
எவ்விடத்தும் நாமிருப்போம் எம்மில் எல்லாம் அடங்கும் - இந்த
உண்மையறிந் துய்ந்திடுவீர் உலகோரே சுபமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கக் கலை

3. நாட்டிய நாடகம் ஐந்திணை

காட்சி 1 – பொன்மாலைக்காட்சி

பாத்திரங்கள் : ஆணும் பெண்ணும் ஆக இருவர்

ஆண் – வேஷ்டி, நேஷனல், தலைப்பாகை, தோடு, சால்வை, கழுத்தில் புராதன மனிதனாக இருப்பார்.

பெண் – சேலை உடுத்துத் தலையலங் காரம் செய்து கொண்டை மாலை மற்றும் நகைகள் அணிந்து கழுத்தில் மாலை யுடன் பூரண பெண்ணாக இருப்பார்.

காட்சி 2 மலையும் மலைசார்ந்த நில மும் ஆகிய குறிஞ்சிநிலம்

பாத்திரங்கள் : முருகனும், குறவரும், குறத்தி யரும் (விரும்பிய தொகை)

காட்சி 3 : காடும் காடுசார்ந்த நிலமும் ஆகிய முல்லைநிலம்

பாத்திரங்கள் : திருமாலும் இடையரும், இடைச்சியரும்

காட்சி4 : வயலும் வயல்சார்ந்த மருத நிலம்

பாத்திரங்கள் : இந்திரனும் உழவரும், உழத்தி யரும்

காட்சி 5 : கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலம்

பாத்திரங்கள் : வருணனும், நுளையரும், நுளைச்சியரும் (கடற்றொழி லாளர்)

காட்சி 6 : வெப்பமான வனாந்தரப் பாலை நிலம்

பாத்திரங்கள் : கொற்றலையும் எயினர், எயிற்றியர் (கள்ளர்)

காட்சி 7 – அரங்கின் முன்பக்கம்

பாத்திரங்கள் : எல்லோரும்

இராகங்கள் : ஐந்திணைக்கும் தனித்தனி பண்கள் உள்ளன. அவ்வப் பண்களுக்குரிய இரா கங்களே போடப்பட்டுள்ளன.

தாளம் : பொருத்தமான விதத்தில் அமைக்கலாம்

பாத்திரங்கள் : ஒவ்வொரு நிலத்துக்கும் அதற் குரிய, தெய்வமும், ஆண்கள் மூவரும் பெண்கள் மூலரும் இருப்பர் தேவையெனில் கூட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்திணை (நாட்டிய நாடகம்)

காட்சி -1

(மேடையின் உட்புறம் இருபக்கத்திலிருந்தும் எடுத்துரைஞர் இருவர் பாடி ஆடிக் கொண்டு மேடையின் முன்புறம் வருகின்றனர்)

ஒருவர் ஆண் : வேட்டி, நேஷனல், தலைப் பாகை, காதுகளில் தோடு, சால்வை, கழுத்தில் மாலை

பெண் ஒருவர் : சேலை எடுத்துக் கொண்டை போட்டுக் கொண்டை மாலை, தலை நகைகள் அணிந்து கழுத்தில் மலர் மாலை

காலம் : பொன்னிற மாலைப்பொழுது

இராகம் : மத்தியமாவதி

தாளம்

ஆண் : ஐந்திணை நாட்டிய நாடகம் பார்த்திட
அன்புடன் உங்களை வரவேற் றோம்
சங்கத் தமிழரின் சீரிய வாழ்வி னைத்
தங்கத் தமிழ்பாடி ஆடிடுவோம்

பெண் : குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும்
பாலையும் ஐந்தினை பார்த் திடுவீர்
ஐந்து நிலத்திலும் வாழ்ந்த தமிழரின்
ஐந்திணை ஒழுக்கத்தைப் பார்த்திடுவீர்

வேறு நடை

இருவரும் : குறிஞ்சி மலைநிலக் காட்சி பாரீர் அதோ
குறவர் குலதெய்வம் முரகன் பாரீர்
குறிஞ்சிப்பண் இசைபாடி குதூகமாகவே
குறவரும் குறத்தியரும் ஆடி வாரார்

காட்சி – 2

குறிஞ்சி நிலக்காட்சி

முருகனைக் சூழ்ந்து குறவரும் குறத்தியரும் பாடியாடி வருகின்றனர்

இராகம் : குறிஞ்சிப்பண் – கரிகாம் போதி

தாளம் : (ஆண்களும் பெண்களும் வேறுவேறாக ஆடதல்)

குறவர் : பூமியிலே உண்டான முதல் நிலமே மலைதான்
மலையும்மலை சார்நிலமும் குறிஞ்சி நிலம் பாரும்

குறத்தியர் : நாமிருக்கும் நிலங்குறிஞ்சி நாம் குறவர் குடிகள்
நாள்தோறும் தேன்எடுத்து வேட்டையாடி வாழ்வோம்

குறவர் : குன்றுதோறும் ஆடிவரும் முரகன் எங்கள் தெய்வம்
காவடியும் வெறியாட்டும் ஆடி நாங்கள் தொழுவோம்

குறத்தியர் : நன்றாகத் தேன்தினையும் கிழங்குகனி வகையும்
நாம்படைத்து வணங்கிடு வோம் நம்குலத்தைக் காப்பார்
(ஆணம் பெண்ணும் சோடி சேர்ந்து ஆடதல்)

வேறுநடை (சோடி சேர்ந்து)

குறவர் : எடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாமல் நாங்கள் இணைந் திடுவோம் இன்பக்காதல் வாழ் வினிலே மகிழ்வோம்

குறத்தியர் : தடுப்பாரே இல்லாத காந்தர்வ மணத்தில்
தமிழ்த்தெய்வம் வள்ளிமண வாளன்போலே வாழ்வோம்.
(ஆணம் பெண்ணும் சோடி சேர்ந்து ஆடவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி – 3

முல்லை நிலக்காட்சி, பின்னணியில் புல்லாங் குழல் ஓசை எடுத்துரைஞர் இருவரும் பாடிபாடி வருதல்

இராகம் : முல்லைப்பண்

தாளம் : மோகனம்

இருவரும் : முல்லைநிலமிது காட்டுநிலம் இதில்
இடையர்கள் மந்தைகள் மேய்த்திடுவார்
முல்லைக்குரிய குலதெய்வம் திருமால்
வேயங்குழல் கேட்குது பாரீரோ

(திருமால் புல்லாங்குழல் ஊதிவர அவரைச் சூழ்ந்து இடையரும் இடைச்சியரும் ஆடிவருதல்)

இராகம் : மோகனம் தாளம்

எல்லாரும் : முல்லை நிலத்து இடையர்கள் நாம்
மந்தை மேய்த்து வாழ்ந்திடு வோம்
பாலும் தயிரும் கனி கிழங்கும்
பாங்காய் உண்டு களித்திடு வோம்
கோகுலம் காக்கும் திருமால் எம்
குலத்தின் தெய்வம் வணங்கிடு வோம்
கோபா லன்புகழ் பாடிநிதம்
குரவைக் கூத்து ஆடிடுவோம்

வேறு நடை

(பெண்கள் தனித்தனிவாட்டத்துடன் வழி பார்த்தல்)

இடைச்சியர் : காதலன் போனான் பொருள் தேடக்
காணலை யேயினும் காண லையே
(வாட்டமுற்றிருத்தல்)
கார்கால மானது முல்லையும் மலர்ந்தது
காதலன் வரவு காணலையே

வேறு நடை (அவர்கள் வந்து சோடி சேர்தல்)

இடையர்கள் : காத்திருக்கும் காதலியே கண்மணியே பாராய்
கைப்பொருள்தான் தேடிவந் தேன் களிப்புடனே வாநீ
கார்காலம் வந்தது என் காதலி யைத் தேடி
களித்திடலாம் குலமகளே காத்திருத்தல் போதும்

காட்சி – 4

மருதநிலக் காட்சி

எடுத்துரைஞர் இருவரும் ஆடிப்பாடிவருதல்

இராகம் : மருதப்பண்

தாளம் : ஆனந்தபைரவி

இருவரும் : மருதநில வயல்களிலே
உழவர்களும் உழத்தியரும்
பெருவிளைவு கண்டிடுவர்
இன்பசுகம் கண்டிடுவர்
என்றென்றும் பாடியாடி
ஊடலிலே திழைத்திடுவர்

(இந்திரனைச் சூழ்ந்து உழவரும் உழத்தியரும் ஆடிப்பாடி வருதல்)

உழவர் : மருதநில வயல் உழுது பயிர்
விளைத்து வளம்பெருக்கி
விருந்தினர்க்கும் ஈந்துவந்து
வள்ளல்களாய் வாழ்ந்திடு வோம்

உழத்தி : ஓய்வுகால நேரமெல்லாம்
உல்லாசமாய்க் கலைவளர்த்து
ஆடிப்பாடிக் களித்திடுவோம்
தேடிக்கூடிக் குலவிடுவோம்.

உழவர் : செல்வமுயர் மருதநிலத்
தெய்வம் தேவ இந்திரனை
எல்லவரும் வணங்கிடுவோம்
இன்பசுகம் கண்டிடுவோம்

வேறு நடை

(ஊடல் – ஆண்கள் கிட்டவர பெண்கள் வெறுத் தல்)

உழத்தி : என்னை மறந்துநீர் இன்னேரம் மட்டும்
எவருடன் கூடிக்களித்திருந்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தொடாதீர் நீர் எட்டியே நில்லும்
ஏறெடுத்தும் உன்னைப் பார்க்கமாட்டேன்

(ஆண் முகத்தைத் தடவி அணைத்தல்)

உழவன் : உன் நினைவில்தானே ஓடி வந்தேன் பெண்ணே
ஊடல்கொள்ளாதே நீ பெண் ணங்கே
ஊடலைவிட்டு நாம் கூடலாம் வாடி நீ
உன்னை மறப்பேனோ என்னு யிரே.

காட்சி – 5

நெய்தல் நிலக்காட்சி (கடலும் கடல்சார் கரையும்)

எடுத்துரைஞர் :

இராகம் : மலையமாருதம்

தாளம் :

நெய்தற்பண்

இருவரும் : கடலும் கடல்சார்ந்த நிலமும் நெய்தல்
கடல்வளத் துக்கிங்கு ஏதநிகர்
நெய்தல் நிலத்துக்குத் தெய் வம் வருணன்
வையம் வளம்பெற வைத்தி டல் பாரீர்
வருணனும் நுளையரும் நுளைச்சியர் கூடி
ஆடிவருகின்ற அழகினைப் பாரும்

(வருணபகவானும் அவரைச் சூழ நுளையர் நுளைச்சியரும் ஆடிப்பாடி வருதல் (மீனவர்)

இராகம் : நெய்தற்பண்

தாளம்

மலயமாருதம்

எல்லோரும் : நீலத்திரைக்கடல் ஓரத்திலே
நீண்டுபரந்து கிடக்கு மெங்கள்
நெய்தல் நிலத்தின் எழில் பாரும்
நித்திலம் கொழித்திடும் அலை பாரும்

நுளையர் : கடல்வளம் எல்லாமே எங்கள் கையில்
கடல்படு திரவியம் நாம் கொணர்வோம்
படகுகள் கப்பல்கள் ஓட்டியே நாங்கள்
பற்பல நாட்டினில் வணிகம் செய்வோம்

நுளைச்சியர் : வருணபகவானே எங்கள் தெய்வம்
வளங்கள் எல்லாம் அள்ளித் தருவானே
பெருமை பெறும்நவ நாகரீகம் எல்லாம்
வருவதிங்கே எங்கள் வாழ் வாலே

(நடைவேறு)

சோகம் : தனித்தனிப்பெண்கள் வருந்து தல்

நுளைச்சி : கடலுக்குப் போனஎந்தன் காதலர் திரும்பக் காணேனன்
கடற்புயல் அடித்ததுண்டோ கப் பல்தான் கவிழ்ந்து போச்சோ
உடலெலாம் பதறுதையோ இரங்கிய ஏங்கலாச்சே
கடவுளே வருணனே என் கண வரைக் காத்துத் தாராய்

காட்சி – 6

பாலை நிலக்காட்சி கொற்றவையும் எயினர் எயிற்றியரும் (கொடியவர்கள்)

எடுத்துரைஞர் :

தாளம் :

சங்கராபரணம்

ஆண் : கொடுமைக்கிருப்பிடம் பாலைநிலம்
கொற்றவையேயவர் மறக் கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் : நடுநடுங்க வைக்கும் வெம்மையது
கொடியவர் எயினர்கள் வாரார்பார்
(வேறுநடை) (கடுமையான நடை)

எல்லோரும் : முல்லையும் குறிஞ்சியும் வெந்தே அழிந்தது
எல்லையில் பாலை நிலம் உருவானது
அல்லற்பட்டே நாங்கள் அலைந்துலைந்தாலும்
அகப்பட்ட பேர்களைக் கொள்ளையடிப்போம்

எயினர் : கொற்றவை எங்கள் குலதெய்வம் இங்கு
கொடுமை எதற்குமே அஞ்சோம் இங்கு
மற்றவர் துன்பத்தில் மகிழ்ந்திடுவோம் என்றும்
மறத்தொழில் செய்வதே குல வழக்கம்

வேறுநடை (கவலை) பிரிவால் துயர் அடைதல்

எயிற்றியர் : எம்மவர் எங்கேதான் போனாரோ அவர்
ஏது பழிசெய்து மாண்டாரோ அவர்
ஏது பழிசெய்து மாண்டாரோ
என்றென்றும் பிரிவிலே வாடுவதே இங்கு
எங்கள் தொழிலாச்சு ஏது செய்வோம்

காட்சி – 7

(முதலில் எடுத்துரைஞர் வர அவர்களைத் தொடர்ந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஒழுங்கில் எல்லோரும் வந்து ஆடிநிறைவு செய்தல்)

இராகம் : மத்தியாவதி

தாளம் :

ஆண் : ஐந்திணை மக்களும் ஒன்றாய்க் கலந்தனர்
அவரவர் ஒழுக்கமும் கலைகளும் வளர்ந்தன

பெண் : இன்றிந்த உலகம் உயர்ந்திடக் கண்டனம்
எல்லோரும் ஓரினம் என்றே மலர்ந்தனம்

எல்லோரும் : யாதும் ஊரெ யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
சங்கத் தமிழனின் பொன் மொழி நின்று
தங்கத் தமிழதரும் பண்பாய் மலர்ந்தது.

(வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் 2009.08.23 இல் நர்த்தன நிர்ணயா நாட்டிய மாலையில் அரங்கேற்றப்பட்டது.

நர்த்தன நிர்ணயா – இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடந்த நாட்டிய மாலை பாராட்டு 23.06.2009

நர்த்தன நிர்ணயா நாட்டிய மாலையில்
அற்புதமான ஆடல்கள் கண்டோம்
அத்தனை ஆடலும் அம்சமாய் அழகாய்ச்
சுத்தமாய்க் கவர்ச்சியாய்த் தரமாய்இருந்தன

நுண்ணியவர்ண ஆடைஅணிகளும்
கண்ணுக்கினிய ஒப்பனைச் செப்பமும்
தேவகன்னியர் ஆடலோ இதுவென
ஆவல்மீதூரா அகமிக மகிழ்ந்தோம்

ஐந்தினை நாட்டிய நாடகஆடலும்
அரங்கக்காட்சி அமைப்பும் இசையும்
சிந்தைக்கினிய புதமைகள் காட்டிய
திறமும் கண்டோம் போற்றினோம் வாழ்க.

(எனது ஐந்திணை நாட்டிய நாடகமும் அரங் கேறியது எனக்குப் பொன்னாடை மரியாதையும் செய்தனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கக் கலை

4. இசைநாடகம் இரண்டாம் சுயம்வரம்

காட்சி – 1 வீமன் அரண்மனை

(வீமராசன் அரண்மனையில் அந்தணன் வந்து சந்தித்தல்)

இராகம் : சண்முகப்பிரியா

அந்தணன் : மன்னவனே வீமராசா உன்னடிகள்
போற்றி வெந்தே
என்னை நீர் அழைத்த செய்தி
ஏதெனவே எடுத்துரைப்பீர்

வீமன் : என்னினிய அந்தணரே என்துயரம்
கேளும் ஐயா
பொன்மகள் என்தமயந்தி என்
மகளைக் காணேனையா

அந்தணன் : என்னதான் நடந்ததுவே எனக்
கதனைச் சொல்லிடுவீர்
அன்னவளைத் தேடியுங்கள் பொன்
னடியில் சேர்த்திடுவேன்.

வீமன் : இராகம் – மோகனம்
நிடதறன் நாட்டின் வேந்தன்
நீள்புகழான் நளமாராசன்
சுடர்க்கொடி தமயந்தியைச் சுயம்
வரத்தில் மாலையிட்டு
விடலரும் காதல்வாழ்வில் வியன்
மக்கள் இருவரோடும்
அடல்செறி புகழினோடும் அர
சாட்சி செய்யுங்காலை
தொடரலரும் சூதில் தோற்று
தூயதன் வாழ்வும் தோற்று
நாடுநல் நகரிழந்து நன்மக்கள்
தமைப்பிரிந்து
காடுதான் கதியேயாகக் கானகம்
சென்றார் என்று
கேடுசூழ் செய்திகேட்டு வாடிநான்
வருந்தலானேன்

அந்தணன் : வாடிநீ வருந்தவேண்டாம் வானு
யர் காடும் நாடும் தேடிநான் சென்
றேயுங்கள் செல்வங்கள் தமைச்
சேர்ப்பிப்பேன்

காட்சி – 2 காட்டுவழி

(காட்டுவழியில் அலங்கோலமாய்த் தமயந்தி தனித்துவர அந்தணர் சந்தித்தல்

இராகம் : சகானா

தமயந்தி : ஆடிவரும் மென்காற்றே அசைந்து
விழும் பூங்கொடியே
ஓடுகின்ற வான்முகிலே ஒலி
யெழுப்பும் புள்ளினமே
காடுதனில் எனைப்பிரிந்த காத
லரைக் கண்டீரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியழும் என்துயரைத் தெரி விக்க மாட்டீரோ

அந்தணன் : கூந்தல் அவிழ்ந்துவிழக் குறு வேர்வை உடல்நனைய
பூந்தா மரைபோன்ற பொன்மேனி வாடிவிழக்
காந்தள் மலர்க்கைசோரக் கால்கள் தடு மாறிவரும்
ஏந்திழையே நீயாரோ என்னதுயர் உற்றனையோ

தமயந்தி : வீமன்திரு மடந்தைநான் விதர்ப்ப நாட்டு இளவரசி
நாமநெடு வைவேலான் நளராசன் பத்தினிநான்

பிராமணன்: வீமராசன் தூதுவன் நான் உன்னையே தேடிவந்தேன்
தாமதமேன் வாரும் வாரும் தந்தையிடம் சேர்த்திடுவேன்

காட்சி – 3 வீமன் அரண்மனை

(தமயந்தி வர வீமராசனும் அரசியும் பிள்ளை களும் கட்டியணைத்தல்)

இராகம் : முகாரி

பிள்ளைகள்: அன்னையேதாயே அம்மா எம் உயிர்க்குயிரே
உன்னைநாம் காணாமல் உயிர்த்துடித்துப் போனோமே

அரிசி

வீமன் : கானகத்தில் காரிருளில் கண வனுனை விட்டேக
யாரை நினைத்தாயோ என்னதுயர்ப் பட்டாயோ

தமயந்தி : கணவனை நான் காணாமல் கதறிவிழுந் தோடுகையில் காட்டி லொரு கரும்பாம்பு கல்வியெனை விழுங்கியதே கானகத்து வேடன தைக் கண்டென்னை காப்பாற்றி தன்னுடனே வாவென்று தப்பாகக் கைப்பிடித்தான்
நானவனைக் கோபித்துப் பார்க்க அவன் நீறானான்
ஏனோ இவ் வவலமென எண்ணிவர இவர்வந்தார்.

வீமன் : அந்தணரே மீண்டும்போய் மருகன் நளமாராசன்
ஏங்கிருந்தாலும் தேடி இங்கே அழைத்துவாரும்

தமயந்தி : கானகத்துக் காதலியைக் காரிரு ளில் கைவிட்டுப்போனதுவும் வெந் தர்க்குப் போதுமோ என்று சொல்வீர்
ஏதும்பதில் சொல்வாரை நன்றா யறிந்து வாரும்
நாமவரைக் கண்டிடவே நல்லவழி இதுவாகும்.

காட்சி – 4 வீதிவழி

(தனிவழியே அந்தணன் நளனைக்காணல்)

இராகம் : அடாணா

அந்தணன் : கானகத்தில் காதலியைக் காரிரு ளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தர்க்கும் போது வதோ பொருந்துவதோ

நளன் : இன்று நடப்பதெல்லாம் பண்டை விதிப்பயனே
என்றே அறிந்திடுவீர் இதற்கேன் புலம்புகின்றீர்

அந்தணன் : என் சொல்லுக் கெதிர்மாற்றம் சொல்லும் நீர்யாரையா
என்னஊர் என்னதொழில் எவர் நீரோ சொல்ஐயா

நளன் : அயோத்திநகர் மன்னனுக்குத் தேரோட்டும் பாகன் நான்
அவருக்கு மடப்பள்ளித் தொழிலும் நான் செய்திடுவேன்

காட்சி – 5 வீமன் அரண்மனை

(அந்தணன் வரத் தமயந்தி கேட்டல்)

இராகம் : பைரவி

தமயந்தி : எங்கெங்கு சென்றீர்ஐயா யாரும் பதில் சொன்னாரோ
என்னுயிர் நாயகனை எங்கேனும் கண்டதுண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் : வாக்கினால் மன்னவனை ஒப்பான் ஒருவனுள்ளான்
ஆக்கையோ நோக்கும்போது அவனுருவம் இல்லையம்மா
அயோத்திநகர் மன்னனுக்குத் தேரோட்டும் சமையலாளாம்
அவனையே ஐயுற்றேன் நான் ஆராய்ந்தறிவீர் அம்மா

தமயந்தி : மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைப்பாய் இப்பொழுதே
மாண்தேர் அயோத்தி மன்னன் வருவானெம் மாளிகைக்கு
காண்போம் தேர்ப்பாகனையும் கண் டுண்மை தெரிந்திடலாம்

காட்சி – 6 அயோத்தி அரண்மனை
இராகம் : கேதாரகௌளை
(விருத்தம்)

அந்தணன்: நன்னகர் அயோத்தி வேந்தே நாளையே வீமன்செல்வி
பொன்மகள் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வர நாளென்று
இன்னகர் வேந்தர்க்கெல்லாம் இனியநன் முரசறைந்தார்
நன்மண மாலைசூட நயந்துநீர் வருவீர் இன்றே

அயோத்திமன் :
முன்னே நான் தோற்றுப்போன பெண்மகள் தமயந்திமாது
என்னையே விரும்பிரண்டாம் சுயம்வரம் கொண்டாள் இன்றே
என்னரும் தேர்ப்பாகா நீ இப்போதே கொணர்வாய் தேரை
அன்னகர் செல்வோம் வீமன் பொன்மகள் மாலை கொள்வேன்.
(தேரோட்டம் ஜதிக்கு ஆடிச் செல்லுதல்)

காட்சி – 7 வீமன் அரண்மனை
(அயோத்தி மன்னனை வீமன் வரவேற்றல்)
இராகம் : கல்யாண வசந்தம்

அயோத்திமன் :
இன்றுன்னைக் காணும் ஆவலால் இங்குவந்தேன்
மன்றல் மலர்த்தாராய் மகள்மற்றும் உள்ளோர் நலமோ

வீமன்: நன்றாகநும்வரவு நானும் மிக மகிழ்ந்தேன்
இன்றெந்தன் மாளிகையில் இன்பாய் இருந்திடலாம்

(இருவரும் உள்ளேபோக நளன் தனிமையில்)

இராகம் : பைரவி

நளன் : என்காதல் மனையாளுக்கு இரண்டாம் சுயம்வரம் என்று என்காதில்
நாராசம்போல இச்செய்தி கேட்கலாச்சே
என் உடல் அரவம்தீண்டி என் கோலம் மாறிப்போச்சே
என்னையார் அறிவார் நானே நளனென்றால் நம்புவாரோ

(தமயந்தி பிள்ளைகளை நளனிடம் அனுப்பித் தான் மறைந்து நிற்றல்)

பிள்ளைகள் : ஐயா நீங்கள் யாரோ ஏன்இங்கு வந்தீர்களோ
மெய்யாய் உங்களைப்பார்க்க விருப்பாய் இருக்கிறதே

நளன் : (பிள்ளைகளை அணைத்து)
என்மக்கள் போல்கின்றீர் யார் மக்கள் பிள்ளைகளே!
அன்பினாலே கேட்டேன் அறியவும் ஆவல்கொண்டேன்.

பிள்ளை : மன்னுநம் நிடதநாட்டு நளராசன் மக்கள் நாங்கள்
எம்நகர் சூதில் தோற்று எந்தைதாய் காட்டுக்கேகி
அன்னையைத் தனியேவிட்டு தந்தையும் எங்கோ சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னகர் தனில் வாழ்கின்றோம்
எம்நகர் பிறன் ஆள்கிறான்

நளன் : உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிவந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றொ இளவரசே

பிள்ளை : எங்கோமான் வாய்மை அறிவாயோ அடுமடையா
இங்கேவீண் வார்த்தை ஏதுக்குரைத்தாய் நீ

நளன் : மன்னர் பெருமை மடையர் அறிவாரோ
உன்னை அறியா துரைசெய்த என்னை நீ
மன்னிக்க வேண்டும் மன்னர் இளவரசே
என்னிதயம் கசிந்துருக உன்னை நான் போற்றுகிறேன்

(தமயந்தி ஓடிவந்து காலில் விழுந்து)

இராகம் : பைரவி

தமயந்தி : தேர்ஓட்டி போலவந்த தேர்வேந்தா என்தலைவா
பார்போற்றும் உன்னுருவம் கறுத்துச் சிறுத்ததென்ன
யார்என்ன செய்தாரோ பழையவுரு எங்கொளித்தாய்
பார்வேந்தே பவளம்போல் பழையவுருக் காட்டாயோ

நளன் : கானகத் தீயில்வெந்த கார்க்கோடன் என்னும்பாம்பைக் காப்பாற்றும் போதில் என்னைக் கடித்திட இவ்வுரு வமானேன் கார்க்கோடன் தந்த இந்த ஆடையை அணிவே னானால் பார் வேந்தன் நளனே யாவேன் வரமுண்டு பாராய் நீயே

(ஆடையுடன் வெளியே போக அழகிய நளன் வரல்)

தமயந்தி : என்னுயிரே மன்னவரே என்னிடமே வந்தனையே
பொன்னுடலம் முன்போல பொலிவுறவே கண்டனமே
என்னுயிராம் பிள்ளைகளே அன்னையரே தந்தையரே
என்துயரம் தீர்த்ததின்று எல்லோரும் சேர்ந்தனமே.

கலிபுருஷர் : கலியன்நான் உமைப்பிடித்துக் கனதுன்பம் செய்துவிட்டேன்
வலியெல்லாம் பொறுத்தமன்னன் வாய்மையும் மனையாள் கற்பும்
கலியென்னை வென்றதாலே கடுகிநீர் நிடதம் சென்று
பொலிவுடன் ஆட்சிபெற்ற புகழ்பெற்று வாழுவீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைஎழில் 2014
விருது பெறுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதபிள்ளை சரவணபவானந்தன்

[இசை நாடகம்]

1956.03.14இல் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் பிறந்த இவர் தற்போது பாரதிபுரம் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். இவர் 1982ஆம் ஆண்டு நடிகமணி V.V.வைரமுத்துவின் மயான காண்டம் நாடகத்தில் சந்திரமதியாக நடித்தவர். அதன் பின்னர் நல்ல தங்காள், சத்தியவான், வள்ளி திருமணம், மார்க்கண்டேயர், கோவலன் கண்ணகி போன்ற இசை நாடகங்களில் நடிகமணி வைரமுத்து V.N.செல்வராஜா, நற்குணம் போன்ற இசைநாடகக் கலைஞர்களுடனும், பின்னர் அண்ணாவியாராக தனது நெறிப்படுத்தலுடனும் இசைநாடகங்களை நடித்து வருகின்றார்.

இசைநாடகங்களை அழியவிடாது காத்துவரும் பெருமை இவருக்கும் உண்டு. அத்தோடு வில்லுப்பாட்டு, பஜனைபாடுதலையும் பணியாகக் கொண்டவர்.

இவர்தம் கலைச்சேவையைப் பாராட்டி 2013ஆம் ஆண்டு மலையாளபுரம் கற்பக முத்துமாரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபை கௌரவித்தது, அத்தோடு 2014ஆம் ஆண்டு ஆளுனர் விருது இசைநாடகப் போட்டியில் பங்குபற்றி பாராட்டுச் சான்றிதழும் பெற்றுள்ளார்.

இவரது கடந்த 30 வருடத்திற்கு மேலான கலைச்சேவையைப் பாராட்டி கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை 2014ம் ஆண்டுக்கான "கரைஎழில்" விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுச்சாமி உமாகாந்தன்

[நாடகம்]

1964.03.20 இல் பலாலியில் பிறந்த இவர். தற்போது தொண்டமான் நகர் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். இவர் தந்தையார் கீரிமலையைச் சேர்ந்த பொன்னுச்சாமி தேசியர், பிரபல ஆர்மோனியக் கலைஞராக வரலாற்றில் புகழ் பெற்றவர், தந்தை வழியே மகனும் கலைச்சேவை ஆற்ற உறுதிபூண்டு நாடகத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து சேவையாற்று கின்றார்.

"சுத்தம் சுகம் தரும்", "மாற்றம்", "இது விதியல்ல", சுகமான வாழ்வு, மதுவின் பரிவு, வாடகை, மனிதம் ஒன்றே போன்ற நாடகங்களையும், சமூக சீர்திருத்த பல்வேறு தெருக்கூத்துக்களையும், தெருவெளி நாடகங்களையும் தயாரித்து நெறிப்படுத்தி அரங்கேற்றி நடித்து வருகின்றார்.

இவர் தம் கலைச்சேவையைப் பாராட்டி மலையாளபுரம் கற்பக முத்துமாரி அம்மன் ஆலயம், பாரதிபுரம் அம்மன் ஆலயம் போன்ற பல்வேறு அமைப்புக்களால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரது 25வருட கலைச்சேவையைப் பாராட்டி கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை 2014ம் ஆண்டுக்கான "கரைஎழில்" விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாசாமி கனகரத்தினம்

[சமூக சேவை]

1941.11.25இல் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் பிறந்த இவர் தற்போது கனகபுரம் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். இவர் சமயம், இலக்கியம், சமூகசேவை முதலான துறைகளில் ஈடுபட்டு வருபவராவார்.

தரம் I அதிபரான இவர் கல்வி போதிக்கும் காலத்தில் மாணவர்களை கலை, இலக்கியத் துறைகளில் ஈடுபடுத்தி சமூக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். அத்தோடு 1990ஆம் ஆண்டிலிருந்து சமூக சேவையிலும் ஈடுபட்டு வருகின்றார்.

பல்வேறு கிராம அமைப்புக்கள், ஆலயங்கள், நிறுவனங்கள், மன்றங்கள், பாடசாலைகள் என பல்வேறு மட்ட சேவைகளையும் ஆற்றிய இவர் பணிகள் ஏராளம்.

இவரது 30 வருடத்திற்கு மேலான சமூக சேவையைப் பாராட்டி கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை 2014ஆம் ஆண்டுக்கான "கரைஎழில்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்துரை சின்னராஜா

[பல்துறை]

1948.03.10இல் யாழ்ப்பாணம் மூளாயில் பிறந்த இவர் தற்போது அண்ணாசிலை வீதி அக்கராயன் குளத்தில் வசித்து வருகின்றார். இவர் பஜனைப் பாடல்கள் பாடுவதோடு நகைச்சுவை நாடகங்களிலும் நடித்து வருகின்றார்.

"லண்டன் லேடி", "பெல் பொட்டம் செல்லம்மா", "ஐஞ்சுநாள் காச்சல்" போன்ற நாடகங்களிலும், இஸ்ட தெய்வங்களின் பாடல்களை இயற்றி இசையமைத்து பாடுவதையும் தனது சேவையாகச் செய்து வருகின்றார்.

இவர் ஆலயங்களில் பஜனைப் பாடல்கள் பாடி மக்களின் நன்மதிப்பைப் பெற்று 2001ஆம் ஆண்டு பொது மக்களால் தோல்வாத்தியம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்தோடு நாடகத்துறைக்கும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

இவரது 20 வருடத்திற்கு மேலான கலை, சமயச் சேவையைப் பாராட்டி கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை 2014ஆம் ஆண்டக்கான "கரைஎழில்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டி வேலு

[பக்கவாத்தியம்]



1949.12.16இல்' கண்டியில் பிறந்த இவர் தற்போது அக்கராயன் குளத்தில் வசித்து வருகின்றார். இவர் 1999ம் ஆண்டிலிருந்து பல நிகழ்வுகளுக்கு ஆர்மோனியம் வாசித்து வருகின்றார். அத்தோடு நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசிக்கும் போது பிற்பாட்டுப் பாடியும் உள்ளார்.

இவர்தம் ஆர்மோனியக் கலையைப் பாராட்டி 2001ஆம் ஆண்டு பொதுமக்களால் ஆர்மோனியம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். ஆலயங்களில் பஜனைப் பாடல்களையும் பாடி மாணவர்களுக்கு பஜனைப் பாடல்களைப் பயிற்றுவிக்கும் உன்னத சேவையையும் செய்துவரும் சமூகத் தொண்டனுமாவார்.

அன்னாரது 15 வருடத்திற்கு மேலான கலைத் தொண்டைக் கௌரவித்து கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை 2014ஆம் ஆண்டுக்கான “கரைஎழில்” விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்
நிதி அனுசரனையுடன்
வெளியிடப்பட்டது

புகைப்படம். தமிழ்ச்செல்வன்

Printed By:- Mathi Colours, Nallur. 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org